தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு 156.

# ஆசிரிய நிகண்டு

(சேந்தன் திவாகரம், பிங்கல நிகண்டு, சூடாமணி,
கயாதரம் ஆகிய நிகண்டுகளின்
ஒப்புமைப் பகுதிகளுடன்)

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

1997 விலை ரூ. 110-00

தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு - 156

# ஆசிரிய நிகண்டு

(சேந்தன் திவாகரம், பிங்கல நிகண்டு, சூடாமணி,
கயாதரம் ஆகிய நிகண்டுகளின்
ஒப்புமைப் பகுதிகளுடன்)

பதிப்பாசிரியர் :

வித்துவான் **வீ. சொக்கலிங்கம்**
தமிழ்ப் பண்டிதர் (ஓய்வு),
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

*இயக்குநர்,*

**சரசுவதி மகால் நூலகம்,**

**தஞ்சாவூர்.**

கி. பி. 1997] [விலை ரூ. 110/-

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | ஆசிரிய நிகண்டு |
| பதிப்பாசிரியர் | : | வித்துவான் வீ. சொக்கலிங்கம் |
| வெளியிடுபவர் | : | இயக்குநர்,<br>சரசுவதி மகால் நூலகம். |
| வெளியீட்டு எண் | : | 156 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | இரண்டாம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | பிப்ரவரி, 1997. |
| தாள் | : | 13.7 கிலோ-சேஷசாயி |
| நூல் அளவு | : | 21 × 14 செ.மீ. |
| பக்கங்கள் | : | 6+586=592 |
| படிகள் | : | 500 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| புத்தகக்கட்டு | : | ஆப்காலிகோ |
| அச்சிட்டோர் | : | ஸ்ரீ வேலன் பிரஸ்,<br>132, செ. பி. கோயில் தெரு,<br>சிதம்பரம்.<br>☎ 20118 |
| விலை | : | ரூ. 110 /- |
| பொருள் | : | நிகண்டு |

# வெளியீட்டாளர் முகவுரை

அருஞ்சுவடிகளின் களஞ்சியமாகத் திகழுகின்ற சரசுவதி மகால் நூலகம், சுவடிகளிலிருந்து நூல்களைப் பதிப்பித்து வெளியிடுகின்ற ஒப்பற்ற பணியையும், அவ்வாறு பதிப்பித்து வெளியிடப்பெற்றவற்றைத் தேவைக்கேற்ப மறுபதிப்பு செய்து வெளியிடுகின்ற சீரிய பணியையும் தொடர்ந்து ஆற்றி வருகின்றது.

அவ்வகையில் 1975 இல் முதற்பதிப்பாக வெளியிடப்பெற்ற 'ஆசிரிய நிகண்டு' என்னும் இவ்வாராய்ச்சிப் பதிப்பு நூல், தற்பொழுது இரண்டாம் பதிப்பாக வெளியிடப்படுகின்றது.

1975 இல் முதற்பதிப்பாக வெளிவந்து தமிழ் அறிஞர்க்கும் அன்பர்க்கும் பெரும்பயனளித்த ஆராய்ச்சிப் பதிப்பான இந்நூலின் பதிப்பாசிரியர், உயர்திரு வித்துவான் வீ. சொக்கலிங்கம் அவர்களாவார்.

இன்றைய அகராதிகளுக்கு முன்னோடி நிகண்டு நூல்கள். தமிழில் பல நிகண்டு நூல்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் ஒன்றான 'ஆசிரிய நிகண்டு' இங்கு, சேந்தன் திவாகரம், பிங்கல நிகண்டு, சூடாமணி, கயாதரம் ஆகிய நிகண்டு நூல்களின் ஒப்புமைப் பகுதிகளுடன் பதிப்பிக்கப்பட்டிருத்தல் குறிப்பிடத்தக்கது.

இந்நூல் இப்போது, தமிழன்பர்தம் விழைவையும் தேவையையும் நிறைவுசெய்யும் வகையில் இரண்டாம் பதிப்பாக வெளியிடப்படுகின்றது.

இவ்விரண்டாம் பதிப்பு வெளிவரத் தேவையான நிதியுதவியை நல்கியுள்ள நடுவண் அரசுக்கு எனது மனமார்ந்த நன்றியை உரித்தாக்கி மகிழ்கின்றேன்.

இந்நூலின் இரண்டாம் பதிப்பு நன்முறையில் வெளிவர ஆவனசெய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் திரு எம். உத்திராபதி அவர்களுக்கும், நூலக வெளியீட்டு மேலாளர் திரு அ. பஞ்சநாதன் அவர்களுக்கும் என் பாராட்டுகள்.

நூலை நன்முறையில் அச்சிட்டுள்ள சிதம்பரம் ஸ்ரீ வேலன் அச்சகத்தாருக்கும், இந்நூல் நன்முறையில் வெளிவர உதவிய ஏனையோருக்கும் என் பாராட்டுகள்.

இவ்வரிய ஆய்வுப்பதிப்புநூல், முதற்பதிப்பில் பெற்றதைப் போன்ற வரவேற்பை இவ்விரண்டாம் பதிப்பின்போதும் தமிழுலகில் பெறுதல் திண்ணம்.

வி. கு. ஜெயக்கொடி இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்
மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
24—2—97

# முதற்பதிப்பின்

# வெளியிடுவோர் உரை

மொழியினது பொருட்பயிற்சிக்கு இன்றியமையாத கருவிநூல் நிகண்டு. தஞ்சை சரசுவதி மகால், தமிழ் வெளியீடுகளின் வரிசையில் "ஆசிரிய நிகண்டு" என்னும் இந்நூலை முதல்நூலாக வெளிபிடுகிறது. ஆண்டிப் புலவர் இயற்றிய இவ்வாசிரிய நிகண்டு (கழிநெடிலடி) ஆசிரிய விருத்தத்தால் அமைந்து, பொருட் பெயர்களையே மிகுதியாகக் கொண்டு எளிய நடையில் அமைந்துள்ளது. இந்நூல் சொற் பொருள்களை எண்ணால் வரையறுத்து உணர்த்தி யிருத்தல் இதன் தனிச்சிறப்பாகும்.

இந்நூலாசிரியர், தொண்டை நாட்டில் கி.பி. 18-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர். இவர் காலத்தினை 17-ம் நூற்றாண்டின் பிற்பகுதி என்றும் கூறுவர்.

எம் நூலகத்தில் இந்நூலின் முதலிரண்டு தொகுதிகளேயுள்ளன. திருவான்மியூர் டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் சுவடிகள் நூலகத்தில் உள்ள முதல் எட்டுத் தொகுதிகளை எமது வேண்டுகோட் கிணங்கி அந்நூலகத்தார் படியெடுத்துக் கொடுத்துத வினார்கள். இவற்றைத் தந்துதவிய அந்நூல் நிலையத்தார்க்கு நன்றிக் கடப்பாடுடையோம். எஞ்சிய மூன்று தொகுதிகள் கிடைக்கவில்லை. கிடைத் தவை கொண்டு இந்நூலினை வெளியிடலானோம்.

இந்நூலினைச் சேந்தன் திவாகரம், பிங்கல நிகண்டு, சூடாமணி நிகண்டு, கயாதர நிகண்டு ஆகியவற்றுடன் ஒப்புமை காட்டியும், விரிவான முன்னுரையோடும் பதிப்பித்துதவியுள்ள நூலகத் தமிழ்ப் பண்டிதர் திரு வீ. சொக்கலிங்கம் அவர்கட்கும், நூல்செம்மையோடு வெளிவரத் தக்க முறையில் செயலாற்றிய நூலகப் பணியாளர்கட்கும், நன்முறையில் அச்சிட்டுத் தந்த வெற்றிவேல் அச்சக உரிமையாளர் அவர்களுக்கும் கனிந்த உள்ளத்தோடு நன்றி கூறிப் பாராட்டுகின்றோம்.

இத்தகைய பணிகளுக்கு ஆக்கமளித்துப் பேணி வரும் நமது தமிழக அரசை நன்றியோடு போற்றி மகிழ்கின்றோம்.

தஞ்சாவூர்
22—12—1975

**அ. வடிவேலன்**
கௌரவ காரியதரிசி,
சரசுவதி மகால் நூல் நிலையம்

தமிழ் வாழ்க.

# முன்னுரை.

## தோற்றுவாய்.

கண்ணுதற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணுறத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணிடைச்சில விலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப்படக் கிடந்ததா வெண்ணவும் படுமோ!

—திருவிளையாடற்புராணம்'

எண்குணத்தான் என்று பேசப்படும் இறைவனே, தமிழ்மீதுள்ள எல்லையற்ற காதலால், சங்கப் புலவர்களில் தானும் ஒருவனாக இருந்து, இலக்கண வரம்புடைய தமிழை ஆய்ந்தான் எனின், தமிழின் பெருமைக்கு வேறு சான்று வேண்டுமா? வேண்டற்பாற்றன்று. கொல்லேற்றுப் பாகர் குடமுனிக்கு அருளிச்செய்த தேன்மொழியாம் தமிழினைப் பயிலப் புகுவார், முதற்கண் நிகண்டு நூல்களை ஐயந்திரிபறக்கற்ற பின்னரே இலக்கண இலக்கிய நூல்களைக் கற்றுப் புலமைத் திறமடைவர். அண்மைக் காலம் வரையிலும் கூட நம்முன்னோர்கள் நிகண்டு அகராதி கற்றுப் பின்னர் இலக்கண இலக்கியம் பயின்றனர் என்பது தெரிகின்றது. முதலில் நிகண்டு கற்றுப் பின்னர் இலக்கியம் கற்று, அதன்பின்னரே இலக்கணம் பயில வேண்டும் என்று பண்டைத்தமிழ்க் கணக்காயர் கைக் கொண்டிருந்தனர். நிகண்டு பேசுதல் எனில் எல்லாம் தெரிந்து பேசுதல் என்பது பொருள், எவ்வாற்றானும் தமிழ் மொழிக்கு முதன்மையாகக் கற்கவேண்டிய கருவிநூல் 'நிகண்டு' என்பதொன்றாகும்.

## நிகண்டு.

'நிகண்டு' என்ற சொல்லுக்குப் பொருள் தொகுதி', 'உண்மை', 'கூட்டம்' என வழங்கும். 'நிகழ்ந்தவை' என்ற தமிழ்ச்சொல்லின் திரிபே 'நிகண்டு, எனலாம். உலகில் உண்மையாக நிகழ்ந்தவைகளைத் தொகுத்து, அதற்கு 'நிகழ்ந்தவை'எனப்பெயரிட்டு, அது நாளடைவில் 'நிகண்டு' என மருவிற்றென்பதற்கிடமுண்டு.

'நிகண்டு' என்பது ஒரு பொருட் பலசொற்றெகுதியையும், பலபொருளொரு சொற்றெகுதியையும் பாவிலமைத்துக் கூறும் நூல் என்றும், வைதிகச் சொற்களின் ஒரு பொருட் பல சொற்றெகுதியையும் பல பொருளொரு சொற்றெகுதியையும் உணர்த்தும் நூல் என்றும் தமிழ் லெக்சிகன் கூறுகின்றது.

வட மொழியில் வேதத்திற்கு அங்கமாய வைதிகச் சொற்களின் பொருள்களை ஆராய்வதற்கு 'நிருக்தம்' என்று பெயர். இந்த நிருக்தத்தின் ஒரு பகுதி 'நிகண்டு, என்று பெயர். ஆகவே வைதிகச்சொற்களை உணர்த்தும் கருவி நூலுக்கு மட்டும் 'நிகண்டு' என்று சிறப்பாக வழங்கப் பட்டது. நாளடைவில், சொற்பொருள் உணர்த்தும் நூல் களுக்கெல்லாம் இப்பெயர் வழங்கத் தலைப்படலாயிற்று.

'நிகண்டு' என்பது இடுகுறியாற் பெயர்பெற்றது என்கின்றது இறையனுர் களவியலுரை. நன்னூல் உரையாசிரியர் மயிலைநாதரும் இதனைக் கையாண்டுள்ளார். 'நிகண்டு' என்னும் வடமொழிச் சப்தம் தமிழாகித், தமிழுலகில் பெருகவழங்கி நிலைபெற்றுவிட்டது என்பர் ஒரு சாரார்.

## உரிசொற்பனுவல்

நம் தொல்லோர்கள் நிகண்டு நூலை 'உரிச்சொல்' என்றும், 'உரிச்சொற்பனுவல்' என்றும் இயம்பி வந்தனர்.

ஒப்புயர்வற்று விளங்கும் நம் தெய்வத் தமிழ் நூல்களுள் தலைசிறந்ததும், தொன்மையுடையதுமானது ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியரின் 'தொல்காப்பியம்' ஆகும். அந்நூலுள் சொல்லதிகாரத்து, உரிச்சொல்லியலில், உரிச்சொல்லின் பொதுவிலக்கணம் கூறுங்கால்

" உரிச்சொற்கிளவி விரிக்குங்காலை..."

எனத்தொடங்கி

"ஒருசொற் பலபொருட் குரிமை தோன்றினும்
பலசொல் லொருபொருட் குரிமை தோன்றினும்"

எனக்கூறி "எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்" எனமுடிக்கின்றார், இயலுள்,

"மழவுங் குழவு மிளமைப் பொருள" என்றும்,
"நொசிவு நுழைவு நுணங்கு நுண்மை" எனவும்,
"கடியென் கிளவி
வரைவே கூர்மை காப்பே புதுமை
விரைவே விளக்க மிகுதி சிறப்பே
மெய்படத் தோன்றும் பொருட்டாகும்மே!" என்றும்

கூறியிருத்தலின் பின்னர் எழுந்த நிகண்டு நூல்களுக்கு முன்னரே 'உரிச்சொல்' என்ற பெயரால் நிகண்டு இருந்துளது என்பது புலனாகின்றது.

எல்லையில் புகழ் தொல்காப்பியத்தின் பின்னர் பிங்கள முனிவருக்குப் பிந்திய பன்னருஞ் சிறப்பின் பவணந்தி முனிவர் தாமியற்றிய நன்னூலில், 'உரிச்சொல்லியல் 459-ம் சூத்திரத்து

"இன்ன தின்னுழி யின்னண மியலும்
என்றிசை நூலுட் குணிகுணப் பெயர்கள்
சொல்லாம் பரத்தலிற் பிங்கல முதலா
நல்லோ ருரிச்சொலி னயந்தனர் கொளலே!"

என்று கூறியுள்ளார். இதற்கு உரை யாத்த மயிலைநாதரும், குறிப்பிட்ட தொடருக்கு, "அவை பிங்கல முதலான புலவர் களாற் சொல்லப்பட்ட 'உரிச்சொற் பனுவல்' களுள் விரும்பி அறிந்து கொள்க" என்று கூறியுள்ளார். இதனால் பண்டை நிகண்டு நூல்களுக்கு 'உரிச்சொற்பனுவல்' என்று பெயர் வழங்கி வந்தது தெரியவருகின்றது.

மேலும் நிகண்டு நூல்களுள் 'கயாதர நிகண்டு' என்றொரு நூலுண்டு. அதனை இயற்றிய கயாதரமுனிவர் தமது பாயிரத்து இரண்டாம் கட்டளைக் கலித்துறையில்

"பேதையர் பித்த ரறியாத பாலர்சொற் பேதங்கொள்ளார்
ஓதினுங் குற்றந் தெரியார் பெரியவ ரோங்கிடப
கேதனன் பற்று மறவாத தேவைக் கெயாதரன்றொல்
வேதியன் சொற்ற உரிச்சொற்பனுவலு மேம்படுமே!"-2

என்று கூறியுள்ளார். 'உரிச்சொற்பனுவல்' என்ற சொல் கயாதரராற் கையாளப்பட்டுள்ளது. மேலும் இவரது 4-வது செய்யுளில் '2-ம் வரியில் உரிச்சொல் கிளர்பனுவல் என்றும் இறுதிப்பாடல் 3-ம் வரியில் 'உரிச்சொற்பனுவல் விரித்துரைத்தான்' என்றும் காணப்படுகின்றன. எனவே கயாதரர் நிகண்டு நூலை 'உரிச்சொற்பனுவல்' என்று குறிப்பிடுகின்றார்.

'சூடாமணி உள்ளமுடையான்' என்றொரு சோதிட நூலுண்டு. இதனை இயற்றிய பாண்டமங்கை திருக் கோட்டியூர் நம்பிகள் தம் நூலுள் நட்சத்திரங்களின் பெயர் களைச் செய்யுளால் பாடியுள்ளார். அதற்கு 'நாளுரிச்சொல்' என்றும், அதற்கு அடுத்த பகுதிக்குக் 'கிழமை உரிச்சொல்' என்றும் கூறியுள்ளார். இதனாலும் நிகண்டுநூலை 'உரிச் சொல்' என்ற பெயராலேயே புலவர்கள் வழங்கினர் என்று தெரிகின்றது. இவர் தாம் இயற்றிய 'நாளுரிச்சொல்' பகுதி யிலுள்ள நட்சத்திரங்களின் பெயர்கள் பெரும்பான்மை பிற நிகண்டுகளை ஒத்திருக்கின்றன.

முன்னர் கூறியாங்கு இலக்கண நூல்களுள் தொன்மையானது "தொல்காப்பியம்" என்பது யாவரும் அறிந்த உண்மை. அங்ஙனமாயின் தொல்காப்பியர் முதலான முதுபெரும்புலவர்கள் முதன்முதலில் நிகண்டு கற்றிருத்தல் வேண்டும். அந்நிகண்டின்பெயர் காணக் கிடைக்கவில்லை. அகத்தியம் முதலான நூல்கள் கடல் கோளால் அழிந்துபட்ட காலத்து, அற்றைநாள் நிலவிய 'ஆதிநிகண்டு'ம் அழிந்துபட்டிருத்தல் வேண்டும். ஆகவே, 'இலக்கணங்களுள் பழமையானது 'தொல்காப் பியம்' என்பதுபோலவே நிகண்டுகளுள் பழமையானது 'தொல்காப்பியம்' எனில் மிகையாகாது. முற்கூறியாங்கு உரிச்சொற்பனுவல் எனும் நிகண்டுநூல் தொல்காப்பிய உரிச்சொல்லியலில் காணக்கிடைக்கின்றது. தொல்காப்பி யத்தின் பின்னர், 'நிகண்டு' எனும் வடசொல் உரிச்சொற் பனுவல்களோடு சேர்ந்து தனித்தும் தொடர்ந்தும் வழங்க லாயிற்று. 'பிங்கலநிகண்டு' 'உரிச்சொல்நிகண்டு' என்பன அவற்றிற்குச் சான்றும். அதன்பின் நிகண்டு என்ற சொல்லே தமிழில் நிலைபெற்றுவிட்டது போலும்.

## நிகண்டு நூல்கள்

நிகண்டு எனும் பெயரேற்ற நூல்களுள் தொன்மை யானது 'சேந்தன் திவாகரம்' கி.பி. எட்டாம் நூற்றுண்டில் அம்பர் என்னும் ஊரின் தலைவனுன 'சேந்தன்' என் பானின் வேண்டுகோட் கிணங்கத் 'திவாகர முனிவரால்' பாடப்பட்டதாகும். பின்னர் எழுந்தது, பிங்கல முனிவர் இயற்றிய 'பிங்கலந்தை' எனும் பிங்கல நிகண்டு. அதன் பின்னர் 'மண்டல புருடரால்' இயற்றப்பட்டது 'சூடாமணி நிகண்டு'. அதன்பிறகு 'காங்கேயர்' என்பார் உரிச்சொல் நிகண்டினை இயற்றினுர். அதன்பின்னரே 'கயாதரரால்' பாடப்பட்டது 'கயாதர நிகண்டு'. இப்படியாக எழுந்த நூல்கள் பல.

## இதுவரை கிடைக்கப் பெற்ற நிகண்டு நூல்களின் அகரவரிசைப் பட்டியல்.

| | நூற்பெயர் | | ஆசிரியர் |
|---|---|---|---|
| 1 | அகராதி நிகண்டு | ... | சிதம்பர இரேவணசித்தர் |
| 2 | அகராதி நிகண்டு (ஒருசொல் பலபொருட் டொகுதி) | | ? |
| 3 | அகராதி நிகண்டு | ... | (தாயவலம் தீர்த்த கவிராயர்) |
| 4 | அபிதானத் தனிச் செய்யுள் நிகண்டு | ... | கோபாலசாமி நாயகர் |
| 5 | அபிதான மணிமாலை (நிகண்டு) | ... | (திருச்சிற்றம்பலம் இன்னமுதம் பிள்ளை) |
| 6 | அரும்பொருள் விளக்க நிகண்டு | ... | அருமருந்து தேசிகர் |
| 7 | ஆசிரிய நிகண்டு | ... | ஆண்டிப் புலவர் |
| 8 | ஆரிய நிகண்டு | | ? |
| 9 | உசிதசூடாமணி நிகண்டு | ... | சிதம்பரம் பிள்ளை |
| 10 | உசிதசூடாமணி நிகண்டு | ... | திருநெல்வேலி சிதம்பரக் கவிராயர் |
| 11 | உரிச்சொல் நிகண்டு | ... | காங்கேயர் |
| 12 | ஏமதத்துவம் என்னும் பஞ்சகாவிய நிகண்டு | ... | அகத்தியர் |
| 13 | * ஔவை நிகண்டு | ... | ஔவையார் |

* இது பிடக நிகண்டின் வேறு என்பது ஆராயற்பாலது

| | நூற்பெயர் | | ஆசிரியர் |
|---|---|---|---|
| 14 | கயாதர நிகண்டு | ... | கயாதரர் |
| 15 | கைலாச நிகண்டு | | ? |
| 16 | சிந்தாமணி நிகண்டு | ... | வ. வைத்தியலிங்கம் பிள்ளை |
| 17 | சூடாமணி உள்ளமுடையான் (சோதிடம்) | ... | பாண்டமங்கை திருக் கோட்டி நம்பி |
| 18 | சூடாமணி நிகண்டு | ... | மண்டல புருடர் |
| 19 | சேந்தன் திவாகர நிகண்டு | ... | திவாகரர் |
| 20 | தன்வந்தரி நிகண்டு (வைத்தியம்) | ... | தன்வந்தரி |
| 21 | தொகை அகராதி (நிகண்டு) | ... | ? |
| 22 | தொகை நிகண்டு | ... | சாமிக் கவிராயர் |
| 23 | தொகைப்பொருள் நிகண்டு | ... | கிருட்டினசாமி சேனை நாட்டார் |
| 24 | நவமணிக் காரிகை நிகண்டு | ... | அரசஞ் சண்முகனார் |
| 25 | நாநார்த்த தீபிகை நிகண்டு | ... | முத்துசாமி பிள்ளை |
| 26 | நாமதீப நிகண்டு | ... | சிவசுப்பிரமணியக் கவிராயர் |
| 27 | நிகண்டு | ... | (சென்னை ஓரியண்டல் சுவடி நிலையப்பட்டியல் எண் 311) |
| 28 | நிகண்டு ஆயிரத்திரு நூறு(வை) | ... | போகமுனிவர் |

| நூற்பெயர் | | ஆசிரியர் |
|---|---|---|
| 29 பல்பொருட் சூடாமணி நிகண்டு | ... | ஈசுர பாரதியார் |
| 30 பாரதி தீப நிகண்டு | ... | தென்கடம்பைத் திருவேங்கட பாரதி |
| 31 பிங்கல நிகண்டு | ... | பிங்கல முனிவர் |
| 32 [1]பிடக நிகண்டு | ... | ஔவையார் |
| 33 பொதிகை நிகண்டு | ... | சாமிநாதக் கவிராசர் |
| 34 பொருட்டொகை நிகண்டு | ... | வே. சுப்பிரமணிய பாரதி |
| 35 பொருள் விளக்க நிகண்டு | ... | ஆனைகட்டி முனிசாமி முதலியார் |
| 36 போகர் நிகண்டு (வை) | .. | போகமுனிவர் |
| 37 மஞ்சிகன் ஐந்திணைச் சிறு நிகண்டு | ... | மாகறல் கார்த்திகேய முதலியார் |
| 38 வடமலை நிகண்டு | ... | ஈசுர பாரதி |
| 39 வாத நிகண்டு (வை) | ... | சட்டைமுனி |
| 40 விரிவு நிகண்டு | ... | வீரவநல்லூர் நா. அருணாசல நாவலர் |
| 41 வேதகிரியார் சூடாமணி நிகண்டு | ... | வேதகிரியார் |

[1] தமிழ்ப் புலவர் அகராதியில் கண்டது

இன்னும் பல இருக்கக்கூடும், இவற்றுள் சில மறைந்தும், சிதைந்தும் அழிந்தும் போயின. எஞ்சியவை களுள் ஒருசிலவற்றின் குறிப்புகளை நினைவிற்கொள்வாம்.

## சேந்தன் திவாகரம்

நிகண்டுகளுள் காலத்தால் முற்பட்டது சேந்தன் திவாகர நிகண்டாகும். சூத்திரயாப்பான் அமைந்த பன்னிரண்டு தொகுதிகளை யுடையது. இந்நூலினைக் கி. பி. ஆறும்நூற்றாண்டினதென்பார் காலஞ்சென்ற ஆராய்ச்சிப் பெரும்புலவர் திருவாளர் L. உலகநாதபிள்ளை அவர்கள். சோழநாட்டின் கண்ணுள்ள பொன்விளைக்கும் காவிரிக் கரையில் உள்ள 'அம்பர்' எனும் நகரை ஆண்ட சிற்றரசன் சேந்தன் என்பார். வடமொழி, தென்மொழிகளில் வல்ல புலவர், பெருங்கொடையாளி. ஔவையாரால் பாடப் பெற்றவர். சம்பாதி எனும் புகார் தெய்வத்தின்மீது ஒரு அந்தாதி பாடியுள்ளார். கோதண்டம், காண்டீபம், வேல் என்பவற்றைப் புகழ்ந்து பாடியவர். இவற்றினை திவாகரத்தின் அகச்சான்ருக ஒவ்வொரு தொகுதியின் ஈற்றில் காணப்படும் சூத்திரங்களாலறியலாம். 'சேந்தன்' என்பவரைக்'கல்லாடர்' பாடியதாக ஒரு செய்யுள் புறநானூற்றில் காணப்படுகின்றது. அந்தச் சேந்தனும், திவாகரச் சேந்தனும் வேறென்பது உய்த்துணரத்தக்கது. இச் சேந்தனது வேண்டுகோட்கிணங்கி திவாகரர் எனும் முனிவரால் பாடப்பட்டமையின் செய்தவர், செய்வித்தவர் ஆகிய இருவர் பெயரும் ஒருங்கே அமைய இதற்குச் 'சேந்தன் திவாகரம்' எனப் பெயர் வழங்கலாயிற்று.

## பிங்கல நிகண்டு

இது பிங்கல முனிவராற் பாடப்பட்டது. இது வான் வகை முதலாக ஒரு சொற்பலபொருள் ஈருகப் பத்து வகை

களையுடையது. சூத்திரயாப்பான் அமைந்தது. பிங்கல முனிவர் சோழநாட்டில் பிறந்தவர். இல்லறத்தினின்றும் துறவு பூண்டவர். இவரைத் திவாகர முனிவரது மகன் என்பர். எனவே திவாரகத்தை அடுத்த கால எல்லையினையுடையது. இதற்குப் 'பிங்கலந்தை' என மற்றோர் பெயருண்டு. பிங்கலந்தை தன்னில் ஒருங்குள பொருளு மோர்ந்திட்டுரைத்தனன்" எனச்சூடாமணி நிகண்டும், "பிங்கல முதலா நல்லோருரிச்சொலி னயந்தனர் கொளலே" என நன்னூலும் இந்நூலைக் குறிப்பிடுதலின், சூடாமணி நிகண்டிற்கும், நன்னூலுக்கும் காலத்தால் முற்பட்டதுவாகும். எனவே, பிங்கலநிகண்டு திவாகரத்திற்கும் சூடாமணிக்கும் இடைப்பட்டகாலத்திற் செய்யப்பட்டது என்று கொள்ளத்தக்கது.

## சூடாமணி நிகண்டு

இதனை ஆக்கியோர் 'மண்டல புருடர்' என்பவராவார். இவர் தொண்டைநாட்டில் குன்றத்தூரில் சமணமரபிற் பிறந்தவர். இவரை 'வீரைமண்டல புருடர்' என்றழைப்பர். இவரது ஆசிரியர் 'திருநறுங்குன்றை குணபத்திரர்' ஆவர் இவர், இந்நிகண்டின் செயல் பற்றிய பெயர்த் தொகுதி பத்தாவது செய்யுளில் கிருஷ்ணதேவராயரது கொடைத்திறனைப் புகழ்ந்து பாடியுள்ளதால், இந்நூல் கிருஷ்ணதேவராயரது காலத்ததாகும். கிருஷ்ண தேவராயர் இராட்டிரகூடத்தரசராகிய இரண்டாவது கிருஷ்ணதேவராயராவார். இவர் கி.பி. 874முதல் 914 வரை ஆட்சிசெய்தவர். எனவே சூடாமணி நிகண்டின் காலம் பத்தாம் நூற்றுண்டின் தொடக்கம் எனக் கொள்ளத்தக்கது. பதினுரும் நூற்றுண்டின் தொடக்கம் என்பாருமுளர். இது பன்னிரண்டு தொகுதிகளையுடையது. திவாரகம் பிங்கலம் ஆகிய இரண்டையும் ஆய்ந்து விருத்த யாப்பான் இயற்றப்பட்டது. இந்நூலுக்கு இட்ட பெயர் நூலாசிரியர் 'நிகண்டு சூடாமணி' என்பார் திரு. மு. இராகவய்யங்கார் அவர்கள்.

## உரிச்சொல் நிகண்டு

இதனை இயற்றியவர் இம்முடிப்பட்டம் பெற்ற காங்கேயர் ஆவர். இவர் தொண்டைமண்டலத்தில் செங்குந்தர் மரபில் பிறந்தவர் என்பர். சிலர் கொங்கு நாட்டவர் என்றுங் கூறுவர். இந்நூலில் வணக்கத்தைக் குறிக்கும் சொற்களில் 'சலாம்' எனும் மகமதியச் சொல் காணப்படுதலின் மகம்மதியர் தென்னாட்டு ஆட்சியைக் கைக்கொண்ட காலத்திற்குப்பின் இந்நூல் செய்திருத்தல் வேண்டும் எனத் தோன்றுகின்றது. இவர் பதினான்காம் நூற்றாண்டினர். சிலர் கி.பி. 1600 என்பர். பதினேழாம் நூற்றாண்டென்று தமிழ்ப் புலவர் அகராதி கூறும். இந்நூல், பன்னிரெண்டு தொகுதிகளையுடையது. வெண்பாவான் அமைந்தது.

## கயாதர நிகண்டு

கயாதர முனிவரால் பதினைந்தாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது, கயாதரர் 'தேவை' எனப்படும் இராமேச்சுரத்தில் அந்தணர் மரபில் காசியபா கோத்திரத்தைச் சேர்ந்த சோமேசர் என்பாரின் புதல்வராக விளங்கிய சிவபக்தர்.

இந்நூல் 'கயாகரம்' எனவும் வழங்கப்படும். இது கட்டளைக் கலித்துறையான் அமைந்தது, பதினொரு தொகுதிகளையும் ஐந்நூற்றறுபத்தாறு செய்யுட்களையும் கொண்டது. அந்தாதித் தொடையினைக்கொண்டு அழகுற மிளிர்வது.

இதுவரை, மேற்சொல்லிய திவாகர பிங்கல முதலான நிகண்டுகளெல்லாம் சூத்திரயாப்பானும், விருத்த யாப்பானும், வெண்பாவானும், கட்டளைக்கலித்துறையானும் அமைந்திருத்தலின், இத்துணையும் நெட்டுருச் செய்து கற்பது பிற்காலத்தவருக்குக் கடினமாயிருந்த காரணத்தால், எளிதில் கற்க வேண்டி அகரவரிசை முறை தோன்றியது.

### அகராதி நிகண்டு

சொற்களை எளிதில் கண்டு, பொருள் கொள்வான் வேண்டி அகரவரிசையில் எழுந்தது அகராதி நிகண்டு. முதலெழுத்து மட்டும் அகராதி முறையில் எழுந்த முதல் நிகண்டு நூல் இதுவாகும். இதனை இயற்றியவர் பேரளத்தில் பிறந்து புலியூர் என்னும் சிதம்பரத்தில் வாழ்ந்த 'இரேவணசித்தர்' என்னும் பெயரினர். இந்நூலைக் கி. பி. 1594ல் செய்தனர் எனத் தெரிகின்றது, எனவே இது பதினாறாம் நூற்றாண்டில் செய்யப்பட்டதாகும்.

### பொதிகை நிகண்டு.

வீரமாமுனிவரின் சதுரகராதிக்குப் பின்னர் அகரவரிசையில் எழுந்தது பொதிகை நிகண்டு. இது அகரவரிசையினையும், எதுகை வரிசையினையும், கொண்டுளதாதலின் அகராதியோடு ஒப்ப விளங்கலாயிற்று. இதனை இயற்றியவர் சுவாமிநாதக் கவிராயர்.

### பாரதி தீப நிகண்டு

திருவேங்கடபாரதியால் பதினேழாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. ஆசிரியர் தென்கடம்பையில் தோன்றியவர்; அந்தண மரபினர். பரமானந்த பாரதி என்றும் அழைக்கப்பட்டவர். துறவு மேற்கொண்டவர். இவரது நூல் கயாதரம் போலக் கட்டளைக்கலித்துறையான் அமைந்தது. பன்னிரண்டு பிரிவுகளையுடையது.

### ஆசிரிய நிகண்டு

ஆண்டிப்புலவரால் இயற்றப்பட்டது. ஆசிரிய விருத்தத்தால் ஆனது. பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இயற்றப்பட்டது. இதன் விரிவினைப் பின்னர் கூறுதும்.

இதன் பின்னர் எழுந்த நிகண்டுகள் பல. நிகண்டுகளின் பின்னர் அகராதிகள் தோன்றலாயின.

## அகராதிகள்

நிகண்டு கற்காமலே சொற்பொருள் தெரிவான் வேண்டிய சூழ்நிலை, உலக நாடுகளினின்றும் தமிழ்நாடு போந்த பாதிரியார்களுக்கு ஏற்பட்டது. தமிழ் கற்பதற்குச் சொற்களின் (அகரவரிசையில்) பொருள் தெரிவது இன்றியமையாததாயிற்று. அதுகாலை கி. பி. 1679ல் 'ப்ரொஇன்சா' என்ற பாதிரியாரால் முதன் முதலில் 'தமிழ் போர்ச்சுகீசிய அகராதி' இயற்றப்பட்டது. இது மறைந்து போய்விட்டது.

மேல் நாட்டுப் பாதிரிமார்களுள் தலை சிறந்தவரும் தமிழன்புடையவருமானவர் 'தைரியநாதர்' என்னும் 'வீரமாமுனிவர்' ஆவர். இவரது இயற்பெயர் 'கொன்ஸ்டான்ஸ் ஜோசப் பெஸ்கி' (**Contanzo Giuseppe Beschi**) ஆகும். 'கொன்ஸ்டான்ஸ்' என்பதற்கு இத்தாலி மொழியில் தைரியம்' என்று பொருள். 1710-ல் இவர் தமிழ்நாடு வந்ததும் தனது பெயரைத் 'தைரியநாதர், என்று வழங்கினார். தமிழில் புலமைபெற்ற இவரை 'வீரமாமுனிவர் என்று மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் அழைத்தனர். இத்தகு சிறப்புடைய இவரால் 'தமிழ்-லத்தீன் அகராதி ஒன்றும், போர்ச்சுக்கீசியம் —தமிழ்—லத்தீன் அகராதி ஒன்றும், சதுரகராதி ஒன்றும் ஆக மூன்று அகராதிகள் இயற்றப்பட்டன. இவற்றுள் கி. பி. 1732-ல் இயற்றிய தலைசிறந்த அகராதி சதுரகராதியாகும் பெயரகராதி, பொருளகராதி, தொகையகராதி, தொடையகராதி என்னும்நான்கு வகைப்பட்ட அகராதிகள் உள்ளதால் இது 'சதுரகராதி' எனப் பெயர் பெற்றது. இப்போதுள்ள தமிழ் அகராதிகளில் இதுவே காலத்தால் முற்பட்டது.

பின்னர் ஆங்கிலத்தில் கி. பி. 1755-ல் டாக்டர் ஜான்சன் ஒரு அகராதி இயற்றினுர். பிறகு கி. பி. 1779-ல் 'பெப்ரிஷியஸ்', 'ப்ரெய்டு ஹைப்டு' என்னும் இரண்டு செர்மானியப் பாதிரியார்கள் தமிழ்-ஆங்கில அகராதி ஒன்றைத் தோற்றுவித்தனர். கி. பி. 1842ல் யாழ்ப்பாண சந்திர சேகர பண்டிதரால் இயற்றப்பட்ட அகராதி ஒன்று ஸ்பால்டிங் பாதிரியாரால் வெளியிடப்பட்டது. கூடியமட்டில் எல்லாச்செற்களேயும் உள்ளடக்கிக்கொண்டிருக்கும் இதனே யாழ்ப்பாண அகராதி' என்றழைத்தனர்.

கி.பி. 1830ல் டாக்டர்'ராட்லர்' என்பவர் தமிழ்-ஆங்கில அகராதி ஒன்றைத் தொகுத்தார். கி. பி. 1842-ல் 'அச்சிங்ஸ் பாதிரியார் ஆங்கிலத்-தமிழ் அகராதி ஒன்றை இயற்றினுர். இதன்பிறகு கி. பி. 1862-ல் 'இராமானுசக் கவிராசர் முதலான முதுபெரும்புலவர்கள்பலரால் தொகுக்க பட்ட தமிழ்-ஆங்கில அகராதி ஒன்றினே 'வின்ஸ்லோ' என்பார் வெளியிட்டார் அகராதிகளில் இதுவே மிகப்பெரிய அகராதியாகும். இவ்வகராதியில் 67,452 செற்கள் உண்டெனத் தெரிகின்றது. அதன்பின் கி.பி. 1867-ல் நாகையிலிருந்து 'ஆர். பி. குரி' எனும் பாதிரியார் தமிழ்-லத்தீன் அகராதி ஒன்றைத்திரட்டினுர். பிறகு கி. பி. 1897-ல் தரங்கம்பாடியினின்றும் ஒரு அகராதி தோன்றியது. மேற்கூறிய அகராதிகளின் இடையேயும், பின்னரும் பல அகராதிகள் தோன்றின. ஆயினும் மொழியகராதி' எனப் பெரிதும் பாராட்டப்பட்டது 'சதுரகராதி' யேயாம்.

சிலகாலம் சென்றபின், யாழ்ப்பாணத்தில் நீதிபதியாயிருந்த 'கதிரைவேற்பிள்ளே' யவர்களால் தொடங்கப்பட்ட 'மதுரைத் தமிழ்ச்சங்கத்தகராதி' ஒன்று வெளிவரலாயிற்று,

பின்னர் சென்னைப் பல்கலைக் கழகம் 'தமிழ் லெக்சிகன்' வெளியிட்டது. மற்றும் பல அகராதி நூல்கள் அண்மைக் காலம் வரை வெளிவந்துள்ளன.

## நிகண்டு பயில்வ தருகல்

இப்படியாக, அகராதிகள் (குறிப்பாகச் சதுரகராதி) வந்தபின்னர் நிகண்டு கற்கும் வழக்கம் குன்றலாயிற்று. காலத்தின் கோலத்தால் சில நிகண்டு நூல்கள் மறைந்து போயின. அச்சியந்திரங்கள் மலிந்த பின்னர் அகராதி நூல்கள் பெருகலாயின. நிகண்டு நூல்களை மனனம் செய்து சொற்களைக் கூறுவதைவிட அகராதி நூல்களைப் பார்த்து உடன்பொருள் சொல்வது எளிமையாயிருந்த காரணத்தால் நிகண்டு மக்களிடையே பயில்வது அருகலாயிற்று.

## நிகண்டுச்சிறப்பு

எத்துணை இலக்கணங்கள் பின்னர் தோன்றினும் தொல்காப்பியத்திற்கு ஒல்காப்புகழ் இருப்பது போல, எத்தனை தான் அகராதிகள் தோன்றினாலும் நிகண்டுகளுக்கு என்றும் மதிப்பும் புகழும் உண்டு. நிகண்டு கற்றுப் புலமையடைந்த பண்டைப் புலவர்கள், பல நூற்றுண்டுகள்கடந்தும் இன்றும் புகழோடு தமது அரிய நூல்களால் காட்சி தருகின்றனர். அவர்தம் வரலாறு தெரிவில்லை ஆயினும், அவர் தம் நூல்கள் சொல்லாழமுடையவாயிருக்கின்றன.

மேலும் அகராதி நூல்களில் காணக்கிடைக்காத சொற்களை நிகண்டு நூல்களிற் காணக்கூடும். ஒரு சொல்லுக்குரிய பல பெயர்களையும் அகராதியில் காணமுடியாது; சொல்லுக்குப் பொருள் மட்டுமே அகராதியில் காண முடியும். ஒரு சொல்லுக்குப் பல பொருள் இருக்குமாயின், அதனையும் நிகண்டு உள்ளடக்கிக்கொண்டிருக்கிறது. மற்றும் பல நன்மைகளைக் கொண்டிருப்பதால் அகராதியினும் நிகண்டு சாலச்சிறப்புடையது.

## ஆசிரிய நிகண்டு

பல்வேறு சிறப்புகளைக் கொண்ட நிகண்டு நூல்களுள் மிகவும் எளிதில் பயிலக்கூடியது ஆசிரிய நிகண்டு. பதினொருதொகுதிகளையுடையது. பன்னிருசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால், ஆண்டிப் புலவரால் பாடப் பட்டது.

## ஆசிரியர் வரலாறு

ஆசிரிய நிகண்டின் ஆசிரியர் 'ஆண்டிப் புலவர்' என்றும், இவர்,தொண்டை வளநாட்டில் செஞ்சியை அடுத்த 'ஊற்றங்கல்' என்னும் ஊரில் பிறந்தவர் என்றும், பதினெட்டாம் நூற்றுண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர் என்றும்,இவரது தந்தையார் பெயர் 'பாவாடை வாத்தியார்' என்றும் தெரியவருகின்றது. இவற்றை இவரது பாயிரத் துள்

"மன்னுசெஞ் சிச்சீர்மை சூழ்தொண்டை வ ள நா ட் டி ல்
வாய்த்தவூற் றங்காலெனும்
மாநகர்க் கதிபனுயர் பாவாடை வாத்தியார்
மைந்தனுண் டிப்புலவனே!" என்பதனுலும்,
"வளம்பரவு மூற்றங்கால் பாவாடை வாத்தியார்
மைந்தனுண் டிப்புலவனே!" என்பதனுலும்

அறியலாம். இவரையே பாவாடைவாத்தியார் என்பாருமுளர். 'ஊற்றங்காலெனும் மாநகர்க்கு அதிபன்' என்று காணப்படுதலின் இவரோ இவரது தந்தை எனப்படும். பாவாடை உபாத்தியாயரே சிற்றரசனுக இருந்திருக்கலாம் என்று ஊகிக்க இடமுள்ளது. இவர்,

"கைலையான் வடிவெடுத் தைந்தெழுத்தின்
மந்திரவுப தேசஞ்செய் ஞானப்பிர காசகுரு
வனசமல ரடிசூடுவேன்!" என்று கூறி

யுள்ளமையின் இவரது ஆசிரியர் ''ஞானப்பிரகாசர்'' என்பது புலனாகின்றது. இவர் 'பகதேவன்' என்பாரின் மகன் என்றும் 17-ம் நூற்றாண்டின் பிற்பகுதியினர் என்றும் ஒருசாரார் கூறுவர். இவர், இவ்வாசிரிய நிகண்டேயன்றி, உரையறி நன்னூல் முறைமை என்ற நூலையும் செய்துள்ளார் இதனை,

''இயம்பிய நிகண்டு முரையறி நன்னூல் முறைமையும்
இரண்டுமே செய்து வைத்தேன்!'' என்பதால்

அறியலாம். இதனையன்றி நன்னூலுக்கு ஆசிரியப்பாவால் ஆகிய ஒரு உரையையும்எழுதினர் என்பர். இவ்வுரைநூல் தான் முன் பாடலில் கூறிய உரையறி நன்னூல் முறைமை என்னும் நூலா என்பது ஆராயற்பாலது. இரண்டும் ஒன்றாகவே இருத்தல் வேண்டும்.

அவையடக்கப் பாடலில்
" தொகுதியாசிரியத்தினால் சொல்லிய நிகண்டின்
உரையறி நன்னூல் முறைமையும்
தோன்றிட வகுத்தவாறே!'' என்பதனால்

நிகண்டின் உரையை அறிகின்ற நன்னூல் முறைமையும் தோற்றிட வகுத்தவாறே எனப் பொருள் கொள்ளலாம். முன்பாயிரத்து 'நிகண்டும்' உரையறி நன்னூல் முறைமையும் (ஆகிய) இரண்டும்' என்பது தெளிவாயுள்ளது. இது 'நிகண்டுக்கு உரையறி நன்னூல் ஆசிரியத்தினால் செய்தது' எனப்பொருள் கொள்ளும் வகையில் உள்ளது.

இதற்கு ஆசிரியர் இட்ட பெயர் 'ஆசிரிய நிகண்டு' என்பது. இதனை

''ஏரா சிரிய நிகண்டென்னுமீ ரைந்தொன்று
சீரார் தொகுதியதாய்ச் செப்புதற்கே'' என்றதனால்

அறியலாம். இக்காப்புச் செய்யுளில் கூறிய 'ஆசிரிய நிகண்டு' என்னும் சொல்லைப் பாயிரத்துட் கூறவில்லை.

ஆசிரியருடைய குலம், இறைவனோடு வாதிட்டுப் பின் நலம் பெற்ற 'நக்கீரனார்' அவதரித்த சங்கறுப்பார் குலம் ஆகும். சாதிபற்றியே வளையறுப்பார் எனப்பொருள் படும் 'கீரன்', 'நக்கீரன்' என்னும் பெயர்கள் இவருக்கும் உண்டென்பர். இதனைப் பாயிரத்துள்ள கடைசிப்பாடலுள்

"மன்னுசெஞ் சிச்சீர்மை சூழ்தொண்டை வளநாட்டில்
வாய்த்தவூற் றங்காலில்வாழ்
வளையறுப் போர்குலன் பாவாடை வாத்தியார்
மைந்தனும் நற்கீரனே!" என்று ஓருபாடபேதம்

கொண்ட சுவடி உள்ளதாகவும், அது கொண்டே 'வளையறுப்போர் குலம்' எனவும் கூறுவர் பெரியோர்.

## சுவடி வரலாறு

'ஆசிரிய நிகண்டு' என்னும் ஏட்டுச் சுவடி எமது சரசுவதிமகால் 919-ம் எண்ணினைத் தாங்கியது. '1818-ம் ஆண்டு சித்திரைத்திங்கள் 25-ம் நாள் வாத்தியார் வேலாயுதஞ்செட்டியாரால் எழுதப்பட்டது' என்ற குறிப்பு சுவடியின் முகப்பில் காணப்படுகின்றது. எழுத்தாணிகொண்டு பனை ஓலையில் எழுதும் எழுத்துக்களிலெல்லாம் இச்சுவடி எழுத்துக்கள் மிகவும் சிறந்ததாகக் காணப்படுகின்றன. எமது சுவடி முதலிரண்டு தொகுதிகளைக்கொண்டது. எஞ்சிய தொகுதிகளுக்காக முயன்றபோது, சென்னை, மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் அவர்கள் நூல் நிலையத்தில் தொடர் எண் 941 என்ற சுவடியும், தொடர் எண் 345 என்ற சுவடியும், இருப்பதறிந்து அவற்றின் படிகளைப்பெற்றோம்.

## தொகுதிகள்

நமது மகால் 919-ம் எண்ணுள்ள சுவடியில் முதல் இரண்டு தொகுதிகள் மட்டுமே உள்ளன. டாக்டர் உ. வே சாமிநாதய்யர் நூல் நிலையச் சுவடி எண். 941-ல் முதல் இரண்டு தொகுதிகளே காணப்பட்டன. ஷை நூல் நிலையச் சுவடி எண்.345-ல் முதல் எட்டுத் தொகுதிகள் வரை முழுமையாகக் கிடைக்கப்பெற்றன. ஏனைய தொகுதிகள் கிடைத்தில. மொத்தம் பதினொரு தொகுதிகளை உடையது என்பது காணப்படுதலின், எஞ்சிய தொகுதிகளை வைத்திருப்பவர்கள் ாமது மகாலுக்கு அவற்றை அனுப்பித்தருவார்களாயின், மறுபதிப்பு முழு உருவோடு வெளிவரத் துணைபுரியும்.

### செய்யுட்களின் எண்ணிக்கை

எமது மகால் சுவடியில் உள்ள முதலாவது தொகுதியில் 41 செய்யுட்களும், இரண்டாவது தொகுதியில் 53 செய்யுட்களும் காணப்படுகின்றன. டாக்டர் உ. வே. சா. அவர்கள் நூல் நிலைய 941-ம்சுவடியில் முதல்தொகுதியில் 40 செய்யுட்களும், இரண்டாவது தொகுதியில் 47 செய்யுட்களும் காணப்படுகின்றன. ஷை நூலக 345-ம் எண்ணுள்ள சுவடியில்

| | | | |
|---|---|---|---|
| 1-வது | தெய்வப் பெயர்த் தொகுதியில் | 44 | செய்யுட்களும் |
| 2-வது | மக்கட்பெயர்த் தொகுதியில் | 49 | ,, |
| 3-வது | விலங்கின் பெயர்த் தொகுதியில் | 34 | ,, |
| 4-வது | மரப்பெயர்த் தொகுதியில் | 21 | ,, |
| 5-வது | இடப்பெயர்த் தொகுதியில் | 23 | ,, |
| 6-வது | பொருட்பெயர்த் தொகுதியில் | 6 | ,, |
| 7-வது | செயற்கைப் பெயர்த் தொகுதியில் | 11 | ,, |
| 8-வது | பண்புபற்றிய பெயர்த் தொகுதியில் | 14 | ,, |

உள்ளன. இவற்றுள் 3-வது தொகுதியில் இடையில் ஒரு ஏடு இன்மையின், 29, 30, 31, 32 ஆகிய எண்ணுள்ள செய்யுட்கள் இல்லை. மேற்கண்ட மூன்று சுவடிகளையும் ஆய்ந்து ஒருவாறு சீராக்கியதில், தெளிவாக இருக்கும் எமது சுவடியில் உள்ள முதல் இரண்டு தொகுதிகளும் டாக்டர். உ.வே.சா. அவர்கள் நூலகச்சுவடி எண் 345-ல் மூன்றுமுதல் எட்டாம் தொகுதிமுடிய உள்ள ஆறுதொகுதி களும் இங்குப் பதிப்பிக்க எடுத்துக் கொள்ளப்பெற்றன. ஆகவே செய்யுட்டொகை முதலாவதில் 41, 2-வதில் 53, 3-வதில் 30 (34-4), 4 வதில் 21, 5-வதில் 23, 6-வதில் 6, 7 வதில் 11, 8-வதில் 14 ஆகக் கூடுதல் செய்யுட்கள் 199. காப்புச் செய்யுள் ஒன்றும், பாயிரச் செய்யுட்கள் மூன்றும் சேர்த்து 203 செய்யுட்கள் இங்கு வெளியிடப்பட்டுள்ளன.

### ஆசிரிய நிகண்டின் காலம்

எமது சுவடி எண் 919-ல் காலம்பற்றிய ஒருகுறிப்பு இருக்கிறது. அது: 1818-ம் வருடம் சித்திரை மாதம் 25-ம் தேதி என்பதாகும். இதன்படி 1818-ஐ ஆங்கில ஆண்டாகக் கொண்டு காணுங்கால் கி. பி. 1818-ம் வருடம், மே மாதம், 5-ம் தேதிக்குச் சரியான கலியுக வருடம் 4919, சாலியவாகன சகாப்தம் 1740, வெகுதானிய ஆண்டு, சித்திரைத் திங்கள் 25-ம் நாள், செவ்வாய்க்கிழமை, அமாவாசையாகும். ஆகவே இது 19-ம் நூற்றுண்டின் தொடக்கம் ஆகும். ஆனுல் ஆண்டிப் புலவரின் காலம் 17-ம் நூற்றுண்டின் முற்பகுதி என்று திருவாளர் ந. சி. கந்தையாபிள்ளை கூறுவார். 18-ம் நூற்றுண்டின் முற்பகுதி என்று கலைக்களஞ்சியம் கூறும், எனவே, ஆசிரியர் ஆண்டிப் புலவரின் காலம் 17-ம் நூற்றுண்டின் பிற்பகுதியும், 18-ம் நூற்றுண்டின் முற்பகுதியும் கொண்டதாதல் வேண்டும் அவர்தம் மூலச்சுவடி கிடைக்குமாயின், காலவரம்பு அறுதியிட்டுக் கூற இயலும். எம்மிடமுள்ள சுவடி (பிரதியே) படியே என்பதில் ஐயமில்லை. சுவடி

நிலையும், காலமும், எழுதியவர் பெயரும் கொண்டு, இது, படியே என்று துணியக்கிடக்கின்றது.

### *ஆசிரிய நிகண்டுச் சிறப்பு*

பிள்ளைத்தமிழ் நூல்களுள் வருகைப் பருவத்துக் குழந்தை தளர்நடையிட்டுச் சதங்கைஒலியோடு சந்தம்பெறவருவது கூறப்படும். அது போலவே இவ்வாசிரிய நிகண்டுச் செய்யுட்களும், தொடை நயத்தாலும், அடி நிமிர்ந்து செல்லும் பாவினத்தாலும் சிறந்தது. ஆசிரிய விருத்தத்தி ஞலான இதனை மனனம் செய்து கருத்தில் அமைப்பது எளிது. நடை மிகவும் ஆற்றொழுக்காயுள்ளது. சந்தம் நிறைந்த இப்பாடல்கள் இனிமையுடன் பாடி மகிழவும் தக்கது. பிற நிகண்டுகளிலில்லாததோர் தனிச் சிறப்பு இந் நிகண்டு நூலுக்குண்டு. ஒரு சொல்லுக்குப் பல சொற்கள் வருங்கால், அதனை எண் குறியீடிட்டுப் பாடியுள்ளார். சான்ருக.

"................................... இயக்கிமர
கதவல்லி யருகனைமுடி
கவித்தபக வதியம்மை பூகமர் நிழல்வஞ்சி
கழியாவ ரத்தின்மூர்த்தி
தெரியிலம் பிகையம்பா லிகைபரம சுந்தரி
சிறந்தயிரு நான்குபெயரும்
சீர்பெருந் தருமதே வதையென்று ரைத்தனர்
செந்தமிழ்ப் புலமையோரே!" - என்னும்

பகுதியில் தருமதேவதையின் பெயர் கூறவந்த ஆசிரியர்: 1) இயக்கி, 2) மரகதவல்லி, 3) அருகனை முடிகவித்த பகவதியம்மை 4) பூகமர் நிழல்வஞ்சி, 5) கழியாவரத்தின் மூர்த்தி, 6) அம்பிகை, 7) அம்பாலிகை, 8) பரமசுந்தரி ஆகிய இந்த இருநான்கு அதாவது எட்டுப் பெயர்களும் தருமதேவதைக்கு உரிய பெயர் என்கிருர். எல்லாப் பாடல்களிலும் இவ்வாறே அவ்வப் பெயர்களுக்குரிய எண்ணிக்கைகள் காணப்படுகின்றன.

மற்றுமோர் சிறப்பு: தோமில் புகழ் தொல்காப்பியர், தாம் இயற்றிய சூத்திரத்திறுதியில் 'என்மனுர் புலவர்' என்பார். அதாவது "கல்வி கேள்விகளில் சிறந்த புலவர்கள் சொல்வார்கள்" (நான் சொல்லவில்லை) என்று தன்னடக்கமாகக் கூறுவது போலவே, நம் ஆசிரிய நிகண்டு ஆசிரியரும் "......................என்று உரைத்தனர் செந்தமிழ்ப் புலமையோரே!" என்கிருர். பெரும்பாலான பாடல்களின் ஈற்றடியிறுதியில் "என்பர் பீடுறும் புலமையோரே" என்றும், "பேசினர் தமிழ்ப்புலவரே!" என்றும், "வகுத்தனர் தண்டமிழ்ப் புலமையோரே!" என்றும், கூறிய இவர் சில பாடல்களில் "மலையமுனி சொற்றதாமே!" என்றும், "மாமுனியியம்பினுரே!" என்றும் அகத்தியரைக் குறிப்பிடுவது, இறைவன் தமிழை அகத்திய மாமுனிவர்க்கு அருளியதை நினைவுபடுத்துவதாகும். மற்றும் பல சிறப்புகளைக்கொண்டது இவ்வாசிரிய நிகண்டு.

## சுவடிகள் ஒப்பு நோக்கல்

எம்முடைய மகால் சுவடி எண். 919-ஐ டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்களின் சுவடிகள் 941, 345 ஆகிய இரண்டுடனும் ஒப்புநோக்கும் போது கீழ்க்கண்ட மாறுபாடங்கள் காணப்பட்டன.

## தலைப்பு

941. காப்புச்செய்யுள் வெண்பா இல்லை. இதில் 'மதுரை உ. வே. சாமிநாதையர்' என்றுளது.

345. முதல் மூன்று ஏடுகள் இல்லை.

## பாயிரம்

முதலாம் செய்யுள்.

919. 1-வது வரி கன்னியுமை பாலனை

3 வது வரி நிகண்டு முறை யறி நன்னூல்..............
செய்து வைத்தேன்.

941. 1 ,, கன்னியுமை புதல்வனே
3 ,, நிகண்டுட னுரையறி நூல் ..............
செய்துவைத்தான்

345. ஏடு இல்லே,

2-ம் செய்யுள் :

919, 1-வது வரி மரங்களேத் தாவதிடமிரு மூன்று
2-வது வரி நாட்டித் திவாகரம் போல்

941. 1-வது வரி மரங்களே நடுவது திடமிருமூன்று
2-வது வரி நாட்டிற்றவர்

345. ஏடு இல்லே

3-ம் செய்யுள்

919. 4-வது வரி 'தோமில் பல......நிகண்டினுரை......
வகுத்தவாறே'

941. ,, 'தொழிற்பல......நிகண்டு முறை......
வுரைத்தவாறே.

345. ஏடு இல்லை.

## முதலாவது
## தெய்வப் பெயர்த் தொகுதி

3-ம் செய்யுள்

919, 1-வது வரி 'கரியவன் கேசவன் மா' என்று
தொடங்குகிறது.
4 ,, ,, திரிவிக்கிரமன்

941, 1 ,, ,, 'கரியவன் கேசவன் மா' என்ற சொற்கள் முதலடியின் ஈற்றயற் சொற்களாக அமைந்துள்ளன.
4 ,, ,, திருவுக்கிறைவன்

345. ஏடு இல்லே.

4-ம் செய்யுள்

919. 2-வது வரி பூமிகொழுநன்
3 ,, ,, இனமு மியம்புவ ரனந்தமென்றே.
ஏக குண்டலன லாயுத னீல வம்பரன்
இரேவதிக் கொழுநன் முசலி-எனும்
தொடக்கத்தது.

941. 2 ,, ,, கமலைபூமி
3 ,, ,, இச்சொற்கள் இல்லை
3 & 4 ,, பலபத்திரன் நாமம் பதின்மூன்றும்
முறை பிறழ்ந்துளது.

345. ஏடு இல்லை

5-ம் செய்யுள்

919. 1-ம் வரி வூர்தியயன்
4 ,, ,, காதலன்

941. 1 ,, ,, வூர்தியவன்
4 ,, ,, குத்தலன்

6-ம் செய்யுள்

919. 1-வது வரி பூமான்
2 ,, ,, மதனன்மோகன்
3 ,, ,, சூதமலர்வாள்
4 ,, பாணமன்றிப்
யிரண்டுடன்

941. 1-வது பூமன்
2 ,, மதனன் என்ற சொல் இடம்மாறியுள்ளது
3 ,, சூதமல்வான்
4 ,, பாணமாகும்
யிரண்டென

345. 1 ,, பூமன்
3 ,, திரமுறுயிருப்புவில் (காமுறு)
யிருப்புவில்
சூதமலர் வான்

4 ,, பாணமாகும்
பொறு மல்லிகை
யிரண்டென

இவ்வாறே பிற பாடல்களிலும் சிலபல வேறு பாடங்கள் காணப்படுகின்றன. கூறிற் பெருகும் என விடுத்தாம்.

### ஒப்புமை நூல்கள்

ஒரு நூலைப் பயிலுங்கால்: அந்நூல் கூறுவதென்ன; அதற்கு ஒப்புமையான பிறநூல்கள் கூறுவதென்ன வென்று ஒப்புநோக்குதல் கற்றறிந்த மாந்தர் கடன். அதனை மனதிற் கொண்டு இவ்வாசிரிய நிகண்டினைப் பதிப்பிக்க எடுத்துக் கொண்டபோது, இத்துடன் தொடர்புடைய பிற நிகண்டுகளையும் சேர்த்து வெளியிடத் தோன்றியது. நூலாசிரியர் தனது பாயிரத்துள்,

"முன்னுள திவாகரம் பிங்கல நிகண்டுசீர்
முந்துகாங்கேய னுரிச்சொல்

"முறைபெறு கயாகரம் பகரு மகராதி யிவை
முற்று மொன்ருய்த் திரட்டி......இயம்பிய நிகண்டு"

என்று கூறியதனல், திவாகரம், பிங்கலம், காங்கேயனுரிச் சொல், கயாகரம் ஆகிய நான்கையும் ஒப்புமை காட்டப் புகுங்கால், உரிச்சொல் நிகண்டினும் பெரும்புகழ் கொண்ட சூடாமணி நிகண்டினை அதற்குப் பதிலாகச் சேர்த்து, கால வகையினனே, திவாகரம், பிங்கலம், சூடாமணி, கயாகரம் ஆகிய நான்கும் எடுத்துக்கொள்ளப்பட்டன. அகராதி நிகண்டு இதனின் வேறுபட்ட பாகுபாடுடைமையின் எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆகவே எடுத்துக் கொள்ளப்பட்ட ஒப்புமை நூல்கள் மேற்கண்ட நான்குமே யாம். தமிழன்னை பெற்றுள்ள எல்லா நிகண்டுகளுமே ஒரு சேர ஒப்புமைப் படுத்திய ஒருநூல் வெளிவருமாயின், அது தமிழுலகின் தனிப் பெருந் தவமேயாம். "எல்லா நூல்களினும் நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் நன்றுதானே!"

## ஒப்புமை வேறுபாடுகள்

ஒப்புமைப்பகுதியில் குறிப்பிட்டுள்ள சிலசொற் களுக்கு ஒப்புமைகள் விடுபட்டும், மாறுபட்டும், மிகைபட் டும் உள்ளன. சிலசொற்களுக்கு,அவ்வச் சொற்களுக்குரிய பெயராலேயே, பிற நூல்களின் தலைப்பு அமைவதில்லை. மாறுபட்ட பெயரால் சில சொற்கள் அமைந்துள்ளன. சான் ருக 2-ம் தொகுதியில் 'அருகர் தவமாதின் பெயர்' என் பதற்கு சூடாமணி நிகண்டில் 'நோற்பாள் பெயர்' என்று ளது. 'அமங்கலை' என்றவிடத்து,திவாகரத்தும்,பிங்கலத்தும் 'கலன்கழி மகளிர்' என்று தலைப்பிடப்பட்டுளது. ஏனைய நூல்களுள் 'வன்னி' என்றிருப்பக் கயாகரத்து 'சமி' என்று ளது. 'அரும்பின் பெயர்' என்ற

விடத்து, திவாகரத்தும், பிங்கலத்தும், கயாகரத்தும் 'மொட்டு' என்ற தலைப்பில் உளது. சூடாமணியுள் 'அரும்பு' என்றதலைப்பு இருக்கிறது.

'நீர்முள்ளி' என்ற தலைப்பில் திவாகரமும், பிங்கலமும் கூறுகின்றன. ஆனால் 'முள்ளி' என்ற தலைப்பில் சூடாமணியும் கயாகரமும் கூறுகின்றன. இவை இரண்டும் ஒன்றே. அவ்வாறே, 'சிறுபூளை' என்று திவாகரம், பிங்கலம், சூடாமணி ஆகிய மூன்றும் கூற 'உழிஞை' என்று கயாகரம் கூறுகின்றது. இவ்விரண்டும் ஒன்றே.

எட்டாவது தொகுதியுள், 'அளத்தல்' என்ற சொல், 'அளவை' என்ற தலைப்பில் பிற நூல்களில் தரப்பட்டிருந்தும். கயாகரத்தில் மட்டும் அதன் உட்பகுதியாகிய 'கச்சம்' என்ற தலைப்பில் கூறப்பட்டுளது. இவ்வாறே சில சொற்கள் தங்கள் தங்கள் தலைப்புக்களை மறைத்து, உறுப்புக்களால் விளங்குகின்றன. அவை போன்ற சொற்களைக் காண்டல் சற்று கடினமாயிற்று. அவ்வாறு சொற்களின் தலைப்புகள் மாறுபாடுகளைக்கொண்டிருத்தலால், அவைகளைக் காணக் காலதாமதம் ஏற்பட்டது. சான்றேர், நாகரிகர், நாகப்பதிவாழ்நர், காமுகர், சதுரர் ஆகிய நான்கு தலைப்புகளிலும் சொற்கள் உள்ளதால், அட்டவணையில் நான்கு வரிசைகளையும் பார்க்க வேண்டியதாயிற்று. அதுபோலவே காமுகர் விடர், தூர்த்தர் ஆகியவைகளும் பார்க்க வேண்டியதாயிருந்தது. இவைகளால் ஒரு சொல்லினை 'இல்லை' என்று சொல்ல முடியவில்லை.

கயாதர நிகண்டில் அகரவரிசைப் பட்டியல் இன்றிப் பாட்டு வரிசையில் சொற்கள் தந்துள்ளமையின் ஒரு சொல்லை எளிதில் காணமுடியாததாயிற்று.

'அருளுடையோன்' என்ற தலைப்பு சூடாமணியுளும் 'கருணையுடையோன்' என்ற தலைப்பு பிங்கலத்தும் காணப்படுகின்றன. இதனால் சொல்லைக் கொண்டு மட்டும் நோக்காது பொருள்கொண்டும் நோக்கவேண்டியதாயிற்று. 'வேசை' என்றசொல்லின் தலைப்பு பிங்கலந்தையில் காணப்படவில்லை. அதற்கு மாருக அதில் 'பொது மகளிர்' என்ற தலைப்பில் உள்ளது. இது போன்ற சிற்சில சொற்களால் இடர்ப்பாடுகள் நேர்ந்தன.

பொதுவாகக் கூறுமிடத்து ஒப்புமைப் பகுதிகளைக் குறிக்கும் போது மேற்கூறிய பல்வேறு இடர்ப்பாடுகள் இருந்தமையான், கூடியமட்டில் ஒப்புமைகள் கூறப்பட்டுள்ளன. அறியாமையினுல் விடுபட்டவைகள், மாறுபட்டவைகள், தவறுற்றவைகள் இருக்கக்கூடும். மேலும், அச்சகப் பிரதிகள் திருத்தம் பெறும் போதும் சில குறைகள் நேர்ந்திருத்தல் கூடும். கற்றுவல்ல நல்லோர்கள் அவற்றைப் பொறுப்பதோடு, அவற்றைச் சுட்டிக்காட்டினும் திருத்தம் பெறும்.

## பதிப்புச் சிறப்பு

எளிதில் கற்றுணரும் பண்புகொண்ட இவ்வாசிரிய நிகண்டினைப் பதிப்பிக்கத் தூண்டி, ஊக்கமளித்து இப்பதிப்புக்குத் துணையானவற்றைப் பெற்றுத்தந்து சிறப்பித்த எமது மகால் முன்னைநாள் கௌரவக் காரியதரிசி, திருமிகு நீ.கந்தசாமிப் பிள்ளை அவர்கட்கு எனது நன்றி உரித்தாவதாக. இந்நூல் வெளிவரத் துணைநின்ற முன்னைநாள் நூலகர் திரு வி. கோபாலய்யங்கார் அவர்கட்கும் எனது நன்றி உரியதாகட்டும். காலத்தின் அருமை கருதி விரைவில் இந்நூல் வெளிவரப் பெரு முயற்சி கொண்டு ஊக்குவித்த கௌரவக் காரியதரிசி வித்துவான் திரு அ. வடிவேலனுர் அவர்கட்கும் எனது இதயங்கலந்த நன்றி உரித்தாகிறது.

சிறப்புற அச்சேற்றித்தந்த வெற்றிவேல் அச்சகத்தாருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந் நூலுள் குற்றங்களைந்து குணங்கொண்டு பயனுறுதல் கற்றறிந்த மாந்தர்கடன். இந்நூல் மேலும் சிறப்புடன் விளங்க விரும்பும் மேன்மக்கள் தங்கள் தங்களிடமுள்ள சுவடிகளை, எமது மகாலுக்குத் தந்து துணை புரிவார்களாயின் நற்பயனும், நன்மக்களின் வாழ்த்தும் பெறுவர்.

இந்நூலுக்குத் தோன்றாத் துணையாய் நின்ற தமிழன்னை அருள்புரிவாளாக.

இங்ஙனம்,
புலவர், **வீ. சொக்கலிங்கம்**
தமிழ்த்துறை,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
24—9—75

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி.


| செய்யுள் | | பக்கம் |
|---|---|---|
| அங்கண் வியன் | ... | 581 |
| அடுகளம் | ... | 474 |
| அணங்கு | ... | 45 |
| அண்டம் | ... | 104 |
| அதிகம் நனி | ... | 572 |
| அந்திவரி | ... | 477 |
| அமலையம் | ... | 35 |
| அமுதம் | ... | 319 |
| அயஞ்சலம் | ... | 61 |
| அய்யர் | ... | 138 |
| அரிதீவிரங் | ... | 80 |
| அரிவயப்புலி | ... | 262 |
| அருகலூனங் | ... | 556 |
| அருணனுத | ... | 64 |
| அலகைமுலை | ... | 15 |
| அலவன் | ... | 66 |
| அவனிகாசினி | ... | 426 |
| அழிவில் | ... | 257 |
| அள்ளல்குழை | ... | 471 |
| அறவர்மாதவர் | ... | 118 |
| ஆகுமே | ... | 531 |
| ஆடகியெனும் | ... | 414 |
| ஆட்டர்குறும்பர் | ... | 148 |
| ஆண்டலை | ... | 346 |
| ஆதிபன் | ... | 123 |
| ஆய்ந்தபிட | ... | 242 |
| இந்திரன் | ... | 33 |

| செய்யுள் | | பக்கம் |
|---|---|---|
| இரசதந் | ... | 505 |
| இரஸேயைப்பசி | ... | 85 |
| இருந்திடும் | ... | 51 |
| இறலெருந் | ... | 352 |
| ஈண்டென்ப | ... | 489 |
| ஈரங்கோலியர் | ... | 162 |
| உடல்சடங் | ... | 230 |
| உதவிசெய் | ... | 267 |
| உதும்பரங் | ... | 385 |
| உம்பல்கரி | ... | 265 |
| உருவரிய | ... | 534 |
| உலவிடுங் | ... | 288 |
| உல்லியர் | ... | 165 |
| உளகுடுமி | ... | 252 |
| உள்ளினர் | ... | 173 |
| எண்ணருந் | ... | 4 |
| எண்ணுநூ | ... | 418 |
| ஏராசிரிய | ... | 1 |
| ஏர்மயஞ் | ... | 564 |
| ஒண்டன்சனு | ... | 291 |
| ஓதமொடு | ... | 442 |
| ஓதனம் | ... | 509 |
| ககபதி | ... | 333 |
| கங்கை | ... | 26 |
| கடிகூளி | ... | 48 |
| கண்டமே | ... | 521 |
| கதிரமென் | ... | 379 |
| கரசாய்கை | ... | 239 |
| கரிமூன்று | ... | 228 |

| செய்யுள் | | பக்கம் |
|---|---|---|
| கரியவன் | ... | 12 |
| கருமுதலே | ... | 349 |
| கருமையசி | ... | 561 |
| கரும்புறவி | ... | 339 |
| கன்னல்கழை | ... | 356 |
| கன்னியிற் | ... | 198 |
| கன்னியுமை | ... | 3 |
| காசுநவை | ... | 579 |
| காட்டுபீடிகை | ... | 545 |
| காணருஞ் | ... | 549 |
| காம்புபணை | ... | 389 |
| காராளர் | ... | 154 |
| காரியாரி | ... | 28 |
| கார்கூதிர் | ... | 110 |
| குக்கில்செம் | ... | 342 |
| குசங்குசை | ... | 392 |
| குடர்பொதுவர் | ... | 207 |
| குடிபடை | ... | 146 |
| குந்தம்மண்டிலம் | ... | 277 |
| குரமொடு | ... | 279 |
| குறவர்காணவர் | ... | 204 |
| கைம்மாமுழக் | ... | 285 |
| கொந்தளமளக | ... | 254 |
| கொல்லிவெற்பன் | ... | 133 |
| கோசமிலிங்க | ... | 236 |
| சங்கங்கணந் | ... | 159 |
| சங்கரன் | ... | 7 |
| சட்டகம் | ... | 480 |
| சந்தானமரி | ... | 362 |
| சம்மதன் | ... | 185 |
| சரவணங் | ... | 366 |

| செய்யுள் | | பக்கம் |
|---|---|---|
| சாலிமட | ... | 101 |
| சாற்றிய | ... | 502 |
| சான்றவ | ... | 126 |
| சிகரமுடி | ... | 249 |
| சிகிபிணி | ... | 329 |
| சிந்துவா | ... | 181 |
| சிவமுத்தி | ... | 450 |
| சிறுவிபுத்திரி | ... | 223 |
| சினகரங் | ... | 452 |
| சினம்வெகுளி | ... | 576 |
| சுச்சிலே | ... | 375 |
| சுடிகைசேகரம் | ... | 515 |
| சுப்பிரம் | ... | 559 |
| சுரையாவின் | ... | 313 |
| செம்மறி | ... | 316 |
| சேட்டை | ... | 94 |
| சொல்லிய | ... | 83 |
| தடிசிந்து | ... | 518 |
| தண்டதரன் | ... | 30 |
| தப்பிலா | ... | 157 |
| தரணிபுகழ் | ... | 129 |
| தலம்விளா | ... | 483 |
| தன்னைமொய்த் | ... | 218 |
| தாதிற்படுந்தூள் | ... | 408 |
| தாதைதன்றுதை | ... | 216 |
| தாருகவி | ... | 41 |
| திசைவிசும் | ... | 456 |
| திருவினது | ... | 541 |
| தீவசுத்தழல் | ... | 55 |
| துறைகுடிஞை | ... | 468 |

| செய்யுள் | | பக்கம் |
|---|---|---|
| தூசுபரி | ... | 528 |
| தெய்வமறு | ... | 144 |
| தேடியகணங் | ... | 322 |
| தேற்றுமந்திரி | ... | 142 |
| தொடலைகத் | ... | 423 |
| தொடுப்பாங் | ... | 486 |
| நறவம் நாகம் | ... | 372 |
| நாடகர் நிருத்தர் | ... | 168 |
| நாரமே | ... | 446 |
| நானைந்து | ... | 294 |
| நுட்பமிறை | ... | 554 |
| நெடியம சுழல் | ... | 525 |
| பங்குனி | ... | 91 |
| பட்டந்த | ... | 493 |
| பரதர் பரதவர் | ... | 211 |
| பரவுசெளமி | ... | 121 |
| பரவுவெண் | ... | 38 |
| பரவை தெண்டிரை | ... | 440 |
| பரிகங்கிடங் | ... | 461 |
| பரிசனங் | ... | 171 |
| பலந்தனஞ்சேனை | ... | 225 |
| பன்னகம் | ... | 298 |
| பாடி தண்ணடை | ... | 431 |
| பாடினி மதங்கி | ... | 201 |
| பாடுபரி | ... | 569 |
| பாய்சிகரி | ... | 304 |
| பாறல்புல் | ... | 310 |
| பீதகன் | ... | 71 |
| புண்டரிகம் | ... | 411 |
| புஞ்சபுலால் | ... | 325 |
| புரவலன் | ... | 140 |

| செய்யுள் | | பக்கம் |
|---|---|---|
| புரையுவப் | ... | 574 |
| புனையும் வயிர | ... | 537 |
| பூக்கமுட்டங் | ... | 435 |
| பூட்டுதலை | ... | 274 |
| பூதரஞ்சயிலம் | ... | 428 |
| பூரியர் கனிட்டர் | ... | 188 |
| பெருகுபூ | ... | 98 |
| பெருமான் | ... | 2 |
| பெற்றங்கு | ... | 307 |
| பேதை பெதும்பை | ... | 196 |
| பைங்குவளை | ... | 398 |
| பைபணமி | ... | 300 |
| பொருவிலா | ... | 193 |
| பொற்பலங் | ... | 567 |
| பொன்வெள்ளி | ... | 498 |
| மங்கலன் | ... | 69 |
| மடிமுண்டகங் | ... | 369 |
| மண்டியகடங் | ... | 270 |
| மதிசகன் | ... | 19 |
| மலையுடனுறு | ... | 437 |
| மல்லகதி | ... | 283 |
| மல்லைதட்டு | ... | 552 |
| மன்னர் | ... | 152 |
| மன்னுகொடை | ... | 130 |
| மாசைபீதகங் | ... | 496 |
| மாதிசூதங் | ... | 359 |
| மாரிதுளி | ... | 107 |
| மாலிகை | ... | 395 |
| மாறிலுன் | ... | 22 |
| முகிள்சினை | ... | 404 |

| செய்யுள் | | பக்கம் |
|---|---|---|
| முக்கண்ணன் | ... | 23 |
| முற்றியபதாதி | ... | 213 |
| மூலகங் | ... | 401 |
| மேடமுதல் | ... | 78 |
| மையாடு | ... | 74 |
| வடமரந் | ... | 382 |
| வடிமதுச் | ... | 512 |
| வடிவுபெறு | ... | 246 |
| வரன்கணவ | ... | 220 |
| வருடைவா | ... | 336 |
| வரைசிற | ... | 33 |
| வரைவறத்தான் | ... | 190 |
| வழுதிகூடற் | ... | 135 |
| வள்ளலுபகாரி | ... | 176 |
| வாசம்வாரங் | ... | 114 |
| வாதம்வளி | ... | 52 |
| வாமங்கு | ... | 233 |
| வாமதேவன் | ... | 5 |
| விடங்கமஞ் | ... | 464 |
| விந்தைபகவதி | ... | 43 |
| வில்விரியல் | ... | 583 |
| வீரர்கூளியர் | ... | 179 |
| வெடிநரை | ... | 58 |
| வேதன் | ... | 16 |
| வேலியரணம் | ... | 459 |

# பெயர் முதற்குறிப்பு அகரமுதலி.


| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| அ | | |
| அகலம் | ... | 581 |
| அகவிதழ் | ... | 404 |
| அகழ்எலி | ... | 304 |
| அகில் | ... | 362 |
| அக்கசாலையர் தெரு | ... | 474 |
| அக்கினி | ... | 51 |
| அக்குரோணி | ... | 228 |
| அங்குசம் | ... | 274 |
| அசதி | ... | 185 |
| அசுணப்புள் | ... | 336 |
| அசுபதி | ... | 85 |
| அசோகு | ... | 385 |
| அச்சமுடையோன் | ... | 181 |
| அடிமையோர் | ... | 179 |
| அடுப்பு | ... | 464 |
| அட்டை | ... | 300 |
| அணியிடும்கலன் | ... | 549 |
| அணில் | ... | 294 |
| அண்டங்காக்கை | ... | 333 |
| அண்ணன் | ... | 216 |
| அத்தம் | ... | 91 |
| அத்தவாளம் | ... | 534 |
| அத்தி | ... | 385 |
| அந்தணர் | ... | 138 |
| அந்தணர் தொழில் | ... | 138 |
| அந்தராளன் | ... | 198 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| அமரர் | ... | 33 |
| அமரர்மாதர் | ... | 33 |
| அமாவாசை | ... | 110 |
| அம்பு | ... | 518 |
| அயலார் | ... | 173 |
| அயோத்தி | ... | 431 |
| அரங்கு | ... | 489 |
| அரசரிருக்கை | ... | 461 |
| அரசன் | ... | 140 |
| அரசன் தொழில் | ... | 140 |
| அரசியிருக்கை | ... | 452 |
| அரசிருக்கை | ... | 452 |
| அரசு | ... | 382 |
| அரண் (நால்வகை) | ... | 143 |
| அரண்மனை | ... | 452 |
| அரிசி | ... | 418 |
| அருகர்தவமாது | ... | 196 |
| அருச்சுனன் | ... | 130 |
| அருந்ததி | ... | 101 |
| அரும்பு | ... | 404 |
| அரைஞாண் | ... | 537 |
| அரைப்பட்டிகை | ... | 537 |
| அலரி | ... | 395 |
| அலி | ... | 181 |
| அல்குல் | ... | 233 |
| அல்லியின் பொது | ... | 398 |
| அவந்தி | ... | 431 |
| அவரை | ... | 414 |
| அவிட்டம் | ... | 94 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| அழகு | ... | 564 |
| அழிஞ்சில் | ... | 379 |
| அளத்தல் | ... | 556 |
| அறச்சாலை | ... | 464 |
| அறநிலையறம் | ... | 144 |
| அறநிலைப்பொருள் | ... | 144 |
| அறநிலையின்பம் | ... | 144 |
| அறிஞர் | ... | 126 |
| அறிவில்லான் | ... | 176 |
| அறுவகைத்தானை | ... | 140 |
| அனுடம் | ... | 91 |
| அனுலோமன் | ... | 198 |
| அன்னப்பறவை | ... | 329 |

ஆ

| | | |
|---|---|---|
| ஆகாயம் | ... | 104 |
| ஆசிரியர் | ... | 126 |
| ஆச்சா | ... | 379 |
| ஆடு அடைக்கும்பட்டி | ... | 316 |
| ஆடுகட்டும் கயறு | ... | 316 |
| ஆட்டின் பொது | ... | 313 |
| ஆட்டுக்குட்டி | ... | 316 |
| ஆண் | ... | 193 |
| ஆண்குறி | ... | 236 |
| ஆண்டு (அவ்விடம்) | ... | 489 |
| ஆண்டு (வருடம்) | ... | 114 |
| ஆண் நண்டு | ... | 349 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| ஆண் நாய் | ... | 291 |
| ஆண் பெண் சிறப்புப் பெயர் | ... | 193 |
| ஆண் பொதுப்பெயர் | ... | 193 |
| ஆண் மயிர் | ... | 252 |
| ஆண் முதலை | ... | 349 |
| ஆண் யானை | ... | 265 |
| ஆந்தை | ... | 333 |
| ஆபரணத்தொங்கல் | ... | 545 |
| ஆபரணப்பொது | ... | 549 |
| ஆமணக்கு | ... | 418 |
| ஆயத்தமானேன் | ... | 190 |
| ஆயர் தெரு | ... | 474 |
| ஆயிலியம் | ... | 88 |
| ஆயில் | ... | 379 |
| ஆயுதப் பொது | ... | 525 |
| ஆரியர் | ... | 159 |
| ஆலங்கட்டி மழை | ... | 107 |
| ஆல் | ... | 382 |
| ஆவின் இறைச்சி | ... | 325 |
| ஆழநீர் | ... | 468 |
| ஆழி | ... | 461 |
| ஆழ்வாரி | ... | 461 |
| ஆளியானை | ... | 262 |
| ஆறு | ... | 468 |
| ஆற்றிடைக்குறை | ... | 471 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|

## இ


| | | |
|---|---|---|
| இடபம் | ... | 310 |
| இடபராசி | ... | 75 |
| இடப வீதி | ... | 79 |
| இடம் | ... | 483 |
| இடம்புரி | ... | 352 |
| இடாகினி | ... | 41 |
| இடி | ... | 104 |
| இடுப்பு | ... | 233 |
| இடை | ... | 233 |
| இடையேழுவள்ளல்கள் | ... | 135 |
| இத்தி | ... | 382 |
| இந்திரகோபம் | ... | 304 |
| இந்திரன் | ... | 30,33 |
| இந்திரன் மகன் | ... | 33 |
| இந்திராணி | ... | 33 |
| இந்திரியம் | ... | 257 |
| இமை | ... | 246 |
| இரதி | ... | 19 |
| இரதி தங்கை | ... | 19 |
| இரப்போன் | ... | 176 |
| இரவு | ... | 80 |
| இராகு | ... | 71 |
| இராசி பன்னிரண்டு | ... | 74 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| இராசி விதி | ... | 78 |
| இருநிதி | ... | 502 |
| இருப்பிடம் | ... | 489 |
| இருப்புமுள் | ... | 521 |
| இரும்பு | ... | 505 |
| இருவாட்சி | ... | 395 |
| இருள் | ... | 83 |
| இரேவதி | ... | 98 |
| இலந்தை | ... | 379 |
| இலந்தைப்பழம் | ... | 379 |
| இலாமிச்சை | ... | 395 |
| இலுப்பை | ... | 382 |
| இலை | ... | 401 |
| இவண் | ... | 489 |
| இளங்கதிர் | ... | 418 |
| இளஞ்சூல் | ... | 418 |
| இளமை(பருவம்) | ... | 567 |
| இளமை(பிள்ளை) | ... | 223 |
| இளம்கள் | ... | 418 |
| இளம்காளையர் மயிர் | ... | 252 |
| இளம்பனை | ... | 382 |
| இளவேனிற்காலம் | ... | 113 |
| இளையோன் | ... | 223 |

ஈ

| | | |
|---|---|---|
| ஈசன் வில் | ... | 518 |
| ஈட்டி | ... | 521 |
| ஈண்டு | ... | 489 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| ஈயத்தின் பொது | ... | 505 |
| ஈயம் | ... | 505 |
| ஈரப்பலா | ... | 356 |
| ஈரல் | ... | 325 |

உ

| | | |
|---|---|---|
| உச்சி (குடுமி) | ... | 254 |
| உச்சி(மத்தியானம்) | ... | 80 |
| உடம்பு | ... | 230 |
| உடற்குறை | ... | 249 |
| உடற்செறிமயிர் | ... | 254 |
| உடனிகழ்வார் | ... | 173 |
| உடும்பு | ... | 294 |
| உண்ணாக்கு | ... | 242 |
| உதடு | ... | 242 |
| உதவிசெய் யானை | ... | 267 |
| உதிரம் | ... | 325 |
| உத்தரீகம் | ... | 531 |
| உத்திரட்டாதி | ... | 98 |
| உத்திரம் | ... | 91 |
| உத்திராடம் | ... | 94 |
| உப்பு வாணிகர் | ... | 162 |
| உமை | ... | 35 |
| உயர்ச்சி | ... | 574 |
| உயர்ந்தோர் | ... | 123 |
| உயிர் | ... | 257 |
| உயுத்தகளம் | ... | 474 |
| உரியவன் | ... | 190 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| உரோகணி | ... | 85 |
| உலகம் | ... | 426 |
| உலண்டு | ... | 304 |
| உலைக்களம் | ... | 480 |
| உவண் | ... | 489 |
| உவர் நீர் | ... | 468 |
| உழவு | ... | 480 |
| உழிஞை | ... | 228 |
| உழுதொழில்வளைப்பு | ... | 480 |
| உளுந்து | ... | 414 |
| உள்மாசு | ... | 325 |
| உள்ளங்கை | ... | 236 |
| உள்ளது சிறத்தல் | ... | 581 |
| உறுப்பு | ... | 257 |
| உறைகாரர் | ... | 162 |
| உறையூர் | ... | 431 |

ஊ

| | | |
|---|---|---|
| ஊமத்தை | ... | 366 |
| ஊமை | ... | 181 |
| ஊருணி | ... | 446 |
| ஊர்க்குருவி | ... | 339 |
| ஊர்ப்பொது | ... | 435 |
| ஊறல் | ... | 471 |
| ஊன் | ... | 325 |
| ஊன்தின்போன் | ... | 190 |
| ஊன்விலைஞர் | ... | 162 |

| பெயர்முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|

ஏ


| | | |
|---|---|---|
| எஃகு | ... | 505 |
| எட்டி | ... | 382 |
| எண்காற்பறவை | ... | 336 |
| எண்பேராயம் | ... | 142 |
| எண்மணம் | ... | 213 |
| எண்மணிக்கோவை | ... | 545 |
| எண்வகைக் குறைபாடுடையோர் | | 213 |
| எந்திரவாவி | ... | 493 |
| எப்பொருட்கும் இறைவன் | ... | 123 |
| எமன் | ... | 30 |
| எருதின் கூட்டம் | ... | 310 |
| எருதின் முரிப்பு | ... | 310 |
| எருது | ... | 310 |
| எருமை | ... | 313 |
| எருமையாண் | ... | 313 |
| எலி | ... | 304 |
| எலுமிச்சை | ... | 359 |
| எலும்பு | ... | 257 |
| எல்லாம் | ... | 556 |
| எவ்விடம் | ... | 489 |
| எள் | ... | 418 |
| எள் காய் | ... | 418 |
| எறும்பு | ... | 304 |


ஏ


| | | |
|---|---|---|
| ஏகாந்தம் | ... | 489 |
| ஏலம் | ... | 369 |
| ஏவல் செய்வோர் | ... | 179 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| ஏவுவோன் | ... | 190 |
| ஏழு தாதுக்கள் | ... | 213 |
| ஏழு பருவமங்கையர் | ... | 196 |
| ஏழு பருவமங்கையர் அகவை | .. | 196 |
| ஏழுலோகம் | ... | 498 |

ஐ

| | | |
|---|---|---|
| ஐந்தரு | ... | 362 |
| ஐந்து அக்கினி | ... | 51 |
| ஐம்புலன்கள் | ... | 257 |
| ஐம்பெருங்குழு | ... | 142 |
| ஐயனார் | ... | 28 |
| ஐவகைச் சுற்றம் | ... | 142 |

ஒ

| | | |
|---|---|---|
| ஒட்டகம் | ... | 282, 285 |
| ஒட்டை | ... | 372 |
| ஒதுக்கிடம் | ... | 489 |
| ஒளி | ... | 583 |
| ஒளி செயல் | ... | 583 |
| ஒளி மழுங்குதல் | ... | 583 |
| ஒற்றர் | ... | 148 |

ஓ

| | | |
|---|---|---|
| ஓடை | ... | 372 |
| ஓட்டநீர் | ... | 468 |
| ஓதும்பள்ளி | ... | 464 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| ஓத்துரைப்போர் | ... | 126 |
| ஓமகுண்டம் | ... | 480 |
| ஓரி | ... | 291 |
| ஓரீற்றுப் பசு | ... | 307 |

க

| | | |
|---|---|---|
| கக்கரி | ... | 366 |
| கங்கணம் | ... | 545 |
| கங்கை | ... | 38 |
| கங்கைநதி | ... | 442 |
| கஞ்சா | ... | 372 |
| கஞ்சி | ... | 509 |
| கடகராசி | ... | 76 |
| கடம்பு | ... | 385 |
| கடலை | ... | 414 |
| கடல் | ... | 440 |
| கடவுள் மணி | ... | 498 |
| கடற்கடவுள் | ... | 440 |
| கடற்றிரை | ... | 442 |
| கடாரம் | ... | 431 |
| கடிகைமாக்கள் | ... | 168 |
| கடினன் | ... | 190 |
| கடுக்காய் | ... | 385 |
| கடைக்கொள்ளி | ... | 58 |
| கடைப்புணர்வு | ... | 549 |
| கடையேழு வள்ளல்கள் | ... | 135 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| கட்டழகு | ... | 567 |
| கணக்கர் தம்வழியிலுள்ளோர் | ... | 146 |
| கணவன் | ... | 220 |
| கணைக்கால் | ... | 230 |
| கணையம் | ... | 521 |
| கண் | ... | 246 |
| கண்குத்திப்பாம்பு | ... | 298 |
| கண்டபேரண்டம் | ... | 336 |
| கண் துயிலிடம் | ... | 480 |
| கண்மணி | ... | 246 |
| கதிர் | ... | 418 |
| கத்தூரி | ... | 294 |
| கந்தருவர் | ... | 45 |
| கபாலம் | ... | 257 |
| கமுகு | ... | 356 |
| கம்பு | .. | 414 |
| கரடி | ... | 262 |
| கரந்தை | ... | 228 |
| கரி | ... | 58 |
| கரிக்குருவி | ... | 342 |
| கரிப்பாகர் | ... | 146 |
| கரியவன் | ... | 190 |
| கரு | ... | 352 |
| கருங்காலி | ... | 379 |
| கருங்குரங்கு | ... | 288 |
| கருங்குவளை | | 398 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| கருடன் | ... | 333 |
| கருமணல் | ... | 446 |
| கருமை | ... | 561 |
| கரும்பு | ... | 356 |
| கரும்புரு | ... | 339 |
| கருவழலைப்பாம்பு | ... | 298 |
| கருவிளம் | ... | 375 |
| கருவூர் | ... | 431 |
| கர்னன் | ... | 129,130 |
| கலங்கியநீர் | ... | 468 |
| கலைஞர் | ... | 126 |
| கலைமான் | ... | 285 |
| கல்லழுத்து | ... | 549 |
| கல்விபயிலிடம் | ... | 461 |
| கவரிமான் | ... | 285 |
| கவுதமைநதி | ... | 442 |
| கவுதாரி | ... | 339 |
| கழலை | ... | 249 |
| கழல் | ... | 537 |
| கழற்சிக்காய் | ... | 375 |
| கழற்சிக்கொடி | ... | 375 |
| கழிமுகம் | ... | 471 |
| கழுகு | ... | 333 |
| கழுதை | ... | 291 |
| கழுத்து | ... | 239 |
| கழுமுள் | ... | 521 |
| கழைக்கூத்தர் | ... | 168 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| கள் | ... | 512 |
| கள்விஜேஞர் | ... | 162 |
| கள்ளி | ... | 375 |
| கறையான் | ... | 304 |
| கற்கடகராசி | ... | 76 |
| கற்பகத்தருவிற்படர்கொடி | ... | 362 |
| கற்பகம் | ... | 362 |
| கற்படை | ... | 456 |
| கற்ருழை | ... | 375 |
| கற்ருேர் | ... | 126 |
| கன்னம் | ... | 246 |
| கன்ஞர் | ... | 157 |
| கன்னி | ... | 196 |
| கன்னிராசி | ... | 76 |

கா

| | | |
|---|---|---|
| காக்கணம் | ... | 375 |
| காக்கை | ... | 333 |
| காசம் | ... | 531 |
| காசி | ... | 431 |
| காஞ்சி (ஊர்) | ... | 431 |
| காஞ்சி (திணை) | ... | 228 |
| காஞ்சொறி | ... | 375 |
| காடன் | ... | 339 |
| காடை | ... | 389 |
| காட்டா | ... | 313 |
| காதணி | ... | 515 |
| காத தூரம் | ... | 486 |
| காதலன் | ... | 228 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| காதலி | ... | 223 |
| காது | ... | 246 |
| காந்தக்கல் | ... | 502 |
| காமமிக்கோன் | ... | 181 |
| காயா | ... | 379 |
| காய் | ... | 408 |
| காராமணி | ... | 414 |
| காரீயம் | ... | 505 |
| காருணியன் | ... | 190 |
| காரெலி | ... | 304 |
| கார்காலம் | ... | 113 |
| கார்த்திகை | ... | 85 |
| காலணிப்பொது | ... | 587 |
| காலத்தின் பொது | ... | 110 |
| காலவிரை | ... | 103 |
| காலாள் | ... | 213 |
| காலை | ... | 80 |
| காலைப்பொழுது | ... | 83 |
| கால் | ... | 280 |
| கால்கரடு | ... | 280 |
| கால்சரி | ... | 545 |
| காவிக்கல் | ... | 502 |
| காவிரி நதி | ... | 442 |
| காவிரிப்பூம்பட்டினம் | ... | 431 |
| காளி | ... | 41 |
| காளியின் ஏவற்பெண் | ... | 41 |
| காற்று (சிறப்புப் பெயர்) | ... | 51, 52 |
| காற்று (பதின் காற்று) | ... | 48, 51 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| காற்று (பொதுப்பெயர்) | ... | 51,52 |
| கானங்கோழி | ... | 346 |
| கானீனன் | ... | 198 |
| கான்யாறு | ... | 442 |

கி

| | | |
|---|---|---|
| கிடைறு | ... | 493 |
| கிண்கிணிமாலை | ... | 545 |
| கிம்புரி | ... | 549 |
| கிராமியன் | ... | 190 |
| கிழக்கு | ... | 456 |
| கிழங்கு | ... | 401 |
| கிழி | ... | 534 |
| கிளி | ... | 342 |
| கிளிஞ்சல் | ... | 352 |

கீ

| | | |
|---|---|---|
| கீரி | ... | 288 |
| கீரை | ... | 392 |
| கீழ்மக்கள் | ... | 188 |
| கீழ்வாய் | ... | 242 |

கு

| | | |
|---|---|---|
| குங்குமம் | ... | 362 |
| குடல் | ... | 325 |
| குடிசை | ... | 480 |
| குணமிலாப்பசு | ... | 307 |
| குண்டகன் | ... | 198 |
| குண்டலம் | ... | 515 |

| | | |
|---|---|---|
| குதம் | ... | 239 |
| குதிரை | ... | 277 |
| குதிரை அங்கவடி | ... | 279 |
| குதிரை உமிழ்நீர் | ... | 279 |
| குதிரைக்கடிவாளம் | ... | 279 |
| குதிரைக் கயறு | ... | 279 |
| குதிரைக்கலணை | ... | 279 |
| குதிரைக் குளம்பு | ... | 279 |
| குதிரைச்சம்மட்டி | ... | 279 |
| குதிரை நடை | ... | 282 |
| குதிரை நெடுமயிர் | ... | 279 |
| குதிரை பிடரிமயிர் | ... | 279 |
| குதிரைப் பந்தி | ... | 282 |
| குதிரை வையாளி வீதி | ... | 282 |
| குதிர் | ... | 461 |
| குபேரன் | ... | 28 |
| குமரிநதி | ... | 442 |
| குமிழ் | ... | 389 |
| குமுதம் | ... | 398 |
| கும்பராசி | ... | 77 |
| குயவர் | ... | 154 |
| குயில் | ... | 342 |
| குரா | ... | 379 |
| குரங்கு | ... | 288 |
| குருகுலத்தரசர் | ... | 190 |
| குருடன் | ... | 181 |
| குருத்து | ... | 401 |
| குருநில மன்னர் குதிரை | ... | 277 |

## பெயர் முதற்குறிப்பு பக்கம்


| | | |
|---|---|---|
| குருநில மன்னர் கொடி | ... | 148 |
| குலமிலான் | ... | 190 |
| குழம்பு | ... | 509 |
| குழி நாவல் | ... | 369 |
| குழிவட்டம் | ... | 549 |
| குளநெல் | ... | 418 |
| குறளன் | ... | 181 |
| குறளி | ... | 185 |
| குறிகொள்வோன் | ... | 190 |
| குறிஞ்சிநிலக் கடவுள் | ... | 204 |
| குறிஞ்சிநிலத் தலைவன் | ... | 204 |
| குறிஞ்சிநிலத்து ஊர் | ... | 437 |
| குறிஞ்சிநிலமக்கள் | ... | 204 |
| குறிஞ்சிநில மாதர் | ... | 204 |
| குறுக்கத்தி | ... | 372 |
| குறுநில மன்னர் | ... | 148 |
| குறுமுனி | ... | 118 |
| குறைதல் | ... | 556 |
| குறைபாடுடையோர்(எண்மர்) | | 213 |
| குற்றம் | ... | 579 |

கூ

| | | |
|---|---|---|
| கூகை, | ... | 336 |
| கூடாரம் | ... | 534 |
| கூடு | ... | 480 |
| கூட்டம் | ... | 159 |
| கூத்தர் | ... | 168 |
| கூத்தி | ... | 201 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| கூந்தற்கமுகு | ... | 356 |
| கூப்பிடுதூரம் | ... | 486 |
| கூர்மை | ... | 525 |
| கூவ'நூலோர் | ... | 165 |
| கூன் | ... | 181 |

கே

| | | |
|---|---|---|
| கேட்டை | ... | 94 |
| கேது | ... | 71 |

கை

| | | |
|---|---|---|
| கை | ... | 236 |
| கைச்சரி | ... | 545 |
| கைம்மை | ... | 201 |
| கைரேகை | ... | 236 |
| கைவாள் | ... | 521 |
| கைவிட்டப்படை | ... | 525 |
| கைவிடுபடை | ... | 525 |
| கைவேல் | ... | 521 |

கொ

| | | |
|---|---|---|
| கொசகம் | ... | 531 |
| கொடி | ... | 241 |
| கொடிப்படை | ... | 225 |
| கொடியவேனில் | ... | 118 |
| கொடிவள்ளி | ... | 398 |
| கொடையாளன் | ... | 176 |
| கொத்தளம் | ... | 459 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| கொப்பு | ... | 541 |
| கொப்பூழ் | ... | 233 |
| கொம்பிலாவிலங்கு | ... | 322 |
| கொம்பு | ... | 322 |
| கொலையாளி | ... | 176 |
| கொல்லர் | ... | 157 |
| கொல்லர் (பொது) | ... | 154 |
| கொழுப்பு | ... | 322 |
| கொள் | ... | 414 |
| கொற்றவர்கள் ஏறு | ... | 146 |
| கொன்றை | ... | 385 |

கோ

| | | |
|---|---|---|
| கோங்கு | ... | 385 |
| கோட்டான் | ... | 336 |
| கோட்டை மதில் | ... | 459 |
| கோதாவரி | ... | 442 |
| கோதுமை | ... | 414 |
| கோபம் | ... | 576 |
| கோபுரம் | ... | 461 |
| கோபுர வாசல் | ... | 477 |
| கோபுர வாசற் கதவிற் புகும் வழி | | 477 |
| கோபுர வாசற் கதவிற் புகும் வழியிடைச் சார்ந்த திண்ணை | ... | 477 |
| கோபுர வாசற் கதவிற் புகும் வாயிற்படிச் சுருள் | ... | 477 |
| கோவேறுகழுதை | ... | 291 |
| கோழி | ... | 346 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| கோழை | ... | 249 |
| கோளகன் | ... | 198 |
| | கௌ | |
| கௌதமையாறு | ... | 442 |
| | ச | |
| சகலன் | ... | 216 |
| சகோரம் | ... | 342 |
| சக்கரவர்த்திகள் அறுவர் | ... | 146 |
| சக்கரவாகம் | ... | 336 |
| சங்கறுப்போர் | ... | 165 |
| சங்கு | ... | 349 |
| சடை | ... | 254 |
| சட்டை | ... | 534 |
| சண்டாளர் | ... | 165 |
| சண்பகம் | ... | 395 |
| சதங்கை | ... | 537 |
| சதயம் | ... | 94 |
| சதுரக்கள்ளி | ... | 372 |
| சதுரங்கசேனை | ... | 140 |
| சதுரர் (நாகரிகர்) | ... | 181 |
| சந்தனம் | ... | 362 |
| சந்திரகாந்தம் | ... | 502 |
| சந்திரன் | ... | 66 |
| சந்து(அந்திவேளை) | ... | 477 |
| சந்து(கழுத்து) | ... | 257 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| சப்தமுனிவர் | ... | 118 |
| சமணமுனிவர் | ... | 121 |
| சம்பங்கோழி | ... | 346 |
| சரிமணிக்கோவை | ... | 549 |
| சலஞ்சலம் | ... | 349,352 |
| சலதாரை | ... | 486 |
| சனி | | 71 |

சா

| | | |
|---|---|---|
| சாணம் | ... | 319 |
| சாதகப்புள் | ... | 346 |
| சாம்பல் | ... | 58 |
| சாரைப்பாம்பு | ... | 298 |

சி

| | | |
|---|---|---|
| சிங்கம் | ... | 262 |
| சிங்கராசி . | ... | 76 |
| சிங்களம் | ... | 431 |
| சிச்சிலி | ... | 346 |
| சித்திரக்காரர் | ... | 157 |
| சித்திரப்புடவை | ... | 531 |
| சித்திரை | ... | 91 |
| சிம்புட்பறவை | ... | 336 |
| சிரிப்பு | ... | 242 |
| சிலந்தி | ... | 304 |
| சிலம்பு | ... | 545 |
| சிவப்பு | ... | 559 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| சிவல் | ... | 339 |
| சிவன் | ... | 1 |
| சிள்வீடு | ... | 346 |
| சிறந்தோர் | ... | 123 |
| சிறுகீரை | ... | 392 |
| சிறுசண்டகம் | ... | 395 |
| சிறுசவளம் | ... | 521 |
| சிறுபூளை | ... | 366 |
| சிறுமை | ... | 569 |
| சிற்பாசாரியர் | ... | 157 |
| சிற்றில் | ... | 452 |
| சிற்றூர் | ... | 435 |

சீ

| | | |
|---|---|---|
| சீந்தி | ... | 375 |

சு

| | | |
|---|---|---|
| சுடுகாடு | ... | 474 |
| சுட்டி | ... | 515 |
| சுண்டில் | ... | 375 |
| சும்மாடு | ... | 534 |
| சுரை | ... | 392 |
| சுவரகழ்கத்தி | ... | 521 |
| சுவர் | ... | 464 |
| சுவாதி | ... | 91 |
| சுழல்படை | ... | 525 |
| சுற்றத்தார் | ... | 171 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| | சூ | |
| சூரியகாந்தம் | ... | 502 |
| சூரியன் | ... | 64 |
| சூல் | ... | 325 |
| | ... | |
| | செ | |
| செக்கார் | | 154 |
| செங்கருங்காலி | ... | 379 |
| செங்கழுநீர் | ... | 398 |
| செந்திணை | ... | 414 |
| செந்நாய் | ... | 291 |
| செந்நெல் | ... | 418 |
| செம்பரத்தை | ... | 372 |
| செம்பு | ... | 505 |
| செம்போத்து | ... | 342 |
| செம்மறியாடு | ... | 316 |
| செம்மறியாண் ஆடு | ... | 316 |
| செம்மார் | ... | 165 |
| செய்கரை | ... | 471 |
| செவிடு | ... | 181 |
| செவிமலர் | ... | 541 |
| செவிலி | ... | 218 |
| செவ்வல்லி | ... | 398 |
| செவ்வாய் | ... | 69 |
| | சே | |
| சேங்கன்று | ... | 310 |
| சேம்பு | ... | 392 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| சேரன் | ... | 133 |
| சேரன்குதிரை | ... | 277 |
| சேவல் | ... | 346 |
| சேறு(அருவருப்புறு) | ... | 446 |
| சேறு | .. | 471 |
| சேற்றின்குமிழி | ... | 446 |
| சேறுமுகம் | ... | 228 |

சை

| | | |
|---|---|---|
| சைவசமயத்தார் | ... | 121 |
| சைவர் | ... | 121 |

சோ

| | | |
|---|---|---|
| சோதி | ... | 91 |
| சோழன் | ... | 133 |
| சோழன் குதிரை | ... | 277 |
| சோளம் | ... | 414 |
| சோறு | ... | 509 |
| சோனகர் | ... | 159 |

ஞா

| | | |
|---|---|---|
| ஞாங்கர் | ... | 489 |
| ஞாழல் | ... | 372 |

த

| | | |
|---|---|---|
| தங்கை | ... | 218 |
| தச்சர் | ... | 157 |
| தட்டார் | ... | 157 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| தணியாக்கோபம் | ... | 576 |
| தண்ணீர் | ... | 446 |
| தந்தை | ... | 216 |
| தமக்கை | ... | 218 |
| தமிழ்க்கூத்தர் | ... | 168 |
| தம்பதி | ... | 201 |
| தம்பலப்புழு | ... | 304 |
| தம்பி | ... | 216 |
| தயிர் | ... | 319 |
| தயிர்கடைத்தறி | ... | 319 |
| தயிர் மத்து | ... | 319 |
| தரா | ... | 505 |
| தரித்திரர் | ... | 188 |
| தருப்பை | ... | 392 |
| தருமதேவதை | ... | 88 |
| தருமன் | ... | 129 |
| தலை | ... | 249 |
| தலைக்கோலம் | ... | 541 |
| தலைப்பாளை | ... | 541 |
| தலையணை | ... | 534 |
| தலையிலாக்குருவி | ... | 339 |
| தலைவி | ... | 196 |
| தவளை | ... | 349 |
| தவிடு | ... | 418 |
| தழலிறை | ... | 51 |
| தழும்பு | ... | 257 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
| --- | --- | --- |
| தளிர் | ... | 401 |
| தனிமை | ... | 173 |
| தனுராசி | ... | 77 |
| **தா** | | |
| தாதுக்கள் ஏழு | ... | 213 |
| தாதுமாதளை | ... | 359 |
| தாமரை | ... | 411 |
| தாமரைக்காய் | ... | 411 |
| தாமரைக்கொட்டை | ... | 411 |
| தாமரைச் சுருள் | ... | 411 |
| தாமரையிதழ் | ... | 411 |
| தாயத்தார் | ... | 179 |
| தாய் | ... | 218 |
| தாழை | ... | 369 |
| தாழ்வாரம் | ... | 464 |
| தானவர் | ... | 45 |
| தானைத்தலைவர் | ... | 179 |
| **தி** | | |
| திசை | ... | 456 |
| திசை (எட்டு) | ... | 486 |
| திண்ணியன் | ... | 176 |
| திதி | ... | 101 |
| திரட்சி | ... | 552 |
| திரள்கோரை | ... | 366 |
| திரு (திருமகள்) | ... | 35 |
| திரு (தெய்வவுத்தி) | ... | 541 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| திருடர் | ... | 188 |
| திருவாதிரை | ... | 88 |
| திருவோணம் | ... | 94 |
| திரை | ... | 468 |
| திவலை | ... | 107 |
| | தீ | |
| தீ | ... | 51 |
| தீக்கடவுளின் மனைவி | ... | 58 |
| தீக்கடவுள் | ... | 58 |
| தீக்கடைக்கோல் | ... | 55 |
| தீத்திரள் | ... | 58 |
| தீப்பொறி | ... | 55 |
| | து | |
| துகில் | ... | 528 |
| துணைவன் | ... | 185 |
| துணைவி | ... | 185 |
| துதிக்கை | ... | 267 |
| துதிக்கையின் நுனி | ... | 267 |
| தும்பை (செடி) | ... | 375 |
| தும்பை (திணை) | ... | 228 |
| துரிஞ்சில் | ... | 379 |
| துரியோதனன் | ... | 129 |
| துரோணர் | ... | 118 |
| துர்க்கை | ... | 43 |
| துலாராசி | ... | 76 |
| துவரை | ... | 414 |
| துளசி | ... | 375 |

பெயர் முதற்குறிப்பு பக்கம்

| | | |
|---|---|---|
| துன்னர் (தையற்காரர்) | ... | 162 |
| **தூ** | | |
| தூதர் | ... | 148 |
| தூரம் | ... | 574 |
| **தெ** | | |
| தெய்வப்பசு | ... | 307 |
| தெய்வப்பெண் | ... | 33 |
| தெய்வமணி | ... | 502 |
| தெய்வம் | ... | 45 |
| தெய்வலோகம் | ... | 450 |
| தெய்வவுத்தி | ... | 541 |
| தெளிவு நீர் | ... | 468 |
| தெற்கு | ... | 456 |
| தென்னை | ... | 356 |
| **தே** | | |
| தேமல் | ... | 233 |
| தேமா | ... | 359 |
| தேர்ப்பாகர் | ... | 148 |
| தேவராட்டி | ... | 159 |
| தேவராளன் | ... | 159 |
| தேவர்கோயில் | ... | 452 |
| தேள் | ... | 300 |
| **தை** | | |
| தையற்காரர்(துன்னர்) | ... | 162 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| | தொ | |
| தொங்கல் மயிர் | ... | 254 |
| தொடர்ப்பூ | ... | 408 |
| தொடை | ... | 233 |
| தொண்டி | ... | 201 |
| தொழில்செய்வோர் | ... | 179 |
| | தோ | |
| தோடு | ... | 541 |
| தோட்டம் | ... | 486 |
| தோல் (பழத்தோல்) | ... | 408 |
| தோல் (விலங்கின்) | ... | 322 |
| தோல்வினைஞர் | ... | 165 |
| தோழன் | ... | 185 |
| தோழன் முன்னிலை | ... | 185 |
| தோழி | ... | 185 |
| தோழி முன்னிலை | ... | 185 |
| தோளணி | ... | 537 |
| தோளின்மேல் | ... | 239 |
| தோள் | ... | 239 |
| தோற்கருவிமாக்கள் | ... | 165 |
| | ந | |
| நகம் | ... | 239 |
| நடு | ... | 483 |
| நட்புடன்சார்ந்தவர் | ... | 173 |
| நண்டு | ... | 349 |
| நத்தை | ... | 349 |

பெயர் முதற்குறிப்பு | பக்கம்


| | | |
|---|---|---|
| நரகலோகம் | ... | 450 |
| நரம்பு | ... | 325 |
| நரம்புக்கருவிமாக்கள் | ... | 165 |
| நரி | ... | 291 |
| நரைமயிர் | ... | 254 |
| நல்லநீர் | ... | 446 |
| நல்லாடை | ... | 531 |
| நவமணி | ... | 498 |
| நறும்புகை | ... | 58 |
| நறுவிலி | ... | 372 |
| நற்பசு | ... | 307 |
| நற்பணித்தூசு | ... | 531 |

நா

| | | |
|---|---|---|
| நாகணவாய்ப்புள் | ... | 342 |
| நாகப்பாம்பு | ... | 298 |
| நாகரிகர் | ... | 181 |
| நாக்கைப்பாம்பு | ... | 300 |
| நாக்கு | ... | 242 |
| நாடு | ... | 431 |
| நாணல் | ... | 366 |
| நாண் | ... | 518 |
| நாய் | ... | 291 |
| நாரத்தை | ... | 359 |
| நாராசம் | ... | 521 |
| நாவல் | ... | 369 |
| நாவி | ... | 294 |
| நாவிதர் | ... | 162 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| நாழிகை | ... | 83 |
| நாள் | ... | 114 |
| நாற்சந்தி | ... | 477 |

நி

| | | |
|---|---|---|
| நிகழ்காலம் | ... | 110 |
| நிமித்திகன் | .. | 146 |
| நிருவாணி | ... | 190 |
| நிலம் | ... | 456 |
| நிலாமுகி | ... | 346 |
| நிறம் | ... | 561 |
| நிறைதல் | ... | 554 |
| நிறைநீர் | ... | 468 |

நீ

| | | |
|---|---|---|
| நீந்துநீர் | ... | 468 |
| நீர் (தண்ணீர்) | ... | 446 |
| நீர்க்காக்கை | ... | 333 |
| நீர்க்குமிழி | ... | 446 |
| நீர்க்குளிரி | ... | 398 |
| நீர்ச்சுழி | ... | 446 |
| நீர்த்துறை | ... | 471 |
| நீர்நாய் | ... | 349 |
| நீர்முள்ளி | ... | 366 |
| நீலம் | ... | 498 |
| நீளம் | ... | 572 |

நு

| | | |
|---|---|---|
| நுண்மணல் | ... | 446 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| நுண்மை | ... | 554 |
| நுதலணி | ... | 541 |
| நுதலணிமாலை | ... | 423 |
| நுரை | ... | 446 |
| நுனி | ... | 525 |
| நெ | | |
| நெய் | ... | 319 |
| நெய்தல்நிலக் கடவுள் | ... | 211 |
| நெய்தல்நிலத் தலைவன் | ... | 211 |
| நெய்தல்நிலத்து ஊர் | ... | 437 |
| நெய்தல்நில மக்கள் | ... | 211 |
| நெய்தல்நில மாதர் | ... | 211 |
| நெய்வார் | ... | 162 |
| நெருங்கல் | ... | 581 |
| நெருப்பு(சிறப்பு) | ... | 55 |
| நெருப்பு(பொது) | ... | 55 |
| நெல்லி | ... | 359 |
| நெற்பயிர் | ... | 418 |
| நெற்றி | ... | 249 |
| நொ | | |
| நொச்சி(செடி) | ... | 369 |
| நொச்சி(திணை) | ... | 228 |
| நோ | | |
| நோயுற்றோன் | ... | 190 |
| ப | | |
| பகண்டை | ... | 339 |
| பகல் | ... | 80 |
| பகைவர் | ... | 171 |

பெயர் முதற்குறிப்பு பக்கம்


| | | |
|---|---|---|
| பக்கம் | ... | 483 |
| பக்கம்(பட்சம்) | ... | 101 |
| பக்கம்(மருங்கு) | ... | 574 |
| பசு | ... | 307 |
| பசுந்திணை | ... | 414 |
| பசுவின் பொது | ... | 307 |
| பசுவின் முலை | ... | 313 |
| பசுவின் முலைமடி | ... | 313 |
| பச்சை | ... | 559 |
| பச்சோந்தி | ... | 294 |
| பஞ்சபாணத்தின் குணம் | ... | 22 |
| பஞ்சபாணம் | ... | 22 |
| பஞ்சலோகம் | ... | 498 |
| பஞ்சேந்திரியங்கள் | ... | 257 |
| படை | ... | 225 |
| படைஉறை | ... | 525 |
| படைத்தலைவர் | ... | 148 |
| படையழைத்தல் | ... | 225 |
| படையறுதல் | ... | 225 |
| படையெழுச்சி | ... | 225 |
| படைவகுப்பு | ... | 225 |
| பட்டம் | ... | 515 |
| பட்டாடை | ... | 531 |
| பட்டாடையின்விகற்பம் | ... | 531 |
| பண்டாரம் | ... | 549 |
| பதக்கம் | ... | 515 |
| பதர் | ... | 418 |
| பதாதி | ... | 228 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| பதினறுட்டைப்பெண் | ... | 185 |
| பதினறுமணிக்கோவை | ... | 545 |
| பதினெண்குமணிக்கோவை | ... | 545 |
| பதினென்மணிக்கோவை | ... | 545 |
| பதினெண்மர் | ... | 142 |
| பதின்காற்று | ... | 48, 51 |
| பயிர் | ... | 418 |
| பரணி | ... | 85 |
| பராய்மரம் | ... | 369 |
| பரிதிவட்டம் | ... | 80 |
| பரிப்பாகர் | ... | 146 |
| பரிவாரம் | ... | 146 |
| பரிவட்டம் | ... | 80 |
| பருத்தி | ... | 418 |
| பருந்து | ... | 333 |
| பருவகாலம் | ... | 110 |
| பருவம் | ... | 113 |
| பருவம் (ஆறுவகை) | ... | 110 |
| பலகணி | ... | 477 |
| பலராமன் | ... | 15 |
| பலவீற்றுப்பசு | ... | 307 |
| பலா | ... | 356 |
| பல் | ... | 242 |
| பல்லி | ... | 294 |
| பவளம் | ... | 498 |
| பழம் | ... | 408 |
| பழம்பூ | ... | 408 |
| பளிங்கு | ... | 502 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| பறவை நாகம் | ... | 298 |
| பனி | ... | 98 |
| பனை | ... | 382 |
| பன்றி | ... | 282 |
| பன்னுடை | ... | 356 |
| பன்னீர் | ... | 446 |

பா

| | | |
|---|---|---|
| பாகல் | ... | 392 |
| பாக்கு | ... | 356 |
| பாஞ்ச சன்னியம் | ... | 352 |
| பாடகம் | ... | 545 |
| பாட்டன் | ... | 216 |
| பாணர் | ... | 168 |
| பாண்டியன் | ... | 135 |
| பாண்டியன் குதிரை | ... | 277 |
| பாத கடகம் | ... | 545 |
| பாத கிண்கிணி | ... | 537 |
| பாதி | ... | 556 |
| பாதிரி | ... | 362 |
| பாம்பின் நஞ்சு | ... | 300 |
| பாம்பின் படப்பொறி | ... | 300 |
| பாம்பின் படம் | ... | 300 |
| பாம்பின் பல் | ... | 300 |
| பாம்பு | ... | 298 |
| பாயசம் | ... | 509 |
| பாலுள பசு | ... | 307 |
| பாலை (மரம்) | ... | 375 |

பெயர் முதற்குறிப்பு — பக்கம்


| | | |
|---|---|---|
| பாலை நிலக் கடவுள் | ... | 204 |
| பாலைநிலத் தலைவன் | ... | 204 |
| பாலைநிலத்து ஊர் | ... | 437 |
| பாலை நில மக்கள் | ... | 204 |
| பாலை நில மாதர் | ... | 204 |
| பால் | ... | 319 |

பி

| | | |
|---|---|---|
| பிச்சி | ... | 395 |
| பிடர் | .. | 239 |
| பிணம் | ... | 249 |
| பிணையல் | ... | 423 |
| பிண்டிபாலம் | ... | 521 |
| பித்தளை | ... | 505 |
| பிரண்டை | ... | 375 |
| பிரதிலோமன் | ... | 198 |
| பிரமசாரி | ... | 188 |
| பிரமன் | ... | 16 |
| பிரமன் வாழ்நாள் | ... | 114 |
| பிரம்பு | ... | 366 |
| பிராமணர் | ... | 138 |
| பிள்ளைக் கைவளை | ... | 545 |
| பிறந்தநிலத்தாற் பெயர்பெறும்யானை | | 267 |
| பிறமயிர் | ... | 254 |
| பின்புறம் | ... | 242 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|

| | | |
|---|---|---|
| பின்னை நாள் | ... | 114 |

பீ

| | | |
|---|---|---|
| பீடம் | ... | 464 |
| பீர்க்கு | ... | 392 |

பு

| | | |
|---|---|---|
| புகர் | ... | 561 |
| புகழாளன் | ... | 190 |
| புகழ்வோர் | ... | 168 |
| புகுமிடம் | ... | 489 |
| புடவை | ... | 528 |
| புதன் | ... | 69 |
| புதியவர் | ... | 173 |
| புத்தசமயத்தார் | ... | 121 |
| புரவிக்கரு | ... | 352 |
| புருவம் | ... | 249 |
| புலி | ... | 262 |
| புல்வாய் | ... | 285 |
| புழு | ... | 304 |
| புளிஞர் | ... | 204 |
| புளிமா | ... | 359 |
| புறவிதழ் | ... | 404 |
| புறப்பொது | ... | 339 |
| புற்றுஞ்சோறு | ... | 461 |
| புற்று | ... | 461 |
| புனர்பூசம் | ... | 88 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|


| | | |
|---|---|---|
| புனல் | ... | 61 |
| புனற்கரை | ... | 471 |
| புனற்கு அரசன் | ... | 61 |
| புனைகலனிருக்கை | ... | 452 |
| புன்கு | ... | 369 |

பூ

| | | |
|---|---|---|
| பூ | ... | 404 |
| பூங்கொத்து | ... | 404 |
| பூசம் | ... | 88 |
| பூணநூல் | ... | 537 |
| பூதகணம் | ... | 45 |
| பூந்தாதிற்றாள் | ... | 408 |
| பூந்தாது | ... | 404 |
| பூந்தேன் | ... | 404 |
| பூமி | ... | 426 |
| பூரட்டாதி | ... | 94 |
| பூரணை | ... | 110 |
| பூரம் | ... | 88 |
| பூராடம் | ... | 94 |
| பூவிதழ் | ... | 404 |
| பூனை | ... | 294 |

பெ

| | | |
|---|---|---|
| பெண் | ... | 193 |
| பெண்கள் கூட்டம் | ... | 159 |
| பெண்குரங்கு | ... | 288 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| பெண்குறி | ... | 236 |
| பெண் நாய் | ... | 291 |
| பெண் பசு | ... | 307 |
| பெண் பொது | ... | 193 |
| பெண் மயிர் | ... | 252 |
| பெண் யானை | ... | 265 |
| பெருச்சாளி | ... | 300 |
| பெருஞ் சவளம் | ... | 521 |
| பெருஞ் சினம் | ... | 576 |
| பெருமழை | ... | 107 |
| பெருமை | ... | 569 |
| பெரும் பாம்பு | ... | 298 |
| பெரும் பீர்க்கு | ... | 392 |
| **பே** | | |
| பேடி | ... | 181 |
| பேய் | ... | 48 |
| பேரழகு | ... | 564 |
| **பொ** | | |
| பொதி எருது | ... | 310 |
| பொதி சோறு | ... | 509 |
| பொய்யாப்புள் | ... | 346 |
| பொருனை நதி | ... | 442 |
| பொல்லாத நிலம் | ... | 471 |
| பொற்காசு | ... | 496 |
| பொன் | ... | 496 |
| பொன்னிறம் | ... | 561 |
| பொன்னூசி | ... | 541 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| போ | | |
| போர் எருது | ... | 310 |
| பௌ | | |
| பௌத்தர் | ... | 121 |
| ம | | |
| மகம் | ... | 88 |
| மகர ராசி | ... | 77 |
| மகர் வாழை | ... | 372 |
| மகள் | ... | 223 |
| மகன் | ... | 220 |
| மகன் மகள் இருபாற் பொதுப் பண்மை | | 223 |
| மகன் மகள் இருபாற் பொதுப்பெயர் | | 223 |
| மகிழ் | ... | 362 |
| மக்கள் திரள் | ... | 211 |
| மச்சு | ... | 477 |
| மடைப்பள்ளி | ... | 464 |
| மடையர் (அடுதொழிலார்) | ... | 146 |
| மணம் (எட்டு) | ... | 213 |
| மணற்குன்று | ... | 446 |
| மணி | ... | 502 |
| மணிக்கட்டு | ... | 239 |
| மணிமுடி | ... | 515 |
| மணிவடம் | ... | 541 |
| மண் கலஞ் சுடுமிடம் | ... | 489 |
| மண்டலிப் பாம்பு | ... | 298 |
| மதன் | ... | 16, 19 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| மதன் கணை | ... | 19 |
| மதன் தம்பி | ... | 19 |
| மதன் நாண் | ... | 19 |
| மதன் வில் | ... | 19 |
| மதிலுறுப்பு | ... | 459 |
| மதில் | ... | 459 |
| மதுரை | ... | 431 |
| மந்தன் | ... | 190 |
| மந்திரத் தலைவர் | ... | 148 |
| மயிர்க்குழற்சி | ... | 254 |
| மயிர்முடி | ... | 252 |
| மயிலிறகின் அடிமுள் | ... | 329 |
| மயிலின் குரல் | ... | 329 |
| மயிலின்சிகை | ... | 329 |
| மயில் | ... | 329 |
| மயிற்சிறகு | ... | 329 |
| மரகதம் | ... | 498 |
| மரக்கன்று | ... | 401 |
| மரலி | ... | 382 |
| மருகன் | ... | 216,220 |
| மருங்கின்பக்கம் | ... | 233 |
| மருட்டுப்பன்றி | ... | 285 |
| மருதநிலக் கடவுள் | ... | 207 |
| மருதநிலத் தலைவன் | ... | 207 |
| மருதநிலத்து ஊர் | ... | 437 |
| மருதநில மக்கள் | ... | 207 |
| மருதநில மாதர் | ... | 207 |
| மருது | ... | 389 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| மருத்துவர் | ... | 148 |
| மருமான் (மருமகன்) | ... | 216,220 |
| மரை | ... | 288 |
| மலடி | ... | 201 |
| மலட்டுப் பசு | ... | 307 |
| மலட்டெரிமை | ... | 313 |
| மலர்தல் | ... | 408 |
| மலை | ... | 428 |
| மலை செறிந்த ஊர் | ... | 435 |
| மலை நெல் | ... | 418 |
| மலையாறு | ... | 442 |
| மலையுடன் யாறு சூழ்ந்த ஊர் | ... | 437 |
| மல்லிகை | ... | 395 |
| மழை | ... | 107 |
| மழைத்துளி | ... | 107 |
| மழை விடல் | ... | 107 |
| மறநிலையின்பம் | ... | 144 |
| மறநிலையறம் | ... | 144 |
| மனிதர் | ... | 211 |
| மனைவி | ... | 218 |
| மன்னர் வைகும் ஊர் | ... | 437 |
| மன்னவர் தெரு | ... | 474 |

மா

| | | |
|---|---|---|
| மாசு | ... | 325,561 |
| மாடப்புரு | ... | 339 |
| மாணுக்கர் | ... | 126 |
| மாணிக்கம் | ... | 498 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| மாதம் | ... | 114 |
| மாதளை | ... | 359 |
| மாத்திரை(சிறுபொழுது) | ... | 101 |
| மாமரம் | ... | 359 |
| மாமன் | ... | 216 |
| மாமி | ... | 218 |
| மாயோன் வில் | ... | 518 |
| மார்பு | ... | 236 |
| மாலை | ... | 80 |
| மாலை (தார்) | ... | 423 |
| மால்சமயத்தார் | ... | 121 |
| மாவடு | ... | 359 |
| மாவலி | ... | 45 |
| மான் | ... | 285 |
| மான் மயிர் | ... | 288 |

மி

| | | |
|---|---|---|
| மிகுதி | ... | 572 |
| மிடறு | ... | 239 |
| மிடைதல் | ... | 581 |
| மிதிலை | ... | 431 |
| மிதுனராசி | ... | 75 |
| மிதுன விதி | ... | 79 |
| மிருகசீரிடம் | ... | 85, 88 |
| மின்னல் | ... | 107 |

மீ

| | | |
|---|---|---|
| மீகாமன் | ... | 165 |
| மீனராசி | ... | 77 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|

## மு


| | | |
|---|---|---|
| முகடு | ... | 464 |
| முகம் | ... | 242 |
| முகில் | ... | 104 |
| முசு | ... | 288 |
| முச்சந்தி | ... | 477 |
| முடம் | ... | 181 |
| முடிமாலை | ... | 515 |
| முடியுறுப்பு | ... | 515 |
| முடுக்கு | ... | 464 |
| முடை | ... | 325 |
| முதலேழு வள்ளல்கள் | ... | 135 |
| முதலை | ... | 349 |
| முதல் | ... | 483 |
| முதிரை | ... | 414 |
| முதுகு | ... | 239 |
| முதுமை | ... | 567 |
| முத்தங் கோப்பார் | ... | 157 |
| முத்தின் கிளிஞ்சல் | ... | 352 |
| முத்தின் திரட்சி | ... | 498 |
| முத்தீ | ... | 51 |
| முத்து | ... | 498 |
| முந்தானை | ... | 531 |
| முப்பத்திரண்டுமணிக் கோவை | | 545 |
| முப்பூ | ... | 408 |
| முயல் | ... | 294 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| முருகன் | ... | 23, 26 |
| முலை | ... | 236 |
| முலைக்கச்சின் விடுதலைப்பு | ... | 534 |
| முலைக்கச்சு | ... | 534 |
| முலைக்கண் | ... | 236 |
| முல்லை | ... | 395 |
| முல்லைக் கான்யாறு | ... | 442 |
| முல்லைநிலக் கடவுள் | ... | 207 |
| முல்லைநிலத் தலைவன் | ... | 207 |
| முல்லைநிலத்து ஊர் | ... | 437 |
| முல்லை நில மக்கள் | ... | 207 |
| முல்லைநில மாதர் | ... | 207 |
| முழங்கால் | ... | 230 |
| முழங்கை | ... | 239 |
| முளை | ... | 401 |
| முள்ளம்பன்றி | ... | 285 |
| முள்ளம்பன்றியின் முள் | ... | 285 |
| முற்றம் | ... | 464 |
| முனிவர் | ... | 118 |
| முனிவர் உறைவிடம் | ... | 461 |
| முன்கோபம் | ... | 576 |
| முன்னை நாள் | ... | 114 |

மூ

| | | |
|---|---|---|
| மூக்கரிகத்தி | ... | 521 |
| மூக்கு | ... | 246 |
| மூங்கில் | ... | 389 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| மூஞ்சூறு | ... | 304 |
| மூட்டை(ப்பூச்சி) | ... | 304 |
| மூதறிவாளர் | ... | 213 |
| மூதேவி | ... | 43 |
| மூத்தாள் | ... | 196 |
| மூத்தோர் | ... | 123 |
| மூலம் | ... | 94 |
| மூளை | ... | 325 |

மெ

| | | |
|---|---|---|
| மெத்தை | ... | 534 |
| மெய்க்காப்பாளர் | ... | 165 |

மே

| | | |
|---|---|---|
| மேகலை | ... | 545 |
| மேடராசி | ... | 75 |
| மேடவிதி | ... | 79 |
| மேல் | ... | 101 |
| மேல்வாய் | ... | 246 |
| மேற்கு | ... | 456 |
| மேற்போர்வை | ... | 531 |

மோ

| | | |
|---|---|---|
| மோட்சம் | ... | 450 |
| மோதிரம் | ... | 537 |
| மோர் | ... | 319 |

மௌ

| | | |
|---|---|---|
| மௌவல் | ... | 372 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|

யா


| | | |
|---|---|---|
| யாகத்தீ | ... | 58 |
| யாங்கு | ... | 489 |
| யானை | ... | 265 |
| யானை அங்குசம் | ... | 274 |
| யானை உமிழ்நீர் | ... | 267 |
| யானை கட்டுத்தறி | ... | 274 |
| யானைகட்டும் விலங்கு | ... | 274 |
| யானை கழுத்துக்கயிறு | ... | 274 |
| யானைக் கச்சை | ... | 274 |
| யானைக் கதுப்பு | ... | 270 |
| யானைக் கனவு | ... | 274 |
| யானைக்கன்று | ... | 267 |
| யானைக்காதின் அடி | ... | 270 |
| யானைக்காது | ... | 270 |
| யானைக்கொம்பின் நடு | ... | 270 |
| யானைக்கொம்பு | ... | 267 |
| யானைச் சாணம் | ... | 274 |
| யானை தங்குமிடம் | ... | 274 |
| யானை துயிலிடம் | ... | 270, 274 |
| யானைத் தலை | ... | 267 |
| யானைத் தவிசு | ... | 274 |
| யானைத்தாள் | ... | 270 |
| யானைத்திரள் | ... | 267 |
| யானை நெற்றிப்பட்டம் | ... | 274 |
| யானைநோய் | ... | 270 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| யானை படுகுழி | ... | 270 |
| யானை பின்கால் | ... | 270 |
| யானைப்பல் அடி | ... | 270 |
| யானைமதச் சுவடு | ... | 270 |
| யானை மதம் | ... | 270 |
| யானை முகபடாம் | ... | 274 |
| யானை முதுகு | ... | 270 |
| யானை முன்கால் | ... | 270 |
| யானை மெத்தை | ... | 274 |
| யானை வால்நுனை | ... | 270 |

யு

| | | |
|---|---|---|
| யுகம் முடிவு | ... | 114 |
| யுத்தகளம | ... | 474 |

யோ

| | | |
|---|---|---|
| யோசனைதூரம் | ... | 486 |

வ

| | | |
|---|---|---|
| வஞ்சகன் | ... | 190 |
| வஞ்சி (க்கொடி) | ... | 369 |
| வஞ்சி (த்திணை) | ... | 228 |
| வஞ்சிறைப்பறவை | ... | 336 |
| வடக்கு | ... | 456 |
| வடிவு | ... | 230, 564 |
| வட்டம் | ... | 552 |
| வண்ணமகள் | ... | 201 |
| வண்ணம் | ... | 564 |
| வண்ணார் | ... | 162 |
| வயிரச்சங்கிலி | ... | 537 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| வயிரவன் | ... | 26 |
| வயிறு | ... | 233 |
| வரகு | ... | 414 |
| வரட்சுண்டில் | ... | 375 |
| வருடம் | ... | 114 |
| வருத்தம் | ... | 579 |
| வரையாடு | ... | 316 |
| வலம்புரி | ... | 352 |
| வலம்புரிச்சங்கு | ... | 349 |
| வலியன் | ... | 342 |
| வல்லோர் | ... | 159 |
| வல்லோன் | ... | 213 |
| வழிச்செல்வோன் | ... | 176 |
| வழுதிலை | ... | 366 |
| வழும்பு | ... | 325 |
| வளரும் மயிர் | ... | 254 |
| வளை(யல்) | ... | 541 |
| வளைவு | ... | 552 |
| வள்ளல் | ... | 190 |
| வன்னி | ... | 385 |

வா

| | | |
|---|---|---|
| வாகுவலையம் | ... | 537 |
| வாகை | ... | 228 |
| வாகைப்பூ | ... | 228, 408 |
| வாகைமாலை | ... | 423 |
| வாசிகை | ... | 423 |
| வாட்கோரை | ... | 366 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| வாணி | ... | 35, 38 |
| வாணி(நதி) | ... | 442 |
| வாயில் காப்போர் | ... | 179 |
| வாரம் | ... | 114 |
| வாலின் கீழிடம் | ... | 322 |
| வால் | ... | 322 |
| வாவி | ... | 493 |
| வாழை | ... | 356 |
| வாழைத்தண்டு | ... | 356 |
| வாழ் நாள் | ... | 114 |
| வாள் | ... | 525 |
| வானம்பாடி | ... | 339 |
| வானவில் | ... | 98 |

வி

| | | |
|---|---|---|
| விசயன் | ... | 130 |
| விசாகம் | ... | 91 |
| விச்சாதரர் உலகம் | ... | 456 |
| விடாமழை | ... | 107 |
| விண்ணோர் ஊண் | ... | 509 |
| விண்மீன் | ... | 66 |
| விதை | ... | 408 |
| வித்தியாதரர் | ... | 45 |
| விநாயகர் | ... | 23 |
| வியாழன் | ... | 69, 71 |
| விரல் | ... | 239 |
| விராத்தியன் | ... | 198 |
| விரிந்தபூ | ... | 408 |
| விருச்சிகராசி | ... | 77 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| விலங்கின் கூட்டம் | ... | 322 |
| விலங்கின் பொது | .. | 352 |
| விலங்கு துயிலிடம் | ... | 480 |
| வில் | ... | 518 |
| வில்வம் | ... | 389 |
| விளக்கு | ... | 55 |
| விளம்புல் | ... | 366 |
| விளா | ... | 389 |
| விளாமிச்சைவேர் | ... | 395 |
| விஷ்ணு | ... | 13, 15 |

வீ

| | | |
|---|---|---|
| வீடு | ... | 452 |
| வீட்டிறப்பு | ... | 464 |
| வீட்டுமன் | ... | 129 |
| வீமன் | ... | 130 |

வெ

| | | |
|---|---|---|
| வெட்சி | ... | 372 |
| வெட்சி(த்திணை) | ... | 228 |
| வெட்டுவேர் | ... | 295 |
| வெட்பாலை | ... | 369 |
| வெண்கலம் | ... | 505 |
| வெண்குருத்து | ... | 401 |
| வெண்ணெய் | ... | 319 |
| வெண்புகை | ... | 58 |
| வெமணல் | ... | 446 |
| வெந்நீர் | ... | 446 |
| வெயில் | ... | 80 |
| வெளியிடம் | ... | 489 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| வெள்ள நீர் | ... | 468 |
| வெள்ளரி | ... | 366 |
| வெள்ளல்லி | ... | 398 |
| வெள்ளாடு | ... | 316 |
| வெள்ளாட்டின் ஆண் | ... | 316 |
| வெள்ளாட்டுமறி | ... | 316 |
| வெள்ளி(உலோகம்) | ... | 505 |
| வெள்ளி(விண்மீன்) | ... | 71 |
| வெள்ளை | ... | 559 |
| வெள்ளெலி | ... | 300 |
| வெற்றிலை | ... | 392 |
| வெற்றிலைக்கொடி | ... | 392 |

வே

| | | |
|---|---|---|
| வேகமுடையோன் | ... | 190 |
| வேங்கை | ... | 385 |
| வேசை | ... | 201 |
| வேடர்தெரு | ... | 474 |
| வேதனைசெய்வோன் | ... | 190 |
| வேம்பு | ... | 389 |
| வேயரிசி | ... | 418 |
| வேயாமாடம் | ... | 464 |
| வேயுள் | ... | 464 |
| வேர் | ... | 401 |
| வேளாளர் | ... | 154 |
| வேளாளர்தொழில் | ... | 154 |

| பெயர் முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| **வை** | | |
| வைகை | ... | 442 |
| வைசிய குலம் | ... | 152 |
| வைசியர் | ... | 152 |
| வைசியர்தொழில் | ... | 152 |
| வைசியர்பண்பு | ... | 152 |
| வைடூரியம் | ... | 498 |
| வைணவர் | ... | 121 |
| வைரம் | ... | 498 |
| **வௌ** | | |
| வௌவால் | ... | 346 |


—

உ

# ஆசிரிய நிகண்டு

---

## காப்பு

*ஏரா சிரியநிகண் டென் னுமீ ரைந்தொன் று*
*சீரார் தொகுதியதாச் செப்புதற்கே — ஓராரைச்*
*சேரானைச் சேர்ந்தாரைச் சேரும் வினையகற்றுங்*
*காரானை மாமுகன்றாள் காப்பு.*

(பதம் பிரித்தது)

ஏர் ஆசிரியநிகண்டு என்னும் ஈரைந்துஒன்று
சீர் ஆர் தொகுதி அதாச் செப்புதற்கே — ஓராரைச்
சேரானைச் சேர்ந்தாரைச் சேரும் வினை அகற்றும்
கார் ஆனை மாமுகன் தாள் காப்பு.

## பாயிரம்

கன்னியுமை பாலனைத் தெய்வானை வள்ளிபங்
காளனைச் சேவற்கொடிக்
கந்தனைத் தென்பழனி முருகனைச் சிந்தையிற்
கருதியன் பொடுபணிந்தே
முன்னுளதி வாகரம் பிங்கலநி கண்டுசீர்
முந்துகாங் கேயனுரிச்சொல்
முறைபெறு*க யாதரம் பகருமக ராதியிவை
முற்றுமொன் றுய்த்திரட்டி,
இந்நிலந் தனிலுளோ ரெவருமறி யும்படிக்
கெண்ணியா சிரியத்தினல்
இயம்பியநி கண்டுமுறை யறிநன்னுல் முறைமையும்
இரண்டுமே செய்துவைத்தேன்:
மன்னுசெஞ் சிச்சீர்மை சூழ்தொண்டை வளநாட்டில்
வாய்த்தவூற் றங்காலெனு
மாநகர்க் கதிபனுயர் பாவாடை வாத்தியார்
மைந்தனுண் டிப்புலவனே ! 1

(பதம் பிரித்தது)

கன்னி உமை பாலனைத் தெய்வானை வள்ளி
பங்காலனைச் சேவல்கொடிக்
கந்தனைத் தென்பழனி முருகனைச் சிந்தையில்
கருதி அன்பொடு பணிந்தே;
முன் உள திவாகரம் பிங்கலநிகண்டு
சீர்முந்து காங்கேயன் உரிச்சொல்
முறைபெறு *கயாதரம் பகரும் அகராதி யிவை
முற்றும் ஒன்றுய்த் திரட்டி

---

* 'காயகரம்' என்று ஏட்டில் உளது. இந்நூலின் சென்னைப் பல்கலைக் கழகப் பதிப்பில் கயாகரம் என்பது குறித்து ஆய்ந்து, 'கயாதரர்' இயற்றியது 'கயாதரம்' எனக்கண்டு உள்ளதனல் 'கயாதரம்' எனப்பட்டது.

இந்நிலந்தனில் உள்ளோர் எவரும் அறியும்படிக்கு
எண்ணி ஆசிரியத்தினுல்
இயம்பிய நிகண்டு முறை அறி நன்னூல் முறைமையும்
இரண்டுமே செய்துவைத்தேன்;

மன்னு செஞ்சிச்சீர்மை சூழ் தொண்டை வளநாட்டில்
வாய்த்த ஊற்றங்கால் எனும்
மாநகர்க்கு அதிபன் உயர் பாவாடை வாத்தியார்
மைந்தன் ஆண்டிப்புலவனே ! (1)

எண்ணருந் தெய்வமது முதலிரண்டாவ
தெழின்மக்கள் மூன்ருவது
விலங்கிட்டு நாலாவது மரங்களைந் தாவதிட
மிருமூன்று பலபொருட்பின்
நண்ணுமே ழாவது செயற்கையெட் டாவது
நயந்தபண் பொன்பதுசெயல்
நவின்றபத் தொலியொழிவு பதினென்றே னுந்தொகுதி
நாட்டித் திவாகரம்போல்
மண்ணுளோ ரறியப் பகுத்தன ன் கைலையான்
வடிவெடுத் தைந்தெழுத்தின்
மந்த்ரோப தேசஞ்செய் ஞானப்ர காசகுரு
வனசமல ரடிசூடுவேன்;
வண்ணமே கலைமாத ராடல்புரி மண்டப
மதிற்சிகர கோபுரந்தேர்
வளம்பரவு மூற்றங்காற் பாவாடை வாத்தியார்
மைந்தனுண் டிப்புலவனே !

*எண்ணரும் தெய்வம் அது முதல் இரண்டாவது
எழில்மக்கள் மூன்ருவது
விலங்கு இட்டு நாலாவது மரங்கள் ஐந்தாவது இடம்
இருமூன்று பலபொருள் பின்

---

*இக் குறியிடப்பட்ட பாடல்கள் பதம் பிரிக்கப் பெற்றவை.

நண்ணும் ஏழாவது செயற்கை எட்டாவது
நயந்த பண்பு ஒன்பது செயல்
நவின்ற பத்து ஒலி ஒழிபு பதினொன்று எனும் தொகுதி
நாட்டித் திவாகரம் போல்

மண்ணுளோர் அறியப் பகுத்தனன் கைலையான்
வடிவு எடுத்து ஐந்தெழுத்தின்
மந்திர உபதேசம் செய் ஞானப்பிரகாச குரு
வனசமலர் அடி சூடுவேன்;

வண்ண மேகலை மாதர் ஆடல்புரி மண்டபம்
அதில் சிகர கோபுரம் தேர்
வளம் பரவும் ஊற்றங்கால் பாவாடை வாத்தியார்
மைந்தன் ஆண்டிப்புலவனே ! (2)

**அவையடக்கம்.**

வாமதே வன்கங்கை வேணியன் கூற்றினை
மயங்கிட வுதைத்தபாதன்,
மலைமாது கேள்வன்றன் விடையினுக் கொட்டகம்
வலியநடை காட்டியதுபோல்,

பூமிகொழு நன்றிரு மடந்தைகேள் வன்றனது
பொன்னிறக் கருடனுக்குப்
புன்மசக மிக்கதோர் பறவைகாட் டியதுபோல்,
பொல்லாத கரியகாகம்

நாமகட் கணவன்வே தக்கடவுள் புரவியெனு
நரையோதி மந்தனக்கு
நற்புனல் பிரித்தமுத முண்டுகாட் டியதுபோல்,
நான்மறையு மாறங்கமும்

தோமில்பல நூலும்தெ ரிந்தவர் தமக்கியான்
றொகுதியா சிரியத்தினல்
சொல்லியநி கண்டினுரை யறிநன்னூல் முறைமையுந்
தோன்றிட வகுத்தவாறே (3)

*வாமதேவன் கங்கைவேணியன் கூற்றினை
மயங்கிட உதைத்த பாதன்
மலைமாதுகேள்வன் தன் விடையினுக்கு ஒட்டகம்
வரிய நடை காட்டியதுபோல்,

பூமிகொழுநன் திருமடந்தைகேள்வன் தனது
பொன்னிறக் கருடனுக்கு
புன் மசகம் மிக்கதோர் பறவை காட்டியதுபோல்
பொல்லாத கரிய காகம்

நாமகள்கணவன் வேதக்கடவுள் புரவி எனும்
நரை ஓதிமம் தனக்கு
நல்புனல் பிரித்து அமுதம் உண்டு காட்டியதுபோல்
நான்மறையும் ஆறு அங்கமும்,

தோமில் பலநூலும் தெரிந்தவர் தமக்கு யான்
தொகுதி ஆசிரியத்தினுல்
சொல்லியநிகண்டின் உரை அறி நன்னூல்முறைமையும்
தோன்றிட வகுத்தவாறே ! (3)

பாயிரம் முற்றிற்று.

# ஆசிரிய நிகண்டு

## முதலாவது தெய்வப் பெயர்த் தொகுதி

### சிவன் பெயர்

சங்கரன் சம்பு சதாசிவ னுமாபதி
தாணுவே பூதநாதன்,
சந்திரசே கரனீல கண்டனீ மத்தாடி
தற்பரன் பெயொடாடி,
அங்கணன் பசுபதி யரன்சிவ னுருத்திர
னழலாடி பாண்டரங்க
னந்திவண் ணன்பகவ னந்திநம் பன்சோதி
யமலனு னந்தனுதி,
மங்கைபா கன்சுடலை யாடியர வாபரணன்
மழுவாளி கைலையாளி
மாதேவ னிருமலன் மறைமுதலி யோகிமா
னிடமேந்தி காமதகனன்,
கங்காத ரன்கறை மிடற்றண்ண லைம்முகன்
காலகா லன்கிரீசன்,
கங்காளன் முத்தனித் தன்பரம னுலமர்
கடவுணீ றணிகடவுளே !

*சங்கரன், சம்பு, சதாசிவன், உமாபதி,
தாணு-ஏ, பூதநாதன்,
சந்திரசேகரன், நீலகண்டன், ஈமத்துஆடி,
தற்பரன், பேயொடு ஆடி,

அங்கணன், பசுபதி, அரன், சிவன், உருத்திரன்
அழலாடி, பாண்டரங்கன்,
அந்திவண்ணன், பகவன், நந்திநம்பன், சோதி,
அமலன், ஆனந்தன், ஆதி,
மங்கைபாகன், சுடலையாடி, அரவு ஆபரணன்,
மழுவாளி கைலையாளி,
மாதேவன், நிருமலன், மறைமுதல், யோகி.
மான்இடம்ஏந்தி, காமதகனன்,
கங்காதரன், கறைமிடற்று அண்ணல், ஐம்முகன்,
காலகாலன், கிரீசன்,
கங்காளன், முத்தன், நித்தன், பரமன்,
ஆலமர்கடவுள், நீறுஅணிகடவுளே. (1)

பெருமான் புராந்தகன் காமாரி யந்தணன்
பிறைசூடி நாதனக்கன்,
பிஞ்ஞகன் பித்தன்க பாலிகண் ணுதல்மூர்த்தி
பேசரிய ஞானமூர்த்தி,
கருணைல யன்கொன்றை சூடிமுன் னேனந்த
காரியழ லேந்தியொளிமுக்
கண்ணன்விம லன்குன்றை வில்லிதிரி யம்பகன்
கரியுரித் தோன்புராரி,
பரனேற்று வாகனன் சடையோன் மகேச்சுரன்,
பாய்புலித் தோலுடையினன்,
பரசுபா ணிபினகை பாணியிறை யோன்சூல
பாணியீ சன்னருதி,
யருள்சே ரனந்தன்வரன் முதல்வனீ சானனென்
றையுமெண் பத்தேழுமே;
யமரர்பணி யீசுரற் கினியபெய ரின்னமும
னந்தமுண் டபிதானமே !

* பெருமான், புராந்தகன், காமாரி, அந்தணன்,
பிறைசூடி, நாதன். நக்கன்,
பிஞ்ஞகன், பித்தன், கபாலி, கண்ணுதல், மூர்த்தி,
பேச அரிய ஞானமூர்த்தி,
கருணாலயன், கொன்றைசூடி, முன்னோன்,
அந்தகாரி, அழலேந்தி, ஒளி,
முக்கணன், விமலன், குன்றைவில்லி, திரியம்பகன்,
கரியுரித்தோன், புராரி,
பரன், ஏற்றுவாகனன், சடையோன், மகேச்சுரன்,
பாய்புலித் தோலுடையான்,
பரசுபாணி, பிநாகபாணி, இறையோன்,
சூலபாணி, ஈசன், அநாதி,
அருள்சேர் அனந்தன், வரன், முதல்வன், ஈசானன்,
என்று அறையும் எண்பத்து ஏழுமே,
அமரர் பணி ஈசுரற்கு இனிய பெயர் இன்னமும்
அனந்தம் உண்டு அபிதானமே! (2)

---

## ஒப்புமைப் பகுதிகள்

### *சிவன் பெயர்*

சேந்தன் திவாகரம் :—

சங்கரன், இறையோன், காமதகனன், கங்காதரன், கறைமிடற்றண்ணல், கூற்றையுதைத்தோன், குன்றவில்லி, ஏற்று வாகனன், திரியம்பகன், சோதி, நக்கன், சடையோன், நாரிபாகன், முக்கட்பகவன், பசுபதி, பரமன், கொன்றைசூடி, கொலைமழுவாளி, ஈமத்தாடி, பிஞ்ஞகன், பித்தன், ஆனை யுரித்தோன், அரன், சிவன், உருத்திரன், காலகாலன் கபால

மூர்த்தி, நீலகண்டன், நீறணிகடவுள், அரவாபரணன், ஆரழலாடி, பிறையதுசூடி, பெருமான், உமாபதி, அழலது வேந்தி, அமலன், ஆனந்தன், பரசுபாணி சுடலையாடி மானிடமேந்தி, மறைமுதல்யோகி, புலித்தோலுடையோன், புரமூன்றெரித்தோன், பிநாகபாணி, பேயோடாடி, பூத நாதன், புணர்கங்காளன், ஞானமூர்த்தி, ஈசன், அநாதி, ஐம்முகன், பகவன், ஆதி, பாண்டரங்கன், அந்திவண்ணன், ஆலமர்கடவுள், நந்தி, நம்பன், நாதன், தற்பரன், கண்ணுதன்மூர்த்தி, கையிலையாளி.

**பிங்கல நிகண்டு :—**

அரன், அரூபி, அனந்தன், உருத்திரன், பரன், கறைமிடற்றோன், பார்ப்பதிகொழுநன், காலகாலன், பசுபதி, கண்ணுதல், தாணு, எண்குணன், சங்கரன், நந்தி, ஆதி, சசிதரன், ஐம்முகன், பிநாகி, சோதி, சம்பு, சூலி, பிஞ்ஞகன், முக்கண்ணன், விடையோன், முன்னவன், பிறப்பிலி, நக்கன், சடையோன், நாயகன், சம்பு, காமநாசன், பிதா, கருணாலயன், தேவதேவன், திரிபுராந்தகன், மானிடமேந்தி, பேயோடாடி, முத்தன், முதல்வன், சுத்தன், யோகி, வேதமுதல்வன், நாரிபாகன், ஆலமர்கடவுள், பவன், அநாதி, நீலகண்டன், நிருத்தன், பூதேசன், கங்காதரன், மழுவாளி, கபாலி, அங்கணன், கையிலையாளி, கங்காளன், அக்கரவார்த்தோன், அழலாடி, தற்பரன், நித்தன், நிமலன், நீறணிகடவுள், யானையுரித்தோன், அமலன், ஆனந்தன், வாமதேவன், மகேச்சுரன், சதாசிவன், திரியம்பகன், விமலன், சந்திரசேகரன், மாலயற்கரியோன், நாதன், எண்டோளன், ஞானமூர்த்தி, நம்பன், பகவன், வாமன், கிரீகன், வரன், உமாபதி, பூதபதி, புண்ணியன், புலித்தோலுடையோன், மாதேவன், கொன்றைமாலையன், பித்தன், ஈச்சுரன், நாசமில்லோன், இறைவன், பாசுபதன், குன்றவில்லி, பாண்டரங்கன், ஈசன், பரமன், பிரான், அந்திவண்ணன் காமாரி புராரி, அந்தகாரி, பர்க்கன்.

சூடாமணி நிகண்டு:—

சங்கரன், இறையோன், சம்பு, சதாசிவன். பேயொடாடி, அரவணிந்த மூர்த்தி, புராந்தகன், பூதநாதன், கங்கைவேணியன், கங்காளன், கடுக்கையங்கண்ணிசூடி, மங்கையோர்பாகன்,முன்னோன், மகேச்சுரன்,வாமதேவன்.

நீலகண்டன், மாதேவன், நிருமலன், குன்றவில்லி, சூலபாணியன், ஈசானன், பசுபதி,சுடலையாடி,காலகாலன், கபாலி, உருத்திரன், கைலையாளி, ஆலமர்கடவுள், நித்தன், ஐம்முகன், பரசுபாணி.

அந்திவண்ணன், முக்கண்ணன், அழலாடி, பாண்டரங்கன்,சந்திரசேகரன், ஆனந்தன், அனந்தன், ஆதி, தந்தியுரியோன், நம்பன், தற்பரன், நீறணிந்தோன், நந்தி, ஈச்சுரன், ஏறூர்ந்தோன், நக்கன், ஞானமூர்த்தி.

வரன், மறைமுதலி, ஈசன், மானிடமேந்தி, சோதி. பிரமன்மாற்கரியோன், தாணு, பிஞ்ஞகன், பினாகபாணி. பரமன், எண்டோளன், பர்க்கன், பவன், யோகி, பகவான். ஏகன், அரன், உமாபதி.

கயாதரம் ;—

ஆதி, அனாதி, அரன், சிவன், ஈசன், ஆனந்தன், அத்தன், சோதி, பினாகி, உருத்திரன், பிஞ்ஞகன், சூலி, சுத்தன், பாதிஉமாபதி, சங்கரன், கங்காதரன், பகவன் பூதி-புனைபாண்டரங்கன், பரமன், புராந்தகன், தக்கன் மருகன், சதாசிவன், ஐம்முகன், சம்பு, நித்தன், இக்கன்படவிழித்தோன், காலகாலன், இறை, அமலன், முக்கண் முதல்வன், பசுபதி, கங்காளன், முத்தன், பித்தன், நக்கன், சடையோன், விடையூர்தி, நாகாபரணன்.

## விஷ்ணு பெயர்

கரியவன் கேசவன் மாதவன் நாரணன்
கண்ணன்மா யோன்முகுந்தன்,
காகுத்த னச்சுதன் ‡சாரங்க பாணிகம
லக்கண்ணன் மேகவண்ணன்,
வரதன்மது சூதனன் வாமனன் கோவிந்தன்,
வனமாலி யுலகளந்தோன்,
வாசுதே வன்சக்க ராயுதன் சீதரன்
வைகுந்த நாதனெடியோன்,
பரவியமு ராரிதா மோதரன் பீதாம்
பரன்சங்க மேந்திநேமி,
பஞ்சாயு தன்வலவ ஞரசிங் கன்பதும
நாபனே யுலகமுண்டோன்,
அரியரவ ணைச்செல்வன் விண்டுதிரி விக்கிரம
னரிதுயி லமர்ந்தமூர்த்தி,
அனந்தசய னன்பூவை வண்ணனு திவராக
னுயிரம் பெயரண்ணலே ! 3

*கரியவன், கேசவன், மாதவன், நாரணன்,
கண்ணன், மாயோன், முகுந்தன்,
காகுத்தன், அச்சுதன், ‡சாரங்கபாணி,
கமலக்கண்ணன், மேகவண்ணன்,
வரதன், மதுசூதனன், வாமனன், கோவிந்தன்.
வனமாலி, உலகளந்தோன்,
வாசுதேவன், சக்கராயுதன், சீதரன்,
வைகுந்தநாதன், நெடியோன்,
பரவிய முராரி, தாமோதரன், பீதாம்பரன்,
சங்கமேந்தி, நேமி,

‡ சார்ங்கபாணி

பஞ்சாயுதன், வலவன், நாரசிங்கன்,
பதுமநாபன்-ஏ, உலகமுண்டோன்,

அரிய அரவணைச்செல்வன், விண்டு, திரிவிக்கிரமன்,
அரிதுயில் அமர்ந்தமூர்த்தி,

அனந்தசயனன், பூவைவண்ணன், ஆதிவராகன்,
ஆயிரம் பெயர் அண்ணலே! (3)

*சே:—*

மாயோன், மாதவன், நாரணன், கேசவன், சீதரன், திருமகன், பூமிகொழுநன், விண்டு, விறலரி, திரிவிக்கிரமன், உந்திபூத்தோன், உவணமுயர்த்தோன், வாமனன், கண்ணன், கோவிந்தன், அச்சுதன், ஆழ்கடற்றுயின்றோன், அரவணைச்செல்வன், சக்கராயுதன், சங்கமேந்தி, கருங்கடல்வண்ணன், கமலக்கண்ணன், சாரங்கபாணி, பஞ்சாயுதன், உலகமுண்டோன், உலகினையளந்தோன், நாரசிங்கன், ஆதிவராகன், பதுமநாபன், மதுசூதனன், தாமோதரன், பீதாம்பரன், காவற்கடவுள், முராரி, முகுந்தன், பெருமான், பிரமன் தந்தை.

பி:—

மாதவன், நெடியோன், மாயவன், சனார்த்தனன், சீதரன், பதுமநாபன், திருமால், கொண்டல்வண்ணன், கோவிந்தன், முகுந்தன், விண்டு, வனமாலி, முராரி, அனந்தன், காவற்கடவுள், காகுத்தன், அச்சுதன், அரவணைச்செல்வன், அறிதுயிலமர்ந்தோன், சக்கராயுதன், சார்ங்கபாணி, கடல்வண்ணன், சலசவிலோசனன், உலகினையளந்தோன், உலகமுண்டோன், படிமுழுதிடந்தோன், அலகைமுலையுண்டோன், தாமோதரன், சௌரி, மதுசூதனன், ஆதி, பீதாம்பரன், வராகன், திருமகள்கொழுநன், பூமிகொழுநன், கண்ணன், உவணவூர்தி, உவணமுயர்த்தோன், பஞ்சாயுதன், பரந்தாமன், பகவன், பூவைவண்ணன், புணரியிற்றுயின்றோன், பிரமன்றந்தை, பின்னைகேள்வன், சங்கமேந்தி, நாரசிங்கன், இருடிகேசன், தசவவதாரன், குறளன், நெடுமால், வலவன், கரியோன்,

உந்திபூத்தோன், நந்தகோபாலன், வாசுதேவன், துளப மௌலியன், அனந்தசயனன், வைகுந்தநாதன், ஆயிரம் பெயரோன், அரிமால், நாராயணன், அருந்தமன்.

சூ:—

மாதவன், மாயன், வாமனன், வாசுதேவன், சீதரன், நந்தகோபன்மகன், உவணகேதனன், பதுமநாபன், கேசவன், பஞ்சவர்க்குத்தூதன், சார்ங்கபாணி, சங்கமேந்தி.

கொண்டல்வண்ணன், காகுத்தன், கோவிந்தன், அச்சுதன், மால், விண்டு, வேலையிற்றுயின்றோன், உந்திபூத்தோன், துழாய்மௌலி, ஆதிவராகன், வைகுண்டநாதன், முண்டகாசனைகேள்வன், தாமோதரன், முராரி, நேமி.

வலவன், தேவகிமைந்தன், வனமாலி, படியிடந்தோன், சலசலோசனன், அனந்தசயனன், பீதாம்பரன், உலகலந்தருள்வோன்,பஞ்சாயுதன்,உலகுண்டபெம்மான், அலகைமுலையோடாவியருந்தினோன், நாரசிங்கன்.

அரவணைச்செல்வன், கண்ணன், அரிதுயிலமர்ந்த மூர்த்தி, பிரமனைப்பெற்றதாதை, பின்னைகேள்வன், முகுந்தன், கரியவன், நெடியோன், காவற்கடவுள், நாரணன்.

க:—

அரி, கருணாகரன், கேசவன், கோவிந்தன், அச்சுதன், மால், கரியவன், நாரணன், பீதாம்பரன், வரன், கார்க்கமலைக்குஉரியவன், விண்டு, முராரி, முகுந்தன், உலகமுண்டோன், வரியுரகன், பகையூர்வாகனன், கண்ணன், மாதவன், மாயன், திரிவிக்கிரமன், நெடியோன், மதுசூதனன், ஆயன், வரையெடுத்தோன், நாரசிங்கன், பஞ்சாயுதன், கற்கி, தாமோதரன்.

## விஷ்ணு, பலராமன், பெயர்.

அலகைமுலை யுண்டவன் சக்கிரிப ரந்தாம
ஞூழ்கடற் றுயில்கின்றவன்,
ஐவர்தூ துவனுவண மூர்த்திகா வற்கடவு
ளாயன்ச ஞர்த்தனுடனே,
வலியதே வகிமைந்த னுந்திபூத் தோன்பின்னை
மணமகன் பூமிகொழுநன்,
வல்லவன் படியிடந் தோனயன் றந்தைகுறள்
வடிவனைம் பத்தெட்டுமே,
இலகுதிரு மாலுக் கியன்றதொல் பெயரினமு
மியம்புவ ரனந்தமென்றே,
ஏககுண் டலனலா யுதனீல வம்பர
னிரேவதிக் கொழுநன்முசலி,
பலதேவ ஞேடனந் தன்காம பாலன்
பனந்தாம னச்சுதன்முனோன்,
பலராமன் வெள்ளையிப் பதின்மூன்று நாமமும்
பலபத்திர நாமமாமே! 4

* அலகைமுலையுண்டவன், சக்கிரி, பரந்தாமன்,
ஆழ்கடல் துயில்கின்றவன்,
ஐவர்தூதுவன், உவணம்ஊர்தி, காவற்கடவுள்,
ஆயன், சனார்த்தனன்-உடனே
வலிய தேவகிமைந்தன், உந்திபூத்தோன்;
பின்னைமணமகன், பூமிகொழுநன்,
வல்லவன், படியிடந்தோன், அயன்தந்தை,
குறள்வடிவன், ஐம்பெத்தெட்டுமே
இலகு திருமாலுக்கு இயன்ற தொல்பெயர்; இன்னமும்
இயம்புவர் அனந்தம் என்றே,
ஏககுண்டலன், அலாயுதன், நீலாம்பரன்,
இரேவதிக்கொழுநன், முசலி,

பலதேவன்-ஓடு, அனந்தன், காமபாலன்,
பனந்தாமன், அச்சுதன்முன்னோன்,

பலராமன், வெள்ளை, இப்பதின்மூன்று நாமமும்
பலபத்திரன் நாமமாமே! (4)

சே :—

பலராமன் பெயர்.

பி :—

இரேவதிகொழுநன், குண்டலன், உரோகணிதநயன், நீலாம்பரன் அலாயுதன், அச்சுதன்முன்னோன், காமபாலன், அநந்தன், வெள்ளை, காளிந்திமர்த்தனன், பனந்துசன், முசலி, கருந்துகிலுடையன், பலதேவன்.

சூ:—ஓர்குண்டலன், இரேவதிகொண்கன், முசலி, வெள்ளை, நீலாம்பரன், அநந்தன், அலப்படைகொண்டோன், அச்சுதன்முனர்வந்தோன், பலபத்திரன், காமபாலன், பனந்தாமன்.

க :—

பிரமன், மதன், பெயர்.

வேதன்பி தாமகன் வாணிகேள் வன்வரன்
விரிஞ்சனிர ணியகருப்பன்,

விதியிறை சயம்பன்ன ஓர்தியயன் மறையவன்
விதாதா பிதாபடைப்போன்

போதன்ச தானந்தன் நான்முகன் மான்மகன்
பூமகன் பரமேட்டிமண்

பொதுத்தந்தை ஞானிவா னவர்முதுவ னெண்கணன்
புகழார ணன்றிசைமுகன்,

ஓதிம முயர்த்தவன் சுரவன்மா லுந்திவந்
தோன்கமல யோனிபகவ,

உயரனந் தன்பிரமன் முப்பத்து மூன்றுபெயர்,
உருவிலி யனங்கனிரதி

காதலன் சித்தசன் மனோசனங் கசன்வேள்
கருப்புவிலி சம்பராரி
கந்தர்ப்பன் மாரன் வசந்தன்மன் மதனைங்
கணைக்கிழவன் வில்லிமகனே! 5

*வேதன், பிதாமகன், வாணிகேள்வன், வரன்,
விரிஞ்சன், இரணியகருப்பன்,
விதியிறை, சயம்பு, அன்னவூர்தி, அயன், மறையவன்,
விதாதா, பிதா, படைப்போன்,
போதன், சதானந்தன், நான்முகன், மான்மகன்,
பூமகன், பரமேட்டி,
மண்பொதுத்தந்தை, ஞானி, வானவர்முதுவன்,
எண்கணன், புகழ் ஆரணன், திசைமுகன்,
ஓதிமம் உயர்த்தவன், குரவன், மால்உந்திவந்தோன்,
கமலயோனி, பகவன்,
உயர்அனந்தன், பிரமன் முப்பத்துமூன்று பெயர்.
உருவிலி, அனங்கன்,
இரதிகாதலன், சித்தசன், மனோசன், அங்கசன், வேள்,
கருப்புவிலி, சம்பராரி,
கந்தர்ப்பன், மாரன், வசந்தன், மன்மதன்,
ஐங்கணைக்கிழவன், வில்லிமகனே ! (5)

## *பிரமன் பெயர்*

*சே* :—

உந்தியிலுதித்தோன், ஒளிமலர்மிசையோன், அன்னவூர்தி, அன்னமுயர்த்தோன், நான்முகன், மான்மகன், நலங்கேழ் எண்கணன், வானவர், முதல்வன், மண்பொதுத்தந்தை, இறைவன், குரவன், மறையோன், விரிஞ்சன், அந்தணன்,

ஞானன், அயன், வரன், திசைமுகன், பிதாமகன், விதாதா, கமலயோனி, வேதா, போதன், விதி, பரமேட்டி, இரணிய கருப்பன், படைப்போன்.

பி :—

அந்தணன், மலரோன், அயன், நான்முகத்தோன், உந்தியில் வந்தோன், ஓதிமவாகனன், பாரதிகொழுநன், படைப்போன்,பகவன்,ஆரணன்,இரணியகருப்பன்,விரிஞ்சன், வேதா, விதாதா, விதி,சதானந்தன், தாதா, பிதாமகன், சம்பு, மான்மகன், எண்கணன், கமலயோனி, பிரசாபதி, வேதன், கம், இறை, சூதன், பரமேட்டி, திசைமுகன்,வானவர்முதுவன்,போதன்,வரன்,குரவன்,மண்பொதுத்தந்தை, அனந்தன், ஞானன், அன்னமுயர்த்தோன், இறைவன், மறையோன்.

சூ :—

மேதினிபடைத்தோன், பிதாமகன், பிதா, விதாதா வரன், அயன், மலரோன், மண்பொதுத்தந்தை, வேதா, இரணியகருப்பன், போதன், மாலுந்திவந்தோன், குரவன், [1] ஒதிமமுயர்ந்தகொடியினன், அன்னவூர்தி.

இறை, [2] சாதனந்தன், எண்கணன், விதி, சுயம்பு, மறையவன், அநந்தன், ஞானி, மான்மகன், வாணிகேள்வன், பகவன், வானோர்முதல்வன், நான்முகன், விரிஞ்சன், கமலயோனி.

க :—

துய்யவன், வேதா, விதாதா, விதியிறை, சூதன், தொன்றுற்கையவன், நான்முகன், மால்மகன், என்கணன், காசி

---

1 ஓதிமமுயர்த்த கொடியினன் எனல் பொருந்தும்

2 சதானந்தன்

ணிக்குவெய்யவுன், தாதை, பிதாமகன், தாதா, விரிஞ்சன், வெள்ளைத்தையல்தன்கேள்வன், அயன், பரமேட்டி, சதானந்தன், தாதவிழ்போதன், இரணியகெற்பன், சதுமறையோன், பாதலந்தந்தோன், பிரசாபதி, கம், பதுமவுந்தி, சாதனன், அன்னக்கொடியோன், சம்பு.

### *மதன் பெயர். அவன் தம்பி பெயர். இரதியின் தங்கை பெயர், மதன்வில், கணை, நாண் இவற்றின் பெயர்.*

---

மதிசகன் மகரகே தனன்மதிக் குடையோன்
மனோபவன் வேனிலாளி

மனோபுதிரு மான்மகன் பூவாளி பூமான்
வயங்குதென் றற்றேரினன்,

அதிராழி முரசினன் மதனன்மோ கன்காம
னபிதான மிருபதொன்பான்,

அடர்காமன் மகிழ்தம்பி யேசாம னுமிரதி
யவடங்கை தேவதாரி,

கதியுடைத் தேவர்மேல் பூவின்மா னிடரின்மேல்
கருப்புவிலி ராக்கதர்கண்மேல்

காமுறுமி ருப்புவில் வண்டுநாண் பூட்டுகணை
கஞ்சமலர் சூதமலர்வான்,

பொதியவி ழசோகமலர் முல்லைமலர் நீலமலர்
பொருபஞ்ச பாணமன்றிப்

போற்றுமல் லிகைநெய்தல் மறுகணை யிரண்டுடன்
புகலிலேழ் பாணமாமே ! 6

*மதிசகன், மகரகேதனன், மதிக்குடையோன்,
மனோபவன், வேனிலாளி,

மனோபு, திருமான்மகன், பூவாளி, பூமான்,
வயங்கு தென்றல்தேரினன்,

அதிர்ஆழிமுரசினன், மதனன், மோகன், காமன்,
அபிதானம் இருபது ஒன்பான்.
அடர்காமன்மகிழ்தம்பியே சாமன் ஆம்.
இரதியவள் தங்கை தேவதாரி.
கதியுடை தேவர்மேல் பூவில், மானிடரின்மேல்
கருப்புவில், இராக்கதர்கள்மேல்
காமுறும் இருப்புவில் வண்டுநாண் பூட்டுகணை
கஞ்சமலர், சூதமலர், வான்.
பொதியவிழ் அசோகமலர், முல்லைமலர், நீலமலர்,
பொரு பஞ்சபாணம் அன்றிப்
போற்றும் மல்லிகை, நெய்தல், மறுகணை இரண்டுடன்
புகலில் ஏழ் பாணமாமே ! (6)

## மதன் பெயர்

*சே :—*

வேனிலாளி, வேள், மதன், அனங்கன், மாரன், பூவாளி, மன்மதன், கந்தர்ப்பன், பஞ்சபாணன், கருப்புவில்லி, இரதி காதலன், மகரமுயர்த்தோன், திருமால் புதல்வன், வசந்தன்.

*பி :—*

மான்மகன், மதனன், மகரக்கொடியோன், வேனிலாளி, வேள், வசந்தன், அங்கசன், அநங்கன், ஐங்கணைக்கிழவன், திங்கட்குடையோன், தென்றற்றேரோன், வனசன், வில்லி, மோகன், மலர்க்கணையோன், மதிசகன், இரதிகாந்தன், மாரன், மனோபவன், மனோசன், மனோபு, மன்மதன், திருமகண்மைந்தன், சம்பரசூதனன், உருவிலி, கடன்முரசோன், கைதைச்சுரிகையன், கந்தர்ப்பன், சித்தசன், பூவாளி, பூமன், கருப்புவில்லி.

சூ :—

திருமகண்மைந்தன், மாரன், சித்தசன், சம்பராரி, உருவிலி, மன்மதன், மீன்கொடியுயர்த்த தோன்றல், இரதி

சாதலன், வசந்தன், வேனிலாளி, கருப்புவில்லி, கந்தர்ப்பன், மதன், பூவாளி.

திங்கள்வெண்குடையோன், தென்றற் றேரினன், வில்லி, மோகன், ஐங்கணைக்கிழவன், வேள், அநங்கன் மான்மைந்தன், மனோபவன், மனோசன், அங்கசன், மனோபு, ஆழிமுரசோன்.

க :—

கன்னல்வில்லோன், வேள், அனங்கன், வயந்தன், கந்தற்பன், மதன், மன்மதன், காமன், மதுசகன், சித்தசன், மால்புதல்வன், உன்மதபாணன், மலரம்பன், வேனிலோன், ஓங்கு இரதிதன்வசன், மீனக்கொடிமாரன், சம்பரசூதனன்,

## மதன் தம்பி பெயர்

சே :— —
பி :— —
சூ :— —
க :— —

## இரதியின் தங்கை பெயர்

சே : —
பி :— —
சூ :— —
க :— —

## மதன் வில், கணை, நாண் பெயர்

சே :—
பி :—

வில்=கழை ; கணை = (ஐவகைமலர்) தாமரை, மாம்பூ, அசோகம், முல்லை, குவளை.

சூ :—
க :—

## பஞ்ச பாணத்தின் பெயரும், குணமும்.

மாறிலுன் மத்தமொடு மதனஞ்ச மோகமே
மருவுசந் தாபத்துடன்
வசிகரண மைந்து மலர்க்கணைப் பெயராம்.
வகுப்பரிய சுப்பிரயோகம்
வீறும்விப் பிரயோக மேசோக மோகம்
விலக்கரிய மரணமைந்தும்
விளம்பிய மலர்க்கணை யவத்தையின் பேராம்.
விதித்தசுப் பிரயோகமே
கூறிடிற் சொல்லு நினைவும்விப் பிரயோகம்
குணம்வெய் துயிர்த்திரங்கல்
குத்திடுஞ் சோகமது துய்ப்பவை தெவிட்டன்மெய்
கொதித்தே வெதுப்புவருதல்
பேறுடைய மோகமே யழுதல்மொழி பலபல
பிதற்றல்மர ணத்தின்குணம்
பேசிடின் மயக்கமொடு மாழ்தலிரு வகையென்பர்
பீடுறும் புலமையோரே ! 7

மாறில் உன்மத்தம்-ஒடு, மதனம், சமோகம்--ஏ,
மருவு சந்தாபம்-அத்துடன்,
வசீகரணம், ஐந்தும் மலர்க்கணைப் பெயராம்
வகுப்பரிய சுப்பிரயோகம்,
வீறும் விப்பிரயோகம்-ஏ, சோகம், மோகம்,
விலக்க அரிய மரணம், ஐந்தும்
விளம்பிய மலர்க்கணை அவத்தையின் பேராம்.
விதித்த சுப்பிரயோகமே
கூறிடில் சொல்லும் நினைவும் விப்பிரயோகம்
குணம் வெய்துயிர்த்து இரங்கல்,

குத்திடும் சோகம் அது துய்ப்பவை தெவிட்டல்,
மெய்கொதித்தே வெதுப்பு வருதல்,
பேறுஉடைய மோகம் — ஏ அழுதல், மொழி பல பல
பிதற்றல் மரணத்தின் குணம்,
பேசிடில் மயக்கம்-ஒடு மாழ்தல் இருவகை என்பர்
பீடுஉறும் புலமையோரே ! (7)

## பஞ்ச பாணத்தின் பெயரும் குணமும்

சே ;—

பி:—

தாமரை, மாம்பூ, அசோகம், முல்லை, குவளை, பெரு மயக்கு, சிந்தாகுலம், புணர்ச்சிக்கிணங்குதல், மோகனம், சந்தாபம், வசீகரணம்.

உன்மத்தம், மதனம், மோகனம், சந்தாபம்,வசீகரணம், அவத்தை

சுப்பிரயோகம், விப்பிரயோகம், சோகம், மோகம், மரணம்.

சுப்பிரயோகம்=பேசாதொழியா நினைவு
விப்பிரயோகம்=பெருமூச்செறிந்து வருந்துதல்.
சோகம்=வெதும்பி உணவு வெறுத்தல்
மோகம்=அழுதலும், பிதற்றுதலும்.
மரணம்=உயிர் சோர்தலும், மயங்குதலும்

சூ :—

க :—

## விநாயகன் பெயர். முருகன் பெயர்

முக்கணன் பாசாங்கு சத்தன் விநாயகன்
மோதகக் கரனைங்கரன்,
மூத்தோன்முன் ஞேன்கௌரிசேயாகு வாகனன்
மும்மதன் யானைமுகவன்

முக்கணன் மைந்தனொற் றைக்கொம்ப னேரம்பன்
முந்துகண பதியின் பெயர்.
முருகன்கு கன்குமரன் மயிலூர்தி சேந்தனறு
முகன்விசா கன்சுவாமி
மிக்ககுழ கன்கடம் பன்கார்த்தி கேயனறு
மீன்காத லன்சிலம்பன்
வேலுடைக் கடவுளா சான்மாயன் மருகன்செவ்
வேள்காங்கே யன்சூர்பகை,
தக்கபுல வன்செட்டி தேவர்சே னுபதி
சங்கரன் புதல்வன்வானோர்
தலைவனுயர் வள்ளிகேள் வன்றாரு காரிசர
வணபகவன் கந்தவேளே ! 8

முக்கணன் பாசாங்குசத்தன், விநாயகன்,
மோதக்கரன். ஐங்கரன்,
மூத்தோன், முன்னோன், கௌரிசேய், ஆகுவாகனன்,
மும்மதன், யானைமுகவன்,
முக்கணன் மைந்தன், ஒற்றைக்கொம்பன், ஏரம்பன்,
முந்து கணபதியின் பெயர்.
முருகன், குகன், குமரன், மயிலூர்தி, சேந்தன்,
அறுமுகன், விசாகன், சுவாமி,
மிக்க குழகன், கடம்பன், கார்த்திகேயன்,
அறுமீன்காதலன், சிலம்பன்,
வேலுடைக்கடவுள், *ஆசான், மாயன்மருகன்,
செவ்வேள், காங்கேயன், சூர்பகை,
தக்க புலவன், செட்டி, தேவர்சேனுபதி,
சங்கரன்புதல்வன், வானோர் தலைவன்,
உயர் வள்ளிகேள்வன், தாருகாரி,
சரவணபகவன், கந்தவேளே ! (8)

---

*கடவுளாசான் எனினும் பொருந்தும்,

## விநாயகன் பெயர்

சே:-ஒற்றைக்கொம்பன், விநாயகன், ஐங்கரன்,வெற்றி யானைமுகவன், கணபதி, பாசாங்குசதரன், ஆகுவாகனன்.

பி:-ஏகதந்தன், இறைமகன், ஏரம்பன்,ஆகுவாகனன், ஐங்கரன், முக்கண்ணன், பார்ப்பதிபுதல்வன், பாசாங்குச தரன், அத்திமுகத்தோன், அரிதிருமருகன், தந்திக்கடவுள், மும்மதன், கங்கைசுதன், விநாயகன்.

சூ:-அங்குசபாசமேந்தி, அம்பிகைதநயன், முன்னோன், ஐங்கரன்,மூத்தோன்,ஒற்றைமருப்பினன், ஏரம்பன்,கங்கை பெற்றோன், முக்கண்ணன், கணபதி, ஈசன்மைந்தன்,கய முகன், ஆகுவாகனன்.

க:-இந்துமுடி, கண்ணுதல்சேய்,கணபதி, ஏகதந்தன், தந்திமுகத்தன்,விநாயகன், ஐங்கரன்,சாமளைதன்மைந்தன், பெருவயிற்றுக்குறுந்தாளெந்தை, மால்மருகன், அந்தமில் ஏரம்பன், பாசாங்குசன்,ஆகுவாகனன்.

## முருகன் பெயர்

சே:-முருகன், சூர்ப்பகை, செட்டி, குமரன்,அறுமீன் காதலன்,சேவலங்கொடியோன், கார்த்திகேயன், கடம்பன், சுவாமி, வேலுடைக்கடவுள், மேலவர்க்கிறைவன், வரைபக வெறிந்தோன், வள்ளிமணாளன். அரன்மகன், குறிஞ்சிமன், சரவணத்துதித்தோன், ஆறுமுகன், விசாகன், குகன்,சேய் செவ்வேள், தேவர்சேனைபதி, மயிலாளி, சேந்தன், கந்தன், காங்கேயன், வேள்.

பி:-குமரன், தெய்வகுஞ்சரிமணாளன், சிலம்பன்,முரு கன்,சேய், செவ்வேள், கடம்பன், சாமி, கார்த்திகேயன், சேந்தன், குறிஞ்சிக்கிழவன், செட்டி, காங்கேயன், கௌரி மைந்தன், கந்தன், வேலன், வள்ளிகேள்வன், விசாகன்,

4

தாரகாரி,குகன்,சரவணபவன்,மயில்வாகனன் வன்னிப்பூக்குமரன்,ஆறிருகரத்தோன், அரிதிருமருகன்,குழகன்,கங்கைமைந்தன், குன்றெறிந்தோன், அறுமீன்காதலன், அசுரற்றடிந்தோன்.சேவலங்கொடியோன், தேவசேனாபதி,பாவகி, ஆசான்,கலையறிபுதல்வன்,அரன்மகன், யானைமுகவற்கிளையோன்.

சூ:-முருகன்,வேள்,சாமி, ஆறுமுகன்,குகன்,குழகன் மாயோன்மருகன், சேய், கார்த்திகேயன், வரைபகவெறிந்தோன்,செட்டி,அரன்மகன், கங்கைமைந்தன்,ஆண்டலைக்கொடியுயர்த்தோன், சரவணபவன், கடம்பன், தாரகற்செற்றோன்.ஆசான்.

குறிஞ்சிவேந்தன், வேலினுக்கிறை, விசாகன், சேந்தன், காங்கேயன், செவ்வேள், சிலம்பன், மஞ்ஞையூர்தி, சூர்ப்பகைவன், குமரன்,புலவன்.

க:-வாரணகேதனன், குன்றெறிந்தோன், மயிலூர்தி, கந்தன், தாருகற்காய்ந்தோன், முருகன், கடம்பன், சரவணன்,சேய், கூரயிலேந்தி, குகன், கார்த்திகேயன். குமரன், செவ்வேள், சூர்ப்பகை, சேந்தன், விசாகன், வேள், வள்ளிதுணைவன்.

**முருகன் பெயர்; வயிரவன் பெயர்.**

கங்கைமக னிரு புயன்சேவ லங்கொடிக்
கடவுள்வரை பகவெறிந்தோன்,
கௌரிதனை யன்குறிஞ் சிக்கிழவ னென்பதுங்
காட்டுமே சேயின்பெயர்.
அங்கிவிழி வந்தவன் சிம்புளா னேன்சடைய
னானைமுக வற்கிளையவன்
அம்பிகைம கன்பத்திரை கேள்வன்முக் கணன்வில்லி
அவிர்செக்கர் வானிறத்தன்,
பொங்கியகு ரோதனுக் கிரன்வீர பத்திரன்
பொருவில்சிறு விதிமகத்தைப்

பொருதழித் தவனுமாங் கேத்திரபா லன்காரி
போற்றுகோ ழிக்கொடியினேன்,
தங்குகும ரன்பிள்ளை கஞ்சுகன் முத்தன்வெண்
டலைமாலை புனைவடுகநா
தன்முடுவ லூர்திசித் தன்சாத வாகனன்
சாற்றுவயி ரவனுமமே! 9

*கங்கைமகன், ஆறுஇருபுயன், சேவலங்கொடிக்கடவுள்,
வரைபகவெறிந்தோன்,
கௌரிதனையன், குறிஞ்சிக்கிழவன், என்பதும்
காட்டுமே ேயின்பெயர்.
அங்கிவிழிவந்தவன், சிம்புளானேன், சடையன்,
ஆனைமுகவற்கு இளையவன்,
அம்பிகைமகன்,பத்திரைகேள்வன்,மூக்கணன்,வில்லி,
அவிர் செக்கர்வான் நிறத்தன்,
பொங்கிய குரோதன் உக்கிரன், வீரபத்திரன்,
பொருவில் சிறுவிதி,
மகத்தைப்பொருது அழித்தவனும்ஆம். கேத்திரபாலன்,
காரி,
போற்றும் கோழிக்கொடியினேன்,
தங்குகுமரன், பிள்ளை, கஞ்சுகன், முத்தன்,
வெண்டலைமாலைபுனை வடுகநாதன்
முடுவலூர்தி, சித்தன், சாதவாகனன்,
சாற்றும் வயிரவன் நாமமே! (9)

## வயிரவன் பெயர்

சே:- வைரவன், காரி, வடுகக்கடவுள்.

பி;- கஞ்சுகன், மூவிலைவேலோன், காரி,முத்தன், கேத்திரபாலன், நிருவாணி, சித்தன், ஞாளியூர்தி, கபாலி, வடுகன்.

சூ:-முத்தன், குமரன், பிள்ளை, முடுவற்படையோன், காரி,சித்தன்,கேத்திரபாலன்,செந்தொடைக்குரியகோமான், வித்தகன், ஞாளியூர்தி, கருங்குதிரையாளி, வடுகன்.

க:- வடுகன், தமருகன், கஞ்சுகன், சூலி, மணவணி வோன், முடுவலூர்காரி, வயிரவன்.

## ஐயனார் பெயர், குபேரன்பெயர்.

காரியா ரியனறங் காப்பவன் யோகி
பூரணைபுட் கலைப்பெணிருவர்
கணவன்பு றத்தவன் செண்டாயு தன்கரிய
கடல்வண்ண னெடியசாத்தன்,
ஓரியர கரபுத்திரன் வெள்ளைவா ரணமூர்தி
யொருபத்தி ரண்டுமையன்.
உற்றபிங் கலனிரு நிதிக்கிழவன் மந்திரி
யுருத்திரர்க் கினியதோழன்,
சீரகத் தாரினன் வச்சிரவ ணன்வடதி
சைத்தலைவ னளகையாளி,
செறிபுருட வாகனன் மரகதன் புட்பகத்
தேரோனி யக்கர்வேந்தர்,
பேருலவு தனதன்கின் னரர்பிரா னென்னவே
பெருமேழி ரண்டுபெயரும்
பெருஞ்செல்வ நீங்காக் குபேரனபி தானமாய்ப்
பேசினர் தமிழ்ப்புலவரே! 10

*காரி, ஆரியன், அறங்காப்பவன், யோகி,
பூரணை, புட்கலைப் பெண் இருவர்
கணவன், புறத்தவன், செண்டாயுதன்,
கரிய கடல்வண்ணன், நெடியசாத்தன்,
ஓரி, அரகரபுத்திரன், வெள்ளைவாரணம் ஊர்தி,
ஒருபத்து இரண்டும் ஐயன்,

உற்ற பிங்கலன், இருநிதிக்கிழவன், மந்திரி,
உருத்திரர்க்கினிய தோழன்,
சீரகத்தாரினன் வச்சிரவணன்'
வடதிசைத்தலைவன், அளகையாளி,
செறிபுருடவாகனன், மரகதன், புட்பகத்
தேரோன், இயக்கர்வேந்தர்,
பேருலவு தனதன், கின்னரர்பிரான், என்னவே
பெரும் ஏழிரண்டு பெயரும்,
பெருஞ்செல்வம் நீங்காக் குபேரன் அபிதானமாய்ப்
பேசினர் தமிழ்ப்புலவரே! (10)

## ஐயனார் பெயர்

சே:- கோழிக்கொடியோன், சாதவாகனன், காரி, சாத்தன், கடனிறவையன்.

பி:- சாதவாகனன், கோழிக்கொடியோன், சாத்தன், வெள்ளையானைவாகனன், காரி, செண்டாயுதன், கடனிற வண்ணன், பூரணைகேள்வன், புட்கலைமணாளன், ஆரியன், அறத்தைக்காப்போன், யோகி, அரிகரபுத்திரன்.

சூ:- காரி, புறத்தவன், கடல்வண்ணன். சாத்தா, பூரணைகேள்வன், யோகி, புட்கலைமணாளன், மாசாத்தன், செண்டாயுதன், வெள்ளையானையூர்தி, ஆரியன், அறத்தைக் காப்போன், அரிகரகுமரன்.

க:- சாதவாகனன், முற்றுடைபடையையன், கரியூர்தி, சாத்தன், அரியரன்சேய், கொடிதிகழ்வாரணன், காரி, செண்டேந்துகை, கோதண்டன்.

## குபேரன் பெயர்

சே- மந்திரி, குபேரன், நிதிக்கோன், இயக்கன், பிங் கலன், அரற்குப்பிரியாத்தோழன், வடதிசைத்தலைவன், இயக்கர்வேந்தன், அளகையாளி, ஆயமுற்காவலன், புட்பகவூர்தி, தனதன், மரகதன், வச்சிரவணன்.

பி:- இருநிதிக்கிழவன், இயக்கர்வேந்தன், வடதிசைத் தலைவன், நரவாகனன், அளகையாளி,அதிதனச்செல்வன், சீரகத்தாரோன், வைச்சிரவணன், அரனுடைத்தோழன், கின்னரர்பிரான், மரகதன், புட்பகவூர்தி,பிங்கலன், மந்திரி தனபதி, குபேரன்.

சூ;- அரனதுதோழன். கின்னரர்பிரான்,அளகையாளி புருடவாகனன், சோமன், புட்பக விமானமுள்ளோன், இருநிதிக்கிழவன், ஏக பிங்கலன் இயக்கர் கோமான் மாகதன், தனதன், மந்திரி, வைச்சிரவணன், குபேரன்.

க:- தனதன், அளகைமன், பிங்கலன், மந்திரி, சம்பு நண்பன், கனகன், குபேரன்,இருநிதிக்கோன், அமுதகரன் மரகதன், நனகன், புட்பகஷர்பவன், உத்தரகோன் நரவாகனன், வைச்சிரவணன், மாயோன், இயக்கர்தம் காவலன்,வைச்சிரவணன்,மாயோன், இயக்கர்தம்காவலன்.

## எமன் பெயர். இந்திரன் பெயர்.

தண்டதரன் மறலிநடு வன்கூற்று வைவைச்சு
தன்பாச கரன்மடங்கல்,
சமனெருமை யூர்திசெங் கோற்கடவு ளந்தகன்
தருமனரி தென்றிசைக்கோன்,
சண்டனிய மன்கால னமனொருப தேழ்பெயர்,
சதக்கிருதி போகிநேமி
சக்கிரிவ லாரிகோ பதிவச்சிர பாணியைந்
தருநாதன் வேள்விநாதன்,
அண்டர்கோன் சசிநாய கன்பாக சாதன
ளுகண்ட லன்சுநாசி,
யரியகௌ சிகன்கரிய வன்பொன்ன கர்க்கிறைவ
ளுயிரங் கண்ணன்மகவான்,
மண்டியபு ரந்தரன் புனிதன்விண் முழுதாளி
வாசவன் புலவன்மேக
வாகனன் புருகூத ஞன்மருப்பி யாணையான்
மருதநன் னிலக்கடவுளே! 11

தண்டதரன், மறலி, நடுவன், கூற்று, வைவைச்சுதன்,
பாசகரன், மடங்கல்,
சமன், எருமைஊர்தி, செங்கோல்கடவுள், அந்தகன்,
தருமன், அரி,தென்றிசைக்கோன்,
சண்டன், இயமன், காலன், நமன், ஒருபதேழ் பெயர்,
சதக்கிருதி, போகி நேமி,
சக்கிரி, வலாரி, கோபதி, வச்சிரபாணி,
ஐந்தருநாதன், வேள்விநாதன்,
அண்டர்கோன், சசிநாயகன், பாகசாதனன்,
ஆகண்டலன், சுநாசி,
அரிய கௌசிகன், கரியவன், பொன்நகர்க்கிறைவன்,
ஆயிரம் கண்ணன், மகவான்.
மண்டிய புரந்தரன், புனிதன், விண்முழுதாளி,
வாசவன், புலவன்,
மேகவாகனன், புருகூதன், ஆன்மருப்பு யானையான்,
மருதநல் நிலக்கடவுளே! (11)

## எமன் பெயர்

சே:- அந்தகன், தருமன், தென்திசை முதல்வன், சண்டன், மறலி, கூற்று,சமன்,ஞமன், செங்கோற்கடவுள், இயமன், காலன்.

பி:- இயமன்,அரி. அந்தகன், தென்றிசைக்கிழவன், சமன், சண்டன், சண்பன், தருமன், நமன், மறலி, தண்டதரன், சைமினிநகரோன், வைதர்ணி நதியோன், செங்கோற்கடவுள், நாசவன், நடுவன், கூற்று, காலன், மடங்கல், கால், மறல்.

சூ:- இயமன், சமன், செங்கோற்கடவுள், கூற்று, தருமன்,அந்தகன்,சண்டன்,நமன்,வைவச்சுதன்,நடுவன், தென்றிசைக்கோன், அரி, மறலி, எருமையூர்தி, காலன், கால், மரல், மடங்கல், பாசத்தன்.

க:- தண்டதரன், தென்திசையோன், தருமன், சமன், நடுவன், சண்டன், யமன்,ஞமன்,அந்தகன்,கூற்று, மறலி, சண்பன்,திண்திறல்காலன்.

## இந்திரன் பெயர்

சே:- புரந்தரன், புனிதன், பொன்னகர்க்கிறைவன், வாசவன். அமரர்கோன்,மால்,முகிலூர்தி, வேள்விநாயகன், விண்முழுதாளி, ஆயிரங்கண்ணன். அயிராணி,கேள்வன், மருத்துவன்,மகவான், வலாரி, விருத்திராரி. வெள்ளைவாரணன்,இமையவர்வேந்தன், பாகசாதனன், ஆகண்டலன், வச்சிரபாணி, சதக்கிருது, இந்திரன்.

பி:- அமராவதியோன், ஆயிரங்கண்ணன், சதமகன் கோபதி, போகி, சங்கிரந்தனன், பாகசாதனன், வச்சிரப் படையோன், மேகவாகனன்,விண்முழுதாளி, வாசவன்,மகவான்,வானவன், கௌசிகன்,ஆகண்டலன், அயிராவதன் வலாரி, புருகூதன், சக்கிரன், புரந்தரன். மருதக்கிழவன் வரைசிறகரிந்தோன்,அரி,சசிவல்லவன், திருமலிசுவர்க்கன், வேள்விநாயகன், புலவன், வேந்தன், புரோகிதன், சுனசி,, கரியவன், புனிதன், காண்டாவனன், மால், வெள்ளைவாரணன், தேவர்வேந்தன், பொன்னகர்ச்செல்வன், ஐந்தரு நாதன்,இந்திரன்.

சூ:- மேகவாகனன்,வேள்விக்குவேந்தன், விண்முழுதுமாளி, பாகசாதனன், வச்சிரபாணி, கோபதி, நாகநகர்க்கு நாதன், நான்மருப்பியானையூர்தி, போகி, வாசவன், வேந்தன், புரந்தரன்,புலவன், சக்கிரன், மருதநிலத்துவேந்தன், மருத்துவன், வானோர்கோமான், புருகூதன், சசிமணாளன், புரோகிதன், கௌசிகன், கரியவன், சுனசீரன், ஆகண்டலன், வலாரி, அரி, சதக்கிருது, ஆயிரங்கண்ணன்.

க:- புரந்தரன், இந்திரன், பொன்னுலகாளி, வெண் போதகத்தன், பரம்திகழ்வாசவன், ஆகண்டலன், பாகசாதனன், பூதரஞ்சிறகீனம்செய் வச்சிரபாணி, சதமகவான், துரந்தவலாரி, அரி, முகிலூர்தி, சுரர்பதி.

## இந்திரன் பெயர், அவன் மகன் பெயர், இந்திராணி பெயர், தெய்வப்பெண் பெயர், அமரர் பெயர், அமரர் மாதர் பெயர்.

வரைசிற கரிந்தோன் புரோகிதன் காண்டா
வனன்றழ லிடிக்கொடியினன்,
மகிழ்வேந்த னுச்சியிற் சிரவநற் பரியினன்
மருத்துவன றுச்சவனொடு
தருமனிந் திரன்னாமம் முப்பதிற் றெட்டும்,
சயந்தவன் மைந்தனாமம்.
சசிபுலோ மசையிந்தி ராணியயி ராணிசுந்
தரியிந்திரன் மனைவிநாமம்.
அரமக ளரம்பைசுரர் மகளமரர் மாதர்பெய
ராஞ்சூர ணங்கிரண்டும்,
ஆனதெய் வப்பெண்பொ துப்பெயர் விண்ணவ
ரமரர்வா னவரிலேகர்,
திரள்விபுத ரண்டரா தித்தர்சுர ரையர்புத்
தேளிர்கட வுளரிமையவர்,
தீர்த்தர்பண் ணவர்பகவர் அமுதர்பங் கவரும்பர்
தேவர்மே லோருமாமே! 12

* வரைசிறகு அரிந்தோன், புரோகிதன், காண்டாவனன்,
தழல் இடிக்கொடியினன்,
மகிழ்வேந்தன், உச்சியில் சிரவம் நல்பரியினன்,
மருத்துவன், துச்சவன் — ஒடு,
தருமன், இந்திரன் நாமம் முப்பதிற்றெட்டும்,
சயந்தவன் மைந்தன் நாமம்.
சசி, புலோமசை இந்திராணி, அயிராணி,
சுந்தரி, இந்திரன் மனைவி நாமம்,
அரமகள், அரம்பை, சுரர்மகள், அமரர்மாதர் பெயராம்,
சூர், அணங்கு, இரண்டும்

ஆன தெய்வப்பெண் பொதுப்பெயர், விண்ணவர்,
அமரர், வானவர், இலேகர்,
திரள் விபுதர், அண்டவர், ஆகித்தர், சுரர், ஐயர்,
புத்தேளிர், கடவுளர். இமையவர்,
தீர்த்தர்,பண்ணவர். பகவர்,-அமுதர், பங்கவர், உம்பர்,
தேவர் மேலோரும் ஆமே!

### இந்திரன் மகன் பெயர் (12)

சே :-

பி :- சயந்தன்:

சூ :- சயந்தன்.

க :-

### இந்திராணியின் பெயர்

சே:— சுந்தரி, சசி, அயிராணி புலோமசை, இந்திரன் தேவி.

பி :— சுந்தரி, சசி, அயிராணி, புலோமசை, ஐந்தருச் செல்வி, இந்திரன்தேவி.

சூ :— இந்திராணி, புலோமசை, சசி, அயிராணி.

க :— திசைபுகழ் வானவர்நாயகி, இந்திரன்தேவி, புலோமசை, அயிராணி, சசி, சுந்தரி.

### அமரர் மாதர் பெயர்

சே :— அரம்பையர், அரமகளிர். அமரர்மாதர்.

பி :— அரமகளிர், சூரரமகளிர், அரம்பையர்.

சூ :— அரமகள், அரம்பை.

க :—

## தெய்வப்பெண் பெயர்

சே :— அணங்கு, சூர், தெய்வப்பெண்.

பி :— அணங்கு, சூர், வஞ்சனை, மாயவள், கன்னி

சூ :— சூர், அணங்கு, தெய்வமெல்லியர்.

க :—

## அமரர் பெயர்

சே :— வானவர், இமையவர், விண்ணவர், கடவுளர், அமரர். சுரர், புலவர், அண்டர் புத்தேளிர், ஐயர், உம்பர், தேவர், பண்ணவர். பகவர், தீர்த்தர், பட்டாரகர், புங்கவர்,

பி:— வானவர், அமுதர், வரர், புத்தேளிர், மேலவர், இமையவர், விண்ணவர், கடவுளர். அமரர், புங்கவர், ஐயர், இலேகர், விபுதர், தீர்த்தர், அசுரர்க்கமித்திரர்,உயர் நிலையோர், சுரர், உம்பர், புலவர், அண்டர் முதல்வர், ஆதித்தர், சுவர்க்கர், தேவர், பொன்னுலகுடையோர்.

சூ:—தேவர், அமரர், பண்ணவர், புத்தேளிர்,கடவுளர், அண்டர், உம்பர், இமையவர், விபுதர், வானோர், இலேகர், புலவர், விண்ணோர், அமுதர், ஆதித்தர், மேலோர்,ஐயர், சுரர், தீர்த்தர், உயர்நிலத்தவர்,

க :— மதி, அமுதாசனர், வானோர், விபுதர், இலேகர், வரர், அதிதிதரும்சுதர், உம்பர், இமையோர், அமரர் செம் பொற்பதியுறைவார், சுரர், புத்தேளிர், பட்டாரகர், பகவர், கதிதருபண்ணவர், புங்கவர், தீர்த்தர், கடவுளர்!

## உமைபெயர், திருவின் பெயர், வாணி பெயர்.

அமலையம் பிகைகௌரி தேவிதரு மச்செல்வி
அயிராணி சத்திநாரி,
அபினைகா மக்கோட்டி மலைமாது சங்கரி,
ஆரியை யுருத்திரைபரை.

*இமையவதி சாம்பவி நீலிசிவை மருதவி*
*யிலங்குபார்ப் பதியுமையவட்*

*கெழுமூன் று பெயர்தாக் கணங்குபூ மகள்கமலை*
*யிந்திரைபொன் னிளையாள் செய்யாள்*

*அமுதிற்பி றந்தவ ளரிபிரியை சீதேவி*
*யாக்கமா பதுமைவிமலை,*

*யருளிலக் குமிபொருட் செல்விபொறி கோகனகை*
*யறுமூன் று திருமகட்பேர்.*

*கமழ்பனுவ லாட்டிபா ரதிவாணி பூர்வா*
*கினியிசை மடந்தைகாயத்*

*திரிஞான மூர்த்திநா மகளுலக மாதா*
*கலைச்சிவாக் கின்செல்வியே !* **13**

*அமலை, அம்பிகை, கௌரி, தேவி, தருமச்செல்வி,
அயிராணி, சத்தி, நாரி,

அபினை. காமக்கோட்டி, மலைமாது. சங்கரி,
ஆரியை, உருத்திரை, பரை.

இமையவதி, சாம்பவி, நீலி, சிவை, மருதவி,
இலங்கு பார்ப்பதி, உமையவட்கு

எழுமூன்று பெயர், தாக்கணங்கு, பூமகள், கமலை
இந்திரை, பொன், இளையாள், செய்யாள்.

அமுதிற்பிறந்தவள், அரிபிரியை, சீதேவி,
ஆக்கமா, பதுமை, விமலை,

அருள்இலக்குமி, பொருட்செல்வி. பொறி,கோகனகை,
அறுமூன்று திருமகள் பேர்.

கமழ் பனுவலாட்டி, பாரதி, வாணி, பூர்வாகினி,
இசைமடந்தை, காயத்திரி,

ஞானமூர்த்தி, நாமகள், உலகமாதா,
கலைச்சி, வாக்கின்செல்வியே! (13)

## உமை பெயர்

சே :— காமக்கோட்டி. அம்பிகை, கௌரி, ஆரியை, சத்தி, அயிராணி, பார்வதி, இமையவல்லி, உமையவள்

பி:— ஆரியை, காமக்கோட்டி, அம்பிகை, நாரி, சத்தி, நாயகி, கௌரி, தேவி, சாம்பவி, தருமச்செல்வி, மலைமகள், சங்கரி, மாதா, ஐயை, பரை, உருத்திரை, பார்ப்பதி, அந்தரி, நீலி, கன்னி, நிமலி, குமரி, வேதமுதல்வி, விமலை, முக்கண்ணி, அமலை, இமயவதி, அயிராணி, சமயமுதல்வி, தற்பரை, மனோன்மணி, சிவை, அம்மை, உமை, அரனிடத்தவள், சகமீன்றவள் பவானி, அன்னை, புண்ணிய முதல்வி,

சூ :— அரனிடத்தவள், காமக்கோட்டத்தி, அம்பிகை, மாதா, தருமத்தின்செல்வி, தேவி, சாம்பவி, மலைமடந்தை, பரை, சிவை, கௌரி, பார்ப்பதி, பவானி, சத்தி, நாரி, உமை.

க :— என் அன்னை, சத்தி, அபினை, இமையவதி. இகல்வேள்தன் அன்னை, நீலி, கவுரி, உமை, சிவை, தாரணிக்குமுன் அன்னை, அம்பிகை, ஆரியை, பார்ப்பதி, மூதறம் செய் மின் அன்னை, இல்லவன்காதலி.

## திருவின் பெயர்

சே:— பொறி, மா, ஆக்கம், செல்வி, பொன், பூமகள், செய்யாள், இந்திரை, திருமகள், கமலை, பதுமை, விமலை கோகனகை.

பி:— பொருளின் செல்வி, பொறி, அரிப்பிரியை, மலர் மகள், இந்திரை, மா, இலக்குமி, கமலை, ஆக்கம், பதுமை, சீதேவி, தாக்கணங்கு, இளையாள், கடற்பிறந்தாள் மாறிருமார்பினள், மறைத்தலைவி, செய்யாள். பூமகள்,

சூ:—கடற்பிறந்தகோதை, மா, அரிப்பிரியை, செய்யாள், ஆக்கம், பொன், பொறி, சீதேவி, அலர்மகள், பொருளின் செல்வி, தாக்கணங்கு, இளையாள், பூமின், இலக்குமி, சலசை, இந்திரை, திருமகள்,

க:— செல்வி, மா, ஆக்கம், திரு அருளை ஏயும்பொறி, பொன், மலராள், அரிதேவி, இந்திரை.

வாணி பெயர்

சே:— பாரதி, வாணி. பனுவலாட்டி, வெண்டாமரையாள், வெள்ளைமேனியாள், நான்முகன்கிழத்தி' நாமகள், கலைமகள், உலகமாதா, ஊர்பூரவாகனி, ஞானமூர்த்தி, நாற்பாமடந்தை, சாவித்திரி, காயத்திரி, வாக்கின் செல்வி.

பி:— பாரதி, துய்யாள், பனுவலாட்டி, வேதமுதல்வி, பிராமி, விமலை. வாணி, வெள்ளைநிறத்தினள் வாக்காள், நான்முகன் கிழத்தி, ஞானத்திறைவி, காயத்திரி, சாவித்திரி' பாமடந்தை, நூன்மடந்தை, உலகமாதா, இசைமகள்' கலைமகள், வெண்டாமரைமகள், கண்ணாள், உயிர்த்துணைவி, நாமகள்.

சூ:— கலைமகள், பனுவலாட்டி, காயத்திரி, ஞானமூர்த்தி, உலகமாதா, பிராமி, வெள்ளைமெய்யாள், வெண்சலசமுற்றாள், பாரதி, இசைமடந்தை, அயன்மனைவி, வாக்காள். வாணி, நாமகள்,

க:— வாணி, வெண்டாமரைமேல் மாது, அறிவாட்டி கலைமகள், பாரதி, நாமகள்.

## வாணி, கங்கை, தருமதேவதை இவர்கள் பெயர்.

பரவுவெண் கமலைதுய் யாள்வெள்ளை மேனியாள்,
பரமாது சாவித்திரி,
பகருமபி ராமியயன் மனைவிபெயர் சானவி
பகீரதி மந்தாகினி,
வரநதி யுடன்வெகுளி திரிபதகை சுரநதி
வளங்குலவு விமலைகங்கை.
வடுகிவயி ரவனன்னை மூதணங் கேமோடி
மாரியொடு கொற்றிசூரி,

**கருதிலே ழுங்காடு காள்பெய ரியக்கிமர**
**கதவல்லி யருகனை முடி**

**கவித்தபக வதியம்மை பூகமர் நிழல்வஞ்சி**
**கழியாவ ரத்தின்மூர்த்தி.**

**தெரியிலம் பிகையம்பா லிகைபரம சுந்தரி**
**சிறந்தயிரு நான்குபெயரும்**

**சீர்பெறுந் தருமதே வதையென் றுரைந்தனர்**
**செந்தமிழ்ப் புலமையோரே !** **14**

* பரவும் வெண்கமலை, துய்யாள், வெள்ளைமேனியாள்.
பரமாது, சாவித்திரி,
பகரும் அபிராமி, அயன்மனைவி பெயர், சானவி.
பகீரதி. மந்தாகினி,
வரநதி—உடன் வெகுளி, திரிபதகை சுரநதி,
வளம் குலவு விமலை, கங்கை,
வடுகி, வயிரவன் அன்னை, மூதணங்கு—ஏ மோடி,
மாரி—ஒடு கொற்றி, சூரி,
கருதில் ஏழும் காடுகாள் பெயர், இயக்கி,
மரகதவல்லி, அருகனை
முடிகவித்த பகவதிஅம்மை, பூகமர்நிழல் வஞ்சி,
கழியா வரத்தின்மூர்த்தி,
தெரியில் அம்பிகை, அம்பாலிகை, பரமசுந்தரி,
சிறந்த இருநான்கு பெயரும்,
சீர்பெறும் தருமதேவதை என்று உரைத்தனர்
செந்தமிழ்ப் புலமையோரே ! *(14)*

## கங்கை பெயர்

சே :— பகீரதி, சானவி, வரநதி, சுரநதி, திரிபதகை, மந்தாகினி, கங்கை.

பி:—வரநதி, சுரநதி, மந்தாகினி, உமைசுரநதி, தசமுக நதி, சிரநதி. தெய்வநதி, கங்காநதி.

சூ:— வரநதி, மந்தாகினி, திரிபாதகை, சுரநதி, சானவி. பகீரதி, கங்கை.

க:— கங்கை, மந்தாகினி, சானவி, வானதி, பாகீரதி, விமலை, இசைசுரசிந்து. வரநதி, திரிபதை.

## காடுகாள் பெயர்

சே:— காடுகாள், மோடி, காரிதாய், கொற்றி, மாரி. சூரி, வடுகி. மூதணங்கு.

பி:— மோடி, காரிதாய், கொற்றி, மாரி, சூரி, வடுகி, மூதணங்கு, காடுகாள்.

சூ.— மூதணங்கு, மோடி, கொற்றி, சூரி, வடுகி, மாரி, வடுகன்றாய்.

க:— கொற்றி, வடுகி, கொடுமோடி, காடுகாள், சூளி, இனமுற்றுமயில், சூரி, காரிதாய், மாரி.

## தருமதேவதையின் பெயர்

சே:—

பி:— மரகதவல்லி, பூகநிழலினள், பரமசுந்தரி,இயக்கி, பகவதி, அருகனைத்தரித்தாள், அறத்தின்செல்வி, அம்பாலிகை, தருமதேவதை.

சூ:— மரகதவல்லி, பூகநிழலுற்றவஞ்சி, பரமசுந்தரி, இயக்கி, பகவதி, அம்மை, அருகனைமுடிதரித்தாள், அம்பிகை,அறத்தின்செல்வி, அம்பாலிகை,தருமதேவதை.

**காளியின் பெயர், இடாகினியின் பெயர், காளியின் ஏவற் பெண்ணின் பெயர்.**

தாருகவி நாசினி கௌரிகௌ மாரிசா
முண்டிசண் டிகைகுண்டலினி,
சாமளி மதகிகங் காளிவே தாளிமா
தங்கிமா லினியோகினி,
சூரியெண் டோளிமுக் கண்ணிமா தரிவீரி
சூலிபயி ரவியாமளை,
சொல்லரிய சிங்கவா கனிவல் லணங்கையை
தோன்றுமல கைக்கொடியினாள்,
ஏருலவு தேவிபத் திரைமாயை காளிபெய
ரிருபதிற் றேழுவலவை,
யேற்றசூர் மகள்மிக்க மாயவ ளொருமூன்
றிடாகினிப் பெயர்கன்மினி,
தாருலவு வஞ்சப்பெண் ணோரிரண் டேகாளி
தன்னேவல் செய்யுமவள்பேர்
தகுமென்று நாடிப்ப குத்தேவ குத்தனர்கள்
தண்டமிழ்ப் புலமையோரே! 15

* தாருகவிநாசினி. கௌரி, கௌமாரி,
சாமுண்டி, சண்டிகை, குண்டலினி,
சாமளி, மதகி, கங்காளி, வேதாளி,
மாதங்கி, மாலினி, யோகினி,
சூரி, எண்தோளி, முக்கண்ணி, மாதரி, வீரி,
சூலி, பயிரவி, யாமளை,
சொல்லரிய சிங்கவாகனி, வல், அணங்கு.
ஐயை, தோன்றும் அலகைக்கொடியினாள்,
ஏர் உலவு தேவி, பத்திரை மாயை, காளிபெயர்
இருபதிற்றுஏழு வலவை,
ஏற்ற சூர்மகள், மிக்கமாயவள், ஓருமுன்று

இடாகினிப்பெயர், சன்மினி,

தார் உலவு வஞ்சப்பெண், ஓர் இரண்டே காளி தன்
ஏவல் செய்யும் அவள் பேர்
தகும் என்று நாடிப்பகுத்தே வகுத்தனர்கள்
தண்டமிழ்ப் புலமையோரே! (15)

## காளியின் பெயர்

சே:— காளி, சூலி, எண்டோளி. தாருகவிநாசினி, மாதரி,வீரி,கௌரி,முக்கண்ணி. பைரவி. குமாரி, சாமுண்டி, சண்டிகை, யோகினி, வேதாளி, யாமளை. மாகாளி

பி:— மாகாளி, குமரி, சண்டிகை, குண்டலி நீலி, வலவை, பைரவி, கௌமாரி, மாதரி, மாயை, வீரி. மதங்கி. யாமளை, சூரி, வேதாளி, கங்காளி, யோகினி சூலி, சாமுண்டி, தாரகாரி, ஆரியை, தேவி, வல்லணங்கு,ஐயை, அலகைக்கொடியாள், மாலினி, முக்கண்ணி, பதுமை, எண்டோளி,பத்திரி, ஆரணி, யாளியூர்தி.

சூ :— சூரி, மாலினி, எண்டோளி, சூலி, சண்டிகை, தேவி, வீரி, மாதரி. கங்காளி,வேதாளி, மாதங்கி, தாரகற் செற்றதையல், பைரவி, சிவை, சாமுண்டி, ஆரணி,. வல்லணங்கு, ஐயை, யாமளை, முக்கண்ணி, காளி, அலகைக்கொடியுயர்த்தாள் மதுபதி,ஆளியூர்தி, மாயை யோகினி.

க:—பேரரியூர்தி,பயிரவி,சாமுண்டி,பேய்க்கொடியாள், தாருகற்காய்ந்தாள், யோகினி, வேதாளி, சண்டி, எண்டோட்சூரிலைச்சூலி, கங்காளி, முக்கண்ணி, பேய்க் கூத்துகந்தாள். மாரி, வீரி, தொன்மாகாளி. யாமளி, மாதரி

## இடாகினியின் பெயர்

சே:— வஞ்சனி, மாயவள், வலவை, இடாகினி.

பி:— வஞ்சனி, மாயவள், வலவை. இடாகினி.

சூ:— வலவை, சூர்மகள். மாயவள்.

க:— வலவை, இடாகினி, சண்பனி மாயவள்.

## காளியின் ஏவற்பெண் பெயர்

சே :— சன்மினி, சூர்மகள், யோகினி.

பி: - சன்மினி, சூர்மகள், யோகினி,

சூ:— சன்மினி, வஞ்சப்பெண்.

க:— வஞ்சனி, யோகினி, யாகிரணி.

## துர்க்கையின் பெயர், மூதேவியின் பெயர்.

விந்தைபக வதிகன்னி குமரிநா ராயணி
விமலைபா லைக்கிழத்தி
விசயைகொற் றவைசௌரி கௌரியெண் டோளிவீ
ரச்செல்வி வாள்கைகொண்டாள்
அந்தரிக பாலிசண் டிகைசூலி நீலியா
மினிநெடிய காத்திரி விறல்
ஐயைசெய மகளிருங் கலையூர்தி யொளிர்சக்க
ராயுதிபண் ணைப்பணத்தி
வந்துபொரு மகுடசங் காரிமா ளுக்கிளைய
மாதுசுந் தரிதுர்க்கைபேர்
வகுக்கிலிரு பத்தொன்ப தாங்கலதி தௌவைதுயர்
வைத்திடுங் கொண்டலணங்கு
செந்திருவி னுக்குமூத் தாள்கழுதை வாகினி
சீர்கேடி யேகவேணி,
சிறப்பிலாள் முகடிகாக் கைக்கொடியி னால்கேட்டை
சேட்டைமூ தேவியாமே! 16

*விந்தை, பகவதி, கன்னி குமரி, நாராயணி,
விமலை பாலைக்கிழத்தி.
விசயை, கொற்றவை. சௌரி, கௌரி, எண்தோளி,
வீரச்செல்வி, வாள்கைக்கொண்டாள்.
அந்தரி, கபாலி, சண்டிகை, சூலி, நீலி,
*யாமிநி, நெடிய காத்திரி, விறல்

---

*யாயினி என்றுளது

ஐயை, செயமகள், இரும்கலைஊர்தி, ஒளிர்
சக்கராயுதி, பண்ணம்பணத்தி,
வந்து பொரு மகுட சங்காரி, மாலுக்கிளைய மாது,
சுந்தரி, துர்க்கை பேர்
வகுக்கில் இருபத்து ஒன்பதாம் கலதி, தௌவை,
துயர்வைத்திடுங் கொண்டல் அணங்கு,
செந்திருவினுக்கு மூத்தாள், கழுதைவாகினி,
சீர்கேடி, யேகவேணி
சிறப்பிலாள், முகடி, காக்கைகொடியினாள், கோட்டை
சேட்டை, மூதேவியாமே! (16)

**துர்க்கையின் பெயர்**

சே:—பகவதி, கொற்றவை, ஐயை, கார்த்திகை, கௌரி, துர்க்கை, சூலி, மகிடற்காய்ந்தாள், நீலி, எண்டோளி, *விந்தை, சயமகள், இருங்கலையூர்தி, எழிலரியேறி மேதித்தலைமிசைவிசயை, அந்தரி, மாலுக்கிளையாள் சக்கராயுதி, பாலைக்கிழத்தி, பண்ணம்பணத்தி, நாரணி, கன்னி, குமரி, பகவதி,

பி:— அந்தரி, மகிடற்காய்ந்தாள், ஐயை, * விந்தை, அம்பணத்தி, விசயை, எண்டோளி, மாலுக்கிளையாள், பகவதி, சயமகள், பாலைக்கிழத்தி, வீரச்செல்வி, கௌரி, காத்தியாயனி, சக்கராயுதி, அமரி, குமரி, கலையூர்தி, சமரி, கன்னி. சயை வாட்படையாள், சூலி, ஆரியை, நீலி, சண்டிகை, மேதித்தலைமிசைநின்றாள், கொற்றவை, நாராயணி. துர்க்கை.

சூ.— துர்க்கை, அமரி, எண்டோளி, வெற்றி, அந்தரி, அம்பணத்தி, சமரி, பாலைக்கிழத்தி, சயமகள், வீரச்செல்வி, குமரி, மகிடற்செற்றாள், கொற்றவை, சக்கிரபாணி. விமலை, கலையானத்தி, விசையை, நாரணி, விந்தை.

நீலி, காத்தியாயினி, மேதிச்சென்னி, மிதித்தமெல்லியள், கௌரி, ஐயை, மாலினுக்கிளையநங்கை, பகவதி, வாள் கைக்கொண்டாள், சூலி, சண்டிகை, கன்னி. சுந்தரி.

* விநதா என்ற வடமொழிச்சொல் என்பாருமுளர்.

க:— மாலுக்கிளையாள், மயிடற்பகை, கொற்யவை, ஐயை, வெய்ய நீலத் திருக்கலையூர் சுந்தரி, விந்தை. நீள் விசயை சூலச்செயமகள். ஆரியை, நாரணி, துற்கை, கன்னி, பாலைக்கிழத்தி, திகிரி எண்டோளி, பகவதி,

## மூதேவியின் பெயர்

சே:— சேட்டை, முகடி. தௌவை, கலதி, மூதேவி காக்கைக்கொடியாள், கழுதைவாகனி, கேட்டை, கெடலணங்கு.

பி:— கழுதையூர்தி, காக்கைக்கொடியாள், முகடி, தௌவை கலதி, மூதேவி, சீர்கேடி, கேட்டை, கெடலணங்கு, ஏகவேணி, சேட்டை.

சூ :— சேட்டை, இந்திரைக்கு மூத்தாள், சீர்கேடி, சிறப்பிலாதாள், ஏகவேணி,காகத்துவசமுற்றாள்,கேட்டை. கெடலணங்கு, கழுதைவாகினி, கலதி, தௌவை, முகடி. மூதேவி,

க :— முகடி, தவ்வை, கலதி, கரடக்கொடிமங்கை. வாலேபமூர்பெற்றியாள், கேட்டை, சேட்டை, மூதேவி,

## தெய்வப்பெயர், தானவர் பெயர் மாவலியின் பெயர், வித்யாதரர் பெயர், கந்தருவர் பெயர், பூதகணத்தின் பெயர்.

அணங்குபுத் தேள்கடவுள் சூர்தேவு தெய்வத
மாகுமே தெய்வப்பெயர்
அசுரதர னவுணர்கண் டகர்தைத் தியரா
னதிதிபு தல்வர்தகுவர்
கணஞ்செறிநி சாசரரு மொக்குநிசி சரமிராக்
கதர்நிருத ரோடுசாலக்
கடங்கட ரரக்கர் பிசிதாசனர் நிசாசரர்
கருதுதா னவருமாகும்

வணங்குமா வலியவன் நாமம் வயிரோசனன்.
மருவுவிஞ் சையர்கேசரர்
வைத்யவித் யாதரர் பெயரிரண் டாம்வீணை
வல்லவர்கின் னரர்தந்திரர்
இணங்குகந் திருவர்பெய ராங்கூளி குறள்பா
ரிடஞ்சாத கத்தினுடனே,
எண்ணியகி ருத்திமம் பூதகண மாமென்
றியம்பினர் தமிழ்ப்புலவரே! 17

அணங்கு, புத்தேள், கடவுள், சூர், தேவு, தெய்வதம்,
ஆகுமே தெய்வப்பெயர்,
அசுரதரன், அவுணர், கண்டகர் தைத்தியர், ஆன
அதிதிபுதல்வர், தகுவர்,
கணஞ்செறி, நிசாசரரும். ஒக்கும் நிசிசரர்,
இராக்கதர். நிருதர்—ஓடு சாலக்
கடங்கடர், அரக்கர், பிசிதாசனர், நிசாசரர்,
கருது தானவர்—உம் ஆகும்.
வணங்கும் மாவலியவன் நாமம் வயிரோசனன்,
மருவும் விஞ்சையர், கேசரர்,
வைத்திய வித்தியாதரர் பெயர் இரண்டாம்,
வீணைவல்லவர், கின்னரர், தந்திரர்.
இணங்கு கந்திருவர் பெயராம், கூளி. குறள்,
பாரிடம், சாதகம்-அத்து-இன் உடனே
எண்ணிய கிருத்திமம், பூதகணம் ஆம் என்று
இயம்பினர் தமிழ்ப்புலவரே! (17)

## தெய்வப்பெயர்

சே :—

பி:— சூர்: அணங்கு, கடவுள், தெய்வதம், தே, புத்தேன், இயவுள், தெய்வம்,

சூ :— அணங்கு,புத்தேள்,சூர்,கடவுள், தே, தெய்வதம், தெய்வம்.

க :—

## தானவர் பெயர்

சே:— தாருவர், அவுணர், தருவர், தைத்தியர், நிசாசரர், அசுரர்·

பி:— தானவர், அவுணர், தயித்தியர், கண்டகர், மேனிகரப்போர், தருவர், கார்வண்ணர், தேவர்பகைவர், திதிபுதல்வர், அசுரர்.

சூ :—தானவர்,அவுணர், தைத்தியர், திதியின்மைந்தர், நிசாசரர், அசுரர்!

க:— கடவுளர். தெய்வர், தருவர், தயித்தியர், காரவுணர். திதிபுத்திரர். தானவர், பூகண்டகர், அசுரர்.

## இராக்கதர் பெயர்

சே :— அரக்கர், இராக்கதர், நிசாசரர், நிருதர், சாலகடங்கடர், பிசிதாசனர், யாதுதானவர்,

பி:— நிசாசரர், சாலகடங்கடர், இராக்கதர், யாது தானவர், பிசிதாசனர், நிருதர்,

சூ :— நிருதர், பிசிதவூணர், நிசாசரர், அரக்கர், சாலகடங்கடர், இராக்கதர்.

க:— நிருதர், நிசாசரர், பிசிதாசனர், பார்க்கிடர் செய்பவர், யாதுதானர், அரக்கர், இராக்கதர்.

## மாவலியின் பெயர்

சே:— வைரோசனன், மாவலி, அவுணன்,

பி :— வயிரோசனன். மாவலி, அவுணன்.

சூ :—

க :—

## வித்தியாதரர் பெயர்

சே:— விஞ்சையர், கேசரர், வித்தியாதரர்.

பி:— விஞ்சையர், கேசரர், வித்தியாதரர்.

சூ:— விஞ்சையர். வித்தியாதரர், கோசரர்.

க:— விஞ்சையர். *கோசரர், விச்சாதரர்.

## கந்தருவர் பெயர்

சே:—தந்திரர், கின்னரர், விணைவல்லவர், கந்திருவர்

பி:— இயக்கர், யாழோர், காந்தருவர். தந்திரர், கின்னரர், கந்தருவர்.

சூ:— யாழவல்லோர், காந்தருவர், கின்னரர், கந்தருவர்.

க:— பண் இதந்தருகின்னரர், வீணையர். தந்திரர். காந்திருவர்.

## பூதகணத்தின் பெயர்

சே:— சாதகம், கிருத்திமம், குறள், கூளி, பாரிடம். பூதகணம்.

பி:— சாதகம், பாரிடம், குறள், கூளி. சாரதம் மகோதரம், கிருத்திமம். கணம், பூதம்.

சூ:— குறள், கிருத்திமம், கூளி, பாரிடம்சாதகம், பூதம்,

க:— கிருத்திமம், சாரதம். மாகோதரம், குறள், கூளி, பாரிடம், பூதகணம்.

## பேயின் பெயர், பதின்காற்றின் பெயர்

**கடிகூளி மயன்மருள் சோகுவே தாளம்**
**கணம்பி ரேதகணங்கு**
**கழுதுவெறி பாசம் வியந்தர மண்ணையல**
**கையினோடு பசாசுசாவு,**

---

*மற்றைய மூன்று நூல்களிலும் கேசரர் என்பவற்றின் வேறுபாடு காண்க.

நெடியகுண பாசியழ னோடுபத் தொன்பது
நிகழ்த்திடும் பேயின்பெயர்
நீட்டலுமு டக்கலுந் தருநாகன் மூக்கினிடை
நின்றுதும் மலும்வெம்மையும்,
கொடியசின *முதுதருங் கிருதர னிமைத்தலுங்
குலவுரோ மம்புளகமும்,
கொடுத்திடுங் கூர்மனோட் டமுமிளைப் புந்தருங்
கோதிலாத் தேவதத்தன்,
தொடுகந்த ரச்சுழிச் சந்திடைச் சமானன்
துலங்குந் துயிலுதானன்,
சொல்லுமித யத்துட் பிராணன் னபானன்
நிலை சொற்ற புச்சலத்தே! 18

*கடி, கூளி, மயல், மருள், சோகு, வேதாளம்,
கணம், பிரேதம், கணங்கு,
கழுது, வெறி, பாசம், வியந்தரம், மண்ணை,
அலகை-இன்-ஒடு, பசாசு, சாவு,
நெடிய குணபாசி, அழன்-ஒடு பத்தொன்பது
நிகழ்த்திடும் பேயின் பெயர்.
நீட்டலும் முடக்கலும் தரு நாகன், மூக்கினிடை
நின்று தும்மலும் வெம்மையும்
கொடிய†சினமும் தரும் கிருதரன், இமைத்தலும்
குலவு ரோமம் புளகமும்
கொடுத்திடும் கூர்மன் ஓட்டமும் இளைப்பும்
தரும் கோதிலாத் தேவதத்தன்,
தொடுகந்தரச் சுழிச் சந்திடைச் சமானன்,
துலங்கும் துயில் உதானன்,
சொல்லும் இதயத்துள் பிராணன், அபானன்,
நிலைசொற்ற புச்சலத்தே! 18

---

* முந்தருங்—என்றிருத்தல் வேண்டும்.

† சினமுது—என்றுளது.

### பேயின் பெயர்

சே:— கழுது, சோகு, கடி, கணம், மண்ணை, அலகை, கூளி, பிசாசு, வேதாளம், பிரேதம், சாவு, குணபாசி, பேய்.

பி:— கடி, வேதாளம், கழுது, கூளி, வெறி, அலகை, பிசாசு, மண்ணை, மயல், சோகு, மருள், வியந்தரம், பிரேதம், அழன், குணங்கு, குணபாசி, பாசம், சாவு, சவம், அள்ளை, குணபம், பிணம், பேய்.

சூ:— பிரேதம், வேதாளம், வெறி, மயல், பிசாசம், பாசம், வியந்தரம், மண்ணை, சோகு, கழுது, கூளி, அலகை, கடி, சாவு, பேய்.

க:— கணங்கடி, கூளி, அலகை, வேதாளம்,கழுது, மண்ணை, பிணங்கவர்,சோகு, பசாசு,குணபாசி,பேய்,

### பதின்காற்றின் பெயா

சே:—

பி:— பிராணன், அபானன்,உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்செயன்.

இருதயத்தியங்குவது — பிராணன்.
உச்சலத்தில் நிற்பது — அபானன்.
நாபியில் நிலைபெற்று நிற்பது — உதானன்,
சரீரம் முழுதும் வியாபித்து நிற்பது — வியானன்.
கந்தரசக்குழியில் சந்திடை நிற்பது — சமானன்.
முடக்கலும் நீட்டலும் இளக்கலும் செய்விப்பது— நாகன்.
உரோமம் புளகித்து இமைப்பது – கூர்மன்.
முகத்திடை நின்று தும்மலும், சினமும் வெம்மையும் விளைப்பது } — கிருகரன்.
ஓட்டமும்,இளைப்பும்,வியர்த்தலும் விளைப்பது— தேவதத்தன்.

உயிர்களிடத்து நீங்காத அன்பினை
யுடைய நல்லவரோடு கொண்ட
நட்பால் உயிர் போகினும் போகாது
உடலினை வீக்கித் தலைகிழித்தகல்வது } — தனஞ்செயன்.

தூ:—

க:—

## பதின்காற்றின் பெயர் (தொடர்ச்சி), ஐந்து அக்கினியின் பெயர், முத்தீப்பெயர், தழலிறைப்பெயர், காற்றின் பொதுப் பெயர், சிறப்புப்பெயர்.

இருந்திடும் வியானனுட லெங்கும்வியா பித்திடும்
இயம்பிய தனஞ்செயனும்,
எங்குமூ தப்பணித் தலைபிளந் தேகுமிவை
ஈரைந்து காற்றின்பெயர்
விரிந்ததூ மம்கார கந்தீவ னஞ்சடம்
வெகுளிபஞ் சாகினிப்பேர்.
விளம்பரிய தெக்கணாக் கினியாக வன்னீயம்
வீறுகா ருகபத்தியம்,
திருந்துமுத் தீப்பெயர். சுவாலனே கரியோன்
சிறப்புடைய தூமகேது,
தீபவதி வாயுசுகன் வீதிகோத் திரன்மிக்க
செந்தழற் கிறைவன்பெயர்,
பரந்தசு னன்னாசு கன்சல னன்ப
மானனே பிரபஞ்சனன்,
பற்றுகா லிலிசம ரஞ்சமீ ரணன்வலி
பரிசனங் கம்பமுடனே! 19

*இருந்திடும் வியானன், உடல் எங்கும் வியாபித்திடும்
இயம்பிய தனஞ்செயன்-உம்
எங்கும் ஊதப் பணித் தலைபிளந்து ஏகும். இவை
ஈர்ஐந்து காற்றின் பெயர்.
விரிந்த தூமம், காரகம், தீவனம், சடம், வெகுளி
பஞ்ச அக்கினிப்பேர்.

விளம்ப அரிய தெக்கணாக்கினி, ஆகவன்னீயம்,
வீறு காருகபத்தியம்,
திருந்து முத் தீப்பெயர் சுவாலன்-ஏ, கரியோன்,
சிறப்புடைய தூமகேது,
தீபவதி, வாயுசுகன், வீதி கோத்திரன், மிக்க
செந்தழற்கு இறைவன் பெயர்.

பரந்த சுனன், ஆசுகன், சலனன்,
பமானன்—, ஏ, பிரபஞ்சனன்,
பற்று காலிலி. †சமரம், சமீரணன், வலி,
பரிசனம், கம்பம், உடனே! 19

ஐந்து அக்கினியின் பெயர்

சே:—

பி:—

சூ:— வடவை, தீத்திரள், மடங்கல், வடவா முகம், கடையனல்.

க:— வெகுளி, பழதஞ் சிவம்,காலம்,காமம்,சடம்

முத்தீப்பெயர்

சே:—

பி:— காருகபத்தியம், ஆகவனீயம், தக்கணாக்கனியம்.

சூ:— காருகபத்தியம்,தக்கணாக்கினி,ஆகவனீயம்.

க:—

**காற்றின் பொதுப் பெயர், சிறப்புப்பெயர்**

வாதம்வளி காலுலவை மாருதம ருத்துமால்
வாடையொலி கோடைபவனம்,
வாங்கூழ ரிக்கோதை யூதையனி லங்கொண்டல்
வாயுமால் பிலனுயிர்ப்பு,
கூதிருல வியர்மூல் வேற்றஞ்ச தாகதி
குறித்தகாற் றேழைந்துபேர்.

---

†சமீரம்

கோடைமேல் காற்றினொடு கொண்டல்கீழ்க் காற்றென்பர்.
கூதிரு டனூதையிருபேர்,
தீதிலாக் குளிர்பனிக் காற்றென்பர் வாடையும்
வடந்தையும் செப்பிடுங்காற்
றிகழும்வட காற்றென்பர். மலையானி லந்தென்றல்
சிறுகால் வசந்தனுடனே
ஓதுமந் தாநிலந் தென்றலின் பெயரென்பர்.
உயர்சூறை வளிசாரிகை
யோங்குசுழல் காற்றுவரு சூறையின் பெயரென்
றுரைத்தனர் தமிழ்ப்புலவரே!

*வாதம், வளி, கால், உலவை, மாருதம், மருத்து, மால், வாடை, ஒலி, கோடை, பவனம, வாங்கூழ், அரி, கோதை, ஊதை, அநிலம், கொண்டல், வாயு, மால் பிலன், உயிர்ப்பு, கூதிர், உலவிய நீழல், வேற்றம், சதாகதி, குறித்த காற்று ஏழ் ஐந்து பேர், கோடை மேல்காற்று-இன்-ஒடு, கொண்டல் கீழ்க்காற்று என்பர். கூதிர் உடன் ஊதை இருபேர் தீது இலாக் குளிர் பனிக்காற்று என்பர். வாடையும், வடந்தையும் செப்பிடுங்கால் திகழும் வடகாற்று என்பர். மலையாநிலம், தென்றல், சிறுகால், வசந்தன்—உடனே ஓதும்மந்தாநிலம், தென்றலின் பெயர் என்பர். உயர் சூறைவளி சாரிகை ஓங்கு சுழல்காற்று வரு சூறையின் பெயர் என்று உரைத்தனர் தமிழ்ப்புலவரே! 20

### காற்றின் பெயர்

சே:— வாதம், கூதிர், வங்கூழ், கால், வளி, ஊதை, அனிலம், கோதை, நீழல், உலவை, மாருதம்,

மருத்து, புவனம், வாடை, ஒலி, கூதை, உயிர்ப்பு, வேற்றலம், கொண்டல், கோடை.

பி:— அநிலம், வங்கூழ், அரி, பவமானன், சமீரணன், மருத்து, சதாகதி, சலனன், வாடை, வளி, மாருதம், வாயு, கோதை, வாதம், கூதை, வேற்றலம். கால், ஒலி, பவனம், உயிர், கந்தவாகன், பிரபஞ்சனன், மாபலன், பரிசனன், ஆசுகன், கந்தவகன், ஊதை, காலிலி, விண்டு, நீளை, வந்து, உலவை, கொண்டல், கோடை, நீல், மால், நிழலி, உயிர்ப்பு, கூதிர்.

தி:— வாதம், கால், வளி, மருத்து, வாடை, பவனம், வாயு, கூதிர், மாருதம், மால், கோதை, கொண்டல், உலவை, கோடை, ஊதை, வங்கூழ், ஒலி, சதாகதி, உயிர்ப்பு, அரி, கந்தவாகலன், பிரபஞ்சனன், சலனன்.

க:— ஒலி, உயிர், வாதம், வளி, மாருதம், வெற்றம், ஊதை, கொண்டல், சலனன், பவனன், அரி, நீழை, நீல், மால், பரிசனன், மாபெலன், மருத்து, ஆசுகன். கோதை, அனிலன், பிரபஞ்சனன், பவமானன், கால், கூதிர், வங்கூழ், காற்று, வாயு

**மேல் காற்றின் பெயர்**

சே:— கோடை

பி:— கோடை

தி:— கோடை

க:— கோடை

**கீழ்காற்றின பெயர்**

சே:— கொண்டல்

பி:— கொண்டல்

தி:— கொண்டல்

க:— கொண்டல்

### பனிக்காற்றின் பெயர்

சே:— கூதிர், ஊதை, குளிர்.

பி:— கூதிர், ஊதை, குளிர்.

சூ:— கூதிர், ஊதை, குளிர்.

க:— கூதிர், ஊதை, குளிர்.

### வடகாற்றின் பெயர்

சே — வாடை, வடந்தை.

பி:— வாடை, வடந்தை.

சூ — வாடை வடந்தை.

க:— வாடை, வடந்தை.

### தென்றலின் பெயர்

சே:— மந்தாநிலம். மலையக்கால், தென்கால், வசந்தன்.

பி:— மந்தாநிலம், மலையக்கால், தென்கால், வசந்தன்.

சூ:— தென்கால், சிறுகால், தென்றி, மலயக்கால், வசந்தன்.

க:— வயந்தன், மலையக்கால், மந்தாநிலம், தென்றல்.

### சுழல் காற்றின் பெயர்

சே:— சாரிகை, சூறை.

பி:— சூறை, வளி, சூறாவளி, சாரிகை.

சூ:— சாரிகை, சூறை.

க:—

## நெருப்பின் பொதுப் பெயர், சிறப்புப்பெயர், விளக்கின் பெயர், தீக்கடைகோலின் பெயர் தீப்பொறிப்பெயர்

தீவசுத் தழல்வன்னி யெரியுதா சனன்வன்னி
சித்திரபா னுச்சுகியனல்
சிகியரி கனற்கனலி யங்கியங் காரகன்
செஞ்சுடர்த எஞ்செயனழல்

பாவகன் சாதவே தாஞெகிழி தேயுவிறை
பார்வையொளி தகனனெழுநாப்
பாயுமச வாகன னாரல்சேர்ந் தார்க்கொல்லி
பரவுதென கீழ்த்திசைக்கோன்
மேவுகாற் றின்கருத் தபனன்முப் பதின்மூன்றும்
வீறுளநெ ருப்பின்பெயர்
மிக்கதா வங்காட்டெரிப்பெய ருற்கையே
மிகுமனற் றிரளின்பெயர்
தீவிகை தீபமொளி சுடர்விளக் கின்பெயர்
சிறந்ததீக் கடைக்கோற்பெயர்
செப்பிடி லரணி *ஞெலி கோலிரண் டாந்தீப்
பொறிப்பெயர் புலிங்கமாமே! 21

* தீ, வசு, தழல், வன்னி, எரி, உதாசனன்,
சித்திரபானு சுசி, அனல்,
சிகி, அரி, கனல், கனலி, அங்கி, அங்காரகன்,
செஞ்சுடர், தனஞ்சயன், அழல்,
பாவகன், சாதவேதா, ஞெகிழி, தேயு, இறை
பார்வையொளி, எழுநா,
பாயு, மசவாகனன், ஆரல், சேர்ந்தார்க்கொல்லி,
பரவு தென்கீழ்த்திசைக்கோன்,
மேவு காற்றின்கரு, தபனன், முப்பதின் மூன்றும்
வீறு உள நெருப்பின் பெயர்.
மிக்க தாவம்காட்டு எரிப்பெயர் உற்கை-ஏ
மிகும் அனல்திரளின் பெயர்.
தீவிகை,தீபம்,ஒளி,சுடர் விளக்கின் பெயர்
சிறந்த தீக்கடைகோல் பெயர்
செப்பிடில் அரணி, ஞெலிகோல் இரண்டாம்.
தீப்பொறிப் பெயர் புலிங்கம் ஆமே!

---

*னொலிகோலி என்றுளது.

## நெருப்பின் பொதுப்பெயர்

**சே:—** அழல், அங்காரகன், அங்கி, கனலி, எரி, தழல், தபனன், பாவகன், தீ, அனல், செஞ்சுடர்ப் பாவகன், ஞெகிழி, உதாசனன், உதவகன், தனஞ்சயன், வசு, எழுநா, அரி, தென்கீழ்த்திசையோன், வன்னி, தேயு.

**பி:—** அழல், உதாசனன், அங்கி, தேயு, தழல், வசு, உதகவன், தனஞ்சயன், தழலி, கனலி, எழுநா, அனலி, முளரி, அனல், எரி, அழலி, கனல், அரி, கருநெறி, சுசி, ஒளி, தபனன், சுடர், சுகி, சோதி, தூமகேது, வன்னி, சுவலன், பாவகன், சித்திரபானு, அங்காரகன், ஞெகிழி, தீ, ஆரல்.

**சூ:—** அரி, வசு, தகனன், அங்கி, அனல், அயவாகனன், தீ, எரி, சுசி, சுகி, ஆரல், காற்றின் சகாயன், கருநெறி, கனலி, அங்காரகன், சித்திரபானு, தழல், உதாசனன், தனஞ்செயன், சாதவேதா, முளரி, தென்கீழ்த்திசையிறை, சேர்ந்தாற்கொல்லி, எழுநா. வன்னி, பாவகன், தேயு, சுடர், அழல், ஞெகிழி.

**க:—** உதாசனன், அங்கி, அங்காரகன், சோதி, வசு, வதி அனல், பாவகன், தென்கிழக்கோன், சுசி, வன்னி, கனல், அதர்கரியோன், சித்திரபானு, சாதவேதா, அரி, அர்ச்சிதன், எரி, வாயுசகன், தூமகேது, சுகி, தழல்.

## காட்டழலின் பெயர்

**சே:—** தாவம், காட்டெரி.

**பி:—** தாவம், வரையனல், காட்டெரி.

**சூ:—** தாவம்.

**க:—**

### அனல் திரளின் பெயர்

சே: – உற்கம், அனற்றிரள்.

பி: உற்கம்.

சூ:— உற்கை(இதுவிண்வீழ் கொள்ளியின் பெயர் என்றுளது).

க: –

### விளக்கின் பெயர்

சே: - தீபம், சுடர்.

பி: – சுடர், தீபம், ஒளி.

சூ:— தீவிகை, தீபம், சுடர், ஒளி.

க: –

### தீக்கடைக்கோற் பெயர்

சே:— அரணி, ஞெலிகோல்,

பி:— அரணி, ஞெலிகோல், ஞெகிழி.

சூ:— ஞெலிகோல்.

க: -

### தீப்பொறியின் பெயர்

சே:— புலிங்கம்

பி:— புலிங்கம்

சூ:— புலிங்கம்

க:—

### நறும்புகையின் பெயர், வெண்புகையின் பெயர், தீத்திரளின் பெயர், தீக்கடவுளின் பெயர், அவர் மனைவியின் பெயர், கரி, சாம்பல் கடைங்கொள்ளி யாகத்தீ இவற்றின் பெயர்

**வெடிநறைக் குய்யென மொழிந்தவொரு மூன்றுமே**
**மிகுநறும் புகையின்பெயர்**

**மிக்கதூ மந்தூப மாவியரி நான்குமே**
**வெண்புகைப் பெயர்கடையனல்**
**வடவையூ ழித்தீம டங்கல்வட வாமுகம்**
**வடவான லந்தீத்திரள்.**
**வடவாமு காக்கினியோ ரெழுபெயர் பாவகன்**
**வகுத்ததீக் கடவுட்பெயர்.**
**கடவுள்மனை யாள்சுதை சுவாகாவெ னும்பெயர்**
**கனலொழுங் கதுசுவாலை**
**கந்துள்ளி ருந்தையசி நல்லமொரு நான்குமே,**
**கரிபூதி யுடன்வெண்பலி**
**அடலைசாம் பற்பெயர் ஞெகிழியிந் தனமுளரி**
**யலாதமுட னுற்கையைந்தும்**
**ஆங்கடைக் கொள்ளியிந் தனஞெகிழி யிடுகல**
**மக்கியிட் டமுமாகுமே!** (22)

*வெடி, நறை, குய் என மொழிந்த ஒரு மூன்றுமே
மிகு நறும்புகையின் பெயர்.
மிக்க தூமம் தூபம், ஆவி, அரி, நான்குமே
வெண்புகைப் பெயர். கடையனல்,
வடவை, ஊழித்தீ, மடங்கல், வடவாமுகம்
வடவானலம், தீத்திரள்,
வடவாமுகாக்கினி-ஒடு எழுபெயர். பாவகன்,
வகுத்த தீக்கடவுள் பெயர்.
கடவுள் மனையாள் சுதை, சுவாகா எனும் பெயர்.
கனல் ஒழுங்கு அது சுவாலை
கந்துள், இருந்தை, அசி, நல்லம் ஒரு நான்குமே
கரி, பூதி-உடன், வெண்பலி,
அடலை சாம்பல் பெயர். ஞெகிழி, இந்தனம், முளரி,
அலாதம்-உடன் உற்கை ஐந்தும்,
ஆம் கடைக்கொள்ளி. இந்தனம் ஞெகிழி இடுகலம்
அக்கி இட்டம்-உம் ஆகுமே! (22)

**நறும்புகையின் பெயர்**

**சே:—**

**பி:—** நறை, குய், வெடி.

**சூ:—** வெடி, நறை, குய்.

**க:—**

**வெண்புகையின் பெயர்**

**சே:—**

**பி:—** தூமம், அரி, தூபம், ஆவி.

**சூ:—** ஆவி, தூபம், தூமம், அரி.

**க:—**

**தீத்திரள் பெயர்**

**சே:—** உத்தரம், மடங்கல், ஊழித்தீ, கடையனல், வடவாமுகம்.

**பி:—** வடவை, தீத்திரள், மடங்கல், ஊழித்தீ, கடையனல், உத்தரம்

**சூ:—** வடவை, தீத்திரள், மடங்கல், வடவாமுகம் கடையனல்.

**க:—** வாடவம், மடங்கல், உழலும் வடவை கடையனல், ஊழியனல்.

**தீக்கடவுள் பெயர்**

**சே:—** பாவகன்

**பி:—** சாதவேதா, மைவாகனன், தீபதி, சித்திரபானு, தனஞ்செயன், தென்கீழ்த்திசையோன், தேயு, பாவகன்.

**சூ:—** பாவகன்.

**க:—**

**கனலொழுங்கின் பெயர்**

**சே:—**

**பி:—**

சூ:— சுவாலை

க: —

### கரியின் பெயர்

சே —

பி:

சூ:

க:—

### சாம்பலின் பெயர்

சே:—

பி:

சூ:—

க: —

### கடைக்கொள்ளியின் பெயர்

தீத்திரள் நோக்குக.

### வேள்வித்தீயின் பெயர்

சே:—

பி:—

சூ:—

க:—

### புனலின்பெயர், புனற்கு அரசன் வாகனத்தின் பெயர்

அயஞ்சலம் பாணியுத கஞ்சலில மம்புத
மப்புக்க வந்தம்புனல்
அளகமமு தங்காண்ட நாரநீ ரந்தோய
மாலம்வரு ணஞ்சீவனம்
பயம்புட்க ரங்கமலம் வார்வனம் புவனமழை
பயசு*கஞ் சம்பரங்கோப்

---

*சஞ் என்றுள்ளது.

**பானியம் வாரியறல், கீலாலஞ் சீரகம்**
**பரந்திடும் சீதமேகம்**
**வயஞ்சிந்து கனவிரத மாரி*யா லாலமுடன்**
**வளர்கீல மிதடிசீவன்**
**மயங்கயந் தடாமுக மேழேழு மொன்றுமே**
**மாற்றரிய நீரின்பெயர்;**
**இயம்புபா தங்கச மென்பது மதன்பெய**
**ரிரும்புனற் கரசனேறு**
**மெழிலான வாகன மகரமா மென்றே**
**யிசைத்தனர் தமிழ்ப்புலவரே!** (23)

*அயம், சலம், பாணி, உதகம், சலிலம், அம்புதம்,
அப்பு, கவந்தம், புனல்,
அளகம் அமுதம், காண்டம், நாரம், நீரம், தோயம்
ஆலம், வருணம், சீவனம்,
பயம், புட்கரம், கமலம், வார், வனம், புவனம் மழை,
பயசு, கம், சம்பரம், கோ,
பானியம், வாரி. அறல், கீலாலம், சீகரம்,
பரந்திடும் சீதம், மேகம்,
வயம், சிந்து, கனவிரதம், மாரி*, ஆலாலம், உடன்
வளர் கீல், அமிது, அடி, சீவன்,
மயம், கயம், தடாமுகம், ஏழேழும் ஒன்றுமே
மாற்ற அரிய நீரின் பெயர்;
இயம்பு பாதம், கசம் என்பதும் அதன் பெயர்.
இரும் புனற்கு அரசன் ஏறும்
எழிலான வாகனம் மகரம் ஆம் என்றே
இசைத்தனர் தமிழ்ப்புலவரே! (23)

---

*—? * ?

## புனலின் பெயர்

**சே:—** அறல், புனல், அப்பு, பாணி, உதகம், கமலம், அமுதம், கவந்தம், பயம், சலிலம், அயம், அளகம், புவனம், வனம், கோ, கீலாலம், காண்டம், தோயம், நாரம், நீர், நீத்தம், பிரளயம், வாரி, வெள்ளம்.

**பி: —** ஆலம், சலம், அம் அறல், பாணி, அப்பு, பயம் உதகம், வயம், அயம், வாரி, விகடி, புனல், சலிலம், புவனம், அளகம், சீவனம், பானீயம், சிந்து, ஆம், குசம், வருணம், அம்பு, மழை, கவந்தம், கீலாலம், மேகம், அகிலம், இதடி, நீரம், தோயம், வார், பதம், கார், மாரி, கமலம், பயசு, கயம், சம்பரம், கம், புட்கரம், சீதம், வசி, கோ, காண்டம், கனவிரதம், சீவனீயம், அலர், நாரம், அமுது.

**சூ: —** வாரி, ஆலம், கீலாலம், மழையலர், கமலம், காண்டம், நீரம், புட்கரம், சிந்து, புனல், சலிலம், பாணி, கார், அறல், புவனம், நாரம், கனவிரதம், கவந்தம், மாரி, அம்பு, உதம், அப்பு, வருணம், சீவனம், வனம், வார், பயம், மழை, உதகம், தோயம் பயசு, சம்பரம், பானீயம், வயம், சீவனீயம், தீர்த்தம், கீரம், சீதம், அயம், அளகம், ஆம், அம், அமுதம், கம், சலம்.

**க: —** வனம், உதகம், தோயம், அப்பு, அம்பு, வாரி, வருணம், அம், ஆம், கனம், அலர், கீலாலம், நாரம், கவந்தம், கமலம், அயம், புனல், அறல், நீரம், சலிலம், கிலம், அமுதம், புவனம் கனவிரதம், சீவனம், சீவனீயம், கம், காண்டம், காணும் குசம், சம்பரம், தீர்த்தம், வார், புட்கரம், பாணி, சலம், பயம், நீர், கோ, முகில், பானீயம், அளகம், பிரவாகம், நீத்தம், பிரளையம், வாரி, வெள்ளம்.

### புனற்கு அரசன் வாகனத்தின் பெயர்

**சே:—**

**பி:—**

சூ:—

க: -

## சூரியன் பெயர்

அருணனுத யன்பதங் கன்சுட ரவன்மித்திர
னாதித்தன் முளரிநண்பன்
அருக்கன்மார்த் தாண்டன் விரோசனன். விருச்சிக
னாயிரங் கதிரோன்வெய்யோன்
விரவியதி வாகரன் பாற்கரன் சண்டன்
விளங்குதின கரனாதவன்
வேந்தனெழு பரியினன் பகலவன் சான்றோன்
வியத்தனீ டபனனொளியோன்
பரிதிவிண் மணியிரவி யெல்லையென் றூழ்பனிப்
பகைதரணி யலரிசவிதாப்
பானுவெஞ் சுடர்கனலி யனலியிருள் வலிசோதி
பகரண்ட யோனியெல்லு
தெரிபொழுது மாலிசா யாபதி திமிராரி
செங்கதிர் மாண்ஞாயிறு
திகழரியி னன்சூர னைம்பத்தி ரண்டும்
சிறந்தசூ ரியனாமமே! (24)

*அருணன், உதயன், பதங்கன், சுடரவன், மித்திரன்,
ஆதித்தன், முளரிநண்பன்,
அருக்கன், மார்த்தாண்டன், விரோசனன், விருச்சிகன்,
ஆயிரம்கதிரோன், வெய்யோன்,
விரவிய திவாகரன், பாற்கரன், சண்டன்,
விளங்கு தினகரன், ஆதவன்,
வேந்தன், எழுபரியினன், பகலவன், சான்றோன்,
வியத்தன், நீள் தபனன்,
பரிதி, விண்மணி, இரவி, எல்லை, என்றூழ்,
பனிப்பகை, தரணி, அலரி, சவிதா,

பானு, வெஞ்சுடர், கனலி, அனலி, இருள்வலி,
சோதி,
பகர், அண்டயோனி, எல்லு,
தெரி-பொழுது, மாலி, சாயாபதி, திமிராரி,
செங்கதிர், மாண் ஞாயிறு,
திகழ் அரி, இனன், சூரன், ஐம்பத்து இரண்டும்'
சிறந்த சூரியன் நாமமே! (24)

**சே:—** வெய்யோன், இருள்வலி, பதங்கன், சூரியன், சுடரவன், தரணி, உதயன், ஆதவன், எல்லை, மார்த்தாண்டன், தினகரன், பனிப்பகை, பரிதி, செங்கதிர், அலரி, பாநு, வெஞ்சுடர், கிரணன், பகலவன், வேந்தன், ஆயிரங்கதிரோன், அழலவன், திவாகரன், இரவி, பாற்கரன், என்றூழ், அருணன், ஆதித்தன், கனலி, ஞாயிறு, விரிச்சிகன், சான்றோன், அரி, தபனன், அருக்கன்.

**பி:—** இரவி, இனன், மணி, என்றூழ், செஞ்சுடர், பரிதி, தேரோன், எல்லோன், பானு, சண்டன், அருக்கன், தபனன், ஆதவன், அண்டயோனி, ஆயிரங் கதிரோன், கனலி, திவாகரன், கனலோன், பாற்கரன், அணலி, ஒளியோன், அலரி, மார்த்தாண்டன், தின கரன், செங்கதிர், அரி, திமிராரி, அருணன், சூரன், ஞாயிறு, சவிதா, பகல், பர்க்கன், வெயிலோன், ஆதித்தன், விரிச்சிகன், விரோசனன், விகர்த்தனன், மித்திரன், வெய்யோன், கதிரோன், வெஞ்சுடர், சோதி, பகலவன், எல்லை, பதங்கன், ஆதவன், அழலவன், உதயன், இருள்வலி, பொழுது, பகவன், சான்றோன், வேந்தன், தாபநன், தரணி, எல்லி, சாயாபதி, பகலோன், விண்மணி, பனிப்பகை, கதிரவன், சுடரோன், மாலி, சூரியன்.

சூ:— பருதி, பாற்கரன், ஆதித்தன், பனிப்பகை, சுடர், பதங்கன், இருள்வலி, சவிதா, சூரன், எல், மார்த்தாண்டன், என்றூழ், அருணன், ஆதவன் மித்திரன், ஆயிரஞ்சோதியுள்ளோன், தரணி, செங் கதிரோன், சண்டன், தபனன், ஒளி, சான்றோன், அனலி, அரி, பானு, அலரி, அண்டயோனி, கனலி, விகர்த்தனன், கதிரவன், பகலோன், வெய்யோன், தினகரன், பகல், சோதி, திவாகரன், அரியமா, இனன், உதயன், ஞாயிறு, எல்லை, கிரணமாலி, ஏழ்பரியோன், வேந்தன், விரிச்-சிகன், விரோசனன், இரவி, விண்மணி, அருக்கன்.

க:— பங்கயநாதன், பாற்கரன், சாயாபதி, பதங் கன், செங்கதிர், சூரியன், ஆதித்தன், மார்த்தாண்டன், அருக்கன், அரி, பானு, உதையன், திவாகரன், போது, அருணன், இரவி, தரணி, அலரி, தபனன்.

## சந்திரன் பெயர், வீண்மீனின் பெயர்

**அலவன்கு பேரன்சுதா கரனிசா சரனம்**
**புலிக ளங்கன்சசி,**
**யமுதகிர ணன்குமுத நண்பனுடு பதிசோம**
**னாலோன்கு ரங்கியல்லோன்**
**நிலவுதா னவனிந்து வேந்தன்மதி கலையோனி**
**சாபதி விதுத்தண்சுடர்,**
**நீண்டபிறை யரிமுயற் கூடுரோ கணிகேள்வ**
**நிலைபெற்ற திங்கள்புதியோன்**
**உலவியப சுங்கதிர் *பனிக்கதி ரிராக்கதி**
**ருடன்கலா நிதிமாமனென்**
**றுற்றசந் திரனாம முப்பதுட னான்குநிலை**
**வொளியதே சந்திரிகையாம்.**

---

*பனிககதிராககதி என்றுளது.

**கலையிறை நிரம்பலின் பெயராந் தமிழ்ப்புலவர்**
**கண்டபம் மொளிதாட்சிதங்**
**கணமுடுச் சுக்கைதா ரகையுற்கை யொன்பதுங்**
**கருதில்விண் மீனாகுமே!** (25)

*அலவன், குபேரன், சுதாகரன், நிசாசரன்,
அம்புலி, களங்கன், சசி,
அமுதகிரணன், குமுதநண்பன், உடுபதி, சோமன்,
ஆலோன், குரங்கி, அல்லோன்,
நிலவு, தானவன், இந்து, வேந்தன், மதி, கலையோன்,
நிசாபதி, விது, தண்சுடர்,
நீண்டபிறை, அரி, முயற்கூடு, உரோகணிகேள்வன்
நிலைபெற்ற திங்கள், புதியோன்,
உலவிய பசுங்கதிர், பனிக்கதிர், இராக்கதிர்,
உடன் கலாநிதி, மாமன்,
எனறு உற்ற சந்திரன் நாமம் முப்பதுடன் நான்கு
நிலவொளி அதே சந்திரிகை ஆம்.
கலை பிறைநிரம்பலின் பெயராம் தமிழ்ப்புலவர்
கண்டபம், ஒளி, தாள், சிதம்,
கணம், உடு, சுக்கை, தாரகை, உற்கை, ஒன்பதும்
கருதில், விண்மீன் ஆகுமே! (25)

**சந்திரன் பெயர்**

**சே:—** அம்புலி, திங்கள், குபேரன், அருச்சிகன், நிசாகரன், இமகரன், ஆலோன், களங்கன், தண்சுடர்க் கலையோன், இராக்கதிர், தானவன், வியோமத்துடு பதி, அமுதகிரணன், இந்து, சோமன், பிறை, மதி, சசி, விது, நிலவு, சந்திரன்.

**பி:—** சந்திரன், இந்து, சசி, இமகிரணன், தண் சுடர், உடுபதி, தாராபதி, அம்புலி, அமுதகதிரோன், சீதன், குரங்கி, விது, நிலவு, அல்லோன், வேந்தன்,

தண்ணவன், கலையோன், மதி, களங்கன், குபேரன், ஆலோன், பனிக்கதிர், குமுதசகாயன், அலவன், கலாநிதி, நிசாகரன், நிசாபதி, இரவோன், இராக்கதிர் தானவன், சுதாகரன், உடு வேந்தன், பிறை, முயற்கூடு, பசுங்கதிர், திங்கள், சோமன்.

தூ:— சந்திரன், நிலவு, சோமன், களங்கன், நிசாபதி, பிறை, கலையினன், உடுவின்வேந்தன் கலாநிதி, குபேரன், அலவன், சசி, திங்கள், அம்புலி, நிசாகரன், இமகிரணன், தண்ணவன், குரங்கி, மதி, இராக்கதிர், இந்து, தானவன், அல்லோன், விது, குமுதநண்பன், சுதாகரன், வேந்தன், ஆலோன், முயலின்கூடு, பசுங்கதிர்த்தே.

க:— எண்ணெண்கலையோன், இரவோன், உடுபதி, இந்து, விது, தண்ணென்சுடர், சோமன், அம்புலி, ஆலோன், சசி, சந்திரன், வண்ணம்புதியோன், இமகரன், நாண்மலர், மால்மனத்தன், குபேரன், அமுதாகரன், திங்கள், நாண்மதி.

## நிலவின் பெயர்

சே:—

பி — சந்திரிகை

தூ:—

க:—

## பிறைநிரம்பலின் பெயர்

சே.—

பி:— கலை

தூ:—

க:—

## விண்மீன் பெயர்

சே:— உடு, தாராகணம், ஒளி, வான்மீன்.

பி:— புச்சம், சிதம், பம், சுக்கை, கணம், உடு, தாரகை, ஒளி,

தூ:— உடு, தாரகை, பம், உற்கை, சுக்கை, விண் மீன், தாரகை, உடு, தாராகணம், சோதி, பொங்-கொளி, பம், நாண்மீன்.

## செவ்வாய், புதன், வியாழன் இவற்றின் பெயர்

**மங்கலன் னழலவ னுலோகிதன் னிலமகன்**
**வறியவ னரத்தனுதிரன்,**
**வக்கிரன் குருதிதழ லோனாரல் செந்தீவ**
**ணன்குசன் பௌமனன்றி**
**அங்கார கன்சேயு டன்பத்து மாறுமே**
**யாகுஞ்செவ் வாயின்பெயர்.**
**அனுவழி மேதைமால் பச்சைபுல வன்புந்தி**
**யருணன்க ணக்கனறிஞன்**
**தங்குகிழ வன்சிந்தை சூரியன் றூதுவன்**
**சாமன்* புஸ லேபண்டிதன்**
**சௌமனே தேர்ப்பாகன் மதிமக னொன்பதொரு**
**சாற்றொன்ப தும்புதன்பேர்**
**மங்காச்சி கண்டிசன மைச்சனர சன்றேவ**
**மந்திரி யாண்டளப்பான்**
**மறையவன் சீவன்குரு பிரகற் பதிபொன்**
**வரும்பெயர் வியாழமாமே!** (26)

*மங்கலன், அழலவன், உலோகிதன், நிலமகன்,
வறியவன், அரத்தன், உதிரன்,
வக்கிரன், குருதி, தழலோன், ஆரல், செந்தீ
வண்ணன்,
குசன், பௌமன், அன்றி

---

*புஸலே ?

அங்காரகன், சேய், உடன்பத்தும் ஆறுமே,
ஆகும் செவ்வாயின் பெயர்.
அனுவழி, மேதை, மால், பச்சை, புலவன், புந்தி,
அருணன், கணக்கன், அறிஞன்,
தங்கு கிழவன், சிந்தைகூரியன், தூதுவன்,
சாமன், *புசல்,—ஏ, பண்டிதன்,
சௌமன்-ஏ, தேர்ப்பாகன், மதிமகன், ஒன்பதொடு
சாற்று ஒன்பதும் புதன்பேர்.
மங்காச் சிகண்டிசன், அமைச்சன், அரசன்,
தேவமந்திரி, ஆண்டளப்பான்,
மறையவன், சீவன், குரு, பிரகற்பதி, பொன்,
வரும்பெயர் வியாழம் ஆமே! (26)

## செவ்வாயின் பெயர்

**சே**:— அங்காரகன், குசன், ஆரல், வக்கிரன், மங்கலன், அறிவன். செந்தீவண்ணன், பூமகன், நிலமகன், குருதி, சேய், செவ்வாய்.

**பி**:— அழலவன், பௌமன். அங்காரகன், குருதி, வக்கிரன்,குசன், மங்கலன். ஆரல், உதிரன், அரத்தன், அறிவன், அழல், உலோகிதன், செந்தீவண்ணன், சேய், செவ்வாய்.

**சூ**:— செந்தீவண்ணன், அங்காரகன், சேய் குருதி, வக்கிரன், பௌமன், குசன். நிலமகன், அரத்தன், அழலோன், மங்கலன், ஆரல், உதிரன், செவ்வாய்.

**க**:—

## புதன் பெயர்

**சே**:— அருணன், தூதுவன், அனுவழி, மேதை, மதிமகன், பாகன், மாலவன், கணக்கன், புந்தி, புலவன், பண்டிதன், சௌமியன், சிந்தைகூரியன், அறிவன், புதன்.

*புசல் ?

பி :— அருணன், கணக்கன், அறிஞன், சாமன், மதிமகன், மேதை, மால், தோப்பாகன், புந்தி, தூதன், பச்சை, புதன்.

சூ:— சிந்தைகூரியன், கணக்கன், தேர்ப்பாகன், அருணன், சாமன், தூதுவன், மால், மதிமகன், அறிஞன். பாகன், புலவன், அனுவழி, மேதை, பச்சை, புந்தி, பண்டிதன், புதன்.

க:—

## வியாழன் பெயர்

சே —: மந்திரி, ஆசான், பீதகன், சுரகுரு, அந்தணன், அரசன், ஆண்டளப்பான், பிரகற்பதி, சுந்தரப்பொன், குரு, மறையோன், வியாழம்.

பி :— ஆசான், மந்திரி, ஆண்டளப்பான், பொன், பீதகன், சுரகுரு, பிரகற்பதி, சீவன், தேவமந்திரி, சித்தன், சிகண்டிசன், அந்தணன், அரசன், வியாழன்.

சூ: —தெய்வமந்திரி, சிகண்டிசன், அமைச்சன், சீவன், வேதன், ஆண்டளப்பான், ஆசான், வேந்தன், பொன்.

க:—

## வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது இவற்றின் பெயர்

பீதகன் னாசானெ னும்பெயரு மேசொலும்
பேசரிய வசுரர்மந்திரி
பிருகுபார்க் கவன்மழைக் கோள்பளிங் குசனன்
பெருத்தசுங் கன்கவிபுகர்
கோதிலாச் சுக்கிரன் காப்பியன் பண்டிதன்
குலவுசீ தன்சல்லியன்
கூறுபதி னான்குமே வெள்ளியின் பெயராம்.
கொடுங்கதிர் மகன்கீழ்மகன்
ஓதுமந் தன்காரி கரியவன் மேற்கோளு
டன்பங்கு சௌரிநீலன்
உயர்சந்தில் சாவகன் முடவன் முதுமக
னுரைத்தசுன் சனிநாமமாம்

**தீதுறு கரும்பாம்பு தமமே யிராகுவாம்**
**செம்பாம்பு கொடியன்சிகி**
**திங்களின் பகையென்பர் கேதுவா மதுவலாற்**
**சேடன்ன னந்தனாமே! (27)**

*பீதகன், ஆசான் எனும் பெயருமே சொலும்
பேச அரிய அசுரர்மந்திரி
பிருகு,பார்க்கவன்,மழைக்கோள்,பளிங்கு,உசனன்
பெருத்த சுங்கன், கவி, புகர்,
கோது இலாச் சுக்கிரன், காப்பியன், பண்டிதன்,
குலவு சிதன், சல்லியன்,
கூறுபதினான்குமே வெள்ளியின் பெயராம்.
கொடும் கதிர்மகன், கீழ்மகன்,
ஓதும் அந்தன், காரி, கரியவன், மேற்கோள்,
உடன் பங்கு, சௌரி, நீலன்,
உயர் சந்தில் சாவகன். முடவன், முதுமகன்,
உரைத்த சுன், சனி நாமமாம்
தீது உறு கரும்பாம்பு, தமம்-ஏ, இராகு ஆம்
செம்பாம்பு, கொடியன், சிகி,
திங்களின்பகை, என்பர் கேதுவாம் அது அலால்
சேடன் அனந்தன் ஆமே! (27)

**வெள்ளியின் பெயர்**

**சே:—** பளிங்கு. பார்க்கவன், புகர், புயல், மழைக்கோள், திங்கள், பிரசுரன், சல்லியன், ஒள்ளி-யோன். சுங்கன், அசுரமந்திரி, வெள்ளி, சிதன், பிருகு, சுக்கிரன்.

**பி:—** தைத்தியமந்திரி, சல்லியன், சைத்தியன், மழைக்கோள், சுங்கன், கவி, புகர், பிரசுரன், பார்க்-கவன், சுக்கிரன், ஒள்ளியோன், பளிங்கு, காப்பியன், சிதன், உசனன், வெள்ளி.

சூ :—அசுரமந்திரி, உசனன், பார்க்கவன், சுங்கன், சுக்கிரன், பளிங்கு, புகர், கவி, மழைக்கோள், வெள்ளி.

க:—

## சனியின் பெயர்

சே:— மந்தன், காரி, கரியோன், முடவன், அந்தன், நீலன், கதிர்மகன், கீழ்மகன், பங்கு, மேற்கோள், சௌரி, முதுமகன், சந்தில், சாவகன், சனி.

பி:— கதிர்மகன், நீலன், சாவகன், காரி, முதுமகன், மேற்கோள், மந்தன், முடவன், சௌரி, பங்கு, சந்தில், சனி.

சூ:— கதிர்மகன், மந்தன், காரி,கரியவன், சௌரி, மேற்கோள், முதுமகன், பங்கு, நீலன், முடவன், நோய்முகன், சனி.

க:—

## இராகுவின் பெயர்

சே:—கரும்பாம்பு.

பி:—தமம், கரும்பாம்பு.

சூ:— தமம், கறுப்பு.

க:—

## கேதுவின் பெயர்

சே:— செம்பாம்பு.

பி:— செம்பாம்பு, சுகி, கொடி.

சூ:— செம்மை, சுகி, கதிர்ப்பகை.

க:—

## இராசிகள் பன்னிரண்டின் பெயர்

மையாடு வருடைகொறி மறிமோத்தை மேடமா
மாடுசே மூரிபுல்லம்
வண்குடை யேறுகோ விடையிடப மாஞ்சவை
*மகள்விழவு தண்டிரட்டை
கையிலியாழ் பாட்டவண் மிதுனமாங் குளிர்நள்ளி
கள்வனல வன்ஞண்டுகர்க்
கடகமாம் புலியரி யாளிமாச் சிங்கமாம்.
கன்னிமுலை யரிவைபெண்ணாம்.
பொய்யிலாத் துலைதூக்கு வணிகனிறை கட்டளை
பொருந்துகோ லிவைதுலாமாம்.
போந்ததே ளொடுதெறுக் கால்விருச் சிகமாம்.
பொருஞ்சிலை விற்கொடுமரம்,
எய்திடுஞ் சாபமுயர் தனுவாஞ் சுறாக்கலை
யியம்புமா மகரங்குடம்,
இடங்கர்சால் கும்பமா மயிலைமச் சங்கய
லிலங்குமீன் மீனமாமே! (28)

*மை, ஆடு, வருடை, கொறி, மறிமோத்தை, மேடம் ஆம்
மாடு, சே, மூரி, புல்லம்,
வண்குடை, ஏறு, கோ, விடை, இடபம் ஆம்
சவைமகள், விழவு, தண்டு, இரட்டை,
கையிலி, யாழ், பாட்டவள், மிதுனம் ஆம், குளிர், நள்ளி
கள்வன், அலவன், ஞண்டு,
கர்க்கடகம் ஆம். புலி, அரி, ஆளி, மா, சிங்கம் ஆம்.
கன்னி, முலை, அரிவை, பெண் ஆம்.
பொய்இல்லாத துலை, தூக்குவணிகன்நிறை, கட்டளை,
பொருந்து கோல் இவை துலாம் ஆம்.
போந்த தேள்-ஒடு, தெறுக்கால், விருச்சிகம் ஆம்.
பொரும் சிலை, வில், கொடுமரம்,

---

* மகள் விளவு என்றுளது

எய்திடும் சாபம், உயர் தனு ஆம். சுறா, கலை,
இயம்பும் ஆம் மகரம். குடம்,
இடங்கர், சால், கும்பம் ஆம். மயிலை, மச்சம்,
கயல்,
இலங்கு மீன் மீனம் ஆமே! (28)

## மேடத்தின் பெயர்

**சே:—** வருடை, உதள், தகர், மறி, மை, கொறி, ஆடு.

**பி:—** மேடத்திற்குரியனவாய் வரும் பெயர்கள்.

**சூ:** மை, வருடை, ஆடு. கொறி, மறி.

**க:—**

## இடபத்தின் பெயர்

**சே:—** பாறல், புல்லம், பாண்டில், பசு, மூரி, ஏறு, இடபம்.

**பி:—** இடபத்திற்குரியனவாய் வரும் பெயர்கள்.

**சூ:—** குண்டை, சே, மூரி, புல்லம், கோ, விடை, இடபம்.

**க:—**

## மிதுனத்தின் பெயர்

**சே:—** பாடவை, ஆடவை, இரட்டை, சயமகள், யாழ், தண்டு, மிதுனம்.

**பி:—** யாழ், பாடவை, இரட்டை, சவைமகள், விழவு, தண்டு, மிதுனம்.

**சூ:—** தண்டு, யாழ், விழவு, இரட்டை, சவை மகள்.

**க:—**

## கற்கடகத்தின் பெயர்

**சே** :— அலவன், நள்ளி, குளிர், ஞெண்டு, ஆர்மதி, கள்வன், கற்கடகம்.

**பி** : - நண்டு பற்றி வரும் பெயர்களெல்லாம் கொள்ளப்படும்.

**சூ** :— நண்டு, ஞெண்டு, அலவன், சேக்கை, நள்ளி, கற்கடகம்.

**க** : -

## சிங்கத்தின் பெயர்

**சே**:— அரிமா, புலி, ஐயானனம், யாளி, சீயம், சிங்கம்.

**பி**:— சிங்கம் பற்றி வரும் பெயர்களெல்லாம் கொள்ளப்படும்.

**சூ**:— அரி, யாளி, மா, கொடும்புலி, சிங்கம்.

**க**:—

## கன்னியின் பெயர்

**சே**:— பெண்மைப் பெயரெல்லாம் கன்னிக்கு ஆகும்.

**பி** :— கன்னி பற்றி வரும் பெயர்கள் எல்லாம் கொள்ளப்படும்.

**சூ**:— மடந்தையர் பேரெல்லாம் கொள்ளப் படும்.

**க**:—

## துலாத்தின் பெயர்

**சே**:— நிறை, கட்டளை, வாணிகன், நிறுப் பான், துலை, கோல், துலாம்.

**பி**:—துலாத்திற்குரிய பெயரெல்லாம் கொள்ளப் படும்.

**சூ**:— துலை, நிறை, நிறுப்பான், சீர், கோல், தூக்கு வாணிகன், துலாம்.

**க**:—

சே:-தெறுக்கால்,பறப்பன்,தேள்,விரிச்சிகம், அலம்

பி:—விருச்சிகத்தின் பெயரெல்லாம் கொள்ளப்படும்.

சூ:— தெறுக்கால், தேள், விருச்சிகம்.

க:—

## தனுவின் பெயர்

சே:— சாபம், காண்டீபம், தனு.

பி:—தனுவின் பெயர் யாவும் கொள்ளப்படும்.

சூ:—கொடுமரம், துரோணம், சாபம்,சிலை, தனு

க:—

## மகரத்தின் பெயர்

சே:— மான், கலை, சுறா, மகரம்.

பி:— மகரத்தின் பெயரெல்லாம் பெறும்

சூ:— மான், கலை, சுறா, மகரம்

க:—

## கும்பத்தின் பெயர்

சே.— குடம், சாடி, கும்பம்.

பி:— குடத்தின் பெயரெல்லாம் கொள்ளப்படும்

சூ:— குடம், கரீரம், சாடி, குடங்கர், கும்பம்.

க:—

## மீனத்தின் பெயர்

சே:— மீனின் பெயரெல்லாம் கொள்ளப்படும்

பி:— மீனின் பெயர் யாவும் பெறப்படும்.

சூ: — மீன், மயிலை, மற்சம், சலசரம்.

க:—

## இராசிவீதிகளின் பெயர்

மேடமுதல் மீனமீ றாகவரு ராசிக்குள்
மிதுனம் மொழிந்தல்லன
விளம்பிடி லப்பெயர்க் கப்பெய ரனைத்துமாம்
வீதிமூன் றோதிடுங்கால்
நாடரிய மாடுமுத லொருநான்கி ராசியு
நயந்திடுதல் மேடவீதி
நவிலுமீ *னாடறிவை துலைநான்கி ராசியும்
நண்ணிடுத லிடபவீதி.
தேடரிய தேள்முத லொருநான்கி ராசியுஞ்
சேர்ந்திடுதல் மிதுனவீதி
செப்பும்வீ திக்குரிய ராசிமா தத்தின்வழி
செய்யகதிர் மதிமுதற்கோள
பீடுறந டக்குமதி மறைகலை யிராவினது
பெயர்குரு வென்றுகூறும்.
பின்னுமோ மதிதெரிந் திடுகலை யிராவினது
பெயர்சனி வாலியாமே! (29)

*மேடம் முதல் மீனம் ஈறு ஆக வரும் இராசிக்குள்
மிதுனம் ஒழித்து அல்லன
விளம்பிடில் அப்பெயர்க்கு அப்பெயர்
அனைத்தும் ஆம்.
வீதி மூன்று ஓதிடும் கால்,
நாட அரிய மாடு முதல் ஒரு நான்கு இராசியும்
நயந்திடுதல் மேட வீதி.
நவிலும் மீன். ஆடு, †அரிவை, துலை, நான்கு
இராசியும்
நண்ணிடுதல் இடப வீதி.

---

* நாடறியை என்றுளது

† அரியை என்றுளது

தேடஅரிய தேள் முதல் ஒரு நான்கு இராசியும்
சேர்ந்திடுதல் மிதுனவீதி.
செப்பும் வீதிக்கு உரிய இராசி மாதத்தின் வழி
செய்ய கதிர், மதி முதல்கோள்
பீடு உறநடக்கும் மதி *மறை காலை இராவினது
பெயர் குரு என்று கூறும்.
பின்னுமோ மதி ‡தெரிந்திடும் காலை இராவினது
பெயர் சனி வாலி ஆமே! (29)

## மேடவீதி

சே:

பி:—இடபம், சிங்கம், மிதுனம், கடகம்.

சூ:—

க:—

## இடபவீதி

சே:—

பி: - மீனம், மேடம், கன்னி, துலாம்.

சூ:—

க:—

## மிதுனவீதி

சே: –

பி:— தனுசு, மகரம், கும்பம், விருச்சிகம்.

சூ:—

க:—

*மறைகலை என்றுளது.

‡ தெரிந்திடுகலை என்றுளது.

## பரிதியின் வட்டம் பரிவட்டம், வெயில், காலை, பகல், உச்சி, மாலை இரவு இவற்றின் பெயர்

அரிதீவி ரங்கரம் பரிதிகதிர் கிரணம்விச
யங்கோவோ டிருநான்குபே
ராம்பரிதி வட்டமூர் கோண்மூடு வட்டமூன்
றானபரி வட்டப்பெயர்
மருவுமொளி யெல்லாத பங்கோடை யென்றூழ்
வருத்தமிகு வெயிலைந்துபேர்
வளர்காலை புலரியுத யங்காதல் வைகறை
வண்பொழுது விடியற்பெயர்
உரைதிவா வல்கலெல் லொடுவானி நான்குமே
யொண்பகற் பொழுதின்பெயர்
உருமங்கொன் மத்தியான நண்பக னடுப்பக
லுச்சியப் பொழுதைந்துபேர்
வரைகொள்சா யஞ்சந்தி யந்தியொடு மூன்றுமே
மாலையம் பொழுதின்பெயர்
மையலிர சனிகங்குல் யாமினிவி பாவரி
மாலைநிசி எல்லுமிரவே!

*அரி தீவிரம், கரம், பரிதி, கதிர், கிரணம், விசயம்,
கோ-ஒடு இருநான்குபேர்
ஆம் பரிதிவட்டம். ஊர்கோள், மூடு, வட்டம்
மூன்று ஆன பரிவட்டப்பெயர்.
மருவும் ஒளி, எல், ஆதபம், கோடை, என்றூழ்,
வருத்தம் மிகு வெயில் ஐந்து,
வளர் காலை, புலரி, உதயம், †காதல், வைகறை,
வண்பொழுது விடியல் பெயர்,
உரை திவா, அல்கல், எல்—ஒடு, வான், இந் நான்குமே
ஒண் பகல்பொழுதின் பெயர்.
உருமம்-கொல், மத்தியானம், நண்பகல் நடுப்பகல்,
உச்சி அப் பொழுது ஐந்துபேர்.

---

† = ?

வரைகொள் சாயம், சந்தி, அந்தி, ஒரு மூன்றுமே
மாலை அம் பொழுதின் பெயர்.
மையல், இரசனி, கங்குல், யாமினி, விபாவரி
மாலை, நிசி, எல்—உம் இரவே! (30)

## பரிதிவட்டத்தின் பெயர்

சே:—

பி:— விசயம், (கரம், தீவிரம், கோ, கதிர்.)

சூ:— விசயம், கரம், தீவிரம்.

க:—

## பரிவட்டத்தின் பெயர்

சே:— ஊர்கோள், வட்டம், பரிவேடம்.

பி:—

சூ:— ஊர்கோள், வட்டம்.

க:—

## வெய்யிலின் பெயர்

சே:— என்றாழ், ஆதவம், வெயில்.

பி:— கோடை, என்றாழ், எல், ஒளி, ஆதவம், வெயில்.

சூ:— ஆதபம், என்றாழ், வெய்யில்.

க:— என்றாழ், ஆதபம், வெயில்.

## காலைப் பெயர்

சே:—வைகறை, விடியல், புலரி, அருணோதயம்.

பி:— விடியல், வைகறை, புலரி.

சூ:— வைகறை, புலரி, விடியல்.

க:—

## பகலின் பெயர்

சே:— எல், பகல்.

பி:— எல், திரவம், திவா, தினம், பகல்.

சூ:— எல், திவா, பகல்.

க:— தினம், திவசம், பகல், திவா,

## (உச்சி) மத்தியானத்தின் பெயர்

சே:— நண்பகல், உச்சி.

பி:— மத்தியானம், நண்பகல், உச்சி, உருமம், நடுப்பகல்.

சூ:— நண்பகல், உச்சி, நடுப்பகல்.

க:— உச்சி, நண்பகல்.

## மாலைப்பொழுதின் பெயர்

சே:— அந்தி, சந்தி.

பி:— சந்தி, மாலை, சாயம், கோதூழி

சூ — சாயம், சந்தி, மாலை

க:— அந்தி, சந்தி

## இரவின் பெயர்

சே:— எல்லி, கங்குல், யாமம், மாலை, அல், மங்குல், இரசனி, அல்கல், யாமினி, நிசி, எல், இரவு.

பி:— யாமம், நத்தம், யாமினி, வகுஞ்சம் சாமம், கங்குல், நிசா, நிசி, திமிரம், எல்லி, அல்.

நூ:— அல், விபாவரி, கங்குல், அல்கல், யாமினி நத்தம், எல்லி, யாமம், மாலை, இரசனி, நிசி.

க:—இரசனி,மாலை,கங்குல்,யாமினி,எல்லி, நிசா, நிசி, அல்கல், யாமம், விபாவரி, நத்தம், இரவு, அல்.

## இருள், காலைப்பொழுது, நாழிகை, இவற்றின் பெயர்

**சொல்லியவி ராப்பொழுதி னாமமெட் டுடனல்கல்**
**சொல்லேம மல்லுமாகும்**
**துவாந்தநீ லந்திமிர நிசியாம மேமம்**
**துணங்கற லிருள்யாமனி**
**அல்லுநத் தந்தமங் கச்சளங் கருவரி**
**யந்தகா ரம்புகலுமூ**
**வைந்துமிரு ளின்பெய ரத்தயா மஞ்சாம**
**நாமமாம் போதுபாணி**
**வெல்வையம யஞ்செவ்வி காலைகொள் பொழுதுபத**
**மிகுமாலை யமைதிவேலை**
**மிக்கபனி ரண்டுமே காலைப்பொ துப்பெயர்**
**விகலைதுடிக் கலைமூன்றுமே**
**கல்வியுடை யோர்சொலுங் காலநுட் பம்விகலை**
**கடிகைபத முடனிருத்தை**
**கன்னலோ ரைந்துமே நாழிகைப் பெயரெனக்**
**கட்டுரைத் தனர்புலவரே!** (31)

*சொல்லிய இராப்பொழுதின் நாமம் எட்டுடன் அல்கல்

சொல் எமம், அல்—உம் ஆகும்.

துவாந்தம், நீலம், திமிரம், நிசி, யாமம், ஏமம்.

துணங்கறல், யாமினி,

அல்—உம், நத்தம், தமம், கச்சளம், கருவரி,

அந்தகாரம், புகலும்

மூவைந்தும் இருளின் பெயர். அத்தயாமம்,
சாம நாமம், ஆம், போது, பாணி,
வெல்லை, அமயம், செவ்வி, காலை, கொான், பொழுது
பதம், மிகுமாலை, அமைதி, வேலை,
மிக்க பன்னிரண்டுமே காலைப் பொதுப்பெயர்.
விகலை, துடி, கலை, மூன்றுமே
கல்வி உடையோர் சொலும் கால நுட்பம் விகலை.
கடிகை, பதம்—உடன் இருத்தை,
கன்னல்—ஒடு ஐந்துமே நாழிகைப்பெயர் எனக்
கட்டுரைத்தனர் புலவரே! (31)

## இருளின் பெயர்

**சே**:— நிசி, நத்தம், நீலம், திமிரம், தமம் இருள்.
**பி**:—

**சூ**:— சருவரி, அந்தகாரம், கச்சளம், தமம், துவாந்தம், திமிரம், துணங்கறல்.

**க**:—இருள், அந்தகாரம், துவாந்தம், தமம், நீலம் நத்தம், திமிரம், நிசி.

## சாமத்தின் பெயர்

**சே**:— யாமம், சாமம்.

**பி**:— யாமம், சாமம்.

**சூ**:— யாமம்.

**க**:— யாமம், சாமம்.

## காலநுட்பத்தின் பெயர்

**சே**:— துடி, கலை, காலநுட்பம்.

**பி**:— கலை, துடி, கணம், மாத்திரை, நொடி, பிதிர், நுட்பம், நிமிடம்.

சூ — துடி, கலை, விகலை.

க: - நுட்பம், நிமிடம், துடி, காலநுட்பம்.

### நாழிகையின் பெயர்

சே: – கன்னல், இரித்தை, கடிகை, பதம், விகலை, நாழிகை.

பி:— கடிகை, விகலை, கன்னல், இருத்தை, பதம், நாழி, நாழிகை.

சூ:—கடிகை, கன்னல், இரித்தை, நாழிகை.

க:—இருத்தை, கன்னல், விகலை, கடிகை, பதம், நாழிகை.

### அசுபதி, பரணி, கார்த்திகை, உரோகணி, மிருகசீரிடம் இவற்றின் பெயர்

இரலையைப் பசிபுரவி யாழேறு தலைநா
ளியம்புபரி வாசிசென்னி,
யெழின்மருத் துவனாளோ டிரைந்து மச்சுவினி
யின்பெயர் தாழிபூதம்
தருமநாள் காடுகிழ வன்பகல வன்சோறு
தாசிமுக் கூட்டடுப்புத்
தராசுபதி னொன்றுமே பரணியின் பெயரளகு
தழலொடாறு வாயளக்கர்
எரியினா ளாரலறு மீனாட னாவிதனி
றால்வான ணங்குபத்து
மிரண்டுமே கார்த்திகை பண்டிபார் சதிசகடி
லங்குதேர் வையமயனாள்
உருள்விமா னங்கோண முற்றறியு மூற்றாலு
ரோணியே ரோகிணிப்பே
ரோதுமதி நாள்மகஞ் சிரம்பாலை மார்கழி
யுற்றமான் றலையினுடனே! (32)

*இரலை, ஐப்பசி, புரவி, யாழ், ஏறு, தலைநாள்,
இயம்பு, பரி, வாசி, சென்னி,
எழில் மருத்துவன்நாள்—ஒடு ஈரைந்தும்
அச்சுவினியின்
பெயர். தாழி, பூதம்,
தருமநாள், காடு, கிழவன், பகலவன், சோறு,
தாசி, மூக்கூட்டு, அடுப்பு,
தராசு, பதினொன்றுமே பரணியின் பெயர்.
அளகு
தழல்—ஒடு அறுவாய், அளக்கர்,
எரியின்நாள், ஆரல், அறுமீன், நாடன், நாவிதன்,
இறால், *வாணன், அங்கி பத்தும்
இரண்டுமே கார்த்திகை, பண்டி, பார், சதி, சகடு,
இலங்கு தேர், வையம், அயன்நாள்,
உருள், விமானம், கோணம், உற்று அறியும் ஊற்றால்,
உரோணி—ஏ உரோகிணிப்பேர்.
ஓதும்மதிநாள், மகம், சிரம், பாலை, மார்கழி.
உற்ற மான்தலை-இன்உடனே! (32)

**அச்சுவினியின் பெயர்**

**சே**:—இரலை. ஐப்பசி, யாழ், ஏறு, தலையினாள், புரவி, மருத்துவநாள், அச்சுவினி.

**பி**:—இரலை, ஐப்பசி, யாழ், ஏறு, தலைநாள், புரவி, மருத்துவநாள், அச்சுவினி.

**சூ**:—பரி, மருத்துவநாள், வாசி, ஐப்பசி, யாழ், ஏறு, இரலை, முதனாள், சென்னி.

**க**:—

**பரணியின் பெயர்**

**சே**:—காடு, கிழவோன், பூதம். அடுப்பு, தாழி, பெருஞ்சோறு, தருமனாள், பேதம், பரணி.

*வானணங்கு என்றுளது.

பி:— காடு, கிழவோன், பூதம், அடுப்பு, தாழி சோறு, தருமனால், முக்கூட்டு, போதம்,தாசி, பரணி,

சூ:— கிழவன், சோறு, பகலவன், தராசு, தாழி. தருமனாள், அடுப்பு, பூதம், தாசி, முக்கூட்டு, பரணி.

க:—

## கார்த்திகையின் பெயர்

சே:— அங்கி, ஆரல், அளக்கர், அளகு, இறால், நாடன், நாவிதன், வாணன், அறுமீன், தழனாள், கார்த்திகை.

பி:—அறுமீன், அங்கிநாள், அளக்கர், எரிநாள், அளகு, இறால்,நாவிதன், வாணன், தழல், ஆரல்.

சூ:— எரிநாள், ஆரல், இறால்,அறுவாய்,அளக்கர் நாவிதன், அங்கி, அளகு, கார்த்திகை.

க:—

## உரோகிணியின் பெயர்

சே:— பண்டி, பார், சகடு, சாகாடு, வையம், உருள், தேர், அயனாள், உரோகிணி.

பி:— சகடு, விமானம், சதி, ஊற்றால், அயனாள், வையம், உரோகிணி.

சூ:— பிரமனாள், சகடு, பண்டி, சதி, வையம், உருள், விமானம், தேர், ஊற்றால், உரோகிணி.

க:—

## மிருகசீரிடத்தின் பெயர்

சே:—மாழ்கு, பேராளன், மான்றலை, இந்திரன் மார்கழி, நரிப்புறம், மதிநாள், மும்மீன், பாலை, வெய்யோன், மிருகசீரிடம்.

பி: — மாழ்கு மான்றலை, மார்கழி, நரிப்புறம், மதிநாள், மும்மீன், பாலை, வெய்யோன், ஐந்தானம்.

சூ: — திங்கணாள், மதி, பேராளன், மான்றலை, மாழ்கு, மார்கழி, மும்மீன், நரிப்புறம், பாலை, மிருகசீரிடம்.

க:—

**மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரம் இவற்றின் பெயர்.**

இத்திரன் மதிமாழ்கு பேராள னரிப்புற
மினியமும் மீன்மிருகசீ
ரிடப்பெயர் பதினொன்று செங்கையுடன் மூதிரை
யீசர்தின மாதிரைப்பேர்.
முந்ததிதி நாட்கரும் *பாவாணம் பிண்டிநீண்
மூங்கிலொடு பாலைபுணர்த
மொழிபுனித மேழுமுயர் புனர்பூச நாமம்
முயன்றகுரு நாள்வண்டுடன்
அந்தமுள கொடிறுகாற் குளநான்கு பெயர்பூச
மரவினாள் கௌவையாயி
லாயிலிய நான்குபெயர் மாசிகொடு நுகம்வேள்வி
யதிரும்வாய்க் கால்வேட்டுவன்
உந்துமிதிர் நாண்முதலில் வருஞ்சனி மாதமோ
ரெட்டுமக மெலிநாவிதன்
உலவுகடை யிடையெழுஞ் சனிதுர்க்கை பகவதிக்
குரியநாட் பூரமாமே! (33)

*இந்திரன், மதி, மாள்கு, பேராளன், நரிப்புறம்,
இனிய மும்மீன், மிருகசீரிடப்
பெயர் பதினொன்று. செங்கை—உடன் மூதிரை,
ஈசர்தினம், ஆதிரைப்பேர்.

---

* பாவணம் எனல் பொருந்தும்.

முந்து அதிதிநாள், கரும்பு, *ஆவணம், பிண்டி, நீள்
மூங்கில்—ஒடு பாலை, புனர்தம்,
மொழி புனிதம், ஏழும் உயர் புனர்பூச நாமம்
முயன்ற குருநாள், வண்டு—உடன்
அந்தம் உளகொடிறு, காற்குளம் நான்கு பெயர்பூசம்.
அரவின்நாள், கௌவை, ஆயில்,
ஆயிலியம், நான்கு பெயர், மாசி, கொடுநுகம்,
வேள்வி,
அதிரும் வாய்க்கால், வேட்டுவன்,
உந்து பிதிர்நாள், முதலில்வரும் சனி, மாதம், ஓர்
எட்டும் மகம், எலி, நாவிதன்,
உலவு கடை இடையெழும் சனி, துர்க்கை,
பகவதிக்கு
உரியநாள் பூரம் ஆமே! (33)

## திருவாதிரையின் பெயர்

**சே:**— மூதிரை, செங்கை, யாழ், ஈசர்தினம், ஆதிரை.

**பி:**— அரனாள், செங்கை, மூதிரை, ஆதிரை.

சூ:— செங்கை, மூதிரை, யாழ், ஈசன்றினம், திருவாதிரை.

**க:**—

## புனர்பூசத்தின் பெயர்

**சே:**— அதிதிநாள், மூங்கில், கரும்பு, ஆவணம், பாலை, புனிதம், பிண்டி, புனர்தம், புனர்பூசம்.

**பி:**— அதிதிநாள், கழை, ஆவணம், எரி, புனர்தம், கரும்பு, புனர்பூசம்.

**சூ:**— அதிதிநாள், கழை, புனர்தம், கரும்பு, புனிதம், பிண்டி, ஆவணம், புனர்பூசம்.

**க:** -

---

*'ஆவாணம்' என்றுளது.

## பூசத்தின் பெயர்

**சே:—** கொடிறு, காற்குளம், சுரர்குருநாள், வண்டு, பூசநாள்.

**பி:—** குருநாள், காற்குளம், கொடிறு, வண்டு, புணர்தை.

**சூ:—** குருவினாள், கொடிறு, வண்டு, காற்குளம், பூசம்.

**க:—**

## ஆயிலியத்தின் பெயர்

**சே:—** அரவினாள், கௌவை, ஆயிலியம்.

**பி:—** அரவினாள், கௌவை, ஆயில், ஆயிலியம்.

**சூ:—** அரவினாள், கௌவை, பாம்பு, ஆயில், ஆயிலியம்.

**க:—**

## மகத்தின் பெயர்

**சே:—** வேட்டுவம், கொடுநுகம், எழுவாயெழுஞ்சனி, வாய்க்கால், பிதிர்நாள், மாசி, மகம்.

**பி:—** வேள்வி, கொடுநுகம், வேட்டுவன், வாய்க்கால், ஆதியெழுஞ்சனி, பிதிர்நாள், மாகம், மாசி, எழுவாயெழுஞ்சனி, மகம்.

**சூ:—** கொடுநுகம், வேள்வி, வாய்க்கால், வேட்டுவன், மாசி, முதலில் வரும் சனி, மகம்.

**க:—**

## பூரத்தின் பெயர்

**சே:—** இடையெழுஞ்சனி, எலி, துர்க்கை, பகவதிநாள், நாவிதன், கணை, பூரம்.

**பி:—** இடையெழுஞ்சனி, எலி, துர்க்கை, பகவதிநாள், கணை, நாவிதன், பூரம்.

சூ:—இடையெழுஞ்சனி, துர்க்கை, எலி, பகவதி நாள், நாவிதன், கணை, பூரம்.

க:—

**உத்திரம், அத்தம், சித்திரை, சோதி, விசாகம், அனுடம் இவற்றின் பெயர்**

**பங்குனி யுடன்கடை யெழுஞ்சனி பாற்குனி**
**பரிதிநா ளுத்திரப்பேர்**
**பரவிய கௌத்துவங் களிறுகைம் மீனவ்வி**
**பழுதிலாக் காமரத்தோ**
**டங்கிநா ளைவிர லென்னுமெழு பெயரத்த**
**மறுவைநெய் பயறுதச்ச**
**னாடைநேர் *வான்சுவை துவட்டநா ணடுநா**
**ளறைந்தமீ னிவைகள்பத்தும்**
**தங்குசித் திரைமரக் கால்வீழ்க்கை வெறுநுகந்**
**தாழ்வில்காற் றுக்காற்றினாள்**
**சாற்றுதீ பம்விளக் குப்பதும மெட்டுந்**
**தழைத்திடுஞ் சோதிமிகவும்**
**பொங்குமுற முற்றில்வை காசிசுள கொடுசேட்டை**
**பொருகாற்றி னாள்விசாகம்**
**புற்றாளி பெண்ணைதேள் போந்தைமித் திரநாள்**
**புகன்றபெய ரனுடமாமே!** (34)

*பங்குனி உடன் கடையெழும்சனி, பாற்குனி,
பரிதிநாள், உத்திரப்பேர்.
பரவிய கௌத்துவம், களிறு, கைம்மீன், நவ்வி,
பழுதுஇலா காமரம்—அத்து—ஒடு
அங்கிநாள், ஐவிரல் என்னும் எழுபெயர் அத்தம்.
அறுவை, நெய், பயறு, தச்சன்,

---

*வான்சவை என்றுளது.

ஆடை, நேர்வான்,*சுவை,துவட்டநாள், நடுநாள்,
அறைந்த மீன் இவைகள் பத்தும்
தங்கு சித்திரை, மரக்கால், வீழ்க்கை, வெறுநுகம்,
தாழ்வு இல் காற்று, காற்றின்நாள்,
சாற்று தீபம், விளக்கு, பதுமம், எட்டும்
தழைத்திடும் சோதி மிகவும்
பொங்கு முறம், முற்றில், வைகாசி, சுளகு-ஒடு
சேட்டை,
பொரு காற்றின்நாள் விசாகம்.
புல், தாளி, பெண்ணை, தேள், போந்தை,
மித்திரநாள்,
புகன்றபெயர் அனுடம் ஆமே! (34)

## உத்திரத்தின் பெயர்

**சே**:— பங்குனி, கடையெழுஞ்சனி, பாற்குனி, மானேறு, கதிர்நாள், உத்திரம்.

**பி**:— பங்குனி, கடையெழுஞ்சனி, பாற்குனி, மானேறு, கதிர்நாள், மாரிநாள், உத்தரம்.

**சூ**:— பங்குனி, கடையெழுஞ்சனி, செங்கதிர் நாள், உத்திரம்.

**க**:—

## அத்தத்தின் பெயர்

**சே**:— கைம்மீன், காமரம், களிறு, கௌத்துவம், நவ்வி, கன்னி, ஐவிரல், அத்தம்.

**பி**:— கைம்மீன், கைனி, கனலிநாள், ஐம்மீன், காமரம், களிறு, அத்தம்.

**சூ**:— காமரம், அங்கிநாள், கௌத்துவம், கைம் மீன், களிறு, நவ்வி, ஐவிரல், அத்தம்.

**க** :—

---

*'சவை' என்றுளது.

## சித்திரையின் பெயர்

**சே**:— நெய், வான்மீன், சுவை, பயறு, நேர்வான், துவட்டாநாள், சித்திரை.

**பி**:— நெய், மீன், அறுவை, நேர்வான், பயறு, நடுநாள், துவட்டநாள், தச்சன், சித்திரை.

**சூ**:— நெய், பயறு, மீன், அறுவை, ஆடை, தூசு, நடுநாள், தச்சன், துவட்டநாள், சித்திரை.

**க**:—

## *சோதியின் பெயர்

**சே**:— விளக்கு, வீழ்க்கை, வெறுநுகம், மரக்கால், அனிலநாள், சோதிநாள்.

**பி**:— விளக்கு, மரக்கால், வெறுநுகம், வீழ்க்கை, துளக்கம், காற்றினாள், சோதி.

**சூ**:— விளக்கு, மரக்கால், வீழ்க்கை, வெறுநுகம், காற்றினாள், காற்று, தீபம், சோதி.

**க**:—

## விசாகத்தின் பெயர்

**சே**:— முறம், முற்றில், வைகாசி, அனிலநாள், சுளகு, விசாகம்.

**பி**:— அனிலநாள், முற்றில், முறம், வைகாசி, சுளகு, விசாகம்.

**சூ**:— முற்றில், வைகாசி, காற்றினாள், முறம், சுளகு, சேட்டை, விசாகம்.

**க**:—

---

* சுவாதி.

### அனுடத்தின் பெயர்

**சே:** பனை, தேள், பெண்ணை, புல், தாளி, போந்தை, மித்திரநாள், அனுடம்.

**பி:** பனை, தேள், பெண்ணை, புல், தாளி, போந்தை மித்திரநாள், அனுடம்.

**சூ:—** புல், தாளி, பெண்ணை, தேள், போந்தை, மித்திரநாள், அனுடம்

**க: —**

### கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, இவற்றின் பெயர்

**சேட்டைவல் லாரைதுளங் கொளியிந்திர னாள்வேதி**
**செந்தழற் கேட்டைநாமம்.**
**சிலைகுருகு கொக்கன்றில் அசுர நாளானியொடு**
**தேட்கடை யோடுமூலம்.**
**[1]ஓட்டுமுற் குளமோடு டைமோடு டைகுள மாரிநீர்நா**
**ளுவந்தபூ ராடப்பெயர்.**
**உயர்கடைக் குளமானி யாடிவிச் சுவநா**
**ளுரைக்குமுத் திராடநாமம்.**
**தீட்டிடுமு லக்கைமுக் [2]கோல்சோணை மாயனாள்**
**சிரவணமோ ரைந்துமோணம்.**
**செப்புபுட் பறவையா வணிகாக்கை வசுநாள்**
**செழித்திடு மவிட்டப்பெயர்**
**கூட்டுசுண் டன்செக்கு வருணனாள் போருடன்**
**குன்றுசத யத்தினாமம்.**
**கூறிய[3]பு ரட்டாதி பாதநாள் முற்கொழுங்**
**கோனாளி யொருநான்குமே!** (35)

---

1 ஒடடுமுக் என்றுளது.

2 கோல்சோனை எனல் பொருந்தும்.

3 புரட்டாசி எனல் பொருந்தும்.

*சேட்டை,வல்லாரை,துளங்குஒளி, இந்திர நாள்,வேதி,
செந்தழல் கேட்டை நாமம்.
சிலை, குருகு, கொக்கு, அன்றில், அசுரநாள்,
ஆனி—ஒடு.
தேட்கடை—ஒடு மூலம்
ஓட்டும்[1]முற்குளம்—ஒடு, உடை, குளம், மாரி,நீர்நாள்,
உவந்த பூராடப்பெயர்.
உயர் கடைக்குளம், ஆனி, ஆடி, விச்சுவநாள்,
உரைக்கும் உத்திராட நாமம்.
தீட்டிடும் உலக்கை,முக்கோல்.[2]சோனை, மாயன்நாள்,
சிரவணம் ஓர் ஐந்தும் ஓணம்.
செப்பு புள், பறவை, ஆவணி, காக்கை, வசுநாள்,
செழித்திடும் அவிட்டப்பெயர்.
கூட்டு சுண்டன்.செக்கு,வருணன்நாள், போர்—உடன்
குன்று சதயத்தின் நாமம்.
கூறிய[3] புரட்டாதி, பாதநாள், முற்கெழுங்கோல்,
நாழி ஒரு நான்குமே! (35)

## கேட்டையின் பெயர்

**சே**:— துளங்கொளி, வல்லாரை, வேதி, எரி, தழல், இந்திரநாள், கேட்டை.

**பி**:— துளங்கொளி, வல்லாரை, வேதி, எரி, அழல், இந்திரநாள், சேட்டை, கேட்டை.

**சூ**:— சேட்டை, இந்திரநாள், வேதி, தழல், எரி, வல்லாரை, கேட்டை.

**க**:—

## மூலத்தின் பெயர்

**சே**:— கொக்கு, தேட்கடை, குருகு, வில், அன்றில், ஆனி, அசுரநாள், மூலம்.

---

1 முக்குளம் என்றுளது. 2 சோணை என்றுளது
3 புரட்டாசி எனினும் ஆம்.

**பி**:— கொக்கு, தேட்கடை, குருகு, வில், அன்றில், ஆனி, அசுரநாள், மூலம்.

**சூ**:— தேட்கடை, குருகு, கொக்கு, சிலை, அன்றில், ஆனி, அசுரநாள்.

**க**:—

## பூராடத்தின் பெயர்

**சே**:— உடைகுளம், முற்குளம், நீர்நாள், பூராடம்.

**பி**:— உடைகுளம், முற்குளம், மாரி, நீர்நாள், நீர், பூராடம்.

**சூ**:— உடைகுளம், முற்குளம், நீர்நாள், பூராடம்

**க**:—

## உத்திராடத்தின் பெயர்

**சே**:— ஆடி, ஆனி, கடைக்குளம், விச்சுவ நாள், உத்திராடம்.

**பி**:— ஆடி, விச்சுவநாள், கடைக்குளம், ஆனி, உத்திராடம்.

**சூ**:— கடைக்குளம், ஆனி, விச்சுவநாள், ஆடி, உத்திராடம்.

**க**:—

## திருவோணத்தின் பெயர்

**சே**:— நலத்தகு வயிரம், நள், சிரவணம், உலக்கை, சோனை, மாயோனாள், ஓணம், திருவோணம்.

**பி**:— சோனை, மாயோனாள், முக்கோல், சிரவணம், உலக்கை, திருவோணம்.

சூ:— மாயோனாள், உலக்கை, முக்கோல், சிரவணம், சோனை, திருவோணம்.

க:—

## அவிட்டத்தின் பெயர்

சே:— ஆவணி, காக்கை, பறவை, புள், வசுநாள், அவிட்டம்.

பி:— காகப்புள், வசுக்கணான், ஆவணி, பறவை, அவிட்டம்.

சூ:— காகப்புள், வசுக்கணாள், பறவை, புள், ஆவணி, அவிட்டம்.

க:—

## சதயத்தின் பெயர்

சே:— குன்று, போர், சுண்டன், பெருஞ்செக்கு, வருணனாள், சதயநாள், சதயம்.

பி:— குன்று, வருணனாள், செக்கு, சுண்டன், போர், சதயம்.

சூ:— செக்கு, சுண்டன், போர், குன்று, வருணனாள், சதயம்.

க:—

## பூரட்டாதியின் பெயர்

சே:— பூரட்டாதி, முற்கொழுங்கோல், பூரட்டாதி, நாழி.

பி:— புரட்டாதி, முற்கொழுங்கோல், நாழி, பரதநாள், பூரட்டாதி

சூ:— முற்கொழுங்கோல், நாழி, புரட்டை, பூரட்டாதி.

க:—

## உத்திரட்டாதி, இரேவதி, பனி, வானவில், இவற்றின் பெயர்

பெருகுபூ ரட்டாதி நாமமன் னவன்முரசு
பிற்கொழுங் கோலறிவனாள்
[1]பெருமுத்தி ரட்டாதி நான்குபெயர் சூலம்
பெருந்தோணி ப∴றிநாவாய்

இரவிநாள் புருடநாள் கடைமீன்கு றித்ததொழு
வெட்டுமி ரேவதிப்பே
ரிமம்துகின் மஞ்சு நீர் காரமொரு நான்குமே
யீரமார் பனியின்பெயர்.

விரவுமிங் திரவில்லு வானிடும் வில்லென
விளம்பிடும் வானவிற்பேர்.
மிகுகிழக் கேகீழெ னும்பெயர் கூதிருடன்
மேவுகூ திர்க்காலமும்

தெரிகுளிர் பனிக்கால மும்வச்சிர நாளாஞ்சி
றந்தவரை நாளினுடனே
[3]சேர்ந்தபா நாளுமிரு நாளாகு மென்றுபெயர்
செப்பினர் தமிழ்ப்புலவரே! (36)

*பெருகு பூரட்டாதி நாமம், மன்னவன், முரசு,
பிற்கொழுங்கோல், அறிவன்நாள்.
[4]பெரும் உத்திரட்டாதி நான்குபெயர். சூலம்,
பெருந்தோணி, ப∴றி, நாவாய்,
இரவிநாள், புருடநாள், கடைமீன், குறித்த தொழு,
எட்டும் இரேவதிப் பேர்.

---

1 பெருகுமுத்தி அல்லது பெறுமுத்தி எனல் வேண்டும்.

2 நீகாரம் எனல் வேண்டும்.

3 சேர்ந்தடா என்றுளது.

4 பெருகும் அல்லது பெறும் எனல் வேண்டும்.

இமம், துகின், மஞ்சு, [1]நீகாரம், ஒரு நான்குமே
ஈரம் ஆர் பனியின் பெயர்.
விரவும் இந்திரவில்லு வான்இடும்வில் என
விளம்பிடும் வானவில் பேர்,
மிகு கிழக்கே கீழ் எனும் பெயர். கூதிர் உடன்
மேவு கூதிர்க்காலமும்
தெரி குளிர்பனிக்காலமும் வச்சிரநாள் ஆம்.
சிறந்த அரைநாள்-இன்-உடனே
[2]சேர்ந்த பா நாளும் இரு நாள் ஆகும் என்று
பெயர் செப்பினர் தமிழ்ப்புலவரே! (36)

## உத்திரட்டாதியின் பெயர்

**சே:—** முரசு, பிற்கொழுங்கோல், மன்னன், அறிவனாள், உத்திரட்டாதி.

**பி:—** முரசு, பிற்கொழுங்கோல், மன்னன், நீபம், அறிவனாள், உத்திரட்டாதி.

**சூ:—** முரசு, பிற்கொழுங்கோல், மன்னன், உத்திரட்டாதி.

**க:—**

## இரேவதியின் பெயர்

**சே:—** தொழு, நாவாய், தோணி, சூலம், பஃறி, புருடநாள், கடைமீன், இரேவதி.

**பி:—** தொழு, நாவாய், தோணி, சூலம், பஃறி, புருடநாள், கடைமீன், இரேவதி.

**சூ:—** இரவிநாள், கலம், தோணி, தொழு, நாவாய், கடைநாள், சூலம், பெருநாள், இரேவதி.

**க:—**

---

[1] நீர்காரம் என்றுளது [2] சேர்ந்தடா என்றுளது.

### பனியின் பெயர்

**சே:—** இமம், துகினம், மஞ்சு, நீகாரம், பனி.

**பி:—** இமம், துகினம், மஞ்சு, நீகாரம், ஏமந்தம், பனி

**சூ:—** இமம், துகினம், பனி.

**க:—**

### வானவில்லின் பெயர்

**சே:—** இந்திரவில், வானவில்.

**பி:—** இந்திரவில், வானவில்.

**சூ:—** இந்திரதனு, வானவில்.

**க:—**

### கீழின் பெயர்

**சே:—** கிழக்கு, கீழ்.

**பி:—**

**சூ:—** கிழக்கு, கீழ்.

**க:—**

### கூதிரின் பெயர்

**சே:—** கூதிர்காலம், குளிர்பனிக்காலம், சிசிர நாள்.

**பி:—** கொடும்பனிக்காலம், சிசிரம்

**சூ:—**

**க:—**

### அரைநாளின் பெயர்

**சே:—** அரைநாள், பானாள், அத்தநாள், பாதி நாள்

பி:—

சூ:—

க:— பானாள், அரைநாள், இருணாள்.

## அருந்ததி, பக்கம், திதி, மேல், மாத்திரை இவற்றின் பெயர்

சாலிமட வரல்வசிட் டன்றேவி வடமீன்
தழைத்தவ னாள்மீனருந்
ததிநாம மைந்தும் விடினாமம் வெடியாந்
தயங்குபிர தமைமுனைந்தும்
கோலமார் சட்டிமுத லைந்துமே காதசி
கொண்டைந்து மூன்றுகூறாக்
கூறைந்து வரியெழுதி வரிமுறையி லோரொன்று
கூட்டிவா சிக்கில்மூன்றாச்
சீலமுட னைந்துகூ றாகுமுத னந்தைபத்
திரைசயை [1]யிரித்தைவினவில்
செப்புபூ ரணையைந்து பக்கமாம் பக்கமே
திதியெனும் பெயரதாகும்
வாலும்பர் மேக்குமிசை மீதுமீ யாறும்
வழங்குமே மேலெனும்பேர்
வல்லைபிறை யொல்லைசிறு வரையிலே சங்கண
மாத்திரைப் பொழுதாகுமே! (37)

*சாலி, மடவரல், வசிட்டன்தேவி, வடமீன்,
தழைத்த அ நாள்மீன்,
அருந்ததி நாமம் ஐந்தும்,விடிநாமம் வெடியாம்.
தயங்கு பிரதமை முன் ஐந்தும்,

---

1 யிருத்தை எனல்வேண்டும்.

கோலம் ஆர் சட்டிமுதல் ஐந்தும், ஏகாதசி
கொண்டு ஐந்தும், மூன்று கூறு ஆ(க)
கூறு ஐந்து வரி எழுதி, வரிமுறையில் ஓரொன்று
கூட்டி வாசிக்கில் மூன்று ஆ(க)

சீலம் உடன் ஐந்து கூறு ஆகும். முதல் நந்தை,
பத்திரை, சயை, *இருத்தை, வினவில்
செப்பு பூரணை, ஐந்து பக்கம் ஆம். பக்கம்-ஏ
திதி எனும் பெயர் அது ஆகும்

வால், உம்பர், மேக்கு, மிசை, மீது, மீ, ஆறும்
வழங்குமே மேல் எனும் பேர்
வல்லை, பிறை, ஒல்லை, சிறுவரை, இலேசம்,
கணம்,
மாத்திரைப் பொழுது ஆகுமே! (37)

## அருந்ததியின் பெயர்

**சே:**— அருந்ததி, சாலி, வடமீன்.

**பி:**— அருந்ததி, சாலி, வடமீன்.

**தூ:**— வடமீன், சாலி, அருந்ததி.

**க:**—

## விடிமீனின் பெயர்

**சே:**—

**பி:**— வெடி, விடிமீன்.

**தூ:**—

**க:**—

---

* இரித்தை என்றுளது.

## பக்கத்தின் பெயர்

சே:— நத்தை, பத்திரை, சயை, இருத்தை, பூரணை.

பி:— நத்தை, பத்திரை, சயை, இருத்தை, பூரணை.

சூ:— நத்தை, பத்திரை, சயை, இருத்தை, பூரணை.

க:—

## திதியின் பெயர்

சே:— திதி, பக்கம்.

பி:— திதி, பக்கம்.

சூ:—

க:—

## மேலின் பெயர்

சே:— மேற்கு, வலம், மீ, உம்பர், மேல்.

பி:—

சூ:— உம்பர், மேக்கு, மேல்.

க:—

## கால விரைவின் பெயர்

சே:— ஒல்லை, சிறுவரை, சிறுபொழுது.

பி:— கணம், மாத்திரை.

சூ:— ஒல்லை, இறை, சிறுவரை, இலேசம், வல்லை, மாத்திரை.

க:— ஒல்லை, சிறுவரை, சிறுபொழுது.

## ஆகாயம், முகில், இடி இவற்றின் பெயர்

அண்டம்வெளி யம்பரங் குண்டலம் புட்கரம
னந்தமீக் ககனம்வானம்
அந்தரம் விசும்புவிண் கோக்குடில் மங்குலா
சினிநாக மாகம்[1]வேணி
கண்டிடாக் காயம்வி யோமமுட னேநபங்
கம்மும்ப ரிடமிருபதும்
காட்டுமுப் பெயருமா காயமைப் புயலெழிலி
கனம்விளைவு மாசுமங்குல்
கொண்டல் [2]சிமுதம்வி சும்புகார் மேகமும்
கொண்மூவிண் ணோடுமழைவான்
குயின்கந்த ரம்பயோ தரமாரி சலதரங்
குளிர்சீத மஞ்சுமால்செல்
வண்டுதா [3]ராதரா முகிலிருப தேழ்பெயர்
விளம்புமொலி யசனியுருமு
விண்ணேறு செல்லிகுளி சதகோடி யனலேறு
வெடிகோம டங்கலிடியே! (38)

*அண்டம், வெளி, அம்பரம், குண்டலம், புட்கரம்,
அனந்தம், மீ, ககனம், வானம்,
அந்தரம், விசும்பு, விண், கோ, குடில், மங்குல்,
ஆசினி, நாகம், மாகம், வேணி,
கண்டிடாக் காயம், வியோமம்-உடனே நபம், கம்,
உம்பர், இடம், இருபதும்
காட்டும் முப்பெயரும் ஆகாயம் மை, புயல்,
எழிலி,
கனம், விளைவு, மாசு, மங்குல்,

---

1 வேனி எனல் வேண்டும். 2 சீமுதம் எனல் நன்று.
3 ராதர எனல் பொருந்தும்.

கொண்டல், [1]சீமுதம், விசும்பு, கார், மேகம்-உம்,
கொண்மூ, விண்-ஓடு, மழை, வான்,
குயின், கந்தரம், பயோதரம், மாரி, சலதரம்,
குளிர் சீதம், மஞ்சு, மால், செல்,
விண்டு, [2]தாராதரம், முகில் இருபத்து ஏழ் பெயர்.
விளம்பும் ஒலி, அசனி, உருமு,
விண்ணேறு, செல், இகுளி, சதகோடி, அனலேறு,
வெடி, கோ, மடங்கல், இடியே! (38)

## ஆகாயத்தின் பெயர்

**சே:**— அந்தரம், ஆசினி, அம்பரம், அங்குல், அண்டம், வானம், ககனம், மீ, வெளி, விண், நாகம், மாகம், விசும்பு, தலை, உம்பர், இடம், குடில், ஆகாயம்.

**பி:**— வேணி, விசும்பு, வெளி, உம்பர், இடம், வானம், கோ, விண், மண்டிலம், ஆசினி, மீ, மாகம், கம், வியோமம், புட்கரம், வான், ககனம், நாகம், மங்குல், குண்டலம், அண்டம், உலகம், அம்பரம், குழை, குடில், அந்தரம், அகலம், ஆகாயம்.

**சூ:**— அண்டம், வான், உலகு, மங்குல், அந்தரம், அம்பரம், கோ, குண்டலம். ககனம், காயம். குடிலம், புட்கரம், அநந்தம், வெளி, மீ, மாகம், ஆசினி, நபம், கம், விண்டலம், விசும்பு, வேணி, வியோமம், ஆகாயம்,

**க:**— மாகம், கனகம், வெளி, அந்தரம், அண்டம், வானம், மங்குல், மீ, கம், வியோமம், விசும்பு, அம்பரம், குடில், ஆசினி, விண், நாகம், கோ.

---

1 சிமுதம் என்றுள்ளது 2 தாராதராம் என்றுள்ளது.

## முகிலின் பெயர்

**சே:**— மேகம், சீதம், விசும்பு, வான், விண், முகில், கொண்மூ, மஞ்சு, கொண்டல், மை, மழை, எழிலி, கார், குயின், கந்தரம், விண்டு, மங்குல், மால், செல், கனம்.

**பி:**— மாரி, மழை, மஞ்சு, மாசு, கார், புயல், கொண்டல், வான், தர்ராதரம், மை, சீதம், சீவதம், செல், குயின், சீமூதம், எழிலி, கொண்மூ, விளைவு, முகில், விண், கந்த்ரம், சலதரம், விசும்பு, மங்குல், இளை, மால், அம்புதம், விண்டு, முதிரம், பயோதரம், கதம்பம், மெய்ப்பிரம், அப்பிரம், ஆயம், மேகம், ஆகாயம்,

**சூ:**— மேகம், மங்குல், சீதம், பயோதரம், தாராதாரம், குயின், மழை, எழிலி, மஞ்சு, கொண்டல், சீமூதம், கொண்மூ, முகில், விண், விசும்பு, மால், சலதரம், செல், புயல், கனம், கந்தரம், கார், மை, மாரி, ஆகாயம்.

**க:**— முகில், கொண்டல், எழிலி, குயின், மேகம், மாரி, விண், கந்தரம், மழை, சோனை விசும்பு, கார், வான், விண்டு, சுனம், செல், சீதம், மை, மஞ்சு, மால் கொண்மூ, பயோதரம், புயல், மங்குல், சீமூதம், அம்புதம்.

## இடியின் பெயர்

**சே:**— இகுளி, இடி.

**பி:**— வெடி, ஒலி, உருமு, கோ, விண்ணேறு, அசனி, செல், இகுளி, மடங்கல், இடி.

**சூ:**— வெடி, ஒலி, அசனி, செல், விண்ணேறு, மடங்கல், உருவம், அனலேறு, இடி.

**க:**— இகுள், அசனி, வானேறு, இடி.

## மழை, விடாமழை, பெருமழை, மழைவிடல், ஆலங்கட்டிமழை, மழைத்துளி, திவலை, மின்னல். இவற்றின் பெயர்.

மாரிதுளி பெயலாலி தூவலுத [1]கஞ்சிதரி
வருடமுறை புயலைதிவலை
வானமொடு சீகரந் [2]தூரலீ ரேழுமழை
யின்பெயர் பனித்தல்சோனை
சாரும்வி டாமழைப் பெயர்பெரும ழைப்பெயர்
சாற்றிலா சாரமாகும்
[3]தலையலேடு [4]மாதகந் தூறலொடு மூன்றுமழை
தான்பெய்து விடுதற்பெயர்.
பேருளக னோபலம் சுரையாலி கரகம்
பெருத்தவா லங்கட்டியாம்
பெயலாலி தளியுறை துமிதுளியி னாமமாம்
யிதிர்தூவல் சிதர்சீகரம்
சீருலவு துமிதமுடன் [5]சீகர மாறுமாம்
திவலைகன ருசிதடித்துத்
திகழ்வித்து ருச்சம்பை சபலைசஞ் சலையொளி
சிறந்தமின லேழாகுமே! (39)

*மாரி, துளி, பெயல், ஆலி, தூவல், உதகம், [6]சிதர்,
வருடம், உறை, புயலை, திவலை,
வானம்-ஒடு சீகரம், [7]தூறல், ஈரேழு மழையின்
பெயர் பனித்தல், சோனை,
சாரும் விடாமழைப் பெயர். பெருமழைப் பெயர்
சாற்றில் ஆசாரம் ஆகும்.
[8]தலையல்-ஒரு [9]மாதகம், தூறல்-ஒடு மூன்றும்
மழைதான் பெய்து விடுதல் பெயர்.

---

1 கஞ்சிதர் எனல் பொருந்தும்.

2 தூறலீ எனல் வேண்டும்,

3 தலையலொடு எனல் பொருந்தும். 4 ? 5 ?

6 சிதரி என்றுளது. 7 தூரல் என்றுளது.

8 தலையலேடு என்றுளது, 9 ?

பேர் உள கனோபலம், [1]சுரை, ஆலி, கரகம்,
பெருத்த ஆலங்கட்டி ஆம்.
பெயல், ஆடி, தளி, உறை, துமி, துளியின்,
நாமம் ஆம்,
பிதிர், தூவல், சிதர், சீகரம்.
சீர் உலவு துமிதம்-உடன் [2]சீகரம் ஆறும் ஆம்
திவலை, கனருசி, தடித்து, திகழ்
வித்துரு, சம்பை, சபலை, சஞ்சலை, ஒளி
சிறந்த மினல் ஏழு ஆகுமே! (39)

**மழையின் பெயர்**

**சே:**— துவலை, பெயலை, துளி, மாரி, உறை, பெயல், ஆலி, உதகம், சிதறி, தூவல், சீகரம், தூறல், வருடம்.

**பி:**— மாரி, வானம், வருடம், மழை.

**சூ:**— துளி, திவலை, தூவல், சீகரம், தூறல் மாரி, வருடம், உறை, ஆலி, வானம், மழை,

**க:**— திவலை, பெயல், மாரி, ஆலி, உறை, தளி, சீகரம்.

**விடாமழையின் பெயர்**

**சே:**— சோனை, பனித்தல்,

**பி:**— சோனை, பனித்தல்.

**சூ:**— பனித்தல் சோனை.

**க:**— சோனை, பனித்தல், மாரிவிடாது, சொரிதல்.

**பெருமழையின் பெயர்**

**சே:**— ஆசாரம்,

**பி:**— ஆசாரம்.

---

1 ? 2 கூறியது கூறல்,

சூ:— ஆசாரம்.
க:—

## மழை பெய்து விடுதலின் பெயர்

சே:— தலையல்
பி:— தூறல், தலையல், சோதகம்.
சூ:—
க:— தூறுந்தலையல், மழைவிடல்.

## ஆலங்கட்டி மழையின் பெயர்

சே:— ஆலி,
பி:— ஆலி, கனோபலம், கரகம்.
சூ:— ஆலி, கரகம், கனோபலம்.
க:—

## மழைத்துளி திவலையின் பெயர்

சே:— துளி, பெயல், ஆலி, உறை.

பி:— துவலை, சிதரம் பிதிர், சீகரம், சிதர் தூவல், துமிதம், திவலை.

சூ:— திவலை, தூவல், சீதர், சீகரம், ஆலி, தளி, உறை.

க: – துவலை, பிசிர், சிதர், தூறல், சீதாரி, துளி, சிதரி.

## மின்னலின் பெயர்

சே:— தடித்து, தடி, மின்.

பி:— சம்பை, வித்துரு, சபலை, தடித்து, சஞ்சலை, கனருசி, தடி, ஒளி, மின்னல்.

சூ:— வித்துத்து, தடித்து, சம்பை, சபலை, சஞ்சலை, மின்னல், கனருசி, மின்.

க:— ஏறு, தடித்து, தடிந்து, சபலை, மின். சஞ்சலை

## பருவம், பூரணை, அமாவாசை, நிகழ் காலம், பருவகாலம் இவற்றின் பெயர். பருவத்தின் பெயர், காலத்தின் பொதுப் பெயர்.

கார்கூதிர் முன்பனி பின்பனி யிளவேனில்
காயுமுதிர் வேனிலாறுங்
கருதிலா வணிமுத லிரண்டிரண் டாத்திங்கள்
காட்டுபரு வத்தின் பெயர்.
பூரணை பௌமனு மதியுவா வின்பெயர்
பொருமதியோ டிரவிகூட்டம்
போற்றமா வாசியின் பெயர்வேலை யென்பதும்
புகலுநிகழ் காலப்பெயர்
[1]ஏர்பெரு நவஞ்சரற் காலமே கார்கால
மிளவேனில் முதுவாதவ
மெனப்படுங் கோடைசுசி சம்மூன்று மேகொடிய
வேனிற்கி யன்றநாமம்.
பாரின்மிசை யானியம் மிருதுபரு வங்களாம்
பருவமுட னூழியாண்டு
பரவுகா லத்தின்பொ துப்பெய ருறையுளும்
பகரிலத நாமமாமே! (40)

*கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில்,
காயும் முதிர்வேனில், ஆறும்
கருதில் ஆவணிமுதல் இரண்டு இரண்டாத்திங்கள்
காட்டு பருவத்தின் பெயர்.
பூரணை, பௌமன்-உம், மதி, உவாவின் பெயர்.
பெருமதி-ஓடு, இரவி கூட்டம்,
போற்று அமாவாசியின் பெயர். வேலை என்பதும்
புகலும் நிகழ்காலப் பெயர்.

---

1 ஏர்பெறு எனல் நன்று.

[1]ஏர்பெறு நவம், சரற்காலமே கார்காலம்.
இளவேனில் முது ஆதவம்
எனப்படும், கோடை, சுசி, சம், மூன்றுமே,
கொடிய வேனிற்கு இயன்ற நாமம்.
பாரின்மிசை ஆனியம், இருது பருவங்கள் ஆம்,
பருவம்-உடன், ஊழி, ஆண்டு,
பரவு காலத்தின் பொதுப்பெயர், உறையுளும்
பகரில் அதன் நாமம் ஆமே! (40)

## ஆறுவகைப் பருவத்தின் பெயர்

**சே:**— கார், கூதிர், முன்பனி, பின்பனி இளவேனில், முதுவேனில்.

| | |
|---|---|
| கார்<br>கூதிர்<br>முன்பனி<br>பின்பனி<br>இளவேனில்<br>முதுவேனில் | ஆவணி முதலாக<br>இரண்டிரண்டாக<br>மேவின திங்கள்<br>எண்ணின கொளலே. |

**பி:** - கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில்.

கார்—ஆவணி, புரட்டாசி.
கூதிர் — ஐப்பசி, கார்த்திகை,
முன்பனி — மார்கழி, தை.
பின்பனி — மாசி, பங்குனி.
இளவேனில் — சித்திரை, வைகாசி.
முதுவேனில் — ஆனி, ஆடி.

**சூ:**— கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில்.

---

1 ஏர்பெரு என்றுளது,

| | | |
|---|---|---|
| ஆவணி, புரட்டாசி. | — | கார் |
| ஐப்பசி, கார்த்திகை. | — | கூதிர் |
| மார்கழி, தை. | — | முன்பனி |
| மாசி, பங்குனி. | — | பின்பனி |
| சித்திரை, வைகாசி. | — | இளவேனில் |
| ஆனி, ஆடி. | — | முதுவேனில் |

க:—

### பூரணையின் பெயர்

சே:— (ஐந்தாம் *பக்கம் பூரணையாகும்)
பி:— அனுமதி, பவ்வம், இடை, உவா.
சூ:— உவா, பவ்வம், பூரணை.
க:—

### அமாவாசையின் பெயர்

சே:—
பி:— குகு, அமாவாசை.
சூ:— இந்து, இரவிகூட்டம், அமை. அமாவாசை.
க:—

### நிகழ்காலத்தின் பெயர்

சே:— வேலை, நிகழ்காலம்.
பி:—
சூ:—
க:—

### கார்காலத்தின் பெயர்

சே:— கார்காலம், சரற்காலம்

பி:— நவம்

தெ:—

க:—

### இளவேனிலின் பெயர்

சே:—

பி:— மாதவம், வசந்தம், மது, இளவேனில்,

தெ:—

க:—

### கொடிய வேனிலின் பெயர்

சே:—

பி:— கோடை, சமம், சுசி, கொடியவேனில்.

தெ:—

க:—

### பருவத்தின் பெயர்

சே:— ஆனியம், இருது, பருவம்.

பி:— இருது, பருவம்.

தெ:— ஆனியம், இருது, பருவம்.

க:— பருவம், இருது, ஆனியம்.

சே:— வேலை, அமையம், காலை, பதம், எல்லை, காலம், பொழுது, பருவம், யாண்டு.

### காலத்தின் பெயர்

பி:— போழ்து, கொன், பொழுது, செவ்வி, ஏல்வை, வேலை, அமையம், காலை, கால், பதம், காலம்.

சூ:— வேலை, அமையம், செவ்வி, ஏல்வை, பொழுது, பாணி, காலை, கொன், பதம், போழ்து, காலம்.

க:— வேலை, அமையம், பதம், போது.

### வாரம், நாள், முன்னைநாள், மாதம், வருடம், யுகம்முடிவு, வாழ்நாள், பிரமன் வாழ்நாள், பின்னைநாள் இவற்றின் பெயர்.

வாசம்வா ரங்கிழமை யாம்பக லல்கலொடு
வைகலா ணியமுயர்திவா
வாய்த்ததிவ சந்தின மேல்வையே யெல்வையென
வந்தவொன் பதுநாளதாம்.
பேசரிய நென்னலு நெருனலு முன்னைநாட்
பெயர்திங்கள் மதிமாசமாம்.
பெயராய னம்வற்ச ரஞ்சமை யாண்டென்ப
பேசுநான் கும்வருடமாம்
ஓசையுள பருவமு மதன்பெய ரயனமே
யோராண்டி னிற்பாதியா
மூழியும டங்கலு முகமுடிவி ன்பிதான
முறையாயு ளாயுவாழ்நாள்.
ஆசிலாக் கற்பமே மலரயன் வாழ்நா
ளறைந்திடும் பின்றையிற்றை
யாகுமே *பின்னையொன் றோதிடும் பெயரென
வறைந்தனர் தமிழ்ப்புலவரே! (41)

---

*'பின்னையென்' எனல் வேண்டும்.

*வாசம், வாரம், கிழமை ஆம். பகல், அல்கல்—ஓடு
வைகல், ஆனியம், உயர் திவா,
வாய்த்த திவசம், தினம், ஏல்வை எல்வை என
வந்த ஒன்பது நாள் அது ஆகும்,
பேச அரிய நென்னல்—உம் நெருனல்—உம் முன்னை நாள்
பெயர், திங்கள், மதி, மாசம் ஆம்
பெயர். ஆயனம், வற்சரம், சமை, ஆண்டு என்ப
பேசும் நான்கும் வருடம் ஆம்.
ஓசை உள பருவம்—உம் அதன் பெயர். அயனம்—ஏ
ஓர் ஆண்டினில் பாதி ஆம்.
ஊழி—உம், மடங்கல்—உம் யுகம் முடிவின் அபிதானம்.
உறை. ஆயுள் ஆயு, வாழ்நாள்.
ஆசு இலாக் கற்பம்—ஏ மலர்அயன் வாழ்நாள்.
அறைந்திடும் பின்றை, பிற்றை,
ஆகுமே பின்னை [1]என்று ஓதிடும் பெயர் என
அறைந்தனர் தமிழ்ப்புலவரே! (41)

## வாரத்தின் பெயர்

**சே:**—
**பி:**— வாசரம், கிழமை, வாரம்.
**சூ:**—
**க:**—

## நாளின் பெயர்

**சே:**— பகல், வைகல், திவசம், தினம், ஆனியம், திவா, நாள்.

**பி:**— அல்கல், திவா, பகல், ஆனியம், திவசம், ஏல்வை, எல், வைகல், தினம்.

---

1 ஒன்று என்றுளது.

சூ:— ஏல்வை, திவசம், வைகல், அல்கல், தினம், எல்லை, ஆனியம், பகல்,

க:— திவா, திவசம், தினம், பகல், வைகல், நாள், ஆனியம்.

### முன்னை நாட் பெயர்

சே:— நென்னல், நெருநல், முன்னைநாள்,

பி:— நென்னல், நெருநல்.

சூ:— நெருநல், நென்னல்.

க:— நெருநல், நென்னல், முன்னைநாள்.

### மாதத்தின் பெயர்

சே:— மதி, திங்கள், மாதம்.

பி:— மதி, திங்கள். மாதம்,

சூ:— மதி, திங்கள், மாதம்.

க:— மதி, திங்கள், மாதம்.

### வருடத்தின் பெயர்

சே:— பருவம், காலம், யாண்டு, வருடம்,

பி:— ஆயனம், சமை, அயனம், தெய்வதம், வருடம், வற்சரம், ஆண்டு.

சூ:— வற்சரம், ஆண்டு, சமை, ஆயனம், வருடம்.

க:—

### ஆண்டிற்பாதியின் பெயர்

சே:—

பி:—

தூ:— அயனம்.

### யுகம் முடிவின் பெயர்

சே:— ஊழி, மடங்கல், யுகமுடிவு,

பி:— ஊழி, மடங்கல், உகமுடிவு.

தூ:— உகமுடிவு, மடங்கல், ஊழிக்காலம்,

க:— ஊழி, மடங்கல், உகம்.

### வாழ்நாளின் பெயர்

சே:— ஆயுள், ஆயுகம், வாழ்நாள்.

பி:— ஆயுள், ஆயுகம், வாழ்நாள்,

தூ:— ஆயுள்,

க:— ஆயுள், ஆயுகம், வாழ்தரவருநாள்.

### பிரமன் வாழ்நாளின் பெயர்

சே:— நான்முகன் வாழ்நாள், கற்பம்.

பி:—

தூ:— கற்பம்,

க — நான்முகனாள், கற்பம்.

### பின்னை நாளின் பெயர்

சே:— பிற்றை, பின்றை, பின்னைநாள்.

பி:— பிற்றை, பின்றை, பின்னைநாள்.

தூ:— பின்றை, பிற்றை, பின்னைநாள்.

க:— பிற்றை, பின்றை, பின்னர்.

### முதலாவது தெய்வப் பெயர்த்தொகுதி முற்றும்

# இரண்டாவது மக்கட்பெயர்த் தொகுதி

## முனிவர் பெயர், குறுமுனி பெயர், சப்த, முனிவர் பெயர், துரோணர் பெயர்.

அறவர்மா தவர்கடிந் தோருயர்ந் தோர்முனைவர்
அறிஞர்தா பதர்பண்ணவர்
அருந்தவர் தவத்தோர் தபோதன ரிலிங்கிக
ளையரிரு டிகள்யோகிகள்
உறுவரந் தணர்படிவர் மெய்யர்பெரி யோர்துறந்
தோர்கடந் தோர்சார்பிலோ
ரொழியாத யிருபத்து மூன்றுமுனி வோர்தமக்
குரியபெயர் கும்பயோனி
குறுமுனிய கத்தியன் பெயர்மலைய முனியுமாம்
கோதமன் பிருகத்திரி
கும்பன்பு லத்தியன் காசிபன் வசிட்டனே
கூறுமெழு முனிவோர்பெயர்
மறைபெருங் கொடியினன் கும்பசம் பவன்வளமை
மன்னுபா ரத்துவாசன்
வலியவின் னூலாளி யெனுநான்கு பெயரும்
வருந்துரோ ணாச்சாரியே! (1)

*அறவர், மாதவர், கடிந்தோர், உயர்ந்தோர், முனைவர்
அறிஞர், தாபதர், பண்ணவர்,
அருந்தவர், தவத்தோர், தபோதனர், இலிங்கிகள்
ஐயர், இருடிகள், யோகிகள்,

உறுவர், அந்தணர், படிவர், மெய்யர், பெரியோர்,
துறந்தோர், கடந்தோர், சார்பிலோர்,
ஒழியாத இருபத்துமூன்று முனிவோர் தமக்கு
உரிய பெயர். கும்பயோனி,
குறுமுனி, அகத்தியன் பெயர்; மலையமுனியும் ஆம்.
கோதமன், பிருகு, அத்திரி,
கும்பன், புலத்தியன், காசிபன், வசிட்டன் - ஏ
கூறு எழு முனிவோர் பெயர்,
மறைபெருங் கொடியினன், கும்பசம்பவன், வளமை
மன்னு பாரத்துவாசன்,
வலிய வின்னூலாளி எனும் நான்கு பெயரும்
வரும் துரோணாசச்சாரியே! (42)

## முனிவர் பெயர்

**சேந்தன் திவாகரம்:—** துறவோர், ஐயர், மாதவர், முனிவர், அறவோர், நீத்தோர், தாபதர், மெய்யர், தவத்தர், தபோதனர், முனைவர், இருடிகள், படிவர், பண்ணவர் யோகிகள், கடிந்தோர், பெரியோர், உறுவர், அந்தணர், அருந்தவர்,

**பிங்கல நிகண்டு:—** இருடிகள், முனிவர், மாதவர், இலிங்கிகள், முனைவர், படிவர், உறுவர், பண்ணவர், ஐயர், அறவோர், தபோதனர், அறிஞர், அந்தணர், துறவோர், கடிந்தோர், மேனியர். யோகியர், கோபங்காய்ந்தோர், நீத்தோர், மெய்யர், தாபதர்.

**சூடாமணி நிகண்டு:—** துறவர், சார்பில்லோர், நீத்தோர், தவர், முனைவர், மெய்யர், அறவர், மாதவர், கடிந்தோர், அந்தணர், அடிகள், ஐயர், உறுவர், தாபதர், இருடிகள், உயர்ந்தோர், யோகர், அறிஞர். பண்ணவர், அருந்தவர், முனிவர்.

**கயாதரம்**:— காய்ந்தவர், கோபந்துறந்தவர், யாவுங் கடிந்தவர், மெய்வாய்ந்தவர், ஐயர், முனிவர், உயர்ந்தவர், மாதவத்திற் கூர்ந்தமுனைவர், அறவோர், உறுவர், மெய், குற்றமற்றோர், ஆய்ந்தவறிஞர், தபோதனர், தாபதர், அந்தணர்.

## அகத்தியர் பெயர்

**சே**:—

**பி**:— குறுமுனி, கும்பயோனி, அகத்தியன்.

**தி**:— கும்பயோனி, குறுமுனி, அகத்தியன்.

**க**:—

## எழுமுனிவர் பெயர்

**சே**:—

**பி**:— அகத்தியன், புலத்தியன், அங்கிரா, கௌதமன், வசிட்டன், காசிபன், மார்க்கண்டேயன்.

**தி**:—

**க**:—

## துரோணர் பெயர்

**சே**:—

**பி**:— வேதக்கொடியோன், வின்னூலாளன், பாரத்துவாசன் கும்பசன், துரோணாச்சாரி.

**தி**:— மறைக்கொடியோன், வின்னூலாளன், பாரத்துவாசன், துரோணன்.

**க**:—

## சைவ சமயத்தார், மால் சமயத்தார், புத்த சமயத்தார், சமண முனிவர் பெயர்.

**பரவுசௌ மியாதிகம் பரர்சமண ரேயோகர்**
**பாசுபதர் காளாமுகர்,**
**பகருமா விரதியர் சைவசம யத்துளோர்**
**பாகவதர் வைகாநசர்**
**அருகர்வை ணவர்சமணர் அமணரா சியரே**
**யாழிமால் சமயத்துளோர்.**
**ஆனசீ வகர்தேரர் சாக்கியர் பௌத்தரே**
**யாம்புத்த சமயத்துளோர்.**
**திருநாமம் வேறுசம யத்துளோர் நாமமும்**
**செப்பியே கண்டுகொள்க**
**சீர்பெருகு மாகதர் சாவகர் சாரணர்**
**சிறந்ததா பதர்களென்ன**
**வருநாம நான்குமே சமணமுனி வோர்பெயர்**
**மற்றவரி லெண்மர்நீரில்**
**வானிலுயர் பூவினில் நினைந்துழி யொதுங்கிநெடு**
**வாழ்நாளி ருப்போர்களே!**

*பரவு சௌமியர், திகம்பரர், சமணர்-ஏ, யோகர்,
பாசுபதர், காளாமுகர்.
பகர்உமா விரதியர் சைவசமயத்து உளோர்,
பாகவதர், வைகாநசர்,
அருகர், வைணவர், சமணர், அமணர், ஆசியர்-ஏ,
ஆழிமால் சமயத்து உளோர்.
ஆன சீவகர், தேரர், சாக்கியர், பௌத்தர்-ஏ,
ஆம் புத்த சமயத்து உளோர்
திருநாமம். வேறு சமயத்து உளோர் நாமமும்
செப்பியே கண்டுகொள்க.

சீர்பெருகும் மாகதர், சாவகர், சாரணர்,
சிறந்த தாபதர்கள் என்ன
வரும் நாமம் நான்குமே சமண முனிவோர் பெயர்.
மற்று அவரில் எண்மர் நீரில்
வானில் உயர் பூவினில் நினைந்துழி ஒதுங்கி நெடு
வாழ்நாள் இருப்போர்களே! (43)

**சைவ சமயத்தார் பெயர்**

சே:— மாவிரதியர், காளாமுகர், பாசுபதர், சைவத் தவப்பாலோர்.

பி:— மாவிரதியர், காளாமுகர், பாசுபதர்.

சூ:— மாவிரதியர், பாசுபதர், காளாமுகர், சைவர்.

க:— காளாமுகர், மாவிரதிகள், பாசுபதர், சைவ சமயத்தவர்.

**மால்சமயத்தவர் பெயர்**

சே:— நாராயணசமயத்தோரர், பாகவதர்.

பி:— நாராணசமயத்தவர், பாகவதர், வைணவர்.

சூ:— பாகவதர்.

**புத்தசமயத்தவர் பெயர்**

சே:— புத்தர், சாக்கியர், தேரர், பௌத்தர், சீவகர்.

பி:— சாக்கியர், தேரர், பௌத்தர், சீவகர்,

சூ:— சீவகர், பௌத்தர், தேரர், சாக்கியர்.

க:— தேரர், சாக்கியர், பௌத்தர்.

### சமணமுனிவர் பெயர்

சே:— சாவகர், அருகர், சமணர், ஆசீவகர், சாரணர், சமணமுனிவர்.

பி—: சாவகர், அருகர், அமணர், ஆசீவகர், தாபதர், சமணமுனிவர்.

சூ:— சௌமியர், யோகர், திகம்பரர், சமணரிற் சித்தி பெற்றோர். (நீரிலும் நிலத்திலும் வானிலும் நினைத்த விடங்களிற் சஞ்சரிக்கின்ற சாரணர் எண்மர்.)

க:— சமணர், ஆசீவகர், சாரணர், ஆருகதர், முனிவர்.

### எப்பொருட்கும் இறைவன் பெயர்
### மூத்தோர் பெயர், சிறந்தோர் பெயர்.
### உயர்ந்தோர் பெயர்.

**ஆதிபன் பதிசெம்ம லீசன்பி ரான்றலைவ**
**னபதின்முதல் வன்காரணன்**
**ஆதிதா னுக்கொழுந னாதநா யகன்மன்ன**
**னாண்டகைபெ ருந்தகையுடன்**
**ஏதமில் லிறையரசு நம்பிபே ராள**
**னியம்புகோன் மீளிகாந்தன்**
**என்னுமறு நான்குமே எப்பொருட் கும்மிறைவ**
**னிலகுதிரு நாமமீசன்**
**ஓதுகோ மானடிக ளையனத் தன்குரவ**
**னுரவோன்சு வாமிபெருமாள்**
**உறையிறைவ னாசானெ னும்பத்து மொன்றுமே**
**யொப்பரிய மூத்தோர்பெயர்**
**தீதிலண் ணற்குரிசி லேந்தலே தோன்றலொடு**
**செம்மலே பெருமைதன்னால்**
**சிறந்தோர்கள் பெயருலக மேவுயர்ந் தோரெனச்**
**செப்பினர் தமிழ்ப்புலவரே!** (3)

ஆதிபன், பதி, செம்மல், ஈசன், பிரான், தலைவன்,
அதிபன், முதல்வன், காரணன்,
ஆதி, தா்னு, கொழுநன், நாதன், நாயகன், மன்னன்,
ஆண்டகை, பெருந்தகை-உடன்,
ஏதம் இல் இறை, அரசு, நம்பி, பேராளன்,
இயம்பு கோன், மீளி, காந்தன்,
எனும் அறுநான்குமே எப்பொருட்டும் இறைவன்
இலகு திருநாமம் ஈசன்,
ஓது கோமான், அடிகள், ஐயன், அத்தன், குரவன்,
உரவோன், சுவாமி, பெருமான்
உறை இறைவன், ஆசான் எனும் பத்தும் ஒன்றுமே
ஒப்பரிய மூத்தோர் பெயர்.
தீது இல் அண்ணல், குரிசல், ஏந்தலே, தோன்றல்-ஒடு
செம்மலே, பெருமைதன்னால்
சிறந்தோர்கள் பெயர். உலகம்-ஏ உயர்ந்தோர் எனச்
செப்பினர் தமிழ்ப்புலவரே! (44)

### எப்பொருட்கும் இறைவன் பெயர்

**சே:** - நாதன், நாயகன், அதிபன், காந்தன், பதி, கோன், ஈசன். செம்மல், இறை, தலைவன், மன்னவன், பிரான், கொழுநன், அரசன், ஆதி, எப்பொருட்கும் இறைவன்.

**பி:**— இறை, காரணன், இயவுள், தோன்றல், அதிபன். எப்பொருட்கும் இறைவன்.

**சூ:**— நாதன், கொழுநன், காந்தன். பதி, கோன், ஈசன், ஆதிபன், அதிபன், செம்மல். அரன், பிரான், ஆதி, மன்னன், எப்பொருட்கும் இறைவன்.

**க:—** அண்ணல், குருசில். செம்மல், ஏந்தல், தோன்றல். தலைமை, சிறந்தவர், செம்மல், காவலன். கோன், தலைவன், அதிபன், பிரான், வேந்தன், ஈசன், மன்னன், பதி, காந்தன், நாதன், இறை, ஆதி, நாயகன்.

## மூத்தோர் பெயர்

சே :— அடிகள், அத்தன், ஐயன், ஆசான், குரவன், சாமி, கோமான், பெருமான், உரவோன், ஈசன், இறைவன், தலைவன், பதி, நாதன், மூத்தோன், மூத்தோர்.

பி :— *அண்ணல், தமையன், தம்முன், தோன்றல் முன்னவன், சேட்டன், மூத்தோன்.

சூ :— குரவன், ஐயன், சுவாமி, கோமான், அடிகள், அத்தன், உரவோன், ஈசன், பதி, இறை, மூத்தோன்.

க :— குரவன், பெருமான், முதல்வன், கோ, நாதன், ஐயன், இறை, அச்சன், அத்தன், பெரியோன், சுவாமி, பதி, ஆசான், சாமி, கோமான், அடிகள்.

## சிறந்தோர் பெயர்

சே :— அண்ணல், குரிசில், ஏந்தல், தோன்றல், செம்மல்.

பி :— பெருமகன், மல்லன், தலைவன், பெருமான், குரிசில், செம்மல், கோமான், கோ, ஆண்டகை, பொருநன், அண்ணல், ஓங்கல், ஏந்தல், மீளி, விடலை. (பெருமையிற் சிறந்தோன்)

சூ :— குரிசில், அண்ணல், ஏந்தல், தோன்றல், செம்மல். சிறந்தோர்.

க :— அண்ணல், குரிசில், செம்மல். ஏந்தல், தோன்றல்,

## உயர்ந்தோர் பெயர்

சே :— உலகம்

பி :— உலகம்

சூ :— உலகம்

---

*அண்ணன் என்ற பொருளில்.

## அறிஞர் பெயர், கற்றோர் பெயர், கலைஞர் பெயர், ஓத்துரைப்போர் பெயர், ஆசிரியர் பெயர், மாணாக்கர் பெயர்.

சான்றவ ருரவரே யான்றவ ராரியர்
தகுதியோ ராய்ந்தோர்நலோர்
சாற்றுமிக் கவர்மேதர் மேலவ ருயர்ந்தவர்
தம்முட னுலகமென்னத்
தோன்றுபதின் மூன்றுமே யறிஞர்தம் பெயர்கவிஞர்
சொற்புலவர் முதுவர்மூத்தோர்
துலைவின்மே தயர்விபுத ரவைவலோர் புலவரொடு
சூரிசா ரதிபண்டிதர்
ஏன்றபுதர் விற்பனர் கலைஞர்சங் கஞ்சா(டு)
டெனப்படும் கற்றோர்பெயர்
இனிமைபெறு கலைஞரே கவிவல்லோ ராங்கணக்
காயரே யோத்துரைப்போர்
ஊன்றுதே சிகனீசன் ஆசான்ப ணிக்கனு
வாத்தியா சாரியன்பேர்
ஓதுமா ணாக்கனே கற்போனெ னப்பெய
ருரைத்தனர் தமிழ்ப்புலவரே! (4)

*சான்றவர், உரவரே ஆன்றவர், ஆரியர்,
தகுதியோர், ஆய்ந்தோர், நலோர்,
சாற்று மிக்கவர், மேதர், மேலவர், உயர்ந்தவர்,
தம்முடன் உலகம் என்னத்
தோன்று பதின்மூன்றுமே அறிஞர்தம் பெயர்,
கவிஞர்,
சொற்புலவர். முதுவர், மூத்தோர்,
துலைவின் மேதையர், விபுதர், அவைவலோர்,
புலவர்-ஒடு
சூரி, சாரதி, பண்டிதர்,

ஏன்ற புதர், விற்பனர், கலைஞர், சங்கம், சாடு.
எனப்படும் கற்றோர் பெயர்.
இனிமைபெறு கலைஞரே, கவிவல்லோர் ஆம்.
கணக்காயரே, ஓத்துஉரைப்போர்,
ஊன்று தேசிகன், ஈசன், ஆசான், பணிக்கன்,
உவாத்தி, ஆசிரியன் பேர்.
ஓதும் மாணாக்கனே கற்போன் எனப் பெயர்
உரைத்தனர் தமிழ்ப்புலவரே! (45)

## அறிஞர் பெயர்

**சே**:— சான்றோர், மிக்கோர், நல்லவர், மேலவர், ஆய்ந்தோர், உயர்ந்தோர், ஆரியர், உலகு, ஆன்றோர், அறிவுடையர், அறிஞர்.

**பி**:— ஆன்றோர், சான்றோர்,

**சூ**:— சான்றவர், மிக்கோர், நல்லோர், தகுதியோர், மேலோர், ஆய்ந்தோர், ஆன்றவர், உலகம், மேதாவியர், அறிஞர்.

## கற்றோர் பெயர்

**சே**:— கவிஞர், கலைஞர், கற்றவர், மேதையர், சவை, சங்கம், முதுவோர், மூத்தோர், அவை, அறிஞர், புதர், புலவர்.

**பி**:— கவிஞர், மேலோர், பண்டிதர், புலவர், ஆசிரியர், புந்தியர், மேதையர், ஆன்றோர், சான்றோர், விற்பனர், கவிகள், சாரதி, சாடுவர், சூரியர்.

**சூ**:— கலைஞர், மேதையர், மூத்தோர், கற்றவர் அவை, விற்பன்னர், கவிஞர், சங்கம், சாரதி, சூரி, சாடு, புலவர், அறிஞர், புதர், பண்டிதர்,

**கூ**:— கற்றவர், சான்றோர், உயர்ந்தவர், நல்லோர், கரி, உலகம், உற்றவர், ஆன்றோர்,

பெரியோர், ஆரியர். உரவோர், முற்றுமுணர்ந்தவர், பேரவை, கற்றோர், முதுவர், சங்கம், கலைஞர், அறிஞர், புலவர், நூல்வல்லவர்.

## கலைஞர் பெயர்

**சே**:— கலைவல்லோர், கலைஞர்.
**பி**:— கலைவல்லோர், கலைஞர்.
**சூ**:— கவிவல்லோர், கலைஞர்,

## ஒத்துரைப்போர் பெயர்

**சே**:— கணக்காயர், நூலரைப்போர், ஒத்துரைப்போர்.

**பி**:— கணக்காயர், நூலுரைப்போர், ஒத்துரைப்போர்.

**சூ**:— கணக்காயர், ஒத்துரைப்போர்.

## ஆசிரியர் பெயர்

**பி**:— ஓசன், பணிக்கன், உபாத்தி, தேசிகன்.

**சூ**:— ஆசான், தேசிகன், ஓசன். உபாத்தியாயன். பணிக்கன்.

## மாணாக்கர் பெயர்

**சூ**:— கற்போன், மாணாக்கன்.

## வீட்டுமன், தருமன், துரியோதனன், கர்ணன் ஆகியோர் பெயர்.

**தரணிபுகழ் கங்கைதன யன்றால கேதனன்**
**சந்தனன் சிறுவன்விரதன்**
**தக்கபிர மச்சாரி தெய்வவிர தன்வீடுமன்**
**சாற்றுகாங் கேயன்பெயர்.**
**விரிகுவளை யந்தாமன் முரசுயர்த் தோன்மெய்ம்மை**
**விரதன்றன மேவுசெம்மல்**
**மிக்கபொறை யன்குந்தி புதல்வன்னு திட்டிரன்**
**மிகுபாண்டு மகனெட்டுமே,**
**வருதரும நாமஞ்சு யோதனன் காந்தாரி**
**மைந்தனர வக்கொடியினன்**
**மன்னர்மன் னவன்வணங் காமுடியி னன்வலம்**
**புரிமாலை யன்செழித்த**
**திருதராட் டிரன்மதலை துரியோத னன்பெயர்**
**சீரிரவி சேயங்கர்கோன்**
**செறிகவச குண்டலன் கானீனன் நீள்கச்சை**
**சேர்கொடியி னன்கன்னனே!** (5)

*தரணிபுகழ் கங்கைதனயன், தாலகேதனன்,
சந்தனன் சிறுவன், விரதன்,
தக்க பிரமச்சாரி, தெய்வவிரதன், வீடுமன்.
சாற்று காங்கேயன் பெயர்.
விரி குவளையந்தாமன், முரசுயர்த்தோன், மெய்ம்மை விரதன்,
தனம்மேவு செம்மல்
மிக்க பொறையன், குந்திபுதல்வன், உதிட்டிரன்,
மிகு பாண்டுமகன் எட்டுமே
வருதருமன் நாமம். சுயோதனன், காந்தாரிமைந்தன்,
அரவக் கொடியினன்,
மன்னர் மன்னவன், வணங்கா முடியினன்,
வலம்புரி மாலையன், செழித்த

திருதராட்டிரன் மதலை துரியோதனன் பெயர்.
சீர் இரவிசேய், அங்கர்கோன்,
செறி கவசகுண்டலன், கானீனன், நீள்
கச்சைசேர்கொடியினன் கன்னனே. (46)

### வீட்டுமன் பெயர்

**பி**:— சந்தனுமுன்மைந்தன், தெய்வவிரதன், கங்கை தனையன், காங்கேயன், பிரமசாரி, வீட்டுமன்.

**சூ**:— தெய்வவிரதன், கங்கைதனயன், சந்தனுமுன் பெற்றோன், பிரமசாரி, காங்கேயன், வீட்டுமன்.

### தருமன் பெயர்

**பி**:— தருமமைந்தன், பொறையாளன், உதிட்டிரன், முரசக்கொடியோன், தருமபுத்திரன், தருமன்.

**சூ**:— குவளைத்தாரான், யுதிட்டிரன், பொறையன், முரசக்கொடியோன், அறத்தின்சேய், பாண்டு மைந்தன், குந்தி புதல்வன், மெய்ம்மை விரதமாக் கொள்வோன், தருமன்.

### துரியோதனன் பெயர்

**பி**:— மன்னர் மன்னவன், வணங்காமுடியோன், பன்னகமுயர்த்தோன், காந்தாரிசெம்மல், துரியோதனன்.

**சூ**:— காந்தாரிமைந்தன், நந்தியாவர்த்தத் தாமன், அரவுயர்த்தவன், வணங்காமுடியினன், அரசன்மன்னன், சுயோதனன், திருதராட்டிரன்றன் செல்வன், துரியோதனன்.

### கர்ணன், வீமன், விசயன், குருகுலத்தரசர் ஆகியோர் பெயர்.

**மன்னுகொடை யாளியுஞ் சௌரியு மவன்பெயர்.**
**மடங்கலின் கொடியோன்வெய்யோன்**
**[1]மாறுதிக தாயுதன் வீறுகோ தரன்வாயு**
**மைந்தனி டும்பிகொழுநன்**

1 மாறுதி என்றுளது (மாருதி எனல் நன்று)

**என்றுமெழு பெயருமே வீமன்விச யன்பார்த்தன்**
**இந்திரன் மதலைபோரில்**
**எதிரில்காண் டீவன்ற னஞ்செயன் பற்குனன்**
**இயம்புமா தவிநாயகன்**
**பன்னியசு வேதவா கனன்வான ரக்கொடி**
**படைத்தவன் சவ்வியசாசி**
**பகர் [2]கிட்டி னன்[3]கிட்டி னற்கினிய தோழன்**
**பரந்தகாண் டவனாரியே**
**துன்னியகி ரீடிவீ பற்சுமூ வைந்துமாண்**
**டெழில்கூர ருச்சுனன்பேர்.**
**தொகுபரதர் கௌரவர் பௌரவ ரெனும்பெயர்**
**சொலிற்குரு குலத்தரசரே!** (6)

*மன்னு கொடையாளியும் சௌரியும் அவன் பெயர்,
மடங்கலின் கொடியோன். வெய்யோன்,
[4]மாருதி, கதாயுதன், வீறுகோதரன், வாயு மைந்தன்,
இடும்பி கொழுநன்,
என்னும் எழு பெயருமே வீமன். விசயன், பார்த்தன்,
இந்திரன்மதலை, போரில்
எதிர் இல் காண்டீபன், தனஞ்செயன், பற்குனன்,
இயம்பு மாதவிநாயகன்,
பன்னிய சுவேதவாகனன், வானரக்கொடிபடைத் தவன்,
சவ்வியசாசி,
பகர் கிருட்டினன், கிருட்டினர்க்கு இனியதோழன்
பரந்த காண்டவனாரி—ஏ,
துன்னிய கிரீடி, வீபற்சு, மூவைந்தும்
ஆண்டெழில்கூர் அருச்சுனன் பேர்.
தொகு பரதர், கௌரவர், எனும் பெயர்
சொலில் குரு குலத்து அரசரே! (47)

---

2, 3. கிருட்டினன். 4 மாறுதி என்றுளது.

## கர்ணன் பெயர்

**பி:—** கதிர்மதலை, மிகுகொடையாளன், அங்கர் கோமான், கவசகுண்டலன், கானீனன், கச்சைக்கொடி யோன், கன்னன்.

**சூ:—** கதிர்மதலை, கவசகுண்டலன், கச்சைக் கொடியினன். கானீனன், அங்கர்கோமான், கன்னன்.

## வீமன் பெயர்

**பி:—** வாயுமைந்தன், கதாயுதன், மாருதி, கோளரிக்கொடியோன், இடும்பிகொழுநன், விருகோ தரன், வீமன்.

**சூ:—** மடங்கற்கொடியோன், மாருதி, வாயு மைந்தன், இடும்பைகொழுநன், கதாயுதன்.

## அருச்சனன் (விசயன்) பெயர்

**பி:—** பற்குனன், கிரீடி, பார்த்தன், விபற்சு, சவ்வியசாசி, விசயன், தனஞ்சயன், சுவேதவாகனன், சுரேந்திரன், மைந்தன், கிருட்டினன், கிருட்டின சகாயன், மாதவிகொழுநன், வானரக்கொடியோன், காண்டீபன், ஆண்டொழின்மைந்தன், அருச்சுனன்.

**சூ:—** கிருட்டினன், பற்குனன், தனஞ்சயன், காண்டீவன், சவ்வியசாசி,வீபற்சு,விசயன், பார்த்தன், கேசவற்குத் தோழன், சுவேதவாகனன், கிரீடி, அருச்சுனன்.

## குருகுலத்தரசர் பெயர்

**சே:—** பரதர், கௌரவர், குருகுலத்தரசர்.

**பி:—** பௌரவர், கௌரவர், பாரதர், குருகுல மன்னர்.

**சூ:—** பாரதர், பௌரவர், கௌரவர், குருகுலத் தோர்.

## சேரன் பெயர், சோழன் பெயர்.

**கொல்லிவெற் பன்பொறையன் வானவன் குட்டுவன்**
**கொங்கனுதி யன்பூழியன்**
**கோதைபொரு நைத்துறைவன் மலையமான்**
**சேரமான்**
**குடநாடன் வஞ்சிவேந்தன்**
**வில்லவன் கேரளன் பனைமாலை புனையண்ணல்**
**விற்கொடியி னன்சேரலன்**
**மிக்கவா னவரம்ப னொன்றொழிய விருபதும்**
**விளம்புமே சேரன்பெயர்**
**சொல்லுமக ளங்கனப யன்கோழி வேந்தன்**
**துலங்குநீர் நாடன்வளவன்**
**சூரியன் சென்னிபொன் னித்துறைவன் [1]யேரியன்**
**சொற்கிள்ளி யொடுசெம்பியன்**
**கொல்லும்பு லிக்கொடிக் கிறையாத்தி மாலையன்**
**கோனேரி வெற்பனிரவி**
**குலத்தோன்ற லகண்டனீ ரெட்டுமே சோழன்**
**குறித்தகே சவனுமாமே!** (7)

*கொல்லிவெற்பன், பொறையன், வானவன்,
குட்டுவன்,
கொங்கன், உதியன், பூழியன்.
கோதை, பொருநைத்துறைவன், மலையமான்,
சேரமான்,
குடநாடன், வஞ்சிவேந்தன்,
வில்லவன், கேரளன், பனைமாலைபுனை அண்ணல்,
வில்கொடியினன், சேரலன்,
மிக்க வானவரம்பன், ஒன்று ஒழிய இருபதும்,
விளம்புமே சேரன் பெயர்.
சொல்லும் அகளங்கன், அபயன், கோழிவேந்தன்,
துலங்கு நீர்நாடன், வளவன்,
சூரியன், சென்னி, பொன்னித்துறைவன்,
[2]நேரியன்,
சொல் கிள்ளி—ஒடு, செம்பியன்,

---

1 நேரியன் எனல் பொருந்தும் 2 யேரியன்என்றுளது

கொல்லும் புலிக்கொடிக்குஇறை, ஆத்திமாலையன்,
கோன், நேரிவெற்பன்,
இரவிகுலத் தோன்றல், அகண்டன், ஈரெட்டுமே
சோழன்
குறித்த கேசவனும் ஆமே! (48)

## சேரன் பெயர்

சே: பூழியன், உதியன், கொங்கன், பொறையன், வானவன், குட்டுவன், வானவரம்பன், வில்லவன், குடநாடன், வஞ்சிவேந்தன், கொல்லிச் சிலம்பன், கோதை, கேரளன், போந்தின்கண்ணிக் கோன், பொருனைத்துறைவன், சேரலன், மலயமான், கோச்சேரன்.

பி:— பூழியன், உதியன், கொங்கன், பொறையன் வானவன், குட்டுவன். வானவரம்பன், வில்லவன், குடநாடன், வஞ்சிவேந்தன், கொல்லிச்சிலம்பன், கோதை, கேரளன், பொருநைத்துறைவன், போந்தின் கண்ணியன், மலையன், மலையமான், சேரன்.

சூ:— வில்லவன், கொங்கன், வஞ்சிவேந்தன், போந்தின்றாரோன், கொல்லிவெற்பவன், குடக்கோ, குட்டுவன், குடகன். கோதை,உதியன், வானவரம்பன், மலயமான், பொருநையாற்றோன், சேரலன், சேரன்.

க:— கேரளன், பூழியன், கொங்கன், உதியன், போந்தடர்கண்ணியன், வானவன், கொல்லிப் பொருனைமன்னன்,குருநாடன்,குட்டுவன், வில்லவன், கோதை, வஞ்சிவாய்ந்தபதிச்சேரன், சேரலன், வானவரம்பன், பொன்.

## சோழன் பெயர்

சே:— சென்னி, வளவன், கிள்ளி, செம்பியன், பொன்னித்துறைவன், புலிக்கொடிப்புரவலன், நேரியன், ஆர்த்தார்க்கோன், நேரிறை, அபயன், நேரி வெற்பன், கோழிவேந்தன், சூரியன், புனனாடன், கோச்சோழன்.

பி:— சென்னி, வளவன், செம்பியன், கிள்ளி, பொன்னித்துறைவன், புலிக்கொடியோன், மால், கோழிவேந்தன், நேரிவெற்பன், ஆரின்கண்ணியன், நேரியன், அபயன், சூரியன், புனனாடன், சோழன்.

சூ:— நேரியன், சென்னி, பொன்னித்துறைவன், நேரிவெற்பன், ஆரின்மாலையன், கிள்ளி, அபயன், கோழி வேந்தன், வளவன், செம்பியன், புலியுயர்த் தோன், சூரியன், புனனாடன், மால், சோழன்.

க:— பொன்னித்துறைவன், அனகன், அபையன், புலிக்கொடியோன், சென்னி, புனனாடன், ஆரியன், நேரிச்சிலம்பன், கன்னி, நரபதி, செம்பியன், சோழன், வளவன், நன்னீர் கொன்னவில், கோழிப்பதியோன், இரவிகுலத்தவன்.

## பாண்டியன் பெயர், முதலேழு வள்ளல்கள் பெயர், இடையேழு வள்ளல்கள் பெயர். கடையேழு வள்ளல்கள் பெயர்.

**வழுதிகூ டற்கிறைவன் மீனவன் பஞ்சவன்**
**மாறன்வேம் பின் கண்ணியன்**
**மதிகுலன் கைதவன் கௌரியன் றமிழ்நாடன்**
**வண்புனற் குமரிசேர்ப்பன்**
**செழியன்வை கைத்துறைவன் மீனமுயர் கொடியினன்**
**தென்னவன் பொதியவேற்பன்**
**செப்புமீரெட்டுமே பாண்டியன் பெயராம்**
**தெளிந்தபூ ழியனுமாமே.**
**அழிவிலாச் சகரன்ச காரிசெம் பியனிருதி**
**யணிநளன் துந்துமாரன்**
**அறைவிரா டன்யெழுவ ரக்குரன் சந்தன்**
**அந்திமான் சந்திமான்**

**பழுதில்சிசு பாலனொடு கன்னெழு வர்களோரி**
**பயின்மலைய னெழிலிநள்ளி**
**பாரியா யன்பேக னெழுவர்முத லிடைகடை**
**பகுத்தவள் ளற்பெயர்களே!** (8)

*வழுதி, கூடற்கு இறைவன், மீனவன், பஞ்சவன்,
மாறன், வேம்பின் கண்ணியன்,
மதிகுலன், கைதவன், கௌரியன், தமிழ்நாடன்,
வண்புனல், குமரி சேர்ப்பன்,
செழியன், வைகைத்துறைவன், மீனம் உயர் கொடியினன்,
தென்னவன், பொதியவெற்பன்,
செப்பும் ஈரெட்டுமே பாண்டியன் பெயராம்;
தெளிந்த பூழியனும் ஆமே.
அளவு இலாச் சகரன், சகாரி, செம்பியன், நிருதி,
அணி நளன், துந்துமாரன்,
அறை விராடன், எழுவர். அக்குரன், [1]சந்தன்,
அந்திமான், சந்திமான்,
பழுது இல் சிசுபாலன்-ஒடு கன்னன் [2]எழுவர்கள். ஓரி,
பயின் மலையன், எழிலி, நள்ளி,
பாரி, ஆயன், பேகன்,எழுவர் முதல்,இடை,கடை,
பகுத்த வள்ளல் பெயர்களே! (49)

**பாண்டியன் பெயர்**

**சே:—** செழியன், தமிழ்நாடன், கூடற்கோ, தென்னவன், வழுதி, மீனவன், பஞ்சவன், மாறன், கௌரியன், வேம்பின், கண்ணிக்கோ, கைதவன், பொதியப்பொருப்பன், புனல்வையைத்துறைவன், குமரிச்சேர்ப்பன், கோ, பாண்டியன்,

**பி:—** செழியன், கூடற்கோமான், தென்னவன், வழுதி, மீனவன், பஞ்சவன், மாறன், கௌரியன், வேம்பின் கண்ணியன், கைதவன், மலையப்

---

1=? 2. அறுவரே கூறப்பட்டுளது

பொருப்பன், வைகைத்துறைவன், குமரிச்சேர்ப்பன், பாண்டியன்.

சூ:— செழியன், கூடற்கோமான், தென்னவன், வேம்பின்றாரோன், வழுதி, குமரிச்சேர்ப்பன், வைகையந் துறைவன். மாறன், பொதியவெற்பன், மீனவன், கைதவன், பஞ்சவன், கௌரியன், பாண்டியன்.

க:— கூடற்கொருகோன், கவுரியன், கோற்கை தவன், செழியன், தமிழ்நாடன், பஞ்சவன், மீனவன், தென்னவன், வழுதி, மலையன், குமரித்துறையவன், வைகைக்குமன், பழுதில் புகழ் மாறன், பூழியன், நிம்பத்தார்பாண்டியன்.

## முதல் ஏழு வள்ளல்களின் பெயர்.

பி:— சகரன், காரி, நளன், துந்துமாரி. நிருதி, செம்பியன், விராடன்.

சூ:— செம்பியன், காரி, விராடன், நிருதி, துந்துமாரி, சகரன், நளன்.

## இடையேழு வள்ளல்களின் பெயர்.

பி:— அந்திமான், சிசுபாலன், அக்குரன், வக்கிரன், சந்திமான், கன்னன், சந்தன்.

சூ:— அக்குரன், சந்திமான், அந்திமான், சிசு பாலன், வக்கிரன், கன்னன், சந்தன்.

## கடையேழு வள்ளல்களின் பெயர்.

பி:— பாரி, எழிலி, நள்ளி, ஆய், மலையன், ஓரி, பேகன்.

சூ:— பாரி, ஆய், எழிலி, நள்ளி, மலையன், பேகன், ஓரி.

## பிராமணர், பிரமசாரி இவர்கள் பெயர், அந்தணர் தொழில்.

அய்யர்வே தியரிரு பிறப்பாளர் பூசுர
ராய்ந்தவர் தொழுகுலத்தோர்
அந்தணர் முனிவர்மறை யோருயர்ந் தோர்வேள்வி
யாளர்முப் புரிநூலினோர்
மெய்யரறு தொழிலாளர் செந்தீவ ளர்ப்பவர்
வேதபா ரகர்விப்பிரர்
மிக்கபண் ணவர்நூலோ ராதிவரு ணத்தர்
விளம்பிடும் பார்ப்பார் பெயர்.
துய்யபிர மச்சாரி யின்பெயர் வன்னியுந்
துவசனுங் கூறுமிப்பால்
சொலிலோத லோதுவித் திடல்வேட்டல் வேட்பித்தல்
தொகுமீத லீவித்தலென்
றெய்துமித் தொழிலாறு மந்தணர்க் குரியவா
மேற்றலு மவர்கள்கடனா
மென்னவே செந்தமிழை யாராய்ந்து மலையத்(து)
திருந்தவ னியம்பினானே! (9)

*அய்யர், வேதியர், இருபிறப்பாளர், பூசுரர்.
ஆய்ந்தவர், தொழுகுலத்தோர்,
அந்தணர், முனிவர், மறையோர், உயர்ந்தோர்,
வேள்வியாளர், முப்புரிநூலினோர்,
மெய்யர், அறுதொழிலாளர், செந்தீவளர்ப்பவர்,
வேதபாரகர், விப்பிரர்,
மிக்க பண்ணவர், நூலோர், ஆதிவருணத்தர்,
விளம்பிடும் பார்ப்பார் பெயர்.
துய்ய பிரமச்சாரியின் பெயர் வன்னியும்
துவசனும் கூறும். இப்பால்
சொலில் ஓதல், ஓதுவித்திடல். வேட்டல், வேட்பித்தல்,
தொகும் ஈதல், ஈவித்தல் என்று

எய்தும் இத்தொழில் ஆறும் அந்தணர்க்கு உரியவாம்;
ஏற்றலும் அவர்கள் கடனாம்
என்னவே செந்தமிழை ஆராய்ந்து மலையத்து
இருந்தவன் இயம்பினானே! (50)

## பிராமணர் பெயர்

**சே:—** ஐயர், வேதியர், இருபிறப்பாளர், மெய்யர், மிக்கவர், மறையோர், பூசுரர், அந்தணர், நூலோர், அறுதொழிலாளர், செந்தீவளர்ப்போர், உயர்ந்தோர், ஆய்ந்தோர், ஆதிவருணர், வேதபாரகர் விப்பிரர், தொழுகுலத்தோர், வேள்வியாளர், முப்புரி நூலோர், முனிவர், பார்ப்பார்.

**பி:—** அறவோர், பூசுரர், அறுதொழிலாளர், இருபிறப்பாளர், எரிவளர்ப்போர், ஆதிவருணர், வேதியர், அந்தணர், வேள்வியாளர், மறையவர், விப்பிரர், மேற்குலத்தோர், முற்குலத்தோர், ஐயர், வேதபாரகர், முப்புரிநூலோர், தொழுகுலர், முத்தீ மரபினர், பார்ப்பார்.

**சூ:—** மறையவர், ஐயர், வேதியர், நூலோர், அறு தொழிலாளர், மேற்குலர், ஆய்ந்தோர், அந்தணர், ஆதிவருணர், முப்புரிநூல்மார்பர், மெய்யர், விப்பிரர், வேதபாரகர், வேள்வியாளர், இருபிறப்பாளர், பார்ப்பார்.

**க:—** முனிவர். இருபிறப்போர், விப்பிரர், ஐயர், மூதறிவோர், வேதியர், பூசுரர், அந்தணர், நான் மறையோர், தினகரஞாதர், அறுதொழிலாளர், முத்தீவளர்ப்போர், பனவர், புரிநூலர், மேற்குலத் தோர், வேதபாரகர்.

## பிரமசாரியின் பெயர்

**பி:—** வன்னி

**சூ:—** வன்னி

### அந்தணர்க்குரிய அறுதொழில்

பி:— ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்.

### அரசன் பெயர், அவன் தொழில், சதுரங்க சேனையின் பெயர், அறுவகைத் தானையின் பெயர்.

புரவலன் கொற்றவன் பார்த்திவன் காவலன்
பூபாலன் வேந்தன்மன்னன்
பொருநன்முதல் வன்றலைவ னிறைவனே பெருமான்
புகழ்பூப னிருபனண்ணல்
குரிசில்பூ பதிதரா பதிமன்னர் பதிதோன்றல்
கோவேந்தல் பதிசக்கிரி
குறித்தவை யைந்துமர சன்பெய ரோதலே
குணத்தீதல் வேட்டலன்றி
பரிவினோடு பார்புரந் திடல்படைக் கலமவை
பயிற்றல்போர் புரிதலாறும்
பார்த்திவர்கள் தொழிலிரத கரிபரிப தாதியே
பரவுசது ரங்கசேனை
அரியசது ரங்கசே னைக்குட்ப தாதியை
யகற்றிவேல் வில்வாளினை
யானதோர் கரிபரியு டன்கூட்டியேமொழியி
லறுவகைத் தானையாமே! (10)

*புரவலன், கொற்றவன், பார்த்திவன், காவலன்,
பூபாலன், வேந்தன், மன்னன்,
பொருநன், முதல்வன், தலைவன், இறைவனே,
பெருமான்.
புகழ் பூபன், நிருபன், அண்ணல்,
குரிசில், பூபதி, தராபதி, மன்னர்பதி, தோன்றல்,
கோ, ஏந்தல், பதி, சக்கிரி
குறித்த ஐ ஐந்தும் அரசன் பெயர். ஓதலே
குணத்து ஈதல், வேட்டல் அன்றி

பரிவினொடு பார் புரந்திடல், படைக்கலம் அவை
பயிற்றல், போர்புரிதல் ஆறும்
பார்த்திவர்கள் தொழில். இரத, கரி, பரி,
பதாதியே
பரவு சதுரங்க சேனை.
அரிய சதுரங்க சேனைக்குள் பதாதியை
அகற்றி வேல், வில், வாளினை
ஆன தேர், கரி. பரியுடன் கூட்டியே மொழியில்
அறுவகைத் தானை ஆமே! (51)

## அரசன் பெயர்

**சே**:- புரவலன், கொற்றவன், பெருமான், காவலன், அரையன், ஏந்தல், கோ, குரிசில். தலைவன், மன்னவன், வேந்தன். முதல்வன் நிருபன், பூபாலன், நரபதி, பார்த்திவன், இறைவன், அண்ணல், அரசன்.

**பி**:— பார்த்திபர், இறைவர், காவலர், பதிகள், கோக்கள் வேந்தர், கொற்றவர், புரவலர், பொருநர், மன்னர், பூபாலர், நிருபர், முதல்வர், ஏந்தல், குரிசில், மகிபாலர், தலைவர், அரசர்.

**சூ**:— புலவன், பெருமான், ஏந்தல், பூபாலன், வேந்தன், மன்னன், நரபதி, பொருநன், சக்கிரி, நிருபன், குரிசில், பார்த்திபன், கோ, கொற்றவன், இறைவன், அண்ணல், தலைவன், காவலன், அரசன்,

**க**:— நாவலர் போற்றும் புரவலன், வேந்தன், நரபதி, கோன், காவலன், பார்த்திபன். பூபாலன், பூபன், கலைநிருபன், கோ, உலகாள்மன். இராசன். அரசன், குரிசில், அண்ணல், மகிபன், மகிபதி, கொற்றவன், வேந்தன்.

## அரசன் தொழில்

**பி**—: ஓதல், பொருதல், உலகுபுரத்தல், ஈதல், வேட்டல், படைபயிறல்.

### சதுரங்க சேனை

பி:— யானை, தேர், பரி, காலாள்.

### அறுவகைத் தானையின் பெயர்

பி:— வேல், வாள், வில், தேர், பரி, களிறு.

## ஐம்பெருங் குழுக்கள்.
## ஐவகைச் சுற்றம், எண்பேராயம், ஆகப் பதினெண்மர், அரண் (அரசு).

தேற்றுமந் திரிமார்பு ரோகிதர் சாரணர்
சேனாபதியர் தூதரென்னச்
செப்புகுழு வைந்தும் மருத்துவக் கலைவலோர்
சீரியம டைத்தொழிலினோர்
சாற்றந்த ணாள ரடுத்தநட் பாளர்
தங்கிய நிமித்தகாரர்
சார்ந்தசுற் றங்களோ ரைந்துகடை காப்பாளர்
தாழ்விலாக் கருமவிதிகள்
சாற்றருங் காரணச் சுற்றம்நகர் மாக்களொடு
வன்படைத் தலைவரிவுளி
மறவர்வா ரணவீரர் காரணத் தியல்பரென
வைத்தபே ராயமெட்டும்
தோற்றுமப் பாலிற்ப குத்தபதி னெண்மருந்
துங்கமலை காடுநிலம்நீர்
சூழ்ந்தவர ணான்கும்ப டைத்ததர சாமெனச்
சொற்றனர் தமிழ்ப்புலவரே! (11)

*தேற்றும், மந்திரிமார், புரோகிதர், சாரணர்,
சேனாபதியர், தூதர் என்னச்
செப்பு குழு ஐந்து; மருத்துவக் கலைவலோர்,
சீரிய மடைத்தொழிலினோர்,

சாற்று அந்தணாளர், அடுத்த நட்பாளர்,
தங்கிய நிமித்தகாரர்,
சார்ந்த சுற்றங்கள் ஓர் ஐந்து; கடைகாப்பாளர்,
தாழ்வு இலாக் கருமவிதிகள்,
மாற்ற அரும் காரணச்சுற்றம், நகர்மாக்கள்—ஒடு
வன் படைத்தலைவர், இவுளி மறவர்,
வாரணவீரர், காரணத்தியல்பர்—என
வைத்த பேர் ஆயம் எட்டும்;
தோற்றும் அப்பாலில் பகுத்த பதினெண்மரும்;
துங்க மலை, காடு, நிலம், நீர்,
சூழ்ந்த அரண் நான்கும் படைத்தது அரசு—
ஆம் எனச்
சொற்றனர் தமிழ்ப் புலவரே! (52)

### ஐம்பெருங் குழுக்களின் பெயர்

பி:— மந்திரியர், புரோகிதர், சேனாபதியர், தூதர், சாரணர்.

### ஐவகை (உறுதி) ச்சுற்றத்தின் பெயர்

பி:— நட்பாளர், அந்தணாளர், மடைத் தொழிலாளர். மருத்துவக்கலைஞர், நிமித்திகப் புலவர்.

### எண்பேராயத்தின் பெயர்

பி—: கரணத்தியல்வோர், கருமவதிகாரர்,சுற்றத் தார், கடைகாப்பாளர், நகரமாக்கள், படைத் தலைவர், இவுளி மறவர், யானைவீரர்.

### பதினெண்மர் பெயர்

பி:— ஐம்பெருங்குழு, ஐவகை உறுதிச்சுற்றம், எண் பேராயம். (இவற்றின் விரி முன்னர் கூறப் பட்டுளது)

### நால்வகை அரணின் பெயர்

பி:— மலை, காடு, மதில், நீர் ஆகியவைசூழ்ந்த அரண், (மலையரண், காட்டரண், மதிலரண்,நீரரண்)

**அறநிலை யறம், அறநிலைப் பொருள், அறநிலையின்பம்; மறநிலையறம், மறநிலைப் பொருள், மறநிலை யின்பம்.**

தெய்வமறு சமயநாற் குடிமுறையொ ழுக்கமிவை
செங்கோலின் முறைசெலுத்தல்
செப்புமற நிலையறஞ் செம்மைநெறி யேநின்று
செம்மைநெறி[1] யாலுளன்ற
பொய்யில்பொரு ளேயற நிலைப்பொருள் குலமன்பு
புகல்வாய்மை செல்வமொத்து
பொருந்திடுந் துய்த்தலற நிலையின்ப நிறைமீட்டல்
பொங்குபகை தெறுதலன்றிச்
செய்யசெஞ் சோற்றுதவி யோர்க்குயிரை யீனமது
செய்திடுதல் மறநிலையறம்
திறைகொடமர் கொடுசூதின் வெற்றிகொடு தவறுசெய்
வோர்தண்ட னைக்கொடுவரும்
வெய்யபொருள் மறநிலைப் பொருள்வேண்டு பொருளீதல்
விடைதழுவல் வலிதிற்கொளல்
மிக்கவே யிலக்கமெய் திடல்மாறு நெறிதுய்த்தல்
மிக்கமற நிலையின்பமே! 12

*தெய்வம் அறுசமயம், நாற்குடிமுறை,ஒழுக்கம் இவை
செங்கோலின் முறைசெலுத்தல்
செப்பும் அறநிலை அறம், செம்மை நெறியே நின்று
செம்மை நெறியால் உழன்ற
பொய்யில் பொருளே அறநிலைப் பொருள், குலம். அன்பு.
புகல் வாய்மை செல்வம் ஒத்து
பொருந்திடும் துய்த்தல் அறநிலை இன்பம், நிறைமீட்டல்,
பொங்கு பகைதெறுதல் அன்றிச்

---

1 யாலுழன்ற எனல் பொருந்தும்

செய்ய செஞ்சோறு உதவியோர்க்கு உயிரை ஈனமது
செய்திடுதல் மறநிலை அறம்
திறைகொடு அமர்கொடு சூதின் வெற்றிகொடு
தவறு செய்வோர் தண்டனைக் கொடு
வரும்
வெய்யபொருள் மறநிலைப்பொருள். வேண்டு
பொருள் ஈதல்
விடை தழுவல், வலிதிற்கொளல்,
மிக்கவே இலக்கம் எய்திடல், மாறுநெறி துய்த்தல்
மிக்க மறநிலை இன்பமே! (53)

## அறநிலை அறம்

**பி:—** நான்கு வருணத்தாரும் தத்தம் வருணத்திற் பிறழாது நிலைபெறப் பாதுகாத்தல் அறநிலை அறம்.

## அறநிலைப் பொருள்

**பி:—** நெறிவழிநின்று தத்தநிலையினால் முயன்று பெறுபொருள் அறநிலைப் பொருள்.

## அறநிலை யின்பம்

**பி:—** குலமும் ஒழுக்கமும் குணமும் பருவமும் ஒத்த கன்னிகையைத் தீவேட்டு இல்லறத்திருத்தல் அறநிலை இன்பம்.

## மறநிலை அறம்

**பி:—** நிரை மீட்டலும், பகை வெல்லுதலுமாகிய செஞ்சோற்றுக் கடன் கழியாதாரைத் தண்டித்துக் குறைவுறச் செய்தல் மறநிலை அறம்.

## மறநிலைப் பொருள்

**பி:—** பகைஞர் பொருளும், திறைப் பொருளும், குற்றஞ் செய்தோரை யொறுக்கும் பொருளும், சூதில்வெல் பொருளும் மறநிலைப் பொருள்.

### மறநிலை இன்பம்

பி:— ஏறுதழுவலும், வில்லால் இலக்கம் எய்தலும், பொருள் கொடுத்துக் கோடலும் வலிந்து கோடலும் ஆகிய நெறியால் மணத்தல் மறநிலை இன்பம்.

**கொற்றவர்கள் ஏறு, சக்கரவர்த்திகள் அறுவர், நிமித்திகள், கரிப்பாகர், பரிப் பாகர், மடையர், கணக்கர் தம் வழியினுள்ளோர், பரிவாரம் ஆகியோர் பெயர்.**

குடிபடைய மைச்சினிய நட்பரண் கூழெனக்
கொண்டவகை யாறுமுடையோன்
கொற்றவர்க ளேறெனப் படுமரிச் சந்திரன்
குலவுமுசு குந்தன்னளன்
முடிகொள்ச ரன்கார்த்த வீரியன் புரூரவன்
மொழிசக்ர வர்த்தியறுவர்
முட்டாத சாக்கைவள் ளுவனோரி ரண்டு
மொழிந்திடு நிமித்தகன்பேர்
படியி[1]லா தேராணர் வாதுவர் களிற்றுடைப்
பாகர்பா கென்றும்பெயர்
பண்ணுவர் மாதுவர் மாவலோர் தம்பெயர்
பானசிகர் கூவியருடன்
கடியவா லுவருமா மேமடையர் காவிதியர்
கணக்கர்தம் வழியினுள்ளோர்
கருதுபரி [2]யாளாமே பரிவார மென்றுகலை
கற்றவ ரியம்பினாரே! (13)

*குடி, படை, அமைச்சு, இனியநட்பு, அரண், கூழ் எனக்
கொண்ட வகை ஆறும் உடையோன்,
கொற்றவர்கள் ஏறு எனப்படும். அரிச்சந்திரன்,
குலவு முசுகுந்தன், நளன்,

---

1. லாதேோரணர் எனல் வேண்டும்.
2. யாளமே என்றுளது.

முடிகொள் சரன், கார்த்தவீரியன், புரூரவன்,
மொழி சக்ரவர்த்தி அறுவர்.
முட்டாத சாக்கை, வள்ளுவன், ஓர் இரண்டும்
மொழிந்திடும் நிமித்திகன் பேர்.
படி இலா தேர் ஆள்நர், வாதுவர், களிற்றுடைப்
பாகர்; பாகு என்றும் பெயர்.
பண்ணுவர், மாதுவர், மாவலோர்தம் பெயர்.
பானசிகர், கூவியர் உடன்
கடிய வாலுவருமே மடையர். காவிதியர்,
கணக்கர்தம் வழியினுள்ளோர்,
கருது பரியாள் ஆமே; பரிவாரம் என்று
கலைகற்றவர் இயம்பினாரே! (54)

## கொற்றவர்கள் ஏறு

**பி**:— படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆறும் கொண்டவர்கள்.

## சக்கரவர்த்திகள் பெயர்

இத்தலைப்பில் நான்கு நூல்களிலும் ஒப்புமை இல்லை

## நிமித்திகன் பெயர்

**சூ**:— சாக்கை, வள்ளுவன், நிமித்திகன்.

## யானைப்பாகர் பெயர்

**சே**:— ஆதோரணர், வாதுவர், யானைப்பாகர்.
**பி**:— ஆதோரணர், வாதுவர், யானைப்பாகர்.
**சூ**:— பாகர், ஆதோரணர்.
**க**:— வாதுவர், ஆதோரணர், ஆனைப்பாகர்.

## குதிரைப்பாகர் பெயர்

**சே**:— வாதுவர், பரிமாவடிப்போர்.
**பி**:— வாதுவர், பரிமாவடிப்போர்.
**சூ**:— பண்ணுவார், மாவலர், வதுவர், வாதுவர்.
**க**:— வாதுவர், பரிமாவடிப்போர்.

### மடையர் பெயர்

சே:— வாலுவர், கூவியர், மடையர்,

பி:— வாலுவர், கூவியர், பானசிகர், பாசகர்.

சூ —வாலுவர் (வல்லவர்), கூவியர், பானசிகர், பாசகர், மடையர்.

க:— வாலுவர், கூவியர், பாகி,தவசியர், அட்டர்.

### கணக்கர் வழியினுள்ளார் பெயர்

பி:— (மந்திரி, தந்திரியர், ஏனாதி, காவிதி, அமாத்தியர்)

சூ:— காவிதியர்

க:— பட்டம் புனையும் அமாத்தியர், ஏனாதி, காவிதி, மந்திரி, தந்திரி.

### பரிவாரத்தின் பெயர்

சே:—பரியாளம், பரிவாரம்.

பி:— பரியாளம், பரிவாரம்,

சூ:— பரியாளம், பரிவாரம்.

## குறுநில மன்னர், அவர் கொடி, படைத் தலைவர், மந்திரத் தலைவர், தேர்ப் பாகர், ஒற்றர், தூதர், மருத்துவர்.

ஆட்டர்கு றும்பர்பு ரோசர்குறு நிலமன்ன
ராம்வேளி ரென்றுபெயர்
அவர்கொடிக் கேழல்பெ ரும்படைத் தலைவரபி
தானமே பொருநரென் றாம்.

**வாட்டமி லமைச்சர்தேர்ச் சித்துணைவர் குரவர்நூல்**
**வல்லவ ருழையர்சூழ்வோர்**
**மந்திரரா மாத்தியர் முதுவர் முன் னவரெண்ணர்**
**மந்திரத் தலைவர்பெயராம்**
**ஓட்டுசா ரதிசூதன் வலவனே தேர்ப்பாக**
**னொற்றரே சாரர்வேவர்**
**உலவுசா ரணர்வழி யுரைப்போரு டன்பண்பு**
**(உ)ரைப்போர்கள் வினையுரைப்போர்**
**சூட்டும்வித் தகரென்று வருநாம நான்குமே**
**தூதர்மா மாத்திரருடன்**
**சொலும்பிடக ராயுள்வே தியர்மருத் துவரெனச்**
**சொற்றனர் தமிழ்ப்புலவரே!** 14

*ஆட்டர், குறும்பர், புரோசர், குறுநில மன்னராம்.
வேளிர் என்று பெயர்.
அவர் கொடி கேழல். பெரும் படைத்தலைவர்
அபிதானமே பொருநர் என்றும்ஆம்.
வாட்டம் இல் அமைச்சர், தேர்ச்சித் துணைவர், குரவர்,
நூல்வல்லவர், உழையர், சூழ்வோர்,
மந்திரர், ஆமாத்தியர், முதுவர், முன்னவர், எண்ணர்,
மந்திரத் தலைவர் பெயராம்.
ஓட்டு சாரதி, சூதன், வலவன்-ஏ, தேர்பாகன்.
ஒற்றர்-ஏ, சாரர், வேவர்,
உலவு சாரணர், வழியுரைப்போர்-உடன்
பண்புரைப்போர்கள், வினையுரைப்போர்,
சூட்டும் வித்தகர் என்று வரும் நாமம் நான்குமே
தூதர். மாமாத்திரர்-உடன்,
சொலும் பிடகர், ஆயுள்வேதியர், மருத்துவர் எனச்
சொற்றனர் தமிழ்ப் புலவரே! (55)

**குறுநில மன்னர் பெயர்**

**சே:—** வேளிர், புரோசர், குறுநிலவேந்தர், அரட்டர், குறும்பர்.

பி:— குறும்பர், புரோசர், வேளிர், குறுநில மன்னர்.

சூ: குறும்பர், அரட்டர், வேளிர், புரோசர், குறுநிலமன்னர்.

க:— குறும்பர், அட்டர், வேளிர், புரோசர், குறுநிலமன்னர்.

### குறுநில மன்னர் கொடியின் பெயர்

இத்தலைப்பில் நான்கு நூல்களிலும் ஒப்புமை இல்லை

### படைத்தலைவர் பெயர்

சே:— பொருநன், பெரும்போர்த் தலைவன்.

பி:— பொருநர், போர்த் தலைவர்.

சூ:— பொருநன், சேனாபதி.

க.— பொருநர், தலைமை பெற்றோர்,

### அமைச்சர் (மந்திரத் தலைவர்) பெயர்

சே:— முதுவர், குரவர், மூத்தோர், முன்னோர், உழையோர். சூழ்வோர், நூல்வல்லோர், அமைச்சர், தேர்ச்சித் துணைவர், மந்திரக்கிழவர்.

பி:— எண்ணர், நூலோர், அமைச்சர், முதுவர், குரவர், மூத்தோர், முன்னோர், உழையோர், சூழ்வோர், நூல்வல்லோர், அமைச்சர், தேர்ச்சித் துணைவர்.

சூ:— தேர்ச்சித்துணைவன், எண்ணர், நூலோர், சூழ்வோர், உழையர், மந்திரர், முதுவர், முன்னோர், அமாத்தியர், அமைச்சர்.

க:— நுண்ணூல் வாக்கினர், தேர்ச்சித்துணைவர், அமைச்சர்.

**தேர்ப்பாகர் பெயர்**

**சே:—** சூதர், வலவர், தேர்த்தொழிற்பாகர்.

**பி:—** சாரதி, சூதன், வலவன், தேர்ப்பாகன்.

**சூ:—** சூதன், வலவன், சாரதி, தேர்ப்பாகன்.

**க:—** வலவர், சூதர், தேர்ப்பாகர்.

**ஒற்றர் பெயர்**

**சே:—** சாரணர், உசா, ஒற்றர்.

**பி:—** சாரர், வேயர், சாரணர், ஒற்றர்.

**சூ:—** வேயர், சாரணர், ஒற்றர்.

**க:—** சாரணத்தூதர், உசா, ஒற்றர், வேய்ப்பர்.

**தூதர் பெயர்**

**சே:—** வினையுரைப்பார், வழியுரைப்பார், பண்புரைப்பார், தூதர்.

**பி.—** வினையுரைப்போர், வழியுரைப்போர் உறுதியோர், பண்புரைப்போர், தூதர்.

**சூ:—** வித்தகர், வினையுரைப்போர், வழியுரைப் போர், பண்புரைப்போர், தூதர்.

**மருத்துவர் பெயர்**

**சே: –** ஆயுள்வேதியர், மாமருத்துவநூலோர், மாமாத்திரர், பிடகர், மருத்துவர்.

**பி:—** ஆயுள்வேதியர், மாமாத்திரர், பிடகர், மருத்துவர்.

**சூ:—** பிடகர், ஆயுள்வேதியர், மாமாத்திரர்.

**க:—** மாமாத்தியர், பிடகர், மருத்துவர்.

## வைசியர் பெயர், குலம், தொழில், பண்பு.

மன்னர்பின் னவரிளங் கோக்களெட் டியரிப்பர்
வைசியர்கள் விப்பர்[1] பநதர்
வருசிலேட் டிகள்பசுக் காவலர் விருச்சிகர்
வணிகர்முத் தொழில்நாயகர்
உன்னிடபர் விலைஞரே செட்டிகள் பொதுப்பெயர்.
ஓதிலவர் குலமூன் றவற்
றோங்குகோ வலரிப்பர் கோவைசியர் பெயர்பரத
ரொடுநாய்க ரெட்டியரிவை
மன்னுதன வைசியர் மேழியரு ழவர்காரா
ளர்வளமை வேளர்நான்கும்
வாய்த்தபூ வைசியர் ஓதல்வேட் டலுதவிவா
ணிபமுழவு கோக்காத்திடல்
என்றுமிவ ரறுதொழி லீட்டல்பகுத் தல்முனிவி
லாராத றனிமையாற்ற
லிறுவதஞ் சாமைபெறு வதுதெரிதல் காலமுட
னிடனறிதல் வைசியர்பண்பே!

மன்னர் பின்னவர், இளங்கோக்கள், எட்டியர், இப்பர்,
வைசியர், விப்பர், பரதர்,
வரு சிலேட்டிகள், பசுக்காவலர், விருச்சிகர்,
வணிகர், முத்தொழில் நாயகர்,
உன்னிடபர், விலைஞர்-ஏ, செட்டிகள் பொதுப்பெயர்,
ஓதில் அவர் குலம் மூன்று. அவற்று
ஓங்கு கோவலர், இப்பர், கோவைசியர் பெயர்,
பரதர்-ஒடு நாய்கர் எட்டியர் இவை
மன்னு தனவைசியர் மேழியர், உழவர், காராளர்,
வளமை வேளர் நான்கும்
வாய்த்த பூவைசியர் ஓதல், வேட்டல், உதவி
வாணிபம், உழவு, கோக்காத்திடல்

1 பரதர் எனல் வேண்டும்

என்னும் இவர் அறுதொழில், ஈட்டல், பகுத்தல்,
முனிவிலார் ஆதல், தனிமை ஆற்றல்,
இறுவது அஞ்சாமை, பெறுவது தெரிதல்,
காலமுடன்
இடன் அறிதல் வைசியர் பண்பே! (56)

## வைசியர் பெயர்

**சே:**— இப்பர், பரதர், வைசியர், கவிப்பர், எட்டியர், இளங்கோக்கள், ஏர்த்தொழிலர், பசுக்காவலர், ஒப்பினால் நாய்கர், வினைஞர், வணிகர், சிரேட்டிகள், செட்டிகள்.

**பி:**— தாளாளர், இப்பர், தருமக்கிழவர், வேளாளர், இளங்கோக்கள், வைசியர்.

**சூ:**— இளங்கோக்கள், மன்னர்பின்னர், இப்பர், எட்டியர், நாய்கர், வணிகர், ஆன்காவலர், உழவர் பரதர், வினைஞர், செட்டியர், சிரேட்டிகள், வைசியர்.

**க:**— இளங்கோ, எட்டியர், இப்பர், பரதர், வயிசியர், ஏர்த்தொழிலோர், செட்டிகள், நாய்கர், கவிப்பர், வணிகர், செலேட்டிகள்.

## வைசியர் குலம் (மூன்று)

**பி:**— கோவைசியர், தனவைசியர், பூவைசியர்.

**கோவைசியர்:**— கோவலர், இப்பர், கோவர்த்தனர்.

**தனவைசியர்:**— நாய்கர், எட்டியர், வணிகர், பரதர்

**பூவைசியர்:**— பூபாலர், உழவர், மேழியர், காராளர், இளங்கோ.

## வைசியர் தொழில் (ஆறு)

**பி:**— ஓதல், வேட்டல், உபகாரம், வாணிகம், பசுக்காவல், உழவுத்தொழில்.

### வைசியர் பண்பு (எட்டு)

பி:— தனிமைஆற்றல், முனிவிலனாதல், இடனறிந் தொழுகல், பொழுதொடு புணர்தல், உறுவது தெரிதல், இறுவது அஞ்சாமை, ஈட்டல், பகுத்தல்.

### வேளாளர் பெயர், தொழில், குயவர்பெயர், செக்கார் பெயர், கொல்லர் பொதுப்பெயர்.

காராளர் பின்னவர் சதுர்த்தர்மண் மகள்புதல்வர்
களமர்சூத் திரரேரினர்
கருதுழவர் வளனர்வாழ்க் கைத்தொழில் வினைஞரே
காட்டும்வே ளாளர்நாமம்.
சீராரு முக்குலத் தவர்மொழியு மேவலைச்
செய்திடுதல் கோக்காத்திடல்
செப்புமவர் தொழில்கும்ப காரர்கு லாலர்
செறிந்தவேட் கோவல்மற்றும்
பேரான மட்பகைஞர் குயவர்சக் கிரியுமாம்.
பேசுசக் கிரிநந்திகள்
பிறங்குசெக் கார்பெயர் துவட்டர்வித் தகராவர்
பேணருஞ் சிற்பியருடன்
ஆராயும் வினைஞர்கம் மியர்கொல்லர் தபதிய
ரக்கசா லையர்புனைந்தோர்
அறிஞரற் புதர்யவனர் கண்ணுளர் கண்ணாளர்க்
கடுத்தபொது நாமமாமே! (16)

*காராளர், பின்னவர், சதுர்த்தர், மண்மகள் புதல்வர்,
களமர், சூத்திரர், ஏரினர்,
கருது உழவர், வளநர், வாழ்க்கைத்தொழில் வினைஞர் -ஐ
காட்டும் வேளாளர் நாமம்.

சீர் ஆரும் முக்குலத்தவர் மொழியும் ஏவலைச்
செய்திடுதல், கோக்காத்திடல்,
செப்பும் அவர் தொழில் குமபகாரர், குலாலர்,
செறிந்த [1]வேட்கோவல், மற்றும்
பேர் ஆன மட்பகைஞர், குயவர், சக்கிரியும் ஆம்.
பேசு சக்கிரி, நந்திகள்,
பிறங்கு செக்கார் பெயர். துவட்டர்,வித்தகராவர்,
பேண அரும் சிற்பியருடன்,
ஆராயும் வினைஞர், கம்மியர், கொல்லர், தபதியர்,
அக்கசாலையர், புனைந்தோர்,
அறிஞர், அற்புதர், யவனர், கண்ணுளர்,
கண்ணாளர்க்கு
அடுத்த பொது நாமம் ஆமே! (57)

**வேளாளர் பெயர்**

**சே:**— காராளர், வினைஞர், சூத்திரர், பின்னவர், சதுர்த்தர், வளமையோர், வேளாளர், மண் மகள் புதல்வர், வார்த்தை தொழிலோர், வண்களமர், உழவர், சேர்த்த ஏரின் வாழ்நர்.

**பி:**— பின்னவர், சதுர்த்தர், பெருக்காளர், வளமையர். முத்தொழிலர், மண்மகள்புதல்வர், உழவர், ஏரினர், வாணர், காராளர், வினைஞர், மேழியர், வேளாளர்.

**சூ:**— மண்மகள்புதல்வர், வளமையர், களமர், சதுர்த்தர், உழவர், மேழியர், வேளாளர், ஏரின் வாழ்நர், காராளர், வினைஞர், பின்னவர்.

**க:**— காராளர், வேளாளர், வெண்களமர், பின்னோர், உழவர், சதுர்த்தர், வார்த்தையர், மண் புதல்வர், சூத்திரர்.

---

1 வேட்கோவன் எனல் சிறப்பு.

## வேளாளர் தொழில் (பத்து)

**பி:—** ஆணைவழிநிற்றல், மாண்வினை தொடாங்கல், கைக்கடனாற்றல், குற்றமனத்தின்மை, சுற்றம் போற்றல், நீங்காத முயற்சி, மன்னிறை கருதல், ஒற்றுமை கோடல், ஒழுக்கம், விருந்து புறந்தருதல்,

## குயவர் பெயர்

**சே:—** கும்பகாரர், குலாலர், வேட்கோவர், குயவர், மட்பகைஞர்.

**பி:—** குலாலர், வேட்கோவர், கும்பகாரர், குயவர்.

**சூ:—** கும்பகாரன், குலாலன், வேட்கோவன், சக்கிரி, மட்பகைவன், குயவன்.

**க:—** குலாலர், கும்பகாரர், வேள், மட்பகைஞர், குயவர், வேட்கோவர்.

## செக்கார் பெயர்

**சே:—** சக்கிரி, நந்திகள், செக்கார்.

**பி:—** சக்கிரி, நந்தி, செக்கான்.

**சூ:—** சக்கிரி, நந்தி, செக்கார்.

## கண்ணாளர் பெயர்
## (கொல்லர் பொதுப்பெயர்)

**சே:—** கம்மியர், யவனர், கொல்லர், தபதியர், அக்கசாலையர், சிப்பியர், வித்தகர், வித்தியர், புனைவர், அறிவர், கம்மாளர்.

**பி:—** கம்மியர், யவனர், ஓவியர், வித்தகர், தபதியர்.

**சூ:—** சிற்பியர், துவட்டர், ஓவர், தபதியர், அற்புதர், யவனர், கொல்லர், அக்கசாலையர், புனைந்தோர், கம்மியர், கண்ணுள் வினைஞர், கண்ணாளர்.

க:— தபதியர், ஓவியர், கொல்லர், கம்மாளர், சிற்பர், யவனர், புனைவித்தகர், அக்கசாலையர்.

**கொல்லர், தச்சர், தட்டார், கன்னார், சித்திரக்காரர், சிற்பாசாரியர், முத்தங் கோப்பார் இவர்கள் பெயர்.**

**தப்பிலா மனுவர்கரு மார்கொல்லர் தம்பெயர்**
**தபதியர் மரவினைஞரே**
**தச்சர்பெயர் மயனுமாம் செங்கொல்ல ருடனக்க**
**சாலையர் சென்னகாரர்**
**பொற்புடைய பொற்கொல்லர் பொன்வினைஞர் தட்டார்**
**பொருந்திடும் பொன்செய்புலவர்**
**பொருளினை யுருக்குதட் டார்கலங் [1]தருனரே**
**பொருபணித் தட்டார்பெயர்**
**செப்புகண் ணுவர்கஞ்ச [2]காரகன் னார்பெயர்**
**சிற்பரோ வியர்களமோகர்**
**சித்திரக் காரர்பெய ரோவியர்மொ ழிந்திடுஞ்**
**சிற்பநூ லாளருடனே**
**வைப்புமண் ணீட்டாள ரென்னுமிரு பெயரும்**
**வகுத்தசிற் பாசாரியர்**
**மணிகள்குயி லுநரென்று ரைத்தனமுத் தங்கோக்கு**
**மரபினர்க ளபிதானமே!**

*தப்பு இலா மனுவர், கருமார், கொல்லர் தம் பெயர்,
தபதியர், மரவினைஞர்-ஏ
தச்சர் பெயர்; மயனும் ஆம். செங்கொல்லர் உடன்
அக்கசாலையர் சென்னகாரர்,
பொற்பு உடைய பொற்கொல்லர், பொன்வினைஞர், தட்டார்,
பொருந்திடும் பொன்செய் புலவர்,
பொருளினை உருக்கு தட்டார், கலம் தருநர்-ஏ,
பொரு பணித் தட்டார் பெயர்.

---

1 தருநரே எனல் சிறப்பு

2 காரர்கன் எனல் வேண்டும்.

செப்பு கண்ணுவர், †கஞ்சகாரர் கன்னார் பெயர்.
சிற்பர், ஓவியர்கள், மோகர்,
சித்திரக்காரர் பெயர். ஓவியர் மொழிந்திடும்
சிற்பநூலாளர் உடனே
வைப்பு மண்ணீட்டாளர் என்னும் இரு பெயரும்
வகுத்த சிற்ப ஆசாரியர்.
மணிகள் குயிலுநர் என்று *உரைத்தனர் முத்தும்
கோக்கும்
மரபினர்கள் அபிதானமே! (58)

## கொல்லர் பெயர்

**பி:—** கருமர், மனுவர், கம்மியர், கொல்லர்.

**சூ:—** கருமர், மனுவர், கொல்லர்.

## தச்சர் பெயர்

**சே:—** தபதியர், மரவினையர், தச்சர்.

**பி:—** மரவினையாளர், தபதி, தச்சர்.

**சூ:—** மரவினையாளன், மயன், தபதி.

## தட்டார் பெயர்

**சே:—** செங்கொல்லர், தட்டார், பொன்வினை செய்வோர்.

**பி:—** செங்கொல்லர், பொன்வினை செய்வோர், அக்கசாலையர், சொன்னகாரர்.

**சூ:—** பொன்செய்யுங்கொல்லர், பொன்வினை மாக்கள், சொன்னகாரர், அக்கசாலையர், தட்டார்,

---

† கஞ்சகார என்றுளது.
*உரைத்தன என்றுளது.

### கன்னார் பெயர்

சே:— கன்னுவர், கஞ்சகாரர், கன்னார்.

பி:— கன்னுவர், கஞ்சகாரர், கன்னார்.

சூ:— கஞ்சகாரர், கன்னுவர், கன்னார்.

க:— கஞ்சகாரர், கன்னார், கன்னுவர்.

### சித்திரக்காரர் பெயர்

சே:— ஓவியர், சித்திரக்காரர்.

பி:— ஓவியர், சித்திரக்காரர்.

சூ:— சிற்பர், ஓவியர், மோகர், சித்திரக்காரர்.

### சிற்பாசாரியர் பெயர்

பி:— கருவினையர், கற்றொழிலோர்.

சூ:— மண்ணீட்டாளர், சிற்பாசாரியர்.

### முத்தங்கோப்பார் பெயர்

பி:— மணிகுயிற்றுநர், முத்தங்கோப்பார்.

சூ:— மணிகுயிற்றுநர், முத்தங்கோப்பார்.

### கூட்டம், பெண்கள் கூட்டம், தேவராளன், தேவராட்டி, வல்லோர், சோனகர், ஆரியர் இவர்கள் பெயர்

சங்கங்க ணங்தொகுதி சவையவை குழாங்குழுச்
சமவாய மிக்ககூட்டம்
சமுகந்த ளங்கோட்டி சமுதாய மொடுதிரள்
சாற்றுமொரு பத்துநான்கும்
இங்கிவை திரண்டோர்க ளனைவர்க்கு முரியபெய
ரெழிலான வோரைபொய்த
லினியகெட வரல்பண்ணை யாயமோ ரைந்து
மியம்பரிய பெண்கள்கூட்டம்

**பொங்குவெறி யாட்டாளன் வேலன்முரு கன்குறி**
**புகன்றிடும் படிமத்தனே**
**புனைதேவ ராளன் வகுத்தசா லினிதேவ**
**ராட்டியைப் போற்றுநாமம்.**
**எங்கணும் புகழ்குசலர் நிபுணருட னேவிபுத**
**ரியாவர்க்கும் வல்லோர்பெயர்.**
**யவனர்சோ னகர்பெயர் மிலேச்சர்கள் மிலைச்சரி**
**ரண்டுமா ரியர்நாமமே!** (18)

*சங்கம், கணம், தொகுதி, சவை, அவை, குழாம், குழு,
சமவாயம், மிக்க கூட்டம்,
சமூகம், தளம், கோட்டி, சமுதாயம்-ஒடு, திரள்,
சாற்றும் ஒரு பத்துநான்கும்,
இங்கு இவை திரண்டோர்கள் அனைவர்க்கும்
உரிய பெயர்.
எழிலான ஓரை, பொய்தல்,
இனிய கெடவரல், பண்ணை, ஆயம் ஓர் ஐந்தும்
இயம்ப அரிய பெண்கள் கூட்டம்.
பொங்கு வெறியாட்டாளன், வேலன், முருகன்,
குறி புகன்றிடும் படிமத்தன்-ஏ,
புனை தேவராளன். வகுத்த சாலினி
தேவராட்டியைப் போற்றும் நாமம்.
எங்கணும் புகழ் குசலர், நிபுணர்-உடனே விபுதர்,
யாவர்க்கும் வல்லோர் பெயர்.
யவனர் சோனகர் பெயர். மிலேச்சர்கள், மிலைச்சர்
இரண்டும் ஆரியர் நாமமே! (59)

**கூட்டத்தின் பெயர்**

**சே:** — சங்கம், குழு, கூட்டம், கணம், தொகுதி, சவை, அவை.

**பி:**— கூளி, ஈட்டம், குழுமல், தோடு, தொழுதி, தொறு, தொகை, குழாம், துற்று, நளி, முகை, மொய், கணம், சரி, ஈண்டல், சங்கம், திரளை, சவை, அவை, கூட்டம்.

**சூ**:— சவை, சமவாயம், சங்கம், சமுதாயம், சமூகம், கோட்டி, அவை, குழாம், குழு, கூட்டம், திரள், கணம்.

## பெண்கள் கூட்டத்தின் பெயர்

**சூ**:— பண்ணை, ஓரை, பொய்தல், ஆயம், கெடவரல்.

## தேவராளன் பெயர்

**சே**:— வேலன், முருகன், வெறியாட்டாளன், தேவராளன், படிமத்தோன்.

**பி**:— வேலன், முருகன், தேவராளன், படிமத்தவன், வெறியாட்டாளன்.

**சூ**:— தேவராளன், வெறியாட்டாளன்.

## தேவராட்டி பெயர்

**பி**:— சாலினி, முதியாள், படிமத்தவள், தேவராட்டி.

**சூ**:— சாலினி. தேவராட்டி.

## வல்லோர் பெயர்

**சே**:— வலுவை, நல்லுநன், வல்லோன்.

**பி**:— வலவை,வல்லவன், வல்லுநன், வல்லோன்,

**சூ**:— வலுவை, வல்லுநன், வல்லோன்.

**க**:— வல்லவன், வலவை, வல்லுநர்.

## சோனகர் பெயர்

**சே**:— யவனர், சோனகர்.

**பி**:— யவனர், சோனகர்.

**சூ**:— யவனர், சோனகர், உவச்சர்.

### ஆரியர் பெயர்

சே:— *மிலேச்சர், ஆரியர்.*

பி:— *மிலேச்சர், ஆரியர்.*

**வண்ணார், நாவிதர், கள்விலைஞர், உறைகாரர், துன்னர், நெய்வார், உப்புவாணிகர், ஊன் விலைஞர், இவர்கள் பெயர்.**

**ஈரங்கோ லியர்தூசர் நீர்வினைஞர் காழிய**
**ரேகாலி யாகும்வண்ணார்**
**ஏனாதி சிரையர்பெரு மஞ்சிகர்சீ மங்கிலிய**
**ரென்பமயிர் வினைநாவிதர்.**
**சாருஞ்ச வுண்டிகர்து வசர்படுவர் கள்பிழியர்**
**தம்முடன் பழசரைந்துந்**
**தக்ககள் வினைஞர்பெயர் காரோடர் முச்சியர்**
**சாற்றிய விரண்டுபெயரும்**
**போரங்க வுறைகாரர் பொல்லரே துன்னர்**
**பொருந்தரே வேதகாரர்**
**போற்றுகா ருகரேநெய் வாருமணர் அளவரொடு**
**புகலுப்பர் கழியர்நான்கும்**
**நீர்கொண்ட உப்புவா ணிகர்சூன ரூன்விலைஞர்**
**நீங்கரும் வேதனைசெய்வோர்**
**நிகழரும் [1]தூனாட்டு வாணிகன் பெயரென்று**
**நெறியோ ரியம்பினாரே!**

**ஈரங்கோலியர், தூசர், நீர்வினைஞர், காழியர்.*
*ஏகாலி ஆகும வண்ணார்.*
*ஏனாதி, சிரையர், பெருமஞ்சிகர், சீமங்கிலியர்,*
*என்ப மயிர்வினை நாவிதர்.*

---

1 *துனாட்டு என்றுளது.*

சாரும் சவுண்டிகர், துவசர், படுவர், கள்பிழியர்,
தம்முடன் பழசர் ஐந்தும்
தக்க கள்விலைஞர் பெயர், காரோடர், முச்சியர்,
சாற்றிய இரண்டு பெயரும்
போர் அங்க உறைகாரர், பொல்லரே துன்னர்.
பொருந்தரே, வேதகாரர்,
போற்று காருகரே, நெய்வார். உமண் அளவர்-
ஒடு
புகல் உப்பர், கழியர். நான்கும்
நீர்கொண்ட உப்பு வாணிகர். சூனர், ஊன் விலைஞர்,
நீங்க அரும் வேதனை செய்வோர்.
நிகழ அருந்து ஊன் ஆட்டு வாணிகன் பெயர்
என்று
நெறியோர் இயம்பினாரே! (60)

## வண்ணார் பெயர்

**சே:—** ஏகாலியர், தூசர், ஈரங்கோலியர், காழியர், வண்ணார்.

**பி:—** காழியர், ஈரங்கோலியர், ஏகாலியர், தூசர்.

**சூ:—** காழியர், தூசர், ஈரங்கோலியர், வண்ணார்.

**க:—** காழியர், வண்ணார்.

## நாவிதர் பெயர்

**சே:—** பெருமஞ்சிகர், மயிர்வினைஞர், நாவிதர்.

**பி:—** பெருமஞ்சிகன், மயிர்வினைஞன், ஏனாதி, சிரையன், மங்கலியன்.

**சூ:—** பெருமஞ்சிகன், சீமங்கலி, ஏனாதி, நாவிதன்

**க:—** பெருமஞ்சிகர், மயிர்வினைநாவிதர்.

## கள்விலைஞர் பெயர்

சே:— பழையர், துவசர், படுவர், கள்விலைஞர்.

பி:— பழையர், துவசர், படுவர், கள்விலைஞர்.

சூ:— சௌண்டிகர், துவசர், பிழியர், படுவர். கள்விற்போர்.

க:— பழையர், துவசர், படுவர், கள்வாணியர்.

## உறைகாரர் பெயர்

சே:— காரோடர், உறைகாரர்.

பி:— காரோடர், உறைகாரர்.

சூ:— காரோடர், உறைகாரர்.

க:— காரோடர், உறைகாரர்.

## தையற்காரர் (துன்னர்) பெயர்

பி:— குயினர், பொல்லர், துன்னர்.

சூ:— பொல்லர், துன்னர்.

## நெய்வார் பெயர்

சே:— செங்குந்தப் படையினர், சேனைத் தலைவர், தந்துவாயர், காருகர், கைக்கோளர்.

சூ:— காருகர்

## உப்பு வணிகர் பெயர்

சே:— உமணர், அளவர், உப்பமைப்போர்,

பி:— உமணர், அளவர், உப்பர், உப்பு வாணிகர்.

சூ:— உமணர், உப்பு வாணிகர்.

க:— உப்பமைப்பவர், உமணர், அளவர்.

சே:— சூனர், ஊன் விலைஞர்.

பி:— சூனர், ஊன் விலைஞர்

சூ:— சூனர், ஊன் விற்போர்.

க:— சூனர், ஊன் விலைஞர்.

## கூவநூலோர், சங்கறுப்போர், நீகாமன், தோல்வினைஞர், செம்மார், சண்டாளர் தோற்கருவிமாக்கள், நரம்புக்கருவி மாக்கள், மெய்க்காப்பாளர், இவர்கள் பெயர்

உல்லியர் கூவநூ லோர்வளை போழ்நரே
யூர்ந்திடுஞ் சங்கறுப்போர்
உவர்ச்சனே சிப்பிநீ கானீர ளப்போனு
ரைக்குமா லுமியன் மூன்றும்
சொல்லுமீ காமனபி தானம்ப றம்பரே
தோல்வினைஞர் நாமமன்றித்
தோற்றுன்ன ரென்பர்செம் மார்பெயர் குணுங்கர் வினை
சூழ்கொலைஞர் கலைஞர்வங்கர்
புல்லுமா தங்கர்கௌண் டர்கனக தரிழிஞர்
புலைஞரே நீசர்பத்தும்
புகன்றசண் டாளர்பெயர் யவனரே யியவர்
பொருந்துதோற் கருவிமாக்கள்
நல்லிசைக் குயிலுவ ருடன்குழலர் மெல்லிய
நரம்புடைக் கருவிமாக்கள்
நாமமாங் காவலர்மெய்க் காப்பாள ரபிதான
நாட்டுகஞ் சுகியுமாமே! (20)

*உல்லியர் கூவநூலோர், வளைபோழ்நர்,
ஊர்ந்திடும் சங்கு அறுப்போர்.
உவர்ச்சன்[1]-ஏ, சிப்பி. நீகான், நீரளப்போன்,
உரைக்கும் மாலுமியன் மூன்றும்

[1] = ?

சொல்லும் மீகாமன் அபிதானம். பறம்பரே
தோல்வினைஞர் நாமம் அன்றி
தோற்றுன்னர் என்பர் செம்மார் பெயர்
குணுங்கர்
வினைசூழ் கொலைஞர், கலைஞர்,
வங்கர்'
புல்லு மாதங்கர், கௌண்டர், கனகதர் இழிஞர்,
புலைஞரே நீசர் பத்தும்
புகன்ற சண்டாளர் பெயர். யவனரே, இயவர்
பொருந்து தோற்கருவி மாக்கள்,
நல்லிசைக் குயிலுவர் உடன் குழலர் மெல்லிய
நரம்புடைக் கருவிமாக்கள்
நாமமாம், காவலர், மெய்க்காப்பாளர்
அபிதானம்;
நாட்டு கஞ்சுகியும்ஆமே! (61)

**கூவ நூலோர் பெயர்**

சே:— உல்லியர், கூவநூலுரை யுணர்வோர்.
சூ:— உல்லியர், கூவனூலோர்.
க:— சல்லியர், கூவநூல் வல்லவர்.

**சங்கு அறுப்போர் பெயர்**

பி:— வளைபோழ்நர், சங்கறுப்போர்.
சூ: – வளைபோழ்நர், சங்கறுப்போர்.

**மீகாமன் பெயர்**

சே:— நீகான், மரக்கலன், மீகாமன்.
பி:— நீகான், மாலுமி, மரக்கலன், மீகாமன்.
சூ:— மீகான், மாலுமி, நீகான், மீகாமன்.

**தோல்வினைஞர் பெயர்**

சே:— பறம்பர், தோல்வினைஞர்.
பி:— பறம்பர் தோல்வினைஞர்-

தி:— பறம்பர், தோல்வினைஞர்.

க:— தோல்விற்போர், பறம்பர்.

### செம்மார் பெயர்

சூ:— செம்மார், தோற்றுன்னர்

### சண்டாளர் பெயர்

சே:— குணுங்கர், வங்கர், கவுண்டர், கனகதர், இழிஞர், கொலைஞர், புலைஞர், சண்டாளர்.

பி:— குணுங்கர், புலைஞர், கீழோர், இழிஞர் அணங்கு.

தி:— கொலைஞர், கலைஞர், வங்கர். குணுங்கர் மாதங்கர், புலைஞர், இழிஞர்.

க:— குணுங்கர், கவுண்டர், கனகதர், வங்கர் புல்லர், புலைஞர், இழிஞர், சண்டாளர்.

### தோற்கருவி மாக்கள்

சே:— இயவர், தோற்கருவி இசைக்குமாக்கள்

பி:— இயவர், தோற்கருவியாளர்.

தி:— இயவர், தோற்கருவிமாக்கள்

க:— இயவர், தோற்கை வினைஞர்.

### நரம்புக் கருவி மாக்கள்

சே:— குயிலுவர், நரப்புக் கருவிகொளற்குரியோர்.

பி:— குயிலுவர், நரப்புக்கருவியாளர்.

தி:— குயிலுவர், நரப்புக்கருவியாளர்.

க:— நரப்புடைக்கருவிவல்லோர், குயிலுவர்.

### மெய்க்காப்பாளர் பெயர்

தி:— காவலர், கஞ்சுகி, மெய்க்காப்பாளர்.

## கூத்தர், கழைக்கூத்தர், தமிழ்க்கூத்தர் கடிகைமாக்கள், பாணர், புகழ்வோர், இவர்கள் பெயர்

நா'டகர்நி ருத்தர்கோ டியர்பொரு [1]நர்வினையர்
நடரொடுகண் ணுளர்வயிரியர்
நாமமோ ரெட்டுமே கூத்தர்வே ழம்பரே
நண்ணிய கழைக்கூத்தர்பேர்
ஆடல்பெரு வாயிலோ ரேதமிழ்க் கூத்தர்பெய
ராய்ந்தபா வலர்நாவலர்
ஆனபாட் டகர்வண்டர் கவிகள்வந் திகள்பனுவ
லாளர்நா கரிகரெட்டாந்
தேடரிய புலவர்கற் றோர்கடிகை மாக்கள்பெயர்
[2]செயரியர் மதங்கர்சூதர்
சென்னியர் இன்னிசைக் காரர்பண் ணவர்பரணர்
செறியுமா கதர்வயிரியர்
பாடிவரு பாணரிவை பாடல்வல் லோர்பெயர்
பகுத்த பாகதர் [3]பூதகர்
பயிலும்வே தாளிகர் சூதர்வந் திகரொடு
படிப்பவர் புகழ்வோர்களே! 21

*நாடகர், நிருத்தர், கோடியர், பொருநர், வினையர்
நடர்-ஒடு கண்ணுளர் வயிரியர்,
நாமம் ஓர் எட்டுமே கூத்தர். வேழம்பர்-ஏ
நண்ணிய கழைக்கூத்தர் பேர்
ஆடல்பெரு வாயிலோரே தமிழ்க்கூத்தர் பெயர்
ஆய்ந்த பாவலர், நாவலர்,
ஆன பாட்டகர், வண்டர், கவிகள், வந்திகள்,
பனுவலாளர், நாகரிகர், [4]எட்டர்,

---

1 நரவினையர் என்றுளது
2 செயிரியர் எனல் பொருந்தும்
3 பூகதர் எனில் இயையும்.
4 எட்டாந் என்றுளது

தேட அரிய புலவர், கற்றோர் கடிகைமாக்கள் பெயர்.
[1]செயிரியர், மதங்கர், சூதர்,
சென்னியர், இன்னிசைகாரர், பண்ணவர், பரணர்,
செறியும் மாகதர், வயிரியர்,
பாடிவரு பாணர் இவை பாடல்வல்லோர் பெயர்.
பகுத்த பாகதர், [2]பூகதர்,
பயிலும் வேதாளிகர், சூதர், வந்திகர்—ஒடு
படிப்பவர் புகழ்வோர்களே! (62)

**கூத்தர் பெயர்**

**சே**:— கோடியர், பொருநர், நாடகியர், நிருத்தர், கண்ணுளர், வயிரியர், வினைஞர், நடர், கூத்தர்.

**பி**:— நாடகர், நிருத்தர், நடர், கண்ணுளர், கோடியர், வயிரியர், பொருநர், கூத்தர்.

**சூ**:— நாடகர், கண்ணுளாளர், நடர், வயிரியர், நிருத்தர், கோடியர், பொருநர், அவிநயர்.

**க**:— நிருத்தர், பொருநர், நடியர், நடர், கண்ணுளர், கோடியர், கூத்தர், வயிரியர், வினையர்.

**கழைக்கூத்தர் பெயர்**

**சே**:— வேழம்பர், கழைக்கூத்தர்.

**பி**:— வேழம்பர், கழைக்கூத்தர்.

**சூ**:— வேழம்பர், கழைக்கூத்தர்.

**க**:— வேழம்பர், கழாயர்.

**தமிழ்க்கூத்தர் பெயர்**

**சே**:— வாயிலோர், தமிழ்க்கூத்தர்.
**பி**:— வாயிலோர், தமிழ்க்கூத்தர்.



1 செயரியர் என்றுளது.
2 பூதகர் என்றுளது.

சூ:— வாயிலோர், தமிழ்க்கூத்தர்.

க:— வாயிலர், கூத்தர்.

## கடிகைமாக்கள் பெயர்

சே:— மங்கலப் பாடகர், எட்டர், கடிகை மாக்கள்.

பி:— பெருநம்பிகள், மங்கலப்பாடகர், எட்டர், கடிகைமாக்கள்.

சூ:— எட்டர், வந்திகள், கவிகள், கற்றோர், வண்டர், கடிகைமாக்கள், மங்கலப்பாடகர்.

க:— மெய்கற்றோர், நாவலர், மங்கலப்பாடகர், எட்டர், கவிகள், பாவலர், பல்கலைவல்லோர், கடிகையர்.

## பாணர் பெயர்

சே:— சென்னியர், வைரியர், சூதர், மாகதர், இன்னிசைகாரரர், மதங்கர், பாணர்.

பி:— சென்னியர், வைரியர், செயிரியர், மதங்கர், இன்னிசைகாரரர், பாணர்.

சூ:— சென்னியர், பண்டர், ஓவர், வந்தித்து நிற்போர், மதங்கர், சூதர், பண்ணவர், பாணர்.

க:— சென்னியர், வயிரியர், மாகதர், சூதர், மதங்கர், இசைகாரரர், பாடல்வல்லோர், பாணர்.

## புகழ்வோர் பெயர்

சே:— மாகதர், வந்தியர், சூதர், வேதாளியர், பூகதர், பப்புவர், புகழ்வோர்.

பி:— பூகதர், மாகதர், வந்தியர், பப்புவர், வேதாளியர்,

க:— சூதர், வந்தியர், புகழ்வோர், வேதாளியர், மாகதர், பூகதர்,பப்புவர்.

**சுற்றத்தார் பெயர், பகைவர் பெயர்.**

**பரிசனங் கிளையொக்கல் சுற்றம்வி [1]ருந்துகுளை**
**பண்பினங் கடும்புநள்ளி**
**பாசனங் கூளிகே ணண்புநட் புத்தொடர்பு**
**பந்தங்கு டும்பந்துணை**
**விரவுமதர் கேண்மையுற் றார்சிறந் தார்தொக்கர்**
**மேவுநட் டார்சார்ந்தவர்**
**வேண்டுமுற வையைந்து பெயருமொன்**
**னார்மன்னார்**
**விட்டாருள் ளார்விரும்பார்**
**அரிகளடை யார்நண்ணார் பொற்றார்நள் ளார்செறுந**
**ரமராரே தெவ்வர்மற்றார்**
**அடருமிக லோரெதிர்ந் தோர்முனைந் தோர்மாற்ற**
**லார்புல்லார் வேண்டாரொல்லார்**
**மருவலா ரொட்டலார் பற்றலார் தரியலார்**
**[2]மாணார்மித் திரர்பற்சாரர்**
**மறவர்வட் கார்துன்னார் செற்றாரெண் ணான்குமே**
**வண்பகைவர் நாமமாமே!** 22

* பரிசனம், கிளை, ஒக்கல், சுற்றம், விருந்து, இகுளை, பண்பினம், கடும்பு, நள்ளி,

பாசனம், கூளி, கேள், நண்பு, நட்பு, தொடர்பு, பந்தம், குடும்பம், துணை,
விரவும் மதர்,கேண்மை,உற்றார்,சிறந்தார்,தொக்கர், மேவு நட்டார், சார்ந்தவர்.
வேண்டும் உறவு ஐஐந்து பெயரும். ஒன்னார், மன்னார்,
விட்டார், உள்ளார், விரும்பார்,
அரிகள், அடையார், நண்ணார்,பொற்றார், நள்ளார், செறுநர்
அமரரே, தெவ்வர், மற்றார்,

---

1 ருந்திகுளை எனல் பொருந்தும்.
2 மாணாரமித்திரர் எனல் வேண்டும்.

அடரும் இகலோர், எதிர்ந்தோர், முனைந்தோர்,
மாற்றலார், புல்லார், வேண்டார்,
ஒல்லார்,
மருவலார், ஒட்டலார், பற்றலார், தரியலார்,
[1]மாணார், அமித்திரர், பற்சாரர்,
மறவர், வட்கார், துன்னார், செற்றார்,
எண்ணான்குமே
வண் பகைவர் நாமம் ஆமே! 63

**சுற்றத்தார் பெயர்**

**சே:—** ஒக்கல், சுற்றம், உறவு, கிளை, கேள், நட்பு, மேவினர், சார்ந்தவர், உற்றார், பந்தம், கூளி, கடும்பு, குடும்பம், நந்தமர், சிறந்தோர், நட்டோர், பரிசனம், உறவு.

**பி:—** கேள், ஒக்கல்,கிளை, பந்தம், கூளி, கடும்பு, குடும்பம், நண்பு, தமர், உரியர், நட்பு, நட்டோர், பற்றினர்.

**சூ:—** உற்றவர், இகுளை, நட்டோர், உறவு, ஒக்கல், கிளை, சார்ந்தோர், பற்றினர், சிறந்தோர், நட்பு,பந்தம், பரிசனம், கேள், நண்பு, கூளி, குடும்பம், கடும்பு, நள்ளி, பாசனம், சுற்றம்.

**க:—** ஒக்கல், கேள், கூளி, குடும்பு, துணை, நட்பு, உறவு, சுற்றம், கடும்பு, கிளை, தமர், பந்தம், விருந்தம்.

**பகைவர் பெயர்**

**சே:—** தரியலர், தெவ்வர், மேவலர், செறுநர், கருதலர், சேரலர், இரிஞர், ஒன்னார், ஒல்லார், அரிகள், நள்ளார், அமரர், ஒட்டார்,புல்லார், நேரார், நிகரார், ஒட்டலர், நேரலர், இகலோர், எதிர்ந்தோர், விட்டவர், மாற்றலர், முனைந்தோர்,பகைஞர்.

---

1 மாணார்மித்திரர் என்றுளது.

பி:— ஒல்லார், நோனார், ஒன்றலர், நண்ணலர், திருந்தலர், மேவலர், செற்றார், செறுநர், இன்னார், கருதலர், எண்ணலர், நள்ளார், பொருந்தலர், பற்றலர், புல்லார், சேரார், தெவ்வர், அடையலர், தரியலர், தெறுநர், ஒட்டார், பகைஞர், அரிகள், மாற்றலர்.

சூ:— அரிகள், செறுநர், சேரார், அமரார், உள்ளார், நள்ளார், மருவலர், தெவ்வர், மாணார், மாற்றலர், மன்னார், ஒன்னலர், தரியலர், ஒட்டார், வட்கார், சார்பிலாளர், பற்றார், செற்றார், பரர், கேளார், ஒல்லார், பகைவர்.

க:— அரி, பரர், ஒன்னார், மடங்கார், அமரர், அமித்திரர், கருதலர், ஒல்லார், நவ்வார், மறுவார், கறுத்தார், அடர்வோர், தரியலர், ஒட்டார், செறுநர், நள்ளார், தெவ்வர், சாரலர், பகை, நேரார், நிகரார், முனைந்தார், எதிர்ந்தவர்.

## நட்புடன் சார்ந்தவர் பெயர், அயலார் பெயர், புதியவர் பெயர், தனிமையின் பெயர், உடனிகழ்வார் பெயர்,

**உள்ளினர்புள் ளினர்பகைந் தாரடைந் தார்மித்திர**
**ரொன்றினர்துன் றினர்புரிந்தார்**
**ஒட்டினர்வி ரும்பினர்தி ருந்தினர்பொ ருந்தினரெரல்**
**லுனர்கலந் தார்விழைந்தார்**
**[1]நள்ளுநர்கண் ணுநர்காத லித்தார்தொ டர்ந்தார்**
**நயந்தார்நல் லவர்வேண்டினார்**
**நண்ணினார் கூட்டம்வேட் டாருடன் பேட்டார்**
**நவின்றவிரு பத்தாறுமே**

1 நள்ளுனர் கண்ணுனர் என்றுளது.

**வின்ளரிய நட்புடன் சார்ந்தவர்க் குரியபெயர்**
**[1]வினவிலம் பலவேதிலார்**
**வெய்யநொது மலரென்ப தயலவர்க் குரியபெயர்**
**வீறுமதி தியர்வம்பலர்**
**தள்ளரும் பூருவர் புதியவர்க் குரியபெயர்**
**சாற்றிலொரு மூன்றுமாகும்**
**தமிதனிமை யின்பெய ரேமியுட னிகழ்வார்**
**தமக்குரிய நாமமாமே!** 23

*உள்ளினர், புள்ளினர், பசைந்தார், அடைந்தார், மித்திரர்,
ஒன்றினர், துன்றினர், புரிந்தார்,
ஒட்டினர், விரும்பினர், திருந்தினர், பொருந்தினர்,
ஒல்லுநர், கலந்தார், விழைந்தார்,
[2]நள்ளுநர், கண்ணுநர், காதலித்தார், தொடர்ந்தார்,
நயந்தார், நல்லவர், வேண்டினார்,
நண்ணினார், கூட்டம், வேட்டார்—உடன், பேட்டார்,
நவின்ற இருபத்து ஆறுமே
வின்ள அரியநட்பு உடன் சார்ந்தவர்க்கு உரியபெயர்
[3]வினவில் வம்பலர், ஏதிலார்
வெய்ய நொதுமலர் என்பது அயலவர்க்கு உரிய பெயர்.
வீறும் அதிதியார், வம்பலர்,
தள்ள அரும் பூருவர், புதியவர்க்கு உரிய பெயர்,
சாற்றில் ஒரு மூன்று ஆகும்.
தமி தனிமையின் பெயர். ஏமி உடன் நிகழ்வார்
தமக்கு உரிய நாமம் ஆமே! 64

**நட்புடன் சார்ந்தவர் பெயர்**

**சே:**— ஒல்லுநர், துன்னுநர், ஒட்டுநர், ஒன்றுநர், நள்ளுநர், தொடர்ந்தோர், மேவினர்.

---

1 வினவில்வம் பலரேதிலார் எனல் பொருந்தும்
2 நள்ளுனர் கண்ணுனர் என்றுளது.
3 வினவிலம் பலவேதிலார் என்றுளது.

பி:— மித்திரர், ஒல்லுநர், துன்னுநர், ஒன்றுநர், நேர்ந்தோர், நண்ணுநர், நள்ளுநர், நயந்தோர், மேவிநர், சேர்ந்தோர்.

சூ:— மேவினர், ஒல்லுநர், தொடர்ந்தார் சேர்ந்தார், ஒட்டுநர், பெட்டார், வேட்டார், புல்லுநர், பசைந்தார், மித்திரர், புரிந்தார், ஆர்வலர், விழைந்தார், நல்லவர், காதலித்தார், நள்ளுநர், நயந்தார், கூட்டம் ஒன்றுநர்.

க:— தக்கவர், துன்னினர், ஒன்றினர், கூடினர், சாலவன்பு தொக்கவர், நள்ளுவர், ஒல்லுநர், மேவினர் தொடர்ந்தோர்.

## அயலார் பெயர்

சே:— நொதுமலர், வம்பலர், அயலோர்

பி:— நொதுமலர், வம்பலர். அயலோர்

சூ:— நொதுமலர், வம்பலர், அயலவர்

க:— நொதுமலர், அயலார்.

## புதியவர் பெயர்

சே:— அதிதியர், வம்பலர், புதியோர்.

பி:— அதிதியர், வம்பலர், புதியோர்

சூ:— விருந்தோர், அதிதி, வம்பலர், புதியவர்.

க:— வம்பர், அதிதி, புதியோர்.

## தனிமையின் பெயர்

சே:— தமி, தனி

### உடனிகழ்வார் பெயர்

சே: எமி, உடனிகழ்வான்,

**கொடையாளன், இரப்போன், வழிச் செல்வோன், அறிவில்லான், கொலையாளி, திண்ணியன், இவர்கள் பெயர்.**

வள்ளலுப காரிபுர வலன்வேள்வி யாளன்
[1]வளங்குந்தி யாகிவேளான்
மகிழீகை யாளனுயர் கோதையென் றோதிடு
மலிந்தகொடை யாளன்பெயர்
எள்ளரிய விரவலன் பரிசிலா ளன்றீனன்
யாசகனி ரப்போன்பெயர்
இலங்கிய வழிச்செல்வோ னேபதிக னெடுபரத
னென்றுபெய ரிழுதைமூடன்
தள்ளுமட [2]னேழையா தன்குதலை மூழுமகன்
சழனஞ்சை பேதைபஞ்சை
சாற்றுசெடி யன்மண்ணை நாசனன் சிதடனுர்
[3]சாருமறு வில்லோன்பெயர்
விள்ளரிய காதகன் சாருகன் கொலையாளி
மேவுபெயர் வண்டன்மிண்டன்
மீளிவிற லோன்வியவன் வயவன்வீ ரன்மள்ளன்
மிக்கதிண் ணியனுமமே ! (24)

*வள்ளல், உபகாரி, புரவலன், வேள்வியாளன்,
வழங்கும் தியாகி, வேளான்,
மகிழ் ஈகையாளன், உயர் கோதை என்று ஓதிடும்
மலிந்த கொடையாளன் பெயர்.

---

1 வழங்குந்தி எனல் பொருந்தும்.

2 னேழையர் என்றுளது.

3 சாருமறி எனல் பொருந்தும்.

எள்ள அரிய இரவலன், பரிசிலாளன், தீனன்,
யாசகன் இரப்போன் பெயர்.
இலங்கிய வழிச்செல்வோனே பதிகன்—ஒடு,
பரதன்
என்று பெயர். இழுதை, மூடன்
தள்ளும் மடம், ஏழை, ஆதன், குதலை, முழுமகன்,
சழுன், அஞ்ஞை, பேதை, பஞ்சை,
சாற்று செடியன், மண்ணை, நாசனன், சிதடன்,
அஞர்,
சாரும்[1] அறிவில்லோன் பெயர்.
விள்ள அரிய காதகன், சாருகன், கொலையாளி
மேவு பெயர். வண்டன், மிண்டன்,
மீளி, விறலோன், வியவன், வயவன், வீரன்,
மள்ளன்
மிக்க திண்ணியன் நாமம் ஆமே! 65

**கொடையாளன் பெயர்**

சே — வரையாதுகொடுப்போர், வள்ளியோர்,

**பி:**— புரவலன், ஈகையாளன், தியாகி, உபகாரி. வேளாளன், வள்ளல், கொடையுளோன், வள்ளியோன்.

**சூ:**— புரவலன், ஈகையாளன், வேளாளன் தியாகி, வேள்வியாளன், உபகாரி, கொடையுளோன்,

**இரப்போன் பெயர்**

**சே:**— இரவலர், இரவோர். பரிசிலாளர், யாசகர், இரப்போர்.

**பி:**— இரவலர், பரிசிலாளர், யாசகர், இரப்போர்.

**சூ:**— இரவலன், பரிசிலன், யாசகன், தீனன், ஏற்போன்.



1 அறுவில்லோன் என்றுளது

க:— இரவலர், யாசகர், பாடகர், பட்டர், பரிசிலோர்.

## வழிச்செல்வோன் பெயர்

சே:— பதிகர், வழிச்செல்வோர்.

பி:— பதிகன், பாந்தன், வியவன், வழிச் செல்வோன்.

சூ:— பதிகன், வழிச்செல்வோன்.
க:— பதிகர், வழிநடப்போர்.

## அறிவில்லோன் பெயர்

சே:— முழுமகன், சிதடன், இழுதை, மூடன், மண்ணை, மடன், பேதை, குதலை, உஞ்ஞை, அஞர், யாதன், ஏழை, அறிவிலான்.

பி:— முழுமகன். சிதடன், மூடன், பேதை, இழுதை, அஞ்ஞை, ஆதன், ஏழை, மடமகன், குதலை, அறிவிலான்.

சூ:— முழுமகன், சிதடன், பேதை, மூடன், மண்ணை, அஞ்ஞை, இழுதை, மடன். ஆதன், ஏழை, அறிவிலான்.

க:— அற்றவன், பேதன், சிதடன், முழுமகன், அஞ்சி, இழுதை, சளன், பேதை, ஆதன், அண்ணை, மடம், குதலை, அஞ்ஞை, மூடன்.

## கொலையாளி பெயர்

பி:— காதகன், சாருகன், கொலையாளன்,

சூ:— காதகன், சாருகன்' கொலையாளி.

## திண்ணியர் பெயர்

சே:— விறலோன், விடலை, திறலோன்.

பி:— வியவன், வண்டன், வீரன், மிண்டன், விறலோன், பொருநன், விடலை, மள்ளன், திறலோன், பண்ணவன், திண்ணியோன்.

ரூ:— வயவன், திறலோன், வண்டன், மிண்டன், மள்ளன், வியவன், விறலோன், மீளி, வீரன், திண்ணியன்.

## தானைத்தலைவர், ஏவல்செய்வோர், தாயத்தார், அடிமையோர், தொழில் செய்வோர், வாயில்காப்போர் இவர்கள் பெயர்.

வீரர்கூ ளியர்பொருநர் மறவர்மா னவர்மள்ளர்
[1]வில்லுளவர் சூரர்பண்பர்
விடலை[2]கவி படாசல்லி யேறாளர் செருநருடன்
விறலபயர் தருகணாளர்
தீரரீ ரொன்பது மிக்கதா [3]னத்தலைவர்
சிலதர்சில தியரெட்டியர்
சேடர்பரி சனமுழைவ ரேவல்செய் வோர்பெயர்.
திகழ்தாயத் தார்ஞாதிகள்
சாருமே தங்குடித் தமரினுக் குரியபெயர்
தாசர்கிண கர்சேடர்கள்
தஞ்சந்தொ றுத்தொண்டு தொத்துத்தொ
மும்புடன்
தயவுகூ ராள்விருத்தி
சீரடிமை யோர்பெயர் தொழுவர்கம் மியர்தொழில்
செய்வோர்கள் பெயரதாகும்
செப்புதுய ரற்றோர்கள் வாயில்காப் போர்பெயர்
திருவாயி லாளராமே! (25)

*வீரர், கூளியர், பொருநர், மறவர், மானவர்,
மள்ளர்,
வில்லுழவர், சூரர், பண்பர்,
விடலை, கலி, படர், சல்லி, ஏறாளர், செருநர்—
உடன்
விறல் அபயர், தருகணாளர்,

---

1 வில்லுழவர் எனல் பொருந்தும்.
2 கலி படர் எனல் பொருந்தும்.
3 னைத்தலைவர் எனல் பொருந்தும்,

தீரர் ஈரொன்பதும் மிக்கதா னைத்தலைவர்.
சிலதர், சிலதியர், எட்டியர்,
சேடர், பரிசனம், உழைவர், ஏவல் செய்வோர்
பெயர்.
திகழ் தாயத்தார், ஞாதிகள்,
சாருமே தங்குடித்தமரினுக்கு உரிய பெயர்,
தாசர், கிணகர், சேடர்கள்,
தஞ்சம், தொறு, தொண்டு, தொத்து, தொழும்பு-
உடன்
தயவுகூர் ஆள், விருத்தி,
சீர் அடிமையோர் பெயர் தொழுவர், கம்மியர்,
தொழில் செய்வோர் பெயர் அது ஆகும்.
செப்பு துயர் அற்றோர்கள், வாயில்காப்போர்,
பெயர்;
திருவாயிலாளர் ஆமே! (66)

**தானைத்தலைவர் பெயர்**

**சே:—** மானவர், வீரர், மறவர், பொருநர், கலியர், மண்டர், மள்ளர், வாளுழவர், ஏறாளர் கூளியர், தானைத்தறுகண்ணாளர்.

**பி:—** மறவர், கூளியர், மள்ளர், பொருநர், இகலர், செருநர், வாளாளர், வாளுழவர், படர், வீரர், படைவீரர்.

**ஆ:—** கூளியர், ஏறாளர், வாளுழவர், மள்ளர் மறவர், படர், தானைத்தலைவர்.

**ஏவல்செய்வோர் பெயர்**

**சே:—** சிலதர், சிலதியர், சேடர், சேடியர், பரிசனம், உழையோர், ஏவல் செயற்பாலோர்.

**க:—** சேடர், சிலதர், சிலதியர், சேடியர், பரிசனம், ஏவல்செய்வோர்.

**தம்குடிச் சுற்றத்தினர் பெயர்**

**பி:—** தாயத்தார், ஞாதியர்.

**ஆ:—** ஞாதியர், தாயத்தார், தங்குடிச்சுற்றம்.

### அடிமையோர்

**சே**:— ஆள், தொழும்பு, அடிமை.

**பி**:— தொழும்பு, தொண்டு, தொத்து, தாதர், தொறு, விருத்தி, சேடர், கிணகர்.

**சூ**:— தொத்து, கிணகர், தாசர், தொழும்பு, தொறு, விருத்தி, தொண்டு, சேடர், ஆள், அடிமை.

**க**:— தொண்டு, தொழும்பு.

### தொழில் செய்வோர் பெயர்

**சே**:— தொழுவர், கம்மியர், தொழில்செய்வோர்.

**பி**:— தொழுவர், கம்மியர், தொழில் செய்வோர்.

**சூ**:— தொழுவர், கம்மியர், தொழில் செய்வோர்.

### வாயில்காப்போர் பெயர்

**சூ**:— வாயிலாளர், வாயில்காப்போர்.

### குறளன், செவிடு, மூடம், கூன், ஊமை, குருடன், பேடி, அலி, அச்சமுடையோன், காமமிக்கோன், சதுரர், (நாகரிகர்) இவர்கள் பெயர்.

**சிந்துவா மனமொடு குஞ்சங்கு றட்பெயர்**
**செவிடுவதிர் பங்குமுடமாஞ்**
**செறிவக்கி ரங்கோணல் கூன்மூங்கை மூகையொடு**
**செப்பூமை மூடுவனுமாம்.**

**அந்தகன் சிதடனுடன் [1]தரிசன்மு டன்குருட**
**னாம்பேடி பெண்டகனுட**
**னாண்பெண்ண லாதவன் சண்டன் புஞ்சக**
**னலியைந்து பெயராகுமே.**

---

1 தரிசனமூ எனல்பொருந்தும்

**பிந்துறும் பீதனொடு சகிதனே [1]காரன்**
**பிறங்குருத் திரிதன்மிக்க**
**பீருவோ ராறுமே யச்சமுடை யோன்பெயர்**
**பேசிடங் கழிபல்லவர்**
**நைந்திடும் படிறர் பரத்தர்விடர் தூர்த்தர்**
**நயந்திடுங் காமமிக்கோர்**
**நாமநா கரிகரொடு காமுக ரெனும்பெயர்**
**நகர்ப்பதியில் வாழ்சதுரரே! (26)**

*சிந்து, வாமனம்-ஒடு, குஞ்சம், குறள் பெயர்.
செவிடு வதிர், பங்கு முடம் ஆம்.
செறி வக்கிரம், கோணல், கூன், மூங்கை, மூகை —ஒடு
செப்பு ஊமை; மூடுவனும் ஆம்.
அந்தகன்,சிதடன், உடன் [2] தரிசனமுடன் குருடனாம்.
பேடி. பெண்டகன்—உடன்
ஆண் பெண் அலாதவன், சண்டன், புஞ்சகன்,
அலி ஐந்து பெயராகுமே.
பிந்துறும் பீதன், சகிதன், [3]காதரன்,
பிறங்கு உரு, திரிதன், மிக்க
பீரு ஓர் ஆறுமே அச்சமுடையோன் பெயர்.
பேசு இடங்கழி, பல்லவர்,
நைந்திடும் படிறர், பரத்தர், விடர், தூர்த்தர்,
நயந்திடும் காமம் மிக்கோர்
நாமம். நாகரிகரொடு காமுகர் எனும்பெயர்
நகர்ப்பதியில் வாழ் சதுரரே! (67)

### குறளன் பெயர்

**சே:—** சிந்து, குஞ்சம், குறள், வாமனம்.
பி:— குஞ்சன், வாமனன், சிந்தன்.

---

1 காதரன் எனல் பொருந்தும்
2 தரிசன்முடன் என்றுளது.
3 காரன் என்றுளது.

தெ:— சிந்து, வாமனம், குஞ்சம், குறள்.

க:— சிந்து, குறள், வாமனம்.

## செவிடர் பெயர்

சே:— செவிடர், வதியர்.

பி:— வதிரன், செவிடன்.

தெ:— வதிர்.

க:— செவிடு, வெதிர்.

## முடவன் பெயர்

சே:— முடவன், பங்கு.

பி:— பங்கு, சூனியன், முடவன்.

தெ:— பங்கு, குணி, முடம்.

க:— முடம், பங்கு,

## கூனன் பெயர்

சே:— கோணல், கூன்.

பி:— கோணன், கூனன்.

தெ:— கோணல், கூனன்.

க:— கோணல், கூன்.

## ஊமையின் பெயர்

சே:— மூகை, மூங்கை, ஊமை.

பி:— மூகை, மூங்கை, ஊமை.

தெ:— மூகை, மூங்கை, ஊமை.

க:— மூகை, மூமை, மூங்கை.

## குருடன் பெயர்

சே:— ஆதர், அந்தர், அந்தகர், குருடர்.

பி:— அந்தகன், சிதடன், குருடன்.

சூ:— அந்தகன், சிதடன், குருடன்.

## அலியின் பெயர்

சே:— பேடர், பேடியர், பெண்டகர், பெண்டர், அலி.

பி:— பேடன், நபுஞ்சகன், பேதை, பெண்டகன், சண்டன், அலி.

சூ:— பெண்டகன், பேடி, நபுஞ்சகன், சண்டன், அலி.

க:— பேடியர், பேடுகள், பேடர்கள், பெண்டகர், சண்டன், கிலிபம், அலி.

## அச்சமுடையோன் பெயர்

பி:— பீரு, சிதன், பீதன், கரிதன், காதரன், அச்சமுடையோன்.

சூ:— பீதன், சகிதன், பீரு, அச்சமுள்ளோன்.

## காமம் மிக்கோன் பெயர்

சே:— விடர், காமுகர், மிகுபோகம் விழையுநர், படிற்றொழுகர், காமத்துப்பாலோர், தூர்த்தர்.

பி:— தூர்த்தர், விடர், காமுகர்.

சூ:— படிறர், பல்லவர், பரத்தர், இடங்கழியர், விடர், காமுகர், தூர்த்தர்,

க:— விடர், காமமிக்கவர், தூர்த்தர், ஒழுக்கமில்லோர்.

சே:— நகரப்பதிவாழ்நர், சதுரர், நாகரிகர்.

பி:— நாகரிகர், சதுரர், காமுகர்.

சூ:— சதுரர், காமுகர், நாகரிகர்.

க:— காமுகர், சதுரர், நாகரிகர், நல்லோர்.

## தோழன், அவன் முன்னிலை, தோழி அவள் முன்னிலை, துணைவன், துணைவி, அசதி, பதினாறாட்டைப் பெண் இவர்கள் பெயர்.

சம்மதன் காதலன் சேடனே துணைவன்
சகாயனே சிலதனண்பன்
சங்கத்தி யேயிணங் கன்பாங்க னெலுவனொடு
தண்டாமல் வருகிளைஞனே
செம்மைபெறு தோழனபி தானமிவன் முன்னிலை
செப்பிலோ டவெனும்பேர்
சிலதிசகி பாங்கி யிணங்கிகா தலிதுணைவி
சேடியே யிகுளைசேணி
மெய்ம்மருவு தோழியபி தானமிவள் முன்னிலை
விளம்பிடி லேடியெல்லாள்
வீறுதோ ழன்கணவ னிருவருந் துணைவனா
மிகுதோழி யுந்தலைவியும்
சொன்முறைத் துணைவியாம் கூளிகுட் டினிகுறளி
துட்டையே படுவிகுண்டம்
தொழுத்தையே யசதியுட னுவதியீ ரெட்டாண்டு
சூழ்ந்திடும் பெண்ணாகுமே! 27

*சம்மதன், காதலன், சேடன்-ஏ, துணைவன்,
சகாயன்-ஏ, சிலதன், நண்பன்,
சங்காத்தி-ஏ, இணங்கன், பாங்கன், எலுவன்-ஒடு,
தண்டாமல் வரு கிளைஞன்-ஏ,

செம்மைபெறு தோழன் அபிதானம், இவன் முன்னிலை
செப்பில் ஏடா எனும் பேர்.
சிலதி, சகி, பாங்கி, இணங்கி, காதலி, துணைவி,
சேடி-ஏ, இகுளை, சேணி,
மெய் மருவு தோழி அபிதானம். இவள் முன்னிலை
விளம்பிடில் ஏடி, எல்லாள்.
வீறுதோழன் கணவன் இருவரும் துணைவன்-ஆம்
மிகு தோழி-உம், தலைவி-உம்,
சொல்முறை துணைவி-ஆம். கூளி, குட்டினி, குறளி,
துட்டை-ஏ, படுவி, குண்டம்,
தொழுத்தை-ஏ அசதி உடன் உவதி ஈரெட்டு
ஆண்டு
சூழ்ந்திடும் பெண் ஆகுமே! 68

**தோழன் பெயர்**

**சே:**— நண்பன், பாங்கன், எலுவன், கிளைஞன், கேள்வன், தோழன்.

**பி:**— சிலதன், எலுவன், சேடன், நண்பன் பாங்கன், சகாயன், தோழன்.

**சூ:**— சிலதன், நண்பன், பாங்கன், சேடன், துணைவன், எலுவன், தோழன்.

**க:**— நண்பன், பாங்கன், எலுவன், துணைவன், கேள், தோழன், சகாயன்.

**தோழன் முன்னிலைப் பெயர்**

**சே:**— ஏடா.

**பி:**— ஏடா.

**சூ:**— ஏடா.

**தோழி பெயர்**

**சே:**— ஓரை, பொய்தல், இகுளை, தோழி, சேடி, பாங்கி.

பி:— சிலதி, பாங்கி, சேடி, இணங்கி, துணைவி, இகுளை, சகி, தோழி.

சூ:— சிலதி, சகி, பாங்கி, சேடி, இகுளை, தோழி.

க:— பொய்தல், பாங்கி, சேடி, இணங்கி, ஆயம், தோழி, இகுளை, தாங்குந்துணையோர்.

### தோழி முன்னிலைப் பெயர்

சே:— ஏலா, ஏடி.

பி:— ஏடி, ஏலா.

சூ:— ஏடி, எல்லா.

க:— எல்லா, *எடி.

### துணைவன் பெயர்

சே:— தோழன், கணவன், துணைவன்.

க:— கணவன், பதி, தோழன், காதலன்.

### துணைவியின் பெயர்

க:— தலைவி, புதல்வி, தோழி, காதலி.

### அசதியின் பெயர்

சூ:— குட்டினி, தொழுத்தை, கூளி, குறளி, படுவி, குண்டம், துட்டை, அசதி.

### பதினாறாட்டைப் பெண்ணின் பெயர்

சூ:— யுவதி.

---

*ஏடி?

## கீழ்மக்கள் பெயர், திருடர் பெயர், தரித்திரர் பெயர்.

பூரியர்க னிட்டர்கல் லார்கயவர் பேதையர்
பொறியிலார் முசுடர்மூர்க்கர்
புள்ளுவர்மு சுண்டர்தீக் குணர்தீம்பர் சீத்தைபொல்
லார்கலகர் கையர்சுமடர்
கோரர்கலர், பதகர்புல் லவர்புல்லர் சிறுமையர்
கொடியர்தே ரார்கண்டகர்
குறுநீசர் முறையிலா ரிருபதிற் றெட்டுங்
குணித்தகீழ் மக்கள்நாமம்
சோரர்கர வடர்கபடர் தேனர்பட் டிகள்பித்தர்
செய்கரவர் புரையோர் கள்வர்
சொற்றிடுந் திருடர்பெயர் வறியரா துலர்மிடியர்
துன்றுகிஞ் சினர்பேதையர்
ஓருமின் மையரிலம் பட்டோரில் லோரேழை
யோர்நல்கூர்ந் தோர்வச்சய
ருடனூறு கணாளரீ ராறுந் தரித்திரற்
கோதுமபி தானமாமே! 28

*பூரியர், கனிட்டர், கல்லார், கயவர், பேதையர்,
பொறியிலார், முசுடர், மூர்க்கர்,
புள்ளுவர், முசுண்டர், தீக்குணர், தீம்பர், சீத்தை,
பொல்லார், கலகர், கையர், சுமடர்,
கோரர், கலர், பதகர், புல்லவர், புல்லர், சிறுமையர்
கொடியர், தேரார், கண்டகர்,
குறுநீசர், முறையிலார், இருபதிற்று எட்டும்
குணித்த கீழ்மக்கள் நாமம்
சோரர், கரவடர், கபடர், தேனர், பட்டிகள், பித்தர்,
செய் கரவர், புரையோர், கள்வர்,
சொற்றிடும் திருடர் பெயர். வறியர், ஆதுலர், மிடியர்
துன்று கிஞ்சினர், பேதையர்,

ஓரும் இன்மையர், இலம்பாட்டோர், இல்லோர்,
ஏழையோர், நல்கூர்ந்தோர்,
வச்சயர் உடன் ஊறுகணாளர், ஈராறும்
தரித்திரற்கு
ஓதும் அபிதானம் ஆமே! (69)

### கீழ்மக்கள் பெயர்

**சே:—** கயவர், கனிட்டர், பூரியர், நீசயர், சுமடர், பேதையர், தீயோர், மூடர், புல்லர், தேரார், கலர், பொறியற்றார், சீத்தையர், சிறுமையர், கையர், கண்டகர்,மூக்கர், தீம்பர், மூகர், முசுண்டர்,கீழ்மக்கள்.

**பி:—** பல்லவர், கயவர், பதகர், நீசர், புல்லர், பூரியர், புள்ளுவர், கையர், கலர், தீயோர், கண்டகர், மூடர், அசடர், அதன்மர், முசுண்டர், சுமடர், வெளிறர், அற்பர், கீழோர்.

**சூ:—** பொறியிலார், கயவர், நீசர், புள்ளுவர், புல்லர், சிறிய சிந்தையர், கனிட்டர், தீயோர், தீக்குணர், தீம்பர், தேரார், முறையிலார், முசுண்டர், மூர்க்கர், முசுடர், பல்லவர், கையர், கலர், பூரியர், கீழோர்.

**க:—** பூரியர், நீசர், கயவர், கீழ்மக்கள், புல்லர், பேதையர், தும்பர், முசுண்டர், கலர், முசுடர், திருகிய வாக்கர், சிறுமை, பொல்லார், கையர், சீத்தை, கல்லார், அருளிலர், மூர்க்கர்,சுமடர், தீயோர், பொறி யற்றவர்.

### திருடர் பெயர்

**சே:—** திருடர், கரவடர், சோரர், புரையோர், கள்வர், பட்டிகள், கேனர்.

**பி:—** கள்வர், கரவடர், சோரர், புரையோர், கட்டோர், கரவர், பட்டிகள், திருடர்.

**சூ:—** திருடர், கரவடர், சோரர், தேனர், பட்டிகள், புரையோர், கள்வர்.

**க:—** கள்ளர், கரவடர், சோரர்.

**தரித்திரர் பெயர்**

**சே:—** தரித்திரர், ஆதுலர், வறியோர், இல்லோர், எளியர், உறுகணாளர், நல்கூர்ந்தோர்.

**பி:—** தரித்திரர், இல்லோர், ஆதுலர், வறியோர், ஏழையர், நல்கூர்ந்தோர், பேதையர், அகிஞ்சனர்.

**தி:—** அகிஞ்சனன், தீனன், பேதை, நல்கூர்ந்தோன், இல்லோன், வறியன், ஆதுலன், ஏழை, உறுகணாளன், இலம்பாட்டோன், மிடியன், தரித்திரன்.

**வள்ளல், ஊன் தின்போன், நிருவாணி, மந்தன், கரியவன், வஞ்சகன், காருணியன், கடினன், ஏவுவோன், வேகமுடையோன், உரியவன், புகழாளன், நோயுற்றோன், கிராமியன், ஆயத்தமானோன், குறிகொள்வோன், குலீனன், வேதனைசெய்வோன் இவர்கள் பெயர்**

வரைவறத் தான்கொடுப் போன்வள்ளி யோனாம்
வகுக்கிலூன் றின்போன் பெயர்
மன்னுகட் கூளியர் நிருவாணி நக்கனா
மந்தனாங் கூர்மையில்லோன்.
கரியவன் கள்வனாம் வஞ்சகனி காதனாங்
காருணிய னருளுளோனாம்
கற்கசன் கடினனாம் வியவனா மேவுவோன்
கவனனாம் வேகமுடையோன்
உரியவன் கிழவனா மியவுள்புக [1]ழாளனா
முல்லாப [2]னாமிகவுநோ
யுற்றொழிந் தோன்கிரா மியனாங் கிராமமுற்
றோன்பெய ருரைத்திடுங்கால்
பரவுசன் னத்தனா மாயத்த மானோன்
பராயணன் குறிகொள்வோனாம்
பகர்குலீன னாங்குல மிலோனருந் துதனாம்
படிக்குள்வே தனைசெய்வோனே! 29

1 ழாழனா என்றுளது. 2 மிகவுநேர் என்றுளது.

*வரைவு அற தான் கொடுப்போன் வள்ளியோன் ஆம்.
வகுக்கில் ஊன் தின்போன் பெயர்.
மன்னு உகள் கூளியர். நிருவாணி நக்கனாம்.
மந்தனாம் கூர்மை இல்லோன்.
கரியவன் கள்வனாம். வஞ்சகன் நிகாதனாம்.
காருணியன் அருள் உளோனாம்.
கற்கசன் கடினனாம். வியவனாம் ஏவுவோன்.
கவனனாம் வேகம் உடையோன்.
உரியவன் கிழவனாம், இயவுள் புகழாளனாம்.
உல்லாபனாம் மிகவும்
நோயுற்றோழிந்தோன் கிராமியனாம் கிராமம்
உற்றோன் பெயர். உரைத்திடுங்கால்
பரவு சன்னத்தனாம் ஆயத்தமானோன்.
பராயணன் குறிகொள்வோனாம்.
பகர் குலீனனாம் குலமிலோன். அருந்துதனாம்
படிக்குள் வேதனை செய்வோனே! 70

**[1]வள்ளல் பெயர்**

**சே**:— வரையாது கொடுப்போர், வள்ளியோர்.

**பி**:— வரையாதுகொடுப்போர், வள்ளியோர்.

**சூ**:— வரைவறக்கொடுப்போன், வள்ளியோன்.

**ஊன்தின்போர் பெயர்**

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.

**நிருவாணியின் பெயர்**

**பி**:— நக்கன், நிருவாணி.

**சூ**:— நக்கன், நிருவாணி.

**மந்தன் பெயர்**

**பி**:— கூர்மையில்லோன், மந்தன்.

**சூ**:— கூர்மையில்லோன், மந்தன்.

---

1 கொடையாளன் பார்க்க. பக்கம் 177

### கள்வன் பெயர்

**சே:** — கரியோன், கள்வன்.

தூ: — கரியவன், கள்வன்.

### வஞ்சகன் பெயர்

பி:— மாயன், நிகாதன், வஞ்சனையாளன்.

தூ:— நிகாதன், வஞ்சகன்.

### அருளுடையோன் பெயர்

பி:— காருண்ணியன், கருணையுள்ளோன்.

தூ:— காருண்ணியன், அருளுடையோன்.

### கடினன் பெயர்

பி:— கடினன், கற்கசன்.

### ஏவுவோன் பெயர்

**சே:**— வியவன், ஏவுவான்.

பி:— வியவன், ஏவுவான்.

தூ:— வியவன், ஏவுவான்.

**க:**— வியவன், ஏவுவன்.

### வேகமுடையோன் பெயர்

பி:— கவனன், சவனன், வேகமுடையோன்.

தூ:— சவனன், வேகி.

### உரியவன் பெயர்

**சே:**— கிழவர், உரியோர்.

பி:— கிழவன், உரியோன்.

தூ:— கிழவர், உரியவர்.

**க:** கிழவர், உரியவர்.

பி:— உல்லாபன்

தெ:— உல்லாகன்.

### கிராமம் உற்றோன் பெயர்

தெ:— கிராமியன்.

### ஆயத்தமானோன் பெயர்

தெ:— சந்நத்தன்.

### குறிக்கொள்வோன் பெயர்

பி:— பாராயணர்.

தெ:— பாராயணர்.

### [1]குலமிலோன் பெயர்

சே:— குலீனர், குலமுள்ளோன்.

பி:— குலீனன், குலமுள்ளோன்.

தெ:— குலீனன், குலமுள்ளோன்.

க:— குலீனன், [2]குலமில்லவன்.

### வேதனை செய்வோன் பெயர்

பி:— அருந்துதன், வேதனை செய்வோன்.

தெ:— அருந்துதன், வேதனை செய்வோன்.

## ஆண் பெயர், ஆண் பொதுப் பெயர், பெண் பெயர், பெண் பொதுப் பெயர், ஆண் பெண் சிறப்புப் பெயர்.

பொருவிலாக் காளைபூ மான்குமர னாடவன்
போற்றுமகன் மைந்தனாடூஉ
புருடனாய் வாழ்வானோ டெட்டுமாண் பெயர் மாந்தர்
புகலிலாண் மக்கள் பொதுவாம்

1 குலமுளோன் எனல் வேண்டும்.

2 கயாதரம் மட்டுமே தலைப்புக்குப் பொருந்துகிறது.

**அரிவைகா ரிகைதையல் மாதுசுந் தரிவனிதை**
**யங்கனை பெதும்பைபாவை.**
**யாடவ ளாட்டிமட வரலேழை தளிரிய**
**லணங்குமக டூஉமடந்தை**
**தெரிவைமா யோண்மங்கை நாரிநல் லாள்பேதை**
**சிறுமிவஞ் சனிசுரிகுழல்**
**செய்யமட வாள்காந்தை மகளிளம் பிடிபிரியை**
**சேருமா னிணிபிணாட்பெண்**
**டுரியவா றைந்துட னாலுமே பெண்பெய**
**ருயர்மாதர் பெண்பொதுவாம்**
**உறுநம்பி யாணாகு நங்கைபெண் ணாமிவர்க்**
**கோதுநா மஞ்சிறப்பே!** 30

*பொருவிலாக் காளை, பூமான், குமரன், ஆடவன்,
போற்று மகன், மைந்தன், ஆடூஉ,
புருடனாய் வாழ்வான்-ஓடு எட்டும் ஆண்பெயர்.
மாந்தர்
புகலில் ஆண்மக்கள் பொதுவாம்.
அரிவை, காரிகை, தையல், மாது, சுந்தரி, வனிதை,
அங்கனை, பெதும்பை, பாவை,
ஆடவள், ஆட்டி, மடவரல், ஏழை, தளிரியல்,
அணங்கு, மகடூஉ, மடந்தை
தெரிவை, மாயோள், மங்கை, நாரி, நல்லாள், பேதை,
சிறுமி, வஞ்சனி, சுரிகுழல்,
செய்யமடவாள், காந்தை, மகள், இளம்பிடி,
பிரியை,
சேரும் மானினி, பிணாவ், பெண்டு,
உரிய ஆறைந்துடன் நாலுமே பெண்பெயர்.
உயர் மாதர், பெண்கள் பொதுவாம்.
உறு நம்பி ஆணாகும். நங்கை பெண்ணாம்.
இவர்க்கு
ஓதும் நாமம் சிறப்பே! 71

**ஆண் பெயர்**

**சே:—** ஆடவர், மைந்தர், காளை, குமரர், ஆடூஉ, மாந்தர், மகன், புமான், மணாளன், ஆண்.

பி:— மானவன், மகன், ஆடூஉ, மைந்தன், ஆடவன், புமான், காளை, ஆண்.

சூ:— ஆடவன், மைந்தன், காளை, ஆடூஉ, மகன், புமான், குமரன், புருடன், நம்பி.

க:— ஆடவர், ஆடூஉ, மகன், மைந்தன், புமான், நரர், மானிடர், மானவர், மாக்கள், மனு, மனிதர், புருடர், ஆளன், மாந்தர், (புனைந்துரையால் அரிவையர் ஆடவர்க்கு ஆகும்).

**ஆண்கள் பொதுப்பெயர்**

க:— மாந்தர்.

**பெண் பெயர்**

சே:— பேதை, அங்கனை, வனிதை, இளம்பிடி, மாது, மடவாள், மகடூஉ, மங்கை, மடந்தை, காரிகை, மானினி, மஞ்சனி, மாயோள், ஆட்டி, பாவை, தெரிவை, தையல், அரிவை, பெதும்பை, பிணா, மகள், நையுநுண்ணிடை, நாரி, பெண்.

பி:— அரிவை, அங்கனை, மடந்தை, ஆடவள், தெரிவை, மானினி, சிறுமி, இளம்பிடி சுரிகுழல், மகடூஉ, காந்தை, மாது, வனிதை, நல்லாள், காரிகை, தளிரியல், அணங்கு, தையல், பெதும்பை, பேதை, மடந்தை, மங்கை, மாயோள், பாவை, பிணா, பெண்.

சூ:— அரிவை, அங்கனை, மடந்தை, ஆடவள், ஆட்டி, மாயோள், சுரிகுழல், மகடூஉ, காந்தை, சுந்தரி, வனிதை, மாது, தெரிவை, மானினி, நல்லாள், சிறுமி, தையல், நாரி, பிரியை, காரிகை, அணங்கு, பிணா, பெண்டு, பேதை, பெண்.

க:— அங்கனை, நாரி, மகடூஉ, தெரிவை, அரிவை,

மகள், மங்கை, மடந்தை, பிணா, மாணி, காரிகை, வஞ்சனி, தையல், மடவரல், மாது, தளிரியல், பெண், வனிதை, பெதும்பை, மாயோள், பேதை, ஏழை.

**ஆண் சிறப்புப் பெயர்**

பி:— நம்பி.

சூ:— நம்பி.

**பெண் சிறப்புப் பெயர்**

பி:— நங்கை.

சூ:— நங்கை.

## ஏழுபருவ மங்கையர், அவர்தம் அகவை, மூத்தாள், கன்னி, தலைவி, அருகர் தவமாது இவர்கள் பெயர்.

பேதைபெ தும்பையுடன் மங்கை மடந்தைபிரி
யரிவை தெரிவை மற்றப்
பேரிளம் பெண்ணேழு பருவமாண் டேழுடன்
பின்புபன் னொன்றுடன்மூன்
றோதுபத் தொன்பதை யைந்துமுப் பத்தொன்
றுரைத்தநாற் பானியம்பு
மோங்கிய விருத்தைமூத் தாள்பெயர் தருணியுட
னுயர்வாலை குமரிகன்னி
ஆதியென வருமுதல்வி யிறைவியா சாள்சாமி
யையைகு ரத்தியத்தை
யாட்டிபெரு மாட்டிகோ மாட்டிபத் துந்தலைவி
யடிகள்கோ மாளுமொக்கும்
நீதிசே ரருகர்தவ மாதினுக் குரியபெயர்
நெறியுள கௌந்திகன்னி
நிகழௌவை யம்மையொடு கந்தியென் றேபுலவர்
நேயத்தி யம்பினாரே! 31

*பேதை, பெதும்பை-உடன் மங்கை, மடந்தை, பிரி
அரிவை, தெரிவை, மற்றுஅப்
பேரிளம்பெண் ஏழு பருவம். ஆண்டு ஏழுடன்,
பின்பு பன்னொன்று, பன்மூன்று,
ஓது பத்தொன்பது, ஐயைந்து, முப்பத்தொன்று
உரைத்த நாற்பான் இயம்பும்.
ஓங்கிய விருத்தை மூத்தாள் பெயர். தருணி-உடன்
உயர் வாலை, குமரி, கன்னி.
ஆதி என வரும் முதல்வி, இறைவி, ஆசாள், சாமி
ஐயை, குரத்தி, அத்தை, ஆட்டி,
பெருமாட்டி, கோமாட்டி, பத்தும் தலைவி;
அடிகள், கோமாளும் ஒக்கும்.
நீதிசேர் அருகர் தவ மாதினுக்கு உரிய பெயர்
நெறி உள கௌந்தி, கன்னி,
நிகழ் ஔவை அம்மை ஒடு கந்தி என்றே புலவர்
நேயத்து இயம்பினாரே! (72)

**ஏழு பருவமங்கையர் பெயர்**

**சே:**— பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண்.

**பி:**— பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண்.

(இவர்களின் ஆண்டுகள் : 7, 11, 13, 19, 25, 31, 40.)

**சூ:**— பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண்.

(இவர்களின் ஆண்டுகள் : 7, 11, 13, 19, 25, 31, 40.),

**மூத்தாள் பெயர்**

**பி:**— விருத்தை, மூத்தாள், முதியாள்.

**சூ:**— விருத்தை.

**கன்னியின் பெயர்**

**சே:**— குமரி, கன்னி.

**பி:**— குமரி, கன்னி.

**சூ:**— குமரி, கன்னி.

**தலைவியின் பெயர்**

**சே:**— கோமாள், பெருமாட்டி; குரத்தி, ஐயை, ஆசாள், சாமி, இறைமையாட்டி, அடிகள், அத்தை, தலைவி.

**பி:**— குரத்தி, பெருமாட்டி, ஆசாள், இறைவி, கோமகள், தலைவி, அடிகள், ஐயை, சாமி, அத்தை, தலைமைப்பெண்.

**சூ:**— குரத்தி, அத்தை, முதல்வி, கோமாட்டி, ஆசாள், இறைவி, ஐயை, சாமி, தலைவி.

**க:**— கோமாள், அடிகள், கோமாட்டி, இறைவி, அத்தை, சாமி, குரத்தி, பெருமாட்டி, ஆசாள், தலைவி, ஐயை.

**அருகர் தவமாதின் பெயர்**

**சே:**— பைம்மை, கௌந்தி, அருந்தவப்பெண்.

**பி:**— பைம்மை, கௌந்தி, அருந்தவப்பெண்.

**சூ:**— (கந்தி, ஔவை, அம்மை, கன்னி, கௌந்தி, நோற்பாள்.)

**க:**— கவுந்தி, பம்மை, ஆருகதத்தவப்பெண்.

## கானீனன், கோளகன், குண்டகன், அனுலோமன், பிரதிலோமன், அந்தராளன், விராத்தியன், இவர்கள் பெயர்.

**கன்னியிற் பெறுமகன் கானீனன் வேட்கையொடு**
**கைமைபெற் றோன்கோளகன்**

**கணவற்பி ழைத்துவே றொருவரப்பு ணர்ந்துபெறு**
**காளைபெய ரேகுண்டகன்**
**உன்னுமந் தணராசர் வணிகர்வே ளாளரென்**
**றோதுமொரு நாற்குலத்தி**
**லுயர்குலத் தாணிழி குலப்பெண்ணு டன்கூடி**
**யவகையிற் பெற்றபுதல்வன்**
**இந்நிலத் தனுலோமன் மேற்குலப் பெண்ணிழி**
**குலத்தானு டன்கூடியே**
**யீன்றபுதல் வன்பிரதி லோமனிவ ரிருகுலத்**
**தீன்றவா ணோடுபெண்ணும்**
**அன்னபெண் ணோடாணு மாறியே கூடியவ**
**ரன்புட னளித்தபுதல்வன்**
**அந்தரா ளன்விராத் தியனென்று குலநான்**
**கறைந்தனர் தமிழ்ப்புலவரே!** 32

*கன்னியில் பெறுமகன் கானீனன். வேட்கையொடு
கைமை பெற்றோன் கோளகன்
கணவன் பிழைத்து வேறொருவர் புணர்ந்து பெறு
காளைபெயர் குண்டகன்.
உன்னும் அந்தணர், அரசர், வணிகர்,வேளாளர் என்று
ஓதும் ஒரு நாற்குலத்தில்
உயர்ந்தகுலத்து ஆண் இழி குலப் பெண்ணுடன் கூடிய
வகையில் பெற்ற புதல்வன்
இந்நிலத்து அனுலோமன். மேற்குலப் பெண் இழி
குலத்து ஆணுடன் கூடியே
ஈன்ற புதல்வன் பிரதிலோமன்.- இவ் இரு குலத்து
ஈன்ற ஆணோடு பெண்ணும்
அன்ன பெண்ணோடு ஆணும் மாறியே கூடி அவர்
அன்புடன் அளித்த புதல்வன்
அந்தராளன்; விராத்தியன் என்று குலம் நான்கு
அறைந்தனர் தமிழ்ப்புலவரே! (73)

**(கானீனன்) கன்னி பெற்ற பிள்ளையின் பெயர்.**

சே:— கானீனன்.

பி:— கானீனன்.

சூ:— கானீனன்.

க:— கன்னிசேய்; கானீனன்,

**கைம்மை பெற்ற பிள்ளையின் பெயர்**

சே:— கோளகன்.

பி:— கோளகன்.

சூ:— கோளகன்.

க:— கோளகன், கைம்மைபெறுமகன்.

**கணவற் பிழைத்துப் பெற்ற பிள்ளையின் பெயர்**

சே:— குண்டகன்.

பி:— குண்டகன்.

சூ:— குண்டகன்.

க:— கொண்டோாப் பிழைத்து பெறு மகன், குண்டகன்.

**நாற்குலத்துள் உயர்குலத்து ஆணுக்கும்,**
**இழிகுலப் பெண்ணுக்கும் பிறந்த**
**பிள்ளையின் பெயர்.**

பி:— அநுலோமன்.

சூ:— அநுலோமன்.

நாற்குலத்து உயர்குலத்துப் பெண்ணுக்கும்
இழிகுலத்து ஆணுக்கும் பிறந்த
பிள்ளையின் பெயர்.

பி :— பிரதிலோமன்

சூ :— பிரதிலோமன்

அநுலோமத்து ஆணுக்கும், பிரதிலோமத்துப்
பெண்ணுக்கும் பிறந்த பிள்ளையின் பெயர்

பி :— அந்தராளர்.

சூ :— அந்தராளன்.

அநுலோமத்துப் பெண்ணுக்கும், பிரதிலோமத்து
ஆணுக்கும் பிறந்த பிள்ளையின் பெயர்

பி :— விராத்தியர்.

சூ :— விராத்தியன்.

## வேசை, கூத்தி, தொண்டி, கைம்மை, மலடி, வண்ணமகள், தம்பதி, இவர்கள் பெயர்.

பாடினிம தங்கிபாட் டினிவிறலி பாடன்மகள்
பாணர்மகள் பாடுவிச்சி
பரத்தைபொது மகள்பொருட் பெண்டுபெறு
பவைகொள்வோள்
பயனிலாள் வரவின்மாது
நாடருங் கணிகைவிலை மகள்தூளை வேசைபெயர்.
நாடகக் கணிகைகூத்தி
நடினியே யாடல்மட வார்பெயர், தாசியுட
னண்ணுமடி யாடொண்டிபேர்.

**வாடியே நூலிழந் தாளொடு கலன்கழி**
**மடந்தையே கயினிகைம்மை**
**மாசுபெறு விதவை யமங்கலையோ ரைந்துபெயர்**
**மம்மையே வந்தியென்னக்**
**கூடியவி ரண்டுமே மலடிபெயர் வண்ணமகள்**
**கோலஞ்செய் மாதின்பெயர்**
**குன்றாத தம்பதி யிரட்டையாண் பெண்ணெனக்**
**கூறிடும் பெயராகுமே! 33**

*பாடினி, மதங்கி, பாட்டினி, விறலி, பாடன்மகள்,
பாணன்மகள், பாடுவிச்சி,
பரத்தை, பொதுமகள் பொருட்பெண்டு,
பெறுபவைகொள்வோள்,
பயனிலாள், வரவின்மாது,
நாட—அரும் கணிகை, விலைமகள், சூளை வேசை
பெயர்.
நாடகக் கணிகை, கூத்தி,
நடினியே ஆடல்மடவார் பெயர். தாசி—உடன்
நண்ணும் அடியாள், தொண்டிபேர்.
வாடியே நூல் இழந்தாள்—ஒடு கலன்கழி
மடந்தை-ஏ, கயினி, கைம்மை,
மாசுபெறு விதவை, அமங்கலை ஓர் ஐந்துபெயர்.
மம்மையே வந்தி என்ன
கூடிய இரண்டுமே மலடிபெயர். வண்ணமகள்,
கோலம்செய் மாதின் பெயர்.
குன்றாத தம்பதி, இரட்டை, ஆண்பெண் என
கூறிடும் பெயர் ஆகுமே! (74)

**வேசையின் பெயர்**

**சே:** — பரத்தை, கணிகை, சூளை, பொதுப்பெண்.

**பி:** — விலைமகள், சூளை, வேசி, பரத்தை, கணிகை, பொதுமகளிர்.

சூ:— பரத்தை, கணிகை, சூளை, பயனிலாள், வரைவின்மாது, பொருட்பெண்டு, பெறுவகொள்வாள், விலைமகள், வேசை.

க:— வேசியர், கூத்தியர், சூளையர். எண் கணிகை, பரத்தை, நடிப்போர், பொதுப்பெண்டிர்.

**கூத்தியின் பெயர்**

சே:— நடி, கூத்தி, நாடகக்கணிகை.

பி:— நடி, கூத்தி, நாடகக்கணிகை.

சூ:— நாடகக்கணிகை, நிருத்தமாது, கூத்தி.

க:— நடிப்போர், பொதுப்பெண்டிர், கூத்தி.

**தொண்டியின் பெயர்**

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.

**(கைம்மை) அமங்கலையின் பெயர்**

சே:— கைம்மை, கைனி, கலன்கழிமகளிர்.

பி:— கைம்மை, கைனி, விதவை, கைம்பெண், அமங்கலி, கலன்கழிமகளிர்.

சூ:— கைம்மை, கைனி, கலன்கழிமடந்தை, விதவை, அமங்கலை.

க:— கைம்மை, கயினி, கலன்கழிசேயிழை.

**மலடியின் பெயர்**

சே:— மைம்மை, வந்தி, மலடி.

பி:— மைம்மை, வந்தி, மலடி.

சூ: மைம்மை, வந்தி, மலடி.

க:— மைம்மை, வந்தி, மலடி.

**வண்ணமகள் பெயர்**

பி:— கோலம்புனை பெண், வண்ணமகள்.

சூ:— கோலஞ்செய்வாள், வண்ணமகள்.

**தம்பதியின் பெயர்**

சூ:— இரட்டை, ஆண்பெண்.

## குறிஞ்சிநிலமக்கள், அந்நிலமாதர், தலைவன், கடவுள் இவர்கள் பெயர். பாலைநில மக்கள், மாதர், தலைவன், கடவுள், புளினர், வேடர் இவர்கள் பெயர்.

குறவர்கா னவர்புனவர் மள்ளரிற வுளரொடு
குன்றவர் குறிஞ்சிமாக்கள்
குறத்தியர்கொ டிச்சியர்பு னத்தீயரந் நிலமாதர்
குலவுவெற் பன்சிலம்பன்
மறுவில்கா னகநாட னந்நிலத் தலைவன்
வழுத்திடுங் கடவுள்செவ்வேள்
மறவர்கா னவரெயினர் புள்ளுவரி றுக்கரே
வன்பர்லை மேவுமாக்கள்.
செறிதரு மெயிற்றியர் மறத்தியர் பேதையர்
செப்புமந் நிலமாதரார்
தெரிகாலை மீளியொடு விடலையே தலைவன்
சிறப்புடைய கடவுள் துர்க்கை
விறல்சேர்கி றாதர்குன் றவர்குறவர் புளினர்பெயர்
வில்லுழவர் சவரர்மறவர்
வியாதர்வன சரர்குலைஞ ரெயினர்மா குலர்சிலவர்
வேடர்கூ ளியருமாமே! 34

*குறவர், கானவர், புனவர், மள்ளர், இறவுளர்—ஓடு
குன்றவர், குறிஞ்சி மாக்கள்.
குறத்தியர், கொடிச்சியர், புனத்தியர், அந்நில
மாதர்.
குலவு வெற்பன், சிலம்பன்,

மறுவில் கானக நாடன் அந்நிலத் தலைவன்.
வழுத்திடும் கடவுள் செவ்வேள்.
மறவர் கானவர், எயினர், புள்ளுவர், இறுக்கரே
வன்பாலை மேவு மாக்கள்.
செறிதரும் எயிற்றியர், மறத்தியர், பேதையர்
செப்பும் அந்நில மாதரார்.
தெரிகாலை மீளியொடு விடலையே தலைவன்.
சிறப்புடைய கடவுள் துர்க்கை.
விறல்சேர் கிறாதர், குன்றவர், குறவர், புளினர் பெயர்.
வில்லுழவர், சவரர், மறவர்
வியாதர், வனசரர், [1]கொலைஞர், எயினர், மாகுலர், சிலவர்,
வேடர் கூளியரும் ஆமே! 75

**குறிஞ்சிநில மக்கள் பெயர்**

**சே:—** குறவர், கானவர், குன்றவர், புனவர், இறவுளர்.

**பி:—** கானவர், குறவர்.

**சூ:—** குறவர், கானவர், மள்ளர், குன்றவர், புனவர், இறவுளர்,

**க:—** குறவர், புனவர், இறவுளர், குன்றவர், கானவர்.

**குறிஞ்சிநில மாதர் பெயர்**

**சே:—** கொடிச்சியர், குறத்தியர், குறிஞ்சிநிலப் பெண்.

**பி:—** குறத்தியர், கொடிச்சியர், மறத்தியர்.

**சூ:—** குறத்தி, கொடிச்சி.

**க:—** கொடிச்சி, குறத்தி, தலைமகள்.

---

1 குலைஞர் என்றுளது

### குறிஞ்சிநிலத் தலைவன் பெயர்

**சே:**— கானகநாடன், பொருப்பன், பொருநன், மலையன், வெற்பன், சிலம்பன், நண்பன், குறிஞ்சிக் கிறைவன்.

**பி:**— பொருநன், சிலம்பன், வெற்பன்.

**சூ:**— மலையன், வெற்பன், சிலம்பன், கானக நாடன்.

**க:**— தலைமகன், வெற்பன், பொருப்பன், சிலம்பன், பொருநன், கானகநாடன்.

### குறிஞ்சிநிலக் கடவுள் பெயர்

**பி:**— கந்தன்.

### பாலைநில மக்கள் பெயர்

**சே:**— மறவர், எயினர்.

**பி:**— மறவர், எயினர், சவரர், கிராதர், கானவர், குறவர், புளினர், வேடர்.

**சூ:**— மறவர், எயினர், புள்ளுவர், இறுக்கர்.

### பாலைநிலப் பெண் பெயர்

**சே:**— மறத்தியர், எயிற்றியர், வன்கட்பிணாக்கள்.

**பி:**— எயிற்றியர், பேதையர், மறத்தியர்.

**சூ:**— எயிற்றி, வன்கட்பிணா, மறத்தி.

### பாலைநிலத் தலைவன் பெயர்

**சே:**— மீளி, காளை, விடலை.

**பி:**— விடலை, காளை, மீளி.

**சூ:**— மீளி, காளை, விடலை.

**க:**— வேலன், மீளி, காளை, விடலை.

### பாலைநிலக் கடவுள் பெயர்

**பி:—** துர்க்கை.

### புளிஞர் பெயர்

**சே:—** கொலைஞர், எயினர், வனசரர், சவரர், சிலவர், கானவர், மாகுலவர், கிராதர், புளினர், மறவர், வேடர்.

**பி:—** மறவர், எயினர், சவரர், கிராதர்,கானவர், குறவர், புளினர், வேடர்.

**சூ:—** குறவர், மாகுலவர், குன்றவர், கிராதர், மறவர், கானவர், வனசரர், சவரர், கொலைஞர், பாவமூர்த்திகள், முருடர், பொறையிலார், எயினர், வேடர், புளிஞர்.

**க:—** மறவர், புளிஞர்,கிராதர்,எயினர், வனசரர், சில்லர், குறவர், கலர், வேடர், ஆறலைப்போர், மாகுலசர், சவரர், இறவுள், வியாதர், கருநிலத்தோர், கானவர்.

### வேடர் பெயர்

புளிஞர் காண்க.

## முல்லை நிலமாக்கள், மாதர், தலைவன், கடவுள், மருதநிலமாக்கள், மாதர், தலைவன், கடவுள் இவர்கள் பெயர்

**குடவர்பொது வர்களண் டரமுத ரான்வல்லவர்**
**கோபாலர் [1]பாலர்விந்நர்**
**கோவலர்க ளுடனாயர் தொறுவரிடை யர்களிண்டர்**
**கோதிலா முல்லைமாக்கள்**
**மடநடைத் தொறுவியர் குடத்திய ரிடைச்சியர்**
**மன்னுமாய்ச் சியர்பொதுவியர்**
**மகளிர்கா னகநாட னேகுறும் பொறைநாடன்**
**வருமண்ணல் தோன்றலிறைவன்**

---

1 பாலர் விந்தர் எனல் வேண்டும்.

கடவுணெடு மால்விளைஞ ருழவர்மே ழியர்கிளைஞர்
கம்பளர் தொழுவர்மள்ளர்
கடையர்சிறு வர்கள் சிலதர் களமர்மரு தத்திேனார்
கருதுழத் தியர்சிலதியர்
உடனிசையு மாற்றுக்கா லாட்டியர் கடைச்சிய
ருரைக்குமந் நிலமாதரர்
[1]ஊரல்மகிழ் நன்கிழவ னேதலைவ னந்நிலத்
துறைகடவு ளிந்திரனாமே! 35

*குடவர், பொதுவர்கள், அண்டர், அமுதர், ஆன் வல்லவர்,
கோபாலர், பாலர், [2]விந்தர்,
கோவலர்கள்—உடன்ஆயர், தொறுவர், இடையர் கள், இண்டர்,
கோது இலா முல்லை மாக்கள்.
மடநடைத் தொறுவியர், குடத்தியர், இடைச்சியர்
மன்னும் ஆய்ச்சியர், பொதுவியர்,
மகளிர். கானக நாடன்—ஏ,குறும்பொறைநாடன்,
வரும் அண்ணல், தோன்றல், இறைவன்.
கடவுள் நெடுமால். விளைஞர், உழவர், மேழியர், கிளைஞர்,
கம்பளர், தொழுவர், மள்ளர்,
[3]கடையர் சிறுவர்கள், சிலதர், களமர், மருதத் திேனார்
கருது உழத்தியர், சிலதியர்,
உடன் இசையும் ஆற்றுக் காலாட்டியர், கடைச்சியர்,
உரைக்கும் அந்நிலை மாதரார்.
[4]ஊரன், மகிழ்நன், கிழவன்—ஏ தலைவன். அந்நிலத்து
உறை கடவுள் இந்திரனாமே! 76

---

1 ஊரன் எனல் வேண்டும்.
2 விந்நர் என்றுளது.
3 கடைஞர் எனல் சிறப்பு.
4 ஊரல் என்றுளது.

## முல்லை நில மக்கள்பெயர்.

**சே:**— முல்லையாளர், கோவலர், இடையர், வண்டர், பொதுவர், ஆன்வல்லோர், குடவர், பாலர், தொறுவர், கோவிந்தர், அண்டர், கோபாலர், ஆயர், அமுதர்.

**பி:**— இடையர், அண்டர், பொதுவர், கோபாலர், குடவர், அமுதர், கோவலர், ஆயர், தொறுவர், விந்தர்.

**சூ:**— முல்லையர், பொதுவர், அண்டர், கோவிந்தர், ஆன்வல்லவர், குடவர், பாலர், கோபாலர், அமுதர், ஆயர், தொறுவர், இடையர்.

க: விந்தர், பொதுவர், குடவர், இடையர், கோபாலர், தொறுவர், கோவலர், அண்டரண்டர், ஆவல்லவர், ஆயர், அமுதர்.

## முல்லைநிலப் பெண் பெயர்

சே:— ஆய்ச்சியர், தொறுவியர், பொதுவியர், குடத்தியர், இடைச்சியர்.

பி:— இடைச்சியர், தொறுத்தியர், பொதுவியர், குடத்தியர்.

சூ:— தொறுவி, பொதுவி, ஆய்ச்சி, குடத்தி, இடைச்சி.

க:— தொறுச்சியர், ஆய்ச்சியர், பொதுவியர், குடத்தியர், மிடைச்சியர்.

## முல்லைநிலத் தலைவன் பெயர்

**சே:**— அண்ணல், தோன்றல், குறும்பொறைநாடன், கானகநாடன்.

பி:— கானகநாடன், குறும்பொறைநாடன், தோன்றல், அண்ணல்.

சூ:— கானகநாடன், குறும்பொறைநாடன், அண்ணல், தோன்றல்.

க:— தோன்றல், அண்ணல், கானகநாடன், குறும்பொறைநாடன்.

**முல்லைநிலக் கடவுள் பெயர்.**

பி:— திருமால்.

**மருதநில மக்கள் பெயர்**

சே:— களமர், தொழுவர், மள்ளர், கம்பளர், வினைஞர், உழவர், கடைஞர், கிளைஞர், கழனிக் கடைத்தவர்.

பி:— களமர், உழவர், கடைஞர், சிலதர், மள்ளர், மேழியர்.

சூ: களமர், தொழுவர், மள்ளர், கம்பளர், உழவர், விளைஞர், கடைஞர்.

க:— களமர், தொழுவர், விளைஞர், செறுவர், மள்ளர், களைஞர், கடையர், உழவர், கம்பளர்.

**மருதநிலப் பெண் பெயர்**

சே:— உழத்தியர், கடைச்சியர், ஆற்றுக் காலாட்டியர்.

பி:— உழத்தியர், கடைசியர்.

சூ:— கடைச்சி, ஆற்றுக்காலாட்டி.

க:— ஆற்றுக்காலாட்டி, உழத்தி, கடைசியர்.

**மருதநிலத் தலைவன் பெயர்**

சே:— ஊரன், மகிழ்நன், கிழவன்.

பி:— மகிழ்நன், ஊரன், கிழவன்.

சூ:— மகிழ்நன், ஊரன், கிழவன்.

க:— ஊரன், மகுணன், கிழவன், மருதத் துரியவன்.

**மருதநிலக்கடவுள் பெயர்.**

பி:— அமரர்பதி.

## நெய்தல்நில மக்கள், மாதர், தலைவன், கடவுள், இவர்கள் பெயர், மனிதர் பெயர், மக்கள் திரளின் பெயர்.

பரதர்பர தவர்கடலர் வலையர்திமி லர்கணுளையர்
பயில்கழியர் சலவரென்னப்
பகர்ந்தவிரு நான்குமே நெய்தல்நில மாக்கள்
பரத்தியர் குறத்தியருடன்

விரவியவ லைச்சியர் குழைச்சியர் நுளைச்சியர்
விரும்புநில மாதர்கொண்கன்
மெல்லன்பு லம்பன்கடற் சேர்ப்பனே துறைவன்
வியநிலத் தலைவனன்றி

வருணனே கடவுளிம் முறையைந்து திணையினும்
வகுத்தபெயர் கண்டுகொள்க
மக்கண்மா னவர்மனோர் மைந்தர்மா னிடர் மாக்கள்
மாந்தர்மா னுடர்மாண்டையர்

தெரியின்மனு மானிடதர் நரர்பத்தி ரண்டுமே
செம்மைகூர் மனிதரின்பேர்
செப்புமன் பதைபஞ்ஜீ லெனுமிரண் டேமக்க
டிரளினுக் குரியபெயரே! 36

***பரதர், பரதவர், கடலர், வலையர், திமிலர்கள், நுளையர்**
**பயில் கழியர், சலவர், என்ன**
**பகாந்தஇரு நான்குமே நெய்தல்நில மாக்கள்.**
**பரத்தியர், குறத்தியர், உடன்**

விரவிய வலைச்சியர், குழைச்சியர் நுளைச்சியர்,
விரும்பும் நிலமாதர், கொண்கன்:
மெல்லன், புலம்பன், கடற்சோப்பனே, துறைவன்,
வியநிலத் தலைவன் அன்றி
வருணனே கடவுள். இம்முறை ஐந்து திணையினும்
வகுத்த பெயர் கண்டுகொள்க.
மக்கள், மானவர், மனோர், மைந்தர், மானிடர், மாக்கள்,
மாந்தர், மானுடர், மாண்டையர்,
தெரியின் மனு, மானிடதர், நரர் பத்துஇரண்டுமே
செம்மைகூர் மனிதரின்பேர்.
செப்பு மன்பதை பஞ்ஞீல் எனும் இரண்டே மக்கள்
திரளினுக்கு உரிய பெயரே! (77)

நெய்தல்நில மக்கள் பெயர்.

சே:— பரதவர், நுளையர், கடலர், வலையர், சலவர், திமிலர்.

பி:— கடவர், திமிலர், சலவர், நுளையர், பரதர், வளையர்.

சூ: பரதவர், நுளையர், பஃறியர், திமிலர், சாலர், கடலர், கழியர்.

க:— நுளையர், பரதவர், வலைஞர், சுலவர், திமிலர்.

நெய்தல்நிலப் பெண் பெயர்.

சே:— நுளைச்சியர், பரத்தியர், நுரைகடற் பிணாக்கள்.

பி:— பரத்தியர், நுளைச்சியர்.

சூ:— பரத்தி, நுளைச்சி, அளத்தி, கடற்பிணா.

க:— நுளைச்சியர். பரத்தியர்.

நெய்தல்நிலத் தலைவன் பெயர்

சே:— கொண்கன், துறைவன், மெல்லன், புலம்பன், தண்கடற்சேர்ப்பன்.

பி:— மெல்லன், புலம்பன், தண்கடற்சேர்ப்பன், துறைவன், கொண்கன்.

சூ:— கொண்கன், துறைவன், மெல்லன், புலம்பன், தண்கடற்சேர்ப்பன்.

க:— கொண்கன், மெல்லன், புலம்பன், துறைவன், தண்கடற்சேர்ப்பன்.

### நெய்தல்நிலக் கடவுள் பெயர்.

பி:— வருணன்.

### மனிதர் பெயர்

சே: மக்கள், மண்ணவர், மனிதர், நரர், மாக்கள், மானிடர், மாந்தர், மைந்தர்.

பி:— மாந்தர், மானவர், மானிடர், மண்ணவர், மனிதர், நரர்.

சூ:— மக்கள், நரர், மாக்கள், மானவர், மாந்தர், மண்ணோர், ஆண்டையர், மைந்தர், மானுடர் மனுடர், மனிதர்.

### மக்கள் திரளின் பெயர்

சே:— மன்பதை, பைஞ்ஞீல்.

பி:— மன்பதை, பைஞ்ஞீலி.

சூ:— மன்பதை, பைஞ்ஞீல்.

க:— மன்பதை, பைஞ்ஞீலம்.

## காலாள் பெயர், மூதறிவாளர் பெயர், வல்லோன் பெயர், எண்மணர், எண்வகைக் குறையாருடையோர், ஏழு தாதுக்கள்.

முற்றியப ததிகா லாட்பெயர் குரவரொடு
முதுவர்மூ தறிவாளர்பேர்
மொழிந்திடும் வலவைவல் லாளனொடு வல்லுனன்
மூன்றுமே வல்லோன்பெயர்.

மற்றுமாட் டார்பெயர் வல்லாரெ னப்படும்
வகுத்தவாண் பெண்ணியரெலாம்
மருவுமணி யிற்பண்பி லுவமையோ டொட்டினில்
வந்தவழிக் கண்டுகொள்க.

பற்றுமசு ரந்தெய்வ மாரிடமி ராக்கதம்
பயில்பிரம மினியபிரசா
பத்தியங் காந்தருவ நீள்பசா சத்துடன்
பகருமண மிருநான்கதாம்

குற்றமுட மூமையலி மருள்செவிடு குருடுகூன்
குறளெனச் சொல்லுமெட்டாம்.
குருதிதசை மூளைசுக் கிலநரம் பென்புதோல்
கூறுமேழ் தாதாகுமே! 37

*முற்றிய பதாதி காலாள் பெயர். குரவர் ஒடு
முதுவர் மூதறிவாளர் பேர்.
மொழிந்திடும் வலவை, வல்லாளன் ஒடு வல்லுநன்,
மூன்றுமே வல்லோன் பெயர்.

மற்றும் மாட்டார் பெயர் வல்லார் எனப்படும்.
வகுத்த ஆண் பெண் பெயரெலாம்
மருவும் மணியில் பண்பில் உவமையொடு
ஒட்டினில்
வந்தவழிக் கண்டுகொள்க.

பற்றும் அசுரம், தெய்வம், ஆரிடம், இராக்கதம்,
பயில் பிரமம், இனிய
பிரசாபத்தியம், காந்தருவம், நீள் பசாசத்துடன்
பகரும் மணம் இருநான்கு அதாம்.

குற்றம் முடம், ஊமை, அலி, மருள், செவிடு, குருடு.
கூன்,
குறள் எனச் சொல்லும் எட்டாம்.
குருதி, தசை, மூளை, சுக்கிலம், நரம்பு, என்பு,
தோல்,
கூறும் ஏழ் தாது ஆகுமே! (78)

**காலாள் பெயர்.**

**சூ:—** பதாதி.

**க:—** பதாதி.

### மூதறிவாளர் பெயர்.

சே:— முதுவர், மூதுணர்ந்தோர்.

பி:— மூதுவர், மூதறிவாளர்.

சூ:— முதுவர், மூதுணர்ந்தோர்.

### வல்லோர் பெயர்.

சே:— வலவை, வல்லுநன், வல்லோன்.

பி:— வலவை, வல்லவன், வல்லுநன்.

சூ:— வலுவை, வல்லுநன், வல்லோன்.

க:— வல்லவன், வலவை, வல்லுநர்.

### மாட்டார் பெயர்.

சே:— வல்லார், மாட்டாதார், வல்லுநரல்லோர்.

பி:— மாட்டார், வல்லார்.

சூ:— வல்லார், மாட்டார்.

க:— வல்லுநரல்லோர், வல்லார், மாட்டாதார்.

### எண் மணத்தின் பெயர்.

பி:— பிரமம், தெய்வம், பிரசாபத்தியம், ஆரிடம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசம்.

### எண்வகைக் குறைபாடுடையோர் பெயர்

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப் படவில்லை.

### ஏழு தாதுக்களின் பெயர்.

பி:— இரதம், உதிரம், என்பு, தோல், தசை, மூளை, சுக்கிலம்.

## பாட்டன், தந்தை, அண்ணன், தம்பி, மாமன், மருகன், சகலன் இவர்கள் பெயர்.

தாதைதன் றாதைமூ தாதையொடு தாத்தன்பி
தாமகன பாட்டனாகுந்
தந்தையம் மானத்த னெந்தையீன் றோன்பிதர்
தாதையே யையனப்பன்

தீதின்முன் னோன்றம்மு னொடுதலைவன் முன்னவன்
சேட்டனே முன்பிறந்தோன்
திகழுமுன் றோன்றல்மூத் தோன்றமைய னென்பதுந்
தெரியண்ண னையெனும்பேர்.

பேதமில் லிளவலனு சன்கனிட் டன்பின்
பிறந்தோன் பொருந்திளையவன்
பின்றோன்ற லெம்பின்பின் னோன்பின்ன வன்பேசு
பெயரொன்ப துந்தம்பியாம்

மாதுலன் மாமனம் மானாகு மணவாளன்
மருகன்மரு மகனாமமாம்
மருவுமோர் குடியினிற் கொண்டவன் சகலனா
மலையமுனி சொற்றதாமே! 38

*தாதைதன், தாதை மூதாதை ஒடு தாததன்,
பிதாமகன், பாட்டனாகும்.
தந்தை, அம்மான், அத்தான், எந்தை, ஈன்றோன், பிதா,
தாதையே, ஐயன், அப்பன்.

தீதுஇல் முன்னோன், தம்முன் ஒடு தலைவன், முன்னவன்,
சேட்டனே முன்பிறந்தோன்,
திகழும் முன்தோன்றல், மூத்தோன், தமையன், ஒன்பதும்,
தெரி அண்ணன், ஐ எனும் பேர்.

பேதம் இல் இளவல், அனுசன், கனிட்டன்,
பின்பிறந்தோன், பொருந்து இளையவன்
பின்தோன்றல், எம்பின், பின்னோன், பின்னவன், பேசு
பெயர் ஒன்பதும் தம்பியாம்.

மாதுலன், மாமன், அம்மான் ஆகும். மணவாளன், மருகன், மருமகன் நாமமாம்.
மருவும் ஓர் குடியினில் கொண்டவன் சகலனாம்.
மலையமுனி சொற்றதாமே! (79)

**பாட்டன் பெயர்.**

பி:— தாதைதன்றாதை, மூதாதை, பிதாமகன்.

சூ:— தாதைதன்றாதை, மூதாதை, பிதாமகன்.

**தந்தையின் பெயர்.**

பி:— தாதை, அத்தன், தந்தை, பிதா, ஐயன்.

சூ:— தாதை, அப்பன், ஐயன், தந்தை, அம்மான், அத்தன், பிதா.

க:— தந்தை, எந்தை, பயந்தோன், ஐயன், அப்பன், தாதை, அத்தன், எம்மான், பிதா.

**அண்ணன் பெயர்.**

சே:— முன்னை, முன்னிளவல், முன்றோன்றல்.

பி:— அண்ணன், தமையன், தம்முன், தோன்றல், முன்னவன், சேட்டன்.

சூ:— சேட்டன், தம்முன், முன்னவன், அண்ணன்.

**தம்பியின் பெயர்.**

சே:— பின்னை, பின்னிளவல், பின்றோன்றல்,

பி:— பின்னவன், இளவல், பின்றோன்றல். கனிட்டன், எம்பி, அனுசன்.

சூ:— இளவல், பின், அனுசன், கனிட்டன்.

### மாமன் பெயர்.

பி:— மாதுலன், அம்மான், மாமன்.

சூ — மாதுலன், அம்மான், மாமன்.

க:— மாதுலன், மாமன்.

### மருகன் பெயர்.

பி:— மருமான், பிறங்கடை, ஓங்கல்.

### சகலன் பெயர்.

பி:— ஓர் குடியிற் கொண்டோன், சகலன்.

சூ:— ஓர் குடியிற் பெண் கொண்டோன், சகலன்.

## தாய், செவிலி, தமக்கை, தங்கை, மனைவி, மாமி இவர்கள் பெயர்.

தன்னைமொய்த் தாயன்னை யவ்வையீன் றாளர்யி
தம்மனையோ டம்மைமாதா
தாய்பத்து நாமம் பயந்தவளு மாஞ்செவிலி
தாதிகோ டாய்பின்னனை
உன்னுகைத் தாயக்கை முன்பிறந் தாள் *கேட்டை
யொடுதத்தை மூத்தாள்பெய
ரொக்குமிம் மூவருந் தவ்வையா மெங்கையிளை
யாடங்கை பின்னவள் பெயர்
பன்னிகா தலிதுணைவி தேவிநா யகிமனைவி
பாரிமனை யாட்டிதாரம்
பயிலுமன மகளுரிமை தலைவிதலை மகள்காந்தை
பகருமனை களம்விருந்த
மன்னுமில் லேயிலாண் மனையாள்கு டும்பினி
வாழ்க்கையின் றுணைவியுடனே
வல்லவிகி ழத்திநா லாறுமனை யாள்பெயர்
மாமியா ளத்தையாமே! 39

---

* சேட்டை எனல் வேண்டும்.

* தன்னை, மொய்த்தாய், அன்னை, அவ்வை,
ஈன்றாள், ஆயி,
தம்மனை ஓடு அம்மை, மாதா,
தாய் பத்து நாமம்; பயந்தவளும் ஆம். செவிலி
தாதி, கோடாய், பினனனை.
உன்னு கைத்தாய். அக்கை முன்பிறந்தாள் *சேட்டை
ஒடு தத்தை மூத்தாள்பெயர்.
ஒக்கும் இம்மூவரும் தவ்வையாம். எங்கை
இளையாள், தங்கை, பின்னவள் பெயர்.
பன்னி, காதலி, துணைவி, தேவி, நாயகி, மனைவி,
பாரி, மனையாட்டி, தாரம்,
பயிலும் மணமகள், உரிமை, தலைவி, தலைமகள்,
[காந்தை,
பகரும் மனை, களம், விருந்தம்,
மன்னும்இல், ஏ இலாள், மனையாள், குடும்பினி,
வாழ்க்கையின் துணைவி யுடனே,
வல்லவி, கிழத்தி நாலாறும் மனையாள் பெயர்.
மாமியார் அத்தை ஆமே! (80)

**தாயின் பெயர்.**

**பி:—** தாய், அம்மை, அன்னை, ஆய், அவ்வை, தம் மனை, மோய், ஈன்றாள், தன்னை.

**சூ:—** அவ்வை, அம்மனை, பயந்தாள், அம்மை, யாய், அன்னை, ஆயி, மோய், தாய்.

**செவிலியின் பெயர்.**

**பி:—** கைத்தாய், தாதி, செவிலி, கோடாய், பின்னனை.

**சூ:—** வளர்த்ததாதி, செவிலி, கோடாய், கைத்தாய்.

**தமக்கையின் பெயர்.**

**சே:—** சேட்டை, தௌவை, முன்பிறந்தாள்.

---

*கேட்டை என்றுளது.

பி:— அன்னை, செவிலி, தௌவை, சேட்டை, முன்னவள், மூத்தாள், முன்பிறந்தாள்.

சூ:— தௌவை, சேட்டை, முன்பிறந்தாள்.

**தங்கையின் பெயர்.**

சே:— தங்கை, எங்கை, பின்னை.

பி:— பின்னை, கையை, தங்கை, பின்பிறந்தாள்.

சூ:— பின்னை, தங்கை.

**மனைவியின் பெயர்.**

சே:— மனைவி, தோழி, புதல்வி, காதலி.

பி:— மணமகள், உரிமை, வல்லவி, தாரம், துணைவி, வாழ்க்கைத்துணை, மணவாட்டி, பாரி, இல்லாள், பன்னி, விருந்தனை, இல்லவள், குடும்பினி, களம், காந்தை, இல், மனை, காதலி, நாயகி.

சூ:— இல்லவள், உரிமை, பன்னி, குடும்பினி, இல், இல்லாள், வல்லவை, களம். தாரம், மனையாட்டி, மனை, விருந்தம், பாரி, வாழ்க்கைத் துணை, களத்திரம், காந்தை, காதலி, நாயகி, தேவி.

க:— மணமகள், காதலி, காந்தை, துணைவி, இல்லாள், வல்லபி, பாரியை, நாயகி, தாரம், மனைவி, மனை, உரிமை, தடை, விருந்தம், கற்பினாள், கிழத்தி.

**மாமியின் பெயர்.**

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.

## கணவன், மகன், மருமான் (மருகன்) இவர்கள் பெயர்.

வரன்கணவ னாயகன் கொண்கன்வேட் டோன்
வல்லவன் பத்தாதவன் [கண்டன்

மணமகன் றலைமகன் காதலன் காந்தன்
வருங்கேள்வன் நண்பன்பதி
விரும்புதுணை வன்கிழவன் மணவாள நற்கொழுநன்
மிகுதலைவ னெழுமூன்றுமே
மிக்கபுரு டன்பெயர் மதலைசந் ததிதோன்றல்
வீறுசெய் செம்மலெச்சம்
பொருந்துகால் முளைதோற்றம் மருமான்பு றங்கடை
பொருள்சிறுவன் மைந்தன்சுதன்
புத்திரன் காதலன் குட்டனே நந்தனன்
புதல்வனே தனயநேயன்
தெரிந்தவழி பாலன்கு மாரன்மக னாமமாஞ்
செப்பும்வழி யும்பன்மருமான்
சீறியபு றங்கடை வழித்தோன்றல் மருகன்
சிறப்புடைய பேரதாமே ! 40

*வரன், கணவன், நாயகன், கொண்கன், வேட்டோன்,
வல்லவன், பத்தா, தவன், [கண்டன்,
மணமகன், தலைமகன், காதலன், காந்தன்,
வரும் கேள்வன், நண்பன், பதி,
விரும்பு துணைவன், கிழவன், மணவாளன்,
[நல்கொழுநன்,
மிகு தலைவன் எழுமூன்றுமே
மிக்க புருடன் பெயர். மதலை, சந்ததி, தோன்றல்,
வீறு செய், செம்மல், எச்சம்,
பொருந்து கால், முளை, தோற்றம், மருமான்,
புறங்கடை,
பொருள் சிறுவன், மைந்தன், சுதன்,
புத்திரன், காதலன், குட்டனே, நந்தனன்,
புதல்வனே, தநயன், நேயன்,
தெரிந்தவழி, பாலன், குமாரன், மகன் நாமம் ஆம்.
செப்பும் வழி உம்பல், மருமான்
சீறிய புறங்கடை, வழித்தோன்றல், மருகன்,
சிறப்புடைய பேர் அது ஆமே! (81)

### கணவன் பெயர்

**சே:**— கணவன், தோழன், புதல்வன், காதலன்.

**பி:**— மணவாளன், கணவன், கொழுநன், காந்தன், கேள்வன், மணமகன், காதலன், வல்லவன், உரியோன், பதி, தவன், கொண்கன், பத்தா, துணைவன், தலைமகன், தலைவன்.

**சூ:**— காதலன், கணவன், கொழுநன், வேட்டோன், கண்டன், வல்லவன், பத்தர், துணைவன், தலைவன், கொண்கன், தவன், காந்தன், மணமகன், உரியோன், அன்பன், மணவாளன், பதி, கேள்வன், நாயகன்.

**க:**— கணவன், பதி தோழன், காதலன்.

### மகன் பெயர்

**பி:**— மைந்தன், சந்ததி. மதலை, தநையன், காதலன், நந்தனன், சிறுவன், மெய்யன், தோன்றல், செம்மல், முளை, சுதன், கால், பொருள், புதல்வன், புத்திரன், பிறங்கடை, எச்சம், சேய்.

**சூ:**— மகன், சந்ததி, மதலை, சூனு, தனயன், காதலன். மெய்யன், நந்தனன், சிறுவன், தோன்றல், குட்டன், செம்மல், மருமான், பிள்ளை, முளை, சுதன், புதல்வன், புத்திரன், மைந்தன், கால், பொருள், சேய், எச்சம், வழி, பிறங்கடை.

**க:**— மதலை, சிறுவன், தனையன், கால், சந்ததி, மைந்தன், மகன், புதல்வன், பிறங்கடை, யெச்சம். வழித்தோன்றல், புத்திரன், சேய், குதலை, பிறங்கு, மகவு, குழவி, செம்மல், குட்டன், குருளை, சுதன், பிள்ளை.

### மருமான் பெயர்

**சே:**— மருமான், பிறங்கடை, உம்பல், வழித்தோன்றல்.

**பி:**— வழித்தோன்றல், வழியோன், மருமான், பிறங்கடை, ஓங்கல்.

## மகள் பெயர், இருபாற்பொதுப்பெயர், இருபாற் பொதுப்பன்மைப் பெயர், இளையோன் பெயர், இளமைப்பெயர், காதலன் பெயர், காதலி பெயர்.

*சிறுவிபுத் திரிபுதல்வி தநயைபந் தனையையை
செப்புசுதை வசுதையுடனே
தெரிந்தகா தலிமகள் பெயரெச்ச மென்பது
சிறந்தவிரு பாற்குமேற்குங்
குறியகுறு மக்களொடு மகார்சிறா ரென்னவே
கூறிடும் பாலர்பன்மை
குழவன்மழ வன்பிள்ளை சேடன்முரு கன்காளை
குமரனிளை யோனாடவன்
திறலுவா வினன்மழவன் இளவலீ ராறுந்
திருந்திளைமை யுற்றோன் பெயர்.
சேய்குழவி குட்டன் குழந்தையோ டளந்தையருள்
சேர்பிள்ளை மழவுமகவென்
றறையுமெண் பெயரிளமை கணவனண் புதவ
னம்மூவ ருங்காதல
னாமினிய மனைவிமக டோழியம் மூவரு
மடுத்தகா தலியுமாமே! 41

* சிறுவி, புத்திரி, புதல்வி, தநயை, பந்தனை, ஐயை,
செப்பு சுதை, வசுதை உடனே
தெரிந்த காதலி மகல் பெயர். எசசம் என்பது
சிறந்த இருபாலுக்கும் ஏற்கும்.
குறிய குறுமக்கள் ஒடுமகார், சிறார் என்னவே
கூறிடும் பலர் பன்மை
குழவன், மழவன், பிள்ளை, சேடன், முருகன், காளை,
குமரன், இளையோன், ஆடவன்,
திறல் உவாவினன், மழவன், இளவல், ஈராறும்
திருந்து இளமை உற்றோன் பெயர்.
சேய், குழவி, குட்டன், குழந்தை, ஒடுஅளந்தை, அருள்
சேர் பிள்ளை, மழவு, மகவு என்று

அறையும் எண் பெயர் இளமை. கணவன், நண்பு,
தவனம்,
மூவரும் காதலன் ஆம்.
இனிய மனைவி, மகள், தோழி, அம்மூவரும்
அடுத்த காதலியும் ஆமே! (82)

**மகள் பெயர்**

**பி:**— புதல்வி, சிறுமி, புத்திரி, தநயை, சுதை, ஐயை, பந்தனை, மகள்.

**சூ:**— சிறுவி, புத்திரி, தனயை, ஐயை, பந்தனை, மகள், சுதை.

**க:**— வல்லி, சிறுவி, தனையை, புதல்வி, மகள்.

**இருபாற் பொதுப் பெயர்**

**பி:**— எச்சம்

**சூ:**— எச்சம்.

**இருபாற் பொதுப் பன்மைப் பெயர்.**

**சே:**— மகார், சிறார்.

**பி:**— மகார், குறுமாக்கள், சிறார்.

**சூ:**— குறுமக்கள், மகார், சிறார்.

**இளையோன் பெயர்.**

**சே:**— குழவி, மகவு, குட்டன், பிள்ளை, மழவு, சேய், இளம்பிள்ளை.

**பி:**— இளைஞன், மழவன், குமரன், மைந்தன், சேடன், இளவல், முருகன், காளை, ஆடவன், உவா.

**இளமைப் பெயர்.**

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.

### காதலன் பெயர்.

சே:— கணவன், தோழன், புதல்வன், காதலன்.

க:— கணவன், பதி, தோழன், புதல்வன், காதலன்.

### காதலி பெயர்.

சே:— மனைவி, தோழி, புதல்வி, காதலி.

க:— தலைவி, புதல்வி, தோழி, காதலி.

## படையின் பெயர், படைவகுப்பின் பெயர், கொடிப் படையின் பெயர், படையெழுச்சியின் பெயர், படையழைத்தலின் பெயர், படை அறுதலின் பெயர்.

பலந்தளஞ் சேனையநீ கந்தண்டம் வாகினி
பதாகினி பதாதியூகம்
பகுதிகவ னந்தந்திரந் தானைவரு தினிபாடி
பகருதார் வானிககனம்
சொலும்பரி கலங்கீத நாலைந்து மிக்கபடை
தோன்றியநி தானமும்பேர்.
சூழுமொட் டணியுண்டை யூகங்கை யைந்துமே
சொற்றிடும் படைவகுப்பே.
தலங்கொளணி யிற்கூழை நெற்றிதூ சேதூசு
தார்கொடிப் படையின்பெயர்.
தங்குபே ரணிபின்ன ணிப்பெய ருக்கமுட
னாக்கமே படையெழுச்சி
இலங்கரிய வறைகூவல் சிலைவளைத் திடுத
லிரண்டுமே படையழைத்தல்
இயம்புமறை படுதலறை போதல்கீ ழறுதலிவை
யேற்றுபடை யறுதலாமே! 42

* பலம், தளம், சேனை, அநீகம், தண்டம், வாகினி,
பதாகினி, பதாதி, யூகம்,
பகுதி, கவனம், தந்திரம், தானை, [1]வரூதினி, பாடி,
பகரு தார், வானி, ககனம்,
சொலும் பரிகலம், கீதம் நாலைந்தும் மிக்க படை.
தோன்றிய நிதானமும் பேர்.
சூழும் ஒட்டு, அணி, உண்டை, யூகம், கை, ஐந்துமே
சொற்றிடும் படைவகுப்பே,
தலம்கொள் அணியில் கூழை, நெற்றி, தூசு, ஏ [2]தூசி,
தார், கொடிப்படையின் பெயர்.
தங்கு பேரணி பின்னணிப்பெயர். ஊக்கமுடன்
ஆக்கமே படையெழுச்சி.
இலங்கிய அறைகூவல், சிலைவளைத்திடுதல்
இரண்டுமே படையழைத்தல்,
இயம்பும் அறைபடுதல், அறைபோதல், கீழறுதல் இவை
ஏற்றுபடை அறுதலாமே! (83)

**படையின் பெயர்.**

**சே**:— தார், தண்டம், அனீகம், வரூதினி, தானை, பதாதி, பதாகினி, யூகம், வானி, அதிகம், பாடி, பகுதி, சேனை, நிதானம், திரள்படை.

**பி**:— தானை, பதாதி, தண்டம், பதாகினி, வானி, அநிகம், வாகினி, தந்திரம், சேனை, பகுதி, பாடி, பலம்.

**சூ**:— தானை, பதாதி, தந்திரம், தளம், தண்டம், வானி, ககனம், யூகம், வாகனம், அனீகம், பாடி, சேனை, கவனம், பலம், பரிகலம், பதாகினி, படை.

**க**:— சேனை, தண்டம், பதாதி, பதாகினி, யூகம், வாகினி, படை, பாடி, வானி, அநிகம், வரூதினி.

1 வருதினி என்றுளது. 2 தூசு என்றுளது.

### படைவகுப்பின் பெயர்

சே:— உருண்டை, கை, ஒட்டு, யூகம், அணி.

பி:— ஒட்டு, யூகம், உண்டை, அணி.

சூ:— அணி, உண்டை, ஒட்டு, யூகம்.

க:— ஒட்டு, உண்டை, கை, அணி, யூகம், (படைக்கை).

### படையுறுப்பின் பெயர்

பி:— தூசி, கூழை, நெற்றி, கை, அணி.

சூ— அணி, நெற்றி, கை, தூசி.

### கொடிப்படையின் பெயர்

சே:— தார், நிரை, ஆக்கம், தூசி.

பி:— தார்.

சூ:— தார்.

க:— தானை, தார், தூசி, பகுதி, கொடிப்படை.

### படையெழுச்சியின் பெயர்

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை

### படையழைத்தலின் பெயர்

பி:— அறைகூவல்

### படையறுதலின் பெயர்

பி:— அறைபோதல், படை மறுத்தல்.

சூ:— கீழறுதல், அறைபோதல்.

## பதாதி, சேனாமுகம், அக்குரோணி இவைகள் பெயர், வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, வாகைப்பூ இவைகளின் பெயர்

கரிமூன்று தேர்பத்து வாவுபரி நூறு
காலாளா யிரம்பதாதி
கணித்ததொகை மும்மடிசே னாமுகஞ் சேனாமு
கங்குமுத மொடுதக்கணம்
பெருகுவா கினிபிரள யஞ்சமுத் திரமேல்
பெருத்தசங் கனிகமணிகம்
பேசுமும் மடிகொண்ட தக்(கு)ரோணி யென்று பெயர்
பேற்றதொகை மற்றும் வெட்சி
நிரைகவர்த லங்நிரையை மீட்டல் கரந்தை
நேரார்மீது சேறல்வஞ்சி
நெருங்கியே திருண்டிடுதல் காஞ்சியெயில்
காத்திடுதல்
நீள்நொச்சி யதுவளைத்தல்.
பொருவரிய வுழிஞையெதிர் பொருவதே தும்பை
போர்க்களந் தன்னில்வெற்றி
புரிவதே வாகைவெண் பூழையும் வெற்றியம்
பூவென்றி யம்பினாரே! 43

* கரிமூன்று, தேர் பத்து, வாவு பரி நூறு,
காலாள் ஆயிரம் பதாதி.
கணித்த தொகை மும்மடி சேனாமுகம்.
சேனாமுகம்,
குமுதம், ஒடு தக்கணம்,
பெருகு வாகினி பிரளயம், சமுத்திரம், மேல்
பெருத்த சங்கினி, கமணிகம்,
பேசும் மும்மடி கொண்டது அக்குரோணி
என்று பெயர்
பெற்ற தொகை. மற்றும் வெட்சி
நிரை கவர்தல். அந்நிரையை மீட்டல் கரந்தை.
நேரார் மீது சேறல் வஞ்சி.

நெருங்கியே திருண்டிடுதல் காஞ்சி. எயில் காத்தல்
நொச்சி. அது வளைத்தல்
பொருவரிய உழிஞை. எதிர் பொருவதே தும்பை.
போர்க்களந் தன்னில் வெற்றி
புரிவதே வாகை. வெண் பூழையும் வெற்றி அம் பூ
என்று இயம்பினாரே! (84)

### பதாதி

பி:— யானை 1, தேர் 1, பரி 3, காலாள் 5 } பதாதி.

| | | |
|---|---|---|
| யானை | 1 | பதாதி. |
| தேர் | 1 | |
| பரி | 3 | |
| காலாள் | 5 | |

### சேனாமுகம்.

பி:— பதாதி மூன்று பங்கு கொண்டது.

### குமுதம் முதல் அக்குரோணிவரை.

| | | |
|---|---|---|
| பி:— சேனாமுகம் | 3 | கொண்டது குமுதம் |
| குமுதம் | 3 | கொண்டது கணகம் |
| கணகம் | 3 | கொண்டது வாகினி |
| வாகினி | 3 | கொண்டது பிரளயம் |
| பிரளயம் | 3 | கொண்டது சமுத்திரம் |
| சமுத்திரம் | 3 | கொண்டது சங்கம் |
| சங்கம் | 3 | கொண்டது அநீகம் |
| அநீகம் | 3 | கொண்டது அக்குரோணி. |

### வெட்சி.

வெட்சி முதலாக வாகைப்பூ ஈறாக உள்ள தலைப்புகள் காணப்படவில்லை.

## உடம்பின் பெயர், வடிவின் பெயர், காலின் பெயர், கால் கரட்டின் பெயர், கணைக்காலின் பெயர், முழங்காலின் பெயர்.

உடல்சடங் கூடுதா பரங்காத் திரத்தோ
டுறுப்புக்கு ரம்பைபிண்டம்
உயிர்நிலை புறந்தேக மேனிமூர்த் தம்படிவ
முருவங்க டம்பூசியஞ்
சடலங்க ளேபரங் காயம்பு ணர்ப்புச்
சரீரமெய் யாக்கையாகந்
தனுவிக்கி ரகம்பூச்சி புதைபூகை யங்கமா
தாரம்வடி வொடுபுற்கலம்
படுமேயு டம்பினது நாமமுப் பதினான்கு
படலமுரு வஞ்சட்டகம்
படிவமே மேனியிவை யைந்தும்வ டிவின்பெயர்
பதஞ்சரண மடியங்கிரி
கடியதாள் சலனங்க ழல்பாத மெட்டுமாங்
கால்காற்க ரட்டின்பெயர்
கண்டபர டாங்கணைக் கால்சங்க மாமுழங்
கால்முந்து சாநுவாமே! 44

* உடல், சடம், கூடு, தாபரம், காத்திரம், அத்து ஒடு
உறுப்பு, குரம்பை, பிண்டம்,
உயிர்நிலை, புறம், தேகம், மேனி, மூர்த்தம், படிவம்,
உருவம், கடம், பூசியம்,
சடலம், களேபரம், காயம், புணர்ப்பு,
சரீரம், மெய், யாக்கை, ஆகம்,
தனு, விக்கிரகம், பூச்சி, புதை, பூகை, அங்கம்,
ஆதாரம், வடிவு, ஒடு, புற்கலம்,
படுமே உடம்பினது நாமம் முப்பதி நான்கு.
படலம், உருவம், சட்டகம்,
படிவம், மேனி, இவை ஐந்தும் வடிவின் பெயர்.
பதம் சரணம், அடி, அங்கிரி,

கூடியதாள், சலனம், கழல், பாதம் எட்டும் ஆம்
கால், கால் கரட்டின் பெயர்
கண்ட பரடு ஆம். கணைக்கால் சங்கம் ஆம்.
முழங்கால் முந்து சாநு ஆமே! (85)

## உடம்பின் பெயர்

**சே**:— சட்டகம், மெய், தாவரம், பூட்சி, அங்கம், காயம், புதை, உறுப்பு, யாக்கை, ஆதாரம், தேகம், உருவம், படிவம், உடல்.

**பி**:— ஆகம், காத்திரம், யாக்கை, தனு, உடல், பூதியம், புணர்வு, பகல், வியம், விம்மிதம், தேகம், அங்கம், மூர்த்தம், சரீரம், விக்கிரகம், பிண்டம்,மேனி, தொக்கு, காயம், குரம்பை, கடம், மெய், சடம், பூரம், பூட்சி, தாபரம், புற்கலம், உடம்பு

**சூ**:— உடல், உறுப்பு, அங்கம், யாக்கை, உயிர் நிலை, தேகம், காயம், சடலம், மூர்த்தம், மெய், தாவரம், தனு, ஆதாரம், கடம், புதை, புணர்ப்பு, காத்திரம், பூட்சி, ஆகம், பூதிகம், சரீரம், புற்கலம்.

**க**:— புரம், கடம், சட்டகம், தாபரம், காத்திரம், பூட்சி, அங்கம், குரம்பை, உறுப்பு, ஆகம், ஆக்கை, மெய், ஆதாரம், கூடு, உருவம், பரம், தனு, மூர்த்தம், களேபரம், காயம், படிவம், பிண்டம், வடிவம், உடல், தேகம், மேனி. உடம்பு,

## வடிவின் பெயர்

**பி**:— படிவம், உருவம், சட்டகம், மேனி, வண்ணம்.

**சூ**:— வடிவம், உருவம், மேனி, சட்டகம்.

### காலின் பெயர்.

**சே:**— சரண், பதம், கால், அடி, கழல், தாள் பாதம்.

**பி:**— பதம், பாதம், சரணம், கழல்.

**சூ:**— சரணம், பதம், தாள், அங்கிரி, பாதம், சலனம், கழல், அடி.

**க:**— பதம், தாள், கழல், கால், சரண், அடி, பாதம்.

### கால்கரட்டின் பெயர்.

**சே:**— பரடு, காலடி, மிசைத்திரள், கரடு.

**பி:**— பரடு, மிசைத்திரள், காலடி.

**சூ:**— பரடு.

**க:**— பரடு, கரடு.

### கணைக்காலின் பெயர்.

**சே:**— சங்கம், கணைக்கால்.

**பி:**— சங்கம்.

**சூ:**— சங்கம்.

### முழங்காலின் பெயர்.

**சே:**— சானு, முழந்தாள்.

**பி:**— சானு, முழந்தாள்.

**சூ:**— முழந்து, சானு.

**க:**— சானு. முழந்தாள்.

## தொடையின் பெயர், அல்குலின் பெயர், இடையின் பெயர், மருங்கின் பக்கத்தின் பெயர், வயிற்றின் பெயர், கொப்பூழின் பெயர், தேமலின் பெயர்.

வாமங்கு ரங்குசோ கங்கவா னூருவே
வடிவுடை முருக்கமாறும்
வலியதொடை யின்பெயர், கடிதட நிதம்பமே
வாய்த்தவக லல்குலின்பேர்.
ஆமரைநு சுப்புநடு மத்திமாங் கத்துடன்
அழகியம ருங்குலொக்க
மாறுமிடை யின்பெய ரொக்கலையெ னும்பெய
ரதுமருங் கிற்பக்கமாம்.
தோமிலுத ரங்குக்கி மோடுவயின் வயிறகடு
துத்தமே சரடமெட்டும்
சொலும்வயிற் றின்பெய ரிலஞ்சியே யிதலையொடு
சொலும்போகி லுந்திநாபி.
நாமமோ ரைந்துமே கொப்பூழ்சு ணங்குபொறி
நவிலுத்தி துத்திதிதலை
நாட்டும்வந் திகைவரி திதனியோ ரெட்டுமே
நலமுறுந் தேமலாமே! 45

*வாமம், குரங்கு, சோகம், கவான், ஊரு, ஏ
வடிவுடை [1]முருக்கம் ஆறும்
வலிய தொடையின் பெயர். கடிதடம், நிதம்பம், ஏ
வாய்த்த அகல், அல்குலின் பேர்
ஆம். அரை, நுசுப்பு, நடு, மத்திமம், ஆங்கு அத்து உடன்
அழகிய மருங்குல், ஒக்கம்,
ஆறும் இடையின் பெயர். ஒக்கலை எனும் பெயர்
அது மருங்கின் பக்கம் ஆம்.

---

1 உருக்கம் எனல் வேண்டும்.

தோம் இல் உதரம், குக்கி, மோடு, வயின், வயிறு,
துத்தம், ஏ சரடம் எட்டும் [அகடு,
சொலும் வயிற்றின் பெயர். இலஞ்சி, ஏ இதலை,
சொலும் போகில், உந்தி, நாபி, [ஒடு
நாமம் ஓர் ஐந்துமே கொப்பூழ். சுணங்கு, பொறி,
நவீல் உத்தி, துத்தி, திதலை,
நாட்டும்[1] வந்திகை, வரி, திதனி, ஓடு எட்டுமே
நலம் உறும் தேமல் ஆமே! (85)

### தொடையின் பெயர்

**சே**:— வாமம், ஊரு, கவான், தொடை.

**பி**:— குறங்கு, வாமம், கவான், ஊரு.

**சூ**:— ஊரு, குறங்கு, வாமம், கவான்.

**க**:— வாமம், ஊரு, உக்கம், துடை, உரு, சோகம், கவான், குறங்கு.

### அல்குலின் பெயர்

**சே**:— கடிதடம், நிதம்பம், வடிவு, அகல், அல்குல்.

**பி**:— கடிதடம், நிதம்பம், அரை, வடிவு, அகல், உபத்தம்.

**சூ**:— கடிதடம், நிதம்பம், அல்குல்.

**க**:— நிதம்பம், கடிதடம், அல்குல்.

### இடையின் பெயர்

**சே**:— நுசுப்பு, மருங்குல், நுண்ணிடை.

**பி**:— மத்திமம், நுசுப்பு, மருங்கு, இடை.

---

1 வசந்திகை எனல் வேண்டும்.

சூ:— நடு நுசுப்பு, மருங்கு, மத்திமம், உக்கம், இடை.

க:— மருங்குல், நுசுப்பு, நடு, இடை.

### மருங்கின் பக்கத்தின் பெயர்.

சே:— ஒக்கல், மருங்குல், பக்கம்.

பி:— ஒக்கலை.

சூ: ஒக்கலை.

### வயிற்றின் பெயர்.

சே:— குக்கி, துத்தம், உதரம், சடரம், மடி, வயின், அகடு, வயிறு.

பி:— குக்கி, துத்தம், மடி, வயின், உதரம், மோடு, சடரம், அகடு, வயிறு.

சூ:— உதரம், மோடு, அகடு, குக்கி, பண்டி, வயறு.

க:— உதரம், சடரம், வயின், மடி, துத்தம், குக்கி, வயறு.

### கொப்பூழின் பெயர்.

சே:— உந்தி, போகில், இலஞ்சி, இதலை, நாபி, கொப்பூழ்.

பி:— இதலை, இலைஞ்சி, நாபி, உந்தி, போகில், கொப்பூழ்.

சூ: இதலை, உந்தி, நாபி, இலஞ்சி, போகில், கொப்பூழ்.

க:— உந்தி, நாபி, மிதலை, கொப்பூழ், இலஞ்சி, போகில்.

தேமலின் பெயர்.

சே:— சுணங்கு, தேமல், பொறி, உத்தி, திதலை, நுணங்கு, திதனி, வசந்திகை, துத்தி

பி: - துத்தி, வசந்திகை, திதலை, சுணங்கு, உத்தி, திதனி.

சூ:— திதலை, பொறி, துத்தி, சுணங்கு, தேமல்.

க:— சுணங்கு. பொறி, தித்தி. உத்தி. திதலை, வந்திகை, தேமல், வரி, துத்தி

## ஆண்குறி, பெண்குறி, மார்பு, முலை, முலைக்கண், கை, உள்ளங்கை, கைரேகை இவைகளின் பெயர்.

கோசமி லிங்கமாண் குறியோனி யறைபகங்
குய்யமே பெண்குறிப்பேர்.
கூறரிய மருமநெஞ் சாகமே யகலங்
குறித்தவுர மார்பின் பெயர்.
பேசுநகி லங்கொங்கை யம்மம்ப யோதரம்
பெருகியத னங்குருக்கண்
பெருமைபெறு கொங்கை சுவர்க்கம்ப றம்புடன்
பெருத்தகுய முலையின்பெயர்.
சூசுகஞ் சூதஞ்சி லீமுகமு லைக்கணாந்
தோள்கரம் பாணியத்தம்
சொற்றகைத் தலமிக்க நாமமோ ராறுந்
துலங்கிடுங் கையின்பெயர்
மாசறுகு டங்கையுட [1]னங்கையுங் கங்கையு
மன்னுமுள் ளங்கையாகும்.
வரையிறை யிரண்டுமே கையுறுப் பாமென்று
மாமுனியி யம்பினாரே! 46

*கோசம், இலிங்கம், ஆண்குறி. யோனி, அறை, பகம், குய்யம், ஏ, பெண்குறிப் பேர்.

---

1 னங்கையும் கங்கையு எனல் வேண்டும்.

கூற அரிய, மருமம், நெஞ்சு, ஆகம் ஏ அகலம்,
குறித்த உரம் மார்பின் பெயர்.
பேசு நகிலம், கொங்கை, அம்மம், பயோதரம்,
பெருகிய தனம், குருக்கண்,
பெருமைபெறு கொங்கை, சுவர்க்கம், பறம்பு,
பெருத்த குயம் முலையின் பெயர். [உடன்
சூசுகம், சூதம். சிலீமுகம் முலைக்கண் ஆம்.
தோள், கரம், பாணி, அத்தம்,
சொற்ற கைத்தலம், [1]மிக்க நாமம் ஓர் ஆறும்
துலங்கிடும் கையின் பெயர்.
மாசு அறு குடங்கை, உடன் அங்கை, உம் [2]அங்கை, உம்
மன்னும் உள்ளங்கை ஆகும்.
வரை, இறை இரண்டுமே கை உறுப்பாம் என்று
மாமுனி இயம்பினாரே! (86)

### ஆண்குறியின் பெயர்

**சே:**— இலிங்கம், கோசம், ஆண்குறி.

**பி:**— இலிங்கம், கோசம், ஆண்குறி.

**சூ:**— கோசம்.

### பெண்குறியின் பெயர்

**சே:**— யோனி, பகம், பெண்குறி.

**பி:**— யோனி, பகம், பெண்குறி.

**சூ:**— பகம்.

### மார்பின் பெயர்

**சே:**— அகலம், மருமம், நிறம், உரம், ஆகம், மார்பு.

---

1 சயம் எனல் வேண்டும். ஏனெனில் எண்ணிக்கை ஆறு எனக் கூறினமையான். [2]கங்கை என்றுளது.

பி:— அகலம், உரம், ஆகம், மருமம், நெஞ்சு.

சூ:— அகலம், மருமம், நெஞ்சு, ஆகம், உரம்.

க:— மார்பு, அகலம். மருங்கு, உரம், ஆகம்.

### முலையின் பெயர்

சே:— கொங்கை, சுவர்க்கம், குயம், தனம், நகிலம், குருக்கண், அம்மம், பயோதரம், முலை, பறம்பு.

பி:— பயோதரம், சுவர்க்கம், குருக்கண், அம்மம், நகிலம், தனம், குயம், சேக்கை, கொம்மை, கொங்கை, முலை.

சூ:— நகிலம், கொம்மை, கொங்கை, குயம், தனம், குருக்கண், பயோதரம், சுவர்க்கம், பறம்பு.

க:— குருஉக்கண், சொற்கம், குயம், கொங்கை, தனம்,பயோதரம், அம்மம், நகில், முலை.

### முலைக்கண்ணின் பெயர்

சே:— சூசுகம், சிலீமுகம், முலைக்கண்.

பி:— சிலீமுகம், சூசுகம்.

சூ:— சிலீமுகம், சூசுகம்.

### கையின் பெயர்

சே:— அத்தம், பாணி, கரம், தோள், கைத்தலம்.

பி:— கரம், அத்தம், பாணி, தோள், கைத்தலம்.

சூ:— கரம், அத்தம், பாணி, தோள்.

க:— பாணி, அத்தம், கைத்தலம், கரம்.

### உள்ளங்கையின் பெயர்.

சே :— அங்கை, குடங்கை, அகங்கை.

பி:— அங்கை, குடங்கை, அகங்கை.

சூ:— அங்கை, அகங்கை, குடங்கை, உள்ளங்கை.

க:— குடங்கை, அகங்கை, அங்கை, பரம்.

### கைரேகையின் பெயர்.

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.

### விரல், நகம், மணிக்கட்டு, முழங்கை, தோள், கழுத்து, மிடறு, முதுகு, குதம், பிடர், தோளின்மேல் இவற்றின் பெயர்.

கரசாய்கை யங்குலி யிரண்டும்விர லாம்நகங்
காருக மொடுகிராமணிக்
கட்டுக்கி லுத்தமு ழங்கைகூர்ப் பரமாம்.
கருதுபுயம் வாகுவுயர்மொய்ம்
பொருமூன்று பெயருமே தோளர்ங்க ளங்கண்ட
மொடுகந்த ரங்கிரீவ
முயர்கில்ல மைந்துங்க முத்தாமி டற்றினுக்
குரியபெய ரணலாம்புறம்
வெரினோடு வென்னபர நான்குமுது காமஞ்சு
மிக்ககோ டுஞ்சுவலுமாம்
வெய்யகுத மாசனம் பவனமுட னேயெச்ச
மேவுவாய் புட்டமாமே.
வரையாத சுவல்கையி லெருத்தநீள் சிறுபுறம்
வைத்தபிடர் நான்குமாகும்.
மருவுங்க லஞ்சுவல் செகிலென்னு மூன்றுமே
வலியதோள் மேலாகுமே. 47

*[1] கரசாய்கை, அங்குலி இரண்டும் விரலாம். நகம்,
[2]காருகம், ஓடு உகிர் ஆம்.
மணிக்கட்டு கிலுத்தம். முழங்கை கூர்ப்பரம் ஆம்.
கருது புயம், வாகு, உயர் மொய்ம்பு.
ஒரு மூன்று பெயருமே தோள் ஆம். களம், கண்டம்,
ஓடு கந்தரம், கிரீவம்,
உயர் கில்லம், ஐந்தும் கழுத்து ஆம். மிடற்றி
உரியபெயர் அணல் ஆம். புறம், [னுக்கு
வெரின், ஓடு வெந், அபரம், நான்கும் முதுகு ஆம்.
மிக்க கோடும் சுவலும் ஆம். [மஞ்சு,
வெய்ய குதம். ஆசனம், பவனம், உடனே எச்சம்,
மேவு வாய் [3]புட்டம் ஆமே.
வரையாத சுவல், கையில் எருத்தம், நீள் சிறுபுறம்,
வைத்த பிடர் நான்கும் ஆகும்.
மருவு நிகலம், சுவல், செகில் என்னும் மூன்றுமே
வலிய தோள்மேல் ஆகுமே! (87)

**விரலின் பெயர்.**

**சே:**— அங்குலி.

**பி:** — அங்குலி.

**சூ:**— அங்குலி.

**க:**— அங்குலி, விரல்.

**நகத்தின் பெயர்.**

**சே:** உகிர்.

**பி:** உகிர்.

**சூ:** உகிர்.

**க:**— நகம், உகிர்.

---

1. கரசாகை எனல் நன்று. 2. கரோருகம் ஆம்.
3. ப்ருஷ்டம் (வடமொழி).

### மணிக்கட்டின் பெயர்

பி:— கிலுத்தம்.

சூ:— கிலுத்தம்.

### முழங்கையின் பெயர்

பி.— கூர்ப்பரம்.

சூ:— கூர்ப்பரம்.

### தோளின் பெயர்

சே:— புயம், மொய்ம்பு, வாகு, தோள்.

பி:— புயம், மொய்ம்பு, வாகு.

சூ:— புயம், மொய்ம்பு, வாகு, தோள்.

கை:— புயம், மொய்ம்பு, தோள், வாகு.

### கழுத்தின் பெயர்

சே:— கண்டம், கிரீவம், களன், மிடறு, கந்தரம், கழுத்து.

பி:— கிரீவம், களம், கில்லம், சுந்தரம், கண்டம், மிடறு.

சூ:— கந்தரம், கிரீவம், களம், கண்டம்.

கை:— கண்டம், கிரீடம், மிடறு, கந்தரம், களம், கழுத்து.

### மிடற்றின் பெயர்

சூ:— அணல்.

### முதுகின் பெயர்

**சே:**— வெரின், வென், புறம், முதுகு.

**பி:**— வெரிந், புறம், அபரம், வெந்.

**சூ:**— புறம், வெரிந், அபரம், வெந், முதுகு.

**க:**— புறம், வென், வெரின், முதுகு.

### குதத்தின் பெயர்

நான்கு நூல்களிலும் இத்தலைப்பு காணப் படவில்லை.

### பிடரின் பெயர்

**சே:**— கயில், சிறுபுறம், எருத்தம், சுவல், பிடர்.

**பி:**— சுவல், பிடர், எருத்தம், சிறுபுறம், கயில், நிமம், பிடர்த்தலை.

**சூ:**— சிறுபுறம், கயில், எருத்தம், சுவல், பிடர்.

**க:**— எருத்தம், பிடர்த்தலை, கயில், சிறுபுறம், பிடர்.

### தோளின் மேலின் பெயர்

**சே:**— சுவல், செகில், நிகலம்.

**பி:**— சுவல், செகில், நிகலம்.

**சூ:**— நிகலம்.

**க:**— சுவல், செகில், நிகலம், தோள்மிசை.

### பின்புறம், மூக்கு, உதடு, பல், சிரிப்பு, உண்ணாக்கு, நாக்கு, இவற்றின் பெயர்

ஆய்ந்தபிட வம்பிறக் குப்பிறகு பிற்பர
மாம்பின் புறத்தின்பெய

ரானனம்வ தனம்வத்தி ரம்வாசி கந்துண்ட
மாமேமு கத்தின்பெயர்
வாய்ந்தபா லிகையதர மிதழ்முத்த மோட்டம்
வளங்கூரு தட்டின்பெயர்.
மற்றுமே லுதடோட்ட மாங்கீழு தட்டிற்கு
வருநாம மதரமென்றாம்
சார்ந்தநகை யெயிறுதச னந்தந்த முறுவலிர
தத்துடன் மூரலெழு [1]பேர்
தக்கபல் லாமூரல் முறுவனக் குதனகுதல்
சாற்றுநகை யாசமும் [2]பேர்.
தேர்ந்தகீழ் வாய்ப்புறப் பெயரணரி யண்ணமணல்
சிறியவுண் ணாக்கண்ணமாம்
செப்பரிய தாலமே தாலுநாத் தாரையொடு
சிங்குவையு நாக்காகுமே! 48

* ஆய்ந்த பிடவம், பிறக்கு. பிறகு, பிற்பரம்,
ஆம் பின்புறத்தின் பெயர்.
-ஆனனம், வதனம், வத்திரம். வாசிகம், துண்டம்,
ஆமே முகத்தின் பெயர்.
வாய்ந்த பாலிகை, அதரம். இதழ், முத்தம், ஓட்டம்,
வளம்கூர் உதட்டின் பெயர்.
மற்றும் மேல்உதடு ஓட்டம் ஆம். கீழ் உதட்டிற்கு
வரும் நாமம் அதரம் என்று ஆம்.
சார்ந்த நகை, எயிறு, தசனம், தந்தம், முறுவல்,
இரதத்துடன் மூரல் ஏழுபெயர்
தக்க பல் ஆம். மூரல், முறுவல், நக்குதல். நகுதல்,
சாற்று நகை ஆசமும் பேர்,
தேர்ந்த கீழ்வாய்ப் புறப்பெயர் அணரி, அண்ணம்,
அணல்.
சிறிய உண்ணாக்கு அண்ணம் ஆம்.
செப்ப அரிய தாலமே, தாலு, நா, தாரை, ஒடு
சிங்குவையும் நாக்கு ஆகுமே! (48)

1 & 2. பெயர் என்றுளது.

### பின்புறத்தின் பெயர்.

**சே**:— பிறம், பிறக்கு, அபரம், பிறகு.

**க**:— பிறக்கு, பிறகு, புறம், அபரம், பிறகு.

### முகத்தின் பெயர்.

**சே**:— வதனம், ஆனனம், வத்திரம், முகம்.

**பி**:— ஆனனம், வதனம், துண்டம், வத்திரம்.

**சூ**:— வதனம், ஆனனம், துண்டம், வத்திரம்.

**க**:— முகம், வத்திரம், வதனம், ஆனனம்.

### உதட்டின் பெயர்.

**சே**: அதரம், பாலிகை, இதழ், ஓட்டம், முத்தம், உதடு.

**பி**:— பாலிகை, முத்தம், இதழ், உதடு.

**சூ**:—இதழ், அதரம், பாலிகை, முத்தம், உதடு.

**க**:— முத்தம், இதழ், ஓட்டம், பாலிகை, அதரம்.

### மேல் உதட்டின் பெயர்.

**பி**:— ஓட்டம்.

**சூ**:— ஓட்டம்.

**க**:— ஓட்டம்.

### கீழுதட்டின் பெயர்.

**பி**:—அதரம்.

**சூ**:— அதரம்.

**க**:— அதரம்.

### பல்லின் பெயர்.

சே:— தந்தம், தசனம், தட்டம், பல்.

பி:— எயிறு, தந்தம், தசனம், பல், முறுவல், நகை, மூரல்.

சூ:— எயிறு, தந்தம், தசனம், பல்.

க:— பல், எயிறு, தட்டம், தந்தம், முறுவல், நகை.

### சிரிப்பின் பெயர்.

சே:— முறுவல், நகை, மூரல், எயிறு.

பி:— முறுவல், நகை, மூரல், நகுதல்.

க:— முறுவல், மூரல், நகை.

### மேல்வாயின் பெயர்.

சே:— அணல், கீழ்வாய்ப்புறம், அணரி, அண்ணம்.

பி:— அணரி, அண்ணம், அணல்.

சூ:— அணரி, அணல், அண்ணம்.

க:— அணரி, அண்ணம், அணர்.

### உண்ணாக்கின் பெயர்.

சே:— அண்ணம்.

பி:— அண்ணம், சிறுநாக்கு.

சூ:— அண்ணம்.

க:— அண்ணம், உண்ணா.

### நாக்கின் பெயர்.

சே:— தாலம், தாலு, நா.

பி:— நா, தாலு, தாரம், சிகுவை.

சூ:— நா, சிகுவை, தாரை, தாலு, நாக்கு.

க.— தாலம், தாலு, நா.

**மேல்வாய், மூக்கு, கன்னம், காது, கண், கண்மணி, இமை இவைகளின் பெயர்.**

வடிவுபெறு தட்டமே தாடிமேல் வாயின்
வகுத்தபெய ரொன்றிரண்டாம்
வளர்கோண நாசிதுண் டங்கந்த வகமாக்கி
ராணமூக் கைந்துபெயராம்.
கொடிறுகவுள் கன்னம் கபோலம்ப லாசங்
கொடிச்சியா றுங்கதுப்பாம்
குழைகேள்வி கோத்திரம் செவிகன்ன மொடுகாது
கொண்டபெய ரள்ளுமாகும்.
நெடியவிழி யம்பகம் தாரைநோக் குச்சக்கு
நேத்திரம் பார்வைநயனம்
நீண்டநாட் டந்திட்டி யக்கம்வி லோசனம்
நிகழ்த்தியவு லோசனங்கோ
உடனுறுதி ருக்குத்தி ருட்டியீ ரெட்டுமே
யொப்பிரிய கண்ணின்பெயர்
ஒளிபெருகு தாரைகண் மணியாம்வி ளம்பென்ப
தொன்றுகண் ணிமையாகுமே! 49

* வடிவுபெறு தட்டமே, தாடி, மேல்வாயின்
வகுத்தபெயர் ஒன்றிரண்டாம்.
வளர் கோணம், நாசி, துண்டம், கந்தவகம்,
ஆக்கிராணம், மூக்கு ஐந்து பெயராம்.
கொடிறு, கவுள், கன்னம், கபோலம், பலாசம்,
கொடிச்சி ஆறும் கதுப்பு ஆம்.
குழை, கேள்வி, கோத்திரம், செவி, கன்னம், ஒடு காது,
கொண்ட பெயர் அள் உம் ஆகும்.

நெடிய விழி, அம்பகம், தாரை, நோக்கு, சக்கு,
நேத்திரம், பார்வை, நயனம்,
நீண்ட நாட்டம், திட்டி, அக்கம், விலோசனம்,
நிகழ்த்திய உலோசனம், கோ,
உடன் உறு திருக்கு, திருட்டி, ஈரெட்டுமே
ஒப்பரிய கண்ணின் பெயர்.
ஒளிபெருகு தாரை கண்மணியாம். விளிம்பு என்பது
ஒன்று கண் இமை ஆகுமே! (89)

**மேல்வாயின் பெயர்.**

சூ:— தாடி, கட்டம், சுவுகம்.

**மூக்கின் பெயர்.**

சே:— துண்டம், நாசி, (ஆக்)கிராணம், மூக்கு.

பி:— துண்டம், நாசி, கோணம்.

சூ:— ஆக்கிராணம், கோணம், துண்டம், நாசி.

க:— துண்டம், நாசி.

**கன்னத்தின் பெயர்**

சே:— கபோலம், கவுள், அனு, கொடிறு, கதுப்பு.

சூ:— கவுள், கபோலம், கொடிறு, அனு, கதுப்பு.

க:— கபோலம், கவுள், கொடிறு.

**காதின் பெயர்.**

சே:— கன்னம், செவி, காது.

பி:— செவி, காது, கேள்வி, அள், சுருதி, கன்னம், கோத்திரம்.

சூ:— கன்னம், அள், கேள்வி, செவி.

க:— கன்னம், செவி, காது.

### கண்ணின் பெயர்.

சே:— நாட்டம், நயனம், நேத்திரம், விலோசனம், நோக்கம், தாரை, அம்பகம், பார்வை, அக்கம், விழி, கோ, கண்.

பி:— திட்டி, விலோசனம், நேத்திரம், நயனம், தாரை, அம்பகம், விழி, நாட்டம், அக்கம், நோக்கு, சக்கு, திருட்டி, பார்வை, கோ, கண்.

சூ:— நயனம், நேத்திரம், அக்கம், நாட்டம், கோ, நோக்கம், சக்கு, பார்வை, தாரை, விலோசனம், விழி, அக்கி, திருக்கு, திட்டி, திருட்டி, அம்பகம்.

க:— நயனம், விலோசனம், நாட்டம், விழி, நோக்கம், சக்கு, அம்பகம், நேத்திரம், தாரை, கண், கோ, பாவை.

### கண்மணியின் பெயர்.

பி:— தாரை.

சூ:— தாரை.

### கண் இமையின் பெயர்

பி: விளிம்பு.

சூ: விளிம்பு.

## தலை, புருவம், நெற்றி, கழலை, கோழை, பிணம், உடற்குறை இவற்றின் பெயர்.

சிகரமுடி மத்தகம் சேகரங் கமூர்த்தம்
கிரமுச்சி [1]யுதகமாங்கம்
சென்னிநவி ரம்பொழி லுவ்விதர முண்டம்வலி
சேர்ந்ததலை மூவைந்துபேர்.

புகுடிபிரு குடிநுதற் பூருவே பீருப்
புரூரமோ ராறுபெயரும்
புருவங்கு வம்பால முண்டம் மிலாடம்
யொருந்துமத் தகமளிகமே

அகலுநுதல் கும்பம்ப ளிச்சைநெற் றிப்பெய
ரரலையே கழலைப்பெயர்
ஐயெரடு காசமென் பதுகோழை யின்பெய
ரழனங்கு ணுங்குகுணப

மிகுதிபெறு சவநீள்பி ரோதங்க ளேபரம்
விளம்புபிண மாறேபெயர்
மிக்கயூ பங்கவந் தம்மட்டை மூன்றுபெயர்
மிகுமுடற் குறையாகுமே! 50

*சிகரம், முடி, மத்தகம், சேகரம், கம், மூர்த்தம்,
சிரம், உச்சி, உத்தமாங்கம்,
சென்னி, நவிரம், பொழி, உவ்வி, தரம், முண்டம், வலி,
சேர்ந்த தலை மூவைந்து பேர்.

புகுடி, பிருகுடி, நுதல், பூருவே, பீரு,
புரூரம், ஓர் ஆறு பெயரும்
புருவம், குளம், பாலம், முண்டம், இலாடம்,
பொருந்து மத்தகம், அளிகமே

---

1 யுத்தமாங்கம் எனல் வேண்டும்.

அகலு நுதல், கும்பம், பனிச்சை நெற்றிப் பெயர்
அரலையே கழலைப்பெயர்.
ஐ, ஓடு காசம் என்பது கோழையின் பெயர்
அழனம், குணுங்கு, குணபம்,
மிகுதிபெறு சவம், நீள் பிரேதம், களேபரம்,
விளம்பு பிணம் ஆறே பெயர்.
மிக்கயூபம், கவந்தம், மட்டை மூன்றுபெயர்
மிகும் உடற்குறை ஆகுமே! (90)

## தலையின் பெயர்

**சே:**— சிரம், சென்னி, உச்சி, முடி, நவிரம், கம், உவ்வி, சேகரம், தலை.

**பி:**— சிரம், கம், சேகரம், சென்னி, முடி, உத்தமாங்கம், நவிரம், உச்சி, சிகரம், முண்டம், மத்தகம், மூர்த்தம், உவ்வி, தலை.

**சூ:**— மூர்த்தம், உவ்வி, உத்தமாங்கம், சிரம், முடி, சென்னி, முண்டம், சிகம், மத்தகம், தலை.

**க:**— சேகரம், உச்சி, முடி, சென்னி, உத்தமாங்கம், சிரம், கம், நவிரம், தலை.

## புருவத்தின் பெயர்

**சே:**— புரூரம், பிருகுடி, நுதல், புருவம்.

**பி:**— புரூரம், பிருகுடி, நுதல், புருவம்.

**சூ:**— பிருகுடி, நுதல், பீரு, புரூரம், பூரு, புகுடி.

**க:**— புருவம், புரூரம், நுதல், பிருகுடி.

## நெற்றியின் பெயர்

**சே:**— மத்தகம், இலாடம், முண்டகம், நுதல், குளம், நெற்றி, பாலம்.

பி:— முண்டம், மத்தகம், நுதல், அளிகம், பாலம், குளம், நெற்றி, பாலம்.

சூ:— நிடலம், நுதல், குளம், இலாடம், மத்தகம், பாலம், முண்டம், அளிகம், நெற்றி.

க:— பாலம், நெற்றி, அளிகம், குளம், மத்தகம், முண்டம், இலாடம், நுதல்.

### கழலையின் பெயர்

சே:— அரலை.

பி:— அரலை.

சூ:— அரலை.

க:— அரலை.

### கோழையின் பெயர்

பி:— ஐ. காசம்.

சூ:— ஐ. காசம்.

### பிணத்தின் பெயர்

சே:— அழன், குணபம், களேபரம், சவம், பிணம்.

பி:— அழனம், சவம், குணபம், பிரேதம், களேபரம், பிணம்.

சூ:— பிரேதம், சவம், களேபரம், அழனம், பிணம்.

க:— குணுங்கு, அழன், சவம், களேபரம், குணபம், பிணம்.

### உடற்குறையின் பெயர்

சே:— யூபம், கவந்தம், மட்டை.

பி:— யூபம், கவந்தம், மட்டை.

சூ:— கவந்தம், மட்டை, யூபம்.

க:— உடற்குறை, அட்டை, கவந்தம், யூபம்.

## ஆண் மயிர், பெண் மயிர், இளங்காளையர் மயிர், மயிர்முடி இவற்றின் பெயர்

உளை [1]குடிமி தொங்கல்சிகை பங்கிகுழல் கார்குஞ்சி
யோரிநவிர் பித்தைதளைகள்
உச்சிபிச் சத்துட னீரேழு மாண்மயி
ரோதிசுருள் கூழையைம்பால்
வளர்[2]கொந்த ளங்கோதை குரல்சுரியல் குருளளக
மராட்டம்வி லோதங்குழல்
வருகூரல் கூந்தல்பரி சாரங்க துப்பழகம்
வைத்தபதி னேழ்பெண்மயிர்.
குளிர்சுரியல் கேசங்க துப்பளக மொருநான்கு
குலவிளங் காளையர்க்குக்
கூறிடுஞ் சிகைசிமிலி சிமையமொடு சிக்கமே
குடிமிசூ ளிகையுமப்பேர்.
மிளிருமுடி யுச்சிகொப் [3]பப்பின்ன கங்கொண்டை
வீறுசிக ளிகைசூடிகை
[4]மில்வமொடு பந்தமென வந்தவோ ரொன்பது
மிகுத்தமயிர் முடிநாமமே! 51

*உளை, குடுமி, தொங்கல், சிகை, பங்கி, குழல், கார்,
ஓரி, நவிர், பித்தை, தளைகள், [குஞ்சி,
உச்சி, பிச்சம், அத்துடன் ஈரேழும் ஆண்மயிர்.
ஓதி, சுருள், கூழை, ஐம்பால்,
வளர் குந்தளம், கோதை, குரல், சுரியல், குருள், அளகம்,
மராட்டம், விலோதம், குழல்,
வரு கூரல், கூந்தல், பரிசாரம், கதுப்பு, அழகம்,
வைத்த பதினேழ் பெண்மயிர்.

---

1. குடுமி எனல் நன்று. 2. குந்தளம் எனல் பொருந்தும்
3. புப்பின்னகம் எனல் வேண்டும்.
4. மில்லமொடு எனல் பொருந்தும்.

குளிர் சுரியல், கேசம், கதுப்பு, அளகம், ஒருநான்கு
குலவு இளம் காளையர்க்கு
கூறிடும் சிகை, சிமிலி, சிமையம், ஒடு சிக்கமே,
குடுமி, சூளிகையும் அப் பேர்.

மிளிரும் முடி, உச்சி, கொப்பு, பின்னகம், கொண்டை,
வீறு[1] சிகழிகை, சூடிகை,
மில்லம், ஒடு பந்தம், எனவந்த ஓர் ஒன்பதும்
மிகுந்த மயிர்முடி நாமமே! (91)

### ஆண்மயிரின் பெயர்.

**சே:**— குஞ்சி, நவிர், உளை, குடுமி, தொங்கல், பங்கி, பித்தை, ஓரி, சிகை.

**பி:**— குஞ்சி, பித்தை, ஓரி, குழல், கார், பங்கி, கேசம், சுரியல், கதுப்பு, தளை, நவிர், பிச்சம், சிகை.

**சூ:**— உளை, நவிர், குடுமி, பித்தை, ஓரி, குழல், கார், குஞ்சி, தளை, சிகை, தொங்கல், பங்கி.

**க:**— குடுமி, நவிர், பங்கி, பித்தை, புனைசிகை, குஞ்சி, தொங்கல், சுரியல், ஓரி.

### பெண்மயிரின் பெயர்.

**சே:** கோதை, நெடுமை, கூந்தல், ஐம்பால், ஓதி, கூழை, பரிசாரம், கதுப்பு, கேசம், அளகம், குழல், குரல், சுரியல், மராட்டம்.

**பி:**— குழல், கூழை, குந்தளம், கூந்தல், அளகம், ஓதி, ஐம்பால், கதுப்பு, சுருள், விலோதம், பரிசாரம், கேசம், சுரியல், மராட்டம், கோதை, குருள், குரல், கூரல்.

**சூ:**— குருள், குழல், விலோதம், ஓதி, கூழை, குந்தளம், மராட்டம், குரல், ஐம்பால், அளகம், கூந்தல்.

---

1. சிகளிகை என்றுளது.

**க:**— கூந்தல், அளம், மராட்டம், ஐம்பால், கூழை, குழல், கொந்தளம், பரிசார், கதுப்பு, கோதை, குரல், ஓதி, கேசம், சுரியல், சுருள்.

**இளம் காளையர் மயிரின் பெயர்.**

**சே:**— கதுப்பு, கேசம், சுரியல்.

**பி:**— கதுப்பு, கேசம், சுரியல், குழல்.

**நா:**— குழல், கதுப்பு, கேசம், சுரியல்.

**மயிர் முடியின் பெயர்.**

**சே:**— பின்னகம், பந்தம், முடி, முச்சி, கொண்டை, சிகழிகை, குழல், சுடிகை, மௌலி.

**பி:**— பின்னகம், பந்தம், முடி, முச்சி, கொண்டை, சிகழிகை, குழல், சுடிகை, மௌலி.

**நா:**— கொப்பு, முச்சி, பின்னகம், கொண்டை, பந்தம், தம்மிலலம், சிகழிகை.

**க:**— பின்னகம், பந்தம், முச்சி, முடி, கொண்டை, கடிகை, குழல், சிகழிகை.

**வளரும் மயிர், மயிர்க்குழற்சி, தொங்கல் மயிர், உடற்செறி மயிர், பிறமயிர், நரை மயிர், சடை, உச்சி இவைகளின் பெயர்.**

**கொந்தள மளகமிரு பெயருமே வளருமயிர்**
**குந்தளம் விலோதம்மயிர்க்**
**குழற்சிய மிரண்டுபெயர் [1]குறைவரா மயிர்குஞ்சி**
**கூந்தல்ப னிச்சையுடனே**

---

1. குறைவறா எனல் வேண்டும்.

**ஐந்துபெய ரும்முடிக் கீழ்விட்ட தொங்கன்மயி**
**றரையுரோ மஞ்சிரோந்தம்**
**ஆகியவி ரண்டுமே யுடலினிற் செறியுமயி**
**ரபிதான மோரிபங்கி**
**உந்தியவு ரோமமுளை கேசம ராட்டமோ**
**ராறுமே [1] ..............**

.................... .................... .................... ....................

**பின்னரிய நரையின்பெயர்.**

**வந்திடுங் கோடீரம் வேணிசடி லம்பின்னல்**
**மனனுசடை நான்கேபெயர்.**
**வாய்த்தநவி ரஞ்சுடிகை சூளியொடு மூன்றும்**
**வழங்குச்சி யபிதானமே! 52**

* கொந்தளம், அளகம். இரு பெயருமே வளரும்மயிர்.
குந்தளம், விலோதம்,
மயிர்க் குழற்சியம் இரண்டுபெயர். குறைவு அறா
கூந்தல் பணிச்சையுடனே (மயிர் குஞ்சி,

ஐந்து பெயரும், முடிக்கீழ் விட்ட தொங்கல் மயிர்.
அறையும் உரோமம், சிரோந்தம்,
ஆகிய இரண்டுமே உடலினில் செறியும் மயிர்
அபிதானம். ஓரி, பங்கி,
உந்திய உரோமம், உளை, கேசம், மராட்டம், ஓர்
ஆறுமே (பிறமயிர்ப்பேர்.
ஆகுமே சரை, பலிதம் இரண்டுமே பேசிடில்)
பின்ன அரிய நரையின் பெயர்.

வந்திடும் கோடீரம், வேணி, சடிலம், பின்னல்,
மன்னு சடை நான்கே பெயர்.
வாய்த்த நவிரம், சுடிகை, சூளி ஒரு மூன்றும்
வழங்கு உச்சி அபிதானமே! (92)

---

1. இப்பகுதி சுவடியில் காணப்படவில்லை.

### வளரும் மயிரின் பெயர்.

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்பட வில்லை.

### மயிர்க்குழற்சியின் பெயர்.

**சே:**— கொந்தம், அளகம், வீலோதம்.

**பி:**— குந்தளம், அளகம், வீலோதம்.

**சூ:**— குந்தளம், விலோதம்.

**க:**— அளகம், கொந்தளம், விலோதம், மயிர்க் குழற்சி.

### தொங்கல் மயிரின் பெயர்.

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்பட வில்லை.

### உடற்செறி மயிரின் பெயர்.

**சே:**— சிரோந்தம், உரோமம்.

**பி:**— சிரோந்தம், உரோமம்.

**சூ:**— உரோமம், சிரோந்தம்.

**க:**— உரோமம், சிரோந்தம்.

### பிறமயிரின் பெயர்.

**சே:**— ஓரி, பங்கி, உளை, உரோமம், கேசம், மராட்டம்.

**பி:**— ஓரி, பங்கி, உளை, உரோமம், கேசம், மராட்டம்.

**சூ:**— ஓரி, கேசம், பங்கி, உளை, உரோமம், மராட்டம்.

### நரைமயிரின் பெயர்.

**பி:**— சரை, பலிதம்.

**சூ:**— சரை, பலிதம்.

### சடையின் பெயர்.

**சே:**— பின்னல், சடிலம், கோடீரம். வேணி.

**பி:**— குடிலம், வேணி, கோடீரம், சடிலம், பின்னல்.

**சூ:**— குடிலம், வேணி, கோடீரம், பின்னல், சடிலம்.

**க:**— சடிலம், பின்னல், கோடீரம், வேணி, சடை.

### உச்சியின் பெயர்.

**சே:**— நவிரம், சுடிகை, சுழி, உச்சி.

**பி:**— நவிரம், சுடிகை, சுழி, உச்சி,

**சூ:**— சுடிகை, சூழி, நவிரம்.

**க:**— குடுமி, சிகம், சூளி, சுடிகை, சிமையம், சிகை, சிமிலி, நவிர், முடி, முச்சி.

### உயிர், உடம்பு, தழும்பு, எலும்பு, சந்து, கபாலம், இந்திரியம், ஐம்புலன்கள், பஞ்சேந்திரியங்கள் இவைகளின் பெயர்.

**அழிவில் வியமானன் பசும்புற்க லன்சீவ**
**னாவியான் மாச்சேதனன்**
**ஆதன்பி ராணனுயி ரபிதான மனுவுமா**
**மயவஞ்சி னைகாத்திரம்**
**வழுவில்சித் திரமங்க மேவுறுப் பாங்கச்சை**
**வசிவடுச் சுவடங்கிதம்**
**வன்சேக்கை யேதழும் பாமேலும் பேரென்பு**
**மதவங்க மத்தியக்காங்**
**கழியுமுடல் முழுவென்பு கங்காள மாகுங்**
**களேபர முடலெலும்பாம்**
**கந்துமொழி மூட்டுக்கொ ழுந்தினவை சந்தாங்**
**கபாலம்வெண் டலையோடதாம்**

**விழைவாயில் பொறிகரண மிடுகந்த மிந்திரிய**
**வினவிலோ ரைந்தாஞ்சுவை**
**மிகுபரிச மோசையொளி நாற்றமறி கருவிநா**
**மெய்செவிகண் மூக்காகுமே!** 53

* அழிவுஇல் [1]இயமானன், பசு, புற்கலன், சீவன்,
ஆவி, ஆன்மா, சேதனன்,
ஆதன், பிராணன் உயிர் அபிதானம்; அணுவும்
அவயம், சினை, காத்திரம், (ஆம்.

வழு இல் சித்திரம், அங்கமே உறுப்பு ஆம். கச்சை,
வசி, வடு, சுவடு, அங்கிதம,
வன் சேக்கையே தழும்பாம் ஏலும் பேர். என்பு,
மதவங்கம், அத்தி, அக்கு, ஆம்.

கழியும் உடல், முழுவென்பு, கங்காளம், ஆகும்.
களேபரம் உடல் எலும்பு ஆம்.
கந்து, மொழி, மூட்டு, கொழுந்து, இனவை சந்து
ஆம்.
கபாலம் வெண்தலையோடு அது ஆம்

விழைவாயில் பொறி, கரணம், இடு கந்தம் இந்திரியம்.
வனவில் ஓர் ஐந்தாம் சுவை,
மிகு பரிசம், ஓசை, ஒளி, நாற்றம். அறிகருவி நா,
மெய், செவி, கண், மூக்கு ஆகுமே! (94)

### உயிரின் பெயர்.

**சே:—** சீவன், உயிர், ஆதன், சேதனன், புற்கலன் அணு, பசு, இயமானன், ஆன்மா, உயிர்.

**பி:—** பசு, உயிர், சீவன், புற்கலன், சேதனன், அணு, இயமானன், ஆதன், செந்து, ஆவி, பூதன், உறவி, கூத்தன், ஆன்மா.

**சூ:—** ஆதன், சேதனன், பசு, சீவன், புற்கலன், கூத்தன், அணு, இயமானன், ஆன்மா, உயிர்.

---

1. வியமானன் என்றுளது.

க:— உயிர், பிராணன், வாயு.

### உறுப்பின் பெயர்.

சே:— அவயவம், காத்திரம், அங்கம், உறுப்பு, சினை

பி:— அவயவம், காத்திரம், அங்கம், உறுப்பு, சினை, மூர்த்தம்.

சூ:— காத்திரம், உறுப்பு, அங்கம், அவயவம்.

க:— காத்திரம், சினை, அவையவம், அங்கம், உறுப்பு,

### தழும்பின் பெயர்.

சே:— செதுகை, அங்கிதம்.

பி:— வடு, வசி, கச்சை, சேக்கை, அங்கிதம், சுவடு, செதுக்கை.

சூ:— அங்கிதம், சேக்கை, வசி, வடு.

க:— சேக்கை, அங்கிதம், தழும்பு.

### எலும்பின் பெயர்.

சே: என்பு, அத்தி, அங்கம், எலும்பு.

பி:— என்பு, அத்தி, அங்கம், களேவரம்.

சூ:— அத்தி, என்பு, களேவரம்.

க:— எலும்பு, அத்தி.

### கழியுடலின் முழுவெலும்பின் பெயர்.

சே:— கங்காளம்.

பி:— கங்காளம்.

சூ:— கங்காளம்.

க:— கங்காளம்.

### உடல் எலும்பின் பெயர்.

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.

### சந்தின் பெயர்.

**சே**:— கந்து, கொளுத்து, கழுத்து, சந்து

**பி**:— கந்து, கொளுத்து, மூட்டு.

**சூ**:— மூட்டு, கொளுத்து, கந்து.

**க**:— கத்து, கொளுத்து, கழுத்து, சந்து.

### தலையோட்டின் பெயர்.

**சே**:— கபாலம், தலையோடு.

**பி**:— கபாலம், வெண்டலை.

**சூ**:— தலையோடு, கபாலம்.

**க**:— கபாலம், வெண்டலை.

### இந்திரியத்தின் பெயர்.

**சே**:— கரணம், பொறி, வாயில், கந்தம், இந்திரியம். (அன்றியும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் அறியும் கருவி நா, கண், மெய், செவி, மூக்கு ஆம்.)

**பி**:— கந்தம், சுக்கிலம்.

**சூ**:— பொறி, கரணம், கந்தம்.

### ஐம்புலன்களின் பெயர்.

**சே**:— சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.

**பி**:— சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.

**சூ**:— சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.

**பஞ்சேந்திரியங்களின் பெயர்**

சே:— நா, கண், மெய், செவி, மூக்கு.

பி:— நா, கண், மெய், செவி, மூக்கு.

சூ:— நா, கண், மெய், காது, மூக்கு.

**இரண்டாவது**
**மக்கட் பெயர்த் தொகுதி**
**முற்றும்.**

# மூன்றாவது
# விலங்கின் பெயர்த் தொகுதி

## சிங்கம், ஆனியானை, புலி, கரடி இவைகளின் பெயர்

அரிவயப் புலிவயப் போத்துமிரு காபதி
யாளிவா ளரிகோளரி
அறுகுகண் டீரவங் கேசரிம டங்கல்பஞ்
சானனம் பூட்கைசீயம்

பொருமுடங் குளைநகா யுதமெண்ணி ரண்டுபெயர்
புகல்சிங்கம் வயமாவுமாம்.
புழைக்கையறு காளியொடு பூட்கையொரு நான்குமே
புனராளி யானையின்பேர்.

வருசித்திர காயந் தரக்குழுவை வேங்கைகொடு
வரிகுய வரிதீவிபுல்
வல்லுமா வயமா வியாக்கிரஞ் சாத்தூலம்
வல்லியம் புண்டரீகம்

பரிவில்புலி யீரேழு நாமம்வய வரியுமாம்
பல்லம்பல் லூகமெண்கு
பாய்குடா வடியுளிய மேலுவு [1]புனரவிவை
பகர்ந்தவே முங்கரடியே! 1

*அரி, வயப்புலி, வயப்போத்து, மிருகாபதி,
யாளி, வாளரி, கோளரி,
அறுகு, கண்டீரவம், கேசரி, மடங்கல்,
பஞ்சானனம், பூட்கை, சீயம்,

---

1. தெளிவில்லை,

பொரும் முடங்குளை, நகாயுதம், எண்ணிரண்டு
புகல் சிங்கம், வயமாவும் ஆம். [பெயர்;
புழைக்கை, அறுகு, ஆளி, ஒடு, பூட்கை. ஒரு
புனர் ஆளியானையின் பேர். [நான்குமே
வரு சித்திரகாயம், தரக்கு, உழுவை, வேங்கை,
கொடுவரி, குயவரி, தீவி, புல்,
வல்லுமா, வயமா, வியாக்கிரம், சாத்தூலம்,
வல்லியம், புண்டரீகம்,
பரிவில், புலி, ஈரேழு நாமம்; வயவரியும் ஆம்.
பல்லம், வல்லூகம், எண்கு,
பாய் குடாவடி, உளியம், ஏலு, உடன் [1]புனர
பகர்ந்த ஏழும் கரடியே! [இவை (95)

**சிங்கத்தின் பெயர்.**

சேந்தன் திவாகரம்:— ஆளி, மடங்கல், அரி, சண்டீரம், கேசரி, மிருகபதி, வயப்போத்து, சீயம், வயப்புலி, பஞ்சானனம், வயமா, சிங்கம்.

பிங்கல நிகண்டு:— ஆளி, வாளரி, அரி, மிருகாபதி, கோளரி, கண்டீரவம், பஞ்சனானம் சீயம், மடங்கல், கேசரி, முடங்குளை, அரிமா, வயப்போத்து, பஞ்சநகாயுதம், வயமா, வயப்புலி, சிங்கம்.

சூடாமணி நிகண்டு — அரி, வயப்போத்து, சீயம், அறுகு, கேசரி, பூட்கை, மிருகராசன், வயமா, மடங்கல், கண்டீரவம், பஞ்சானனம், சிங்கம்.

கயாதரம்:— மிருகாபதி, யாளி, மடங்கல், கண்டீரவம், அறுகு, அரி, கேசரி, சீயம், பஞ்சானனம், வயமிகுமா, வயப்போத்து, நகாயுதம், வாள்வரிமா, முடங்குளை, கோளரி, சிங்கம்.

---

1. தெளிவில்லை.

### ஆளியானையின் பெயர்.

**சே:**— அறுகு, பூட்கை, ஆளி, யானையாளி.

**பி:**— அறுகு, பூட்கை, யானையாளி.

**சூ:**— யாளி, அறுகு, பூட்கை, யானையாளி.

**க:**— அறுகு, புழைக்கை, யானை, ஆளி.

### புலியின் பெயர்.

**சே:**— கொடுவரி; உழுவை, குயவரி, வேங்கை, வல்லியம், வயமா, சார்த்தூலம், வியாக்கிரம், புல், புண்டரீகம், வயவரி, புலி.

**பி:**— வியாக்கிரம், வேங்கை, வியாளம், பாய்மா, தாக்கு, சித்திரகாயம், சார்த்தூலம், வயவரி, புண்ட-, ரீகம், வல்லியம், கொடுவரி, உழுவை, குயவரி. வயமா, புல், தீவி, புலி.

**சூ:**— வல்லியம், வயமா, சித்திரகாயம், வெல்லுமா, உழுவை, பாய்மா, வியாக்கிரம், தரக்கு, வேங்கை, குயவரி, சார்த்தூலம், புல், புண்டரீசம், கொடுவரி, புலி

**க:**— வயவரி, தீவி, சார்தூலம், கொடுவரி, வல்லியம், சித்திரகாயம், வியாக்கிரம், வயமா, மிருகாரி, வேங்கை, உழுவை, புண்டரீகம்.

### கரடியின் பெயர்.

**சே:**— உளியம், எண்கு, பல்லம், கரடி, குடாவடி.

**பி:**— பல்லூகம், எண்கு, உளியம், பல்லம், மிளிறு, எலு, குடாவடி, கரடி.

**சூ:**— பல்லுகம், உளியம், எண்கு, பல்லூகம், எலு, பல்லம், குடாவடி, கரடி.

**க:**— பல்லம், உளியம், வல்லூகம், கரடி, எண்கு.

## யானை, ஆண்யானை, பெண்யானை இவைகளின் பெயர்

உம்பல்கரி கயமாம்பல் வாரணம் மதாவள
மொருத்தல்வே ழம்போதகம்
உயர்வல்வி லங்குகுஞ் சரம்வழுவை மாதங்க
மொடுகருணி யிபமெறும்பி

தும்பிதந் தாவளந் தம்போலங் களிறுதூங்
கல்வயமா [1]மந்தமாசி
தோலத்தி பகடுசர மொற்பவம் புகர்முகஞ்
[2]சுளிராதி பூட்கைநாகங்

கும்பிபிற மறிதந்தி சிந்தூரங் கறையடிக்
கொட்டுமா மதமாக்கைம்மாக்
குடம்பிகள பங்கடவை மாதிரம் மருண் மாக்
குலாவுமிருண் மாப்புழைக்கை

வெம்புநால் வாயானை நாமம்நாற் பத்தெட்டு
வீறுமத கரிகளிறுடன்
மெய்த்தந்தி யாணாகும் வடவையத் தினிகருணி
மிக்கபிடி பெட்டையாமே! 2

* உம்பல், கரி, கயம், ஆம்பல், வாரணம், மதாவளம்,
ஒருத்தல், வேழம், போதகம்,
உயர் வல்விலங்கு குஞ்சரம், வழுவை, மாதங்கம்,
ஓடு கருணி, இபம், எறும்பி,

தும்பி, தந்தாவளம், [3]தம்போலம், களிறு, தூங்கல்,
வயமா, மந்தமா,
தோல், அத்தி, பகடு, சரம், ஒற்பவம், புகர்முகம்,
சுண்டாலி, பூட்கை, நாகம்,

---

1. மந்தமா எனலே பொருந்தும். 2. சுண்டாலி. 3. —?

கும்பி, [1]பிறமறி, தந்தி, சிந்தூரம், கறையடி,
கொட்டுமா, மதமா, கைம்மா,
குடம்பி, களபம், கடவை, மாதிரம், மருண்மா,
குலாவும் இருண்மா, புழைக்கை,
வெம்பு நால்வாய், யானை நாமம் நாற்பத்தெட்டு,
வீறு மதகரி, களிறு உடன்,
மெய்த்தந்தி ஆணாகும். வடவை, அத்தினி,
மிக்க பிடி பெட்டையாமே! (96) [கருணி,

**யானையின் பெயர்.**

**சே:—** தும்பி, கடிவை, புகர்முகம், தோல், கரி, உம்பல், வயமா, பகடு, நால்வாய், கரிணி, குஞ்சரம், கயம், களபம், மருண்மா, தந்தி, மாதங்கம், ஒருத்தல், களிறு, சிந்துரம், கறையடி, எறும்பி, வழுவை, வாரணம், வேழம், வல்விலங்கு, நாகம், மதகயம், அத்தி, இபம், கும்பி, போதகம், உவா, தூங்கல், மாதிரம், மறமலிகைம்மா, ஆம்பல், கோட்டுமா, புழைக்கை, யானை.

**பி:—** தும்பி, கரிணி, தோல், சுண்டாலி, கும்பி, கறையடி, குஞ்சரம், பகடு, களிறு, பூட்கை, கரி, மாதங்கம், வழுவை, வேழம், வாரணம், மொய், உம்பல், எறும்பி, உவா, பொங்கடி, தந்தி, அத்தி, கடிவை, கயம், நாகம், சிந்துரம், தூங்கல், நிருமதம், புழைக்கை, வல்விலங்கு, நால்வாய், புகர்முகம், மதாவளம், தந்தாவளம், மருண்மா, கைம்மா, பெருமா, மதமா, வயமா, மந்தமா, மதகயம், ஆம்பல், இபம், போதகம், களபம், யானை.

**சூ:—** தும்பி, மாதங்கம், தூங்கல், தோல், கறையடி, எறும்பி, உம்பல், வாரணம், புழைக்கை, ஒருத்தல், வல்விலங்கு, நாகம், கும்பி, நால்வாய், பூட்கை, குஞ்சரம், கரேணு, அத்தி, வேழம், உவா, கரி, கயம், களிறு, கைம்மா, சிந்துரம், வயமா, இபம்,

---

1 — ?

புகர்முகம், தந்தி, மதாவளம், தந்தாவளம், வழுவை, ஆம்பல், மந்தமா, மருண்மா, மதகயம், போதகம், யானை.

க:— யானை, கடிவை, புகர்முகம், தோல், கும்பி, உம்பல், இபம், கரி, உவா, போதகம், சிந்துரம், அத்தி, களிறு, மாதங்கம், கருணி, நால்வாய், கயம், தும்பி, தானமா, குஞ்சரம், மாதிரம், வேழம், மதமலை, தந்தாவளம், தூங்கல், புழைக்கை, வாரணம், சரம், ஒற்பவம், இரதி, மலை விலங்கு, நாகம், எறும்பி, வழுவை, பகடு, ஒருத்தல், களபம், வயமா, கறையடி, தந்தி.

### ஆண் யானையின் பெயர்

சே:— மதகரி, தந்தி களிறு.

பி:— மகரி, தந்தி, களிறு.

### பெண் யானையின் பெயர்

சே:— கரேணு, பிடி,

பி:— அத்தினி, கரிணி, வடவை, பிடி.

சூ:— வடவை, அத்தினி, கரிணி.

## உதவிசெய் யானை, யானைக்கன்று, யானைத்திரள், பிறந்த நிலத்தாற் பெயர் பெறும் யானை, யானைத்தலை, யானைக் கொம்பு, துதிக்கை, துதிக்கையின் நுனி, உமிழ்நீர், இவற்றின் பெயர்.

[1]உதவிசெய் தினத்தினை காய்கின்ற கரிமத
கயத்துடன் பூதனாதன்
ஒங்குதுடி யடிமுனி கயங்கயங் [2]தலைகள
மொப்பில்போ தகமொராறும்

---

1 தெளிவில்லை. மூலத்தில் உள்ளபடியே எழுதப் பட்டுள்ளது.

2 தலைகளப எனல் வேண்டும்.

**பிதிரக கரிக்கன்றி நாமங்க டகமாகும்**
**பெருங்கரித் திரளின்பெயர்.**
**பேசுகிரி சரநதி சரம்வன சரங்கரி**
**பிறந்திடும் நிலத்தின் பெயர்.**
**மதகமத் தகமொடு குடங்கும்ப நான்குமே**
**வனக்கரி சிரசின்பெயர்.**
**மறுப்பெயிறு கோடுகிம் புரிதந்த மோரைந்தும்**
**வார(ண)க் கொம்பின்பெயர்.**
**கதமுடைய கொண்டைதொண் டைதொண்ட லந்துதிக்**
**(கைபுட்க) ரங்கைநுனை**
**கருதியவி [1]லாளியொடு [2]மதுவரங்கை யுமிழ்நீர்**
**[2]கடைக்கணரி யனமாமே! (3)**

* உதவிசெய் இனத்தின, காய்கின்றகரி, மதகயம்;
அத்துடன் யூதநாதன்.
ஓங்கு துடியடி, மூனி, கயம், கயந்தலை, களபம்,
ஒப்புஇல் போதகம், ஓர் ஆறும்

பிதிரக் கரிக்கன்றின் நாமம். கடகம் ஆகும்
பெருங்கரித் திரளின் பெயர்.
பேசு கிரிசரம், நதிசரம், வனசாம்,
கரி பிறந்திடும் நிலத்தின் பெயர்.

மதகம், மத்தகம், ஒடு குடம், கும்பம், நான்குமே
வனக்கரி சிரசின் பெயர்.
மருப்பு, எயிறு, கோடு, கிம்புரி, தந்தம், ஓர்
ஐந்தும்
வார(ண)க் கொம்பின் பெயர்.

கதம் உடைய கொண்டை, தொண்டை, தொண்டலம்,
துதிக்கை, புட்கரம், கைநுனை.
கருதிய விலாழி ஒடு [4]மதுவரம் கை யுமிழ்நீர்.
கடைக்கண் நிரியாணம் ஆமே! (97)

---

1 லாழியொடு எனல்வேண்டும். 2 — ?
3 கடைககணிரியாணமாமே எனல் வேண்டும். 4 — ?

### உதவிசெய் யானையின் பெயர்

பி: — யூதநாதன்.

### யானைக்கன்றின் பெயர்

சே:— போதகம், துடியடி, கமம், முனி, கன்று.

பி:— கயந்தலை, போதகம், துடியடி, களபம், கயமுனி.

சூ:— கயந்தலை, போதகம், துடியடி, களபம், கயமுனி.

க:— துடியடி, போதகம், களபம், கயமுனி.

### யானைத்திரளின் பெயர்

பி:— கடகம்

சூ: — கடகம்

### பிறந்தநிலத்தாற் பெயர் பெறும் யானையின் பெயர்

சே:— கிரிசரம், வனசரம், நதிசரம்.

பி:— கிரிசரம், வனசரம், நதிசரம்.

### யானைத்தலையின் பெயர்

பி:— மத்தகம், மதோற்கடம்.

சூ:— மதகம், கும்பம்.

### யானைக் கொம்பின் பெயர்

பி:— தந்தம், எயிறு, கோடு, மருப்பு, கொம்பு.

சூ:— கோடு, எயிறு, தந்தம்.

### யானைத் துதிக்கையின் பெயர்

பி:— தொண்டை, தொண்டலம், சுண்டை, துதிக்கை.

சூ:— தொண்டை, தொண்டலம், சுண்டை, துதிக்கை.

### துதிக்கை நுனியின் பெயர்

பி:— புட்கரம்.

சூ:— புட்கரம்.

### யானை உமிழ்நீரின் பெயர்

பி:— விலாழி.

சூ:— விலாழி.

### யானை மதம், முதுகு, வால், வால்நுனை, பல் அடி, தாள், முன்கால், பின்கால், காது, காதின் அடி, மதச்சுவடு, கதுப்பு, கொம்பின் நடு, நோய், துயிலிடம், படுகுழி ஆகியவற்றின் பெயர்.

மண்டிய கடங்கடாங் கறைதான மொருநாலு
மதமாகு முதுகுமஞ்சாம்
வால்தால வட்டமாம் வாலிநுனை வேசகம்
வளர்பல் லடிகரீரம்
கண்டதா ளங்கிதங் காத்திரம் முன்கால்
[1]காத்திரம் யாமிருபெங்
கடியபின் கால்கன்ன மொடுதால மாங்காது
காதடிச் சூலிகையதாங்
கொண்டமத மளிக ளடிக்கட மாகுங்
குலாவிய புட்கதுப்பாங்
கொடும்பியொடு பிருதுமா னங்கொம்பி நடுவாங்
குறித்தநோய் பாகலமதாங்
தண்டமாஞ் சென்றவழி சேவகங் கூடகஞ்
சாற்றுகரி துயிலிடமதாங்
தகும்பய மொடுவாரி யானைபடு குழியதாங்
தமிழ்முனி யுரைத்தபெயரே! (4)

---

1 காத்திரமபர மிருபேருங் எனல்வண்டும்.

* மண்டிய கடம், கடாம் கறை, தானம், ஒரு நாலும்
மதமாகும். முதுகு மஞ்சாம்.
வால் தாலவட்டமாம். வால்நுனை வேசகம்.
வளர் பல்அடி கரீரம்.
கண்ட தாள் அங்கிதம். காத்திரம் முன்கால்.
காத்திரம், அபரம் இரு பேரும்
கடிய பின்கால். கன்னம் ஒடு தாலம் ஆம் காது.
காதுஅடி சூளிகை அதுஆம்.
[1]கொண்ட மதம், அளிகள், அடி, கடம் ஆகும்.
குலாவிய [2]புள் கதுப்பு ஆம்.
கொடும்பி, ஒடு பிருதுமானம் கொம்பின் நடுவாம்.
குறித்த நோய் பாகலம் அதுஆம்.
தண்டம், ஆம் சென்றவழி சேவகம், கூடகம்,
சாற்று கரி துயிலிடம் அதுஆம்.
தகும் பயம்பு, ஒடு வாரி, யானை படு குழியதாம்;
தமிழ்முனி உரைத்த பெயரே! (98)

**யானை மதத்தின் பெயர்.**

**சே**:— கடம், தானம், மதம்.
**பி**:— கடம், தானம், கடாம், மதம்.
**சூ**:— கடம், கடாம், தானம், மதம்.
**க**:— மதம், கரடம், கடம், கடாம், தானம்.

**யானைமுதுகின் பெயர்.**

**சே**:— மஞ்சு.
**பி**:— மஞ்சு.
**சூ**:— மஞ்சு.

---

1 கொண்டமதச் சுவடுகர டங்கொடிறு கடமாங் என்றிருத்தல் வேண்டும். ஏனெனில் முதலடியிலேயே மதம்பற்றிக் கூறப்பட்டுளது. [2]கவுள் எனல் வேண்டும்.

### யானைவாலின் பெயர்.

**சே**:— வாலதி, தாலவட்டம்.

**பி**:— தாலவட்டம்.

**சூ**:— தாலவட்டம்.

### யானை வால்நுனியின் பெயர்.

**பி**:— வேசகம்.

**சூ**:— வேசகம்.

### யானைப் பல் அடியின் பெயர்.

**பி**:— கரீரம்

**சூ**:— கரீரம்.

### யானைத் தாளின் பெயர்.

**சே**:— காத்திரம், அபரம், தாள்.

### யானையின் முன்காலின் பெயர்.

**பி**:— காத்திரம்.

**சூ**:— காத்திரம்.

### யானையின் பின்காலின் பெயர்.

**பி**:— அபரம்.

**சூ**:— அபரம்.

### யானைக் காதின் பெயர்.

**சே**:— கன்னம், தாலம்.

**பி**:— கன்னம், தாலம்.

**யானைக் காதடியின் பெயர்**

பி:— சூளிகை.

தூ:— சூளிகை.

**யானைமதச் சுவடு**

சே:— கரடம்.

பி:— கடம், கொடிறு, கரடம்.

தூ:— கரடம்.

**யானைக் கதுப்பின் பெயர்**

தூ:— கவுள், கதுப்பு.

**யானைக்கொம்பின் நடுவின் பெயர்**

பி:— பிருதுமானம்.

தூ:— பிரதிமானம்.

**யானை நோயின் பெயர்**

பி:— பாகலம்.

தூ:— பாகலம்.

**யானை துயில் இடத்தின் பெயர்**

சே:— சேவகம்.

பி:— சேவகம், சாலை, சேக்கை.

தூ:— சேவகம், தண்டம்.

### யானைப் படுகுழியின் பெயர்

பி:— பயம்பு.

சூ:— பயம்பு.

**யானை கட்டும் விலங்கு, கழுத்துக் கயிறு, அங்குசம், சாணம், கனவு, முகபடாம், நெற்றிப் பட்டம், தவிசு, மெத்தை, கட்டுத் தறி, கச்சை, தங்குமிடம், துயிலிடம் இவற்றின் பெயர்.**

பூட்டுதளை வலரிதுடர் நிகளஞ் சிருங்கலை
புனைகருவி நீள்விலங்காம்.
புரசைகவ டேதூசி மூன்றுங் கழுத்திற்
பொருந்திய கயிற்றின் பெயர்
தோட்டியங் குசநீள் சாணங் கணிச்சியொடு
[1]சொற்பன மேகுடோரி
சூழிமந் தனமிரண் டேமுக படாம்பெயர்
துலங்கோடை பட்டமாகும்
காட்டுதவி சோடுபல காரமில கடங்கச்சை
கரிமேல் மெத்தையாங்
கந்துவெளில் [2]கணையமா ளானமொரு நான்குமே
கரிகட்டு தறியின்பெய
ரீட்டுகரி மணிகண்டை கச்சையாம் மால்கரி
யிணங்குகூட டத்தின்பெயர்
[3]எழில்வாரி யொளியாலய மூன்றுமாங் குளகொடிரை
கவர்முனம் வாதிருடமே. 5

* பூட்டு, தளை, வலரி, துடர், நிகளம், சிருங்கலை, புனைகருவி, நீள் விலங்கு ஆம்.

---

1 சொற்பொண என்றுளது. 2 கனையமா என்றுளது.
3 அசைகள் மிகுந்துள்ளன.

புரசை, கவடு, ஏ தூசி, மூன்றும் கழுத்தில்
பொருந்திய கயிற்றின் பெயர்.
தோட்டி, அங்குசம். நீள் சாணம், கணிச்சி. (ஒடு)
சொற்பனமே குடோரி.
சூழி, மந்தனம் இரண்டே முகபடாம் பெயர்.
துலங்கு ஓடை பட்டமாகும்.
காட்டு தவிசு, ஒடு பலகாரம், இலகடம், கச்சை
கரிமேல் மெத்தையாம்.
கந்து, வெளில், கணையம், ஆளானம் ஒரு
கரி கட்டுதறியின் பெயர். [நான்குமே
ஈட்டு கரி மணிகண்டம் கச்சையாம், மால்கரி
இணங்கு கூடத்தின் பெயர்.
எழில் வாரி, ஒளி, ஆலயம் மூன்றும் ஆம் குளகொடிரை
கவர்முனம் வாரி இடமே! (99)

### யானை கட்டும் விலங்கின் பெயர்

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.

### யானைக் கழுத்துக் கயிற்றின் பெயர்

**பி:**— தூசு, சுவடு, புரசை.

**சூ:**— புரசை, தூசி, கச்சை.

### அங்குசத்தின் பெயர்

**சே:**— அங்குசம், கோணம், தோட்டி.

**பி:**— அங்குசம், தோட்டி.

**சூ:**— தோட்டி, அங்குசம், கோணம்.

### யானைச் சாணத்தின் பெயர்

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.

### யானைச் சொற்பனத்தின் பெயர்

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.

### யானை முகபடாத்தின் பெயர்

பி:— சூழி, படம், முகபடாம், மந்தனம்.

சூ:— மந்தனம், சூழி.

### யானை நெற்றிப்பட்டத்தின் பெயர்

பி:—ஓடை

### யானைத் தவிசின் பெயர்

பி:— இலகடம், பலகாரம்.

சூ:— இலகடம், பலகாரம்.

### யானை மெத்தையின் பெயர்

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.

### யானை கட்டுத்தறியின் பெயர்

பி:— ஆளானம். வெளில்.

### யானைக் கச்சையின் பெயர்

பி:— கண்டம்.

### யானை தங்குமிடத்தின் பெயர்

சே:— ஆலயம், வாரி, சேவகம், தண்டம், கூடம், ஒளி, சேர்விடம்.

பி:— ஆலயம், ஒளி, கூடம், சேவகம்.

சூ:— (சேவகம், தண்டம்).

யானை துயிலிடத்தின் பெயர்

சே:— சேவகம், துயிலிடம்.

பி:— சேவகம், சாலை, சேக்கை.

தி:— சேவகம், தண்டம்.

## குதிரையின் பெயர், சேரன் குதிரையின் பெயர், பாண்டியன் குதிரையின் பெயர், சோழன் குதிரையின் பெயர், குறுநில மன்னர் குதிரையின் பெயர்.

குந்தம்மண் டிலம்வாசி யிவுளியுத் திரியங்
கோடைபாய் மாத்துரங்கங்
குரகதந் துரங்கதங் கிள்ளையத் திரியுன்னி
கொண்டுவய மாகொய்யுளை

கந்துகம் புரவிபரி சடிலஞ் சயிந்தவங்
(கற்)கியரி தூசிவாகங்
கந்திருவ மச்சுவங் கோடகங் கொக்குமாக்
கடியதுர கம்பத்பத்திரி

யுந்துகன வட்டமொடு பாடலங் கோரகல
முளவடவை யுடன்முப்பதே
முயர்குதிரை யாமிவற் றுன்னுபா டலமென்ப
தோங்கிய புகட்சேரன்மா.

வந்தகன வட்டமே வழுதிமாக் கோரமே
வளவன்மாக் கந்துகந்தான்
மன்னுகுறு நிலமன்ன ரூர்ந்திடும் மாவென
வகுத்துரைத் தனர்வல்லோரே! 6

* குந்தம், மண்டிலம், வாசி, இவுளி, உத்தரி, அயம்,
கோடை, பாய்மா, துரங்கம்,
குரகதம், துரங்கதம், கிள்ளை, அத்திரி, உன்னி,
கோணம், வயமா, கொய்யுளை,

கந்துகம், புரவி, பரி, சடிலம், சயிந்தவம்,
(கற்)கி, அரி, தூசி, [1]வாகம்,

---

1 — ?

கந்திருவம், அச்சுவம், கோடகம், கொக்கு, மா,
கடிய துரகம், பத்திரி,

உந்து கனவட்டம், ஓடு பாடலம், கோரம்,
நலமுள வடவை உடன் முப்பதேழ்
உயர் குதிரையாம். இவற்று உன்னு பாடலம்
ஓங்கிய புகழ் சேரன்மா. [என்பது

வந்த கனவட்டமே வழுதிமா. கோரமே
வளவன்மா கந்துகம் தான்
மன்னு குறுநிலமன்னர் ஊர்ந்திடும் மா என
வகுத்து உரைத்தனர் வல்லோரே! (100)

**குதிரையின் பெயர்**

**சே:**— துரகதம், துரங்கம், வாசி, பாய்மா, குரகதம், கிள்ளை, கநதருவம், கற்கி, மண்டிலம், துரகம், மா, வேய், இவுளி, ஒண்டிறல், உன்னி, உத்தரி, கோணம், குந்தம், கொய்யுளை, கொக்கு, பரி, அயம், அச்சுவம், வயமா, புரவி, அரி, அத்திரி, குதிரை, கனவட்டம், பாடலம், கோரம், கந்துகம்.

**பி:**— பரி, பாடலம், பாய்மா, புரவி, அரி, கனவட்டம், அத்திரி, கோரம், வாசி, துரங்கம், மா, கந்துகம், தூசி, இவுளி, துரகம், கோடகம், சயிந்தவம், கோணம், குரகதம், கந்தருவம், கிள்ளை, மண்டிலம், கற்கி, அச்சுவம், உன்னி, அயம், கொக்கு, கொய்யுளை, சடிலம், குந்தம், கண்ணுகம், கோடை, வயமா, குதிரை.

**சூ:**— பரி, துரகம், பாடலம், கிள்ளை, பாய்மா, துரகதம், வாசி, உன்னி, தூசி, கந்தருவம், கற்கி, அரி, அயம், இவுளி, மா, அச்சுவம், புரவி, கோரம், குரகதம், கோணம், கொக்கு, கொய்யுளை, சடிலம், கோடை, கந்துகம், கனவட்டம், பத்திரி, துரங்கம், குந்தம், அத்திரி, குதிரை.

**க:**— குரகதம், வாசி, இவுளி, சயிந்தவம், கோடகம், மா, துரகம், கனவட்டம், பாடலம், கற்கி, துரங்

கம், கிள்ளை, பரி, அயம், தூசி, அச்சுவம், வாகம், கந்துகம், அரி, குந்தம், கந்திருவம், அத்திரி, குதிரை.

**சேரன் குதிரையின் பெயர்**

சே:— பாடலம்.

பி:— பாடலம்.

**பாண்டியன் குதிரையின் பெயர்**

சே:— கனவட்டம்.

பி:— கனவட்டம்.

**சோழன் குதிரையின் பெயர்**

சே:— கோரம்.

பி:— கோரம்.

**குறுநிலமன்னர் குதிரையின் பெயர்**

சே:— கந்துகம்.

பி.— கந்துகம்.

## குதிரைக் குளம்பு, பிடரிமயிர், கலணை, அங்கவடி, நெருமயிர், கடிவாளம், உமிழ்நீர், சம்மட்டி, குதிரைக் கயிறு, இவற்றின் பெயர்

குரமொடு குரசையென வருபெய ரிரண்டுமே
குதிரைக் குளம்பின் பெயர்.
குசமேச கந்தாவல் சுவலாகு நான்குமே
குலாவுபிடர் மயிரின் பெயர்.
பருமமாக் கருவிபடை [1]பண்பல்லா மைந்துமே
பகர்கலணை பரவும்பேர்.

1 'பண்பல்லணை' என்றிருத்தல் வேண்டும்.

**படிகச்ச மோரிரண் [1]டாங்கவடி நாமம்**
**[2]பருக்களியு நெடுமயிருளை.**

**[3]உரியகலி யங்கவின மிருள்கறுழ் [4]கடிவாளம்**
**நான்குபரி யின்வாயின்**
**உமிழ்நீர் விலாளி மத்திகைகோ லிரண்டுமே**
**யொத்தசம் மட்டிபெயர்.**

**மருவுபரி வாயில்வடம் வற்கம் வடிகயிறும்**
**வன்குசை கசைகயிறுமாம்.**
**மதிகவனம் [5]புரவிசெலு மாற்கம் மாதிகம்**
**வம்பாரி வருக்கமாமே.[6]** 7

*குரம் ஒடு குரச்சை எனவரும் பெயர் இரண்டுமே
குதிரைக் குளம்பின் பெயர்,
குசை, மேசகம், தாவல், சுவல், ஆகும் நான்குமே
குலவு பிடர் மயிரின் பெயர்.

பருமம், மாக்கருவி, படை, பண், பல்லணம் ஐந்துமே
பகர் கலணை பரவும் பேர்.
படி, கச்சம் ஓர் இரண்டு அங்கவடி நாமம்.
மருங்கு அணியும் நெடுமயிர் உளை.

உரிய கலியம், கலினம், இருள், கறுழ், கடிவாளம்
நான்கு. பரியின் வாயின்
உமிழ்நீர் விலாளி. மத்திகை, கோல் இரண்டுமே
ஒத்த சம்மட்டியின் பெயர்.

மருவுபரி வாய்வட்டம், வற்கம் வடிகயிறும்
வன்குசை கசை கயிறும் ஆம்.
மதி கவனம் புரவி செலும் மார்க்கம் மாதிகம்.
வம்பாரி வருக்கமாமே! (101)

---

1 டங்கவடி எனல்வேண்டும்.
2 மருங்கணியு என்றிருத்தல் வேண்டும்.
3 இவ்வரி சரியாக இல்லை.
4 கடிவானம் என்றுளது. 5 புரவிசெழு என்றுளது.
6 இப்பாடல் முழுதும் சரியில்லை.

### குதிரைக் குளம்பின் பெயர்

**சே:**— குரம்.

**பி**:— குரம், குச்சை, குரசு.

**தூ**:— குரம், குரச்சை.

### பிடரிமயிரின் பெயர்

**பி**:— சுவல், குசை, கூந்தல், மேசகம்.

**தூ**:— மேசகம், சுவல், குசை.

### குதிரைக் கலணையின் பெயர்

**சே:**— பல்லணம், பருமம், படை, பரம், கருவி, பண்.

**பி**:— பருமம், பண், படை, பல்லணம், பரம், சூழி.

**தூ**:— பரம், பண், பருமம், படை, பல்லணம்.

### குதிரை அங்கவடியின் பெயர்

**பி:**— கச்சம், படி.

**தூ:**— கச்சம், படி.

### குதிரை நெடுமயிரின் பெயர்

**பி**:— சுவல், குசை, கூந்தல், மேசகம்.

**தூ:**— மேசகம், சுவல், குசை.

### கடிவாளத்தின் பெயர்

**சே**:— கலினம், கறுழ்

**பி:**— கலியம், மூட்டு, கிராம், கலினம், கறுழ்.

**தூ:**— கறுழ், கலியம், கலினம்.

### உமிழ் நீரின் பெயர்

சே:— விலாழி.

### குதிரைச் சம்மட்டியின் பெயர்

சே:— மத்திகை, சம்மட்டி.

பி:— மத்திகை, கோல்.

சூ:— கோல், மத்திகை.

### குதிரைக் கயிற்றின் பெயர்

சே:— வற்கம், குசைக்கயறு.

பி:— வற்கம், வாய்வட்டம், குசை.

சூ:— வடிகயிறு, வற்கம்.

## குதிரை நடை, குதிரைப்பந்தி, குதிரை வையாளி வீதி இவைகளின் பெயர். ஒட்டகத்தின் பெயர், பன்றியின் பெயர்.

மல்லகதி வானர கதிவியாக் கிரகதி
மயூரகதி விடையின்கதி
வைத்ததோ ரைந்துகதி புரவிநடை யின்பெயர்
மந்திரம் [1]பணசாலைமுன்
எல்லையில் லாதகுதி ரைப்பந்தி நாமமா
மேறும்வை யாளிவீதி
இசைசெண்டு வழிபுரவி வட்டமொடு திருமுத்த
மென்னுமுப் பேர்பொருந்தும்
[2]நல்லகள நெடுமான னயந்தா சோகமுடன்
நனியநெ டுங்கழுத்தல்

---

1 பணைசாலைமுன் எனல்வேண்டும்.

2 இவ்வரி மூலம் சரியில்லை.

**நாடிலத் திரியிரவ ணங்காப மிருமூன்று**
**நாமமொட் டகம்வர் (க்) கம்.**
**வல்லுளி குரோடமரி தூகரங் கோணிகரு**
**மாமோழன் [1]கேளல்போளல்**
**வளரிருளி யெறுழியே னங்கனலி பூதாரம்**
**வன்களிறு பன்றியாமே ![2]** 8

*[3]மல்லகதி, [4]வானரகதி, [5]வியாக்கிரகதி
[6]மயூரகதி. [7]விடையின்கதி,
வைத்த ஓர் ஐந்துகதி புரவிநடையின் பெயர்.
மந்திரம், பணை, சாலை, முன்

எல்லை இல்லாத குதிரைப்பந்தி நாமம் ஆகும்.
ஏறும் வையாளி வீதி
இசை செண்டுவழி, புரவி வட்டம், ஒடு திருமுத்தம்,
என்னும் முப்பேர் பொருந்தும.

[8]நல்ல [9](கனகதம்), அயவணம், தாசோகம், உடன்
நனிய நெடுங்கழுத்தல்,
நாடில் அத்திரி, இரவணம், கரபம் இருமூன்று
நாமம் ஒட்டகம் வருக்கம்.

வல்லுளி, குரோடம், அரி, சூகரம், கோணி,
கருமா, மோழன், கேழல், மோழல்,
வளர் இருளி, எறுழி, ஏனம், கனலி, பூதாரம்,
வன்களிறு பன்றியாமே ! (102)

---

1 கேழல், போழல் எனல்வேண்டும்.
2 இவ்வரி சரியில்லை. பொதுவாக இப்பாடல் மூலம் சரியில்லை.
3 போர்வீர (மல்ல) னைப்போன்ற நடையுடையது.
4 குரங்குபோன்ற நடையுடையது.
5 புலி போன்ற நடையுடையது.
6 மயில்போன்ற நடையுடையது.
7 காளை (எருது) மாடுபோன்ற நடையுடையது.
8 இவ்வரி சரியில்லை [9]சேர்க்கப்பட்டது

### குதிரை நடையின் பெயர்.

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.

### குதிரைப் பந்தியின் பெயர்.

**சே**:— மந்திரம், சாலை, குதிரைப்பந்தி.

**பி**:— மந்திரம், சாலை, பணை, லாயம்.

**சூ**:— சாலை, மந்துரை, மந்திரை.

### வையாளி வீதியின் பெயர்.

**சே**:— செண்டு வெளி, வையாளி வீதி, புரவி வட்டம், திருமுற்றம்.

**சூ**:— செண்டுவெளி, புரவிவட்டம், திருமுற்றம்.

### ஒட்டகத்தின் பெயர்.

**பி**:— அத்திரி, நெடுங்கழுதகன், தாசேரகம், கனகதம், அயவணம், இரவணம்.

**சூ**:— தாசேரம், அத்திரி, நெடுங்கழுத்தல்.

**க**:— தாசோகம், இரவணம், கரபம், ஒட்டகம்.

### பன்றியின் பெயர்.

**சே**:— இருளி, கனலி, ஏனம், சூகரம், கருமா, மோழல், வல்லுளி, கேழல், வராகம், எறுழி, கோலம், களிறு, பன்றி.

**பி**:— கேழல், குரோடம், கிரி, கிடி, கிருட்டி, மோழல், வராகம், போத்திரி, கோலம், எறுழி, வல்லுளி, ஏனம், சூகரம், கனலி, இருளி, கருமா, கோணி, போழ்முகம், அரி, மைம்மா, களிறு, பன்றி.

சூ:— கேழல், அரி, குரோடம், கிரி, கிடி, கிருட்டி, ஏனம், மேழல், இருளி, வல்லுளி, களிறு, கைம்மா, கோட்டுமா, போத்திரி, வராகம், கோலம், சூகரம், எறுழி, பன்றி.

கூ:— கரம், அத்திரி, கேழல், அரி, கிடி, கோலம், பூதாரம், மைம்மா, கிருட்டி, குரோட்டு, எறுழி, வராகம், பன்றி, கனலி, களிறு, ஏனம், போத்திரி, சூகரம்.

## பன்றி, முள்ளம்பன்றி, முள்ளம்பன்றியின் முள், மருட்டுப் பன்றி, மான், கலை, புல்வாய், கவரிமான் இவைகளின் பெயர்

கைம்மாமுழக் கோட்டுமா வோடாறு மூன்றுமே
காட்டுமப் பன்றியின்பேர்.
காணிலெய் முளவுமா [1]முண்மச்சஞ் சல்லியங்
கடிசல் லபமைந்துமே

சொல்மாறில் லாதமுட் பன்றிசல் லஞ்சலம்
சொற்றவதன் முன்னிரண்டாங்
துடர்மருட் டுப்பன்றி கிரிகுடி கிரீட்டியொடு
துய்யபோத் திரிகோலமாம்

[2]நம்மாணி நமங்குரங் [3]கமறியுழை [4]கோணம்
நவ்விசா ரங்கமிருகம்.
நாட்டருண மாளை[5]யே ணம்பிணைபன் னொன்றுமே
நவிற்றிரலை கருமான்புல்வாய்.

இம்மூன்று டன்வச்சி யங்[6] கவை மருப்பிகலை
யிரலைபுல் வாயின்பெயர்.
[7] எகினமே திமனாம மாபட்ட மொருநான்கு
எழிற்கவரி மானாகுமே![8] 9

1 முண்மச்சாவலியங் என்றுளது.
2 நம்மானின் நாமம் போலும்.
3 கமரியுளை என்றுளது. 4 சூனம் போலும்.
5 யேனம்பினை என்றுளது. 6 கலை போலும்.
7 தெளிவில்லை. 8 இப்பாடல் தெளிவாக இல்லை.

*கைம்மா, முழக்கோட்டுமா ஓடு ஆறு மூன்றுமே
காட்டும் அப்பன்றியின்பேர்.
காணில் எய், முளவுமா, முண்மச்சம், சல்லியம்,
கடி சல்லகம் ஐந்துமே

சொல் மாறில்லாத முட்பன்றி. சல்லம், சலம்,
சொற்ற அதன் முள் இரண்டாம்.
துடர் மருட்ப்பன்றி கிரி, குடி, கிரீட்டி ஒடு
துய்ய போத்திரி கோலமாம்.

நம் மானின் நாமம் குரங்கம், மறி, உழை, சூனம்[1]
நவ்வி, சாரங்கம், மிருகம்,
நாட்ட அருணம், [2]மாளை, ஏணம், பிணை
பன்னொன்றுமே.
நவிற்று இரலை, கருமான், புல்வாய்,

இம்மூன்றுடன் வச்சியம் கலை. மருப்பிகலை
இரலை புல்வாயின் பெயர்.
எகினம், [3]ஏதிமம், மானமா, பட்டம், ஒருநான்கும்
எழிற் கவரிமான் ஆகுமே! (103)

**முள்ளம்பன்றியின் பெயர்.**

**சே**:— எய், முண்மா, சல்லியம், முட்பன்றி.

**பி**:— சல்லியம், முளவு எய், முண்மா, சல்லகம்.

**சூ**:— சல்லியம், முளவுமா, எய், சல்லகம்.

**க**:— எய், முளவுமா, சல்லியம்.

**முட்பன்றி முள்ளின் பெயர்**

**பி**:— சல்லம், சலம்.

**சூ**:— சலம், சல்லம்.

---

1 கோணம் என்றுளது. 2, 3?

## மருட்டுப் பன்றியின் பெயர்

**சே**:— கிருட்டி, போத்து, கோலம், கிரிகிரி, மருட்டுப்பன்றி.

## மானின் பெயர்

**சே**:— சாரங்கம், நவ்வி, மறி, பிணை, அரிணம், உழை, மான்.

**பி**:— அரிணம், நவ்வி, குரங்கம், சாரங்கம், மறி, உழை, சூனம், ஏணம், பிணை.

**சூ**:— அரிணம், சாரங்கம், நவ்வி, உழை, பிணை, சூனம், மிருகம், மறி, குரங்கம், ஏணம், மான்.

**க**:— நவ்வி, மறி, அருணம், பிணை, உழை, ஏணம், குரங்கம், சாரங்கம், மான்.

## கலையின் பெயர்

**சே**:— இரலை, கலை, மானேறு.

**பி**:— இரலை, வச்சயம், மான்ஏறு, கலை, கருமான்.

**சூ**:— இரலை, வச்சயம், புல்வாய், கருமான்.

**க**:— இரலை, புல்வாய், கலை, ஏறு.

## புல்வாயின் பெயர்

**சே**:— இரலை, புல்வாய்.

**பி**:— இரலை, புல்வாய்.

**சூ**:— இரலை, புல்வாய்.

## கவரிமானின் பெயர்

**சே**:— மானமா, பட்டம், எகினம், அன்னம், கவரிமா.

பி:— எகினம், மானமா, பட்டம், கவரிமா.

தூ:— படகம், பட்டம், மானமா, எகின், கவரிமா.

க:— மானமா, பட்டம், எகினம், அன்னம், கவரி, கவையமா, மா, கானமா.

**மான் மயிர், மரை, குரங்கு, கருங்குரங்கு, பெண் குரங்கு, முசு, கீரி, இவற்றின் பெயர்.**

உலவிடுங் கவரிசா மரைசவரி மூன்றுமே
உறுகவரி மான்மயிர்ப்பேர்.
[1]உண்ணுகா னக்குதிரை யாவித மிரண்டுமே
ஒளியாத [2]மரையின் பெயர்.

வரிமுகம் [3]நிரந்திர மாங்கோடம் வானரம்
மந்திபில வங்கங்கவி
மற்கடங் கீசமரி யூகநா கங்கடு
வனவன்கோ கிலங்கானவன்

குலவுசா காமிருக மீரெட்டு நாமங்
குரங்குகா ருகம்யூகம்
கூறிய கருங்குரங் காமந்தி யூகமிரு
பேருமே பெண்குரங்காம்

கலைகள்வ னோரி[4]கோ லாங்கொல்மைம் முகங்கடி
கொண்முசு வைந்துபெயராம்.
[5]கலையவற் றன்னொன்றுங் தீரவங் கிலத்துடன்
காத்திரங் கீரியாமே! 10

1 உன்னுகா எனல் பொருந்தும்
2 மறை என்றுளது.
3 நிரந்தர மாங்கோடரம் எனல்வேண்டும்.
4 கோலாங்கூலம் எனல் வேண்டும்.
5 வரி சரியில்லை.

*உலவிடும் கவரி, சாமரை, சவரி, மூன்றுமே
உறு கவரிமான் மயிர் பேர்.
[1]உன்னு கானக்குதிரை, ஆவிதம் இரண்டுமே
ஒளியாத மரையின் பெயர்.
வலிமுகம், நிரந்தரம், கோடரம், வானரம்,
மந்தி, பிலவங்கம், கவி,
மற்கடம், கீசம், அரி, யூகம், நாகம்,
கடுவன் [2]அவன் கோகிலம், கானவன்,
குலவு சாகாமிருகம் ஈரெட்டு நாமம்
குரங்கு, காரூகம், யூகம்,
கூறிய கருங்குரங்காம். மந்தி, யூகம்
இருபேருமே பெண் குரங்காம்.
கலை, கள்வன், ஓரி, கோலாங்கூலம், மைம்முகம்,
கடிகொள் முசு ஐந்து பெயராம்.
கலை அவற்று ஒன்றாம், தீர்வை நகுலத்துடன்
காத்திரம் கீரி ஆமே! (104)

**மான்மயிரின் பெயர்**

**சே:—** சாமரை, கவரி, சவரி, சீகரம்.

**பி:—** சவரி, ஆகு, கவரி, சீகரம், சாமரம், வெண் மயிர்.

**சூ:—** சவரி, சீகரம், கவரி.

**மரையின் பெயர்**

**பி:—** ஆவிதம், கானக்குதிரை, மரை.

**குரங்கின் பெயர்**

**சே:—** அரி, கோகுலம், கடுவன், கோடரம், கவி, யூகம் மந்தி, மர்க்கடம், நிரந்தரம், வானரம், குரங்கு.

---

1 உண்ணு என்றுளது. 2—?

பி:— வலிமுகம், கவி, மர்க்கடம், அரி, வானரம், கோடரம், கீசகம், கோலம், பிலவங்கம், தோரணம், மந்தி, யூகம், நிரந்தரம், நாகம், குரங்கு.

சூ:— வலிமுகம், கடுவன், வானரம், அரி, மந்தி, பிலவங்கம், கோகிலம், கோடரம், யூகம், மர்க்கடம், நாகம், கவி, குரங்கு.

க:— மற்கடம், கவி, வானரம், கீசம், பிலவங்கம், பிலவகம், சாகாமிருகம், அரி, கோகிலம், நிரந்தரம், ஊகம், குரங்கு, வலிமுகம்.

### கருங்குரங்கின் பெயர்

சே:— காருகம், யூகம், கருங்குரங்கு.

பி:— காருகம், யூகம், கருங்குரங்கு.

சூ:— காருகம், யூகம், கருங்குரங்கு.

க:— கரியகுரங்கு, ஊகம்.

### பெண்குரங்கின் பெயர்

சே:— மந்தி, யூகம்.

பி:— மந்தி, யூகம்.

க:— மந்தி, ஊகம்.

### முசுவின் பெயர்

சே:— ஓரி, கலை, கடுவன் முசு.

பி:— ஓரி, கலை, கள்வன், முசு.

சூ:— ஓரி, கோலாங்கூலம், மைம்முகன், கள்வன், கலை, முசு.

க:— கலை, களவன், முசு, கோலாங்கூலம்.

## கீரியின் பெயர்.

சே:— நகுலம், காத்திரம், தீர்வை, கீரி.

பி:— நகுலம், காத்திரி, தீர்வை, கீரி.

சூ:— காத்திரி, நகுலம், தீர்வை.

க:— கீரி, நகுலம்.

## நரி, ஓரி, நாயி, ஆண்நாயி, பெண்நாயி, செந்நாயி, கழுதை, கோவேறு கழுதை இவற்றின் பெயர்.

[1]ஒண்டன்ச னுகையி கலன்சம்பு கொம்பை
[2]ஊளனே பூரிமாயு
யெரிசிறு காலன்கு ரோட்டுநரி நாமமொரு
பத்திகல னோரியின்பேர்
சண்டையிடு [3]ஞமலியெகி னன்புரோ கதிஞாளி
சாரமே யன்சுணங்கன்
சாத்துகுக் கன்பட்டி சூரன்சு வாபாசி
தன்முடுவல் [4]கொளிசுங்கன்
அண்டிய[5]நா ரரிகுரமு கனியக்கன் கூரனறு
மூன்றுநா யுச்சியும்
ஆண்முடுவ [6]லென்னும் பெண்ணாய்கொக் கண்டிகம்
செந்நாய் விருகமும்பேர்.
காண்டவா லேயம்வே சரிகத்த பங்கோகு
காளவாயத் திரிகரனுங்
[7]கழுதையாங் கோவேறு கழுதையத் திரியுடன்
கருதுவே சரியாகுமே!

---

1 ஓன்பசை என்றுளது. 2 வுளனே என்றுளது.
3 ஞமலியேகிண்ண புழோகிதநாளி என்றுளது.
4, 5 - ? 6 லென்றுமடு பன்னாய்கொக்கு முண்டு பகன் என்றுளது. 7 கழுதை யெலி யென்றுளது.

*ஓண்டன், சனுக்கை, இகலன், சம்பு, கொம்பை,
ஊளனே, பூரிமாயு.
எரி சிறுகாலன், குரோட்டு, நரி, நாமம் ஒரு
பத்து. இகலன் ஓரியின் பேர்.

சண்டையிடு ஞமலி, எகினன், புரோகதி, ஞாளி,
சாரமேயன், சுணங்கன்,
சாத்து, குக்கன், பட்டி, சூரன், சுவா, பாசி,
தன்முடுவல். கொளி, சுங்கன்,

அண்டிய [1]நராரி குரைமுகன், அக்கன், கூரன் அறு
மூன்றும் நாய். உச்சியும்
ஆண். முடுவல் எனும் பெண் நாய். கொக்கு,
செந்நாய்; விருகமும்பேர். [அண்டிசம்,

கண்ட வாலேயம், வேசரி, கத்தபம், கோகு,
காளவாய், அத்திரி, கரனும்
கழுதையாம். கோவேறுகழுதை அத்திரியுடன்
கருதுவேசரி ஆகுமே! (105)

### நரியின் பெயர்

**சே:—** இகலன், சம்பு, கோமாயு, நரி.

**பி:—** ஓரி, இகலன், ஊளன், சம்பு, செந்து, குரோட்டம், கோமாயு, சிறுகாலன், ஓண்டன், பூரிமாயு, நரி.

**சூ:—** ஓரி, கோமாயு, ஊளன், ஓண்டன், இலகன், சம்பு, (சம்புகம்),பூரிமாயன், குரோட்டா, சிறுகாலன், நரி.

**க:—** உள்ளன், சம்பு, நரி, பூரிகாயன், கோமாயு, ஓண்டன், குரோட்டா, இகலன்.

### ஓரியின் பெயர்

**சே :—** இகலன், ஓரி.

**பி :—** முதுநரி, ஓரி, இகலன், கோமாயு.

---

1 — ?

## நாயின் பெயர்

**சே:—** எகினன், சூரன், முடுவல், சுணங்கன், ஞமலி, குக்கன், ஞாளி, சுவா, நாய்.

**பி:—** ஞமலி, உச்சி, எகினம், குக்கன், கூரன், சூரன், சாரமேயன், சுனகன், புரோகதி, குரைமுகன், ஞாளி, சுணங்கள், முடுவல், பாட்டி, சுவா, பாசி, நாய்.

**சூ:—** சூரன், முடுவல், பாசி, புரோகதி, சுனகன், குக்கல், கூரன், எகினன், அக்கன், குரைமுகன், ஞமலி, ஞாளி, சாரமேயன், சுணங்கன், சுவா, நாய்.

**க:—** ஞாளி, சுணங்கன், சுவா, ஞமலி, எகினம், சூரன், சாரமேயம், முடுவல், சுணங்கன், நாய்,குக்கன்.

## ஆண் நாயின் பெயர்

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.

## பெண் நாயின் பெயர்

**சே:—** முடுவல்.

**பி:—** முடுவல்.

**சூ:—** முடுவல்.

## செந்நாயின் பெயர்

**பி:—** விருகம், கொக்கு, அண்டிகம், செந்நாய்.

**சூ:—** விருகம், கொக்கு, செந்நாய்.

## கழுதையின் பெயர்

**சே:—** கத்தபம், கோகு, வேசரி, கழுதை, அத்திரி, கரம், வாலேயம்.

பி:— வேசரி, கோகு, கரம், வாலேபம், காளவாய், கர்த்தபம், கழுதை.

சூ:— வாலேயம், கர்த்தபம், காளவாய், அத்திரி, கோகு, வேசரி, கரம், கழுதை.

க. கத்தபம், வேசரி, கோகு, வாலேபம், கழுதை.

**கோவேறு கழுதை**

பி:— வேசரி, அத்திரி, கோவேறு கழுதை.

சூ:— வேசரி, கோவேறு கழுதை.

## கத்தூரி, நாவி, முயல், பூனை, அணில், உடும்பு, பச்சோந்தி, பல்லி இவற்றின் பெயர்

**நானந்து ருக்கமொடு [1]மான்மத நரந்தமந்**
**நான்குபேர் கத்தூரியாம்**
**நாவியின் பெயர் [2]மறுவி யாஞ்சயம் [3]வயஞ்சசம்**
**நவிற்றுமொரு மூன்றுமுயலாம்**
**பூனையல வன்பவன மாற்சாலம் விடருகம்**
**பூச்சைபாக் கன்விலாளம்**
**பூசைமண் டலியொடு [4]பூனையிற் புலியாம்**
**[5]பொருந்தான்[6]வி லாளம்வெருகரம்**
**ஊனமில் வரிப்புறம் [7]இலுதைவெளி லணிலா**
**முடும்புதடி முசலிகோதா**
**வொருமூன்று மாமுசலி சாய்தனஞ் சரடி**
**யோத்திதண் டோதியோமா**

---

1 மனைமத என்றுளது. 2. மறுவனாஞ்சயம் என்றுளது. 3 வயஞ்சசம் என்றுளது. 4 இருமுறை பூனை வந்துளதால் பூஞை எனல்வேண்டும் 5 — ?. 6 இரண்டாம் முறை கூறப்பட்டுளது. 7 நிறுத்தை என்றுளது.

**னீனமிகு மொளிகோம்பி யொன்பதொடு தான்கா**
**மருபிபச் சோந்தியாகும்**
**இற்கோகி லங்கெவுளி புள்ளிபொரந் தொருநான்**
**கிசைத்தபெயர் பல்லியாமே!** 12

*நானம், துருக்கம், ஒடு மான்மதம், நரந்தம், அந்
நான்கு பெயர் கத்தூரியாம்.
நாவியின் பெயர் மறுவி ஆம். சயம், வயம், சசம்,
நவிற்றும் ஒரு மூன்றும் முயலாம்.

பூனை, அலவன், பவனம், மாற்சாலம், விடருகம்,
பூச்சை, பாக்கன், விலாளம்,
பூசை, மண்டலி, ஒடு பூஞை, இற்புலி, ஆம்.
[1]பொருந்தான், [2]விலாளம், வெருகு ஆம்.

ஊனம் இல் வரிப்புறம், இலுதை, வெளில் அணிலாம்.
உடும்பு தடி, முசலி, கோதா,
ஒரு மூன்றும் ஆம். முசலி, சாய்தனம், சரடி,
ஒத்தி, தண்டு, ஓதி, ஓமான்.

ஈனம் மிகும் ஓளி, கோம்பி, ஒன்பது ஒடு தான்
காமரூபி பச்சோந்தி ஆகும்.
இல்கோகிலம், கெவுளி, புள்ளி, பொந்து, ஒரு நான்கு
இசைத்த பெயர் பல்லியாமே! (106)

**கத்தூரியின் பெயர்**

**சே:**— மறுவி, நாவி, மான்மதம், துருக்கம், நரந்தம் நானம், மறுவல். கத்தூரி.

**பி:**— மான்மதம், துருக்கம், நரந்தம். நானம் கத்தூரி.

**சூ:**— துருக்கம், நானம், மான்மதம், நரந்தம், கத்தூரி.

**க:**— நானம், நரந்தம், கத்தூரி, மறி, துருக்கம்.

---

1—? 2 இரண்டாம் முறை வந்துளது.

### நாவியின் பெயர்

பி:— மறுவி, மிருகமதம், நாவி.

சூ:— மறுவி, நாவி.

### முயலின் பெயர்

சே:— சசம், முயல்.

பி:— சசம், வயம், முயல்.

சூ:— சசம், முயல்.

க:— வயம், சசம், முயல்.

### பூனையின் பெயர்

சே:— விலாளம், பவனம், வெருகு, விடருகம், பூசை, பாக்கன், மார்ச்சாலம், பூனை.

பி:— பூஞை, வெருகு, மண்டலி, இற்புலி, விலாளம், பவனம், ஓதி, மார்ச்சாலம், பாக்கன், பூசை, அலவன், விடருகம், பூனை.

சூ:— பூஞை, வெருகு, அலவன், ஓதி, (ஓது), விடாரகம், விலாளம், பூசை, மார்ச்சாலம், பாக்கன், இற்புலி, பூனை.

க:— பூசை, பூச்சை, விடருகம், பாக்கன், பவமாற்சாரம், பூஞை, (விலாளம், கடுவன், வெருகு).

### அணிலின் பெயர்

சே:— வெளில், அணில்.

பி:— வரிப்புறம், வெளில், இலுதை, அணில்.

சூ:— வரிப்புறம், வெளில், அணில்.

க:— அணில், வெளில்.

### உடும்பின் பெயர்

**சே:**— உடும்பு, முசலிகை, கோதா.

**பி:**— முசலிகை, கோதா, தடி, உடும்பு.

**சூ:**— தடி, முசலி, கோதா, உடும்பு.

**க:**— உடும்பு, முசலிகை, கோதா.

### பச்சோந்தியின் பெயர்

**சே:**— அண்டசம், ஓதி, சரடம், சாயானதம் ஓமான், தண்டு, ஓந்தி, பச்சோந்தி, காமரூபி.

**பி:**— கோம்பி, சரடம், சாயானதம், முசலி, ஓதி, தண்டு, ஓத்தி, மயிற்பகை, காமரூபி, ஓமான், ஓந்தி, பச்சோந்தி.

**சூ:**— சாயானதம், சரடம், காமரூபி, தண்டு, ஓமான், ஓதி, கோம்பி, முசலி, ஓத்தி, பச்சோந்தி.

**க:**— கோம்பி, தண்டு, சரடம், காமரூபி, முசலி, ஓந்தி.

### பல்லியின் பெயர்

**சே:**— புள்ளி, கௌளி, கோகிலம், பல்லி.

**பி:**— புள்ளி, கோகிலம், பொந்து, மனைக்கோள், பல்லி.

**சூ:**— புள்ளி, கெவுளி, கோகிலம், பல்லி.

## பாம்பு, சாரைப் பாம்பு, கருவழலைப் பாம்பு, மண்டலிப் பாம்பு, கண்குத்திப் பாம்பு, நாகம், பறவை நாகம், பெரும்பாம்பு ஆகியவற்றின் பெயர்

பன்னகம் பணியுரகம் நாகம் புயங்கமரி
பாந்தளர வகிகஞ்சுகி
பவனாச னங்கூட பதமாசு ணம்போகி
பரவுகா லிலிசக்கிரி
தன்னுடன் விடதரிக் காகோத ரங்காத்திரி
தந்தசூ கங்கட்செவி
சர்ப்பமரி தம்பிஞ்ச மங்கதங் கும்பீன
சம்வியா ளம்மராளம்
என்னுமெழு நான்குபெயர் பாம்புதுண் டத்துடனி
ராசலஞ் சாரையின்பேர்.
இராசமுட னந்தமாங் கருவளலை யின்பெயர்
ரியம்புமண் டலிகோளக
முன்னுகண் கொத்தியா மாலுதா சனநாக
மூற்கனாம் பறவைநாகம்
முதிர்குக்கு டச்சர்ப்ப மாம்பெரும் பாம்பாகு
மொழிமாசு ணம்பாந்தளே! 13

* பன்னகம், பணி, உரகம், நாகம், புயங்கம், அரி,
பாந்தள், அரவு, அகி, கஞ்சுகி,
பவனாசனம், கூடபதம், மாசுணம், போகி,
பரவு காலிலி, சக்கிரி,
தன்னுடன் விடதரி, காகோதரம், காத்திரி,
தந்தசூகம், கட்செவி,
சர்ப்பம், அரி, [1]தம்பிஞ்சம், அங்கதம், கும்பீனசம்,
வியாளம், மராளம்
என்னும் எழுநான்கு பெயர் பாம்பு. துண்டம் அத்து
இராசலம் சாரையின் பேர். [டன்

1 — ?

இராசமுடன் அந்தமாம் கருவழலையின் பெயர்.
இயம்பு மண்டலி கோளகம்.
உன்னு கண்கொத்தியாம் மாலுதாசனன். நாகம்
மூர்க்கனாம். பறவைநாகம்
முதிர் குக்குடச் சர்ப்பமாம். பெரும்பாம்பு ஆகும்
மொழி மாசுணம் பாந்தளே! (107)

**பாம்பின் பெயர்**

**சே:—** அரவு, நாகம், அங்கதம், புயங்கம், உரகம், பாந்தள், அரி, அகி, போகி, பன்னகம், கட்செவி, பணி, வியாளம், பாம்பு.

**பி:—** அரவு, கட்செவி, அங்கதம், வியாளம், உரகம், பன்னகம், நாகம், சர்ப்பம், அரி, மாசுணம், புயங்கம், பாந்தள், பணி, அகி, தந்தசூகம், போகி, விடதரம், கும்பிநசம், காகோதரம், மராளம், சக்கிரி, வாகுவவகதம், கூடபதம், பாம்பு.

**சூ:—** அரவு, கட்செவி, போகி, அகி, அரி, வியாளம், சர்ப்பம், உரகம், பன்னகம், நாகம், மாசுணம், சக்கிரி, புயங்கம், பாந்தள், அங்கதம், பணி, பாம்பு.

**க:—** மராளம், அரவு, புயங்கம், வியாளம், அரா, விடதரம், காத்திரம், காகோதரம், பணி, பன்னகம், அங்கதம், போகி, புயங்கம், பாந்தள், அகி, கும்பீனசம், கூடபதம், சர்ப்பம், மாசுணம், கட்செவி, கஞ்சுகி, நாகம், உரகம், அரி, சக்கிரி, வாதாசனம். தந்தசூசம்.

**சாரைப் பாம்பின் பெயர்**

**பி:—** துண்டம், இலஞ்சி, சாரைப்பாம்பு.

**சூ:—** துண்டம், இராசிலம், சாரைப்பாம்பு.

### கருவழலையின் பெயர்

சூ:— இராசமாநாகம், கருவழலை.

### மண்டலிப்பாம்பின் பெயர்

பி:— கோளகம், மண்டலி.

சூ:— கோளகம், மண்டலி.

### கண்குத்திப் பாம்பின் பெயர்

பி: — உதாசனன், கண்குத்தி.

சூ:— மாலுதாசன், கண்குத்தி,

### நாகத்தின் பெயர்

சூ:— மூர்க்கன், நாகம்.

### பறவை நாகத்தின் பெயர்

சூ:— குக்குட சர்ப்பம், பறவை நாகம்.

### பெரும்பாம்பின் பெயர்

சே:— பாந்தள், மாசுணம், பெரும்பாம்பு.

சூ:— மாசுணம், பாந்தள், பெரும்பாம்பு.

## பாம்பின் படம், படப்பொறி, பாம்பின் பல், நஞ்சு, நாக்கைப்பாம்பு, அட்டை, தேள், பெருச்சாளி, வெள்ளெலி இவற்றின் பெயர்

பைபண மிரண்டுமே பாம்பின் படம்படப்
பொறியுத்தி துத்தியாகும்
பன்னரிய தட்டமே நஞ்சுகால் பல்லாம்
பகர்ந்தகா ளங்கரளமே

வெய்யநீ லங்காள கூடங்க டுச்சிங்கி
விடமால காலத்துடன்
வீறுகள் ளங்காரி பத்துமே நஞ்சாம்
மிகுத்தபூ நாகநாங்கூ
[1]ளெய்திய விரண்டுநாக் கைப்பாம்பி னாமமா
மேற்றவுரு வட்டையின்பே
ரெண்ணியவி டந்தெறுக் கால்பற்ப லத்துட்ட
னிசையளிவி ருச்சிகமிவை
துய்யவிரு மூன்றுமே தேட்கடிக மூடிகந்
துந்துருவி [2]ருந்துரும்பன்
சொல்லாகு வைந்தும் பெருச்சாளி விருடந்
துலங்குவெள் ளெலியாகுமே! 14

*பை, பணம், இரண்டுமே பாம்பின் படம்.
படப்பொறி உத்தி, துத்தி ஆகும்.
பன்ன அரிய தட்டமே நஞ்சுகால் பல்லாம்.
பகர்ந்த காளம், கரளமே,
வெய்ய நீலம், காளகூடம், கடு, சிங்கி,
விடம், ஆலகாலத்துடன்,
வீறு [3]கள்ளம், காரி, பத்துமே நஞ்சாம்.
மிகுந்த பூநாகம், [4]நாங்கூழ்
எய்திய இரண்டும் நாக்கைப் பாம்பின் நாமமாம்.
ஏற்றஉரு அட்டையின் பேர்.
எண்ணிய[5] விடம், தெறுக்கால், பற்பலம், துட்டன்
இசையளி, விருச்சிகம் இவை

---

1 ழெய்திய எனல்வேண்டும்.
2 ருந்துருப்பின் என்றுளது.
3 —? 4 நாங்கூள் என்றுளது
5 நளிவீடம்.

துய்ய இரு மூன்றுமே தேள். கடிகம், மூடிகம்,
துந்துரு, [1]விருந்துரும்பன்,
சொல் ஆகு, ஐந்தும் பெருச்சாளி. விருடம்
துலங்கு வெள்ளெலியாமே! (108)

### பாம்பின் படத்தின் பெயர்

**சே:—** பை, பணம்.
**பி:—** பை, பணம்.
**சூ:—** பை, பணம்.

### படப்பொறியின் பெயர்

**சே:—** உத்தி, துத்தி, படப்பொறி.
**பி:—** உத்தி, துத்தி, படப்பொறி.
**சூ:—** உத்தி, துத்தி, படப்பொறி.
**க:—** துத்தி, உத்தி, படப்பொறி.

### பாம்பின் பல்லின் பெயர்

**பி:—** தட்டம்.
**சூ:—** தட்டம்.

### பாம்பின் நஞ்சின் பெயர்

**சே:—** கடு, ஆலம், காளகூடம், விடம், காளம், கரளம், காரி, நஞ்சு.

**பி:—** காளம், காரி, கரளம், நீலம், கரம், ஆலாலம், ஆலம், கடு, விடம், நஞ்சு.

**சூ:—** கரளம், ஆலம், காரி, கடு, காளம், சிங்கி, ஆலகாலம், விடம், நஞ்சு.

**க:—** மாகரளம், நீலம், கடுவிடம், ஆலாலம், காளம், கரம், ஆலம், காரி, நஞ்சு.

---

1 விருந்துருப்பன் என்றுளது.

## நாக்கைப்பாம்பின் பெயர்

பி:— பூநாகம், நாங்கூழ்.

சூ:— பூநாகம், நாங்கூழ்.

## அட்டையின் பெயர்

சே:— சளுகம், அட்டை.

பி:— உரு, சளுகம், அட்டை.

சூ:— உரு, அட்டை.

## தேளின் பெயர்

சே:— தெறுக்கால், பறப்பன், தேள், விரிச்சிகம், அலம்.

பி:— தேள், தெறுக்கால், விருச்சிகம், நளிவீடம், நளி, துட்டன், வீடமுள்.

சூ:— நளி, விடம், (நளிவிடம்), தெறுக்கால், துட்டன், விருச்சிகம்.

க:— தெறுக்கால், விரிச்சிகம், தேள்.

## பெருச்சாளியின் பெயர்

சே:— ஆகு, மூடிகம், பெருச்சாளி.

பி:— மூடிகம், களதம், உந்துரு, பெருச்சாளி.

சூ:— களதம், துந்துளம், ஆகு, மூடிகம், உந்துரு, பெருச்சாளி.

க:— ஆகு, மூடிகம், தொல்விருடம், இரும்பன்.

## வெள்ளெலி

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.

**எலி, அகழ்எலி, காரெலி, மூஞ்சூறு, மூட்டை, சிலந்தி, எறும்பு, கறையான், (இந்திர கோபம்) தம்பலப் புழு, புழு, உலண்டு, இவற்றின் பெயர்**

பாய்சிகரி யாகுவே யகளவ னிம்மூன்றும்
பகர்ந்தவக [1]ழெலிவிருப்பன்
பண்பார் கருப்பைகா [2]றெலிசுவவு சுண்டன்
பசுப்பில்சூ ரன்சுந்தரி
ஒயிலொரு மூன்றுமூஞ் சூறுமுட் டைப்பெய
ருரைத்திடுங் குடவனொன்றே
யுலூதிகா வாளியே யொள்ளியசி லம்பியிவை
யொருமூன்று மேசிலந்தி
ஆயசுலோ பம்பிலம் பீலிகங் கறையுரவி
யைந்துமே யூறெறும்பாம்
ஆளலே சிதலை செல்லென்ப கறையான்
பெயராந்தம் [3]பலப்புளுப்பே
ரேயிந்திர கோபமுதை யஞ்சோன மியான
மிவைநான்கு கிரிமிகீடம்
மிசைந்தபொட் டுப்புழுவி னாமமேபுழுவிலுலண்
டென்பர்கோற் புழுவாகுமே! 15

*பாய் சிகரி, ஆகுவே, அகளவன், [4]இம்மூன்றும்
பகர்ந்த அகழெலி [5]விருப்பன்.
பண்பார் கருப்பை காரெலி. சுவவு, சுண்டன்,
பசுப்பில் சூரன், சுந்தரி,
ஒயில் ஒரு [6]மூன்றும் மூஞ்சூறு. மூட்டைப் பெயர்
உரைத்திடும் கு வன் ஒன்றே.

---

1 ளெலிவிருப்பன் என்றுளது 2 றெலிசுவவு எனல் வேண்டும். 3 பலப்புழுப்பே எனல் வேண்டும்.
4 இம்மூன்றும் எலி எனல் வேண்டும்.
5 விருபன் எனல் பொருந்தும் 6 நான்கும் எனல் வேண்டும்.

உலூதி, காவானியே ஒள்ளிய சிலம்பி இவை
ஒரு மூன்றுமே சிலந்தி.
ஆய சுலோபம், பிலம், பீலிகம், கறை, உரவி,
ஐந்துமே ஊறு எறும்பாம்.
ஆளலே, சிதலை, செல் என்ப கறையான்
பெயராம். [1]தம்பலப்புழுப் பேரே
இந்திரகோபம், உதையம், சோனம், இயாலம்,
இவை நான்கு. கிருமி, கீடம்,
இசைந்த பொட்டு புழுவின் நாமமே. புழுவில்
என்பர் கோற்புழு ஆகுமே! [உலண்டு
(109)

### எலியின் பெயர்

சே:— சிகரி, இரும்பன், எலி.

பி:— சிகரி, எலி.

சூ:— சிகரி, ஆகு, இரும்பன், எலி.

க:— சிகரி, எலி, ஆகு.

### அகழெலியின் பெயர்

பி:— இரும்பன், அகழெலி.

க:— இரும்பன்.

### காரெலியின் பெயர்

சே:— கருப்பை, காரெலி.

பி:— கருப்பை, காரெலி.

சூ:— கருப்பை, காரெலி.

க:— கருப்பை, கரி.

---

1 தம்பலப்புளு என்றுளது.

**மூஞ்சூறின் பெயர்**

சே:— சுண்டன், சூரன், சுசுந்தரி, மூஞ்சூறு.

பி:— சூரன், சுண்டன், சுந்தரி, சுவவு, மூஞ்சூறு

சூ:— சுவவு, சுண்டன், சுசுந்தரி, மூஞ்சூறு.

க:— மூஞ்சூறு, சுந்தரி, சுண்டன், சூறன்.

**மூட்டை(ப்பூச்சி)யின் பெயர்**

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.

**சிலந்தியின் பெயர்**

சே:— சிலம்பி, உலூதை, சிலந்தி.

பி—· சிலம்பி, உலூதை, காவன், சிலந்தி.

சூ:— உலூதை, சிலம்பி, சிலந்தி.

க:— உலுதை, சிலம்பி, சிலந்தி.

**எறும்பின் பெயர்**

சே:— உறவி, எறும்பு.

பி:— உறவி, பிலஞ்சுலோபம், பிபீலிகை,எறும்பு.

சூ:— பிலஞ்சுலோபம், பிபீலிகை, எறும்பு.

க:— உறவி, எறும்பு, பிபீலிகை.

**கறையான் பெயர்**

சே:— சிதலை, யாழல், செல், கறையான்.

பி:— சிதலை, ஆழல், செல், கறையான்.

சூ:— செல், சிதலை, கறையான்.

க:— சிதலை, செல், ஆழல், கறையான்.

## இந்திர கோபம் (தம்பலப் புழு)

**சே:—** ஈயல், மூதா, இந்திரகோபம்.

**பி:—** ஈயல், மூதா, தம்பலம், இந்திரகோபம்.

**சூ:—** ஈயல், மூதா,(ஈயன் மூதா),இந்திரகோபம்.

## புழுவின் பெயர்

**சே:—** கிருமி, கீடம், புழு.

**பி:—** கீடம். பொட்டு, கிருமி, புழு.

**சூ:—** கிருமி, போட்டு, புழு.

**க:—** கீடம், கிருமி, புழு

## உலண்டின் பெயர்

**சே:—** கோற்புழு, கீடம், உலண்டு.

**பி:—** கோற்புழு, கீடம், உலண்டு.

**சூ:—** கீடம், கோற்புழு, உலண்டு.

## பசுவின் பொது, பெண் பசு, ஓரீற்றுப் பசு, பலவீற்றுப் பசு, மலட்டுப்பசு, குணமிலாப் பசு, தெய்வப் பசு, பாலூள பசு, நற்பசு, இவற்றின் பெயர்.

பெற்றங்கு டஞ்சுட்டு நிரையாவோ டான்பசுப்
பெருகுகோச் சுரபிதேனு
பேசுபத் தும்பொதுப் பெயர்கபிலை சுரைசுரபி
பெரியசே தாக்கோமளங்
குற்றமில் குரந்தேனு நாடிலோ ரேழுங்
குறித்திடும் பெண்பசுப்பேர்

கூறும்பு னிற்றாவு டன்கிட்டி யாகுங்
குலாவியவோ ரீற்றுப்பசு.
வற்சலமு டன்[1]கன்று வாசமிரு பெயருமே
வாய்த்தபல வீற்றுப்பசு.
வச்சைமல டுற்றபசு வாங்குணமி லாப்பசு
மன்னுசுதை யென்றுபெயராம்.
உற்றதே னுக்கபிலை தெய்வப்ப சுப்பெய
ராங்குபா லுளபசுப்பே
ரொப்பரிய பாசலாம் மருவுபத் தீரையென்ப
வொன்றுநற் பசுவாகுமே! 16

* பெற்றம், குடம், சுட்டு, நிரை, ஆ, ஓடு ஆன், பசு
பெருகு கோ, சுரபி, தேனு,
பேசு பத்தும் பொதுப்பெயர். கபிலை. சுரை,
பெரிய சேதா கோமளம், (சுரபி,
குற்றம்இல் குரம், தேனு, நாடில் ஓர் ஏழும்
குறித்திடும் பெண்பசுப்பேர்.
கூறும் புனிற்றா உடன் கிட்டிஆகும்
குலாவிய ஓர்ஈற்றுப்பசு.
வற்சலம் உடன் கன்னவற்சம் இரு பெயருமே
வாய்ந்த பலஈற்றுப்பசு.
வச்சைமலடு உற்ற பசுஆம். குணமிலாப்பசு
மன்னு சுதைஎன்று பெயராம்.
உற்ற தேனு, கபிலை, தெய்வப் பசுப்பெயர்.
ஆங்கு பாலுள பசுப்பேர்
ஒப்பரிய பாசலாம். மருவு பத்திரை என்ப
ஒன்று நற்பசு ஆகுமே! (110)

---

1. கன்ன வற்சம் எனல்வேண்டும்.

### பசுவின் பொதுப்பெயர்

**சே**:— ஆ, பெற்றம், பசு, ஆன், கோ, குரால், தேனு.

**பி**:— கோ, பெற்றம், நிரை, சூடம், சுட்டு, தேனு, சுரை, பத்திரை, கபிலை, சேதா, ஆ, சுரபி, ஆன், பசு.

**சூ**:— கூலம், கோ, சூடம், சுரபி, ஆ, நிரை, தேனு, பெற்றம், பசு.

**க**:— குடம், சூட்டு, ஆன், பசு, பெற்றம், கோ, ஆ.

### பெண்பசுவின் பெயர்

**சே**:— சுரபி, தேனு, சுரை, கபிலை, சேதா, குரம், கோமளம்.

**க**:— சுரபி, கபிலை, சுரை, தேனு, கோமளம்.

### ஓரீற்றுப் பசுவின் பெயர்

**பி**:— கிட்டி.

**சூ**:— கிட்டி.

### பலவீற்றுப் பசுவின் பெயர்

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.

### மலட்டுப் பசுவின் பெயர்

**பி**:— வற்சை.

**சூ**:— வசை.

### குணமிலாப் பசுவின் பெயர்

**பி**:— சுதை.

### தெய்வப் பசுவின் பெயர்

**பி**:— தேனு, கபிலை.

**சூ**:— கபிலை, தேனு.

### பாலுள பசுவின் பெயர்

*இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.*

### நற்பசுவின் பெயர்

*பி:— பத்திரை.*

*சூ:— பத்திரை.*

## எருது, இடபம், பொதி எருது, பேர் எருது, எருதின் முரிப்பு, எருதின் கூட்டம், சேங் கன்று இவற்றின் பெயர்.

பாறல்புல் லங்கொண்டை செவிடையிறால் பூணில்
பாண்டில்பெற் றங்கொட்டியம்
பகருமூரி தகளையா னேறுகோ பதிபூண்டில்
பதினைந்து பெயருமெருதாம்.
ஏறுநறை கூளியக் கம்புங்க வங்குத்த
மெழில்வையம் நந்தியெட்டு
மிடபமாங் கொட்டியந் தூர்வகந் துரியமுன்
றிவைபொதி யெருத்தின் பெயர்.
வீறுடைய தூரியம் [1]பகடுபோத் தெருதாம்
விளங்குகுடி மிடலக்குடன்
வீங்குதிமில் நான்குமேற் றின்றிரள் முரிப்பாம்
விளம்பரிய நிரையின்முடன்
கூறுகா லேயந்தே னுக்காவி கோதனங்
கொட்டமேழ் கூட்டமாகும்
கொற்றிவசு வற்சலந் தன்னமோ டகனமிவை
[2]கொக்கன்றி னாமமாமே! 17

---

1 பகடுபே ரெருதாம் எனல்வேண்டும்.

2 சேங்கன்றின் எனல்வேண்டும்.

*பாறல், புல்லம், கொண்டை, செவிடை, இறால், பூணில்,
பாண்டில், பெற்றம், கொட்டியம்,
பகரும் மூரி, தகளை, ஆனேறு, கோ, பதி, பூண்டில்
பதினைந்து பெயரும் எருதாம்.
ஏறு, நறை, கூளி, அக்கம், புங்கவம், குத்தம்,
எழில் வையம், நந்தி எட்டும்
இடபமாம் கொட்டியம், தூர்வகம், தூரியம்
இவை பொதி எருத்தின் பெயர். [மூன்று
வீறுடைய தூரியம் [1]பகடுபேர் எருதாம்.
விளங்கு குடி, மிடல், அக்கு உடன்
வீங்கு திமில் நான்கும் ஏற்றின் திரள்முரிப்பாம்.
விளம்ப அரிய நிறையினம் உடன்
கூறுகாலேயம், தேனு, காவி, கோதனம்,
கொட்டம் ஏழ் கூட்டமாகும்.
கொற்றி, வசு, வற்சலம், தன்னம், ஓடு அகனம் இவை
சேங்கன்றின் நாமமாமே! (111)

### எருதின் பெயர்

**சே**:— பாறல், புல்லம், பாண்டில், பசு, முரி, ஏறு, பூணி, இறால், பெற்றம், எருது, சே, விடை, இடபம், போத்து.

**பி**:— பாறல், சே, விடை, பாண்டில், பெற்றம், பூணி, குண்டை, புல்லம், காளை, இறால், கொட்டியம், மூரி, எருது.

**சூ**:— பாறல், சே, பெற்றம், பூணி, பாண்டில், கொட்டியம், இறாம், ஏறு, மூரி, புல்லம், எருது.

---

1 பகடுபோத்தெருதாம் என்றுளது.

சூ:— சே, விடை, பூணி, மூரி, இடபம், புல்லம். இறால், பாண்டில், கோபதி, புங்கவம், ஏறு, எருது.

### இடபத்தின் பெயர்

பி:— ஏறு, குத்தம், விடபம், கூளி, நந்தி, உக்கம், இடபம்.

சூ:— ஏறு, உக்கம், நரை, [1]கந்தி, கூளி.

### பொதி எருதின் பெயர்

பி:— தூரியம், தூர்வகம்

சூ:— தூர்வகம், தூரியம்.

### பேரெருதின் பெயர்

பி:— பகடு, தூரியம், பாறல்.

சூ:— பாறல், பகடு, தூர்வகம்.

### எருதின் முரிப்பின் பெயர்

பி:— இமில்.

சூ:— இமில்.

### எருதின் கூட்டத்தின் பெயர்

பி:— காலி, நிரை, தொறு, கதுப்பு, காலேயம்.
சூ:— நிறை, தொறு, காலி, கோட்டம், காலேயம்.

### சேங்கன்றின் பெயர்

பி:— தள்ளம், வற்சம், தளம்.

சூ:— வற்சம்.

---

1 நந்தி எனல் வேண்டும்.

## பசுவின் முலை, முலைமடி, எருமை, எருமையாண், மலட்டெருமை, காட்டா, ஆட்டின் பொது இவற்றின் பெயர்.

சுரையாவின் முலையாஞ் செருத்தமா பீனஞ்
சுரப்புடைய மடியின்பெயர்
தோராத மேனமயி டங்கவரி சாத்தாத்
துலங்குகா ரான்சயிரியங்
[1]தெரிகரா சங்கடமை மூரியொன் பதுமெருமை
திகழ்பூணி பகடுபோத்துச்
சேர்ந்தமூன் றுங்கடா மைமைமல டாமினி
செப்பிலா மாக்கவையமே
யுரைகொள்காட் டாப்பெயர் மறிமைகொறி தகர்கிடா
யுதள்வரிடை கொச்சைமேடம்
உடுவேசெம் மறி[2]பிள்ளை வெள்ளையரு ணம்புருவை
யொடுமொத்தை யசைமேழகம்
துரிவைசா கஞ்சகஞ் சாகளம் வற்காலி
துள்ளல்யமை [3]யைந்துமே
சொற்றவாட் டின்பொதுப் பெயரிவற் றின்பகுதி
தோன்றிடச் சொல்லுவோமே! 18

*சுரை ஆவின் முலையாம். செருத்தம் ஆபீனம்
சுரப்புடைய மடியின் பெயர்.
தோராத் மேயினம், மயிடம், கவரி, சாத்தா,
துலங்கு காரான், சயிரியம்,
தெரி [4]கராசம், [5]கடமை, மூரி ஒன்பதும் எருமை.
திகழ் பூணி, பகடு, போத்து,
சேர்ந்த மூன்றும் கடா. மைமை மலடாம். இனி
செப்பில் ஆமா, கவையமே

---

1 தெரிகரா சங்கடமை—? 2 பள்ளை எனல்வேண்டும்.
3 யையைந்துமே எனல்வேண்டும். 4, 5—?

உரைகொள், காட்டாப் பெயர். மறி, மை, கொறி,
தகர், கிடா
உதள், வரிடை, கொச்சை, மேடம்,
உடுவே, செம்மறி, [1]பள்ளை, வெள்ளை, அருமை,
புருவை
ஒடு மொத்தை, அசை, மேழகம்,
துரிவை, சாகம், சகம், சாகளம், வற்காலி,
துள்ளல், அமை, [2]ஐயைந்துமே
சொற்ற ஆட்டின் பொதுப்பெயர். இவற்றின்
பகுதி
தோன்றிடச் சொல்லுவோமே! (112)

**பசுவின் முலை**

**பி**:— சுரை.

**சூ**:— சுரை.

**முலைமடியின் பெயர்**

**பி**:— செருத்தல், ஆபீனம்.

**சூ**:— செருத்தல், ஆபீனம்.

**எருமையின் பெயர்**

**சே**:— மேதி, காரான், மகிடம், கவரி, எருமை.

**பி**:— காரான், மகிடம், கவரி, காரா, காசா, சைரிபம், வடவை, கயவாய், மேதி, மூரி, எருமை.

**சூ**:— காரான், வடவை, மேதி, சைரிபம், கவரி, காரா, மூரி, மகிடம், எருமை.

**க**:— எருமை, காரான், மேதி, காரசம், மயிடம், கவரி.

**ஆண் எருமையின் பெயர்**

**சே**:— பகடு, கடா.

**பி**:— பகடு, கடா, போத்து.

---

1 பிள்ளை என்றுளது. 2 ஐந்துமே என்றுளது.

சூ:— கடா, பகடு.

க:— பகடு, கடா

### மலட்டெருமையின் பெயர்

சே:— மைம்மை.

பி:— மைமை.

சூ:— மை.

க:— மலடு, மைம்மை.

### காட்டாவின் பெயர்

சே:— ஆமா, கவயம், காட்டா.

பி:— ஆமா. கவையமா, காட்டுஆ.

சூ:— கவயமா, ஆமா, காட்டா.

க: – கவையமா, ஆமா, கானமா.

### ஆட்டின் பொதுப்பெயர்

சே: – மறி, உதள், மோத்தை, மேழகம், வருடை, கொறியே, தகர், கடா, கொச்சை, மேடம், துருவை, செம்மறி, பள்ளை, வெள்ளை, புருவை, வற்காலி, மை, ஆடு.

பி:— அருணம், கொச்சை, துருவை, மேழகம், அசம். உதள், துள்ளல், மறி, மை, வெறி, கொறி, புருவை, சாகம், ஆடு.

சூ:— அருணம், செம்மறி, மோத்தை, அசம், உதள், உடு, கொச்சை, துருவை, ஏழகம், வற்காலி, துள்ளல், பள்ளை, வெள்ளை, வருடை, மேடம், கடா, மை, மறி, வெறி, கொறி, சாகம், புருவை, தகர், ஆடு.

க:— துருவை, பிரமம், கொறி, அசம், மை, துரு, செம்மறி, ஏழகம், மேழகம், தகர், உதள், செச்சை, மோத்தை, மறி, புருவை, சகம், சாகளம், சாகம், வெள்ளை, கொச்சை, வற்காலி, வெள்ளாடு.

**செம்மறியாடு, செம்மறியாண் ஆடு, வெள்ளாடு, வெள்ளாட்டின் ஆண், வெள்ளாட்டு மறி, வரையாடு, ஆட்டுக்குட்டி, ஆடு கட்டும் கயறு, பட்டி, இவற்றின் பெயர்.**

செம்மறிப் பெயர்துரிவை மறிமைகொறி துறுவாடு
திகழுருப் பிரமாறுமாந்
திண்ணகந் தகர்கிடா [1]யேளகம் மேளகஞ்
செம்பளமோ ராறுமவ்வாண்
[2]மெம்மருவு சாகளங் கொற்சைவற் காலிசகம்
வெள்ளைசா கம்வெள்ளாடு
வினவிலா [3]றெய்வவா ணச்சைசா கங்கொச்சை
மேவுமுதள் மொத்தையைந்தாம்
இம்மறிப் பெயர்வெள்ளை வருடைசர பம்பக
ரிரண்டும்வரை யாட்டின்பெயர்
எழிலான பள்ளைசா ளமுமாங் குட்டிக்கி
டும்பொதுப் பெயருரைக்கிற்
கைம்மருவு சோரன்மறி பறள்குட்ட னான்குமாங்
கருதுதாம் பேதாமணிக்
கயறுதோ ளந்தொளுவம் வேலியா னிலையெனக்
கண்டபெயர் பட்டியாமே! 19

*செம்மறிப்பெயர் துரிவை, மறி, கொறி, துருவாடு,
திகழ் உரு, பிரம் ஆறும் ஆம்.
திண்ணகம், தகர், கிடா ஏழகம், மேழகம்,
செம்பளம் ஓர் ஆறும் அவ் ஆண்.
மெம்மருவு சாகளம், கொற்சை, வற்காலி, சகம்,
வெள்ளை, சாகம், வெள்ளாடு,

---

1 ஏழகம் மெழகம் எனல்வேண்டும்.
2 டும்மருவு போலும் உளது. 3—?

விளவில் ஆல் தெய்வ ஆண் அச்சை, சாகம்,
கொச்சை,
மேவும் உதள், மொத்தை ஐந்தாம்.
இம் மறிப்பெயர் வெள்ளை, வருடை, சரபம், பகர்
இரண்டு வரையாட்டின் பெயர்;
எழிலான பள்ளை சாகளமும் ஆம். குட்டிக்கு
இடும் பொதுப்பெயர் உரைக்கில்
கை மருவும் சோரன், மறு, பறழ். குட்டன் நான்கும்
கருது தாம்பே தாமணிக் கயறு. [ஆம்
தோளம், தொழுவம், வேலி, ஆனிலை எனக்
கண்ட பெயர் பட்டி ஆமே! (113)

### செம்மறியாட்டின் பெயர்

**சே**:— துருவை, கொறி, மை.

**பி**:— (உதள், கொறி, துருவை, ஒருவு, புருவை, அருணம், மேடம்.) துருவை, கொறி, மை.

**சூ**:— துருவை, மை, கொறி.

**க**:— துருவை, பிரமம், கொறி, அசம், மை, துரு, செம்மறி.

### செம்மறியாட்டின் ஆண் பெயர்

**சே**:— ஏழகம், தகர், மேழகம், கடா.

**பி**:— மேழகம், கம்பளம், தகர், திண்ணகம், ஏழகம், கடா.

**சூ**:— தகர், கடா, திண்ணகம், ஏழகம், கம்பளம்.

**க**:— கடா, ஏழகம், மேழகம், தகர்.

### வெள்ளாட்டின் பெயர்

**சே:**— வெள்ளை, வற்காலி, மை, கொச்சை.

**பி**:— வெள்ளை, வற்காலி, கொச்சை.

**சூ**:— வெள்ளை, வற்காலி, கொச்சை.

**க**:— வெள்ளை, கொச்சை, வற்காலி, வெள்ளாடு.

### வெள்ளாட்டின் ஆணின் பெயர்

**சே**:— உதள், செச்சை, மோத்தை

**பி**:— மேடம், செச்சை, சாகம், மோத்தை, அசம், மை, கடா.

**சூ**:— செச்சை, சாகம், மோத்தை.

**க**:— உதள், செச்சை, மோத்தை.

### வெள்ளாட்டு மறியின் பெயர்

**பி**:— வெள்ளை.

**சூ**:— வெள்ளை.

**க**:— (மறியே மிக்க புருவை சகஞ்சா களஞ்சாகம்)

### வரையாட்டின் பெயர்

**சே**:— வருடை, சரபம், வரையாடு.

**பி**:— வருடை, சரபம், வரையாடு.

**சூ**:— சரபம், வருடை

**க**:— வரையாடு, சரபம், வருடை.

### ஆட்டுக்குட்டியின் பெயர்

**சே**:— குட்டன், சோரன், மணங்கு, மறி, பறழ்.

**பி**:— குட்டன், சோரன், மறி, பறழ்.

சூ:— குட்டன், சோரன், மறி, பறழ்.

க:— (மறி, புருவை, சகம், சரிகளம், சாகம்.)

**ஆடுகட்டும் கயிற்றின் பெயர்**

சூ:— தாமணி, தாம்பு.

**ஆடுகட்டும் பட்டியின் பெயர்**

*இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.*

## பால், தயிர், மோர், வெண்ணெய், நெய், தயிர்கடைத்தறி, தயிர்மத்து, சாணம், இவற்றின் பெயர்.

அமுதம்ப யம்பயசு கீரமின் னான்குமே
அன்புடைய பாலின்பெயர்
அளை[1] மொழை ததிபெரு கெனச்சொன்ன நான்குமே
அழகுகூர் தயிரின்பெயர்
கமழுமச் சிகையளை[2] யருப்புமுசிர் தக்கிரங்
[3]கலாசை மதிதமோர்பேர்.
கவினமே யவ்வியந் தனதாகவ நீதங்
கடைந்திட்ட வெண்ணெய்ப்பெயர்.
சுமையரே யங்கிருத மாச்சியந் துப்பவி.
[4]தணிந்தமிழு துச்சேரவே
தக்கவெழு பெயருமே நெய்தயிர் கடைந்திடுந்
தறிவெளி லெனும்[5] பெயருமே
நிமிர்கின்ற தயிர்மத்து மத்தமா முளையும்
முளியும் நிகழ்த்துமப்பேர்.
நெறிகொள்புண் ணியசாந்த மென்னுமொரு
பெயருமே
நீதியுள சாணமாமே! 20

---

1 மெழத்தி என்றுளது.
2 யருப்பமுசிர் எனல் வேண்டும்.
3 காலசேயம் எனல் வேண்டும்.
4 தணிந்தவிழுது எனல் வேண்டும்.
5 பெயராமே எனல் பொருந்தும்.

*அமுதம், பயம், பயசு, கீரம், இந் நான்குமே
அன்புடைய பாலின் பெயர்.
அளை, [1]பெழை, ததி, பெருகு எனச் சொன்ன
அழகுகூர் தயிரின் பெயர் [நான்குமே
கமழும் மச்சிகை. அளை, [2]அருப்பம், முசிர், தக்கிரம்,
[3]காலசேயம், மதிதம், மோர், பெயர்.
கவினமே. அவ்வியம், தனதம், நவநீதம்,
கடைந்திட்ட வெண்ணெய்ப்பெயர்.
சமையம், நேயம், கிருதம். ஆச்சியம் துப்பு. அவி,
[4]தணிந்த இழுதும் சேரவே
தக்க எழு பெயருமே நெய். தயிர் கடைந்திடும்
தறி வெளில் எனும் பெயராமே
நிமிர்கின்ற தயிர்மத்து மத்தாம். முளையும்
முளியும் நிகழ்த்தும் அப்பேர்.
நெறிகொள் புண்ணியசாந்தம் என்னும் ஒரு பெயருமே
நீதியுள சாணம் ஆகுமே! (114)

**பாலின் பெயர்**

**சே**:— பயம், கீரம், அமுதம், பால்.

**பி**:— பயசு, கீரம், அமிழ்து, பயம், பால்.

**நி**:— அமிழ்து, கீரம், பயசு, துத்தம், பயம், பால்.

**க**:— பால், அமுது, பயம், கீரம்.

**தயிரின் பெயர்**

**சே**:— ததி, அளை, தயிர்.

**பி**:— ததி, அளை, பெருகு, தயிர்.

---

1 மெழத்தி என்றுளது 2 அருப்பு என்றுளது.
3 காலாசை என்றுளது 4 தணிந்தமிழுதும் என்றுளது.

சூ:— ததி, பெருகு, தயிர்.

க:— தயிர், அளை, ததி.

**மோரின் பெயர்**

சே:— முசர் தக்கிரம், மோர்.

பி:— மதிதம், தக்கிரம், காலசேயம், அருப்பம், அளை, முசர் மச்சிகை, மோர்.

சூ:— தக்கிரம், காலசேயம், மதிதம், அளை, அருப்பம், மச்சிகை, முசர், மோர்.

க:— மோர், முசர், தக்கிரம்.

**வெண்ணெயின் பெயர்**

சே:— ஐயங்கவீனம், நவநீதம், வெண்ணெய்.

பி:— ஐயங்கவீனம், நவநீதம், வெண்ணெய்.

சூ:— ஐயங்கவீனம், நவநீதம், வெண்ணெய்.

**நெய்யின் பெயர்**

சே:— இழுது, கிருதம், ஆச்சியம், நெய்.

பி:— ஆதிரம், கிருதம், ஆச்சியம், இழுது. நேயம், துப்பு, அவி, ஆகாரம், நெய்.

சூ:— கிருதம், நேயம், இழுது, ஆச்சியம், துப்பு, நெய்.

க:— நெய், துய்ப்பு, விழுது, கிருதம், நேயம்.

### தயிர்கடை தறியின் பெயர்

சே:— வெளில்.

பி:— வெளில்.

தூ:— வெளில்

### தயிர்கடை மத்தின் பெயர்

பி:— மத்து, தயிர்க்கோல்.

தூ:— மத்தம்.

### சாணத்தின் பெயர்

சே:— சாணி, புண்ணியசாந்தம்.

பி:— சாணி, புண்ணியசாந்தம், சாணாகம்.

தூ:— புண்ணிய சாந்தம், சாணி.

## விலங்கின் கூட்டம், கொம்பிலா விலங்கு, கொம்பு, வால், வாலின் கீழிடம், தோல், கொழுப்பு இவற்றின் பெயர்

தேடிய கணங்குலஞ் சாலமே யூகம்
வியூகம் விருத்தமாறுந்
திரள்விலங் கின்பெயர் குமரமே கொம்பிலாத்
திரமுள விலங்கின்பெயர்
[1]கோடுசிரு கம்விசா ணம்வயிர மருப்புலவை
யாம்பல்கொம் பிரலையும்பேர்,
கூலம்வா லுதிதோகை வேசகங் கடையிலாங்
கூலம்வா லாறேபெயர்.

---

1 கோடுசிருங் எனல்வேண்டும்.

**கேடில்வெரு கந்தட்டு வாற்கீழி டப்பெயர்**
**கிளர்த்தரிய புரணி பச்சை**
**கிருத்திமம் போர்வையுரி தொக்குத்து [1]ருத்தியதள்**
**கிடையாத வொலியல்சருமங்**
**கூடியது வக்குரிவை பிளிறுவட கந்தோல்**
**குறித்தபதி னான்குபெயராம்**
**கோளம்வி ழுக்குவிள ரிருளுநிண மைந்துபெயர்**
**கொண்டது கொழுப்பாகுமே! 21**

*தேடிய கணம், குலம், சாலம் ஏ, யூகம்
வியூகம், விருந்தம் ஆறும்
திரள் விலங்கின் பெயர். குமரமே கொம்பிலாத்
திரமுள விலங்கின் பெயர்.
கோடு, [2]சிருங்கம், [3]விசானம், வயிரம், மருப்பு, உலவை,
ஆம்பல், கொம்பு, இரலை ஆம்.
கூலம், வாலுதி, தோகை, வேசகம், கடை,
இலாங்கூலம், வால், ஆறே பெயர்.
கேடு இல் வெருகம் தட்டு வால்கீழிடப் பெயர்.
கிளர்த்த அரிய புரணி, பச்சை
கிருத்திமம், போர்வை, உரி, தொக்கு, துருத்தி,
கிடையாத வொலியல், சருமம், (அதள்,
கூடிய துவக்கு, உரிவை, பிளிறு, வடகம், தோல்
குறித்த பதினான்கு பெயராம்.
கோளம், விழுக்கு, விளர், இருளும், நிணம் ஐந்து
கொண்டது கொழுப்பு ஆகுமே! (பெயர்
(115)

**விலங்கின் கூட்டத்தின் பெயர்**

**சே:—** கணம், சாலம், வியூகம், குலம், விருந்தம், கூட்டம்.

---

1 ரித்தியதள் என்றுளது.
2 சிருகம் என்றுளது. 3. விடாணம் போலும்.

**பி.**— சாலம், வியூகம், யூதம், விருந்தம், குலம், கணம்.

**சூ:**— சாலம், வியூகம், யூதம், குலம், விருந்தம், கணம்.

**க:**— சாலம், விருந்தம், வியூகம், கணம் குலம், கூட்டம், குழுத்திரள், யூதம்.

**கொம்பிலா விலங்கின் பெயர்**

**பி:**— குமரம்.

**சூ:**— குமரம்.

**கொம்பின் பெயர்**

**சே:**— கோடு, மருப்பு, உலவை, கொம்பு, இரலை, ஆம்பல், வயிர்.

**பி:**— கோடு, இரலை, வயிர், ஆம்பல்.

**சூ:**— மருப்பு, சிருங்கம், கோடு, உலவை, விடாணம்.,

**க:**— கோடு, மருப்பு, உலவை, கொம்பு.

**வாலின் பெயர்**

**சே:**— வாலதி, தோகை, கூலம், இலாங்கூலம், வாலுறுப்பு.

**பி:**— தோகை, வாலதி, கூலம், வேசகம், இலாங்கூலம்.

**சூ:**— கூலம், வேசகம், தோகை, இலாங்கூலம் வாலதி.

**க:**— வால், வாலதி, கூலம், தோகை.

**வாலின் கீழிடத்தின் பெயர்**

**சே:**— வெருகம்.

**பி:**— வெருகம்.

சூ:— வெருகம்.

க:— வெருகம்.

### தோலின் பெயர்

சே:— வடகம், கிருத்திமம், சருமம், துவக்கு, பச்சை, புறணி. உரி, போர்வை, அதள், துருத்தி, தோல்.

பி:— சருமம். கிருத்திமம், வடகம், துவக்கு, உரிவை, உரி, அதள், புறணி, பச்சை, துருத்தி, தோல்.

சூ:— கிருத்தி, புறணி, போர்வை, அதள், ஒலியல், தொக்கு, துருத்தி, சருமம், பச்சை, துவக்கு, உரி. வடகம், தோல்.

க:— துவக்கு, அதள், உரிவை, உரி, கத்திமம். தோல், வடகம், துருத்தி, பச்சை, புறணி, சருமம்.

### கொழுப்பின் பெயர்

சே:— நெய், இழுது, விழுக்கு, நிணம், கொழுப்பு,

சூ:— நிணம், விளர், விழுக்கு, கொழுப்பு.

க:— நிணம், நேயம், இழுது, விழுக்கு.

### ஊன், ஆவின் இறைச்சி, உதிரம், மூளை, நரம்பு, ஈரல், குடல், மாசு, உள்மாசு, வழும்பு, மூடை இவற்றின் பெயர்

**புண்புலால் புலவுதசை தடிதூவு வள்ளூரம்**
**புளிதம்வி டக்கிறைச்சி**
**[1]புரளிபிசி தம்பன்னி ரண்டுமூன் வள்ளூரம்**
**புகலுமா வின்னி(றை)றச்சி**

---

1 புறணி எனல்வேண்டும்.

திண்குருதி சுடுவனெய்த் தோர் சோணிதஞ்
சென்னீர்புண் ணீர்புலால்நீர்
செம்பாலி ரத்தநீ ரெருவைகறை யாமஞ்
சிறந்தகீ லாலமீரேழ்
நண்புடைய வுதிரமாம் மூளையே மச்சையாம்
[1]நாடுசிரை மேதை முப்பேர்
நரம்பீரு ளீரலாம் புடர்கான லிருவகையு
நண்ணுமே குடலின்பெயர்
ஓண்சினைக ருப்பீள் கருப்பமே வயாவுசூ
லுருப்புமல [2]மாசும்பலம்
உள்ளின்மா சாம்வழும் பேவழுக் காம்பூதி
[3]யுளத்தல்தசை புலவுமுடையே! 22

*புண், புலால், புலவு, தசை, தடி, தூவு, வள்ளூரம்,
புளிதம், விடக்கு, இறைச்சி,
[4]புறணி, பிசிதம் பன்னிரண்டும் ஊன் வள்ளூரம்
புகலும் ஆவின் இறைச்சி.
திண் குருதி, சுடுவன், நெய்த்தோர், சோரி, சோணிதம்,
செந்நீர். புண்ணீர், புலால்நீர்,
செம்பால், இரத்தநீர், எருவை, கறை, யாமம்,
சிறந்த கீலாலம் ஈரேழ்
நண்புஉடைய உதிரமாம். மூளையே மச்சை ஆம்.
[5]நாடி, சிரை, மேதை முப்பேர்
நரம்பு. ஈருள் ஈரலாம்.புடர்,கானல்,இருவகையும்
நண்ணுமே குடலின் பெயர்.
ஒண் சினை, கரு, பீள், கருப்பமே, வயாவு, சூல்.
உருப்பு மலம் மாசு. உபமலம்
உள்ளின்மாசு ஆம். வழும்பே வழுக்காம் பூதி,
ஊழ்த்தல், தசை, புலவு முடையே! (116)

1 நாடிசிரை எனல்வேண்டும். 2 மாசுபமலம் எனல் வேண்டும். 3 யூழ்த்தல் எனல்வேண்டும்
4 புரளி என்றுளது. 5 நாடு என்றுளது.

### ஊனின் பெயர்

**சே**:— தசை, தடி, விடக்கு, தூ, வள்ளூரம், பிசிதம், புலால், புண், புலவு, ஊன்.

**பி**:— இறைச்சி, ஊழ்த்தல், தசை, தடி, ஊன், வள்ளூரம், பிசிதம், விடக்கு, ஊன்,விடக்கு, தூ, பூழ்தி.

**சூ**:— தசை, புலால், புலவு, புண், தடி, புளிதம், தூ, பிசிதம், வள்ளூரம், விடக்கு, ஊன்.

**க**:— வள்ளூரம், பிசிதம், புறணி, புலால், புலவு, தூ, தடி, தசை, ஊன், விடக்கு.

### ஆவின் இறைச்சியின் பெயர்

**சே** :— வள்ளூரம்.

**பி**:— வள்ளூரம்

**சூ**:— வள்ளூரம்

### உதிரத்தின் பெயர்

**சே**:— எருவை, செந்நீர், இரத்தம், புண்ணீர், குருதி, சோரி, நெய்த்தோர்,சுடுவல்,கறை,சோணிதம், உதிரம்.

**பி**:— இரத்தம், செந்நீர், குருதி, சோரி, எருவை, புண்ணீர், சோணிதம், கறை, சுடுவன், உதிரம்.

**சூ**:— இரத்தம், எருவை, நெய்த்தோர், சோரி, உதிரம், புண்ணீர், குருதி, செம்பால், புலாணீர், சோணிதம், செந்நீர், சுடுவன், கறை.

**க**:— செந்நீர், எருவை, சுடுவன், கறை, சோரி, புண்ணீர், இரத்தம், நெய்த்தோர், குருதி, முதிரம்.

### மூளையின் பெயர்

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.

### நரம்பின் பெயர்

**சே:—** நாடி, சிரை, நரம்பு.

**பி:—** நாடி, சிரை, மேதை, நரம்பு.

**தி:—** சிரை, சங்கனனம், நாடி, நரம்பு.

**க:—** சிரை, நாடி, நரம்பு.

### ஈரலின் பெயர்

**பி:—** ஈருள், ஈரல்.

**தி:—** ஈருள், ஈரல்.

### குடலின் பெயர்

**பி:—** மலக்குரம்பை, குடல்.

### சூலின் பெயர்

**சே:—** பீள், சினை, கரு, சூல்.

**பி:—** பீள், சினை, கரு, சூல்.

**தி:—** கரு, சினை, பீள், சூல், வயாவு, கருப்பம்.

**க:—** கரு, சூல்.

### மாசின் பெயர்

**சே:—** களங்கம், மலினம், கசடு, கறை, மாசு.

**பி:—** மெய்ம்மலம், மாசு.

**தி:—** மலம், மாசு.

### உள்மாசின் பெயர்

**சே:—** உபமலம், உள்மாசு.

**தி:—** உபமலம், உள்மாசு.

### வழும்பின் பெயர்

பி:— வழுக்கு, வழும்பு.

சூ:— வழுக்கு, வழும்பு.

### முடையின் பெயர்

சே:— பூதி, ஊழ்த்தல், தசை, புலவு, முடை.

பி:— பூதி, ஊழ்த்தல், தசை, புலவு, முடை.

சூ:— புலவு, ஊத்தை, முடை.

## மயில், மயிலின்குரல், மயிலின்சிகை, மயிலிறகின் அடிமுள், மயிற்சிறகு, அன்னாரு இவற்றின் பெயர்.

சிகிபிணி முகந்தோகை ஞமலியே காரஞ்
சிகாவள மயூரநவிரம்
சிகண்டிகே கயமஞ்ஞை யுகரங்க லாபமயில்
செப்புபன் மூன்றுமாகு

மகவலே யேங்கலுட னாலலிம் மூன்றுமே
யம்மயில்க் குரலின்பெய
ரனந்தர [1]மயூரமுரி சிகையாகு மிறகதனி
லடிமுள்மு ருந்தெனும்பேர்

தொகுகலா பங்கூழை சந்திராங் கந்தூவி
தோ(கை) சர ணஞ்சிகண்டகந்
தொங்கலே கூந்தலிற கொருபதும் பீலியாந்
தூவியே சிறகின்பெயர்

---

1 மயூரம்விரி எனல்வேண்டும்.

**மிகுதிசே ரெகினமோ திமமரா ளத்தினொடு**
**மிக்கசெங் காற்பிணிமுகம்**
**விகங்கம்வக் கிராங்கமே [1]நீருறையஞ் சினமோதிமம்**
**வினவிடி லன்னமாமே! 23**

* சிகி, பிணிமுகம், தோகை, ஞமலி, ஏகாரம்,
சிகாவளம், மயூரம், நவிரம்,
சிகண்டி, கேகயம், மஞ்ஞை, உகரம், கலாபம்,
செப்பு பன்மூன்றாகும். [மயில்,

அகவலே, ஏங்கலுடன், ஆவல், இம்மூன்றுமே
அம்மயில் குரலின்பெயர்.
அனந்தரம், மயூரம், [2]விரிசிகை ஆகும் இறகு.
அதனின் அடிமுள், முருந்து எனும்பேர்.

தொகு கலாபம், கூழை, சந்திராங்கம், தூவி,
தோகை, சரணம், சிகண்டம்,
தொங்கலே, கூந்தல், இறகு ஒருபதும் பீலிஆம்.
தூவியே சிறகின்பெயர்.

மிகுதிசேர் எகினம், ஓதிமம், மராளம் அத்து இன் ஒடு
மிக்க செங்கால், பிணிமுகம்,
விகங்கம், வக்கிராங்கம் ஏ, நீருறை [3]அஞ்சனம், [4]ஓதிமம்
வினவிடில் அன்னம் ஆமே! (117)

**மயிலின் பெயர்**

**சே:—** கேகயம், சிகண்டி, சிகி, மயூரம், தோகை, கேதாரம், மஞ்ஞை, பிணிமுகம், மயில்.

**பி:—** சிகி, நவிரம், மஞ்ஞை, பிணிமுகம், சகண்டி, மயூரம், கேதாரம், ஓகாரம், சிகாவளம், ஞமலி, கலாபி, பீலி, தோகை, கேகயம், மயில்.

---

1 நீருறை யஞ்சனமோதிமம் எனல் வேண்டும்.
2 முரிசிகை என்றுளது. 3 அஞ்சினம் என்றுளது.
4 இரண்டாம் முறை வந்துளது

### விலங்கின் பெயர்

**சூ:**— சிகி, ஞமலி, தோகை, சிகாவளம், சிகண்டி, மஞ்ஞை, ஓகரம், மயூரம், பிணிமுகம், கலாபி, நவிரம், பீலி, கேகயம், மயில்.

**க:**— மஞ்ஞை, சிகண்டி, சிகி, தோகை, மயூரம், பிணிமுகம், [1]ஏகாரம், மயில், கேகயம்.

### மயிலின் குரலின் பெயர்

**பி:**— அகவல், ஆலல், ஏங்கல்.

**சூ:**— அகவல், ஆலல், ஏங்கல்.

### மயிலின் சிகையின் பெயர்

**சே:**— அனந்தரம், மயூரம், விரிசிகை.

**பி:**— அனந்தரம்.

### மயிலிறகின் அடிமுள்ளின்பெயர்

**சே:**— முருந்து

**பி:**— முருந்து

**சூ:**— முருந்து

**க:**— முருந்து

### மயிற்பீலியின் பெயர்

**சே:**— தொங்கல், கலாபம், இறகு, கூழை, கூந்தல்.

**பி:**— சாணம், சிகண்டம், கூந்தல், சந்திரகம், தொங்கல், தூவி, பீலி, கலாபம் கூழை.

**சூ:**— சாணம், சிகண்டம், கூந்தல், சந்திரகம், கலாபம், கூழை, தோகை, தொங்கல், தூவி.

---

1 ஓகாரம் எனல் பொருந்தும்.

**க:**— கூந்தல், இறகு, கலாபம், கூழை, தொங்கல்' தோகை, பீலி.

**இறகின் பொதுப் பெயர்**

**சே:**— பறை, தூவி, சிறை, பிச்சம், குரல், கூழை' இறகு.

**பி:**— பறை, சதனம், பக்கம், பிஞ்சம், சிறை, தூவி, சிறகு, தோகை, கூழை, சதம், கூரல், வாசம், பத்திரம், இறை, ஈர், ஈ, கச்சம், இறகு

**சூ:**— சிறகு, சதனம், வாசம், சிறை, பிஞ்சம், கூரல், பக்கம், பறை, சதம், தூவி, தோகை, பத்திரம், குரல், கூழை, இறை, இறகு.

**க:**— சிறை குரல், கூழை, பறை, தூவி, பிஞ்சம், இறகு.

**மயிற் சிறகின் பெயர்**

**சே:**— தூவி

**பி:**— தூவி.

**சூ:**— தூவி.

**அன்னத்தின் பெயர்**

**சே:**— ஓதிமம், அஞ்சம், எகினம், அன்னம், உன்னம்.

**பி:**— எகினம், அஞ்சம், ஓதிமம், மென்னடை, வக்கிராங்கம், விகங்கம், பிணிமுகம், மராளம், அன்னம்.

**சூ:**— எகினம், ஓதிமம், மராளம், விகங்கம், வக்கிராங்கம், அன்னம்.

**க:**— ஓதிமம், அன்னம், எகினம், பிணிமுகம்.

## கருடன், கழுகு, பருந்து, காக்கை, அண்டங் காக்கை, நீர்க்காக்கை, ஆந்தை இவற்றின் பெயர்

ககபதிபன் னகவயிரி யுவணம்புள் ளரசனிகல்
காதிவரு தாக்கியனுடன்
கலுழன்வ யினன்வயின தேயனோ ரெட்டுமே
கருடனுவ ணஞ்சகுந்தம்

திகழ் [1]பனவை யெருவைபுண் டரமைந்து மேகழுகு
சீரியத ரிஞ்சமன்றன்
சேனமே பாரசிகை பாறுகங் கத்தொடு
திருந்திய பருந்துநாற்பேர்

மகிழ்கொடிது ரோணங் கரும்பிள்ளை புட்டகம்
வாயசம் பலியரிட்டம்
வாசிகா டங்காரி காகம்பன் னொன்றுமே
வன்காக்கை [2]காகோலமே

இகழ்விலண் டங்காக்கை யற்கமொடு காரண்ட
மினியநீர்க் காக்கைபொற்கண்
ணிருடிகூன் பிங்கலை சகோரங்கின் னரமென
வியம்புபே ராந்தையாமே! 24

*ககபதி, பன்னகவயிரி, உவணம், புள்ளரசன், இகல்
காதிவரு தாக்கியன் உடன்
கலுழன், வயினன், வயினதேயன், ஓர் எட்டுமே
கருடன், உவணம், சகுந்தம்,

திகழ் பவணை எருவை, புண்டரம், ஐந்துமே கழுகு
சீரிய [3]தரிஞ்சமன் தன்
சேனமே, பாரசிகை, பாறு, கங்கம், அத்து–ஒடு
திருந்திய பருந்து நாற்பேர்.

---

1 பவணை எனல்வேண்டும். 2 காலோலமே எனல் வேண்டும். 3 —?

மகிழ் கொடி, துரோணம், கரும்பிள்ளை, புட்டகம்,
வாயசம், பலி, அரிட்டம்,
வாசி, கரடம், காரி, காகம், பன்னொன்றுமே
வான் காக்கை. [1]காலோலம்—ஏ
இகழ்வு இல் அண்டங்காக்கை. அற்கம்—ஓடுகாரண்டம்
இனிய நீர்க்காக்கை. பொற்கண்,
இருடி, கூன், பிங்கலை, சகோரம், கின்னரம், என
இயம்பு பேர் ஆந்தை ஆமே! (118)

**கருடன் பெயர்**

**சே:**— வைனதேயன், உவணன், பன்னகவைரி, கலுழன், புள்ளரசு, கருடன்.

**பி:**— வைனன், உவணன், வைனதேயன், பறவை, வேந்தன், பன்னகவைரி, கலுழன், தார்க்கியன், சௌரி, இமையிலி, கருடன்.

**சூ:**— கலுழன், வைனன், வைனதேயன், பன்னக வைரி, தார்க்கியன், பறவைவேந்தன், உவணம், கருடன்.

**க:**— கலுழன், அரியூர்தி, வயினன், ககபதி, நாகாசனன், உவணன், கருடன்.

**கழுகின் பெயர்**

**சே:**— எருவை, உவணப்புள், கழுகு.

**பி:**— பவணை, உவணம், சகுந்தம், புண்டரம், எருவை, கங்கம், பூகம், கழுகு.

**சூ:**— புண்டரம், கங்கம், எருவை, பவணை, உவணம், சகுந்தம், கழுகு.

**க:**— எருவை, உவணப்புள், கழுகு.

---

1 காகோலமே என்றுளது.

### பருந்தின் பெயர்

சே:— பாறு, சேனம், கங்கம், பருந்து.
பி:— பாறு, சேனம், கங்கம், பாரசிகை, பருந்து.
சூ:— சேனம், பாரசிகை, பாறு, கங்கம், பருந்து.
க:— கங்கம், சேனம், பருந்து.

### காக்கையின் பெயர்.

சே:— காரி, வாயசம், கொடி, கரும்பிள்ளை, காக்கை.

பி:— கரடம், கொடி, பலிபுட்டம், காரி, வாயசம், கரும்பிள்ளை, அரிட்டம், காக்கை.

சூ:— கரடம், வாயசம், அரிட்டம், கரும்பிள்ளை, கொடி, காக்கை.

க:— கருமகள், காரி, கொடி, வாயசம், காகம், கார்க்கரடம்.

### அண்டங்காக்கையின் பெயர்.

பி:— காலோலம், அண்டங்காக்கை.

### நீர்க்காக்கையின் பெயர்.

சே:— கரண்டம், நீர்க்காக்கை.
பி:— அர்க்கம், நீர்க்காக்கை.
சூ:— அர்க்கம், காரண்டம், நீர்க்காக்கை.
க.— காரண்டம், நீர்க்காக்கை.

### ஆந்தையின் பெயர்.

பி:— இருடி, பிங்கலை, கின்னரம், ஆந்தை.
சூ:— இருடி, பிங்கலை, கின்னரம், ஆந்தை.
க:— இருடி, கூன், பிங்கலை, கின்னரி, ஆந்தை.

**வஞ்சிறைப் பறவை, எண்காற் பறவை, சிம்புட் பறவை, கண்டபேரண்டம், சக்கரவாகம், கோட்டான், கூகை, அசுணப்புள், இவற்றின் பெயர்.**

வருடைவா ருண்டகஞ் சிம்புளம் [1]பரவனம்
[2]வஞ்சிறைப் பறவையின்பேர்.
மாற்றரிய சரபந்து ரோணமெண் காற்பறவை
[3]வளர்தும் பரஞ்சிம்புளாம்
இருதலைப் புட்பெருங் குருகுடனி யானையுண்
குருகென வியம்புமூன்றும்
எழிலான கண்டபே ரண்டனாம் நேமிப்பு
ளேற்றகோ கஞ்சகோரம்
பரவுமொரு மூன்றுமே சக்கிரவா கப்புளாம்
பயில்குரால் குடிஞைகூகை
பண்புள நிசாசரி யெனக்குலவு நான்கும்
பகர்ந்திடுங் கோட்டான் பெயர்.
தெரிபெரும் புள்ளோடு கவுசிக மிரண்டுமே
செப்புமு மன்கூகையாஞ்
செவிப்புளிசை யறிபறவை கேகயப் புள்ளிவை
சிறந்தவசு ணப்புளாமே! 25

* வருடை, வாருண்டகம், சிம்புள், அம்பரவாணம்,
வஞ்சிறைப் பறவையின்பேர்,
மாற்ற அரிய சரபம், துரோணம் [5]எண்காற்
வளர் [6]சம்பரம் சிம்புள் ஆம். [பறவை,

---

1 பரவாணம் எனல்வேண்டும்.

2 சரபத்தின் பெயரே போலும். 3 வளர்சம் எனல் வேண்டும். 4 அம்பரவனம் என்றுளது.

5 இதற்கே முன் சொல்லப்பட்டவருடைய முதலான பெயர்களும் உண்டு. 6 தும்பரம் என்றுளது. இதுவும் சரபமே போலும்.

இருதலைப்புள், பெருங்குருகு, உடன் யானை உண்
என இயம்பும் மூன்றும் [குருகு,
எழிலான கண்டபேரண்டன் ஆம். நேமிப்புள்
ஏற்ற கோகம், சகோரம்,

பரவும் ஒரு மூன்றுமே சக்கரவாகப்புள் ஆம்.
பயில் குரால், குடிஞை, கூகை,
பண்புள்ள நிசாசரி எனக் குலவு நான்கும்
பகர்ந்திடும் கோட்டான் பெயர்.

தெரி பெரும்புள்–ஓடு, கவுசிகம் இரண்டுமே
செப்பும் ஊமன், கூகை ஆம்.
செவிப்புள், இசையறிபறவை, கேகய்ப்புள் இவை
சிறந்த அசுணப்புள் ஆமே! (119)

**வஞ்சிறைப்பறவையின் பெயர்**

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை

**எண்காற்பறவையின் பெயர் (சரபம்)**

**சே:**— சிம்புள், வாருண்டம், சம்பரம், துரோணம், எண்காற்சரபம்.

**பி:**— சிம்புள், வாருண்டம், அம்பரவாணம், சம்பரம், வருடை, துரோணம், சரபம்.

**சூ:**— சிம்புள், வாருண்டம், வருடை, சம்பரம், துரோணம், சரபம்.

**க:**— வாருண்டகம், சிம்புள்.

**சிம்புட் பறவையின் பெயர்**

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.

### கண்டபேரண்டப் பறவையின் பெயர்

**சே:—** யானையுண்குருகு, பெருங்குருகு, கண்டபேரண்டம்.

**பி:—** பெருங்குருகு, யானையுண்குருகு, கண்டபேரண்டம்.

### சக்கரவாகத்தின் பெயர்

**சே:—** நேமிப்புள், சகோரம், சக்கரவாகம்.

**பி:—** நேமிப்புள், சகோரம், சக்கரவாகம்.

**சூ:—** நேமிப்புள், கோகம், யானைக்குருகு, சக்கரவாகம்.

**க:—** சக்கரப்புள், நேமி, கோகம், சக்கரவாகப்புள்.

### கோட்டான் பெயர்

**சே:—** கூகை, குடிஞை, குரால், கோட்டான்.

**பி:—** கூகை, குடிஞை, குரால், கௌசிகம், ஊமன், நிசாசரி, உலூகம், கோட்டான்.

**சூ:—** கூகை, உலூகம், குடிஞை, குரால், கோட்டான்.

**க:—** கூகை, குடிஞை, குரால், கோட்டான்.

### கூகையின் பெயர்

**பி:—** பெருங்கோட்டான், கௌசிகம், ஊமன், குடிஞை, கூகை, பெரும்புள்.

**சூ:—** பெரும்புள், கௌசிகம், ஊமன், கூகை.

### அசுணப்புள்ளின் பெயர்.

**சே:—** கேகயம், அசுணமா.

**பி:—** இசையறிபறவை, கேகயப்புள்.

**சூ:—** கேகயம், அசுணப்புள்.

## கரும்புறா, மாடப்புறா, புறாப்பொது, காடை, சிவல், கவுதாரி, காடன், பகண்டை, வானம்பாடி, தலையிலாக்குருவி, ஊர்க்குருவி இவற்றின் பெயர்.

கரும்புறவி னாமமே பாராவ தத்தொடு
கபோதமா டப்புறாப்பேர்
காளபத மாங்களர வந்தூது ணத்தொடு
கபோதம்பு றாப்பொதுப்பேர்

திருந்துகா டைப்பெயர் குறும்பூள் கவுஞ்சலஞ்
சேர்ந்தபூ லிதல்கோரசஞ்
செய்யசிவ லின்பெயர் கவுதாரி நாமமே
சிரவ[1]மிதள் [2]புள்மூன்றுமாம்

வரைந்தகா டன்பெயர் கட்டிகண் டனுமாகு
மண்ணிய பகண்டைசில்லை
வளர்சாத்தங் கலிங்கங் கம்புள் மூன்றுபெயர்
வாய்த்தவா னம்பாடியாம்

பொருந்திய மழைக்குயிற் றலையிலாக் குருவியாம்
போற்றுசண் டங்கலிங்கம்
புலிங்கங் [3]குலிங்கநா டகமைந்து பெயருமே
புகலுமூர்க் குருவியாமே! 26

*கரும்புறவின் நாமமே பாராவதம்—அத்து—ஒடு
கபோதம். மாடப்புறாப்பேர்
காளபதம்ஆம். களரவம், தூதுணம்-அந்து—ஒடு,
கபோதம் புறப்பொதுப்பேர்.

திருந்து காடைப்பெயர் குறும்பூள், [4]கவுஞ்சலம்.
சேர்ந்த பூல், இதல், கோரசம்
செய்ய சிவலின் பெயர். கவுதாரி நாமமே
சிரவம், இதல், [5]புல் மூன்றுமாம்.

---

1 மிதல் எனல் வேண்டும். 2 புல் எனல் வேண்டும்.

3 குலிங்கச எனல் வேண்டும்.

4 கபிஞ்சலம் எனல் வேண்டும்.

5 பூழ் எனினுமாம்.

வரைந்த காடன்பெயர் கட்டி கண்டனும் ஆகும்.
மண்ணிய பகண்டை சில்லை.
வளர் சாத்தம், கலிங்கம், கம்புள், மூன்றுபெயர்
வாய்த்த வானம்பாடி ஆம்.
பொருந்திய மழைக்குயில் தலையிலாக் குருவி ஆம்.
போற்று சண்டம், கலிங்கம்
புலிங்கம், குலிங்கம், [1]சடகம் ஐந்து பெயருமே
புகலும் ஊர்க்குருவி ஆமே! (120)

### கரும்புறாவின் பெயர்

**சே:**— கபோதம், பாராவதம், கரும்புறா.

**பி:**— கபோதம், பாராவதம், கரும்புறா.

**சூ:**— பாராவதம், கபோதம், கரும்புறா.

### மாடப்புறாவின் பெயர்

**சே:**— காளபதம், மாடப்புறா.

**பி:**— கன்மேய்வு, காளபதம், மாடப்புறா.

**சூ:**— கன்மேய்வு, காளபதம், மாடப்புறா.

### புறாவின் பொதுப்பெயர்

**சே:**— தூதுணம், களரவம், பாராவதம், சீர்கால், கபோதம், புறா.

**பி:**— தூதுணம், கபோதம், களரவம், புறா.

**சூ:**— தூதுணம், கபோதம், களரவம், புறா.

**க:**— கபோதம், பாராவதம், தூதுணம், புறவு.

---

1 நாடகம் என்றுளது.

### காடையின் பெயர்

சே:— குறும்பூழ், காடை.

பி:— கபிஞ்சலம், குறும்பூழ், காடை.

சூ:— குறும்பூழ், காடை.

க:— காடை, குறும்பூழ்.

### சிவலின் பெயர்.

சே:— இதல், பகண்டை, சிவல்.

பி:— கோரசம், புல், இதல், சிவல்.

சூ:— கோரசம், புல், இதல், சுவல்.

க:— பகண்டை, இதல், சிவல்.

### கவுதாரியின் பெயர்.

சே:— இதல், பூழான், சிவல், கவுதாரி.

பி:— சிரவம், கவுதாரி.

சூ:— சிரவம், கவுதாரி.

க:— இதல், பூல், சிதல், கவுதாரி.

### காடன் பெயர்

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.

### பகண்டையின் பெயர்.

சே:— சில்லை, பகண்டை.

பி:— சில்லை, பகண்டை.

சூ:— சில்லை, பகண்டை.

க:— பகண்டை, இதல், சிவல்.

**வானம்பாடியின் பெயர்.**

சே:— சாதகப்புள், வானம்பாடி.

பி:— கலிங்கம், மேகப்புள், வானம்பாடி.

சூ:— கலிங்கம், கம்புள், வானம்பாடி.

க:— சாதகம், வானம்பாடி.

**தலையிலாக்குருவியின் பெயர்.**

பி:— மழைக்குயில், தலையிலாக்குருவி.

**ஊர்க்குருவியின் பெயர்.**

சே:— சகடம், ஊர்க்குருவி.

பி:— கலிங்கம், சகடம், குலிங்கம், புலிங்கம், ஊர்க்குருவி.

சூ:— குலிங்கம், சடகம், புலிங்கம், ஊர்க்குருவி.

க:— ஊர்க்குருவி, சடகம்.

## சகோரம் (செம்போத்து), குயில், நாகணைவாய்ப்புள், கிளி, கருங்கிளி, கரிக்குருவி, வலியன், இவற்றின் பெயர்

குக்கில்செம் போத்துச் சகோரமு மதன்பெயர்.
கோகிலங் காளகண்டம்
[1]கோரகைபி கத்தினொடு பரபுட்ட மைந்துமே
கோதிலாக் குயிலின்பெயர்
(தக்கனா) கணவாய்ப்பு ளேபூவை சாரிகை
சாற்றியவி ரண்டுபெயராம்

1 கொங்கை என்றுளது. 2 சுவடியில் இல்லை.

**[1](தத்தை) சுகம் வன்னியரி கீரஞ்சு வாகதஞ்**
**சாருவே கிள்ளையெட்டும்**
**மிக்ககிளி யின்பெயர் வந்திகையு மாகும்**
**விளம்புகீ ரங்கிள்ளையே**
**[2](மேவியக ருங்கி)ளிக் காரிகண் டங்காரி**
**வீறுகய வாய்கஞ்சனம்**
**[3](க)க்குவன் சுழன்வயா னேழுங்க ரிக்குருவி**
**யுலவுபா ரத்துவ [4](ாச)ன்**
**[5](உய)ர்கிகினி கஞ்சனங் கஞ்சரீ டம்வயவ**
**னோங்குவலி யானாகுமே! 27**

*குக்கில், செம்போத்து, சகோரமும் அதன்பெயர்.
கோகிலம். காளகண்டம்.
கோரகை,பிக(ம்--அ)த்து இன்-ஒடு பரபுட்டம் ஐந்துமே
கோது இலாக் குயிலின் பெயர்.
தக்க நாகணவாய்ப்புள்–ஏ பூவை, சாரிகை
சாற்றிய இரண்டு பெயராம்.
தத்தை, சுகம், வன்னி, அரி. கீரம், சுவாகதம்,
சாரு–ஏ, கிள்ளை எட்டும்
மிக்க கிளியின் பெயர்; வந்திகையும் ஆம்.
விளம்பு கீரம், கிள்ளையே,
மேவிய கருங்கிளி. காரி, கண்டங்காரி,
வீறு கயவாய், கஞ்சனம்,
கக்குவன், [6]சுழன், வயான் ஏழும் கரிக்குருவி.
உலவு பாரத்துவாசன்,
உயர் கிகினி, கஞ்சனம், கஞ்சரீடம், வயவன்,
ஓங்கு வலியான் ஆகுமே! (121)

**செம்போத்தின் பெயர் (சகோரம்)**

**சே:— குக்கில், செம்போத்து, சகோரம்.**

---

1 — 5 சுவடியில் இல்லை. 6—?

பி:— குக்கில், சகோரம், செம்போத்து.

சூ:— குக்கில், செம்போத்து.

க:— குக்கில், சகோரம், செம்போத்து.

## குயிலின் பெயர்

சே:— கோகிலம், களகண்டம், பிகம், குயில்.

பி:— காளகண்டம், கோரகை, பரபுட்டம், கோகிலம், பிகம், குயில்.

சூ:— கோகிலம், களகண்டம், கோரகை, பிகம், பரபுட்டம், குயில்.

க:— களகண்டம், கோகிலம், குயில்.

## நாகணவாய்ப் புள்

சே:— பூவை, சாரிகை, நாகணவாய்ப்புள்.

பி:— பூவை, சாரிகை, நாகணவாய்ப்புள்.

சூ:— பூவை. சாரிகை, நாகணவாய்ப்புள்.

க:— நாகணவாய், பூவை, சாரிகை.

## கிளியின் பெயர்

சே:— வன்னி, தத்தை, சுகம், அரி, சுவாகதம், கிள்ளை, அவந்திகை, கீரம், கிளி.

பி:— சாரு, வன்னி, அவந்திகை, தத்தை, கீரம். கிள்ளை, கிளி.

சூ:— சாரு, அரி, வன்னி, தத்தை, சுகம், கிள்ளை, கீரம், சுவாகதம், அவந்திகை, கிளி.

க:— சுகம், கிள்ளை, அரி, தத்தை வன்னி, கிளி.

### கருங்கிளியின் பெயர்

**சே**:— கீரம், கிள்ளை, கருங்கிளி.

**பி**:— கீரம், கிள்ளை, அரி, கருங்கிளி.

**சூ**:— கீரம், கிள்ளை, கருங்கிளி.

**க**:— கிரிஞ்சம், கீரம், கிள்ளை, காரி.

### கரிக்குருவியின் பெயர்

**சே**:— கஞ்சனம், வலியன், கயவாய், கரிக்குரீஇ, கரிக்குருவி.

**பி**:— காரி, பிள்ளை, கபிலம், கஞ்சனம், கயவாய், கரிக்குருவி.

**சூ**:— கஞ்சனம், கயவாய், கரிக்குருவி

**க**:— கயவாய், வலியான்குருவி, கசியது.

### வலியனின் பெயர்

**சே**:— வலியன், பாரத்துவாசன், வயவன்.

**பி**:— கஞ்சனம், கிகிணி, சஞ்சரீடம், வயவன், பாரத்து, வாசம், வலியன்.

**சூ**:— கஞ்சனம், கிகிணி, வயவன், கஞ்சரீடம், பாரத்து, வாசம், வலியன்.

**க**:— வயவன், வயானன், வலியான்.

## கோழி, சேவல், கானங்கோழி, சம்பங் கோழி, சாதகப்புள், பொய்யாப்புள், சிச்சிலி, நிலாமுகி, வெளவால், சிள்வீடு, இவற்றின் பெயர்.

ஆண்டலைப் புட்குருகு வாரணங் காலாயு
தஞ்சவுண் டங் குக்குடம்
அழகினொடு சேவலிரு நான்குமே கோழியித
னாண்சேவல் சாவலாகும்

நீண்டகா தம்பம் நிலங்குபூ ழிருபெயர்
நிகழ்ந்துகா னங்கோழியாம்.
நிகரிலாக் கம்புள்சம் பங்கோ ழி நாமமே
நெடியசா ரங்கங்குகம

பூண்டபெயர் சாதகப் புட்சலாங் கென்னப்
பொய்யாப்பு ளாந்தித்திரி
பொன்வாய்ப்புள் கவுதம்விச் சுளிசிச்சி லிப்பெயர்
பொத்தையொடு சாரமிருபேர்.

தூண்டியநி லாமுகி யாலால மஞ்சலி
துரிஞ்சிலொடு வாவல்வெளவால்
சொற்சிதடி சிமிலிசில் லிகைசில்லை நான்குமே
சூழ்ந்தசிள் வீடாகுமே! 28

* ஆண்டலைப்புள், குருகு, வாரணம், காலாயுதம்,
சவுண்டம், குக்குடம்,
அழகு—இன் ஒடு, சேவல், இருநான்குமே கோழி.
இதன் ஆண் சேவல், சாவல் ஆகும்.

நிண்ட காதம்பம், [2]நிலங்குபூழ் இருபெயர்
நிகழ்த்து கானங்கோழியாம்.
நிகர்இலாக் கம்புள் சம்பங்கோழி நாமமே.
நெடிய சாரங்கம், குகம்,

பூண்டபெயர் சாதகப்புள் சலாங்கு என்னப்
பொய்யாப்புள் ஆம். தித்திரி[3]

---

1 குக்கிடம் என்றுளது

2 நிலங்கு என்பது பூழ் (பிங்கலநிகண்டு)

3 சிரல் எனும் சொல் இல்லை.

பொன்வாய்ப்புள், கவுதம், விச்சுளி,சிச்சிலிப்பெயர்
போத்தை—ஒடு சாரம் இருபெயர்.
தூண்டிய நிலாமுகி. ஆலாலம், அஞ்சலி,
துரிஞ்சில்-ஒடு, வாவல் வௌவால்.
சொல் சிதடி, சிமிலி, சில்லிகை, சில்லை, நான்குமே
சிறந்த சிள்வீடு ஆகுமே! (122)

**கோழியின் பெயர்**

**சே:**— குக்குடம், சேவல், வாரணம், கோழி,

**பி:**— குக்குடம், குருகு, வாரணம், ஆண்டலைப் புள், காலாயுதம் கோழி.

**சூ:**— குருகு, காலாயுதம், குக்குடம், ஆண்டலைப் புள், வாரணம், கோழி.

**க:**— சரணாயுதம், குக்குடம், வாரணம், சேவல், கோழி.

**சேவலின் பெயர்**

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.

**கானங்கோழியின் பெயர்**

**பி:**— காதம்பம், கானங்கோழி.

**சூ:**— காதம்பம், கானங்கோழி.

**சம்பங்கோழியின் பெயர்**

**சே:**— கம்புள், சம்பங்கோழி.

**பி:**— கம்புள், சம்பங்கோழி.

**சூ:**— கம்புள், சம்பங்கோழி.

**க:**— கம்புள், சம்பங்கோழி.

**சாதகப் புள்ளின் பெயர்**

**சே:—** வானம்பாடி, சாதகப்புள்.

**பி.—** சாரங்கம், சாதகப்புள்.

**சூ:—** சாரங்கம், சாதகப்புள்.

**பொய்யாப்புள்ளின் பெயர்**

**பி:—** சலாங்கு, பொய்யாப்புள்.

**சூ:—** சலாங்கு, பொய்யாப்புள்.

**சிச்சிலியின் பெயர்**

**பி:—** சிரல், கவுதம், பொன்வாய்ப்புள், தித்திரி, சிச்சிலி.

**சூ:—** சிரல், கவுதம், பொன்வாய்ப்புள், தித்திரி, சிச்சிலி.

**நிலாமுகியின் பெயர்**

**சே:—** சகோரம், போந்தை, நிலாமுகி.

**பி:—** சகோரம், பேராந்தை, நிலாமுகி.

**சூ:—** சகோரம், நிலாமுகி.

**வௌவால் பெயர்**

**சே:—** துருஞ்சில், ஆலாலம், வாவல், அஞ்சலிகை, வௌவால்.

**பி:—** துருஞ்சி, ஆலாலம், வாவல், அஞ்சலிகை, வௌவால்.

**சூ:—** துருஞ்சில், ஆலாலம், வாவல், அஞ்சலிகை, வௌவால்.

### சிள் வீட்டின் பெயர்

**சே**:— சிதடி, நெடி, சில்லிகை, சிமிலி, சிள்வீடு.

**பி**:— சில்லை, நெடி, சில்லிகை, சிமிலி, சிள்வீடு.

**தூ**:— சிதடி, சில்லிகை, சில்லை, சிமிலி, சிள்வீடு.

**க**:— சிதடி, நெடி, சில்லி, சிள்வீடு.

(மூலச்சுவடியில் ஒரு ஏடு இன்மையின் 29, 30, 31, 32 ஆகிய நான்கு பாடல்கள் இல்லை.)

### ஆண்முதலை, நீர்நாய், நண்டு, ஆண்நண்டு, தவளை, சங்கு, வலம்புரிச்சங்கு, சலஞ்சலம், நத்தை, இவற்றின் பெயர்.

கருமுதலை யாண்கரா யெகினம்நீர் நாய்மட்டை
களவன்கவைத் தாள்குளிரங்
கற்கடக நள்ளி(னொண்ட) லவனண் டெட்டுமாங்
களவனல வன்னவற்றாண்

சரி(சவந்)தே(ரை)மண் டூகமரை நுணலையரி
சாற்றுநீ கந்தவளையே
(தப்பாத) நுண்மணலில் மூழ்கிமறை யுந்தவளை
தளர்விலா நந்தியுடனே

(சுரிமுகங் கம்பு)பணி லங்கோடு வாரணந்
[1]துத்திவளை நாகுவண்டு
(சொல்யவி) டம்புரி சங்குயத் தாகுந்
துலங்கியவ லம்புரிச்சங்

(குரிய)கொக் கரையாஞ் சலஞ்சலஞ் சங்கினி
லுயர்ச்சியாங் கருதுநந்துநா
கொ(ண்)சுரி முகங்களென வருமூன்று பெயருமே
யூர்கின்ற நத்தையாமே! 33

---

1 சுத்திவளை எனல் வேண்டும்.

* கருமுதலை ஆண் கரா, எகினம், நீர்நாய், மட்டை,
களவன், [1]கூவை, தாள்குளிரம்,
கற்கடகம், நள்ளி, நொண்டு, அலவன் நண்டு எட்டும்
களவன், அலவன், அவற்றுள் ஆண், [ஆம்.

சரி(சவம்) தே(ரை), மண்டுகம். மரை, நுணலை,
சாற்றும் நீகம், தவளையே. [அரி,
(தப்பாத நுண்மணலில் மூழ்கி மறையுந் தவளை.
தளர்வு இலா நந்தியுடனே

(சுரிமுகம், கம்பு), பணிலம், கோடு. வாரணம்,
சுத்தி. வளை, நாகு, வண்டு,
(சொல்லிய இ)டம்புரி, சங்குபத்து ஆகும்.
துலங்கிய வலம்புரிச் சங்கு

உரிய கொக்கரை ஆம். சலஞ்சலம் சங்கினில்
உயர்ச்சி ஆம். கருது நந்து, நாகு,
ஒண் சுரிமுகங்கள் எனவரும் மூன்று பெயருமே
ஊர்கின்ற நத்தை ஆமே! (123)

**ஆண்முதலையின் பெயர்**

**சே:**— காரம்.

**பி.**— கரா.

**சூ:**— கராம்.

**க:**— கராவு.

**நீர்நாயின் பெயர்**

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.

**நண்டின் பெயர்**

**சே:**— அலவன், நள்ளி, குளிர், ஞெண்டு, ஆர்மதி, களவன், கர்க்கடகம், நண்டு.

**பி:**— கள்வன், அலவன், நள்ளி, கர்க்கடகம், குளிர், கவைத்தாள், நண்டு.

---

1 கவை என்றுளது.

சூ:— ஞெண்டு, கள்வன், குளிரம், நள்ளி, கவைத் தாள், கர்க்கடகம், நண்டு.

க:— குளிர், நண்டு, அலவன், நள்ளி, களவன், கற்கடகம்.

**ஆண்நண்டின் பெயர்**

**சே:**— அலவன்.

**பி:**— அலவன்.

**தவளையின் பெயர்**

**சே:**— அரி, மரை, நீகம், தேரை, மண்டூகம், தவளை.

**பி:**— அரி, மண்டூகம், தேரை, நுணலை, பேகம், தவளை.

சூ:— மண்டூகம், தேரை, அரி, நுணலை, நீகம், பேகம், தவளை.

க:— மரை, தேரை, நீகம், தவளை, அரி, மண்டூகம்.

**சங்கின் பெயர்**

**சே:**— நந்து, பணிலம், வளை, நாகு, சுரிமுகம், கம்பு, கோடு, சங்கு.

**பி:**— நந்து, சுத்தி, நாகு, பணிலம், வண்டு, கோடு, வளை, சுரிமுகம், கம்பு, வெள்ளை, இடம்புரி, தரா, சங்கு.

சூ:— நந்து, சுத்தி, நாகு, வளை, கம்பு, கோடு, வாரணம், வண்டு, இடம்புரி, வெள்ளை, சங்கு.

க—: பணிலம், வளை, வாரணம், சங்கு, சலஞ்சலம், கோடு, நத்து, நாகு, சுரிமுகம், கம்பு, வலம்புரி.

### வலம்புரிச் சங்கின் பெயர்

சே:— சாதிவலம்புரி, கொக்கரை, வலம்புரி.

பி:— கொக்கரை, வலம்புரி

சூ—: கொக்கரை, வலம்புரி,

### சலஞ்சலத்தின் பெயர்

பி:— பணிலம், சலஞ்சலம்.

சூ:— பணிலம், சலஞ்சலம்.

### நத்தையின் பெயர்

ச:— கருநந்து, நாகு, நத்தை.

பி:— கருநந்து, நாகு, சுரிமுகம், நத்தை.

சூ:— கருநந்து, நாகு, நத்தை.

க:— கருநந்து, நாகு, கரிமுகம், நத்தை.

### கிளிஞ்சல், முத்தின் கிளிஞ்சல், இடம்புரி, வலம்புரி, சலஞ்சலம், பாஞ்சசன்னியம், புரவிக்கரு, கரு, விலங்கின் பொது இவற்றின் பெயர்

இறலெருந் [1]தேறலொரு மூன்றுங்கி ளிஞ்சிலா
மிப்பியே சிப்பிசுத்தி
யென்னுமுப் பெயருமே முத்தின்கி ளிஞ்சிலா
மிப்பியோ ராயிரஞ்சூ
முறவீற்றி ருக்கின்ற தேயிடம் புரியிடம்
புரியொரா யிரம்நெருங்கி
யுறைவது வலம்புரி வலம்புரியொ ராயிரத்
துள்ளது சலஞ்சலந்தான்

---

1 தேரலொரு எனல்வேண்டும்.

**பெறுசலஞ் சலமாயி ரத்தினைச் சூழ்ந்திடப்**
**பெற்றதே பாஞ்சன்னியம்**
**பெறுகுசவ லேபுரவி யின்கருப் பகிரண்ணல்**
**பேசுசினை மற்றக்கருத்**

**திறல்மேவு மானுடன் மிருகங்கு ரங்குமாத்**
**தீதிலொரு நான்குபெயருந்**
**திரள்விலங் கின்பொதுப் பெயரென்று கற்றோர்**
**சிறப்புட னியம்பினாரே!** **34**

* இறல், எருந்து, ஏரல் ஒரு மூன்றும் கிளிஞ்சில் ஆம்
இப்பி—ஏ, சிப்பி, சுத்தி,
என்னும் முப்பெயருமே முத்தின் கிளிஞ்சில் ஆம்.
இப்பி ஓர் ஆயிரம்

சூழுற வீற்றிருக்கின்றதே இடம்புரி. இடம்புரி
ஓர் ஆயிரம் நெருங்கி
உறைவது வலம்புரி. வலம்புரி ஓர் ஆயிரத்து
உள்ளது சலஞ்சலம் தான்.

பெறு சலஞ்சலம் ஆயிரத்தினை சூழ்ந்திடப்
பெற்றதே பாஞ்ச சன்னியம்.
பெருகு சவல்–ஏ புரவியின் கரு. பகிரண்ணல்
பேசு சினை மற்று அக்கரு.

திறல் மேவும் மான்-உடன், மிருகம், குரங்கு, மா,
தீது இல் ஒரு நான்கு பெயரும்
திரள் விலங்கின் பொதுப் பெயர் என்று கற்றோர்
சிறப்புடன் இயம்பினாரே! (124)

**கிளிஞ்சலின் பெயர்**

**சே:**— இறல், எருந்து, ஏரல், கிளிஞ்சல்.

**பி:**— ஏரல், எருந்து, ஊரல், கிளிஞ்சல்.

தி:— ஏரல், எருந்து, ஊரல், கிளிஞ்சல்.
கூ:— எருந்து, இறல், ஏரல்.

### முத்தின் கிளிஞ்சலின் பெயர்

சே:— இப்பி, சுத்தி, சிப்பி.
பி:— இப்பி, சுத்தி.

### இடம்புரிச் சங்கின் (பெருமை) பெயர்

பி:— இப்பி ஆயிரம் சூழ்ந்தது.
தி:— இப்பி ஆயிரம் சூழ்ந்தது.

### வலம்புரிச் சங்கின் (பெருமை) பெயர்

பி:— இடம்புரி ஆயிரம் சூழ்ந்தது.
தி:— இடம்புரி ஆயிரம் சூழ்ந்தது.

### சலஞ்சலத்தின் (பெருமை) பெயர்.

சே:— வலம்புரியிற் சிறந்தது.
பி:— வலம்புரி ஆயிரம் சூழ்ந்தது.
தி:— வலம்புரி ஆயிரம் சூழ்ந்தது.

### பாஞ்சசன்னியத்தின் (பெருமை) பெயர்

சே:— சலஞ்சலத்தின் சிறந்தது.
பி:— சலஞ்சலம் ஆயிரம் சூழ்ந்தது.
தி:— சலஞ்சலம் ஆயிரம் சூழ்ந்தது.

### புரவிக்கருவின் பெயர்

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.

### கருவின் பெயர்

**பி**:— சினை, பீள், சூல், வயா, கருப்பம்.

### விலங்கின் பொதுப்பெயர்.

**சே**:— மா, மான்.

**பி**:— மா, மிருகம், மான், குரங்கம்.

**சூ**:— மா, மான், மிருகம், குரங்கு.

**க**:— மா, மான்.

மூன்றாவது விலங்கின் பெயர்த் தொகுதி

முற்றும்

# நான்காவது
# மரப் பெயர்த் தொகுதி

**கரும்பு, வாழை, வாழைத்தண்டு, கமுகு, பாக்கு, கூந்தற்கமுகு, பலா, ஈரப்பலா, தென்னை, பன்னாடை, இவற்றின் பெயர்.**

கன்னல்கழை லிக்குடண் வேழமொரு நான்குங்
கரும்புகத லியோடரம்பை
காட்டுபெயர் வாழை யப் பணவாழை யதுதண்டு
கந்திபூ கஞ்சருந்தம்
பன்னரும் பூகதம், பாகதம் பாக்கம்
பசுங்கமுகு [2]மிருமூன்றுபேர்.
பாகுகோ லந்துவர்க் காய்மூன்று பெயருமே
பாக்கடைக் காயுமாகும்.
மன்னுகூந் தற்கமுகு தாலமாம் பனசம்
வருக்கைபா கற்பலவிவை
வன்பலா வின்பெய ரீரப்ப லாவே
வளங் கொளா சினியதாகும்
(தெ)ன்னை(தெ)ங் கொடுதாழை நாளிகே ரந்தடஞ்
செறியிலாங் கலியைந்துமாங்
திகழ்தூழி (நா) ரிநெய் யரிமூன்று பெயருமே
சேந்தபன் னாடையாமே! 1

* கன்னல், கழை, இக்கு, உடன், வேழம் ஒரு நான்கும்
கரும்பு, கதலி—ஒடு. அரம்பை.
காட்டு பெயர் வாழை. [3]அப்பண வாழையது
கந்தி, பூகம், சருந்தம், [தண்டு.

1—? 2இருமூன்று பேர் எனல் பொருந்தும். 3—?

பன்ன அரும் பூதகம், பாகதம், பாக்கம்
[1]பசுங்கமுகு இருமூன்று பேர்.
பாகு, கோலம், துவர்க்காய் மூன்று பெயருமே
பாக்கு; அடைக்காயும் ஆகும்.

மன்னு கூந்தற்கமுகு தாலம், ஆலம், பனசம்,
வருக்கை பாகல், பலவு, இவை
வன் பலாவின் பெயர் ஈரப்பலாவே
வளங்கொள் ஆசினி ஆகும்.

தென்னை, தெங்கு—ஒடு, தாழை, நாளிகேரம், தடம்,
செறி இலாங்கலி ஐந்தும் ஆம்
திகழ் சூழி, நாரி, நெய்யரி, மூன்று பெயருமே
சேந்த பன்னாடை ஆமே! (125)

### கரும்பின் பெயர்

**சேந்தன் திவாகரம்:**— கழை, வேழம், இக்கு, கன்னல், கரும்பு.

**பிங்கல நிகண்டு:**— கழை, வேழம், இக்கு, கன்னல், கரும்பு.

**சூடாமணி நிகண்டு:**— வேழம், கன்னல், இக்கு, கழை, கரும்பு.

**கயாதர நிகண்டு:**— கன்னல், கழைவேழம், இக்கு, கரும்பு.

### வாழையின் பெயர்

**சே:**— கதலி, அரம்பை, வாழை.

**பி:**— கதலி, அரம்பை, கவர், சேகிலி, திரணபதி, ஓசை, வாழை.

**சூ:**— கதலி, அரம்பை, வாழை.

**க:**— கதலி, அரம்பை, வாழை.

---

1 பசுங்கமுகும் என்றுளது.

**வாழைத் தண்டின் பெயர்**

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.

**கமுகின் பெயர்.**

**சே:—** கந்தி, பூகம், பூக்கம், கமுகு.

**பி:—** கந்தி, பூகம், பூக்கம், கமுகு.

**சூ:—** கந்தி, பூகம், பூக்கம், கமுகு.

**க:—** கந்தி, பாகு, பூதகம், பூகம், கமுகு.

**பாக்கின் பெயர்**

**பி:—** கோலம், துவர்க்காய், பாகு, பாக்கு.

**சூ:—** துவர்க்காய், பாகு, கோலம், பாக்கு.

**கூந்தற் கமுகின் பெயர்**

**பி:—** தாலம்

**பலாவின் பெயர்.**

**சே:—** பனசம், வருக்கை, பலா.

**பி:—** பாகல், வருக்கை, பனசம், பலா.

**சூ:—** பனசம், வருக்கை, பாகல், பலவு, பலா

**க:—** பனசம், பலா.

**ஈரப்பலாவின் பெயர்**

**சே:—** ஆசினி.

**பி:—** ஆசினி.

**சூ:—** ஆசினி.

### தென்னையின் பெயர்

**சே:**— நாளிகேரம். இலாங்கலி, ஏடகம், தாழை, கேளி, தெங்கு, தென்னை.

**பி:** தாழை, இலாங்கலி, தென்னை, நாளிகேரம்.

**ரூ:**— தெங்கு, தாழை, தென், நாளிகேரம், இலாங்கலி.

**க:**— நாளிகேரம், தெங்கு, தாழை.

### பன்னாடையின் பெயர்

**பி:**— நாரி, நெய்யரி, பன்னாடை.

**ரூ:**— நெய்யரி, நாரி, பன்னாடை.

**க:**— நெய்யரி, நாரரி, பன்னாடை.

### மாமரம், புளிமா, தேமா, மாவடு, மாதளை, தாதுமாதளை, நாரத்தை, எலுமிச்சை, நெல்லி இவற்றின் பெயர்.

மாதிதூ தங்கொக்கு மாழைசை காரமுடன்
மாந்தியாம் பரமேழுமே
மரப்பொதுப் பெயரெகின மேசிஞ்ச மாழைபுளி
மாப்பெயர் தேமாப் பெயர்
ஊதமொடு சேதார [1]மாமூன்று மாகுந்
துலங்குவடி யுடனேவகிர்
சொல்லுமா வின்வடுக் கழுமுள்மா தளைமா
[2]துலங்கமா துள[3]மிரண்டாந்
ஓதிமந் தாதுமா தளையாம தன்பெயர்
தாட்டிமந் தானுமாகுந்
தழைத்திடும் நரந்தம்நா ரந்தமொடு நாரமே
சாற்றுநா ரத்தைப் பெயர்

---

1 மாமிரமு மாகும் எனல்வேண்டும். 2 துளங்கமா எனல் வேண்டும். 3 மூன்றாம் எனல்வேண்டும்.

**மோதெலும் பீச்சைசம் பீரஞ்ச தாபலம்**
**முருக்கருண மோடிலஞ்சம்**
**முதிர்சம்ப மிகுசமுட னெழுபெய ராம்நெல்லி**
**மொழியிலா மலகமாமே!** 2

* மாதி, சூதம், கொக்கு, மாழை, சைகாரம்—உடன்
மாந்தி ஆம்பரம் ஏழுமே
மா பொதுப்பெயர், எகினம் —ஏ, சிஞ்சம், மாழை,
புளிமாப் பெயர். தேமாப் பெயர்.

சூதம்—ஒடு, சேதாரம், [1]ஆமிரமும் ஆகும்.
துலங்கு வடு—உடனே, வகிர்,
சொல்லும் மாவின் வடு கழுமுள், மாதளை,
[2]மாதுளங்கம், மாதுளம்[3] இரண்டாம்.

தாதிமம் தாதுமாதளை ஆம்; அதன் பெயர்,
தாட்டிமம் தானும் ஆகும்.
தழைத்திடும் நரந்தம், நாரந்தம்—ஒடு, நாரமே,
சாற்று நாரத்தைப் பெயர்,

மோது எலும்பிச்சை சம்பீரம், சதாபலம்,
முருக்கு, அருணம்— ஓடு, இலஞ்சம்,
முதிர்[4]சம்பம், இகுசம்—உடன் எழுபெயராம், நெல்லி
மொழியில் ஆமலகம் ஆமே! (126)

**மாமரத்தின் பெயர்**

**சே:**— சூதம், சேதாரம், ஆம்பிரம், கொக்கு, மாழை.

**பி:**— மாந்தி, சூதம், கொக்கு, மா, ஆமிரம், மாழை.

**சூ:**— மாந்தி ,சூதம், ஆமிரம், கொக்கு, மாழை, மா.

**க:**— சூதமரம், சேகரம், வாழை, மா, ஆம்பிரம், கொக்கு

---

1 ஆமுன்றும் ஆகும் என்றுள்ளது. 2 மாதுலங்கம் என்றுளது. 3 மூன்றாம் எனல் வேண்டும்.
4 சம்பளம் எனல் வேண்டும்.

### புளிமாவின் பெயர்.

சே:— ஆம்பிரம், சூதம், மாழை, புளிமா.

பி:— நாளினி, இபங்கம், மாழை, சிஞ்சம், ஆம்பிரம், எகினம், சூதம், புளிமா.

### தேமாவின் பெயர்.

சே:— சூதம், சேதாரம், ஆம்பிரம், கொக்கு தேமா.

பி:— ஆமிரம், சககாரம், சேதாரம், தேமா.

சூ:—சேதாரம். (சககாரம்)

### மாவடுவின் பெயர்.

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.

### மாதளையின் பெயர்.

சே:— மாதுளம், கழுமுள், மாதுளை.

பி:— மாதுளங்கம், மாதுளம், கழுமுள், மாதுளை.

சூ:— மாதுளம். மாதுளங்கம், கழுமுள், மாதுளை.

க:— மாதளை, மாதுளங்கம், கழுமுள்.

### தாது மாதுளையின் பெயர்.

சே:— தாடிமம்.

பி:— தாடிமம்

சூ:— தாடிமம்.

க:— தாதிமம், தாதிமாதளை.

### நாரத்தையின் பெயர்.

சே:— நரந்தம், நாரத்தை.

பி:— நாரம், நரந்தம், நாரங்கம், நாரத்தை.

தி:— நரந்தம் நாரம், நாரங்கம், நாரத்தை.

### எலுமிச்சையின் பெயர்.

சே:— சம்பீரம், முருக்கு, எலுமிச்சை.

பி:— சம்பீரம், முருகு, சதாபலம், சம்பளம், அருணம், இலிகுசம, எலுமிச்சை.

தி:— சம்பீரம், முருகு, சதாபலம், இலிகுசம், அருணம், சம்பளம், எலுமிச்சை,

க:— சம்பம், முருகு, எலுமிச்சை.

### நெல்லியின் பெயர்.

சே:— ஆமலகம், நெல்லி.

பி:— ஆமலகம், நெல்லி.

தி:— ஆமலகம், நெல்லி.

க:— நெல்லி, ஆமலகம்.

### கற்பகம் (ஐந்தரு), கற்பகத் தருவிற் படர்கொடி, அகில், சந்தனம், குங்குமம், மகிழ், பாதிரி, இவற்றின் பெயர்.

சந்தான மரிசந்த னம்பாரி சாதமந்
தாரமொடு கற்பகமெனும்
தருக்களோ ரைந்தினற் காவுடன் றேவுமே
சாற்றுமக் கற்பகப்பேர்

கொந்தேறு கற்பகத் (துல)விவள ருங்கொடி
கோதிலாக் காமவல்லி
குலவு (து)டிகாகதுண் டம்பூளில் கருவொடு
கூறுமொரு நான்ககிற்பேர்
சந்தார மலையசஞ் சந்திரதில கஞ்சாந்து
சாந்தங்கு டரமேழுஞ்
சந்தன மரப்பெயர் மரவந்து ருக்கமே
சார்ந்தகுங் குமமரப்பே
ரந்தவகு ளத்துட னிலஞ்சிகே சரமூன்று
மாகுமே [2]மகிழின்பெயர்
அணிகொள்புன் காலிபா டலமோரி ரண்டுபெய
ராந்தபா திரியாகுமே! 3

* சந்தானம், அரிசந்தனம், பாரிசாதம், மந்தாரம்
ஒடு, கற்பகம் எனும்
தருக்கள் ஓர் ஐந்தின் நல் கா உடன் தேவுமே
சாற்றும் அக் கற்பகப்போர்.
கொந்து ஏறு கற்பகத்து உலவி வளருங்கொடி
கோது இலா காமவல்லி.
குலவு துடி, காகதுண்டம், பூளில், கரு — ஒடு,
கூறும் ஒரு நான்கு அகிற் பெயர்,
சந்து, ஆரம், மலையசம், சந்திரதிலகம், சாந்து,
சாந்தம், குடரம் ஏழும்
சந்தன மரப்பெயர், மரவம், துருக்கமே
சார்ந்த குங்கும மரப்பேர்
அந்த வகுளத்துடன், இலஞ்சி, கேசரம் மூன்றும்
ஆகும் மகிழின் பெயர்,
அணிகொள் புன்காலி, பாடலம், ஓர் இரண்டுபெயர்
ஆந்த பாதிரி ஆகுமே! (127)

---

1 மடுளின் பெயர் என்றுளது.

## (ஐந்தரு) கற்பகத்தின் பெயர்.

சே: சந்தானம், தேவதாரம், கற்பகம், மந்தாரம், பாரிசாதம்.

பி:— சந்தானம், தேவதாரம், கற்பகம், மந்தாரம், பாரிசாதம்.

சூ:— சந்தானம், அரிசந்தனம், மந்தாரம், பாரிசாதம், கற்பகம்.

க:— சந்தானம், தேவதாரம், பாரிசாதம், மந்தாரம், கற்பகம்.

## கற்பகத் தருவின் படர்கொடி.

சே:— காமவல்லி.

பி:— காமவல்லி.

சூ:— காமவல்லி.

## அகிலின் பெயர்.

சே:— அகரு, பூழில், அகில், காகதுண்டம்.

பி:—அகரு, பூழில், காழ்வை, காகதுண்டம், அகில்.

சூ:— அகரு, காகதுண்டம், பூழில், அகில்.

க:— பூழில், அகில், காகதுண்டம், அகரு.

## சந்தனத்தின் பெயர்

சே:— சாந்தம், மலயம், சந்திரதிலகம், ஆரம், சந்து, சந்தனம்.

பி:— சாந்தம், மலயசம், சந்திரதிலகம், ஆரம், சந்து, சந்தனம்.

சூ:— சந்து, ஆரம், சாந்து, சாந்தம், சந்திரதிலகம், படீரம், மலயசம், சந்தனம்.

க:— மலையம், சந்தம், சந்தாரம், சாந்தம், பாடீரம் ஆரம், சந்திரதிலகம்,

## குங்குமத்தின் பெயர்

சே:— மரவம், துருக்கம், குங்குமம்.

பி:— மரவம், துருக்கம், குங்குமம்.

சூ:— துருக்கம், மரவம், குங்குமம்.

க:— மரவம், துருக்கம், குங்குமம்.

## மகிழின் பெயர்

சே:— வகுளம், இலஞ்சி, மகிழ்.

பி:— வகுளம், இலஞ்சி, கேசரம், மகிழ்.

சூ:— வகுளம், இலஞ்சி, கேசரம், மகிழ்.

க:— வகுளம், இலஞ்சி, மகிழ்.

## பாதிரியின் பெயர்

சே:— பாடலம், பாதிரி

பி:— பாடலம், புன்காலி, பாதிரி.

சூ:— புன்காலி, பாடலம், பாதிரி.

க:— பாடலம், பாதிரி.

**நாணல், பிரம்பு, திரள்கோரை, வாட் கோரை, விழற்புல், வெள்ளரி, கக்கரி, ஊமத்தை, சிறுபூளை, வழுதிலை, நீர் முள்ளி இவற்றின் பெயர்.**

சரவணங் காசைசர மன்றிச்சி வேதையுஞ்
சாற்றரிய நாணலின்பேர்.
சாதிவேத் திரமுடன் சூரலிம் மூன்றுந்
தழைத்திடும் பிரம்பின் பெயர்
எருவைபஞ் சாய்திறட் புல்லுடன் சாயாப்பு
லெனவருங் கோரைப்பெய
ரீட்டியசெ ருந்திவாட் கோரையின் பெயர்விரண
மென்பதுவி ழற்புலின்பேர்
உருவாரு கம்வெள்ள ரிப்பெயர் வாலுங்கி
யொன்றுமே கக்கரிப்பே
ருன்மத்து மத்தைமத மத்தையே யூமத்தை
யுழிஞைசிறு பூளைப்பெயர்
மருகத்தி வங்கம்வழு துணைவழுதி லைப்பெயர்
போகில்வங் கணமுமாகும்
பெற்றியுள முண்டகங் கண்டல்நீர் முள்ளியின்
பெயர்விரி நீலியாமே! (4)

*சரவணம், காசை, சரம், அன்றி சிவேதையும்
சாற்ற அரிய நாணலின் பெயர்.
சாதி, வேத்திரம்-- உடன், சூரல் இம்மூன்றும்
தழைத்திடும் பிரம்பின் பெயர்.
எருவை, பஞ்சாய், திரட்புல்— உடன், சாயாப்புல்.
என வரும் கோரைப்பெயர்.
ஈட்டிய செருந்தி வாட்கோரையின் பெயர்
விரணம் என்பது விழற்புலின் பேர்.
உருவாருகம் வெள்ளரிப் பெயர். வாலுங்கி
ஒன்றுமே கக்கரிப்பேர்.

உன்மத்து, உமத்தை, மதமத்தையே, ஊமத்தை
உழிஞை, சிறுபூளைப்பெயர்,
மருகத்தி, வங்கம். வழுதுணை, வழுதிலைப்பெயர்;
பேசில் வங்கணமும் ஆகும்.
பெற்றி—உள முண்டகம், கண்டல், நீர்முள்ளியின்
பெயர், விரிநீலியும் ஆமே! (128)

**நாணலின் பெயர்**

சே:— காசை, நாணல்.

பி.— கானசரம், காமவேழம், சரவணம், சிவேகை, காசை, நாணல்.

சூ:— சரம், காசை, காசம், நாணல்.

க:— காசை, நாணல்.

**பிரம்பின் பெயர்**

சே:— வேத்திரம், சாதி, சூரல், பிரம்பு.

பி:— சாதி, வேத்திரம், சூரல், பிரம்பு.

சூ:— சாதி, வேத்திரம், சூழல், பிரம்பு.

க:— சாதி, பிரம்பு, வெதிரம், சூரல்.

**திரள்கோரையின் பெயர்**

பி:— எருவை, சாய், பஞ்சாய் திரள்கோரை.

சூ:— சாய், பஞ்சாய்க்கோரை.

க:— கண்டூரம், சாய்ப்புல், எருவை.

**வாட்கோரையின் பெயர்**

சே:— செருஞ்சி, வாட்கோரை.

பி:— செருந்தி, வாட்கோரை.

சூ:— செருந்தி, வாட்கோரை.

**விழற்புல்லின் பெயர்**

சே:— விரணம், விழற்புல்

பி:— விரணம், விழல், விழற்புல்.

**வெள்ளரியின் பெயர்**

பி:— உருவாரம், வெள்ளரி.

தி:— உருவாரம், வெள்ளரி.

**கக்கரியின் பெயர்**

பி:— வாலுங்கி, கக்கரி.

தி:— வாலுங்கி, கக்கரி.

**ஊமத்தையின் பெயர்**

சே:— உன்மத்தம், மத்தம், ஊமத்தை

பி:— உன்மத்தம், ஊமத்தை.

தி:— உன்மத்தம், ஊமத்தை.

க:— உன்மத்தகம், ஊமத்தை,

**சிறுபூளையின் பெயர்**

சே:— உழிஞை, சிறுபூளை

பி:— உழிஞை, சிறுபூளை.

தி:— உழிஞை, சிறுபூளை.

க:— உழிஞை, சிறுபூளை.

## வழுதிலைப் பெயர்

சே:— வங்கம், பிருகதி, வழுதுணை, வழுதலை,

பி:— வழுதுணை, வங்கம், பிருகதி.

சூ:— வங்கம், வழுதுணை.

க:— வழுதுணை, வங்கம், பிருகதி, வங்கணம்.

## நீர்முள்ளியின் பெயர்

சே:— நீர்முள்ளி, முண்டகம்.

பி:— முண்டகம், நீர்முள்ளி.

சூ:— கண்டல், முண்டகம், நீர்முள்ளி.

க:— முண்டகம், முள்ளி.

## தாழை, வஞ்சி, ஏலமி, புன்கு, நொச்சி, பராய்மரம், வெட்பாலை, நாவல், குழிநாவல், இவற்றின் பெயர்

மடிமுண்ட கங்கண்டல் கேதகைமு டங்கலொடு
மண்டலி முகலிகைதை
மன்னுகத் திகைதாழை யின்பெயர் வானிரம்
வஞ்சுளஞ் சேனவஞ்சி
துடியாஞ்சி யேலமிரு பெயரால தந்தந்
துலங்குகாஞ் சனமிலஞ்சி
சொல்லிய தகாந்தமோ ரைந்துபெயர்(புன்கிந்திர)
சுரியமொடு சிந்துவாரம்
நெடியநீர்க் குண்டியொரு மூன்றுபெய ரேநொச்சில்
நீள்விட்டில் புக்கினுடனே
நீண்டபசு நாமூன்று மேபரா யின்பெயர்
நெருங்குகிரி மல்லிகையுடன்

**குடசம்வெட் பாலையின் பெயர்சம்பெ னும்பெயர்**
**கொண்டதே நாவலன்றிக்**
**குளிநாவ லின்பெயர் சாதேவ மென்னக்**
**குறித்தனர் தமிழ்ப்புலவரே!** (5)

*மடி, முண்டகம், கண்டல், கேதகை, முடங்கல்— ஒடு,
மண்டலி, முகலி, கைதை,
மன்னு கத்திகை, தாழையின் பெயர். வானிரம்,
வஞ்சுளம், சேனவஞ்சி.
துடி, ஆஞ்சி, ஏலம் இருபெயர். ஆலம், தந்தம்,
துலங்கு காஞ்சனம், இலஞ்சி,
சொல்லிப தகாந்தம் ஓர் ஐந்து பெயர் புன்கு.
இந்திர சுரியம்—ஒடு, சிந்துவாரம்,
நெடிய நீர்குண்டி ஒரு மூன்று பெயரே நொச்சில்
நீர்விட்டில், புகசு—இன்—உடனே,
நீண்டபசுநா மூன்றுமே பராயின் பெயர்.
நெருங்கு கிரிமல்லிகையுடன்
குடசம் வெட்பாலையின் பெயர். சம்பு எனும்
கொண்டதே நாவல். அன்றிக் [பெயர்
குழிநாவலின் பெயர் சாதேவம் என்னக்
குறித்தனர் தமிழ்ப்புலவரே! (129)

**தாழையின் பெயர்**

**சே**:— கண்டல், கேதகை, மடி, கைதை, முடங்கல், தாழை.

**பி**:— முண்டகம், மடி, [கைதை, முடங்கல், கண்டல், கேதகை, முசலி, தாழை.

**சூ**:— முண்டகம், முடங்கல், கைதை, முசலி, மடி, கண்டல், கேதகை, தாழை.

**க**:— முடங்கல், மடி, கண்டல், கேதகை, கைதை, தாழை.

### வஞ்சியின் பெயர்

பி:— வானீரம், வஞ்சுளம், வஞ்சி.

க:— அருச்சுணம், வானீரம், வஞ்சுளம்,வஞ்சி.

### ஏலத்தின் பெயர்

சே:— துடி, ஏலம்.

பி:— இலாஞ்சி, துடி, ஏலம்.

சூ:— துடி, ஆஞ்சி, ஏலம்.

க:— துடி: ஏலம்.

### புன்கின் பெயர்

சே:— நத்தமாலம், புன்கு.

பி:— நத்தமாலம், காஞ்சனம், புன்கு.

சூ:— கரஞ்சகம், புன்கு.

க:— காஞ்சனம், புன்கு.

### நொச்சியின் பெயர்

சே:— சிந்துவாரம், நீர்குண்டி, நொச்சி.

### பராய்மரத்தின் பெயர்

பி:— பசுநா, விட்டில், புக்கு, பராய்மரம்.

சூ:— பசுநா, விட்டில், புக்கு, பராய்மரம்.

### வெட்பலைர்யின் பெயர்

சே:— குடசம், வெட்பாலை.

பி:— குடசம், கிரிமல்லிகை, வெட்பாலை.

சூ:— குடசம், கிரிமல்லிகை, வெட்பாலை.

சே:— சம்பு, நாவல்.

பி:— ஆருகதம், சம்பு, நேரேடம், நாவல்.

சூ:— சம்பு, நேரேடு, நாவல்.

க:— சம்பு, நாவல்.

### குழிநாவலின் பெயர்

பி:— சாதேவம், குழிநாவல்

சூ:— சாதேவம், குழிநாவல்.

### ஞாழல், குருக்கத்தி, சதுரக்கள்ளி, செம்பரத்தை, ஒட்டை (ஓடை) கஞ்சா, வெட்சி, நறுவிலி, மகரவாழை, மௌவல் இவற்றின் பெயர்.

நறவம்நா கம்பலினி சுள்ளலொரு நான்குமே
ஞாழலதி[1] முத்தகமுடன்
நாகரியி லாங்கலி குருகுவா சந்திமா
தவிகுருக் கத்திநாமம்
ஏறியும்வச் சிரம்வச்சி ராங்கமொடு கண்டீர்வ
மென்பசது ரக்கள்ளிபே
ரியம்புமந் தாரமே செம்பரத் தைப்பெய
ரெண்ணிய யுலவையொட்டை
வெறிகொள்கஞ் சங்குல்லை கஞ்சாவி ரண்டுபெயர்
வினவிடுஞ் செச்சைகுல்லை
மேவுசிந் [2]துரமொடு சிந்துவொரு நான்குமே
வெட்சியலி [3]செம்பிரண்டும்

1. ஞாழலக எனல் வேண்டும். 2. தூரமொடு எனல் வேண்டும் 3 செலுயிரண்டும் எனல் பொருந்தும்.

நறுவிலிப் பெயர்மருகு மகரவா ழைப்பெயர்
நலமுடைய மௌவல் குளவி
நாட்டியவி ரண்டுமே மௌவன்மல் லிகைக்குரிய
நாமமென் றோதினாரே! (6)

*நறவம், நாகம், பலினி, சுள்ளல், ஒரு நான்குமே
ஞாழல். [1]அதிகம், முத்தகம் உடன்,
நாகரி, இலாங்கலி, குருகு, வாசந்தி, மாதவி,
குருக்கத்தி நாமம்.
எறியும் வச்சிரம், வச்சிராங்கம்—ஒடு, கண்டீர்வம்,
என்ப சதுரக்கள்ளிபேர்.
இயப்பு மந்தாரமே செம்பரத்தைப் பெயர்.
எண்ணிய உலவை ஒட்டை.
வெறிகொள் கஞ்சம், குல்லை, கஞ்சா இரண்டு பெயர்.
வினவிடும் செச்சை, குல்லை,
மேவு[2] சிந்தூரம்—ஒடு, சிந்து, ஒரு நான்குமே
வெட்சி. அலி, [3]செலு இரண்டும்
நறுவிலிப் பெயர். மருகு மகரவாழைப் பெயர்.
நலமுடைய மௌவல், குளவி,
நாட்டிய இரண்டுமே மௌவல்மல்லிகைக்கு
உரிய நாமம் என்று ஓதினாரே! (130)

**ஞாழலின் பெயர்**

**சே:—** நறவன், சுள்ளி, நாகம், ஞாழல்.

**பி:—** நாகம், பலினி, ஞாழல்.

**சூ:—** பலினி, ஞாழல்.

**க:—** நாகம், சுள்ளி, நறவம், ஞாழல்.

1 அதி என்றுமட்டுமுளது. 2 சிந்துரம் என்றுளது.
3 செம்பு என்றுளது.

### குருக்கத்தியின் பெயர்

**சே:—** குருகு, மாதவி, குருக்கத்தி.

**பி:—** அதிகம், முத்தகம், மாதவி, வாசந்தி குருகு, நாகரி, குருக்கத்தி.

**சூ:—** குருகு, நாகரி, வாசந்தி, குருக்கத்தி.

**க:—** குருகு, குருக்கத்தி, மாதவி.

### சதுரக்கள்ளியின் பெயர்

**சே:—** வச்சிராங்கம், கண்டீர்வம், வச்சிரம், சதுரக்கள்ளி.

**பி:—** வச்சிராங்கம், கண்டீர்வம், அயிலி, வச்சிரவிருக்கம், சதுரக்கள்ளி.

**சூ:—** வச்சிராங்கம், கண்டீர்வம், வச்சிரம், சதுரக்கள்ளி.

### செம்பரத்தையின் பெயர்

**பி:—** மந்தாரம்.

### (ஒட்டை)ஓடையின் பெயர்

**சே:—** உலவை, ஓடை.

**பி:—** உலவை, ஓடை.

**சூ:—** உலவை, ஓடை.

### கஞ்சாவின் பெயர்

**சே:—** கஞ்சம், குல்லை, கஞ்சா,

**பி:—** கஞ்சம், குல்லை,கஞ்சா,

## வெட்சியின் பெயர்

சே:— செச்சை, சிந்தூரம், வெட்சி.

பி:— சிந்தூரம், குல்லை, செச்சை, வெட்சி.

சூ:— குல்லை, செச்சை, சிந்தூரம், வெட்சி.

[illegible].— செச்சை, சிந்தூரம், வெட்சி.

## நறுவிலியின் பெயர்

பி:— அலி, செலு, வலி, நறுவிலி.

சூ:— அலி, நறுவிலி.

## மகரவாழையின் பெயர்

பி:— மருகு, தானம், மகரவாழை

சூ:— மருகு, மகரவாழை

## மௌவலின் பெயர்

சே:— மாலதி மௌவல்.

பி:— வனமல்லிகை, குளிர்வாரம், மௌவல்.

சூ:— விசகலி, மௌவல், மாலதி.

## சுண்டில், வறட்சுண்டில், துளசி, தும்பை, பிரண்டை, சீந்தி, சபூர்ச்சிக்கொடி, சபூர்ச்சிக்காய், கள்ளி, கற்றாழை, காஞ்சொறி, பாலை, கருவிளம் (காக்கணம்) இவற்றின் பெயர்.

சுச்சிலே சுண்டிலின் பெயர் வறட்[1] சுண்டிலே
சொல்விற்ச மங்கையாகும்
துழாய்வனங் குல்லைதுள பந்துளசி நாற்பெயர்
துரோணமே தும்பைப்பெயர்

---

1 வறசுண்டிலே என்றுளது.

**வச்சிரவல் லியினொடு கிரிட்டியி ரண்டுமே**
**வைகும்பி ரண்டைப்பெயர்.**
**வந்திகை சிலந்திசீ வனியமுத வல்லியு**
**மதித்திடுஞ் சீந்திப் பெயர்.**
**கச்சூர மேகழற் பெயர்கழற் காயே**
**களங்குமுழல் கழலுமாகுங்**
**கள்ளியே யரலையொடு (குமரிகற் றாழை)யாங்**
**கண்டூரி காஞ்சொறிப்பேர்.**
**நச்சியசீ (வந்)திசீ வனிபறலி பட்டிகை**
**நான்குமே பாலைப்பெயர்.**
**நண்ணுகரு விளமுய்கை கண்ணிகாக் கணமென**
**நவின்றனர் தமிழ்ப்புலவரே!** 7

*சுச்சிலே சுண்டிலின் பெயர் வறட்சுண்டிலே
சொல்லில் சமங்கை ஆகும்.
துழாய்,வனம், குல்லை, துளபம்,துளசி நாற்பெயர்
துரோணமே தும்பைப் பெயர்.

வச்சிரவல்லி—இன்-ஒடு, கிரிட்டி இரண்டுமே
வைக்கும் பிரண்டைப்பெயர்.
வந்திகை, சிலந்தி, சீவனி, அமுதவல்லி—உம்,
மதித்திடும் சீந்திப் பெயர்.

கச்சூரமே கழற்பெயர். கழற்காயே
களங்கு, முழல், கழலும் ஆகும்.
கள்ளியே அரலை-ஒடு குமரி கற்றாழை ஆம்
கண்டூரி காஞ்சொறிப் பேர்.

நச்சிய சீவந்தி, சீவனி, பறலி, பட்டிகை,
நான்குமே பாலைப்பெயர்.
நண்ணு கருவிளம், உய்கை,கன்னி, காக்கணம்—என
நவின்றனர் தமிழ்ப்புலவரே! (131)

**சுண்டிலின் பெயர்**

**பி:—** சுச்சு, சுண்டில்.

**தி:—** சுச்சு, சுண்டில்.

### வறட்சுண்டிலின் பெயர்

பி:— சுமங்கை, வறட்சுண்டில்.

சூ:— சுமங்கை, வறட்சுண்டில்.

### துளசியின் பெயர்.

சே:— துளசி, குல்லை, துளபம், வனம், துழாய்.

பி:— குல்லை, முடி, துளவம், வனம், பிருந்தம், துளசி.

சூ:— குல்லை, துளவு, துழாய், வனம், துளசி.

### தும்பையின் பெயர்.

சே:— துரோணம், தும்பை.

பி:— துரோணம், தும்பை.

சூ:— துரோணம், தும்பை.

### பிரண்டையின் பெயர்.

சே:— வச்சிரவல்லி, பிரண்டை.

பி:— வச்சிரவல்லி, பிரண்டை.

### சீந்திலின் பெயர்.

சே:— அமுதவல்லி, சீந்தில்.

பி:— அமுதவல்லி, சீவந்தி, சீந்தில்.

சூ:— அமுதவல்லி, சீந்தில்.

அ:— அமுதவல்லி, சீந்தில்.

### கழற்சிக்கொடியின் பெயர்.

**சே:—** கொடி, கழல், கழங்கு, கழங்கின்கொடி.

**பி:—** கழங்கு, முழல், கர்ச்சூரம், கழற்கொடி.

**தி:—** கர்ச்சூரம், கழற்கொடி.

### கழற்காயின் பெயர்.

**சே:—** கழங்கு, முழல்.

**பி:—** முழல், கழங்கு.

**தி:—** கழங்கு, முழல்.

### கள்ளியின் பெயர்

**சே:—** (சதுரக்கள்ளி, வச்சிராங்கம், கண்டீர்வம்)

**பி:—** (சதுரக்கள்ளி, வச்சிராங்கம், கண்டீர்வம், அயிலி, வச்சிரவிருக்கம்)

**தி:—** (சதுரக்கள்ளி, கண்டீர்வம், வச்சிரம்)

### கற்றாழையின் பெயர்

**சே:—** குமரி, கற்றாழை.

**பி:—** குமரி, கற்றாழை.

**தி:—** குமரி, கன்னி, கற்றாழை.

**க:—** குமரி, கற்றாழை.

### காஞ்சொறியின் பெயர்

**சே:—** கண்டூரம், காஞ்சொறி.

**பி:—** கண்டூதி, காஞ்சொறி.

**தி:—** கண்டூதி, காஞ்சொறி.

## பாலையின் பெயர்

பி:— சீவந்தி, சீவனி, பாலை.

சூ:— சீவந்தி, சீவனி, பாலை.

## கருவிள (காக்கண)த்தின் பெயர்.

சே:— சன்னி, கிகிணி, கருவிளை, காக்கணம்.

பி:— கிகிணி, கன்னி, கருவிளை, காக்கணம்.

சூ:— கன்னி, காக்கணம், கிகிணி.

## கருங்காலி, செங்கருங்காலி, காயா, குரா, துரிஞ்சில், ஆச்சா, ஆயில், அழிஞ்சில், இலந்தை, இலந்தைப்பழம், இவற்றின் பெயர்

கதிரமென் பதுகருங் காலியாஞ் செங்கருங்
காலிசிறு மாரோட்டமாங்
காசையஞ் சனிபூவை யல்லிபுன் காலியே
காயாவி னாமமாகும்
முதிர்கோடி லங்கொட்ட மொடுகோபி தாரமே
[1]மொழியுங்கு ராமரப்பேர்.
முன்னமொடு சிலையோடை சிக்கரி யுளிஞ்சிலே
முற்றியது ரிஞ்சலின்பேர்.
அதிராம ராமரஞ் சாலமா யாச்சுள்ளி
யாச்சாம ரத்தின்பெய
ராயிலே யாயிலின் பெயர்செம்ம ரத்துடன்
னங்கோல மேயழிஞ்சில்
வதறிகோற் கொடிகோலி ரத்திகுல் வலியென்று
வருமைந்து பெயரிலந்தை
மற்றதன் கனிகோல மொடுகொண்டை யெனவே
வகுத்தனர் தமிழ்ப்புலவரே! (8)

---

1 யொழியும் என்றுளது

*கதிரம் என்பது கருங்காலியாம். செங்கருங்காலி
சிறுமாரோட்டம் ஆம்.
காசை, அஞ்சனி, பூவை, அல்லி, புன்காலி—ஏ
காயாவின் நாமம் ஆகும்.

முதிர் கோடிலம், கொட்டம்,—ஒடு, கோபிதாரமே
மொழியும் குராமரப்பேர்.
முன்னம்—ஒடு, சிலை, ஓடை, சிக்கரி, உளிஞ்சிலே
முற்றிய துரிஞ்சலின்பேர்.

அதிரா மராமரம், சாலமா, ஆ, சுள்ளி,
ஆச்சாமரத்தின் பெயர்.
ஆயிலே ஆயிலின் பெயர். செம்மரத்துடன்
அங்கோலமே அழிஞ்சில்.

வதரி, கோற்கொடி, கோலி, இரத்தி, குல்வலி என்று
வரும் ஐந்து பெயர் இலந்தை.
மற்று அதன் கனி கோலம்-ஒடு, கொண்டை
எனவே
வகுத்தனர் தமிழ்ப்புலவரே! (132)

**கருங்காலியின் பெயர்.**

சே:— கதிரம், கருங்காலி.

பி:— கதிரம், கருங்காலி.

சூ:— கதிரம், கருங்காலி.

க:— கதிரம், கருங்காலி.

**செங்கருங்காலியின் பெயர்.**

பி:— சிறுமாரோட்டம், செங்கருங்காலி.

**காயாவின் பெயர்.**

சே:— காசை, பூவை, காயா.

பி:— பூவை, அஞ்சனி, அல்லி, புன்காலி, காசை, வச்சி, காயா.

சூ:— அல்லி, புன்காலி, காசை, அஞ்சனி, பூவை, காயா.

க:— காயா, காசை, (மால்வண்ணப்)பூவை.

### குராவின் பெயர்

சே:— கோட்டம், குடிலம், கோபிதாரம், குரா.

பி:— கோட்டம், குடிலம், கோபிதாரம், குரா.

சூ:— கோட்டம், குரவம், குரா.

க:— கோவிதாரம், குரா.

### துரிஞ்சிலின் பெயர்

பி:— சீக்கரி, முன்னம், துரிஞ்சில், உசிலை.

சூ:— முன்னம், சீக்கரி, துரிஞ்சில்.

### ஆச்சாவின் பெயர்

சே:— சாலம், மராமரம், ஆ, ஆச்சா.

பி:— சாலம், மராமரம், ஆ, ஆச்சா.

சூ:— சாலம், சுள்ளி, மராமரம், ஆ. ஆச்சா.

க:— சாலம், மாமரம், ஆ, ஆச்சா.

### ஆயிலின் பெயர்

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.

### அழிஞ்சிலின் பெயர்

சே:— அழிஞ்சில், சேமரம், அங்கோலம்.

பி:— சேமரம், அங்கோலம், அழிஞ்சில்.

சூ:— அங்கோலம், சே, சேமரம், அழிஞ்சில்.

க:— அங்கோலம், அழிஞ்சில்.

### இலந்தையின் பெயர்

சே — இரத்தி, வதரி, இலந்தை.

பி:— குல்லரி, குவலி, கோற்கொடி, கோலீ, இரத்தி, வதரி, இலந்தை.

சூ:— வதரி, கோற்கொடி, கோலி, குவலி, இலந்தை.

க:— இரத்தி, இலந்தை.

### இலந்தைப் பழத்தின் பெயர்

பி:— கோலம், கோண்டை.

சூ:— கோலம், கோண்டை.

## ஆல், அரசு, மரலி(இத்தி), பனை, இளம்பனை, இலுப்பை, எட்டி, இவற்றின் பெயர்.

வடமரந் தொன்மரம் பழுமரம் காய்மரம்
வளர்கோளி மறியாலமால்
மரப்பெய [1]ரியக்குரோ தத்துட னெட்டாம்
மராமரம் போதிகணவ
மடர்குஞ்ச ராசனந் திருமரஞ் சுவலை
பணையச்சு வதம்பிப்பிலம்
அடுத்தவொன் பதுமரசி னாமமாஞ் சுவைகோலி
யறையிரந் தரியிரத்தி
யொடுமறலி நான்குபெயர் தாளி (தா லம்) பெண்ணை
யுற்றநீ லங்கருந்தா
ளோடுபுற் பதியோங்தை பனைநாலி ரண்டுபெய
ருரையிளம் பனைபோந்தையாம்

---

1 நியச்குரோ எனல் வேண்டும்.

நெடுமைசே ரட்டிகுலி கத்துடன் மதூகமே
நிலைபெறுமி லுப்பைப்பெயர்.
நீள்காஞ்சி ரங்கோட ரங்காள மூன்றுபெயர்
நிகழெட்டி மரமாகுமே. (9)

* வடமரம், தொன்மரம், பழுமரம், காய்மரம்,
வளர் கோளி, மறி, ஆலம், ஆல்—
மரப்பெயர்; [1]நியக்குரோதம் அத்துடன் எட்டாம்.
மராமரம் போதி, கணவம்,
அடர் குஞ்சராசனம், திருமரம், சுவலை,
பணை, அச்சுவதம், பிப்பிலம்,
அடுத்த ஒன்பதும் அரசின் நாமம் ஆம். சுவைகோலி,
அறை, இரந்தரி, இரத்தி.
ஒடு மறலி நான்கு பெயர். தாளி, தாலம், பெண்ணை,
உற்ற நீலம், கருந்தாள்
ஒடு புற்பதி, போந்தை, பனை [2]நாலிரண்டு பேர்.
உரை இளம்பனை போந்தை ஆம்.
நெடுமைசேர் அட்டி, குலிகம், அத்துடன் மதூகமே
நிலைபெறும் இலுப்பைப் பெயர்.
நீள் காஞ்சிரம், கோடரம், காளம் மூன்றுபெயர்
நிகழ் எட்டிமரம் ஆகுமே! (133)

## ஆலின் பெயர்

**சே:—** பூதவம், கான்மரம், வடமரம், தொன் மரம், பழுமரம், கோளி, ஆல்.

**பி:—** வடமரம், தொன்மரம், பூதவம், கான் மரம், பழுமரம், நியக்குரோதம், கோளி, ஆல்.

---

1 இயக்குரோதம் என்றுளது. 2 — ?

சூ:— வடம், நியக்குரோதம், பூதம், கான்மரம், தொன்மரம், கோளி, பழுமரம்.

க:— ஆல், வடம், தொன்மரம், பழுமரம், காமரம், கோளி, பூதவம்.

### அரசின் பெயர்

சே:— கணவம், பணை, மராமரம், போதி, அச்சுவத்தம், பிப்பிலம், அரசு.

பி:— சுவலை, அச்சுவத்தம், பிப்பிலம், போதி, திருமரம், குஞ்சராசனம், பணை, கணவம், அரசு,

சூ:— சுவலை, குஞ்சராசனம், அச்சுவத்தம், திருமரம், பணை, போதி, கணவம், பிப்பிலம், அரசு.

க:— பணை, போதி, அச்சுவத்தம், பிப்பிலம், கணவம், அரசு, மாமரம், திருமரம்.

### மறலியின் பெயர் (இத்தி)

சே:— இரத்தி, இல்லி.

பி:— இறலி, இரத்தி.

சூ:— இத்தி, சுவி, இரத்தி, இரத்திரி, இறலி.

க:— இரத்தி, இறலி.

### பனையின் பெயர்

சே:— பெண்ணை, தாலம், புற்றாளி, போந்தை, பனை.

பி:— போந்து, தாலம், பெண்ணை, புற்பதி, தாளி, கரும்புறம், புற்றாளி, பனை.

சூ:— தாலம், பெண்ணை, புல், தாளி, புற்பதி, பனை.

க:— புற்றாளி, பனை, பெண்ணை, போந்து, நீலம், கருந்தான், தாலம்.

### இளம்பனையின் பெயர்.

சே:— போந்தை.

பி:— போந்தை.

### இலுப்பையின்பெயர்

சே:— மதூகம், இருப்பை.

பி:— குலிகம், இருப்பை, மதூகம், சந்தான கரணி, இலுப்பை.

சூ:— மதூகம், குலிகம், இருப்பை.

க:— இருப்பை, மதூகம்.

### எட்டியின் பெயர்.

சே:— காஞ்சிரை, எட்டி.

பி:— காளம், காஞ்சிரை, கோடரம், எட்டி.

சூ:— கோடரம், காளம், காஞ்சிரை, முட்டி, எட்டி.

க:— காஞ்சுரை, எட்டி.

## அத்தி, கோங்கு, கடம்பு, வேங்கை, கருக்காய், கொன்றை, வன்னி, அசோகு இவற்றின் பெயர்.

உதும்பரங் கோளியத மதவத்தி நான்குபெய
ருன்னரிய துருமோற்பல
மூயர்குயவு கன்னிகா ரங்கொங்கு மூன்றுபெய
ரோதிடும் தூபநீபங்
கதம்பம்வி சாலமின் புளியிந்து மாரமொடு
காட்டுபிரி யகமொரேமுங்

**கடம்புபிர சாரநீள் பீதார கந்திமிசு**
**கணிதிமிலோ டைந்துபெயரு**
**[1]மிதம்பெரு வேங்கையரி தகிபத்தி யங்கடு**
**வெனப்படுங் கடுமரப்பே**
**ரிதழிதா மங்கடுக் கையுடன் மதலையு**
**மியம்பரிய கொன்றையின்பேர்.**
**விதங்கொள்கலி சஞ்சமி குலிசமுப் பெயருமே**
**மேவிடும் வன்னியின்பேர்**
**மிகுசெயலை பிண்டிகா கோளியா சோகென**
**விளம்பிடும் பெயராகுமே!**

*உதும்பரம், கோளி, அதம், அதவு, அத்தி நான்கு
பெயர்
உன்ன அரிய துருமோற்பலம்
உயர் குயவு, கன்னிகாரம், கோங்கு மூன்று பெயர்.
ஓதிடும் தூபம், நீபம்,
கதம்பம், விசாலம், இன்புளி, இந்துமாரம்—ஒடு,
காட்டு பிரியகம், ஓர் ஏழும்
கடம்பு, பிரசாரம், நீள் பீதாரகம், திமிசு,
கணி, திமில்—ஓடு, ஐந்து பெயரும்
[2]இதம்பெறு வேங்கை. அரிதகி, பத்தியம், கடு,
எனப்படும் கடுமரப்பேர்.
இதழி, தாமம், கடுக்கை—உடன், மதலையும்
இயம்ப அரிய கொன்றையின் பேர்.
விதம்கொள் கலிசம், சமி, குலிசம், முப்பெயருமே
மேவிடும் வன்னியின் பேர்.
மிகு செயலை, பிண்டி, காகோளி, அசோகு என
விளம்பிடும் பெயராகுமே! (134)

---

1 மிதம்பெறு எனலும்பொருந்தும்.
2 இதம்பெரு என்றுளது.

### அத்தியின் பெயர்

சே:— அதவு, தும்பரம், அத்தி.

பி:— அதவு, கோளி. உதும்பரம், அத்தி.

சூ:— அதவு, உதும்பரம். கோளி, அதம், அத்தி.

க:— உதும்பரம், அந்தி.

### கோங்கின் பெயர்

சே:— ஞாழல், துருமோற்பலம், கன்னிகாரம், பவணி, பிணர், கோங்கு.

பி:— கன்னிகாரம், துருமோற்பலம், குயா, பிணர், கோங்கு.

சூ:— துருமோற்பலம், கன்னிகாரம், கோங்கு.

க:— இணர், கன்னிகாரம், கோங்கு.

### கடம்பின் பெயர்

சே:— கதம்பம், விசாலம், நீபம், கடம்பு.

பி:— கதம்பம், விசாலம், நீபம், இந்துளம், மரா, கடம்பு.

சூ:— இந்துளம், மரா, கதம்பம், நீபம், கடம்பு.

க:— நீபம், கதம்பம், கடம்பு.

### வேங்கைமரத்தின் பெயர்

சே:— திமிசு, திமில், கணி, வேங்கை.

பி:— பீதசாலம், கணி, திமிசு, திமில், வேங்கை.

சூ:— கணி, பீதசாலம், திமிசு, வேங்கை.

க:— திமிசு, கணி, வேங்கை.

### கடுக்காய் மரத்தின் பெயர்

**சே**: அரிதகி, கடுமரம்.

**பி**:— அரிதகி, கடு, பத்தியம், கடுக்காய்மரம்.

**சூ**:— அரிதகி, பத்தியம், கடுமரம்,

**க**:— அரிதகி, கடு.

### கொன்றையின் பெயர்

**சே**:— இதழி, கடுக்கையார், அக்குவதம் கொன்றை.

**பி**:— இதழி, கடுக்கை, தாமம், மதலை, ஆர்க்குவதம், கொன்றை.

**சூ**:— இதழி, தாமதம், மதலை, கடுக்கை, கொன்றை.

**க**:— இதழி, கொன்றை, தாமம், கடுக்கை.

### வன்னியின் பெயர்

**சே**:— கலி, கஞ்சமி, குலிசம், வன்னி.

**பி**:— கலிசம், சமி, குலிசம்.

**சூ**:— சமி, வன்னி,

**க**:— வன்னி, சமி

### அசோகின் பெயர்

**சே**:— பிண்டி, செயலை, காகோளி, அசோகு.

**பி**:— பிண்டி, செயலை, காகோளி, அசோகு.

**சூ**:— செயலை, பிண்டி, காகோளி, அசோகு.

**க**:— பிண்டி, அசோகு, செயலை, காகோளி.

## மூங்கில், குமிழ், வில்வம், விளா, வேம்பு, மருது, இவற்றின் பெயர்

காம்புபணை திகிரிவேய் சந்திமுந் தூழ்தட்டை
கழைவேணு முளைமுடங்கல்
கண்ணேமி வரைவாரல் வேரல்வேல் கீசகங்
கவடுபா திரிசானகி
ஆம்பல்கிரி பாசுவெதிர் கிளைவிண்டு நெடியோங்க
லரிசபம் பாண்டில்வேழ
மமையம்பு துளைதூம்பு கணையுடன் மூங்கிலபி
தானமோர் முப்பதெட்டாங்
(கூ)ம்பல்க டம்பல்கு மிளின்பெயர் கூவிளங்
கூவிளை [2]மாலூரமே
குறிக்கும்வில் வப்பெயர் கவித்தம்விள வொடுவெள்ளில்
கூறியவி ளாவின்பெயர்
வேம்புபிசு மந்தஞ்ச ருப்பதோ பத்திரம்
விளம்பியவ ருட்டிணிம்பம்
மேவுமா லகமைந்து பெயரருச் சுனமருது
மிக்கபூ தவமாகுமே! 11

*காம்பு, பணை, திகிரி, வேய், சந்தி, முந்தூழ், தட்டை,
கழை, வேணு, முளை, முடங்கல்,
கண், நேமி, வரை, வாரல், வேரல், வேல், கீசகம்,
கவடு, பாதிரி, சானகி,
ஆம்பல், கிரி, பாசு, வெதிர், கிளை, விண்டு, நெடி, ஓங்கல்,
அரி, சபம், பாண்டில், வேழம்,
அமை, அம்பு, துளை, தூம்பு, கணை-உடன், மூங்கில்,
அபிதானம் ஓர் முப்பத்தெட்டாம்.
கூம்பல், கடம்பல், குமிழின்பெயர், கூவிளம்,
கூவிளை, மாலூரம்—ஏ,

1 வெல்லவே என்றுளது. 2 யாலூரமல என்றுளது.

குறிக்கும் வில்வப்பெயர். கவித்தம் விளவொடு,
கூறிய விளாவின் பெயர் வெள்ளில்,
வேம்பு, பிசுமந்தம், சருப்பதோபத்திரம்,
விளம்பிய மருட்டினி, இம்பம்,
மேவும் மாலகம் ஐந்துபெயர், அருச்சுனம், மருது,
மிக்க பூதவம் ஆகுமே! (135)

### மூங்கிலின் பெயர்

**சே:—** காம்பு, திகிரி, கண், வேழம், சந்தி, தூம்பு, முளை, வெதிர், விண்டு, வேரல், முந்தூழ், தட்டை, கீசகம், வேய், பணை, அம்பு, வரை, வேணு, கழை, அமை, ஓங்கல் பாதிரி, கிளை, அரி, பாண்டில், மூங்கில்.

**பி:—** வெதிர், வேய், விண்டு, விண்டல், பணை, நெடில், வரை, அரி, தட்டை, திகிரி, தடம், அமை, வேரல், கழை, தூம்பு, வேழம், காம்பு, கிளை, கீசகம், வேணு, ஓங்கல், முளை, முடங்கல், சந்தி, முந்தூழ், மூங்கில்.

**சூ:—** காம்பு, பாதிரி, முடங்கல், கழை, பணை, விண்டு, நேமி, தூம்பு, வேய், தட்டை, முந்தூழ், துளை, கிளை, முளை, வேணு, ஆம்பல், கீசகம், வேல், வேரல், அரி, அமை, திகிரி, வேழம், வரை, வெதிர், மூங்கில்.

**க:—** விண்டல், கிளை, வேணு, வேரல், திகிரி, கழை, சந்தி, பணை, பாண்டில், கீசகம், ஓங்கல், வேய், தட்டை, வரை முந்தூழ், வெதிர், காம்பு, தூம்பு. அமை, வேழம், முளை, [1] திரிகண்.

### குமிழின் பெயர்

**சே:—** கூம்பல், கடம்பல், குமிழ்.

**பி:—** கூம்பல், கடம்பல், குமிழ்.

---

1 திகிரி, கண் எனல் பொருந்தும்,

தி:— கூம்பல், குமிழ்.

க:— கூம்பல், கடம்பல், குமிழ்.

**வில்வமரத்தின் பெயர்**

சே:— கூவிளம், வில்வம், மாலூரம், கூவிளை.

பி:— கூவிளம், மாலூரம், கூவிளை, மாவிளம், வில்லுவம்.

தி:— வில்வம், மாலூரம், கூவிளம், வில்வமரம்.

க:— வில்லுவம், மாலூரம், கூவிளம்,

**விளாவின் பெயர்**

சே:— வெள்ளில், விளா.

பி:— விளவு, கபித்தம், வெள்ளில், விளா.

தி:— விளைவு, கபித்தம், வெள்ளில், விளா.

க:— வெள்ளில், விளா.

**வேம்பின் பெயர்**

சே:— நிம்பம், வேம்பு.

பி:— நிம்பம், பிசிதம், வேம்பு.

தி:— நிம்பம், பிசு, மர்த்தம், வேம்பு.

க:— நிம்பம், வேம்பு.

**மருதின் பெயர்**

சே:— அருச்சுனம், மருது.

பி:— அருச்சுனம், பூதவம், மருது.

தி:— பூதவம், அருச்சுனம், மருது.

க:— பூதவம், மருது, அருச்சுனம்.

## தருப்பை, வெற்றிலை, வெற்றிலைகொடி, சேம்பு, கீரை, சிறுகீரை, பாகல், சுரை, பீர்க்கு, பெரும்பீர்க்கு இவற்றின் பெயர்.

குசங்குசை [1]குதங்குமு தம்பவுத் திரமுடன்
கூச்சமுந் தெற்பைப்பெயர்
குலவுதாம் பூலமெல் லிரைதிரை யல்மூன்றுங்
குறித்திடும் வெற்றிலைப்பே
ரிசைந்ததாம் பூலிதாம் பூலவலி னாகவலி
யென்பதவ் விலைக்கொடிப்பே
[2]ரேற்றசா னகிசகுட மேசேம்பி னபிதான
மினியசா கினிகீரையாம்
பசுஞ்சிறு கீரைசா கஞ்சில்லி சாகினி
பகர்மேக நாதனும்பேர்
பாகலின் பெயர்கார வல்லியொரு கூலம்
பயின்றிடும் சுரையின் பெயர்.
ஒசிந்திடிந் தும்பிய லாபமூடன் மல்லை
மூன்றுற்ற பீர்ங்கோலமே
யோதுபீர்க் கின்பெயர் படலிகை பெரும்பீர்க்
குயர்ந்தபா டலியுமாமே! 12

*குசம், குசை, குதம், குமுதம், பவுத்திரம்—உடன்,
கூச்சம்–உம், தெற்பைப் பெயர்.
குலவு தாம்பூலம், எல்லிரை, திரையல், மூன்றும்
குறித்திடும் வெற்றிலைப்பேர்.
இசைந்த தாம்பூலி, தாம்பூலவலி, நாகவலி
என்பது அவ் இலைக்கொடிப்பேர்
ஏற்ற சானகி, சகுடம்—ஏ, சேம்பின் அபிதானம்.
இனிய சானகி கீரை ஆம்.

---

[1]குதங்குகுமு என்றுளது.
[2]ரேற்ற சானகி சருடமே செப்பின் என்றுளது.

பசும் சிறுகீரை, சாகம், சில்லி, சாகினி,
பகர் மேகநாதனும் பேர்.
பாகலின் பெயர் காரவல்லி—ஒடு, கூலம்.
பயின்றிடும் சுரையின் பெயர்
ஓசிந்திடும் தும்பி, அலாபம்—உடன், மல்லை,
மூன்று, உற்ற பீர்ங்கோலம்—ஏ,
ஓது பீர்க்கின் பெயர். படலிகை பெரும்பீர்க்கு,
உயர்ந்த பாடலியும் ஆமே! (136)

**தருப்பையின் பெயர்**

சே:— குசை, தருப்பை.

பி:— குசை, குமுதம். கூர்ச்சம், குசம். தருப்பை,

சூ:— குசை, குமுதம். கூர்ச்சம், குசம், தருப்பை.

க:— குசை, தெர்ப்பை.

**வெற்றிலையின் பெயர்**

சே:— நாகவல்லி, தாம்பூலம், வெற்றிலை.

பி — நாகவல்லி, மெல்லிலை, தாம்பூலம், வெற்றிலை.

**வெற்றிலைக் கொடியின் பெயர்**

பி:— மூலவல்லி, இலைக்கொடி.

சூ:— தாம்பூலவல்லி, தாம்பூலி, நாகவல்லி திரையல், மெல்லிலை.

**சேம்பின் பெயர்**

சே:— சகுடம், சேம்பு.

பி:— சாகினி, சகுடம், சேம்பு.

சூ:— சகுடம், சேம்பு.

க:— சகுடம், சேம்பு.

**கீரையின் பெயர்**

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.

**சிறுகீரையின் பெயர்**

சே:— சில்லி, சாகினி, சிறுகீரை.

பி:— சில்லி, சாகினி, மேகநாதம், சிறுகீரை.

சூ:— சில்லி, மேகநாதம், சாகினி, சிறுகீரை.

க:— சிறுகீரை, சாகினி, சில்லி.

**பாகலின் பெயர்**

சே — கூலம், பாகல்.

பி:— காரவல்லி, கூலம், பாகல்.

சூ — கூலம், காரவல்லி, பாகல்.

க:— பாகல், கூலம்.

**சுரையின் பெயர்**

சே:— அலாபு, தும்பி, சுரை.

பி:— தும்பி, அலாபு, சுரை.

சூ:— அலாபு, சுரை.

**பீர்க்கின் பெயர்**

சே:— பீரம், பீர்க்கு.

பி:— பீரம், பீர்க்கு.

சூ:— பீரம், பீர்க்கு.

க:— பீரம், பீர்க்கு.

## பெரும்பீர்க்கின் பெயர்

**சே:**— படலிகை, பெரும்பீர்க்கு.

பி:— படலிகை, பெரும்பீர்க்கு.

நூ:— படலிகை, பெரும்பீர்க்கு.

## மல்லிகை, முல்லை. சிறுசண்பகம், இருவாட்சி, பிச்சி, அலரி, வெட்டுவேர், விளாமிச்சம்வேர், இவற்றின் பெயர்.

மாலிகைபு ருண்டிமா லதிமௌவல் வீசுதலி
மல்லிகை யனங்குமாகும்
மௌவலூ திகைதளவு கற்புமா கதியென
வழங்குபெயர் முல்லையாகும்
கோலமார் சரிதிமா லதியிர -ண மாகுங்
குறித்தசிறு சண்பகப்பேர்,
குலவுமா லதிமௌவல் மயிலையோ டனங்கமே
கூறுமிரு வாச்சிப்பெயர்.
மேலெழு(ங்) கருமுகை பித்திகை யிரண்டும்
விளம்பரிய பிச்சிப்பெயர்
மேவுகவி ரங்[1] கணவி ளத்துடன் கரவீர
மிகுமலரி யயமுமாகும்
மூலகந் தம்வேரி யிருவேலி பீதகம்
மொழிந்தநான் கும்வெட்டுவேர்.
முறைபெறுமி லாமிச்சை வேர்வாசம் விரளமாம்
முனிபண்டு ரைத்தபெயரே! 13

*மாலிகை, புருண்டி, மாலதி, மௌவல், வீசு தலி,
மல்லிகை; அணங்கும் ஆகும்
மௌவல், ஊதிகை, தளவு, கற்பு, மாகதி என
வழங்குபெயர் முல்லை ஆமே.

---

1 கணவீரத்துடன் எனல் பொருந்தும்

கோலம் ஆர் சாதி, மாலதி, இரணம் ஆகும்,
குறித்த சிறுசண்பகப்பேர்.
குலவு மாலதி, மௌவல், மயிலை—ஒடு, அனங்கமே,
கூறும் இருவாட்சிப்பேர்.
மேல் எழும் கருமுகை, பித்திகை, இரண்டும்
விளம்ப அரிய பிச்சிப் பெயர்.
மேவு கவிரம், [1]கணவீரம் அத்துடன் கரவீரம்
இலகும் அலரி, அயமும் ஆகும்.
மூலகந்தம், வேரி, இருவேலி, பீதகம்,
மொழிந்த நான்கும் வெட்டிவேர்.
முறைபெறும் இலாமிச்சைவேர் வாசம், விரளம்ஆம்
முனி பண்டு உரைத்த பெயரே! (137)

### மல்லிகையின் பெயர்

சே:— மல்லிகை, மௌவல்.

பி:— மாலதி, அநங்கம், பூருண்டி, மல்லிகை.

சூ:— பூருண்டி. மாலதி, அனங்கம், மல்லிகை.

க:— மல்லிகை, விசகலி, மௌவல், மாலதி.

### முல்லையின் பெயர்

சே:— மௌவல், தளவம், கற்பு, முல்லை,

பி:— தளவம், சாதி, பிச்சி, முல்லை.

சூ:— தளவு, மாகதி, மௌவல்,யூதிகை,முல்லை.

க:— முல்லை, தளவம்.

---

1 கணவிளம் என்றுளது.

## சிறுசண்பகத்தின் பெயர்

சே:— பித்திகை, சாதி, கருமுகை, மாலதி, சிறு சணபகம்.

பி:— சாதி, மாலதி, சிறுசண்பகம்.

சூ: சாதி, மாலதி, சிறுசண்பகம்.

க:— சிறுசண்பகம், சாதி.

## இருவாட்சியின் பெயர்

சே:— மயிலை, இருவாட்சி.

பி:— மயிலை, அநங்கம், இருவாட்சி.

சூ:— இருவாட்சி, மயிலை.

## பிச்சியின் பெயர்

சே:— (பித்திகை, சாதி, கருமுகை, மாலதி)

பி:— (கருமுகை.பித்திகை.) தளவம்,சாதி, புச்சி.

சூ:— கருமுகை, பித்திகை.

க—: பித்திகை, கருமுகை.

## அலரியின் பெயர்

சே:— கரவீரம், அலரி, கணவீரம்.

பி:— கவீரம், கணவீரம், கரவீரம், அயமரம், அடுக்கு, அலரி.

சூ:— கரவீரம், கவீரம், கணவீரம், அலரி.

க:— அலரி, கரவீரம், கணவீரம்.

### வெட்டுவேரின் பெயர்

சே:— மூலகந்தம், பீதகம், வேரி, இருவேலி, வெட்டிவேர்,

பி:— முடிவாழை, வெட்டுவேர்,

### விலாமிச்சம்வேரின் பெயர்

சே:— வேர் வாசம், இலாமிச்சை.

## கருங்குவளை, செங்கழுநீர், செவ்வல்லி வெள்ளல்லி, குமுதம், அல்லியின் பொதுப் பெயர், கொடிவள்ளை நீர்க்குளிரி, இவற்றின் பெயர்

பைங்குவளை காவிநீ லோற்பலங் குவலயம்
பானலோ டிந்தீவரம்
பண்புடைய நீலமோ ரேழுங்க ருங்குவளை
பாவுகல் லாரத்துடன்
செங்குவளை யுற்பல மரத்தமொரு நான்கும்
சிறந்தசெங் கழுநீர்நறுஞ்
சேதாம்பல் கோபஞ்செவ் வாம்பல்செங்கு
குமுதமொழி
திகழரக் காம்பலைந்தும்
தங்குசெவ் வல்லியாம் வெள்ளல்லி கயிரவந்
தானுமி ரண்டுவகையுந்
தங்குமுத மாங்குமுத மாம்பல் கயிரன்மாந்
தயங்கல்லி யின்பொதுப்பேர்.
பொங்குகுவ லயம்நெய்தல் சமிதமு மதன்பெயர்
போற்றுகொடி வள்ளையின்பேர்.
புகலுநா ளிகமாகும் நீர்க்குளிரி யின்பெயர்
பொருந்துகல் லாரமாமே! 14

*பைங்குவளை, காவி, நீலோற்பலம், குவலயம்,
பானல்—ஓடு, இந்தீவிரம்,
பண்புடைய நீலம், ஓர் ஏழும் கருங்குவளை.
பரவு கல்லாரம், அத்துடன்

செங்குவளை, உற்பலம்,அரத்தம் ஒரு நான்கும்
சிறந்த செங்கழுநீர். நறும்
சேதாம்பல், கோபம், செவ்வாம்பல், செங்குமுதம்,
திகழ் அரக்காம்பல் ஐந்தும் [மொழி

தங்குசெவ்வல்லியாம், வெள்ளல்லி, கயிரவம்,
தானும் இரண்டு வகையும்
தம் குமுதம் ஆம். குமுதம்,ஆம்பல், கயிரவம்ஆம்,
தயங்கு அல்லியின் பொதுப்பேர்;

பொங்கு குவலயம், நெய்தல், சமிதம்—உம்
அதன்பெயர்.
போற்று கொடிவள்ளையின்பேர்,
புகலும் நாளிகம் ஆகும். நீர்க்குளிரியின் பெயர்
பொருந்து கல்லாரம் ஆமே! (138)

**கருங்குவளையின் பெயர்**

**சே:—** நீலோற்பலம், இந்தீவரம், குவலயம், நீலம், பானல், காவி, கருங்குவளை, கல்லாரம்.

**பி:—** பானல், நீலம், உற்பலம், நீலோற்பலம், கருங்குவளை.

**தி:—** பானல், காவி, குவலயம், கருங்குவளை.

**க:—** பானல், காவி, கருங்குவளை.

**செங்கழுநீரின் பெயர்**

**சே:—** செங்குவளை, அரத்தம், உற்பலம், செங்கழுநீர்.

**பி:—** அரத்தம், உற்பலம், செங்குவளை, எருமணம், கல்லாரம், செங்கழுநீர்.

சூ:— அரத்தவுற்பலம், செங்குவளை, கல்லாரம், செங்கழுநீர்.

க:— அரத்தம், உற்பலம், செங்குவளை.

### செவ்வல்லியின் பெயர்

சே:— கைரவம், செவ்வல்லி, செவ்வாம்பல்.

பி:— சேதாம்பல், அரக்காம்பல், செங்குமுதம், செவ்வல்லி.

சூ:— அரக்காம்பல், செங்குமுதம், செவ்வல்லி, சேதாம்பல்.

### வெள்ளல்லியின் பெயர்

பி:— அல்லி, கைரவம், வெள்ளல்லி.

சூ:— அல்லி, கைரவம், வெள்ளல்லி.

### குமுதத்தின் பெயர்

சே:— வெள்ளாம்பல், சேதாம்பல், குமுதம்.

பி:— வெள்ளாம்பல், சேதாம்பல், குமுதம்.

சூ:— வெண்ணெய்தல், குமுதம்.

### அல்லியின் பொதுப்பெயர்

சே:— ஆல்பல், நெய்தல், அல்லி, குமுதம்.

பி:— ஆம்பல், நெய்தல், அல்லி.

சூ:— அல்லி, கைரவம்.

க:— அல்லி, குமுதம், கைரவம்

### கொடிவள்ளையின் பெயர்

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.

### நீர்க்குளிரியின் பெயர்

பி :— கல்லாரம், நீர்க்குளிரி.

சூ:— கல்லாரம், நீர்க்குளிரி.

க.:— கல்லாரம், குளிரி.

## கிழங்கு, வேர், முளை, குருத்து வெண்குருத்து, தளிர், மரக்கன்று, இலை, இவற்றின் பெயர்.

**மூலகங் கந்தமாற் கஞ்சகுன மூலமுடன்**
**முற்றியகி ழங்கைந்துபேர்**
**முந்துசடை தூர்சிவை மூன்றுவே ரின்பெயர்**
**முளைநாம மங்குரங்கால்**
**பாலினுட் படுகுருத் தேபிசின் முருந்தெனப்**
**[1]படுமுளையில் வெண்கு(ரு)த்து**
**பல்லவங் கிசலையம் வல்லரிய லங்கல்குழை**
**பயிலும(ஞ்) சரிகிளைமுறி**
**நாலுடன் நாலுமே தளிர்போத கம்பிள்ளை**
**நற்குழவி [2]பொங்து நான்கும்**
**நன்மரக் கன்றுபன் னந்தகடு தண்ணடை**
**நலங்கொள்பா சடைதமால**
**(மோ)லைச(த) னஞ்சதம் பத்திரந் தழைசாக**
**மொடுபலா சங்குழையடை**
**யுயர்தலங் கிசலையம் பதினாறு பெயருமிலை**
**யுலவையு முரைக்கலாமே! 15**

* மூலகம், கந்தம், மாற்கம், சகுனம், மூலம்—உடன்,
முற்றிய கிழங்கு ஐந்துபேர்.
முந்து சடை, தூர், சிவை மூன்றும் வேரின் பெயர்.
முளைநாமம் அங்குரம், கால்.

---

1 படுமுழையில் என்றுளது. 2 போத்து எனல் பொருந்தும்.

பாலின் உள் படு குருத்தே பிசின், முருந்து என
[1]படுமுளையில் வெண்குருத்து.
பல்லவம், கிசலையம், வல்லரி, அலங்கல், குழை,
பயிலும் மஞ்சரி, கிளை, முறி,
நாலுடன் நாலுமே தளிர். போதகம், பிள்ளை,
நல் குழவி [2]போத்து நான்கும்
நன் மரக்கன்று. பன்னம், தகடு, தண்ணடை,
நலம்கொள் பாசடை, தமாலம்,
ஓலை, சதனம், சதம், பத்திரம், தழை, சாகம்—ஓடு,
பலாசம், குழை, அடை,
உயர் தலம், கிசலையம், பதினாறு பெயரும் இலை.
உலவையும் உரைக்கலாமே! (139)

**கிழங்கின் பெயர்**

**சே**:— மூலம், கந்தம், கிழங்கு.

**பி**:— மூலம், மூலகம், கந்தம், சகுனம், கிழங்கு.

**சூ**:— மூலம், சகுனம், கந்தம், மூலகம்.

**க**:— மூலம், கிழங்கு, தூர்வேர், சிவை, கந்தம்.

**வேரின் பெயர்**

**சே**:— சடை, தூர், சிவை, வேர்.

**பி**:— தூர், சடை சிவை, வேர்.

**சூ**:— தூர், சிவை, வேர்.

**க**:— தூர், வேர், சிவை.

**முளையின் பெயர்**

**பி**:— கால், அங்குரம், முளை.

**சூ**:— கால், அங்குரம், முளை.

---

1 படுமுழையில் என்றுளது. 2 பொந்து என்றுளது.

## குருத்தின் பெயர்

**சூ:—** முருந்து, குருத்து.

**க:—** முருந்து, குருத்து.

## வெண்குருத்தின் பெயர்

**சே:—** முருந்து, அடி வெண்குருத்து.

**க:—** முருந்து, வெண்குருத்து.

## தளிரின் பெயர்

**சே:—** வல்லரி, குழை, முறி, மஞ்சரி, கிசலயம், பல்லவம், அலங்கல், கிளை, தளிர்.

**பி:—** வல்லரி, குழை, முறி, மஞ்சரி, கிசலயம், பல்லவம், அலங்கல், கிளை, தளிர்.

**சூ:—** வல்லரி, கிசலயம், மஞ்சரி, முறி, அலங்கல், பல்லவம், குழை, தளிர்.

**க:—** தளிர், கிளை, வல்லரி, முறி, மஞ்சரி, கிசலையம், பல்லவம், அலங்கல்.

## மரக்கன்றின் பெயர்

**சே:—** பிள்ளை, குழவி, கன்று, போத்து.

**பி:—** போதகம், பிள்ளை, போத்து, குழவி, கால், கன்று.

**சூ:—** குழவி, பிள்ளை, போதகம், போத்து, கன்று.

## இலையின் பெயர்

**சே:—** பத்திரம், ஓலை, பாசடை, தண்ணடை, சாகம், தமாலம், தழை, யாசிலை, அடை, பன்னம், இலை.

பி:— பலாசம், பன்னம், பத்திரம், தகடு, பாசடை, தண்ணடை, சாகை, தமாலம், ஓலை, தழை, பச்சிலை, உலவை, அடை, சதனம், சதம், பத்திரி, தலம், இலை.

சூ: ... தலம், அடை, தகடு, பன்னம், சதனம், பத்திரம், பலாசம், தமாலம், உலவை, இலை.

க:— பத்திரம், பன்னம், தமாலம், தழை, தளம், பலாசம், சதனம், சதம், அடை, இலை

## அரும்பு, பூ, பூவிதழ், பூந்தேன், அகவிதழ், புறவிதழ், பூங்கொத்து, பூந்தாது, இவற்றின் பெயர்.

முகிள்சினை செலுந்திகோரகைமொட்டு நாள்கலிகை
முகைபோகில் [1]கன்னிகலிகம்
முகிழ்நனை சாலகஞ் சாலிகை பதினைந்து
மொக்குளும ரும்பின்பெயர்
தகுமலரி போதுபுட் பஞ்சுமஞ் சும்மையலர்
தாமமல ராலந்துணர்
தார்வீய சும்புனற் பத்துடன் மூன்றுமே
தக்கநற் பூவின்பெயர்.
இகழ்வரிய மடலுமே டுந்தோடு மேபூ
விதட்பெயர் மகரந்தமே
இனியபூந் தேன்பெய ரல்லியக விதழாகு
மிசைபுல்லி புறவிதட்பேர்.
புகலுமஞ் சரிகொந்து கொத்துத்து டர்ச்சிதுணர்
பூங்கொத்தி னாமமகரம்
புக(ல்)கொங்கு கோசரங் கேசரஞ்சீ தரமிவை
பூந்தாதி னாமமாமே! 16

---

[1] கண்ணில் கலிகம் என்றுளது.

*முகிள், சினை, செலுந்தி, கோரகை, மொட்டு, நாள்,
முகை, போகில், [1]கன்னி, கலிகம், (கலிகை,)
முகிழ், நனை, சாலகம், சாலிகை பதினைந்தும்
மொக்குளும் அரும்பின் பெயர்.

தகும் அலரி, போது, புட்பம், சுமம், சும்மை, அலர்,
[2]தாமம், மலர், ஆலம், துணர்,
தார், வீ, அசும்பு, நல் பத்துடன் மூன்றுமே
தக்க நல் பூவின் பெயர்.

இகழ்வு அரிய மடலும், ஏடும், தோடுமே
பூவிதழ் பெயர். மகரந்தமே
இனிய பூந்தேன் பெயர். அல்லி அகஇதழ் ஆகும்.
இசை புல்லி புற இதழ் பேர்.

புகலும் மஞ்சரி, கொந்து, கொத்து, துடர்ச்சி, துணர்,
பூங்கொத்தின் நாமம் ஆகும்.
புகல்கொங்கு, கோசரம், கேசரம், சீதரம், இவை
பூந்தாதின் நாமம் ஆமே! (140)

**அரும்பின் பெயர்**

**சே:**— முகை, நனை, கலிகை, முகிழ், சினை, கோரகம், நகை. கன்னிகை, போகில், மொட்டு.

**பி:**— கலுவடம், நனை, முகை, கன்னிகை, அரும்பு, முகிளம், கலிகை, சாலகம், கோகம், போகில், நகை, மொக்குள்.

**சூ:**— முகை, நனை, கலிகை, போகில், முகுளம், மொக்குள், மொட்டு, கோரகம், சாலகம், அரும்பு.

**க:**— கோரகம், மொட்டு, கலிகை, முகுளம், முகிழ், முகை. போகில், நனை, கலிகம், அரும்பு, சினை, சாலிகை. கண்ணி.

---

1 கண்ணில் கலிகம் என்றுளது.

2 தாமமலாமாலந்துணர் என்றுளது.

### பூவின் பெயர்

**சே:—** அலர், தார், அலரி, போது, சுமனசம், குசுமம் மலர், இணர், வீ, பூ.

**பி:—** தாமம், குசுமம், தார், அலர், வீ, போது, சுண்ணம், சமனசம், பூ, சுமம், துணர், அலரி, ஆலம்.

**சூ:—** குசுமம், போது, தார், அலர், சமனசம், மலர், தாமம், வீ, இணர், துணர், பூ.

**க:—** துணர், இணர், வீ, மலர், போது, விரி, அலர், தார், அலரி, அவிழ்பூ.

### பூவிதட் பெயர்

**சே:—** ஏடு, தோடு, பூவிதழ்.

**பி:—** தாது, அதழ், தண்டு, தோடு, ஏடு, பூவிதழ்.

**சூ:—** ஏடு, தோடு, தளம், மடல், பூவிதழ்.

**க:—** ஏடு, தோடு, பூவிதழ்.

### பூந்தேனின் பெயர்

**பி:—** மகரந்தம், மலர்த்தேன்.

**சூ:—** மகரந்தம், பூந்தேன்.

### அகவிதழின் பெயர்

**சே:—** அல்லி, அகவிதழ்.

**பி:—** அல்லி, அகவிதழ்.

**சூ:—** அல்லி, அகவிதழ்.

**க:—** அகழ்விதழ், அல்லி.

## புறவிதழின் பெயர்

**சே**:— புல்லி, புறவிதழ்.

**பி**:— புல்லி, புறவிதழ்.

**சூ**:— புல்லி, புறவிதழ்.

**க**:— புல்லி புறவிதழ்.

## பூங்கொத்தின் பெயர்

**சே**:— துணர், மஞ்சரி, வல்லரி, தொத்து, இணர், குலை, பூங்கொத்து.

**பி**:— தொத்து, மஞ்சரி, துணர், இணர், தொடர்ச்சி, மலர்க்கொத்து.

**சூ**:— தொத்து, மஞ்சரி, துணர், இணர், குலை, பூங்கொத்து.

**க**:— மஞ்சரி, இணர், துணர், தொத்து, கொத்து, குலை, வல்லரி, பல்லவம்.

## பூந்தாதின் பெயர்

**சே**:— மகரந்தம், கேசரம், கொங்கு, மலர்த்தாது.

**பி**:— கோசரம், மகரம், சிதர், கொங்கு, கேசரம், துணர், இணர், இளர், மலர்த்தாது.

**சூ**:— மகரம்;கொங்கு, கேசரம், துணர் பூந்தாது.

**க**:— மகரந்தம், கொங்கு, கேசரம், பூந்தாது.

## தாதிற்றாள், பழம்பூ, தொடர்ப்பூ, விரிந்தபூ, வாகைப்பூ, மூப்பூ, பலர்தல், காய், பழம், தோல், விதை இவற்றின் பெயர்

தாதிற்ப டுந்தூள் பராகமாஞ் செம்மலுஞ்
சாம்பலுந் தேம்பலுமெனச்
சாத்துமுப் பெயரும்ப ழம்பூத்து டர்ப்பூத்
தனக்குரிய நாமவெதிர்
கோதிலக மலராம் விரிந்தபூ வாகையாங்
குடைபயில் வெற்றியுளபூக்
கோட்டுப்பூ நீர்ப்பூ கொடிப்பூ வருக்கமாங்
கூறுமுப் பூவின்பெயர்.
நீதியுடன் விள்ள [1]லலர்தல்விரி தல்வெடிதல்
[2]நெகிழ்த்தலூ தல்புலர்த்தல்
நீள்பூம லர்ச்சியின் பெயராம்வ டுப்பிஞ்சு
நிகழ்பசுங் காய்த்தீவுளி
தீதில்கனி பாலைபல மெனவாம்ப ழப்பெயர்
சிதளென்ப தோலின் பெயர்.
சேர்ந்தபரல் காழ்கொட்டை விதைவீச மென்னத்
தெரிந்தபெயர் வித்தாகுமே! 17

*தாதில்படும் தூள் பராகமாம். செம்மலும்,
சாம்பலும், தேம்பலும் என
சாற்றும் முப்பெயரும் பழம்பூ, தொடர்ப்பூ
தனக்கு உரிய நாமம் வெதிர்.

கோது இல் அகமலராம் விரிந்தபூ. வாகை ஆம்
கொடை பயில் வெற்றி உள பூ
கோட்டுப்பூ, நீர்ப்பூ, கொடிப்பூ வருக்கமாம்
கூறும் முப்பூவின் பெயர்.

நீதியுடன் விள்ளல், அலர்தல், [3]விரிதல், வெடிதல்,
[4]நெகிழ்தல், ஊதல், புலர்தல்,

---

1 லலர்தல்விரித்தல் என்றுளது. 2 நெகிழ்தலூ எனல் பொருந்தும் 3விரித்தல் என்றுள்ளது. 4நெகிழ்தல் எனறுளது.

நீள் பூ மலர்ச்சியின் பெயராம். வடு, பிஞ்சு,
நிகழ் பசுங்காய், தீவுளி,
தீது இல் கனி, பாலை, பலம், எனவாம் பழப்பெயர்.
சிதள் என்ப தோலின் பெயர்.
சேர்ந்தபரல், காள், கொட்டை, விதை, வீசம் என்னத்
தெரிந்த பெயர் வித்து ஆகுமே! (141)

**தாதிற்றூளின் பெயர்**

பி:— மகரந்தம், சுண்ணம், பராகம், தாதின்தூள்.

சூ:— பராகம், பிரசம், தாதிற்றூள்.

**பழம்பூவின் பெயர்**

சே:— செம்மல், பழம்பூ

பி:— செம்மல், சாம்பல், தேம்பல், பழம்பூ.

சூ:— சாம்பல், செம்மல், பழம்பூ, தேம்பல்.

க:— செம்மல், பழம்பூ.

**தொடர்ப்பூவின் பெயர்**

பி:— இகமலர், வெதிர், தொடர்ப்பூ விரிமலர்.

சூ:— இகமலர், வெதிர், தொடர்ப்பூ, விரிமலர்.

**விரிந்தபூவின் பெயர்**

பி:— இகமலர், வெதிர், தொடர்ப்பூ, விரிமலர்.

சூ:— இகமலர், வெதிர், தொடர்ப்பூ, விரிமலர்.

### வாகைப்பூவின் பெயர்

**பி:**— கல்வியிலும் கேள்வியிலும் கொடையிலும் படையிலும் வென்றவர் அணிவது.

**சூ:**— கல்வி, கேள்வி, குடி, கொடை, படை கட்குள் வாட்டமில்லவரை வென்று மௌலி சூட்டுவது

**க:**— படையிற் கொடையினற் சூதில் வென்றோர் யாண்டும் புனைவது வாகை.

### முப்பூவின் பெயர்

**சே:**— கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ. (நிலப்பூ).

### மலர்தலின் பெயர்

**பி:**— அலர்தல், அவிழ்தல், விள்ளல், நகுதல், மலர்தல், விரிதல்.

**சூ:**— அலர்தல், அவிழ்தல், விள்ளல், நெகிழ்தல், மலர்தல்.

### காயின் பெயர்

**சே:**— பசுங்காய், தீவிளி.

**பி:**— தீவிளி.

**சூ:**— வடு, பிஞ்சு, தீவுளி.

**க:**— தீவளி, காய்.

### பழத்தின் பெயர்

**சே:**— பலம், கனி, பழம்.

**பி:**— பலம், கனி, பழம்.

**சூ:**— கனி, பலம், பழம்.

**க:**— பழம், கனி.

### தோலின் பெயர்

பி:— செகிழ், காழ், தோல்.

### விதையின் பெயர்

சே:— பரல், காழ், பீசம், வித்து, விதை.

பி:— வீசம், பரல், வீச்சு, விரை, விதை.

சூ:— பரல், காழ், பீசம், வித்து, விதை.

## தாமரை, தாமரை இதழ், தாமரைக்காய், தாமரைக்கொட்டை, சுருள் இவற்றின் பெயர்

புண்டரிகம் நளினஞ்ச ரோசமர விந்தமம்
போருகங் கோகனகமம்
புயமுளரி மாலுந்தி யிண்டைதிரு மாதகம்
பூப்பங்க யந்திருமலர்

வண்டுமுச ரோருகங் கஞ்சம்வன சங்கமலம்
வாரிசம் பங்கேருகம்
மணமுலவு சலசங்கு சேசயஞ் சதபத்திரம்
வளர்பற்ம மொடுபதுமம்

முண்டகந் தாமரை யிருபதோ டைந்து
முளரிமல ரேயிறும்பு
மொழியிரா சீவமிரு பெயரத னிதட்பெயர்
முதிர்காய்வ ராடகப்பெயர்.

விண்டபூ வுட் [1]கொண்டை [2]கன்னிகை பொகுட்டாம்
விரித்திடும் சுருளின் பெயர்
விசுவுடன் விளைவாங் தடந்தாம ரைக்கென
விளம்பினர் தமிழ்ப்புலவரே! 18

* புண்டரிகம், நளினம், சரோசம், அரவிந்தம்,
அம்போருகம், கோகனகம்,
அம்புயம், முளரி, மாலுந்தி, இண்டை, திருமாதகம்,
பூபங்கயம், திருமலர்,

---

1 கொட்டை எனல் வேண்டும் 2 கன்னகை என்றுளது.

வண்டுமுழ, சரோருகம், கஞ்சம், வனசம், கமலம்,
வாரிசம், பங்கேருகம்,
மணம் உலவு சலசம், குசேசயம், சதபத்திரம்,
வளர்பற்மம்—ஓடு பதுமம்,
முண்டகம், தாமரை, இருபதோடு ஐந்தும்
முளரிமலரே! இறும்பு,
மொழி இராசீவம் இருபெயர் அதன் இதழ்பெயர்.
முதிர்காய் வராடகம் பெயர்.
விண்ட பூ உள் [1]கொட்டை [2]கன்னிகை பொகுட்டு ஆம்
விரித்திடும் சுருளின் பெயர்.
விசு –உடன்,வளைவு ஆம்,தடம் தாமரைக்கு என
விளம்பினர் தமிழ்ப் புலவரே! (142)

**தாமரையின் பெயர்**

சே:— புண்டரீகம், பதுமம், நளினம், சரோருகம், முண்டகம், அம்போருகம், அரவிந்தம், பங்கயம், அம்புயம், வாரிசம், சலசம், கஞ்சம், வனசம், கோகனகம், கமலம், முளரி, நீரோருகம், திருமால் கொப்பூழ், திருமலர், இண்டை, சதபத்திரி, தாமரை,

பி:—அம்புயம்,அம்போருகம்,அரவிந்தம்,பங்கயம், புண்டரீகம், பதுமம், முண்டகம், நளினம், முளரி, சரோருகம், சதபத்திரி, கோகனதம், சலசம், வனசம், கமலம்,வாரிசம்,கஞ்சம், திருமால்கொப்பூழ்,திருமலர், இண்டை,பங்கேருகம், தாமரை.

சூ:— புண்டரீகம், அம்போருகம், குசேசயம், முண்டகம், அரவிந்தம், முளரி, பங்கயம், வாரீசம், இண்டை, அம்புயம், சரோருகம், சதபத்திரி, நளினம், கஞ்சம், வனசம், சலசம், கமலம், கோகனதம், திருமாலுந்தி, சரோருகம், பதுமம், தாமரை.

---

1 கொண்டை என்றுளது. 2 கன்னகை என்றுளது.

கி:— முண்டகம், அம்போருகம், புண்டரீகம், இண்டை,சதபுத்திரி, அம்புயம், அரவிந்தம்,சரோருகம், பதுமம், திருமலர், கோகனகம், பங்கயம், நளினம், வனசம், கஞ்சம், வாரிசம், பற்பம், முளரி.

## தாமரையிதழின் பெயர்

பி:— இறும்பு, இராசீவகம், தாமரைமலர்.

சூ:— இறும்பு, இராசீவகம், தாமரைமலர்.

## தாமரைக்காயின் பெயர்

சே:— வராடகம், தாமரைக்காய்.

பி:— வராடகம், வாரண்டம், தாமரைக்காய்.

சூ:— வராடகம், தாமரைக்காய்.

## தாமரைக் கொட்டையின் பெயர்

பி:— பொகுட்டு, கன்னிகை, தாமரைக்கொட்டை

சூ—: பொகுட்டு,கன்னிகை, தாமரைக்கொட்டை

கி:— பொகுட்டு, பூங்கொட்டை

## அதன் சுருளின் பெயர்

சே:— சுருள், பீசம், வளையம்.

பி:— விசி, வளையும்.

சூ:— விசி, வளையம்.

**துவரை, அவரை, கொள், காராமணி, உளுந்து, கடலை, முதிரை, கம்பு, சோளம், செந்தினை, பசுந்தினை, கோதுமை, வரகு இவற்றின் பெயர்.**

ஆடகியெ னும்பெயர் துவரைசிக் கடிசிம்மை
யவரையின் பெயருலத்தம்
ஆனகொள் ளின்பெய ரிதைகூல மியவைகா
ராமணியு ளுந்தின்பெயர்
மாடமஞ் சூரமாங் கடலைமுற் கம்பயறு
மற்றிவையெ லாமுதிரையாம்
வளர்கவலை செந்தினைப் புல்லுடன் மூன்றுமே
மாசிலாக் கம்பின்பெயர்.
ே(த)டுசோ ளப்பெயர் சொன்னலுமி ருங்கமாந்
தினையேனல் செந்தினைப்பேர்
செப்பியப சுந்தினையு மேனலா மிற(டி)யுஞ்
சேந்தகங் குங்கறங்குங்
கூடியக ருந்தினைப் பெயர்சாமை யென்பதுங்
கூறிலத னாமமாமே
கோதும்பை கோதியாந் தோரையா(ம்)ராகியுடன்
கோத்திரம் வரகாகுமே! 19

*ஆடகி எனும் பெயர் துவரை, சிக்கடி, சிம்மை,
அவரையின் பெயர். உலத்தம்
ஆன கொள்ளின் பெயர். இதை, கூலம், இவை
காராமணி, உளுந்தின் பெயர்

மாடம், மஞ்சூரம் ஆம் கடலை, முற்கம், பயறு,
மற்று இவை எல்லாம் முதிரை ஆம்.
வளர் கவலை, செந்தினை, புல்—உடன்,மூன்றுமே
மாசு இலா கம்பின் பெயர்.

தேடு சோளப்பெயர் சொன்னலும் இருங்கும் ஆம்.
தினை, ஏனல் செந்தினைப்பேர்.
செப்பிய பசுந்தினையும் ஏனலாம். இறடியும்
சேந்த கங்கும் கறங்கும்

கூடிய கருந்தினைப் பெயர்; சாமை என்பதும்
கூறில் அதன் நாமம் ஆமே.
கோதும்பை கோதி ஆம்.தோரையாம்ராகி உடன்
கோத்திரம் வரகு ஆகுமே! (143)

### துவரை

சே:— ஆடகம், துவரை.

பி:— ஆடகி, துவரை.

சூ:— ஆடகம், துவரை.

### அவரை

பி:— சிக்கடி, அவரை.

சூ:— சிக்கடி, சிம்பை, அவரை.

### கொள்

சே:— குலுத்தம், காணம், கொள்.

பி:— காணம் குலுத்தம், கொள்.

சூ:— காணம், குலத்தம், கொள்.

### காராமணி

சே:— கூலம், இதை, காராமணி.

பி:— இதை, கூலம், காராமணி.

சூ:— இதை, காராமணி.

### உளுந்து

சே:— மாடம், உளுந்து.

பி:— மாடம், உளுந்து.

சூ:— மாடம், உளுந்து.

### கடலை

சே:— மஞ்சூரம், கடலை.

பி:— மஞ்சூரம், கடலை.

தூ:— மஞ்சூரம், கடலை.

### முதிரை

சே:— அவரை, துவரை, முதலியன.

பி:— துவரை, அவரை முதலியன.

தூ:— துவரை, கடலை முதலியன.

க:— அருந்து முதிரை யவரை துவரை முதலியன வாம்

### கம்பு

சே:— கவலை, புல், செந்தினை, கம்பு.

தூ:— செந்தினை, கவலை, கம்பு.

### சோளம்

சே:— சொன்னல், இறுங்கு, சோளம்.

பி:— சொன்னல், இறுங்கு, சோளம்.

தூ:— சொன்னல், இறுங்கு, சோளம்.

க:— சொன்னல், சோளம்.

### செந்தினை

சே:— ஏனல், செந்தினை.

பி:— கம்பு, கவலை, செந்தினை.

தூ:— ஏனல், செந்தினை.

க:— ஏனல், செந்தினை.

### பசுந்தினை

பி:— ஏனல், குரல், நுவணை, பசுந்தினை,

சூ:— ஏனல், பசுந்தினை.

### கருந்தினை

சே:— இறடி, கருந்தினை.

பி:— இறடி, கங்கு, கருந்தினை.

சூ:— இறடி, கங்கு, கருந்தினை.

க:— இறுங்கிறடி, கருந்தினை.

### கோதுமை

சே:— கோதி, கோதுமை.

பி:— கோதி, கோதுமை.

சூ:— கோதி, கோதுமை.

### வரகு

சே:— வரகு, கோத்திரவம்.

பி:— கோத்திரவம், வரகு.

சூ:— கோத்திரவம், வரகு.

**எள், அதன்காய், இளஎள், பருத்தி, ஆமணக்கு, அரிசி, தவிடு, பதர், வேயரிசி, பயிர், கதிர், இளங்கதிர், இளஞ்சூல், நெற்பயிர், செந்நெல், மலைநெல், குளநெல், இவற்றின் பெயர்**

[1]எண்ணூதூ வுந்திலமு மெள்ளினது பெயர்சவ்வை
யெட்காயி நாமமன்றி
யிளவெளின் பெயர்[2] குளிகை பன்னல்காற் பாசமே
யெழில்கூர்ப ருத்திசித்திரம்
நண்ணிபசி கண்டியே ரண்டமுப் பெயரும்நல்
லாமணக் கரிதண்டுலம்
நவிலரிசி நாமமந் தரிதவிடு பதடிபதர்
நாமம்வே யரிசிதோரை
மண்ணில்விளை பைங்கூழ் பசும்புலிரு பெ(ய) ருமே
வன்பயிரி னாமங்கதிர்
மன்னுகுர லரியேன லெண்ணுமி ளங்கதிர்
வாய்த்தசூல் பீள்பெட்டையாம்
வண்ணவரி சாலியவை சொல்லலரு நெற்பெயர்
வன்சாலி விரிகிசெந்நெல்
மலைநெல்லை வனமாகு மிக்ககுள நெற்பெயர்
மதித்தநீர் வாரமாமே! 20

*எண்-உம், நூ-உம், திலம்-உம், எள்ளினதுபெயர்,
எள் காயின் நாமம். அன்றி [கவ்வை
இள(ம்)எள்ளின் பெயர் குளிகை, பன்னல், கார்ப்
எழில்கூர் பருத்தி. சித்திரம், [பாசம்-ஏ,

நண்ணிய சிகண்டி, எரண்டம், முப்பெயரும் நல்
ஆமணக்கு. அரி. தண்டுலம்
நவில் அரிசி நாமம், அந்தரி தவிடு. பதடி பதர்
நாமம். வேயரிசி தோரை.

---

1 எண்ணுநூ எனல் வேண்டும். 2 குமிகை எனல் வேண்டும்.

மண்ணில் விளை பைங்கூழ், பசும்புல் இருபெயருமே
வன் பயிரின் நாமம். கதிர்
மன்னு குரல். ஏனல். எண்ணும் இளங்கதிர்
வாய்த்த சூல் பீள் பெட்டை ஆம்.
வண்ண வரி, சாலி, யவை, சொல், அலரும் நெற்பயிர்
வன் சாலி, விரிகி, செந்நெல்.
மலைநெல் ஐவனம் ஆகும். மிக்க குள நெற்பயிர்
மதித்த நீர்வாரம் ஆமே! (144)

### எள்ளின் பெயர்

சே:— எண், திலம், எள்.

பி:— எண், திலம், நூவு, எள்.

சூ:— எண், திலம், எள்.

க:— எண், திலம், நூ, எள்.

### எள் காயின் பெயர்.

சே:— கவ்வை, எள்காய்.

பி:— கவ்வை, எள்காய்.

சூ:— கவ்வை, எள்சாய்

க:— கவ்வை, எள்காய்.

### இள எள்ளின் பெயர்.

பி:— குமிகை.

சூ:— குமிகை.

## பருத்தியின் பெயர்.

சே:— பரி, பன்னல், காற்பாசம், பருத்தி.

பி:— பரி, பன்னல், கார்பாசம், பருத்தி.

தூ:— பன்னல், கார்ப்பாசம், பருத்தி.

## ஆமணக்கின் பெயர்.

சே:— ஏரண்டம், ஆமணக்கு.

பி:— ஏரண்டம், சித்திரம், ஆமணக்கு.

தூ:— சித்திரகம், ஏரண்டம், ஆமணக்கு.

க:— ஏரண்டம், ஆமணக்கு.

## அரிசியின் பெயர்

சே:— அரி, தண்டுலம், அரிசி.

பி:— அரி, வீயும், தண்டுலம், அரிசி.

தூ:— தண்டுலம், அரிசி.

## தவிட்டின் பெயர்

சே:— முட்டை, முடை, தவிடு.

பி:— முட்டை, முடை, பொதி, தவிடு.

தூ:— முட்டை, முடை, தவிடு.

## பதரின் பெயர்

சே:— பதடி, பதர்.

பி:— பதடி, பொல், பதர்.

சூ:— பதடி, பதர்.

க:— பதடி, பதர்

### வேயரிசியின் பெயர்

சே:— இயவை, தோரை, வேயரிசி,

பி:— இயவை, தோரை, வேரல், வேயரிசி.

சூ:— தோரை, வேயரிசி.

### பயிரின் பெயர்

சே:— பசும்புல், பைங்கூழ்.

பி:— பசும்புல், பைங்கூழ்.

சூ:— பைங்கூழ், பசும்புல்.

க:— பயிர், கூழ்.

### கதிரின் பெயர்

சே:— குரல், கதிர்.

பி:— ஏனல், குரல்.

சூ:— குரல், ஏனல்.

க:— குரல், கதிர், வல்லி.

### இளங்கதிரின் பெயர்

பி:— பீள்.

சூ:— பீள்.

### இளஞ்சூலின் பெயர்

பி:— பீட்டை.

சூ:— பீட்டை.

### நெற்பயிரின் பெயர்

பி :— சொல், விரீகி, வரி, சாலி, யவம், நெற்பயிர்

சூ:— வரி, சொல், விரீகி, சாலி, யவம், நெற்பயிர்

க:— நெல், சாலி, விரீகி.

### செந்நெல்லின் பெயர்

சே:— விரீகி, செஞ்சாலி, செந்நெல்.

பி :— சென்னெல், நன்னெல்.

சூ:— நன்னெல், செஞ்சாலி.

### மலைநெல்லின் பெயர்

சே:— ஐவனம், மலைநெல்.

பி:— ஐவனம், மலைநெல்.

சூ:— ஐவனம், மலைநெல்.

க:— ஐவனம், மலைநெல்.

### குளநெல்லின் பெயர்

சே:— நீவாரம், குளநெல்.

பி:— நீவாரம், குளநெல்.

சூ:— நீவாரம், குளநெல்.

க:— நீவாரம், குளநெல்.

## மாலை, பிணையல், வாசிகை, நுதலணி மாலை, வாகைமாலை இவற்றின் பெயர்

தொடலைகத் திகைபிணையு லணியல்வா சிகைதெரியல்
சுக்கைமஞ் சரியலங்கல்
சூட்டிலம் பகமொலியல் கண்ணிதெ(த)ாடை சிகழிகை
சுருக்கைகாள கோதைதாமம்.
படலைபித் திகைதொடைய லிண்டைதார் தொங்கலிரு
பத்தைந்து மாலையின்பேர்
பகுத்திடிற் பிணையல்பின் னியமாலை சிகழிகை
படலைகூ ரொருமூன்றுமே.
இடும்வாசி கைப்பெய ரிலம்பகந் துடலையுட
னேகண்ணி சூட்டுநான்கு
மிலகுநுத லணிமாலை கோத்தமலர் தானுமா
மெழில்பெறுங் கன்னமீதி
லடையுமப் பூப்பெயர் கன்னபுர மாங்கொடையி
லடுபடையில் மிக்ககுடியி
லாய்ந்திடுங் கல்விகேள் வியில்வெற்றி கொடுமவுலி
யணிமாலை வாகையாமே! 21

*தொடலை, கத்திகை, பிணையல், அணியல்,வாசிகை,
சுக்கை, மஞ்சரி, அலங்கல், [தெரியல்,
சூட்டு,இலம்பகம், ஒலியல்,கண்ணி, தொடை,சிகழிகை
சுருக்கை, காள், கோதை, தாமம்,
படலை, பித்திகை, தொடையல், இண்டை, தார்,
தொங்கல்
இருபத்தைந்தும் மாலையின்பேர்.
பகுத்திடில்பிணையல்பின்னியமாலை,சிகழிகை,
படலை, கூர், ஒரு மூன்றுமே
இடும் வாசிகைப்பெயர். இலம்பகம்,துடலை உடனே,
கண்ணி, சூட்டு நான்கும்

இலகு நுதலணிமாலை;கோத்தமலர் தானும் ஆம்
எழில் பெறும் கன்னமீதில்
அடையும் அப் பூப்பெயர் கன்னபுரம் ஆம் கொடையில்
அடு படையில், மிக்க குடியில்
ஆய்ந்திடும் கல்வி,வேள்வியில் வெற்றிகொடு மவுலி
அணிமாலை வாகை ஆமே! (145)

**மாலையின் பெயர்**

**சே:**— தொடையல், வாசிகை, சிகழிகை, கோதை, படலை, அலங்கல், கத்திகை, பிணையல், அணியல், சுருக்கை, தொடலை, தாமம், தொங்கல், தெரியல், கண்ணி, தார், சூட்டு, மஞ்சரி, ஒலியல், இலம்பகம், மாலை.

**பி:**— சுக்கை, தொடையல், தொங்கல், கத்திகை. அலங்கல், கண்ணி, தெரியல், தார், அணியல், தாமம், ஒலியல், சூட்டு, கோதை, மஞ்சரி, மாலை.

**நா:**— அலங்கல், பிணையல், ஆரம், சிகழிகை, அணி, சுருக்கை, இலம்பகம், தெரியல், சுக்கை, கத்திகை, தாமம், படலை, கண்ணி, தொடை, தொங்கல், ஒலியல், கோதை, தார், மஞ்சரி, மாலை.

**க:**— அணியல், அலங்கல், கண்ணி, தொடையல், தொடை, தாமம், கோதை, பிணையல், தொங்கல், தெரியல், ஒலியல், தொடலை, தார், மாலை.

**பிணையலின் பெயர்**

**சே:**— பின்னியமாலை, பிணையல்.

**பி:**— பின்னியமாலை, பிணையல்.

### வாசிகையின் பெயர்

**சே:—** மாலை, சிகழிகை, வாசிகை, தொடையல்.

**பி:—** சிகழிகை, படலை, வாசிகை, தொடையல். கோத்தமாலை.

**சூ:—** சிகழிகை, படலை, வாசிகை.

**க:—** சிகழிகை, வாசிகை.

### நுதலணி மாலையின் பெயர்

**சே:—** சூட்டு, இலம்பகம், நுதலணிமாலை

**பி:—** சூட்டு, இலம்பகம், நுதலணிமாலை

**சூ:—** சூட்டு, இலம்பகம், நுதலணிமாலை

**க:—** சூட்டு, இலம்பம், நுதல்மேலணிமாலை

### வாகைமாலையின் பெயர்

**பி:—** கல்வியிலும், கேள்வியிலும், கொடையிலும், படையிலும் வென்றவர் அணிவது.

**சூ:—** கல்வி, கேள்வி, குடி, கொடை, படைக்குள் வாட்டமில்லவரை வென்று மௌலி சூட்டுவது.

**க:—** படையிற் கொடையினற் சூதில் வென்றோர் யாண்டும் புனைவது வாகை.

**நான்காவது மரப் பெயர்த்தொகுதி முற்றும்.**

# ஐந்தாவது இடப்பெயர்த் தொகுதி

### பூமியின் பெயர், உலகின் பொதுப் பெயர்

அவனிகா சினியுலகு மேதினிச கம்பா
ரளக்கர்சக் கரம்[1] நீருடை,
(எ)யழில்மண்டி லம்நேமி பொறையசலை விபுலைதல
மகலிடம் பாடிவையம்
புவனிபடி தாலம்ஞா லம்பல மேத்தியம்
பொழில்பூ திணைகிடக்கை
புவிதரணி தாரணி தராதலம பூதலம்
புடவிதாக் திரிதரித்திரி
பவனம்வ சுமதிவசுந் தரைவசுதை நாடகம்
பாத்திமந் தரைகோத்திரை
பாரிமண் மகியிம்பர் வைகலுள் பிரிதிவை
பரிந்தகோச் சாந்தைகண்டங்
குவலையம் நிலம்புலந் திரைபூமி யின்பெயர்.
குறிக்கிலொன் றொழியறுப(தாங்)
கோதிலுல கின்பொதுப் பெயர்புவனம் நாடுபொழில்
குளிர்தலம் புடவியாமே! 1

*அவனி, காசினி,உலகு, மேதினி, சகம், பார்,
அளக்கர், சக்கரம், நீருடை,
எழில் மண்டிலம், நேமி, பொறை, அசலை, விபுலை,
அகலிடம், பாடி, வையம், [தலம்,
புவனி, படி, தாலம், ஞாலம் பாலம், மேத்தியம்,
பொழில், பூ, திணை, கிடக்கை.
புவி, தரணி, தாரணி, தராதலம், பூதலம்,
புடவி, தாத்திரி, தரித்திரி.

---

1 நீராடை எனினும் அமையும்.

### பூமியின் பெயர்

பவனம், வசுமதி, வசுந்தரை, வசுதை, நாடு, அகம்,
பாத்திமம், தரை, கோத்திரை,
பாரி, மண், மகி, இம்பர், கூ, அகலுள், பிரிதிவை,
பரிந்த கோ, சாந்தை, கண்டம்,

குவலையம், நிலம், புலம், திரை, பூமியின் பெயர்
குறிக்கில் ஒன்று ஒழி அறுபதாம்.
கோது இல்உலகின் பொதுப்பெயர் புவனம், நாடு,
குளிர் தலம், புடவி ஆமே! [பொழில்,
(146)

### பூமியின் பெயர்

சேந்தன்திவாகரம்:— அவனி, காசினி, மேதினி, அளக்கர், தரணி, தாரணி,தராதலம்,குவலயம்,புடவி, பூதலம், தரை, படி ஞாலம் வையம், அகிலம் கு, மன், புவி, பார், நாடு, உலகு, புவனி, பாரி, யுகம், நேமி, அகலிடம், பொறை, மதி, மண்டிலம், பூ, திணை, தலம், பொழில், பிரு திவி, வேலாவலயம், நிலம், சகம், தாலம், பூமி.

பிங்கலநிகணடு:— அவனி, வையம், அகலிடம், காசினி, புவனி, புடவி, பூமி, புவனம், படி, புவி, பொழில், பூ சகம் மேதினி, தரை, தாலம், சாந்தை, யுகம், பார், தரணி, உலோகம், தாரணி, தலம், நீர் வரைப்பு, தராதலம், மகாதலம், நிலம், பிருதிவி, தரம் நிலை,ஞாலம்,அசலை,பூவலையம்,அளக்கர்,மண்டலம், பவனம், அகம், நடு, பாலம் விபுலம், கோத்திரை, குவலயம், கு, கோ, நேமி, தாத்திரி, வேலாவலயம், தரித்திரி, திணை, மகி, சக்கரம், பொறை, நகம், பாரி, வசுந்தரை, வசுமதி, வசுதை. பூதியம், அகிலம், புரை, பாரம்.

சூடாமணிநிகண்டு:- அவனி, காசினி, சகம், அகலிடம், அகிலம, பாரி, குவலயம், விபுலை, கோத்திரை, கோ, கு, புவனி, மண்டலம், தலம், பூ, பொழில், வசுந்தரை, பார், பவனம், தாரணி, படி, புவி, தரணி, வையம், தாலம், அசலை, நேமி,

வசுமதி, தரை, தரித்திரி, ஞாலம், தாத்திரி, அளக்கர், நாடு, பூதலம், கிடக்கை, பாலம், பூதிகம், பார்த்திவம. பொறை, அனந்தை, மகி, மேதினி உலகு, பூமி.

கயாதரநிகண்டு:— புலம், தரை, மண், கு, புவனம், அவனி, புவி, விபுலை, தலம், சகம், தாலம, கோ. நகர், பூ. தாரணி, தரணி, நிலம், தறை, மேதினி, காசினி, தாத்திரி, உலகம், ஞாலம், அசலை, வசுந்தரை, பார், படி, அளக்கர், குவலையம், பூதலம், பாரி, வையம், புடவி, பொறை, நேமி, மண்டலம், பூமி, புவணி, அகலிடம், மகி, வேலாவலையம், திணை, வரைப்பு, இம்பர், பொழில், நடு, உகம், சாந்தை, பிருதுவி, தாலம், நவகண்டம்.

## உலகின் பொதுப் பெயர்.

சே:— புவனம், நாடு, பொழில், தலம், புடவி அவனி, உலகு.

பி:— புவனம், நாடு, பொழில், தலம், புடவி, பவனம், இராச்சியம், உலகு

க:— நாடு, புவனம், தலம், பவனம், புடவி, பொழில்.

## மலையின் பெயர்

பூதரஞ் சயிலஞ்சி லம்புசிமை யஞ்சிகரி
பொங்கரரி கல்லிறும்பு.
பொற்றைநவி ரங்குறும் பொறைகுவடு தாணுப்
பொருப்புப்ப றம்புதிகிரி
மேதரஞ் சிலைபீலி வெற்புத்த டஞ்சாரல்
விண்டிரவி பொச்சைசிகரம்
வேதண்டம் நாகந் தராதரஞ் சையம்
விலங்கலோங் கல்லடுக்கல்

**மாதிரந் தரணியத் திரிகுன்று தாபரம்**
**வரைகலல கம்பிறங்கல்**
**மானிறைப ருப்பதம் நகம்பதலை பர்வதம்**
**வளர்கிரி குறும்புகான்**
**வோதிமம் பொறைபொகுட் டசலஞ்சி லோச்சிய**
**முடங்குத்த ரங்கோத்திரி**
**யோதியுள வன்பதிற் றொன்பதும லைப்பெய**
**ருரைக்கின்ற [1]சுருப்பாகுமே! 2**

*பூதரம், சயிலம், சிலம்பு, சிமையம், சிகரி,
பொங்கர், அரி, கல், இறும்பு,
பொற்றை, நவிரம், குறும்பொறை, குவடு, தாணு,
பொருப்பு, பறம்பு, திகிரி,
மேதரம், சிலை, பீலி, வெற்பு, தடம், சாரல்,
விண்டு, இரவி, பொச்சை, சிகரம்,
வேதண்டம், நாகம், தராதரம், சையம்,
விலங்கல், ஓங்கல், அடுக்கல்,
மாதிரம், தரணி, அத்திரி, குன்று, தாபரம்,
வரை, கல்லகம், பிறங்கல்,
மாணிறை, பருப்பதம், நகம், பதலை, பர்வதம்,
வளர் கிரி குறும்பு, கான்,
ஓதிமம், பொறை, பொகுட்டு, அசலம், சிலோச்சியம்,
முடம், குத்தரம், கோத்திரி,
ஓதி, உள அன்பதிற்றொன்பதும் மலைப்பெயர்
உணர்கின்ற [2]உருப்பு ஆகுமே! (147)

**மலையின் பெயர்**

**சே:—** விலங்கல், அடுக்கல், வெற்பு, பருப்பதம், சிலம்பு, நாகம், குறும்பொறை, சிகரம், வேதண்டம்,

1 வுருப்பாகுமே எனல் வேண்டும்.
2 சுருப்பு என்றுளது. உருப்பு—அதிகம்.

வீரம், கிரி, திகிரி, சையம், தரணி, பூதரம், ஓங்கல், பிறங்கல், குவடு, குன்று, ஓதி, பறம்பு, வரை, விண்டு, போதி, சோ, சிலை, இறும்பு, தடம், மாதிரம், பொச்சை, கல், கல்லகம், பொருப்பு, நகம், அசலம், சாரல், சிலோச்சயம், சைலம், மலை.

பி:— விலங்கல், சயிலம், விண்டு, வெற்பு, சிலம்பு, சிமயம், சிகரி, சிலோச்சயம், பொருப்பு, பொங்கர், பொறை, கோ, பூதரம், பருப்பதம், பதலை, பறம்பு, பாதவம், அத்திரி, நகம், அடுக்கல், நவிரம், குத்திரம், குவடு, கோத்திரம், குன்று, தாணு, அசலம், சானு, மேரு, ஓதி, வீரம், கிரி, காண்டம். ஓங்கல், பீலி, திகிரி, அரி, பிறங்கல், மாதிரம், கல், வரை, பொகுட்டு, தரணி, சிமிலம் சையம், பத்திரம், வேதண்டம், இரவி, மேதரம், சாரல், பொற்றை, நாகம், சிலை போதி, மலை.

சூ:— விலங்கல், பொறை, வேதண்டம், வீண்டு, மாதிரம், வெற்பு, சிலம்பு, கோத்திரம், அடுக்கல், சிலோச்சயம், சிமபம், பொங்கர், குத்திரம், பறம்பு, நகம், குறும்பொறை, நாகம், வரை, பொச்சை, இறும்பு, கல்லகம், ஓங்கல், பொருப்பு, குவடு, கல், பொகுட்டு ஓதி, திகிரி, குன்று, பருப்பதம், சைலம், சாரல், பாதவம், பதலை, தாணு, பூதரம், சையம், பிறங்கல், அத்திரி, பீலி, கிரி, மலை.

கூ:— வரை, குவடு, ஓங்கல், பொருப்பு, சிகரி, மலை, விலங்கல், கிரி, தடம், ஓதிமம், பூதரம், நாகம் திகிரி, தரணி, அசலம், தராதரம், வேதண்டம், சையம், வெற்பு, அத்திரி, நகம், பொற்றை, சிலோச்சயம், சாரல், சிலம்பு, குன்று, குறும்பொறை, மாதிரம், கோத்திரம், விண்டு, குறும்பு, பறம், பிறும்பு, நவிரம், துறுகல், சயிலம், சிலை, இரவி, பிறங்கல், பதலை, அடுக்கல், பருப்பதம், குத்திரம்.

**நாட்டின் பெயர்; உறையூர், மதுரை, கருவூர், காஞ்சி, அவந்தி, காசி, கடாரம், சிங்களம், மிதிலை, அயோத்தி, காவிரிப்பூம்பட்டினம் இவற்றின் பெயர்.**

பாடிதண் ணடையுலகி ராச்சியம் பொழில்சம்
புதங்கண்ட மாசுகோட்டம்
பைதிரஞ் சும்மைநீ வரமேணி மண்டலம்
பகரொலிய லழுவமகலுள்
கூடுதே யத்துடன் பதினெட்டு நாமமுங்
கூறரிய நாட்டின் பெயர்
கோழியுறை யூர்கூடல் மதுரைகரு வூர்வஞ்சி
குலவிடுங் கச்சிகாஞ்சி
நீடுஞ்சை சேனையிரு பெயரோய வந்திபுகழ்
நிறைகாசி வாரணாசி
நீள்கடா ரங்காழ மீளமே சிங்களம்
நிகர்க்கும்வி தேகமிதிலை
நாடுகோ சலைகோல விஞ்சுசா கேதமொடு
நவிலனுதை யேயயோத்தி
நற்காக நதிபுகார் காவிரிப் பூம்பட்டி
னத்துரிய நாமமாமே! 3

*பாடி, தண்ணடை, உலகு, இராச்சியம், பொழில்,
சம்புதம், கண்டம், ஆசு, கோட்டம்,
பைதிரம், சும்மை, நீவரம், ஏணி, மண்டலம்,
பகர் ஒலியல், அழுவம், அகலுள்,
கூடுதேயம் அத்துடன் பதினெட்டு நாமமும்
கூற அரிய நாட்டின் பெயர்.
கோழி உறையூர். கூடல் மதுரை. கருவூர் வஞ்சி
குலவிடும் கச்சி காஞ்சி,

நீடு உஞ்சை, சேனை இருபெயரே அவந்தி, புகழ்நிறை
காசி வாரணாசி.
நீள் கடாரம் காழும், ஈழமே சிங்களம்.
நிகர்க்கும் விதேகம் மிதிலை.
நாடு கோசலை, கோலம், விஞ்சு சாகேதம் ஒடு
நவில் அனுதையே அயோத்தி.
நல் காகநதி, புகார், காவிரிப்பூம்பட்டினத்து
உரிய நாமம் ஆமே! (148)

**நாட்டின் பெயர்**

**சே:—** பைதிரம், மண்டிலம், பாண்டில், தேயம், தண்ணடை, சனபதம், அகலுள், சும்மை, தண்டம், ஏணி, உலகு, நாடு.

**பி:—** பைதிரம், மண்டிலம், பாடி, தேயம், தண்ணடை, நீவரம், கோட்டம், சனபதம், சும்மை, அகலுள், கண்டம், ஏணி, இராச்சியம், உலகு, நாடு.

**சூ:—** பாடி, மண்டலம், சும்மை, பைதிரம், உலகு, தேயம், அகலுள், ஏணி, நீவரம், கோட்டம், கண்டம், சனபதம், பொழில், தண்ணடை, அழுவம், நாடு.

**க:—** கண்டம், அகலுள், உலகு, ஏணி, தேசம், சும்மை, மண்டிலம், பாடி, சனபதம், தண்ணடை, மண், பைதிரம், நாடு.

**உறையூரின் பெயர்**

**சே:—** கோழி, உறையூர்
**பி:—** கோழி, உறையூர்.
**சூ:—** கோழி, உறையூர்.
**க:—** பெருநகர், கோழி, உறையூர்.

சே:— கூடல், மதுரை.

பி:— கூடல், மதுரை.

சூ:— கூடல், மதுரை.

க:— கூடல், மதுரை.

**கருவூரின் பெயர்**

சே:— வஞ்சி, கருவூர்.

பி:— வஞ்சி, கருவூர்.

சூ:— வஞ்சி, கருவூர்.

க:— வஞ்சி, கருவூர்.

**காஞ்சியின் பெயர்**

சே:— கச்சி, காஞ்சி.

பி:— கச்சி, காஞ்சி.

சூ:— கச்சி, காஞ்சி.

**அவந்தியின் பெயர்**

சே:— உஞ்சை, அவந்தி.

பி:— உஞ்சை, அவந்தி.

சூ:— உஞ்சை, அவந்தி.

**காசியின் பெயர்**

சே:— வாரணாசி, காசி.

பி:— வாரணாசி, காசி.

சூ:— வாரணாசி, காசி.

### கடாரத்தின் பெயர்

**சே:—** காழகம், கடாரம்.

**பி:—** காழகம், கடாரம்.

**சூ:—** காழகம், கடாரம்.

### சிங்களத்தின் பெயர்

**சே:—** ஈழம், சிங்களம்.

**பி:—** ஈழம், சிங்களம்.

**சூ:—** ஈழம், சிங்களம்.

### மிதிலையின் பெயர்

**சே:—** விதேகை, மிதிலை.

**பி:—** விதேகை, மிதிலை.

**சூ:—** விதேகை, மிதிலை.

### அயோத்தியின் பெயர்

**சே:—** வநிதை, சாகேதம், கோசலை,அயோத்தி.

**சூ:—** வினிதை, கோசலை, சாகேதம்,அயோத்தி.

### காவிரிப்பூம்பட்டினத்தின் பெயர்

**சே:—** காகந்தி, புகார், காவிரிப்பூம்பட்டினம்'

**பி:—** காகந்தி, புகார், காவிரிப்பூம்பட்டினம்.

**சூ:—** புகார், காவிரிப்பூம்பட்டினம்.

**க:—** காகந்தி, புகார்.

## ஊர்ப்பொதுப் பெயர், சிற்றூர் பெயர், மலை செறிந்த ஊர்ப் பெயர்

பூக்கமுட் டங்குடி குடிக்காடு குப்பம்
புறஞ்சேரி பதியிருக்கை
பூண்டிதண் ணடைமடப் பம்பேடு(பூரி)யம்
புரிவேலி யகரநகரம்
பாக்கங்கு ரிச்சிகோட் டங்கருவ டஞ்சேர்வு
பட்டினஞ் சும்மைவாழ்க்கை
பாழிசம் வாகங்கி ராமங்கு றும்புநகர்
பள்ளிவைப் புரையுள் [1]கெட
மாக்கிபநி வேசனம் வேசரங் கோசர
மருப்பநத் [2]தம்பாடிகா
மகலுள்புக லிடம்வடவை வசதிபக் கணம்நொச்சி
யபிதானம் நாற்பதுடனே
பார்க்கிலொன் பதுமூர்ப்பொ துப்பெய ரிவற்றினுள்
பள்ளியே பட்டிநொச்சி
பயின்றசிற் றூர்ப்பெயர் மலைசெறிந் திடுமூர்
பகர்ந்திடிற் கேடகமாமே! (4)

*பூக்கம், முட்டம், குடி, குடிக்காடு, குப்பம்,
புரம், சேரி, பதி, இருக்கை.
பூண்டி, தண்ணடை, மடப்பம், பேடு, பூரியம்,
புரி, வேலி, அகரம், நகரம்,
பாக்கம், குரிச்சி, கோட்டம், கருவடம், சேர்வு,
பட்டினம், சும்மை, வாழ்க்கை,
பாழி, சம்வாகம், கிராமம், குறும்பு, நகர்,
பள்ளி, வைப்பு, உறையுள், [3]கோட்டம்,
[4]மாக்கியம், நிவேசனம், வேசரம், கோசரம்,
அருப்பம், நத்தம், பாடி, தாமம்.

1 கோட்டம் போலும் 2 தம்பாடிதாம எனல் வேண்டும் 3 கெட என்றுளது. 4 —?

அகலுள், புகலிடம், வடவை, வசதி, பக்கணம்,
அபிதானம் நாற்பதுடனே [நொச்சி
பார்க்கில் ஒன்பதும் ஊர்ப்பொதுப்பெயர். இவற்றினுள்
பள்ளியே பட்டி, நொச்சி,
பயின்ற சிற்றூர்ப்பெயர். மலை செறிந்திடும்ஊர்
பகர்ந்திடில் கேடகம் ஆமே! (149)

**ஊர்ப்பொதுப்பெயர்**

**சே:—** பாக்கம், பட்டினம், பதி, நகர், சும்மை, பூக்கம், சேரி, புரம், முட்டம், பூண்டி, அகரம், குடி, குறிச்சி, கோசரம், அகலுள், நொச்சி, இருக்கை. வேலி, குப்பம், பாடி, குறும்பு, பாழி, சிறுகுடி, தண்ணடை, உறையுள், எயில், வாழ்க்கை.

**பி:—** பூக்கம், கேடகம், பூரியம், பூண்டி, பாக்கம், புரி, கெடி, பதி, நகர், சும்மை, சேரி, மண்டிலம், சேர்வு, குப்பம், காடு, குடிக்காடு, வேலி, அகலுள், வைப்பு, கிராமம், வசதி, அருப்பம், ஆதரம், இல்லிடம், புகலிடம், புரம், பாழி, நத்தம், கோசரம, ஒக்கம், உறையுள், இருக்கை.

**சூ:—** பாக்கம், இருக்கை, பாழி, பட்டினம், பள்ளி, முட்டம், பூக்கம், சம்வாகம், நொச்சி, பூரியம், பாடி, பூண்டி, கோட்டம், வாழ்க்கை, மடப்பம், குடி, குடிக்காடு, குறிச்சி, குப்பம், அருப்பம், நத்தம், சும்மை, அகரம், புரம், சேரி, அகலுள், வைப்பு, உறையுள், வேலி, நகரம், பக்கணம், (பத்தணம்) கிராமம், கருவடம், குறும்பு, வேசனம், தாமம், நிவேசனம், பதி, பேடு, புரி.

**க:—** நகர், பதி, சேரி, புரம், புரி, ஆகரம், இருக்கை, அகலுள், குறி, பட்டு, கோசரம், பாழி, நகரி, புகலிடம், சும்மை, எயில், வேலி, பாக்கம், பூண்டி, ஊர்.

## சிற்றூரின் பெயர்

சே:— பட்டு, நொச்சி, பள்ளி, சிற்றூர்.

பி:— பேடு, குடி, தண்ணடை, பட்டு, நொச்சி, பள்ளி, சிற்றூர்.

சூ:— பட்டு, நொச்சி, பள்ளி, சிற்றூர்.

## மலைசூழ்ந்தவூரின் பெயர்

சே:— கேடகம்.

சூ:— கேடகம்.

## மலையுடன், யாறு சூழ்ந்த ஊர், மன்னர் வைகும் ஊர், முல்லை நிலத்து ஊர், நெய்தல் நிலத்து ஊர், குறிஞ்சி நிலத்து ஊர், பாலை நிலத்து ஊர், மருத நிலத்து ஊர், இவற்றின் பெயர்.

மலை(யு)ட னாறுசூ ழூர்கரு வடம்வீதி
மதில்கோபு ரங்கள்மன்னர்
வைகுமூர் புரிபுரத் தொடுநகர் முல்லைநில
மருவுமூர் பாடிநெய்தல்
நிலமெவு மூர்பட்டி னந்திண்கு (றி)ஞ்சிநன்
னிலத்தூர்கு றிச் (சி)சிற்றூர்
நெடியசீ றூருடன் சிறுகுடி யெனும்பாலை
நிலமேவு மூர்முனையிடங்
குலவிய குறும்பொடு குறும்பரு ரென்பதுங்
கூறுந்தண் ணடைமடப்பங்
கோட்டநிலை யம்பாழி பள்ளிதா வளம்வசதி
குடிபதிநி காயம்நியமம்

பொலிவுபெறு பாக்கந்த டஞ்சேர்வு பூக்கம்
புரஞ்சரணம் வாட்கை[1] தாரம்
புரிநகர மேவாசம் மருதநில மேவுமூர்
புகலிலிரு பான்மூன்றுமே!

*மலையுடன் ஆறு சூழ் ஊர் கருவடம், வீதி
மதில், கோபுரங்கள் மன்னர்
வைகும் ஊர், புரி, புரத்தொடுநகர். முல்லைநிலம்
மருவும் ஊர் பாடி நெய்தல்
நிலம் மேவும் ஊர் பட்டினம். திண் குறிஞ்சி நல்
நிலத்து ஊர் குறிச்சி, சிற்றூர்,
நெடிய சீறூர் உடன் சிறுகுடி எனும். பாலை
நிலம் மேவும் ஊர் முனையிடம்
குலவிய குறும்பு-ஒடு குறும்பர்ஊர், என்பதும்
கூறும். தண்ணடை, மடப்பம்,
கோட்டம், நிலையம், பாழி, பள்ளி, தாவளம்,
குடி, பதி, நிகாயம், நியமம் [வசதி,
பொலிவுபெறு பாக்கம், தடம், சேர்வு, பூக்கம்,
புரம், சரணம், வாட்கை, தாமம்,
புரி, நகரமே, வாசம், மருதநிலம் மேவும் ஊர்
புகலில் இருபான் மூன்றுமே! (150)

**மலையுடன் யாறு சூழ்ந்த ஊர்**

**சே:—** கர்வடம்.

**சூ:—** கருவடம்.

**க:—** கேடகம்.

---

1 தாமம் எனல் வேண்டும்.

### மன்னர் வைகும் ஊரின்பெயர்

சே: — சாலை, மாளிகை, பவனம், கோயில், குலம்.

பி:— மாளிகை, சாலை, மந்திரம், பவனம், குலம்.

சூ—: சாலை, மாளிகை, குலம், பவனம், கோயில்.

### முல்லை நிலத்து ஊரின்பெயர்

சே:— பாடி, முல்லைநிலத்தூர்.

பி:— பாடி, முல்லைநிலத்தூர்.

சூ:— பாடி, முல்லைநிலத்தூர்.

க:— பாடி, முல்லைநிலத்தூர்.

### நெய்தல் நிலத்து ஊரின்பெயர்

சே:— பட்டினம், நெய்தல்நிலத்தூர்

பி:— பாக்கம், பட்டினம், நெய்தல்நிலத்தூர்.

சூ:— பட்டினம், நெய்தல்நிலத்தூர்.

க:— பட்டினம், நெய்தல்நிலத்தூர்.

### குறிஞ்சி நிலத்து ஊரின்பெயர்

சே:— சீறூர், குறிச்சி.

பி:— குறும்பொறை, சீறூர், சிறுகுடி.

சூ:— குறிச்சி, சிற்றூர், சீறூர்.

க:— சிறுகுடி, சீறூர், குறிச்சி.

### பாலைநிலத்து ஊரின்பெயர்

சே:— முனையிடம், குறும்பு.

பி:— முனையிடம், குறும்பு.

சூ:— குறும்பு.

க:— குறும்பு, முனையிடம்.

### மருத நிலத்து ஊரின்பெயர்

சே:— பூக்கம், கொடிக்காடு, பூரியம், உறையுள், பாக்கம், அருப்பம், அகலுள், பதி, கோட்டம், வசதி, தாவளம், நியமம், வாழ்க்கை, தண்ணடை.

பி:— மடப்பம், தண்ணடை.

சூ:— புரி, குடம், நகரம், பூக்கம், புரம், குடி, நிகாயம் பள்ளி, சரணம், ஆவாசம். பாக்கம், தாவளம், நிகமம், தாமம் நிலயம், கோட்டம், பதி, வாழ்க்கை, சேர்வு, பாழி, வசதி.

க:— குடிக்காடு, பூக்கம், அகலுள், பதி, தண்ணடை, பூரியம், பாக்கம், அருப்பம், உறையுள், வாழ்க்கை, மருதம்.

### கடற்பெயர், கடற்கடவுள்பெயர்

பரவைதெண் டிரைவேலை பெருநீர்முன் னீருவரி
பௌவனதி பதிவாரணம்
பாருடைச முத்திரஞ் சக்கரஞ் சலநதி
பயோதரம் 1வெள்ளைநரலை
அரலையலை யாழியரி யத்தியம் பரமம்பு
ராசிசல ராசியுந்தி
அளக்கரார் கலியுததி வாருதிம கோததி
யன்னவம் புணரிகுரவை
வருணமணி யாகரம் வாராக ரஞ்சிந்து
வரியுவா வீரையுப்பு
வாரிசா கரம்நேமி சலதிதிரை யோதம்
கராலைய மகராலையம்

---

1 வெள்ளம் எனல் வேண்டும்.

**விரிநீர்வே லாவலைய மாரல்பா ராவாரம்**
**முகுகார்கோ ளாறொன்பதும்**
**வியன்கடற் சலபதிமுன் னீராசன் [1]வலநதி**
**விரும்புகேள் வன்வருணனே! 6**

*பரவை, தெண்டிரை, வேலை, பெருநீர், முன்னீர், உவரி,
பௌவம், நதிபதி, வாரணம்,
பாருடை, சமுத்திரம், சக்கரம், சலநதி,
பயோதரம், வெள்ளம், நரலை,
அரலை, அலை, ஆழி, அரி, அத்தி, அம்பரம், அம்புராசி,
சலராசி, உந்தி,
அளக்கர், ஆர்கலி, உததி, வாருதி, மகோததி,
அன்னவம், புணரி, குரவை,
வருணம், மணியாகரம், வாராகரம், சிந்து,
வரி, உவா, வீரை, உப்பு,
வாரி, சாகரம், நேமி, சலதி, திரை, ஓதம்,
கராலையம், மகராலையம்,
விரிநீர், வேலாவலையம், ஆரல், பாராவாரம்,
மிகு கார்கோள் ஆறொன்பதும்
வியன் கடல், சலபதி, முன்னீரசன், [2]சலநதி
விரும்பு கேள்வன் வருணனே! (151)

**கடற் பெயர்**

**சே:**— அத்தி, பௌவம், அளக்கர், ஆர்கலி, ஆழி, பெருநீர், அம்பரம், முந்நீர், உப்பு, வீரை, சக்கரம், வேலை, வெள்ளம், மகராலையம், நேமி, சலநிதி, வாரி, சலதி, அலை, பாராவாரம், உததி, சமுத்திரம், பரவை, உவர், நரலை, புணரி, வாரிதி, வேலாவலையம், கார்கோள், ஓதம், வாருணம், சிந்து, வாரம், அம்புராசி, உவரி, கடல்.

---

1 சலநதி எனல் பொருந்தும். 2 வலநதி என்றுளது.

பி:— அம்பரம், ஆர்கலி,அளக்கர்,தோயம், அம்புராசி,மகராலையம்,பரவை,சலதி,பௌவம், மகோததி, சலநிதி, வீரை, வேலாவலையம், நீர், வெள்ளம், வாரி, வேலை, வாருணம்,புணரி, சிந்து,முன்னீர்,தொன்னீர், நரலை, சக்கரம், உந்தி,சலராசி,உப்பு, உததி, சாகரம், சமுத்திரம, நேமி, நதிபதி, பாராவாரம், ப்யோததி, வாரிதி,வாரணம்,வலையம்,அத்தி,ஆழி,பெருநீர்,அலை, உவா, உவரி,சிந்துவாரம், ஓதம்,அரி,குரவை, அழுவம், தெண்டிரை, கார்கோள், கடல்.

சூ:— பரவை, தெண்டிரை,சிந்து,பௌவம்,பாராவாரம், நரலை, ஆர்கலி, உந்தி, நதிபதி, அம்புராசி, குரவை,சக்கரம்,கார்கோள்,வேலாவலையம்,முன்னீர், அரி, மகராலையம், நீராழி, அம்பரம்,வேலை, வாரிதி, அளக்கர், வாரி,உததி,ஓதம்,வீரை, அன்னவம், அத்தி, வெள்ளம், சாகரம், ஆழி, சலபதி, உப்பு, சலநிதி, சமுத்திரம், வாரணம், உவரி, கடல்.

க:— திரை,அலை,சாகரம்,வேலாவலையம்,உவரி, சிந்து, நரலை, சலராசி, அமபரம், அத்தி,சலதி,பரவை, நதிபதி, முன்னீர், அளக்கர், உததி, பௌவம்,வருணம், புணரி, மகராலையம், வீரை,வாரி, உப்பு, வாராகரம், பாருடை, உவா, வேலை, மகோததி, கார்கோள், சமுத்திரம், ஆர்கலி, நேமி,மணியாகரம்,பாராவாரம், அரலை, பேரோதம், பயோநிதி, ஆழி, வாருணம், அன்னவம், பெருவெள்ளம், கடல்.

**கடற்கரசன் பெயர்**

பி:— வருணன்.

**கடற்றிரை, கடற்கரை, மலையாறு. (முல்லைக்) கான்யாறு, குமரி, வைகை, வாணி, கங்கை, யொருனை, காவிரி, கவுதமை, கோதாவிரி இவற்றின்பெயர்.**

ஓதமொடு புணரிசீ கரம்வேலை நான்குமே
யொலிகடற் றிரையின்பெயர்.

**உலவுபா ராவாரம் வேலையிரு நான்குமே**
**யோங்கிய கடற்கரைப்பேர்.**

**காதிவரு மருவியே மலையாற்றி னாமங்**
**கடிந்தகா னியாற்றினாமங்**
**கலுழியுட னொலியலே யுலவையே யுயவையாங்**
**கன்னியே குமரியின்பெயர்**

**வேதவதி யேவைகை யானியே வாணியாம்**
**வமலையே கங்கையின்பேர்.**
**மேவுபொரு ணைப்பெய ரான்பொருந் தம்பொன்னி**
**மிக்ககா விரியின்பெயர்.**

**கோதையே கவுதமை நதிக்குறிய நாமங்**
**குலாவியவி ருத்தகங்கை**
**கோதாவி ரிக்குரிய நாமமாஞ் செந்தமிட்**
**குருமுனியு ரைத்தபெயரே!** 7

*ஓதம்-ஓடு புணரி, சீகரம், வேலை, நான்குமே
ஒலிகடல் திரையின் பெயர்.
உலவு பாராவாரம், வேலை இரண்டுமே.
ஓங்கிய கடற்கரைப்பேர்.

காதிவரும் அருவியே மலையாற்றின் நாமம்.
கடிந்த கான்யாற்றின் நாமம்
கலுழியுடன் ஒலியலே உலவையே உயவை ஆம்.
கன்னியே குமரியின்பேர்.

வேதவதியே வைகை. ஆனியே வாணி ஆம்.
விமலையே கங்கையின்பேர்.
வேவு பொருணைப்பெயர் ஆன்பொருந்தம்,
மிக்க காவிரியின்பேர். (பொன்னி)

---

1 இரண்டுமே எனல்வேண்டும்.
2 குமரியின்பேர் எனல்வேண்டும்.

கோதையே சவுதமைநதிக்கு உரிய நாமம்.
குலாவிய விருத்த கங்கை
கோதாவிரிக்கு உரிய நாமம் ஆம், செந்தமிழ்க்
குருமுனி உரைத்த பெயரே! (152)

**கடற்றிரையின் பெயர்**

**சே:**— ஓதம், புணரி.

**பி:**— ஓதம், புணரி, சீகரம். வேலை, அலை.

**சூ:**— சீகரம், கல்லோலம். அறல், தரங்கம்.

**க:**— பெருங்கலி, ஓதம், புணரி, கடற்றிரை, அறல், தரங்கம், திரை, அலை, கல்லோலம், வீ, சீகரம்.

**கடற்கரையின் பெயர்**

**சே:**— வேலை, பாராவாரம், கடற்கரை.

**பி:**— வேலை, பாராவாரம், கடற்கரை.

**சூ:**— பாராவாரம், வேலை, கடற்கரை.

**மலையாற்றின் பெயர்**

**சே:**— அருவி.

**பி:**— அருவி.

**சூ:**— அருவி.

**க:**— அருவி.

**(முல்லைக்) கான்யாற்றின் பெயர்**

**சே:**— கலுழி, உயவை, முல்லைக்கான்யாறு.

**பி:**— கலுழி, உயவை, முல்லைக்கான்யாறு.

சூ:— கலுழி. முல்லைக்கான்யாறு.

கூ:— கலுழி, உயவை, முல்லைக்கான்யாறு.

### குமரிநதியின் பெயர்

சே:— கன்னி, குமரி.

பி:— கன்னிநதி, குமரி.

சூ:— கன்னி, குமரி.

### வைகைநதியின் பெயர்

சே:— வேகவதி, வைகை.

பி:— வேகவதி, வைகை.

### வாணிநதியின் பெயர்

சே:— (ஆனிவானி, ஆள்பொருந்தம்.)

பி:— சோணை, சரச்சுவதி.

### கங்கைநதியின் பெயர்

சே:— பகீரதி, சானவி, வரநதி, சுரநதி, திரிபதகை, மந்தாகினி, கங்கை.

பி:— வானதி, பகீரதி, மந்தாகினி, சானவி, வரநதி, சுரநதி, விமலை, திரிபதகை, தெய்வநதி, கங்கை.

சூ:— வரநதி, மந்தாகினி, திரிபகை, சுரநதி, சானவி, பகீரதி.

### பொருநைநதியின் பெயர்

சே:— பொருநை, தண்பொருந்தம்.

பி:— பொருநை, பொருந்தம்.

சூ:— பொருநை, பொருந்தம்.

**காவிரிநதியின் பெயர்**

சே:— பொன்னி, காவிரி.

பி:— பொன்னி, காவிரி.

சூ:— பொன்னி, காவிரி.

**கௌதமைநதியின் பெயர்**

சே:— கோதை, கௌதமை.

பி:— கோதை, கௌதமை.

சூ:— கோதை, கௌதமை,

**கோதாவிரியின் பெயர்**

சே:— விருத்தகங்கை, விமலை, கோதாவிரி.

பி:— விமலை, கோதாவரி.

சூ:— விருத்தகங்கை, விமலை, கோதாவரி.

**நல்லிநீர், பன்னீர், வெந்நீர், ஊருணி, நீர்ச்சுழி, சேற்றின்குமிழி, நீர்க்குமிழி, கருமணல், வெண்மணல், மணற்குன்று, நுண்மணல், நுரை, சேறு இவற்றின் பெயர்.**

நாரமே நானமிவை நல்லநீ ரின்பெயர்
நறுமலர் சலமேபன்னீர்.
நாமம்பு முங்குநீர் [1]வெங்குரம் பம்புலவர்
நாடு [2]செங் கீரைவெந்நீர்.
ஊருளா ருண்ணுநீ ருருணி யெனும்பெய
ருந்தியே சுரியைநீரி

---

1 & 2 = ?

**னுள்ளசுழி யின்பெயர் சேற்றினி லெழுங்குமிழி**
**யொக்குமே கொப்புள்பொகுடு**
**நீரினிற் குமிழியே [1]புற்பதம் பௌவநுரை**
**நீள்மொக்குள் கொப்புள்நொவ்வி**
**நிகர்க்குமறல் கருமணல் வாலுகம் வெண்மணல்**
**நிறைபுளின மேமணற்குன்**
**றூருமத ரயிரெக்க ரகிர்நான்கு நுண்மண**
**லுரைத்தபே னங்கம்பல**
**மோரிரண் டென்பநுரை நொதியுள லருவருப்**
**புறுசேற்றி னாமமாமே! 8**

*நாரமே நானம் இவை நல்லநீரின் பெயர்.
நறுமலர்ச் சலமே பன்னீர்
நாமம், புழுங்குநீர், [2]வெங்குரம்பம், புலவர்
நாடு [3]செங்கீரை வெந்நீர்.

ஊர் உளார் உண்ணும் நீர் ஊருணி எனும்பெயர்.
உந்தியே சுரியை நீரின்
உள்ள சுழியின பெயர். சேற்றினில் எழும் குமிழி
ஓக்குமே கொப்புள், பொகுடு.

நீரினிற் குமிழியே [1]புற்புதம், பௌவம், நுரை,
நீள்மொக்குள், கொப்புள், நொவ்வி
நிகர்க்கும் அறல் கருமணல், வாலுகம் வெண்
நிறை புளினமே மணற்குன்று. [மணல்

ஊரும் அதர், அயிர், எக்கர், அகிர் நான்கும் நுண்
உரைத்த பேனம், கம்பலம், [மணல்
ஓர் இரண்டு என்ப நுரை, நொதி, உளல்.
அருவருப்புறு சேற்றின் நாமமாமே! (153)

---

1 புற்புதம் எனல் வேண்டும்.
2 & 3 = ?
1 புற்புதம் என்றுளது.

**நல்லநீரின் பெயர்**

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.

**பன்னீரின் பெயர்**

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.

**வெந்நீரின் பெயர்**

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.

**ஊருணும்நீரின் பெயர்**

**சே:—** ஊருணி

**பி:—** ஊருணி

**சூ:—** ஊருணி

**நீர்ச்சுழியின் பெயர்**

**சே:—** உந்தி, சுரியல், நீர்ச்சுழி.

**பி:—** உந்தி, சுரியல், நீர்ச்சுழி.

**சூ:—** உந்தி, நீர்ச்சுழி.

**சேற்றின்குமிழியின் பெயர்**

**பி:—** பொப்புள், பொகுட்டு.

**சூ:—** குமிழ், பொகுட்டு.

**நீர்க்குமிழியின் பெயர்**

**சே:—** புற்புதம், மொக்குள், பௌவம், நீர்க்குமிழி.

**பி:—** கொப்புள், மொக்குள். புற்புதம். நீர்க்குமிழி.

**சூ:—** நுரை, மொக்குள், பௌவம், புற்புதம், கொப்புள், நீர்க்குமிழி.

**க:—** பௌவம், நுரை, புற்புதம், குமிழி.

### கருமணலின் பெயர்

பி:— அறல்.

சூ:— அறல்.

### வெண்மணலின் பெயர்

சே:— வாலுகம்.

பி:— வாலுகம்.

சூ:— வாலுகம்.

க:— வாலுகம்.

### மணற்குன்றின் பெயர்

சே:— புளினம்

பி:— புளினம்

சூ:— புளினம்

க:— புளினம்

### நுண்மணலின் பெயர்

சே:— அதர், அயிர்,

பி:— அதர், அயிர், எக்கர்.

சூ:— அதர், அயிர்.

க:— அதர், எக்கர், அறல், அயிர்.

### நுரையின் பெயர்

சே:— பேனம், நுரை.

பி:— பேனம், பே, நுரை.

சூ:— பேனம், நுரை.

க:— பௌவம், நுரை.

(அருவருப்புறு) சேற்றின் பெயர்

பி:— நொளில், ஊழில்.

சூ:— நொதி,

## மோக்கம் (மோட்சம்), தெய்வலோகம், நரகலோகம் இவற்றின் பெயர்

சிவமுத்தி கேவலங் கைவலஞ் சாயுட்சி
யம்வீடு மீளாக்கதி
சித்திபஞ் சமகதி னிர்வாண [1]மொடுபரகதி
தெளியமு [2]மபவருக்கம்.
நவிலரிய பதிமூன்று பெயருமே மோக்கமாம்
நாகம்வி சும்புவானம்
நண்ணியசு வந்தான மமருலகு பொன்னுலகு
நாட்டந்து றக்கமும்ப
ருவணைபுத் தேளுலகு வியனுலகு கற்பகத்
தொடுவிமா னஞ்சுவர்க்க
முயர்நில மேலுலகு பதினேழு மேதெய்வ
லோகமாம் நரகலோகம்
பவனமொடு பாதாலங் கீழுல காம்பிலம்
பாதாள லோகமன்றிப்
பகரில்வீ ழுங்கதியு மாமென்று மலையமுனி
பண்புடனி யம்பினாரே! 9

1 அசை மிகுந்துள்ளது; பரகதி எனல் பொருந்தும்.
2 மவ்வருக்கம் என்றுளது.

*சிவம், முத்தி, கேவலம், கைவலம, சாயுச்சியம்,
வீடு, மீளாக்கதி,
சித்தி, பஞ்சமகதி, நிர்வாணம், பரகதி,
தெளியமும் அபவருக்கம்,

நவில அரிய பதின்மூன்று பெயருமே மோக்கமாம்.
நாகம், விசும்பு, வானம்,
நண்ணிய சுவந்தானம், அமருலகு, பொன்னுலகு,
நாட்டம், துறக்கம், உம்பர்,

உவணை, புத்தேளுலகு, வியனுலகு, கற்பகம்,
விமானம், சுவர்க்கம், [அத்தொடு
உயர்நிலம், மேலுலகு, பதினேழுமே
தெய்வலோகமாம். நரகலோகம்

பவனம்-ஓடு பாதலம், கீழுலகு ஆம், பிலம்,
பாதாளலோகம், அன்றிப்
பகரில் வீழுங்கதியும் ஆம் என்று மலையமுனி
பண்புடன் இயம்பினாரே! (154)

### மோக்கத்தின் பெயர்

**சே.**— அமுதம், கேவலம், அபவருக்கம், வீடு, சிவம், கைவல்லியம், சித்து, மீளாக்கதி, பரகதி, முத்தி, பஞ்சமகதி, நிர்வாணம், மோக்கம்

**பி** — கேவலம், கைவலம், கதி, சித்தி, அமுதம், பரம், சிவம், முத்தி, மோட்சம்.

**சூ**:— அபவருக்கம், கேவலம், சித்தி, வீடு, கைவல்லியம், மீளாதகதி, நிர்வாணம், பரகதி, சிவம், முத்தி, அமுதம், மோக்கம்.

### தெய்வலோகத்தின் பெயர்

**சே:**— தானம், துறக்கம், பொன்னுலகு, உம்பர், வானகம், அமருலகு, உயர்நிலை, புத்தேள், வியனுலகு, விசும்பு, விண்ணுலகு, நாகம், பவனம், மாசுவர்க்கம், தெய்வலோகம்.

பி:— சுவர்க்கம், பொன்னுலகு, துறக்கம், புத்தேளுலகு, விண்ணுலகு, மேலையுலகு, விசும்பு, மன்னுலகு, நாகம்,கற்பம்,வானுலகு, வியனுலகு, தானம்,உவணை, சுவவு, சுரரிடம், உயர்நிலை.

சூ:— உயர்நிலை, உவணை, புத்தேளுலகு, பொன்னுலகு. பொன்னுலகு, தானம், வியனுலகம், துறக்கம், மேலுலகம், விமானம், சுவர்க்கம், கற்பம், நாகம், விண்ணுலகு, உம்பர், தேவலோகம்.

### நரகத்தின் பெயர்

சே:— நிரயம், துவாந்தம், பாதாளம், கும்பி, அள்ளல்,அளறு, அருஞ்சிறை, இருணிலம், எரி, திமிரம், இரௌரவம், நரகம்.

பி:— நிரயம்,பவர்க்கம்,கும்பி, புலவு, ஊழ்த்தல், அபரம், அள்ளல், அளறு,அதோகதி,பாவம்,துவாந்தம், அருஞ்சிறை, இருள், நரகம்.

சூ:— அதோகதி, பாதாளம், நிரயம், அளறு,தீ சுவப்பிரம்,ஊழல், நரகு,இருள்,பவர்க்கம்,பூதி, நரகம்.

## தேவர் கோயில், அரண்மனை, அரசிருக்கை அரசியிருக்கை, புனைகலனிருக்கை, வீடு, சிற்றில், இவற்றின் பெயர்

சினகரங் கோட்டநிலை யம்பாழி பள்ளிநகர்
சிகரமா லையமந்திரஞ்
செய்தியந் தளியெனக் கூரியபன் னொன்றுமே
தேவருறை கோயிலின்பே
ரனையகுல மாளிகை சாலைபவ னங்கோயி
[1]லரமனை நிலையமன்ன

1 லரண்மனை எனல்வேண்டும்.

**ராலையப் பெயர்கந்த வாரமந் தப்புர**
**மவர்மனைவி யுறையுமில்லம்**
**புனைகல னிருக்கையின் பெயர்பண்ட சாலையாம்**
**புக்கில்பதி வசதிமாடம்**
**புரையுளே யுறையுளில் லம்பாத்தி யில்லொடு**
**பொருந்துமந் திரமிடவகை**
**மனையகஞ் சேர்வுபதி நான்குமே வீடாம்**
**வயங்கியச மந்தமோம**
**மண்டப மொன்றாங் குரம்பையொடு கூரையென**
**வந்தபெயர் சிற்றிலாமே!**

*சினகரம், கோட்டம், நிலையம், பாழி, பள்ளி, நகர்,
சிகரம், ஆலையம், மந்திரம்,
செய்தியம், தளி என்க்கூறிய பன்னொன்றுமே
தேவர் உறை கோயிலின் பேர்.

அனைய குலம், மாளிகை, சாலை, பவனம், கோயில்
அரண்மனை, நிலையம், மன்னர்—
ஆலையப்பெயர். கந்தவாரம், அந்தப்புரம்,
அவர்மனைவி உறையும் இல்லம்.

புனைகலன் இருக்கையின் பெயர் பண்டசாலை ஆம்.
புக்கில், பதி, வசதி, மாடம்,
புரையுளே, உறையுள், இல்லம், பாத்தி, இல்—ஒடு,
பொருந்தும் மந்திரம், இடவகை,

மனை, அகம், சேர்வு பதினான்குமே வீடு ஆம்.
வயங்கிய சமத்தம, ஓமம்,
மண்டபம், ஒன்றாம் குரம்பை ஒடு கூரை என
வந்தபெயர் சிற்றில் ஆமே! (155)

**தேவர்கோயிலின் பெயர்**

**சே:—** சினகரம், சேதிமம், தேவராலயம், நிலயம், பாழி, பள்ளி, நிகேதனம், மந்திரம், ஆலயம், தேவகுலம், கோட்டம், நகர், தளி, வானவருறையுள், கோயில்.

பி:— சிநகரம், சேதிமம், சிதேந்திரம், கோட்டம், நிலையம், மந்திரம்,நிகேதனம்,ஆலையம், நகரம், தளி, தேவர்கோயில்.

சூ:— மந்திரம், நிலையம், கோட்டம், ஆலையம், சினகரம், சேதிமம், தளி, தேவர்கோயில்.

க:— சினகரம், மந்திரம், கோட்டம், பிரசாதம், சேதியம், குலம்,பள்ளி, நிலையம், நிகேதனம், ஆலயம், தளி, கோயில், தேவர்நகர்.

**அரண்மனையின் பெயர்**

சே:— சாலை, மாளிகை,பவனம்,கோயில், குலம், மன்னர் இல்.

பி:— மாளிகை, சாலை, மந்திரம்,பவனம், குலம், அரசர்கோயில்.

சூ:— சாலை, மாளிகை, குலம், பவனம், கோயில் அரசர்இல்.

**அரசிருக்கையின் பெயர்**

சே:— (சாலை, மாளிகை,பவனம்,கோயில், குலம், மன்னர்இல்.)

பி:— அத்தாணி, பூரியம், ஆசாரம், வேத்தவை.

சூ:— அத்தாணி, வேத்தவை.

**அரிசியிருக்கையின் பெயர்**

சே:— கந்தவாரம்,உவளகம்,அந்தப்புரம்,தேவியர் மனை.

பி:— அந்தப்புரம்,கந்தவாரம், அரண்மனை.

சூ:— கந்தவாரம், அந்தப்புரம்.

### புனைகலனிருக்கையின் பெயர்

சே:— பண்டசாலை, புனைகலனிருக்கை,

பி:— பொற்கலனிருக்கை, பொற்பண்டாரம்.

சூ:— கலனிருக்கை, பண்டசாலை.

### வீட்டின் பெயர்

சே:— மாடம், மனை, உறையுள், புக்கில், பதி. வசதி, இடம், பாத்தி, அகம், வயின், இல்லம். இடவகை, சேர்வு, வீடு.

பி:— மனை, நகர், சேர்வு, வசதி, அகம், இல், புரையுள், பாத்தி, புக்கில், இல்லம், பவனம், உறையுள், பதி, மாடம், குலம், இடவகை, இல்லிடம். வீடு.

சூ:— மனை, இல்லம், புக்கில், மாடம், மந்திரம், வசதி, வீடு.

க:— மாடம், மனை, உறையுள், புக்கில், இடவகை, பதி, பாத்தில், வசதி. இடம், அகம், காணி, இல்லம், பவனம், வயிர், சேர்வு, வீடு.

### சிற்றில்லின் பெயர்

சே:— கூரை, குரம்பை, குடில், சிற்றில்.

பி:— குரம்பை, குடில், குடிசை, சிற்றில்.

சூ:— கூரை, சிற்றில்.

க:— குரம்பை, கூரை, சிற்றில்.

## திசை, கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, நிலம், விச்சாதரர் உலகம் இவற்றின் பெயர்.

(தி)சைவிசும் பாசையம் பரம்வம்பல் மாதிரந்
திகைபுலங் கருபமுடனே
(கே)ழுலகு கோக்காட்டை யரிதமீ ரேமுஞ்
சிறந்ததிக் கின்பொதுப்பே
ரிசையும்பி ராசியைந் திரிபுரு வங்குணக்
கேற்றகீழ்த் திசைகிழக்கா
மியமதிசை வாசிதென் றெக்கண(மி) யாமிய
மியம்புஞ்சி வேதைதெற்காம்
வசையில்வா ருணியங்கு டக்குமேக் குப்பிச்சி
மத்தொடு பிரத்தியக்கம்
வகுத்தமேற் [1]காகுமமு தக்குசதி யுத்தர
மன்றுபிங் கலம்வடக்காம்
அசையாத்தி ணைவேலி மாப்பூ நிலப்பெய
ராஞ்சேணி யோடுசெடியு
மழிவில்விச் சாதரவு லோகமா மென்றே
யருந்தவ னியம்பினானே. 11

*திசை, விசும்பு, ஆசை, அம்பரம், வம்பல், மாதிரம்.
திகை, புலம், ககுபம் – உடனே
[2]கேழ், உலகு, கோ, காட்டை, அரிதம், ஈரேழும்
சிறந்த திக்கின் பொதுப்பெயர்.
இசையும் பிராசி, ஐந்திரி, புருவம், குணக்கு,
ஏற்ற கீழ்த்திசை கிழக்கு ஆம்.
இயமதிசை, வாசி, தென், தெக்கணம், யாமியம்,
இயம்பும் சிவேதை தெற்கு ஆம்.
வசை இல் வாருணியம், குடக்கு, மேக்க, பிச்சிமம்,
அத்தோடு பிரத்தியக்கம்,

---

1 காகுமு எனல் வேண்டும் 2 = ?

வகுத்த மேற்கு ஆம். உதக்கு, உசதி, உத்தரம்,
மன்னு பிங்கலம் வடக்கு ஆம்.
அசையா திணை,வேலி,மா பூ நிலப்பெயர் ஆம்.
சேணியோடு மசடியும்
அழிவு இல் விச்சாதர உலகம் ஆம் என்றே
அருந்தவன் இயம்பினானே! (156)

## திசையின் பெயர்

**சே:—** மாதிரம். ஆசை, அம்பர், ககுபம், திசை, திகை, விசும்பு, உலகம், கோ, காட்டை.

**பி:—** மாதிரம், திகை, திசை, வம்பல், விசும்பு, ஆசை, புலம், உலகு,கோ, காட்டை,அரிதம்,அம்பரம், ககுபம், திக்கு.

**சூ:—** அரிதம், மாதிரம், விசும்பு, அம்பரம், உலகு, காட்டை, திசை, கோ, ஆசை, ககுபம், திசை.

**க:—** கோ, மாதிரம், காட்டை, அரிதம், திக்கு, ஆசை, புலம், ககுபம, திசை, வம்பல், விசும்பு, உலகு.

## கிழக்கின் பெயர்

**சே:—** குணக்கு, பூருவம், இந்திரி, பிராசி, கிழக்கு, கீழ்த்திசை.

**பி:—** குணக்கு, பூருவம், ஐந்திரம், பிராசி, கிழக்கு, கீழ்த்திசை.

**சூ:—** பூருவம், குணக்கு, பிராசி. ஐந்திரி கிழக்கு,

### தெற்கின் பெயர்

**சே:—** அவாசி, தக்கணம், யாமியம், தெக்கு, தெற்கு, சிவேதை

**பி:—** அவாசி, தக்கணம், யாமினியம், தெக்கு, சிவேதை, தென், தெற்கு.

**நூ:—** யாமியம், அவாசி, தக்கிணம், சிவேதை, தெற்கு

### மேற்கின் பெயர்

**சே:—** மேக்கு, பச்சிமம், குடக்கு, வாருணம், பிரத்தி, யக்கு, மேற்கு

**பி:—** மேக்கு, பச்சிமம், குடக்கு, வாருணம், பிரத்தி, யக்கு, மேற்கு.

**நூ:—** குடக்கு, வாருணம், மேக்கு, பச்சிமம், பிரத்தி, யக்கு, மேற்கு.

### வடக்கின் பெயர்

**சே:—** உதக்கு, உதீசி, உத்தரம், வடக்கு.

**பி:—** உதக்கு, உதீசி, உத்தரம், பிங்கலம், மதிதிசை, வடக்கு.

**நூ:—** உதக்கு, உதீசி, உத்தரம், வடக்கு.

### நிலத்தின் பெயர்

**பி:—** மா, திணை, வேலி, பூ, நிலம்.

**நூ:—** திணை, மா, வேலி, பூ, நிலம்.

### விச்சாதரர் உலகத்தின் பெயர்

சே:— சேணி, சேடி, விஞ்சையர்சேரிடம். விஞ்சையருலகு

பி:— சேணி, விஞ்சைப்பதி, சேடி, யாணர்நகர், வித்தியாதரர் இடம்.

சூ:— சேடி, சேணி, விஞ்சையரூர்.

## மதில், கோட்டைமதில், மதிலுறுப்பு (கொத்தளம்) இவற்றின் பெயர்.

**வேலியர ணம்புரிசை வாரிகட கங்காவல்**
**வேதிபுரம் நொச்சியாரை**
**வேணகை'வ டூர்ப்புத் தகைப்புப் பிரகாரம்**
**விளங்குமெயி லோதையிஞ்சி**

**சாலமர ணாரல்சுற் றுவளகம் பந்தமொடு**
**[2]சாகார மேயகப்பா**
**சாற்றுசிறை காப்பென மதித்தமூ வொன்பதுஞ்**
**சாருநீள் மதிலின் பெயர்**

**கோலமார் கோட்டைமதி லின்பெயர் பிரகார**
**மாங்குறிநாஞ் சிலுறைஞாயில்**
**கோசம்வி தப்புப்ப தப்பாடு தோணிபொறி**
**குறைபடா மதிலுறுப்பு**

**மேலிசையும் [3]நரலையெந் திரமெனப் பதினொன்றும்**
**வீறுசேர் கொத்தளத்தின்**
**மேவுபெய ராமென்று பொதியப்பொ ருப்பிலுறை**
**வேதியனி யம்பினானே! 12**

*வேலி, அரணம், புரிசை, வாரி, கடகம், காவல்,
வேதி, புரம், நொச்சி, ஆரை.
வேணகை, வரைப்பு, தகைப்பு, பிரகாரம்,
விளங்கும் எயில், ஓதை, இஞ்சி,

சாலம், அரண், ஆரல், சுற்று, உவளகம், பந்தம்-ஒடு
சக்கரம்-ஏ அகப்பா,

---

1 வரைப்பு எனல் வேண்டும்.
2 சக்கரமேயகப்பா எனல் வேண்டும்.
3 ணரலை என்றுளது.

சாற்று சிறைகாப்பு என மதித்த மூவொன்பதும்
சாரும் நீள மதிலின் பெயர்.

கோலம்ஆர் கோட்டை மதிலின் பெயர் பிரகாரம்
குறி நாஞ்சில், உறை, ஞாயில். [ஆம்.
கோசம், விதப்பு, பதப்பாடு, தோணி, பொறி,
குறைபடா மதிலுறுப்பு,

மேல்இசையும் நரலை, எந்திரம், எனப் புன்னொன்றும்
வீறுசேர் கொத்தளத்தின்
மேவுபெயராம் என்று பொதியப பொசறுப்பில்
[உறை

வேதியன் இயம்பினானே!

**மதிலின் பெயர்**

**சே**:— இஞ்சி, நொச்சி, எயில், சுற்று, புரிசை, புந்தம், வரைப்பு, காப்பு, அரண், காவல், ஆரல், ஓதை, பிராகாரம், வேலி, சாலம், வேணகை, மதில், வன்சிறை, உவளகம், ஆரை, மதில்,

**பி**:— ஆரை, புரிசை, அரணம், சாலம், வேலி, பரவை, உவளகம், இஞ்சி, ஓதை, வேணகை, எயில், சிறை, கடகம், துருக்கம், அகப்பா, சுற்று, காப்பு, வரைப்பு, சக்கரம், வாரி, காவல், அரண், புறம், நொச்சி, உரம், ஆரல், பிரகாரம், மதில்,

**நா**:— கடகம், காப்பு. பிரகாரம் நொச்சி, ஆரல், புரிசை, வேணகை, வாரி, உவளகம், இஞ்சி, அரணம், எயில், ஓதை.சிறை, வேதி, சாலம், அகப்பா, வேலி, மதில்.

**க**:— இஞ்சி, எயில்,சுற்று, காப்பு, அரண். காவல், வரைப்பு, நொச்சி, புரிசை, மதில், வேலி, வேணகை, ஆரல்.

**கோட்டை மதிலின் பெயர்**

**க**:— உவளகம், வன்சிறை, துற்கம், அரணம், சுற்று, வாரி, தகைப்பு, கோட்டை.

### மதிலுறுப்பின் பெயர்

சே:— பதப்பாடு. எந்திரம், கோசம், தோணி, விதப்பு, ஞாயில், நாஞ்சில், மதிலுறுப்பு.

பி — ஞாயில், எந்திரம், நாஞ்சில், கோசம், விதப்பு, நரலை, பதப்பாடு, தோணி, கொத்தளம், பொறி.

சூ:— எந்திரம், கோசம், நாஞ்சில், தோணி, ஞாயில், மதிலுறுப்பு.

க:— மதிலுறுப்பு, பதப்பாடு, தோணி, விதப்பு, எந்திரம், கோசம், பொறி, நாஞ்சில், ஞாயிறு.

## அகழி, ஆழ்வாரி, கோபுரம், முனிவர் உறைவிடம், அரசிருக்கை, குதிர், புற்று, புற்றாஞ்சோறு, கல்வி பயிலிடம் இவற்றின் பெயர்.

பரிகங்கி டங்ககழி யுடுவோடை கேணியாம்
புரியகப் பாச்சிக்கிரி
பகருமக ழின்பெய ருடைவாரி கற்பரப்
படுக்கமு [1]ஞுயர்த்தமேடை

(த)ரிதபன மாறு(ம)ாழ் வாரியின் பெயர்சிகரி
சிகரமே கோபுரப்பேர்
(ச)ப்பியம டம்ப(ர ழி பள்ளிகுவை தாபதந்
நீதறுக ரண்டையாறு

மருமுனிவ ருறைவிடம் பூரிமம் [2]வேய்த்தவே
யத்தாணி யரசரரணான்
கரசர்க ளிரு(ப்)பீடம் யு(க)லென்ப குதிராகு
மதுவலால் வன்மீகமே

(க)ருதுபுற் றாமதன் சோறேகு றும்பையாங்
கைவலோர் நாவலோர்கள்
கல்விபயி லுங்களங் கழகமெனு நாமமாங்
கல்லூரி யொன்றுமாமே! 13

---

1 ஞுயர்ந்த எனல் வேண்டும். 2 வேத்தவை எனல் வேண்டும்.

*பரிசம், கிடங்கு, அகழி, உடு, ஓடை, கேணி,
பாம்புரி, அகப்பா, சிக்கிரி,
பகரும் அகழின் பெயர். உரை, வாரி, கற்பரப்பு,
அடுக்கம், உள் உயர்ந்த மேடை,

தெரி தபனம் ஆறும் ஆழ்வாரியின் பெயர், சிகரி,
சிகரம்மே கோபுரப்பேர்.
செப்பிய மடம், பாழி பள்ளி, குவை, தாபதம்,
தீதுஅறு கரண்டை ஆறும்

அருமுனிவர் உறைவிடம், பூரிமம், வேத்தவை,
அத்தாணி, அரசர் அரண நான்கு
அரசர்கள் இருப்பிடம் புகல் என்ப குதிர் ஆகும்
அது அலால் வன்மீகமே

கருது புற்று ஆகும். அதன் சோறே குறும்பி ஆம்.
கைவலோர் நாவலோர்கள்
கல்வி பயிலும் களம் கழகம் எனும் நாமம் ஆம்;
கல்லூரி என்றும் ஆமே! (58)

**அகழியின் பெயர்**

சே:— அகழி, கிடங்கு, ஓடை, பரிகை, அகழ், கேணி,

பி:— ஓடை, கிடங்கு, கேணி, உடு, அகப்பா, பக்கம், அகழி.

நா:— பரிகம், கிடங்கு, கேணி, பாம்புரி, உடு, ஓடை, அகழி.

க:— அகழி, கிடங்கு, அகப்பா, பரிசம், அகழ், புதவு.

**ஆழ்வாரியின் பெயர்**

பி:— ஓதை.

**கோபுரத்தின் பெயர்**

சே:— சிகரி, கோபுரம்.

பி:— கூடம், சிகரி, சிகரம், கோபுரம்.

### முனிவர் உறைவிடத்தின் பெயர்

சே:— தாபதம், பாழி, கரண்டை, பள்ளி.

பி:— பாழி, கரண்டை, பள்ளி, மடம், குகை, தாபதம்.

சூ:— பாழி, தாபதம், கரண்டை, பள்ளி.

க:— (பாழி,சட்டகம்,பட்டம்,சேர்விடம்.)

### அரசரிருக்கையின் பெயர்

சே:— அத்தாணி, வேத்தவை, அரசரிருக்கை.

பி:— அத்தாணி,பூரியம்,ஆசாரம்,வேத்தவை.

சூ:— அத்தாணி, வேத்தவை.

### குதிரின் பெயர்

சே:— புகல்

பி:— புகல்

சூ:— புகல்

### புற்றின் பெயர்

சே:— வன்மீகம், புற்று.

பி:— வன்மீகம், புற்று.

சூ:— வன்மீகம், புற்று.

க:— வன்மீகம், புற்று.

### புற்றாஞ்சோற்றின் பெயர்

சே:— குறும்பி.

பி:— குறும்பி.

**கல்விபயிலிடத்தின் பெயர்**

சே:— கல்வியூரி, கல்லூரி.

பி:— கழகம், பட்டிமம், கல்வி, சுற்றுவாரி, கல்லூரி.

சூ:— கழகம், கல்லூரி.

க:— கழகம், கல்விபயில்களம், கல்லூரி, கல்வி.

## முகடு, வேயுள்.வேயாமாடம், தாழ்வாரம், சுவர், முடுக்கு, முற்றம், அறப்பு, மடைப் பள்ளி, அறச்சாலை, ஓதுபள்ளி, வீட் டிறப்பு, பீடம் இவற்றின் பெயர்.

விடங்கமஞ் சேமுகடு வேயுளே வேய்தல்
வேயாமாடா மேமண்ணீடு
மிக்கசோ பனமா ரோகணந் தாழ்வாரம்
வீறான பித்திகைசுவர்

முடங்குகோ ணம்முடுக் காமுன்றி லங்கணம்
முற்றமா மரமியந்தான்
முன்னியங்கி லாமுற்ற மாஞ்சுல்லி காமர
முத்தான மொடுகுமுதமென

றடைந்தநான் கும்மடுப் பாம்பாக சாலை
யடுக்களை யட்டிலொருமுன்
றாமடைப் பள்ளியின் பெயர்சாலை யேயறச்
சாலையா கும்விளம்பி

லிடங்கொளுமறப்புற மோதிடும் பள்ளியா
மிறைவளவி வீட்டிறப்பா
மேற்றமுள பீடிகை பீடமா மென்றே
யிசைத்தனர் தமிழ்ப்புலவரே! 14

*விடங்கம், மஞ்சு, ஏ முகடு, வேயுளே வேய்தல்.
வேயாமாடமே மண்ணீடு.
மிக்க சோபானம், ஆரோகணம், தாழ்வாரம்,
வீறுஆன பித்திகை சுவர்.
முடங்கு கோணம் முடுக்கு ஆம். முன்றில், அங்கணம்.
முற்றம்ஆம். அரமியம் தான்
முன்னிய நிலாமுற்றம் ஆம். சுல்லி, காமரம்,
உத்தானம், ஒடு குமுதம் என்று
அடைந்த நான்கும் அடுப்பு ஆம். பாகசாலை, அடுக்களை
அட்டில் ஒரு மூன்றாம்
மடைப்பள்ளியின் பெயர். சாலையே
அறச்சாலை ஆகும். விளம்பில்
இடம்கொளும் அறப்புறம் ஓதிடும் பள்ளியாம்.
இறை, வளவி, வீட்டு இறப்பின் பெயர்.
ஏற்றம் உள பீடிகை பீடம் ஆம் என்றே
இசைத்தனர் தமிழ்ப் புலவரே! (159)

### முகட்டின் பெயர்

சே:— விடங்கம்.

பி:— விடங்கம், கொடைக்கை, மஞ்சு.

சூ:— விடங்கம்.

க:— விடங்கம், மஞ்சு,

### வேயுளின் பெயர்

சே:— வேய்தல், வேயுள்.

பி:— வேய்தல்.

சூ:— வேய்தல்.

**வேயா மாடத்தின் பெயர்**

சூ:— மண்ணீடு.

**தாழ்வாரத்தின் பெயர்**

சே — சோபானம், தாழ்வாரம்.

பி:— ஆரோகணம், சோபானம், தாழ்வாரம்.

சூ:— சோபானம், தாழ்வாரம்

க:— சோபானம், தாழ்வாரம்.

**சுவரின் பெயர்**

சே:— பித்திகை, சுவர்த்தலம்.

பி:— உவமாநிலம், பித்திகை, சுவர்த்தலம்.

சூ:— பித்திகை, சுவர்.

**முடுக்கின் பெயர்**

சே:— கோணம், முடுக்குத்தெரு.

**முற்றத்தின் பெயர்**

சே: முன்றில், அங்கணம்.

பி:— முன்றில், அங்கணம்.

சூ:— அங்கணம், முன்றில்.

க:— அங்கணம், முன்றில்.

**நிலா முற்றத்தின் பெயர்**

சே:— அரமியம்.

பி:—அரமியம்.

சூ:— அரமியம்.

க:— அரமியம்.

**சே**:— குமுதம், சுல்லி, காமரம், அடுப்பு, உத்தானம்.

**பி**:— காமரம், சுல்லி, குமுதம், உத்தானம்.

**சூ**:— குமுதம், சுல்லி, காமரம், உத்தானம்.

**மடைப்பள்ளியின் பெயர்**

**சே**:— அட்டில், அடுக்களை, மடைப்பள்ளி.

**பி**:— அடுக்களை, அட்டில், மடைப்பள்ளி.

**சூ**:— அட்டில், பாகசாலை, அடுக்களை, மடைப் பள்ளி.

**க**:— அடுக்களை, அட்டில், மடைப்பள்ளி

**அறச்சாலையின் பெயர்**

**சே**:— சத்திரம், சாலை, அறச்சாலை.

**சூ**:— சாலை, அறச்சாலை.

**ஓதும் பள்ளியின் பெயர்**

**சே**:— அறப்புறம், ஓதும் பள்ளி.

**சூ**:— அறப்புறம், ஓதும்பள்ளி.

**வீட்டிறப்பின் பெயர்**

**சே**:— வளவி, இறை, வீட்டிறப்பு.

**பி**:— இறை, வளவி, வீட்டிறப்பு.

**சூ**:— இறை, வளவி, வீட்டிறப்பு.

**க**:— இறை, இறப்பு.

**பீடத்தின் பெயர்**

**சே**:— பீடிகை, பீடம்.

**பி**:— பீடிகை, தவிசு, விட்டரம், பீடம்.

## ஆறு, திரை, ஆழநீர், நிறைநீர் நீந்துநீர், கலங்கியநீர், உவர் நீர், வெள்ள நீர், ஓட்டநீர், தெளிவுநீர், இவற்றின் பெயர்

துறைகுடிஞை யொலியல்வரு புனல்சிந்து பவதிநதி
துய்யதீர்த் திகைய [1]வாகை
சொல்லுந்தி (யோணமே)ம (தடினி)யீ ராறுந்
தொகுத்தவாற் றின்பொதுப்பே
ரறல்சீக ரந்தரங் கங்கலோ லம்வீரை
யலைசிகர மேழ்திரைப்பே
ரழுவமே குன்றுகெம் பீரங்க யத்துட
னாழநீர் நான்கேபெயர்
நிறைநீர்வ ழாறொரு பிராறும்வா ரியுமாகும்
நீந்துநீர்ப் பெயராகதம்
நிகழா(வி லங்கலுழி) யேகலங் கியநீர்
நிலைக்கிலுறை யுவர்நீர்ப்பெயர்
பெறுபிரளை யம்வாரி நீத்தம் பிரவாகம்
பெருக்கோதம் வெள்ளநீர்ப்பேர்
பேசுகோ லங்கொழுந் தோட்டநீர் தெளிவுநீர்
பெயர்[2] சயச மெனலாகுமே! 15

*துறை, குடிஞை, ஒலியல், வருபுனல், சிந்து, பவதி, நதி,
துய்ய தீர்த்திகை, [1]ஆபகை,
சொல்உந்தி, ஓணமே, தடினி ஈராறும்
தொகுத்த ஆற்றின் பொதுப்பேர்.
அறல், சீகரம், தரங்கம், கல்லோலம், வீரை
அலை, சிகரம், ஏழ் திரைப்பேர்.
அழுவம், ஏ குன்று, கெம்பீரம், கயம், அத்துடன்
ஆழநீர் நான்கே பெயர்.
நிறைநீர் வழாறு, ஒடு பிராறும் வாரியும் ஆகும்.
நீந்துநீர்ப் பெயர் ஆகதம்.

---

1 யாபகை பேர்லும் 2 சற்சலம் எனல் பொருந்தும்.

நிகழ் ஆவிலம்,கலுழியே கலங்கியநீர்.
நினைக்கில் உறை உவர்நீர்ப்பெயர்.
பெறு பிரளையம், வாரி, நீத்தம், பிரவாகம்,
பெருக்கு ஓதம் வெள்ளநீர்ப்பேர்.
பேசு கோலம்,கொழுந்து,ஓட்டநீர்,தெளிவுநீர்
பெயர் [2]சற்சலம் எனல் ஆகுமே. (160)

### ஆற்றின் பெயர்

**சே:**— உந்தி, நதி, துறை, வருபுனல், குடினை, சிந்து, ஒலியல், ஆறு.

**பி:**— ஒலியல், உந்தி,புனல்,ஓணம்,குடினை,சிந்து, தீர்த்திகை,தீபவதி,தடினி,ஆபதகை,யாறு.

**தி:**— உந்தி, துறை, ஒலியல், குடினை, ஓணம், சிந்து, நதி, வருபுனல், யாறு.

**க:**— துறை, நதி, உந்தி, தடினி, சிந்து, வருபுனல், தீர்த்திகை,ஆபகை,குடினை,தீபவதி,ஆறு,ஒலியல்.

### திரையின் பெயர்

**சே:**— சீகரம், தரங்கம்,அறல், கல்லோலம்,அலை, புனற்றிரை.

**பி:**— அறல், தரங்கம், அலை, கல்லோலம், சிகரம், நீர்த்திரை.

**தி:**— சீகரம்,கல்லோலம்,அறல்,தரங்கம்,திரை.

**க:**— தரங்கம்,திரை,அலை,கல்லோலம்,வீ,சிகரம்.

---

1 அவாகை என்றுளது. 2 சயசம் என்றுளது.

### ஆழநீரின் பெயர்

சே:— அழுந்து, குண்டு, கயம், ஆழம்.

பி:— அழுந்து,குண்டு,கயம்,ஆழநீர்.

சூ:— குண்டு,அழுந்து,கயம்,கம்பீரம்,ஆழம்.

### நிறைநீரின் பெயர்

சே:— வழாறு, பிராறு, நிறைபுனல்.

சூ:— வழாறு, பிராறு, நிறைபுனல்.

க:— பிராறு, வழாறு, நிறைபுனல், வாரி.

### நீந்துநீரின் பெயர்

சே:— அகாதம்

பி:— அகாதம்

சூ:— அகாதம்

### கலங்கியநீரின் பெயர்

சே:— விலங்கல், கலுழி.

பி:— ஆவிலம், கலுழி, உடம்பை.

சூ:— கலுழி, ஆவிலம்.

### உவர்நீரின் பெயர்

பி:— உறை.

சூ:— உறை.

**சே:—** நீத்தம், பிரளயம்,வாரி,வெள்ளநீர்.

**பி:—** பிரளயம், நீத்தம், வாரி, ஓதம், பெருக்கு, வெள்ளம்.

**சூ:—** பிரளயம், வாரி, நீத்தம், பெருக்கு, ஓதம், ஓகம், வெள்ளம்.

### ஓட்டநீரின் பெயர்

**பி:—** கோலம்

**சூ:—** கோலம்

### தெளிவுநீரின் பெயர்

**சே:—** சற்சலம்.

**பி:—** சற்சலம்.

**சூ:—** சற்சலம்.

## சேறு, பொல்லாத நிலம், ஊறல், செய்கரை, நீர்த்துறை,புனற்கரை,ஆற்றிடைக்குறை, இவற்றின் பெயர்

அள்ளல்குழை சேதகங் கொள்ளங்கு ளம்புகா
1லாளஞ்செ தும்புபங்க
மளறுதொய் யற்பூழி யுசறுசெய் யற்றொளி
யன்றியும ளக்கர்கும்பி

தெள்ளியுட னேநுரம் பீரொன்ப துஞ்சேறு
சொற்சகதி யயசகாதஞ்
துழசும் புங்கணம் பொல்லாத நிலமுமாந்
தோன்றசும் புறவிய(ஃ)கி

கொள்ளுமு றற்பெயர் குலைசேதி ரண்டுங்
குரம்புசெய் கரைப்பெயர்
கூடுந்து றைப்பெயர் புகாரதோ முகமருவி
கூடல்கய வாய்கழிமுகம்

1 லாழ்செ எனல் வேண்டும்,

**தள்ள(ரி)ய கோடுதீ ரம்பார வாரந்**
**தடங்கூல வரையணைகரை**
**தன்பெய ரரங்கந்து ருத்தியோ டிலங்கையிவை**
**தகுமாற்றி டைக்குறைக்கே! 16**

*அள்ளல், குழை, சேதகம்,கொள்ளம்,குழம்பு, காலாழ்
செதும்பு, பங்கம்,
அளறு, தொய்யல், பூமி, அசறு, செய்யல், தொளி,
அன்றியும் அளக்கர், கும்பி,
தெள்ளி,உடனே நுரம்பு,ஈரொன்பதும் சேறு,சொல்
சகதி,அயசு,அகாதம்,
சூழ், அசும்பு,அங்கணம்,பொல்லாத நிலமும் ஆம்.
தோன்று அசும்பு,உறவீ, அஃகி,
கொள்ளும் [1]ஊறல் பெயர். குலை,சேதி,இரண்டும்
குரம்பு செய்கரைப் பெயர்.
கூடும் துறைப்பெயர் புகார், அதோமுகம், அருவி,
கூடல், கயவாய், கழிமுகம்.
தள்ள அரிய கோடு,தீரம்.பாரம்,வாரம், தடம்,
கூலம், வரை, அணை, கரை
தன் பெயர். அரங்கம்,துருத்தி,ஓடுஇலங்கை, இவை
தகும் ஆற்றிடைக் குறைக்கே! (161)

**சே**:— அள்ளல், சகதி,அளக்கர்,அசறு,கொள்ளம்,
அளறு, குழம்யு,காலாழ், தொள்ளி,பங்கம்,பூமி, குழை,
சேறு,தொய்யல்,தொளி,செதும்பு,சேதகம்,செய்யல்.

**பி**:— அளறு,பூழி,அளக்கர்,சேதகம்,அசறு,பங்கம்,
அள்ளல், குழை, தொளி, கொள்ளம், செய்யல், கும்பி,
குழம்பு, தொள்ளி, சகதி, தொய்யல், நுரம்பு, அசும்பு,
செதும்பு, அங்கணம், பூதி, சேறு.

---

1 ஊற்று.

சூ:— அள்ளல், சேதகம், தோணி, அளறு, அளக்கர், தொய்யல், கொள்ளம், செதும்பு, பங்கம், குழை, குழம்பு, காலாழ், அசறு, செய்யல், சேறு.

க:— குழை, அளறு, அள்ளல், குழம்பு, காலாழ், செய்யல், கொள்ளம்,தொள்ளி,சேதகம்,பூழி, அளக்கர், அஞறு, பங்கம், தொய்யல், செதும்பு, தொளி, சேறு.

## பொல்லாத நிலத்தின் பெயர்

சே:— அசும்பு, செதும்பு, அயசு, அங்கணம், சகதி.

பி:— சகதி.

க:— அசும்பு, அங்கணம்,சகதி,நுரம்பு, பொல்லாக் குழி

## (ஊற்று) ஊறலின் பெயர்

சே:— அஃகு, உறவி, அசும்பு, ஊறல்.

பி:— உறவி, அசும்பு, ஊற்று, அஃகம், ஊறல்.

சூ:— அஃகி, உறவு, ஊற்று, ஊறுபுனல்.

க:— உறவி, ஊற்று.

## செய்கரையின் பெயர்

சே: — குலை, சேது, குரம்பு, செய்கரை.

பி: — சேது, அணை, குரம்பு, குலை, செய்கரை.

சூ:— குரம்பு, குலை, சேது, செய்கரை.

க:— குரம்பு, வரப்பு, குலை, சேது, செய்கரை.

### (கழிமுகம்) நீர்த்துறையின் பெயர்

**சே:**— அதோமுகம், புகார், அருவி, கூடல், கழிமுகம்.

**பி:**— அதோமுகம், புகார், அருவி, கூடல், காயல், அருவி, கயவு, கழிமுகம்.

**சூ:**— கயவாய், புகார், அதோமுகம், கழிமுகம்.

**க:**— புகார், அதோமுகம், கழிமுகம்.

### புனற்கரையின் பெயர்

**சே:**— தீரம், பாரம், வரை, அணை, கோடு, கூலம், வாரம்.

**பி:**— கூலம். தீரம், வாரம், கோடு.

**சூ:**— வாரம், பாரம், கோடு, வரை, அணை, தடம், கூலம், தீரம்.

**க:**— வரம்பு, வரை, கூலம், பாரம் தீரம், பாகு, வாரம், கரை.

### ஆற்றிடைக்குறையின் பெயர்

**சே:**— இலங்கை, துருத்தி, அரங்கம், ஆற்றிடைக் குறை.

**பி:**— இலங்கை, அரங்கம், துருத்தி, ஆற்றிடைக் குறை.

**சூ:**— இலங்கை, துருத்தி, அரங்கம், ஆற்றிடைக் குறை.

**க:**— துருத்தி, இலங்கை, அரங்கம், ஆற்றிடைக் குறை.

### உயுத்தகளம், சூருகாரு, வேடர்தெரு, அக்கசாலையர்தெரு, மன்னவர்தெரு, ஆயர்தெரு, இவற்றின் பெயர்.

**அடுகளம் விளாகம், பறந்தலை மொய்களரி**
**யாகவபூ மியேபடுக(ள)ம்**

**அமர்க்களஞ் செங்களம் பொருகளம் போர்க்கள**
**மலைத்திடுசெ ருக்களமுடன்**
**கடிகரஞ் செம்பளம் பதினான்கு பெயருமே**
**காட்டியவு யுத்தகளமாங்**
**காளவன மிடுகாடு வனமயா னம்புறங்**
**காடுபிதிர் வனமெரிவனஞ்**
**சுடுநிலஞ் சுடலையீ மம்பிணக் காடென்ப**
**சுடுகாடு [1]கொட்டமும்பேர்.**
**சொல்லரிய பக்கணம் வேடருறை யுந்தெருச்**
**சூழுமா வேசனந்தான்**
**வடிவுகூ ரக்கசாலையர்தெருப் (பூரி)ம**
**மன்னவர்க ளுறையுந்தெரு**
**வாடையா பீரஞ்சி ரேணிசெ டியினுடன்**
**வல்லியு மாயர்தெருவே!** 17

*அடுகளம், விளாகம், பறந்தலை, மொய், களரி,
ஆகவபூமி, ஏ படுகளம்,
அமர்க்களம், செங்களம், பொருகளம், போர்க்களம்,
அலைத்திடும் செருக்களம், உடன்
கடிகரம், செம்பளம், பதினான்கு பெயருமே
காட்டிய உயுத்தகளம் ஆம்.
காளவனம், இடுகாடு, வனம், மயானம், புறங்காடு
பிதிர்வனம், எரிவனம்,
சுடுநிலம், சுடலை, ஈமம், பிணக்காடு, என்ப
சுடுகாடு, [2]கோட்டமும் பேர்.
சொல்ல அரிய பக்கணம், வேடர் உறையும்தெரு.
சூழும் ஆவேசனம் தான்
வடிவுகூர் அக்கசாலையர் தெரு. பூரிமம்
மன்னவர்கள் உறையும் தெரு.
வாடை, ஆபீரம், சிரேணி, செடியினுடன்
வல்லியும் ஆயர்தெருவே! (162)

---

1 கோட்டம் போலும் 2 = ?

### உயுத்த களத்தின் பெயர்

**சே:—** களரி, பறந்தலை, செம்புலம், படுகளம். பொருகளம்.

**பி:—** களம், பறந்தலை, போர்க்களம், களரி, ஆகவபூமி, விளாகம், செருக்களம், அடுகளம், செங்களம், அமர்க்களம், மொய், படுகளம், யுத்த களம்

**சூ:—** கவரி, ஆகவபூமி, விளாகம், மொய், போர்க் களம், செருக்களம், பொருகளம்.

**க:—** படுகளம், களரி, அடுகளம், ஆகவபூமி, அமர்க்களம், செங்களம், போர்க்களம்.

### சுடுகாட்டின் பெயர்

**சே:—** சுடுகாடு, ஈமம், மயானம், சுடலை, சுடுநிலம், புறங்காடு, இடுகாடு, முதுகாடு, வனம், எரிவனம், பிதிர்வனம், பிணக்காடு.

**பி:—** ஈமம், மயானம், சுடலை, சுடுநிலம், இடுகாடு, புறங்காடு, பிதிர்வனம், சுடுகாடு.

**சூ:—** சுடுகாடு, புறங்காடு, காள்வனம், பிணக் காடு, இடுகாடு, பிதிர்வனம், ஈமம், வனம், மயானம், படுகாடு, சுடுநிலம், சுடலை.

**க:—** மயானம், புறங்காடு, காளவனம், சுடலை, பிதிர்வனம், ஈமம், சுடுகாடு.

### வேடர் தெருவின் பெயர்

**சே:—** பக்கணம், வேடர்தெரு.
**பி:—** பக்கணம், வேடர்தெரு.
**சூ:—** பக்கணம், வேடர்தெரு.

சே:— ஆவேசனம்.

பி:— ஆவேசனம்.

சூ:— ஆவேசனம் (சிற்பர் வீதி).

மன்னவர் தெருவின் பெயர்

சே:— பூரியம்.

பி:— பூரியம்.

சூ:— பூரியம்.

ஆயர் தெருவின் பெயர்

பி:— இடைச்சேரி, ஆவிரம், வல்லியம், உவளகம்.

சூ:— ஆபீனம்.

## முச்சந்தி, நாற்சந்தி, சந்து, மச்சு, பலகணி, கோபுரவாசல், அதன் கதவிற் புகும்வழி, அதனிடைச் சார்ந்த திண்ணை, அதன் வாயிற்படிச் சுருள் இவற்றின் பெயர்.

அந்திவரி கவலையரி கோடகத் தொடுசிரு
லகமாறு முச்சந்தியென்
றாகுஞ்சி ருங்காட கத்தொடு சதுக்கமே
யாகுநாற் சந்தியின்பேர்
சந்துஞ் சதுக்கமாம் பாங்குப(ரி) வொடுகலவி
தளமச்சி னபிதானாமஞ்
சாலேக(ம்) [1]வாயாத னங்குறுங் கண்சாலை
சாளரம் சாலம்நூழை
வந்தகா லதர்சால கம்பல கணிப்பெயர்
வாரியொடு கோட்டியிருபேர்.

---

1 வாதாயனம் எனல் வேண்டும்

**மன்னுகோ புரவாயில் கதவினிற் புகும்வழி**
**னாமமே யத[1]வென்றாகும்**
**அந்தவழி யிடைசார்ந்த திண்ணைய ளிந்தமென்**
**றாஞ்சிறப் புடையவாயில்**
**வரும்படிச் சுருளகத் தினகமா மென்றே**
**யறைந்தனர் தமிட்புலவரே!** 18

*அந்தி, வரி, கவலை, அரி, கோடகம், அத்தொடு
சீருலகம் ஆறும் முச்சந்தி என்று
ஆகும். சிருங்காடகம் அத்தொடு சதுக்கமே
ஆகும் நாற்சந்தியின்பேர்.
சந்தும் சதுக்கம் ஆம், பதங்கு, பரிவோடு, கலவி
தளம், மச்சின் அபிதானம் ஆம்.
சாலேகம், [2]வாதாயனம், குறுங்கண், சாலை,
சாளரம், சாலம், நூழை,
வந்த காலதர், சாலகம், பலகணிப் பெயர்.
வாரி, ஒடு கோட்டி இரு பேர்
மன்னு கோபுரவாயில். கதவினிற் புகும்வழி
நாமமே அதவு என்று ஆம்.
அந்த வழிஇடை சார்ந்த திண்ணை அளிந்தம்
என்று ஆம் சிறப்புடைய வாயில்
வரும் படிச்சுருள் அகத்தினகம் ஆம் என்றே
அறைந்தனர் தமிழ்ப்புலவரே! (163)

**முச்சந்தியின் பெயர்**

**சே:—** அந்தி.

**பி:—** அந்தி.

**சூ:—** அந்தி.

---

1 யதவெனுனும் என்றுளது
2 வாயாதனம் என்றுளது.

**சே:**— சதுக்கம், நாற்சந்தி.

**பி:**— கோடகம், சிருங்காடகம், வரிசந்தி, சதுக்கம், நாற்சந்தி.

**சூ:**— சிருங்காடகம், சதுக்கம், நாற்சந்தி.

**க:**— சதுக்கம், நாற்சந்தி.

### சந்தின் பெயர்

**சே:**— அந்தி, கவலை, வரி, சந்தி.

**பி:**— அந்தி, கவலை, வரி, அரி, கோடகம், சிராகம், சந்தி

**சூ:**— சதுக்கம், சந்து.

**க:**— சந்தி, கவலை, அரில், அந்தில்.

### மச்சின் பெயர்

இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.

### பலகணியின் பெயர்

**சே:**— சாலகம், சாளரம், நூழை, சாலேகம், வாதாயனம், பலகணி.

**பி:**— சாளரவாயில், சாலேகம், வாதாயனம், சாலம், நுழை, சாலகம், காலதர்.

**சூ:**— சாலகம், சாளரம், வாதாயனம், குறுங்கண், சாலகம், காலதர், பலகணி.

**க:**— சாளரம், சாலகம், சாலேகம், நூழை, வாதாயனம், காலதர்.

### கோபுர வாயிலின் பெயர்

சே:— தோட்டி, துவாரம், வாரி, கடை, வாயில்.

பி:— கோட்டி, வாரி, ஆத்தானம், அரிகூடம், கோபுரவாயில்.

### கோபுரவாயிற் கதவின் புகும் வழி

சே:— புதவு.

பி:— புதவு.

### கோபுரவாயில் திண்ணையின் பெயர்

சே:— அளிந்தம்.

பி:— அளிந்தம்.

### கோபுர வாயிற்படிச்சுருளின் பெயர்

சே:— அத்தினகம்.

## கண்துயிலிடம். விலங்கு துயிலிடம், உலைக்களம், ஓமகுண்டம், உழுதொழில் வளைப்பு, உழவு, குடிசை, கூடு இவற்றின் பெயர்.

சட்டகம் பாழியரி யுறையுள்கண் படை (ப)ள்ளி
சயனங்கி டக்கையமளி
தளிமமொடு குளைசேக்கை பாயல்பரி யங்கமணை
சையநீள் காட்சியாய்வே
பட்டமென வந்தபத் தொன்பதுங் (கழறி)டிற்
பரவுகண் டுயிலிடப்பேர்.
பாதைபட் டஞ்சேவ கஞ்சேக்கைப் போத்துடன்
பண்ணைபட மோரிசெப்பென்
றொட்டியவிவ் வொன்பதும் விலங்குதுயி லிடமுறைவி
வொன்றும்மு லைக்களப்பே

**ரோமகுண் டந்தித்தி வேள்வியா குந்தொடுப்**
**புழவர்தந் தொழில்வளைப்பாங்**
**கட்டுறுங் தொடவையே தொய்யலு [1]முழவாகுங்**
**கலிந்தகுடில் குடிசையாகுங்**
**கட்சிபஞ் (சரமு)றை குடம்பை(கு)யி லாயமொடு**
**கனகூண்டு கூடாகுமே! 19**

*சட்டகம், பாழி, அரி, உறையுள், கண்படை, பள்ளி,
சயனம், கிடக்கை, அமளி,
தளிமம், ஒடுகுளைசேக்கை,பாயல், பரியங்கம்,
அணை, சையம்.நீள் கட்சி, ஆய்வே,
பட்டம் என வந்த பத்தொன்பதும் கழறிடில்
பரவு கண்துயில் இடப்போர்.
பாதை,பட்டம்,சேவகம்,சேக்கை,போத்துடன்,
பண்ணை, படம்,ஓரி,செப்பு என்று
ஒட்டிய இவ் ஒன்பதும் விலங்கு துயிலிடம்,உறைவி,
ஒன்றும் உலைக்களப் பேர்.
ஓமகுண்டம்,தித்தி,வேள்வி ஆகும். தொடுப்பு
உழவர்தம் தொழில் வளைப்பாம்
கட்டு உறும் தொடவையே தொய்யலும் உழவு ஆகும்.
கலிந்த குடில் குடிசை ஆகும்.
கட்சி,பஞ்சரம்,உறை,குடம்பை,குயிலாயம்,ஒடு
கன கூண்டு, கூடு, ஆகுமே! (164)

### கண் துயிலிடத்தின் பெயர்

**சே**:— கட்சி,அமளி, சேக்கை,உறையுள்,சட்டகம், சேர்விடம், பள்ளி, சயனம்,பட்டம்,பாழி,பாயல், அரி, துயிலிடம்

---

1 மளவாகுங் என்றுளது.

பி:— ஆய்வை, கிடக்கை, அணை, பரியங்கம், பாயல், சேக்கை, பள்ளி, தளிமம், சாயல், தட்டம், தற்பம், சயனம், அம்பரம், சேர்விடம், துயிலிடம்.

சூ:— சட்டகம், பாயல், பள்ளி, சயனம், உறையுள், பாழி, கட்சி, அமளி, சேக்கை, கண்படை, (மனிதர்) துயிலிடம்.

க:— பள்ளி, சயனம், அமளி, படை, சேக்கை, பாயல், உறையுள், அரி, கட்சி, துயிலிடம், பாழி, சட்டகம், பட்டம், சேர்விடம்.

### விலங்கு துயிலிடத்தின் பெயர்

சே:— பட்டம், போத்து, பண்ணை, சேக்கை.

பி:— பாழி, பண்ணை, பணை, பட்டம், போத்து, சேக்கை.

சூ:— பட்டம், போத்து, சேக்கை, பண்ணை.

க:— (கொட்டில், ஒருசிறை, துச்சில்).

### உலைக்களத்தின் பெயர்

பி:— உறவி.

### ஓமகுண்டத்தின் பெயர்

சே:— வேதியம், நிமித்தம், வேள்விக்குண்டம்.

பி:— வேதி, நித்தம், வேள்விக்குண்டம்.

சூ:— தடவு, வேள்விக்குண்டம், வேள்வி, நித்தம், வேதி, ஓமகுண்டம்.

### உழுதொழில் வளைப்பின் பெயர்

சே:— தொடுப்பு.

க:— தொடுப்பு.

சே:— துடவை, தொய்யில், உழ்வு.

சூ:— தொய்யல், உழவு.

க:— தொய்யல், துடவை, உழுதல்.

குடிலின் பெயர்

சூ:— குரம்பை, குடில்.

கூட்டின் பெயர்

சே:— குடம்பை, பஞ்சரம், கட்சி, கூடு.

பி:— குடம்பை, கட்சி, குலாயம், பஞ்சரம், கூடு.

சூ:— கட்சி, கூண்டு, குடம்பை, கூடு.

க:— பஞ்சரம், கட்சி, குடம்பை, கூடு.

## இடம், பக்கம், நரு, முதல், இவற்றின் பெயர்.

தலம்விளா கம்புலம் நிலந்திணை வயின்களஞ்
சார்சூழல் [1]கண்காலுமழை
தானம்வழி படையூடு பாங்கர்பால் வைப்புவாய்
தாவளம் பட்டிவாசல்
வலமிடங் கீழ்மேல கம்புறம் முன்பின்
மருங்குதலை கடையிடையயல்
படிதேய முள்ளுரை வசதிபா டருகத்தம்
மதவுதா பரம்வகையுளி
நிலைபதிநி சாதனம் [2]மருதலைம் பதிரண்டும்
[2]நிகழும்மிட் டத்தின்பெயர்.

---

1 கண்காலுழை எனல் வேண்டும்.

2 மருவிலைம் எனல் வேண்டும்.

3 நிகழுமிடத்தின் எனல் வேண்டும்.

நீள்பாரி சம்பாடு மாடுசிறை யுழிஞாங்கர்
நிருபுடை பாங்கரெட்டும்
விலகரும் பக்கமாம் நள்ளுநர்ப் பண்பிரம
மிகுமத்தி [1]மையம்னாவெம்
விளம்படு [2]வாந்தலை தான்முன்னர் புரவம்
மேலென்ப முதலாகுமே! 20

*தலம், விளாகம், புலம், நிலம், திணை, வயின், களம்,
சார், சூழல், கண், கால், உழை,
தானம், வழி, படை, ஊடு, பாங்கா, பால், வைப்பு,
தாவளம், பட்டி, வாசல், [வாய்,
வலம், இடம், கீழ், மேல், அகம் புறம், முன், பின்,
மருங்கு, தலை. கடை, இடை, அயல்,
படி, தேயம், உள்ளுறை, வசதி, பாடு, அருகு,
அதவு, தாபரம், வகை, உளி, [அத்தம்
நிலை, பதி, நிசாதனம், மரு, இல், ஐம்ப(த்)திரண்டும்
நிகழும் இடத்தின் பெயர்.
நீள் பாரிசம், பாடு, மாடு, சிறை, உழி, ஞாங்கர்,
நிருபுடை, பாங்கர், எட்டும்
விலக அரும் பக்கம் ஆம். நள்ளு, நாப்பண், பிரமம்,
மிகும் மத்தி, மையம், நா, ஒடு
விளம்பு நடு ஆம், தலை, தாள், முன்னர், புரவம்,
மேல் என்ப முதல் ஆகுமே! (165)

## இடத்தின் பெயர்

சே:— வாய், புலம், பாங்கர், வயின், களம், வைப்பு, தேயம், வழி, உழி, திணை, மருங்கு, பால், நிலம். தலம், வளாகம், பட்டி, சூழல், தானம், இடம்.

---

1 மையநாவொடு எனல் வேண்டும்.
2 வந்தலை என்றுளது.

பி:— வாசம், பாடு, மாடு, கடை, சிறை, சாதனம், பக்கம், தாபரம், வாய், புலம், மருங்கு, பாங்கு, நத்தம், வைப்பு, மரு, தலம், அடி, வயின், மதர்வு, களம், வழி, வளாகம், உழை, பட்டி, வகை, திணை, சூழல், தலை, இடம், அருகு, தானம், கண், இடை, சார், கால், பின், முதல், தாவளம், பால், உளி, பாழி, நிலம், இல், பள்ளி, ஞாங்கர், நிலை, பதி, உறையுள், நிசாதனம், முன்னர், நியமம், வசதி, நிகாயம், தேயம், புடை, அயல், மராட்டம், கோட்டம், கீழ், மேல், மடம், காடு, இடம்.

நா:— இடை, உழி, வழி, நிலம், பால், இல், உழை, உளி, கண், பக்கம், புடை, தலை, முதல், வளாகம், புலம், வலம், சூழல், பாங்கர், கடை, வயின், பட்டி, வைப்பு, கால், களம், தேயம், பாடு, முன், பின், சார், வாய், கீழ், மேல், இடம்.

க:— வாய், புலம் பாங்கர், வயின், களம், வைப்பு, மருங்கு, வழி, தேவகை, பட்டி, உழை, உடை, சூழல், திணை, வலம், கால், பாயிடை, சார், கண், வளாகம், தலம், தானம், பால், புடை, ஞாங்கர், மருங்கு, முன், பின், மேல்.

### பக்கத்தின் பெயர்

சே:— மாடு, சிறை, உழி, மருங்கு, ஞாங்கர், முன், பால், புடை, பாங்கர், பக்கம்.

நா:— பாங்கர், பாரிசம், மருங்கு, பால், புடை, புறம், ஞாங்கர், சிறை, மாடு, பக்கம்.

க:— மருங்கு, புடை, அயல், பாங்கர், பக்கம்.

### நடுவின் பெயர்

சே:— நனந்தலை, நாப்பண், மத்திமம், நள்ளு, வயங்கிடை, ஒத்தல், நா, அணவு, கூழை, நடு.

பி:— இடை, சமம், மத்திமம், நாப்பண், பகல், நள், நனந்தலை, நடு.

சூ:— நள், நாப்பண், நனந்தலை, பிரமம், மையம், மத்திபம், நா, நடு.

கூ:— நள்ளு, நனந்தலை, நாப்பண், சமம், இடை, நா, உந்தி, நடு, ஒத்தல், மத்திமம்.

முதலின் பெயர்

சே:— முன்னர், தலைத்தாள், முன்னர்.

பி:— ஆதி, தலை, தாள், அடி, முன், (எழுவாய், மோனை, பிராசயம்)

சூ:— (முன், மேல்,) தலைத்தள், முதல், புரம், முன்னர்.

## தோட்டம், சலதாரை, கூப்பிரு தூரம், காத (தூரம்), யோசனை (தூரம்), திசை, கற்பலை, இவற்றின் பெயர்.

1தொடுப்பாங் கோட்டங் கடம்படப் பையினுடன்
றுடவை தொய்யி லடவை கூவஞ்
சொல்லுமிரு நான்குமே தோட்டம்பு ராலொடு
சுருங்கைசல தாரைப்பெயர்
கடவைநட வையினு(ட) னெல்லைகு ரோசமே
காணருங் கூப்பிடின்பேர்
காவதங் காதமென் றோதுபெயர் புகையெனக்
கருதுமோ சனையின் பெயர்
வடதிசை தென்றிசை கீழ்த்திசை மேற்றிசை
வகுத்ததிசை நான்கினடுவே
மருவுநாற் கோ(ணமுங்) கீழ்மேலி ரன்டென்ன
வைத்திசை பத்தின்பெயர்

1 தொடுவபால் என்றுளது.

**இடமிரு சுருங்கையே கற்படையி னபிதான**
**மென்றுமலை யப்பொரும்பி**
**லினிதுடன் வீற்றிருக் கின்றமுனி தமிழினா**
**னித்திறமி யம்பினானே! 21**

*தொடுப்பாம், கோட்டம், கடம், படப்பை.
[இன்உடன்
துடவை, தொய்யில், அடவை, கூவம்
சொல்லும் இருநான்குமே தோட்டம், [1]புரால் ஒடு
சுருங்கை சலதாரைப்பெயர்.

கடவை, நடவை, இன்உடன் எல்லை, குரோசமே
காண அரும் கூப்பிடின் பெயர்.
காவதம், காதம் என்று ஓது பெயர். புகை எனக்
[கருதும்
யோசனையின் பெயர்.

வடதிசை, தென்திசை, கீழ்த்திசை, மேல்திசை
வகுத்த திசை, நான்கின் நடுவே
மருவும் நாற்கோணமும், கீழ், மேல், இரண்டும்
வைத்த திசை பத்தின் பெயர். [என்ன

[2]இடம் இரு சுருங்கையே கற்படையின் அபிதானம்
என்று மலையப்பொருப்பில்
இனிதுடன் வீற்றிருக்கின்ற முனி தமிழினான்
இத்திறம் இயம்பினானே (166)

**தோட்டத்தின் பெயர்**

**சே:**— தோட்டம், துடவை, படப்பை.

**பி:**— பாதவம், துடவை, படப்பை, ஆரம், தொடு, தோட்டம்.

**க:**— தோட்டம், துடவை, படப்பை.

---

1 புழல் எனல் வேண்டும்.
2 இடம் மிகு எனல் பொருந்தும்.

### சலதாரையின் பெயர்

சே:— அங்கணம், தூம்புவாய், சலதாரை.

பி:— சுருங்கு, புழல், அங்கணம், சலதாரை.

### கூப்பிடு தூரத்தின் பெயர்

சே:— எல்லை, குரோசம்.

பி:— குரோசம், எல்லை.

சூ:— குரோசம்.

க:—: எல்லை, குரோசம், கூப்பீடு.

### காததூரத்தின் பெயர்

சே:— காவதம், காதம்.

பி:— காவதம், காதம்.

சூ:— காவதம், காதம்.

க:— காவதம், காதம்.

### யோசனை தூரத்தின் பெயர்

சே:— புகை, யோசனை.

பி:— புகை, யோசனை.

சூ:— புகை, யோசனை.

### திசையின் பெயர்

சே:— (மாதிரம், ஆசை, அம்பர், ககுபம், திசை, விசும்பு, உலகம், கோ, காட்டை)

பி:— (மாதிரம், திகை, திசை, வம்பல், விசும்பு, ஆசை, புலம், உலகு, கோ, காட்டை, அரிதம், அம்பரம், ககுபம்)

**எண்டிக்கு:**— கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென் மேற்கு, மேற்கு வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு.

**சூ:**— (அரிதம், மாதிரம், விசும்பு, அம்பரம், உலகு காட்டை, திசை, கோ, ஆசை, ககுபம், திகை).

**கற்படையின் பெயர்**

**சே:**— சுருங்கை

## ஈண்டு, ஆண்டு, இவண், உவண், ஏகாந்தம், யாங்கு, எவ்விடம், இருப்பிடம், ஒதுக்கிடம், வெளியிடம், புகுவிடம், மண்கலஞ்சுடுமிடம், அரங்கு, ஞாங்கர். இவற்றின் பெயர்.

ஈண்டென்ப திவ்விடம் ஆண்டென்ப தவ்விட
மிம்பரிவ னும்பருவணா
மேகாந்த மொருவந்த மாமன்றி யாண்டியாங்
கெங்ஙனெவ் விடமெனும்பேர்.
வேண்டியபி றப்பிடம் முறைவிடம் [1]யாகரம்
விளம்புமி ருப்பிடப்பேர்
மிகவேயொ துக்கிடந் துச்சிலொரு சிறைகோட்டம்
வெற்றிட [2]மயலிடப்பேர்
பூண்டவெள் ளிடைவிரியல் வயலுடன் மூன்றுமே
போற்றும் வெளியிடப்பேர்
புக்கிடம் புகுமிடப் பேர்சுள்ளை சூளையே
[3]பொருமண்க லஞ்சுடுமிடம்

---

1 யகரம் என்றுளது. 2 மயிலிடப்பேர் என்றுளது.
3 பெருமண்க எனல் நன்று.

**தாண்டவம் புரியிடம் 1வட்டாடு மிடமுடன்**
**சமரிட மரங்கெனும்பேர்**
**தாழ்விலா ஞங்ாகரே முன்மேல் மருங்கெனச்**
**சாற்றினர் தமிழ்ப்புலவரே** 22

*ஈண்டு என்பது இவ்விடம். ஆண்டு என்பதுஅவ்விடம்.
இம்பர் இவண், உம்பர் உவண் ஆம்,
ஏகாந்தம் ஒருவந்தம் ஆம் அன்றி யாண்டு
யாங்கு எங்ஙன் எவ்விடம் எனும்பேர்.
வேண்டிய பிறப்பிடம், உறைவிடம், [3]ஆகரம்
விளம்பும் இருப்பிடப்பேர்,
மிகவே ஒதுக்கிடம் துச்சில், ஒருசிறை, கோட்டம்,
வெற்றிடம் [4]அயலிடப்பேர்,
பூண்ட வெள்ளிடை, விரியல், வயலுடன் மூன்றுமே
போற்றும் வெளியிடப்பேர்.
புக்கிடம் புகுமிடப்பேர், சுள்ளை, சூளையே,
[5]பெருமண் கலம் சுடுமிடம்,
தாண்டவம் புரியிடம், [6]வட்டாடும் இடம், உடன்
சமர் இடம் [7]அரங்கு எனும்பேர்.
தாழ்வு இலா ஞாங்கரே முன் மேல் மருங்கு எனச்
சாற்றினர் தமிழ்ப் புலவரே. (167)

**ஈண்டெனும் பெயர்**

**சே:**—இவ்விடம், ஈண்டு.

**சூ:**— இவ்விடம், ஈண்டு.

---

1 வாட்டாடு என்றுளது.
2 மருங்கெனும் பேர் என்றுளது.
3 அகரம் என்றுளது. 4 அயிலிடப்பேர் என்றுளது.
4 பொரு மண்கலம் என்றுளது.
6 வாட்டாடுமிடம் என்றுளது.
7 அரங்கு என்றுளது.

சே:— அவ்விடம், ஆண்டு.

சூ:— அவ்விடம், ஆண்டு.

### இவண் எனும் பெயர்

சே:— இம்பர், இவண்.

சூ:— இம்பர், இவண்.

க:— இவண், இம்பர்.

### உவண் எனும் பெயர்

சே:— உம்பர், உவண்.

சூ:— உம்பர், உவண்.

க:— உம்பர், [1]அவண்.

### ஏகாந்தத்தின் பெயர்

சே:— ஒருவந்தம், கொட்டில், வேறிடம், ஏகாந்தம்.

பி — (ஒருசிறை, வேறிடம்).

சூ:— ஒருவந்தம், வேறிடம், ஏகாந்தம்.

க:— (கொட்டில், ஒருசிறை, துச்சில், வேறிடம்.)

### யாங்கு எனும் பெயர்

சூ:— எவண், யாங்கு.

### எவ்விடம் எனும் பெயர்

சூ:— யாண்டு, எவ்விடம்.

### இருப்பிடத்தின் பெயர்

சே:— (ஆகாரம், உறைவிடம், பிறப்பிடம்.)

1 உவண் எனல்வேண்டும்.

### ஒதுக்கிடத்தின் பெயர்

**சே** — ஒருசிறை, ஒதுக்கிடம், துச்சில்.

**பி** — துச்சில், ஒருசிறை.

**சூ**:— துச்சில், ஒதுக்கிடம்.

**க**:— கொட்டில், ஒருசிறை, துச்சில், வேறிடம்.

### வெளியிடத்தின் பெயர்

(இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.)

### புகுமிடத்தின் பெயர்

(இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை.

### மண்கலஞ் சுடுமிடத்தின் பெயர்

**சே**:— சுள்ளை, சூளை

**பி** — சுள்ளை, சூளை.

**சூ**:— சுள்ளை.

### அரங்கின் பெயர்

**சே**:— போரினிடம், வட்டாடிடம், ஆடலிடம், அவை, அரங்கம்.

**பி**:— ஆடலிடம், வட்டாடிடம், அரங்கம்.

**சூ**:— ஆயுதஞ் சூது கூத்துப் பயில்களத்தின் பெயர், அரங்கம்.

**க**:— ஆடிடம், சூதிடம், அரங்கம்.

### ஞாங்கரின் பெயர்

**சூ**:— முன், மேல், ஞாங்கர்.

## வாவி, எந்திரவாவி, கிணறு முதலியவற்றின் பெயர்.

பட்டந்த டந்தாகங் குளஞ்சுனை கேணி
படுமம் பொய்கைசூழி
பண்ணையேல வையோடை கோட்டகங் குண்டம்
பயம்புவள கங்கிடங்கு
வட்டங்க யம்பலஞ் சலதர மிலஞ்சி(வ)லை
யம்படுக ராவி(ந)ளினி
[1]மங்கல்குளி நீரேரி நாவுசிக் கரிதாங்கல்
[2]மருவுநீர் நிலையலந்தை
குட்டமுப் பத்தாறும் [3]விரவியல வந்திகை
கூறலிங் திரவாவியாங்
கூபமே கூவல்ல சும்புதுர வென்பதுங்
கூறுங்கி ணற்றின்பெயர்.
[4]........................................................
........................................
........................................................
........................................ 23

*பட்டம், தடம், தாகம், குளம், சுனை, கேணி.
படுமம், பொய்கை, சூழி,
பண்ணை, ஏல், வை, ஓடை, கோட்டகம், குண்டம்,
பயம்பு, உவளகம், கிடங்கு,
வட்டம், கயம், பலம், சலதரம், இலஞ்சி, வலையம்,
படுகர், ஆவி, நளினி,
மங்கல், [5]குளம், நீரேரி. நாவு, சிக்கரி, தாங்கல்,
[6]மடுவு, நீர்நிலை, அலந்தை,

---

1 மங்கல்குள எனல்வேண்டும். 2 மடுவு எனல்வேண்டும்
3 வாவியில எனல்வேண்டும்.
4 குறைபாடல்; இதற்குமேல் இல்லை.
5 குளி என்றுளது. 6 மருவு என்றுளது.

குட்டம் முப்பத்தாறும் [1]வாவி. இலவந்திகை
கூறில் எந்திர வாவிஆம்.
கூபமே, கூவல், அசும்பு, துரவு, என்பதும்
கூறும் கிணற்றின் பெயர்.

[2] ........................................ ........................................
........................................
........................................................................
........................................ (168)

**வாவியின் பெயர்**

**சே:—** அலந்தை, பண்ணை, கோட்டம், கிடங்கு, இலஞ்சி, தாங்கல், சுனை, ஏல்வை, ஓடை, வட்டம், தடாகம், மடு, குளம், வலயம், குட்டம், குண்டம், பட்டம், சூழி, பொய்கை, கேணி, ஆவி, தடம், படுகர், ஏரி, கயம், பயம், உவளகம், வாவி.

**பி:—** இலைஞ்சி, பண்ணை, ஏல்வை, குண்டம், அலந்தை, பொய்கை, வலயம், சுனை, சிறை, பட்டம், உடுவை, பயம்பு, படுகர், குட்டம், தாங்கல், கோட்டகம், ஏரி, உவளகம், மடு, ஓடை, படு, தடம், வாவி, தடாகம், ஆவி, சூழி, கிடங்கு, சலதரம், கேணி, பணை, கயம், பல்லவம், நளினி, இலந்தை, மூழி, குழி, குளம், நீர்நிலை.

**சூ:—** படுகர், தாங்கல், கேணி, பல்லவம், படு, பட்டம், மடு, உவளகம், பண்ணை, வாவி, சுனை, வட்டம், தடம், கயம், பயம், தடாகம், குளம், குட்டம், கிடங்கு, சூழி அலந்தை, குண்டம், பங்கம், இலஞ்சி, கோட்டகம், பொய்கை, ஏல்வை, ஓடை, ஏரி, நீர்நிலை.

---

1 விரவி என்றுளது.

2 குறைபாடல்; இதற்கு மேல் இல்லை.

க:— சூழி தடாகம், படுகர், இலஞ்சி, மடு, அலந்தை, கயம், கேணி, பட்டம், சுனை, கிடங்கு, நளினி, சலதரம், வாவி, கோட்டகம், பண்ணை, ஏல்வை, வலையம், குண்டு, குளம், தடம், ஆவி, மடு, ஓடை, ஏரி, மலங்கல், குட்டம்.

**எந்திரவாவியின் பெயர்**

சே:— இலவந்திகை, எந்திரவாவி.

**கிணற்றின் பெயர்**

தி:— கூவல், அசும்பு, கூபம், குழி, பூவல், கேணி, துரவு,கிணறு

பி:— உறவி, கூவல், கூபம், கிணறு.

ரூ:— கூபம், கூவல், அசும்பு, கிணறு.

க:— கூவல், அசும்பு, துரவு, கிணறு.

ஐந்தாவது இடப்பெயர்த்தொகுதி முற்றும்.

## ஆறாவது
## பொருட்பெயர்த் தொகுதி

**பொன், பொற்காசு இவற்றின் பெயர்.**

மாசைபீ தகங்கனக மாடுபொரு ளுரைசொனன
மாழைகர்ப் பூரம்புலம்
வசு(வே)ங்கை பூரியுடல் காங்கயஞ் சுவணநிழல்
வனிதையம் வெறுக்கையீகை
ஆசைதம னியம்நிதி நிதானந் தன(ம்)பண்ட
மத்தநிசி வித்தமாடை
யராகம்வி ருத்திகூ ளிரணியம் பிசியேம
மாடக மனந்தமீழம்
தேசிகங் காஞ்சனம் பீதகஞ் சந்திரஞ்
செங்கொல் கைத்தருத்தல்
செந்தாது சாமீக ரந்தொடுக் கஞ்சாமி
திரவியங் காரமுடனே
பேசு (சாம் பூன) தஞ் சாதரு பம்பூதி
பீலிகா ணங்கலியாணம்
பெருகுபொன் னாமமொன் றொழியறு பதாம்பொற்
பெருங்காசு காணமாமே! 1

*மாசை, பீதகம், கனகம், மாடு, பொருள், உரை,
மாழை, கர்ப்பூரம், புலம். [சொன்னம்,
வசு, வேங்கை, பூரி, உடல், காங்கயம், சுவணம்.
வனிதையம், வெறுக்கை, ஈகை, [நிழல்,
ஆசை, தமனியம், நிதி, நிதானம், தனம், பண்டம்,
அத்தம், நிசி, வித்தம், ஆடை,
அராகம், விருத்தி, கூள், இரணியம், பிசி, ஏமம்,
ஆடகம், அனந்தம், ஈழம்,

தேசிகம், காஞ்சனம், பீதகம், சந்திரம்,
செங்கொல், கைத்து, அருத்தல்,
செந்தாது, சாமிகரம், தொடுக்கம், சாமி,
திரவியம், காரம், உடனே
பேசு சாம்பூனதம், சாதரூபம், பூதி,
பீலி, காணம், கலியாணம்,
பெருகு பொன் நாமம் ஒன்று ஒழி அறுபது ஆம்.
பொன் பெருங்காசு காணம் ஆமே! (169)

**பொன்னின் பெயர்**

**சே:—** ஆடகம், மாசை, ஈழம், ஏமம், மாடு, காணம், கனகம், தமநியம், வெறுக்கை, சொன்னம், பொருள், அரி, ஈகை, நிதி, கருந்தனம், காஞ்சனம், பீதகம், ஆடை, தொடுக்கம், அருத்தம், சாமி, காரம், பூரி, சந்திரம், மாழை, நிதானம், தேசிகம், செந்தாது, வித்தம், திரவியம், வேங்கை, சாம்பூனதம், உரை, சாதரூபம், உடல், பண்டம், இரஸியம், போலம், பொன்.

**பி :—** ஆடகம், வேங்கை, அரி, செந்தாது, காணம், தேசிகம், காஞ்சனம், கர்ப்பூரம், காரம், தொடுக்கம், கனகம், சாமீகரம், ஈழம், சுவணம், இரணியம், ஏமம், ஆசை, செங்கொல், ஆக்கம், கோவம், பீதகம், மாழை, ஈகை, சாக்கு, பந்தம், தமனியம், அத்தம், பூரி, சந்திரம், வித்தம், நிதி, வெறுக்கை, பொன், அனந்தம், வசு, அருத்தம், பொருள், தனம், பண்டம், திரவியம்.

**நா:—** மாசை, பீதகம், பீதம், மாடை, மாடு, வேங்கை, ஆசை, காரம், அருத்தம், காஞ்சனம், சுவணம், காணம், தேசிகம், கனகம், கைத்து, செந்தாது, பொலம், அத்தம், சாமி, வித்தம், தனம், உடல், பண்டம், இரணியம், நிதி, வெறுக்கை, ஈகை, கல்யாணம், ஏமம், பொருள், உரை, சந்திரம்,

சாம்பூனதம், பூரி, ஈழம், திரவியம், சாதரூபம், செங்கொல், நிதானம், மாழை, அரி, தபனியம், ஆடகம், பொன்.

க — இரணியம், ஆடகம், மாழை, சாம்பூநதம். ஈழம், சொன்னம், பொருள், கனகம், பீதம், சாமகரம், சாதரூபம், பொலம், அரி, நிதி, காணம், தமனியம், காஞ்சனம், மாடு, அருத்தம், பொன், நிதியம், வெறுக்கை, தனம், பூரி, சந்திரம், திரவியம், ஏமம், தொடுக்கம், நிதானம், ஆசை, பொன்.

பொற்காசின் பெயர்

சே:— காணம்

சூ:— காணம்

## பஞ்சலோகம், ஏழுலோகம், நவமணி, கடவுள்மணி, மாணிக்கம், மரகதம், வைரம், வைடூரியம், நீலம், முத்து, முத்தின் திரட்சி, பவளம், இவற்றின் பெயர்.

பொன்வெள்ளி செம்பிரும், பீயமை வகையிற்
பொருந்தியவு லோகம்நாலும்
போற்றியத ராவுடன் கஞ்சமிவை கூடியே
புகலுமெழு வகைலோகமாம்

மன்னுநவ மணிகடவுள் மணியிவற் றின்பெயர்
வருநிதிநி தானங்களாம்
மாமணிசெம் மணிபதும ராகங்க வுத்துவம்
வைத்தமா ணிக்கப்பெய

ருன்னரிய பச்சையரி மரகதப் பெயர்வச்சிர
மோங்குவயி ரத்தின்பெய
[1]ரொளிவால வாயமே வயிடூரி யப்பெய
ருற்றமணி நீலப்பெயர்

துன்னரிய தரளநித் திலமார முந்தாந்
துலங்குதர ளந்திரட்சி
துப்பரத் தத்துவர்ப் பிரவாளம்வித் துருமமொடு
துகிர்பவள மாறுபெயரே! (2)

---

1 ரொளியவால என்றுளது.

*பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், ஐவகையில்
பொருந்திய உலோகம், நாளும்
போற்றி தரா உடன் கஞ்சம் இதை கூடியே
புகலும் எழுவகை உலோகம் ஆம்.
மன்னும் நவமணி கடவுள்மணி இவற்றின் பெயர்
வரும்நிதி நிதானங்கள் ஆம்.
மாமணி, செம்மணி, பதுமராகம், கவுத்துவம்,
வைத்த மாணிக்கப் பெயர்.
உன்ன அரிய பச்சை, அரி, மரகதப்பெயர். வச்சிரம்,
ஓங்கு வயிரத்தின் பெயர்.
ஒளி வாலவாயமே வயிடூரியப் பெயர்.
உற்ற மணி நீலப்பெயர்.
துன்ன அரிய தரளம், நித்திலம், ஆரம், முத்து ஆம்.
துலங்கு தரளம் திரட்சி.
துப்பு, அரத்தம், துவர், பிரவாளம், வித்துருமம்,
துகிர், பவளம் ஆறுபெயரே! (170)

## பஞ்சலோகத்தின் பெயர்

**சே:—** பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம்,

**பி:—** தமனியம், இரும்பு, தாமிரம், ஈயம், இரசிதம்.

**சூ:—** பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம்.

## ஏழு (உ)லோகத்தின் பெயர்

**சே:—** பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், தரா, கஞ்சம்.

**சூ:—** பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், கஞ்சம், தரா.

### நவமணியின் பெயர்

சே:— நிதி.

பி:— நிதி.

சூ:— நிதி.

### கடவுள் மணியின் பெயர்

சே:— நிதானம்.

பி:— நிதானம்.

சூ:— நிதானம்.

### மாணிக்கத்தின் பெயர்

சே:— மாமணி, பதுமராகம், மாணிக்கம்.

பி:— மாமணி, செம்மணி, பதுமராகம். மணிக்கம்.

சூ:— செம்மணி, மாமணி, (பதுமராகம்– கௌத்துபம்)

க:— பதுமராம், மாமணி, மாணிக்கம்.

### மரகதத்தின் பெயர்

சே:— அரி, பச்சை, மரகதம்.

பி:— அரி, பச்சை, மரகதம்.

சூ:— அரி, பச்சை, மரகதம்.

### வைரத்தின் பெயர்

சே:— வச்சிரம், வயிரம்.

பி:— வச்சிரம், வயிரம்.

சூ:— வச்சிரம், வைரம்.

க:— வயிரம், வச்சிரம்.

### வைடூரியத்தின் பெயர்

சே:— வாலவாயம், வைடூரியம்,

பி:— வாலவாயம், வைடூரியம்.

சூ:— வாலவாயம், வைடூரியம்.

### நீலத்தின் பெயர்

சே:— மணி, நீலமணி,

பி:— மணி, நீலமணி.

சூ:— மணி, நீலமணி.

### முத்தின் பெயர்

சே:— நித்திலம், தரளம், ஆரம், முத்து.

பி:— நித்திலம், ஆரம், தரளம், முத்து.

சூ:— ஆரம், தரளம், நித்திலம், மௌத்திகம், முத்து.

க:— ஆரம், முத்து, தரளம், நித்திலம்.

### முத்தின் திரட்சியின் பெயர்

சே:— தரளம்.

### பவளத்தின் பெயர்

சே:— வித்துருமம், துகிர், துப்பு, அரத்தம், பிரவாளம், துவர், பவளம்.

பி:— துப்பு, பிரவாளம், துவர், துகிர், விருத்துருமம், அரத்தம், பவளம்.

தூ:— துப்பு, துவர், அரத்தம், துகிர், பிரவாளம், வித்துருமம், பவளம்.

க:— பவளம், வித்துருமம், துகிர், துப்பு, துவர், அரத்தம்.

## தெய்வமணி, இருநிதி, சந்திரகாந்தம், சூரியகாந்தம், காந்தக்கல், காவிக்கல் பளிங்கு, மணி, இவற்றின் பெயர்.

சாற்றிய (சலாகையர தனமகன் மணிப்பெயர்)
சங்கநிதி சங்கின்வடிவாந்
தருபற்ப நிதிதூய தாமரையின் வடிவமித்
தன்மையா மிருநிதிப்பேர்.
தோ(ற்றிய) நி (தானமாஞ்) சந்திரனொளி யிற்றணீர்
சொரியுமணி சந்திரகாந்தஞ்
சூரிய னொளியினி(ற் றீக்கால்ச) லாகையே
சூரியகாந் தஞ்சிறந்த
வேற்றிரு(ம் பினைவாங்)கு காந்தக்க லின்பெயர்.
விதித்தசும் பாமியம்பும்
வீறுகரி (கந்தா)து (சங்க) ல்கா விக்கலா
மிக்கபடி கம்பருக்கை
யேற்றகாழ் மூன்றும் பளிங்கினுக் குரியபெய
ரிலகுமணி யின்பொதுப்பே
ரெழில்மனவு காசுவசு மாடெனப் புலவோ
ரெடுத்தவின் னான்குமாமே! (3)

*சாற்றிய சலாகை, அரதனம், அகன்மணிப் பெயர்.
சங்கநிதி சங்கின் வடிவாம்
தரு பத்மநிதி தூய தாமரையின் வடிவம்.
இத்தன்மையாம் இருநிதிப் பேர்.

தோற்றிய நிதானம் ஆம் சந்திரன் ஒளியில் தண்ணீர்
சொரியும் மணி சந்திரகாந்தம்.
சூரியன் ஒளியினில் தீ கால் சலாகையே
சூரியகாந்தம். சிறந்த
வேற்று இரும்பினை வாங்கும் காந்தக்கல்லின் பெயர்
விதித்த சும்பு ஆம். இயம்பும்
வீறு கரிகம்,தாது,செங்கல்,காவிக்கல் ஆம்.
மிக்க படிகம்,பருக்கை,
ஏற்ற காழ்,மூன்றும் பளிங்கினுக்கு உரிய பெயர்.
இலகு மணியின் பொதுப்பேர்.
ஒழில் மனவு,காசு,வசு,மாடு எனப் புலவோர்
எடுத்த இந்நான்கும் ஆமே! (171)

**(தெய்வமணி) அகன்மணியின் பெயர்.**

**சே:**— அரதனம், சலாகை, அகன்மணி.

**பி:**— அரதனம்,சலாகை,அகன்மணி (தேவமணிப் பொது.)

**சூ:**— அரதனம், சாலகை, தெய்வமணி(ப்பொது)

**க.**— அரதனம், சிலாகை, அசன்மணி

இருநிதி:—

**சங்கநிதியின் பெயர்**

**சே:**— சங்கின் வடிவினது, சங்கநிதி.

**பி.**— சங்கின் வடிவினது, சங்கநிது.

**சூ:**— சங்கின் வடிவினது, சங்கநிதி.

**க:**— சங்கநிதி.

### பதுமநிதியின் பெயர்

**சே:**— தாமரை வடிவினது, பதுமநிதி.

**பி:**— தாமரை வடிவினது, பதுமநிதி.

**க:**— பதுமநிதி.

### சந்திரகாந்தக் கல்லின் பெயர்

**சே:**— சந்திரனொளியில் தண்ணீர் கால்மணி, சந்திரகாந்தம்.

**பி:**— சந்திரகிரணத்தால் நீர் கால்வது, சந்திர காந்தம்.

**சூ:**— சந்திரகிரகணத்தி னீர் கால் சலாகை, சந்திரகாந்தம்.

**க:**— சோமனொளியில் பாகுபடுவது சந்திர காந்தம்.

### சூரிய காந்தக் கல்லின் பெயர்

**சே:**— சூரியனொளியில் தீக்கால்வது,சூரியகாந்தம்.

**பி:**— சூரியனொளியில் தீக்கால்வது சூரியகாந்தம்

**சூ:**— சூரியனொளியிற் றீக்கால் சலாகை, சூரிய காந்தம்.

**க:**— இரவியொளியில் பாகுபடுவது சூரியகாந்தம்

### காந்தக் கல்லின் பெயர்

**சே:**— சலாகை, சும்பகம், காந்தக்கல், இரும்புள் வாங்குங் காந்தமணி.

**பி:**— சும்பகம், இருப்புக் காந்தம்.

**சூ:**— சும்பகம், இரும்புள் வாங்குஞ் சலாகை, ஊசிக்காந்தம்.

### காவிக்கல்லின் பெயர்

சே:— செங்கல், காரிகம், தாது, காவிக்கல்.

பி:— தாது, காரிகம், செங்கல்.

சூ:— கைரிகம், தாது, செங்கல், காவிக்கல்.

### பளிங்கின் பெயர்

சே:— படிகம், பளிங்கு, பருக்கை.

பி:— படிகம், பருக்கை, காழ், உபலம், பளிங்கு.

சூ:— காழ், படிகம், பருக்கை, பளிங்கு,

க:— படிகம், பளிங்கு.

### மணியின் பொதுப் பெயர்

சே:— மனவு, காசு.

பி:— மனவு, காசு.

சூ:— காசு, மனவு.

## வெள்ளி, செம்பு, இரும்பு, எஃகு, வெண்கலம், தரா, ஈயம், காரீயம், ஈயத்தின் பொது, பித்தளை இவற்றின் பெயர்

**இரசதந் தாரம்வெண் டாதுகவி கள்தபுத**
**மிரதனம் வெண்பொன்வெள்ளி**
**யெழுபெய ரேவுதும் பாம்வடுவை தாம்பிர**
**மெரிவைசுல் லுச்சீருணங்**

**கருதுசெம் பாறுபெய ரகியயஞ் சொன்னல்**
**கருந்தாது நீள்கரும்பொன்**
**கருங்கொள்ப ராசிரும் பெழுபெயர் சத்தியாங்**
**காணரிய வெஃகின்பெயர்.**
**மருவரிய வுறைகஞ்சம் வெண்கலமி ரண்டுபெயர்**
**மதுகந்த ராவின்பெயர்.**
**வங்கமுஞ் சீருளும் வெள்ளீயம் நாகமே**
**வந்தகா ரீயப்பெயர்.**
**தெரிதரும் பத்திரஞ் சீசமே சீசு**
**சிறந்தவீ யப்பொதுப்பேர்**
**செப்பின்மா யாபுரி யாரகூ டமேயிரதி**
**சேந்தபித் தளையாகுமே! (4)**

*இரசதம், தாரம், வெண்தாது, கவிகள், தபுதம்,
இரதனம், வெண்பொன், வெள்ளி,
ஏழு பெயரே! உதும்பு, ஆம் வடுவை, தாம்பிரம்.
எரிவை, சுல்லு, சீருணம்,

கருது செம்பு அறுபெயர். அகி, அயம், சொன்னல்,
கருந்தாது, நீள் கரும்பொன்.
கருங்கொல், பராசு, இரும்பு எழுபெயர், சத்தி
காண அரிய எஃகின் பெயர். [ஆம்

மருவ அரிய உறை, கஞ்சம், வெண்கலம் இரண்டு
மதுகம் தராவின் பெயர் [பெயர்
வங்கமும், சீருளும் வெள்ளீயத்தின் பெயர்.
[நாகமே
வந்த காரீயப் பெயர்.

தெரிதரும் பத்திரம் சீசமே, சீசு,
சிறந்த ஈயப்பொதுப்பேர்.
செப்பின் மாயாபுரி, ஆரகூடமே, இரதி.
சேந்த பித்தளை ஆகுமே! (172)

**வெள்ளியின் பெயர்**

**சே:—** இரசதம், தாரம், கலதௌதம், வெள்ளி.

பி:— தாரம், இரசிதம், களதௌதம், வெள்ளி.

சூ:— சுல்லு, தாரம், களதௌதம், வெண்பொன், இரசதம், வெள்ளி.

க:— இரசதம், தாரம், களதவுதம், வெள்ளி.

### செம்பின் பெயர்

சே:— சீருணம், தாம்பிரம், சுற்பம், செம்பு.

பி:— தாமிரம், எருவை, வடு, சுற்பம், உதும்பரம், சீருள், சீருணம், செம்பு.

சூ:— எருவை, உதும்பரம், தாமிரம், வடு, செம்பு.

க:— வடு, சுற்பம், செம்பு, உதும்பரம், தா ம்பிரம், சீருணம்.

### இரும்பின் பெயர்

சே:— கருந்தாது, [1]மயம், இரும்பு.

பி:— கருங்கொல், அகி, கருந்தாது, அயில், அயம், இரும்பு.

சூ:— கருங்கொல், அயம், கரும்பொன், இரும்பு.

க:— இரும்பு, கருந்தாது, அயம்.

### எஃகின் பெயர்

சே:— சத்தி, எஃகு.

க:— எஃகம், சத்திரம்.

---

1 அயம் எனல் வேண்டும்.

### வெண்கலத்தின் பெயர்

சே:— கஞ்சம், வெண்கலம்.

பி:— கஞ்சம், உறை, வெண்கலம்.

தி:— கஞ்சம், உறை, வெண்கலம்.

க:— கஞ்சம், வெண்கலம்.

### தராவின் பெயர்

சே:— மதுகம், தரா.

பி:— மதுகம், தரா.

தி:— மதுகம், தரா.

க:— மதுகம், தரா.

### ஈ(வெள்ளீ)யத்தின் பெயர்

சே:— வங்கம், சீருள், ஈயம்.

பி:— சீருள், வங்கம், வெள்ளீயம்.

தி:— வங்கம், சீருள், சீசம், ஈயம்.

க:— சீருள், சீசம், பத்திரம், நல்லவங்கம்.

### காரீயத்தின் பெயர்

சே:— நாகம், காரீயம்.

பி:— நாகம், காரீயம்.

தி:— நாகம், காரீயம்.

க:— நாகம், காரீயம்.

### ஈயத்தின் பொதுப் பெயர்

க:— (சீருள் சீசம் பத்திரம் நல்லவங்கம்)

### பித்தளையின் பெயர்

சே:— மாயாபுரி, ஆரகூடம், பித்தளை.

பி:— இரதி, மாயாபுரி, ஆரகூடம், பித்தளை.

சூ:— மாயாபுரி, ஆரகூடம், பித்தளை.

க:— ஆர்கூடம், இரதி, மாயாபுரி, பித்தளை.

## சோறு, பாயசம், விண்ணோர் ஊண், குழம்பு, பொதிசோறு, கஞ்சி இவற்றின் பெயர்

……………………யோதனம் பொம்மல்போ னகமிதவை
யயினிதுற் றுண்டிநிமிர
………………………ந்தொளி பதமூரல் பாத்துமிடை
யடிசில்கூழ் மிசைபாளிதஞ்
……………………… தம்புன் (கத்த வை யசனஞ்சருத்
துப்புப்பு மூக்கல்வல்சி
……………………………முப்பத்தி ரண்டுந்
துலங்கிடுஞ் சோற்றின் பெயர்.
………………………………பாயசம் பாற்சோறு
பதுமக விருன்பருக்கை
……………………………தவரு ணின்பெயர்
பாகேகு மம்பின்பெயர்
………………………………தோட்கோப்பு வழிசூண்
டரித்தபொதி சோற்றின்பெயர்.
……………………………யவ் வாகுபீ டங்காடி
சாற்றரிய கஞ்சியாமே. (5)

*………… ஓதனம், பொம்மல், போனகம் மிதவை,
அயினி, துற்று, உண்டி, நிமிரல்,
………பதம், மூரல், பாத்து, மிடை,
அடிசில், கூழ், மிசை, பாளிதம்,

……………………புன்கம், அசனம், சரு,
துப்பு, புழுங்கல், வல்சி,
………………முப்பத்து இரண்டும்
துலங்கிடு சோற்றின்பெயர்.

………………பாயசம் பாற்சோறு.
பதுமகம், விருள், பருக்கை,
……………… ….தவர் ஊணின் பெயர்
பாகு ஏ குழம்பின் பெயர்.

……………………… தோட்கோப்பு, வழியூண்,
தரித்த பொதிசோற்றின் பெயர்.
…………………வாகு, பீடம், காடி,
சாற்ற அரிய கஞ்சி ஆமே! (173)

**சோற்றின் பெயர்**

**சே**:— புன்கம், மிதவை, பொம்மல், போனகம், அன்னம், ஓதனம், அயினி, அடிசில், பாளிதம், பொருகு, மினை, பதம், பாத்து, அமலை, உணவு, துப்பு, அசனம், கவளம், சொன்றி, நிமிரம், மடை, கூழ், புழுங்கல், மூரல், சோறு.

**பி**:— அன்னம், அயினி, அடிசில், ஓதனம், பொம்மல், போனகம், மடை, புன்கம், மூரல், புழுக்கல், மிதவை, அமலை, புற்கை, உணவு, சரு, பாளிதம், நிமிரல், வல்சி, அசனம், துற்று, கவுளம், உதரகம், சொன்றி, பாத்து, கூழ், பதம், புகா, சோறு.

**சூ**:— அடிசில், போனகம், மூரல், அமலை, அயினி, பொம்மல், மடை, மிசை, உணா, புழுக்கல், வல்சி, பாளிதம், அன்னம், பதம், மிதவை, பாத்து, துற்று, உண்டி சொன்றி, புன்கம், சரு, அசனம், ஊண், கூழ், ஓதனம், புகா, சோறு.

**க**:— அசனம், மிதவை, மடை, கூழ், உணவு, அயினி, சொன்றி, நிமிரல், பதம், மூரல், போனகம், துப்பு, பொம்மல், ஓதனம், அன்னம், உணா, சோறு, அமலை, பாளிதம், வல்சி, பால், புன்கம், அடிசில்.

### பாயசத்தின் பெயர்

சே:— பாற்சொற்றி, பனசம், பாயசம்.

பி:— பாற்சோறு, பாயசம்.

சூ:— பாற்சோறு, பாயசம்.

### விண்ணோர் ஊணின் பெயர்

சே:— அமிழ்து, அவி, தெய்வஉணவு, பலி, சரு

சூ:— அமிழ்து, அவி, பலி, சரு, விண்ணோருண்

க:— சரு, தேவர்க்கமுது, அவி.

### குழம்பின் பெயர்

சே:— பாகு, குழம்பு.

பி:— ஆணம், பாகு, குழம்பு.

சூ:— பாகு, குழம்பு.

க:— குழம்பு, பாகு.

### பொதி சோற்றின் பெயர்

சே:— ஆற்றுணா, தோட்கோப்பு, பொதிசோறு.

பி:— வழியுணவு, பொதி, தோட்கோப்பு, சம்பளம்.

சூ:— ஆற்றுணா, தோட்கோப்பு, பொதிசோறு, கட்டுச்சோறு.

### கஞ்சியின் பெயர்

சே:— கஞ்சி, காடி, மோழை.

பி:— கஞ்சி, அவாகு, காடி, மோழை.

ரு:— காடி, யவாகு, மோழை, கஞ்சி.

க:— கஞ்சி, காடி, மோழை.

## கள்ளின் பெயர்

வடிமதுச் சுரை(ர)யிக்கு நனைமுருகு சாறுதேன்
வளிநறவு தேறல்கவ்வை
மட்டுவெறி சாதிபிர சந்தோப்பி தொண்டிதே
மந்திரந் தணியலரியல்
படுபிழிய ரிட்டமுண் டகமதுகை சாயனம்
பானஞ்சு மாலிமாலி
பாவியரி யாசவஞ் சேறுகளி யளிசுண்டி
பாடலிசு லோகியாம்பல்
வெடிஞாளி மாதவஞ் சாலிமட் டந்தமியம்
வேரிமக ரந்தமாரி
விளம்பிசிக் கம்பிசுணி [1]யாழிகல் லியநேமி
விகுணிமது காமரிட்டங்
கொடுமறவி யங்கதங் காதகம் வாணிதங்
கொங்கருப் பம்பிரேயங்
குனிப்பவா சம்பொருணி குந்திகள் ளெழுபதாங்
கூறுமே ஊதயுமாகுமே! (6)

*வடி, மது, சுரை, இக்கு, நனை, முருகு, சாறு, தேன்,
வளி, நறவு, தேறல், கவ்வை,
மட்டு, வெறி, சாதி, பிரசம், தேப்பி, தொண்டி,
மந்திரம், தணியல், அரியல், [தேம்,
படு, பிழி, அரிட்டம், முண்டகம், மதுகை, சாயனம்,
பானம், சுமாலி, மாலி,
பாவி, அரி, ஆசவம், சேறு, களி, அளி, சுண்டி,
பாடலி, சுலோகி, ஆம்பல்,

வெடி, ஞாளி, மாதவம், சாலி, மட்டம், தமியம்,
வேரி, மகாந்தம், மாரி,
விளம்பி, சிக்கம், பிசுணி, [1]யாளி. கல்லியம், நேமி,
விகுணி, மது, காம அரிட்டம்,
கொடுமறவி, அங்கதம், காதகம், வாணிதம்,
கொங்கு, அருப்பம், பிரேயம்,
குனிப்பு,வாசம்,பொருணி,குந்தி, கள்எழுபது ஆம்.
கூறும் மேதையும் ஆகும்! (174)

**கள்ளின் பெயர்**

சே:— இக்கு,நனை,தேன் முருகு,தொப்பி, நறவு, பிரசம்,தணியல், சுரை, படு,வேரி, மட்டு,தேறல்,சாறு, பானம்,வடி,பிழி,மது, வழி, தொண்டி, அரிட்டம்,சாதி, கௌவை,விளம்பி.பாலி,சுமாலி.ஆலி, மருட்டம்,மாலி, முண்டகம், சாலி,மாரி, பாடலி, மௌலி,சிக்கர்,ஞாளி, பாணி, குந்தி, மதுகரம், சுவிகை, ஆசவம், ஆம்பல், அம்பியம், பதை, மேதை,கஞ்சா,விகுணி, சுலோகி,கள்.

பி:— பாலி, பிழி, படு. மது, தணியல், சாலி, ஆலி, ஆலை,சாறு,மாதவம், சாதி, சுரை,மாரி,மதுவம்,வேரி, தோப்பி, தேறல், நறவு, பிரசம், ஆம்பல். இரேயம், தொண்டி, நனை, மாலி, அரிட்டம், ஆசபம்,கௌவை, சுவிகை,சுலோகி,சுண்டை,வெறி, அம்மியம், வாருணம், பானம், அளி, மேதை, முண்டகம், பாரி, மட்டு,காலி, சாயனம், [2]காதம், [3]பரி, எலி, வாணிதம், கொங்கு, மகரந்தம்,குந்தி,சொல்விளம்பி,அருப்பம்,களி.கல்லியம், சுமாலி,ஞாளி,தேம்,நாற்றம்,வடி,நறை,மதுகம், கள்.

சூ:— அரியல், பாடலி, தேன், மட்டு, அரிட்டம், சுண்டை, தொண்டி, முருகு, சாயனம், கௌவை,

1 யாழி என்றுளது. 2 & 3 காதம்பரி எனல் வேண்டும்

முண்டகம். சாதி, சாலி,பிரசம், மாதவம், மேதை,பிழி, சேறு, தணியல், மாரி, சுரை, மது, சுமாலி, மாலி, சுலோகி, சொல்விளம்பி, கள், நறவு, ஆசவம்,தொப்பி, நனை, இக்குஞாளி, குந்தி, வெறி, வெடி, சாறு, பானம், விகுணி, சோபம்,வேரி, மறவி, தேம், சுவிகை, தேறல், மகரந்தம், மதிரை, ஆம்பல், படு.

கூ:— மரு,மாலி,பாடலி,மாதவம், குந்தி,மருட்டு, மட்டு, பிரசம், மதுவம்,தணியல் படு, வேரி, தொண்டி, பிழி,சுரை,அரி,தேறல்,சாறு.ஆம்பல், சுலோகி, சுமாலி, தொப்பி,முருகு,விளம்பி,அளி,சிக்கரம்,சாதி,மோகி,கள்.

ஆறாவது பொருட்பெயர்த்தொகுதி முற்றும்.

# ஏழாவது
# செயற்கைப் பெயர்த் தொகுதி

**(மணி) முடி, முடிமாலை, முடியுறுப்பு,**
**சுட்டி, பட்டம், குண்டலம், காதணி,**
**பதக்கம் இவற்றின் பெயர்.**

சுடிகைசே கரமவுலி மகுடங்கி ரீடந்
துலங்குபசு மடைகண்டிகை
சூடிகை வகுத்தவொன் பதுமணி முடிப்பெயர்
தொகுத்தசிர மாலையின்பேர்
நெடியகா ரோடிகை யெனும்பட்ட [1]மகுடமே
நொந்தா மங்கிம்புரி
நீண்டகோ (டக)மைந்து மணிமுடியு றுப்பாகும்
நீள் (சுடிகை) சுட்டியினபேர்
வடிவுகூ ரோடைபட் டங்குண்ட லப்பெயர்
வழங்குமே குழைமிஞ்சிகை
வன்கடிப் பிணைகுணுக் குக்கம்பி யேடமி
வல்லிகை குதம்பைதோடென்
றுடையபெய ரேழுமே காதணியு ரத்தின்மிசை
யோங்கிய பதக்கப்பெய
ருலவியபெ ரும்பூண்ம தாணிகண் டிகைமாலை
யுடனாரம் நான்குமாமே! (')

*சுடிகை, சேகரம், மவுலி, மகுடம், கிரீடம்
துலங்கு பசு, மடை, கண்டிகை,
சூடிகை, வகுத்த ஒன்பது மணிமுடிப் பெயர்.
தொகுத்த சிரமாலையின் பேர்

---

1 முகுடமே எனல்வேண்டும்.

நெடிய காரோடிகை எனும். பட்டம், [1]முகுடமே
நொந்த தாமம், கிம்புரி,
நீண்ட கோடகம் ஐந்தும் மணிமுடியுறுப்பாகும்.
நீள் சுடிகை சுட்டியின்பேர்,
வடிவுகூர் ஓடை, பட்டம், குண்டலப்பெயர்,
வழங்குமே குழை மிஞ்சிகை.
வன் கடிப்பிணை, குணுக்கு, கம்பி, ஓடு அமி,
வல்லிகை, குதம்பை, தோடு என்று
உடைய பெயர் ஏழுமே காதணி. உரத்தின்மிசை
ஓங்கிய பதக்கப்பெயர்
உலவிய பெரும்பூண், மதாணி, கண்டிகைமாலை,
உடன் ஆரம் நான்கும் ஆமே! (175)

### மணிமுடியின் பெயர்

**சே:—** சுடிகை, மௌலி, முடி, சேகரம், மகுடம் கிரீடம், மணிமுடி.

**பி:—** மகுடம், கிரீடம், மௌலி, சூடிகை, சுடிகை, சேகரம், மணிமுடி.

**நா:—** சுடிகை, சேகரம் கிரீடம், சூடிகை, மகுடம், மௌலி, முடி.

**க:—** சுடிகை, மவுலி, கிரீடம், மகுடம், சேகரம், பொன்முடி.

### முடிமாலையின் பெயர்

**சே:—** கரோடிகை, சிரமாலை.

**பி:—** பாடம், கோடி, கரோடி, முடிமாலை.

1 மகுடமே என்றுளது.

தூ:— கரோடி, முடிமாலை.

க — சிரமேல்மாலை கரோடிகை.

### முடியுறுப்பின் பெயர்

சே:— தாமம்,முகுடம்,பதுமம்,கோடகம்,கிம்புரி, முடியுறுப்பு.

பி:— கோடகம், கிம்புரி, முகுடம், பதுமம், முடியுறுப்பு, தாமம்.

தூ:— தாமம், முகுடம், பதுமம், கோடகம்,கிம்புரி, முடியுறுப்பு.

### (நெற்றிச்) சுட்டியின் பெயர்

சே:— சுட்டி, நுதற்சுடிகை.

பி:— சுட்டி, சுடிகை.

தூ:— சுட்டி, சுடிகை.

க:— சுட்டி, சுடிகை.

### (நெற்றிப்) பட்டத்தின் பெயர்

சே:— பட்டம், ஓடை.

பி:— பட்டம், ஓடை.

தூ:— பட்டம், ஓடை.

க:— நுதற்குறி, ஓடை, பட்டம்.

### குண்டலத்தின் பெயர்

சே:— குழை, மிஞ்சிகை, காதணி, குண்டலம்

பி:— மஞ்சிகை, குழை, குண்டலம்.

தூ:— குழை, குண்டலம்.

க:— குழை, தோடு, மிஞ்சிகை, குண்டலம்.

### காதணியின் பெயர்

சே — கடிப்பிணை, வல்லிகை, வேடகம், தோடு, கொட்டை, காதணி.

பி:— வல்லிகை, கொட்டை, கடிப்பம், குணுக்கு, கடிப்பிணை, காதணி.

சூ:— கம்பி, வல்லிகை, குணுக்கு, கடிப்பிணை, காதணி

க:— கடிப்பிணை, வல்லிகை, வேடகம்,குழைப் பூண்.

### பதக்கத்தின் பெயர்

சே:— கண்டிகை, ஆரம், பதக்கம்.

பி:— கண்டிகை, மாகணி, ஆரம், பதக்கம்

சூ:— ஆரம், கண்டிகை, மதாணி, பதக்கம்,

க:— (பெரும்பூண், மதாணி, கொடும்பூண்.) பதக்கம், கண்டிகை, ஆரம், பூண்.

## வில், மாயோன்வில், ஈசன்வில், நாண் அம்பு இவற்றின் பெயர்.

**தடிசிந்து வாரஞ் சராசனங் கார்முகஞ்**
**சாபந்து ரோணஞ்சிலை**
**தனுப்பதடி கோதண்டம் வேணுப்பி னாகமுனி**
**தவர்கொடு மரத்தினுடனே**

**நெடிய[1]சா ரங்கமீ ரெட்டும்வில் லின்பெயர்**
**[2]நிகழ்ந்தசா ரங்கமாயோன்**
**நீண்டவில் லின்பெயர் பினாகமீ சன்கையில்**
**நிலைபெற்ற விலலின்பெயர்.**

---

1 சார்ங்கம் என்பதும், 2 நிகழ்ந்த சார்ங்கமாயோன் என்பதும் ஓசை நயங்கருதி சாரங்கம் என்றும் நிகழ்ந்த சாரங்க மாயோன் என்றுமுளது.

**தொடைகுணம், வட்டம்பூரி சிஞ்சினி நரம்புநாண்**
**சூழ்பூட்டு நாரியாவா**
**தொகுநாணி நாமமீ 1ரைந்துகுதை விற்குதை**
**தொடுசிலீ முகம்விசிமுகம்**

**கடியசரம் வாளிவண் டத்திரஞ் சாயகங்**
**கணைதோணி பாணமேவே**
**கதிரமே யாசுகம் பகழிபல் லங்கோலக்**
**கம்புங்க மம்பாகுமே!** (2)

*தடி, சிந்துவாரம், சராசனம், கார்முகம்,
சாபம், துரோணம், சிலை,
தனு, பதடி, கோதண்டம், வேணு, பினாகம், முனி,
தவர், கொடுமரம், அத்தினுடனே

நெடிய 2சார்ங்கம், ஈரெட்டும் வில்லின்பெயர்.
நிகழ்ந்த 3சார்ங்கம், மாயோன்
நீண்ட வில்லின் பெயர். பினாகம் ஈசன் கையில்
நிலைபெற்ற வில்லின் பெயர்,

தொடை, குணம், வடம், பூரி, சிஞ்சினி, நரம்பு, நாண்,
சூழ் பூட்டு, நாரி, ஆவா,
தொகு நாணி, நாமம், ஈரைந்து, குதை, விற்குதை,
தொடு சிலீமுகம், விசிமுகம்,

கடிய சரம், வாளி, வண்டு, அத்திரம், சாயகம்,
கணை, தோணி, பாணம், ஏ, ஏ,
கதிரம், ஏ ஆசுகம், பகழி, பல்லம், கோல்,
அக்கம், புங்கம், அம்பு ஆகுமே! (176)

## வில்லின் பெயர்

**சே:**— சிலை, தனு, வேணு, கார்முகம், சாபம், முனி, சார்ங்கம், சராசனம், பினாகம், கோதண்டம், தவர், கொடுமரம், துரோணம், வார், வில்.

---

1 ரைந்துகுதை எனல் வேண்டும்.
2 சாரங்கம் என்றுளது. (வடசொல்).
3 சாரங்கம் என ஓசை நயம் கருதியதுபோலும்.

பி:— கோதண்டம், சிலை, கொடுமரம், கார்முகம், சாபம், துரோணம், தனு, தடி, முனி, சிந்துவாரம், சராசனம், தவர், வேணு, சார்ங்கம், வில்.

சூ:— தனு, சிந்துவாரம், தடி, சராசனம், கோதண்டம, சிலை, துரோணம், சாபம், கொடுமரம். வேணு, முனி, தவ்ர், சராரோபம், கார்முகம், வில்,

க:— சிலை, கார்முகம், கோதண்டம், சாபம், முனி, தனு, சராசனம், வேணு, கொடுமரம், வில். தவர்.

## மாயோன் வில்லின் பெயர்

சே:— சார்ங்கம்.

பி:— சார்ங்கம்.

சூ:— சார்ஙகம்.

க:— திருமால்வில், சார்ங்கம்,

## சிவன் விலலின் பெயர்

சே:— பிநாகம்.

சூ:— பினாகம்.

க:— சைவபிரான்வில், பினாகம்.

## நாணின் பெயர்

பி:— பூரி, ஆவம், பூட்டு, தொடை, வடம், நாரி, நரம்பு, குணம், நாண்.

சூ:— பூரி, தொடை, ஆவம், பூட்டு, நாண், சிஞ்சினி, நரம்பு, நாரி, வட்டம். குணம.

### அம்பின் பெயர்

சே:— பகழி, வாளி, வண்டு, பாணம், சரம், பத்திரி, சிலீமுகம், பல்லம், புங்கம், கணை, குதை, கங்கபத்திரம், அத்திரம், தோணி, கோல், விசிகம் அம்பு.

பி:— பகழி, வாளி, தோணி, பாணம், கதிரம், பல்லம்,கணை,கோல்,சரம்,வண்டு, பத்திரம்,சிலீமுகம், விசிகம், உடு, அம்பு.

சூ:— சரம், வாளி, கணை, பகழி, வண்டு, கதிரம், கங்கபத்திரம், அத்திரம், கோல், பாணம். ஆசுகம், பூதை, பத்திரி, விசிகம், புங்கம், தோணி, சாயகம், பல்லம், தொடை, சிலீமுகம், ஏ, அம்பு.

க:— சரம், பாணம், ககம், காண்டம், புங்கம், பல்லம், கணை, ஆசுகம், கோல், கங்கபத்திரம், வாளி, அம்பு, [1]பரிமாற்கணம், விசிகம், சிலீமுகம், [2]கோ, பகழி, குதை, தோணி, வண்டு, அத்திரம், சாயகம், புங்கவம்.

## கைவாள், சுவரகழ்கத்தி, மூக்கரிகத்தி, கணையம், ஈட்டி, சிறுசவளம், பெருஞ்சவளம், கருமுள், கைவேல், இருப்புமுள், நாராசம், பிண்டிபாலம், இவற்றின் பெயர்.

கண்டமே கைப்பிடி வாளினுக் குரியபெயர்
கன்னமென் [3]பதுசுவரகழ்
கத்திகுளி ரிலையோரி (ர)ண்டுமே மூக்கரி
கத்தியெழு வொடுபரிகங்

1=? 2கோல் எனல் வேண்டும்
3 பதுசுவாகழை என்றுளது.

கொண்(டபெய) ரேகணையம் விட்டேறு சொல்லரிய
கூர்மைசே ரீட்டிப்பெயர்.
குந்தங்க ளுக்கடைகள் சிறியசவ ளப்பெயர்
(கு)ந்தமுட னேதோமரம்
மண்டியபெ ருஞ்சவளம் வல்லையப் பெயர்களு
1முள்வைக்கும் கழுக்கடைப்பேர்.
வளமேவு (க) ப்பண(ந்) தோமரமி ரண்டுமே
மன்னுகை வேலின் பெயர்.
க(ண்டநற்) றாறேயி ருப்புமு (ள்) ளன்றிச்
ச(லாகைநா ராச) மும் பேர்
ச(ாற்றுபீ) லித்தண்டு பிண்டிபா லப்பெயர்
தானெ(ன்று மொன்று)மாமே! (3)

*கண்டமே கைப்பிடி வாளினுக்கு உரியபெயர்.
கன்னம் என்பது சுவர் அகழ்கத்தி.
குளிர், இலை, ஓர் இரண்டுமே மூக்கு அரி கத்தி.
எழு, ஒடு பரிகம்,
கொண்டபெயரே கணையம். விட்டேறு சொல்லஅரிய
கூர்மைசேர் ஈட்டி பெயர்
குந்தம் கழுக்கடை(கள்) சிறிய சவளப்பெயர்.
குந்தம், உடனே தோமரம்,
மண்டிய பெருஞ்சவளம், வல்லை அப்பெயர். கழுமுள்
வைக்கும் கழுக்கடைப்பேர்.
வளம் மேவு கப்பணம், தோமரம் இரண்டுமே
மன்னுகைவேலின் பெயர்.
கண்ட நல் தாறு ஏ இருப்புமுள். அன்றிச்
சலாகை, நாராசமும் பேர்.
சாற்று பீலித்தண்டு பிண்டிபாலப் பெயர்.
தானென்றும் என்றும் ஆமே! (177)

1 முன்வைக்கும் என்றுளது.

### கைவாளின் பெயர்

பி:— கண்டம்.

தூ:— கண்டம்.

### சுவரகழ்கத்தியின் பெயர்

பி:— கன்னம்.

தூ:— கன்னம்.

### (இலை) முக்கரிகத்தியின் பெயர்

சே:— குளிர்.

பி:— குளிர், கணிச்சி.

தூ:— குளிர்.

க:— குளிர்.

### கணையத்தின் பெயர்

சே:— எழு.

பி:— எழு, பரிகம்.

தூ:— எழு, பரிகம்.

க:— பரிகம், எழு

### ஈட்டியின் பெயர்

பி:— இட்டி, ஈட்டி.

தூ:— இட்டி, ஈட்டி.

### சிறுசவளத்தின் பெயர்

பி:— குந்தம், சிறுசவளம்.

தூ:— குந்தம், சிறுசவளம்.

**பெருஞ்சவளம்**

பி:— குந்தம், தோமரம். பீலி, பெருஞ்சவளம்.

சூ:— குந்தம், தோமரம், பெருஞ்சவளம்.

**கழுமுள்ளின் பெயர்**

சே:— கழுக்கடை, கழுமுள்.

பி:— கழுக்கடை, கழுமுள்.

சூ:— கழுக்கடை, கழுமுள்.

க:— கழுமுள், கழுக்கடை.

**கைவேலின் பெயர்**

சே:— கப்பணம், தோமரம், குந்தகம், கைவேல்.

பி:— கப்பணம், தோமரம், கைவேல்.

சூ:— கப்பணம், தோமரம், கைவேல்.

க:— கப்பணம், தோமரம், கைவேல்.

**இருப்புமுள்ளின் பெயர்**

சே:— தாறு, இருப்புமுள்.

பி:— தாறு, இருப்புமுள்.

சூ:— தாறு, இருப்புமுள்.

க:— இருப்புமுள், தாறு.

**நாராசத்தின் பெயர்**

சே:— சலாகை, நாராசம்.

பி:— சலாகை, நாராசம்.

தூ:— சலாகை, நாராசம்.

க:— நாராசம், சலாகை.

### பிண்டிபாலத்தின் பெயர்

சே:— பீலித்தண்டு, எஃகம்,பிண்டிபாலம்.

பி:— பீலித்தண்டு, எஃகம், பிண்டிபாலம்

தூ:— பீலித்தண்டு, எஃகம்,

க:— பீலித்தண்டு, எஃகம், பிண்டிபாலம்.

## சுழல்படை, வாள், ஆயுதப்பொது, படை உறை, கைவிடுபடை, கைவிடாப்படை, கூர்மை, நுனி, இவற்றின் பெயர்

நெடியசுழல் படைவட்ட மரியபா ராவளை
நிகழ்த்தியவி ரண்டேபெயர்
நீளுவணி நவிர்கோண மரிகண்ட மேகண்ட
கத்திரிநி கர்க்குமப்பேர்
படைதானை கருவிவேல் கழுமுளஃ கரிவேதி
பாணிதுப் பலகுகண்டம்
படைக்கலஞ் சாதனம் [1]மூர்ங்கரங்[2]குலைசெயப்
படுமாயு தப்பொதுப்பேர்
தடறுபடை யுறைகூடு புட்டிலொரு நான்குமே
கருதுமா யுதவுறைப்பேர்
கைவிட்ட படையத்தி ரப்பெயர் சத்திரங்
கைவிடாப் (படையின்) பெயர்.
வடிவைபூ வசிநிசித மழுமுனை யளாரயில்
வள்வயிர மாறிரண்டும்
வண்கூர்மை யின்பெயர் நுதிநுனை நுனிப்பெயர்
வனப்புடைய முனையுமாமே! (4)

---

1 முற்கரம் போலும். 2 கொலைசெயல் எனல் வேண்டும்.

*நெடிய சுழல்படை வட்டம், அரிய பாராவளை,
நிகழ்த்திய இரண்டேபெயர்.
நீள் உவணி, நவிர், கோணம், அரிகண்டமே,
[கண்டகம்,
கத்தி நிகர்க்கும் அப்பேர்.
படை,தானை,கருவி,வேல், கழுமுள், எஃகம்,அரி,வேதி,
பாணி, துப்பு, அலகு, கண்டம்,
படைக்கலம், சாதனம், [1]முற்கரம், [2]கொலை—
செய்யப்படும் ஆயுதப்பொதுப் பெயர்
தடறு, படையுறை, கூடு, புட்டில், ஒரு நான்குமே
கருதும் ஆயுதஉறைப்பேர்.
கைவிட்டபடை அத்திரம் பெயர். சத்திரம்
கைவிடாப்படையின் பெயர்.
வடி,வை,பூ,வசி,நிசிதம், மழு, முனை, அள்,ஆர், அயில்,
வள், வயிரம் ஆறிரண்டும்
வண் கூர்மையின்பெயர்.நுதி நுனை,நுனிப்பெயர்,
வனப்பு உடைய முனையும் ஆமே! 178

**சுழல்படையின் பெயர்**

பி:— வட்டம், பாராவளையம், சுழல்படை.

சூ:— வட்டம், பாராவளையம், சுழல்படை.

**வாளின் பெயர்**

**சே:—** நாந்தகம், கட்கம், நவிர், ஏதி, கண்டகம், வேணு, வஞ்சம், நாட்டம், கடுத்தலை, உவணி, கரவாளம், கோணம், வசி, வாள்.

பி:— நவிர், ஏதி,நாட்டம்,கடுத்தலை,நாந்தகம், வசி, கட்கம், வஞ்சம், மட்டாயுதம், தூவத்தி, வாள்.

1 மூர்ங்கரங் என்றுளது. 2 குலை என்றுளது.

சூ:— அசி, நவிர், ஏதி, நாட்டம், நாந்தகம், கட்கம் வசி. மட்டாயுதம், தூவத்தி, வஞ்சம், உவணி, கோணம், கண்டகம், வேணு, கரவாளம், வாள்.

க:— அசனி, கரவாளம், கட்கம், கரவாரி, வேணு, வஞ்சம், நாட்டம், கடுத்தலை, கண்டகம், நாந்தகம், வாள், உவணி, நவிர், கோணம் அசி, கண்டம்.

## ஆயுதப் பொதுப்பெயர்

சே:— படைக்கலம். தானை, கடுமுள், சுதனம், படை, துப்பு, கழுமுள், ஏது, கார்த்திகை, கூர்த்திகை,

பி:— தானை, படை, படைக்கலம், கருவி, எஃகு, வேல், துப்பு, ஏதி, சுதன்மம்.

சூ:— படை, தானை, கழுமுள், வேல், படைக் கலம், சுதனம், துப்பு, ஏதி, கருவி, எஃகம்.

க:— படை, சாதனம், தானை, படைக்கலம், ஆயுதம், கடுமுள், கருவி, கழுமுள், காட்டு.

## படை உறையின் பெயர்

சே:— தடறு, கருவிப்புட்டில்.

பி:— தடறு, கருவிப்புட்டில்.

சூ:— தடறு, கருவிப்புட்டில்.

க:— தடறு, படையுறை, கருவிப்புட்டில்.

## கைவிடு படையின்பெயர்

பி:— அத்திரம்.

சூ:— அத்திரம்.

### கைவிடாப்படையின்பெயர்

பி:— சத்திரம்.

சூ.— சத்திரம்.

சே:— வள், அயில், நுதி, நுனை, வை, ஆர், நிசிதம் வசி, வயிரம், பூ.

பி:— வயிரம், வள், வசி, வை, அயில், நிசிதம், அள், பூ, ஆர்.

சூ:— வை, நிசிதம், பூ, வள், அயில், வசி.

க:— பூ நிசிதம், நுதி, வை, ஆர் வசி, வயிர், கூரயில், வள். அள்.

### நுனியின் பெயர்

சே:— நுதி நுனை, நுனி.

பி:— நுதி, நுனை. நுனி.

சூ:— நுதி, நுனி.

க:— நுதி, நுங்கி நுனை, முனை.

## புடவை, துகில் இவற்றின் பெயர்

தூசுபரி வட்டம்ப டாஞ்சாடி கலைகோடி
ஆடிமடி தானையறுவை
(தூ)ரியம் புட்டகங் காளகங் காடகந்
துகில்சம்ப டங்(க)ப்படங்
(கோசிகங்) கோகடிஞ் சீ(ரை)யம் பரம்நீவி
கூறை(யுடை) யகடைப(டா)ங்
குலகவியவு டுக்கையா சாரங்க லிங்கங்
குறித்திடும் யஞ்சி (பாரி)

**வாசம்வத் திரம்வட்டம் ஆறுகஞ் சேலையா**
**வரணமக் காரமுடனே**
**வாசனம் சாதனம் இலக்கார வகமென**
**வரும்(பு)டவை யாறேழ்பெயர்**
**பே(சு)பட் டேகம் வேதிகங் கத்திகை**
**பெருகொலிய லிடையல்விரியல்**
**பெருமைசேர் புங்கமொடு பங்கமுந் துகிலென்பர்**
**பெற்றியுள நூல்வலோரே! (5)**

*தூசு, பரிவட்டம், பாடம், சாடி, கலை, கோடி,
சூடி, மடி, தானை, அறுவை,
தூரியம், புட்டகம், காளகம், காடகம்,
துகில், சம்படம், கப்படம்,

கோசிகம், கோடிசம், சீரை, அம்பரம், நீவி,
கூறை, உடை, ஆடை, படாம்,
குலாவிய உடுக்கை, ஆசாரம், கலிங்கம்,
குறித்திடும், பஞ்சி. (பாரி)

வாசம், வத்திரம், வட்டம், ஆறுகம், சேலை,
ஆவரணம், அக்காரம், உடனே
வாசனம், சாதனம், இலக்காரம், வகம், என
வரும் புடவை ஆறேழ் பெயர்.

பேசு பட்டு, ஏடகம், வேதிகம், கத்திகை,
பெருகு ஓலியல், இடையல், விரியல்,
பெருமைசேர் புங்கம், ஓடு பங்கமும் துகில் என்பர்
பெற்றி உள நூல் வல்லோரே! (179)

## புடவையின் பெயர்

**சே:** — மடி, புட்டம், மாறுகம், கலை, உடை, இலக்கர், கலிங்கம், சேலை, காடகம், காழகம், அறுவை, வட்டம், சாடி, தானை, வாதநம், கோடிகம், அம்பரம், ஆசாரம், ஆடை, தூசு, துகில், நீவி, சம்படம், பட்டம், படாம், புடவை, கூறை.

பி:— ஆடை, கோடி, சூடி, வட்டம், காடகம், புட்டம் கலிங்கம், காழகம், படம், தூசு, புடவை, துகில், கூறை, பரிவட்டம், ஆவரணம், தானை, உடை, ஆசாரம, அம்பரம் நீவி, அறுவை, உடுக்கை, சம்படம், பட்டி, சாடி, சேலை, மடி, சீரை, வட்டுடை, கோசிகம், கலை, வாசனம், கூறை.

சூ:— கோடி, கோடிகம் படாம், கோசிகம், கூறை, பஞ்சி, சாடி, நீவியம், சீரை, சம்படம், கலை, கலிங்கம், சூடி, காடிகம், புட்டம், தூசு, காழகம், வட்டம், ஆடை, ஆவரணம், தானை, அறுவை, அம்பரம், ஆசாரம், புடவை, மடி, பரிவட்டம், சேலை, வத்திரம், உடுக்கை, வாசம், இலக்காரம்

க:— புட்டகம், தூசு, ஒலியல், வாசம், பரி வட்டம், பட்டம், மடி, துகில், கோடிகம், அம்பரம், வாதனம், சேலை, சம்படம், அறுவை, சாடி, காடகம், தானை, ஆடை, படம், உடை, கலை, காழகம், நீவி, கலிங்கம், ஆசாரம், கூறை, உடுக்கை, புடவை.

## துகிலின் பெயர்

சே:— (நல்லாடை :—) ஏடகம், புங்கம், பங்கம், இடையல், வேதகம், சில்லிகை, கத்தியம், நாகம், தூரியம், கருள், பாரி, நல்லாடை.

பி:— (சிறுதுகில்:—) கந்தை, விரிபம், கண்டை, பிடியல், வேதகம், புங்கம், பங்கம், கத்தியம், தூரியம், சிற்றில்.

சூ:— இடையல், வேதகம், பட்டு, ஏடகம், துகில்.

க:— இடையல், பங்கம், கருள், புங்கம், சில்லிகை, ஏடகம், சித்திலிகை. கத்தியம், தூரியம், பாரி, நல்லாடை.

## பட்டாடை, பட்டாடையின் விகற்பம், நல்லாடை, நற்பணித்தூசு, சித்திரப் புடவை, மேற்போர்வை, முந்தானை, கொசகம், காசம், உத்தரீகம் இவற்றின் பெயர்

ஆகுமே ய(ம்)பரங் கோசிகம் பாளித
மறைந்தபட் டாடைமுப்பே
ரன்றியுங் காம்புநேத் திரமெனு மிரண் டுமே
யதின்விகற் பத்தின்பெயர்
நாகமொடு தூரிகங் கருள்பாரி சில்லிகை
நயந்தநல் லாடைப்பெயர்
நற்பணி யிடுந்தூசு [1]தேவான மென்றுபெயர்
நவில்சித்தி ரப்புட வையே
கோகமொடு தூசரிகம் பொத்தகம் பட்டிகை
கொணர்ந்தசித் திரதூரிகங்
கூறுமீக் கோளுறை யிரண்டுமேற் போர்வையாங்
கோதில்முந் தானைப்பெயர்
தோகையாங் கோசகப் பெயர்நீவி கோசகஞ்
சொல்லுமே காசப்பெயர்
சொலிலுத்த ரீகமுட னுத்தார சங்கமே
றீடென்பர் சொற்புலவரே! (6)

*ஆகுமே அம்பரம், கோசிகம், பாளிதம்,
அறைந்த பட்டாடை முப்பேர்.
அன்றியம் காம்பு, நேத்திரம் எனும் இரண்டுமே
அதின் விகற்பத்தின்பெயர்.
நாகம், ஒடு தூரிகம், கருள், பாரி, சில்லிகை,
நயந்த நல்லாடைபெயர்.
நற்பணி இடும்தூசு [2]தேவாங்கம் என்று பெயர்.
நவில் சித்திரப் புடவையே

---

1 தேவாங்கமெனல் வேண்டும். 2 தேவானம்என்றுளது

கோகம்,ஒடு தூசு, அரிகம், பொத்தகம், பட்டிகை,
கொணர்ந்த சித்திர தூரிகம்.
கூறும் மீக்கோள், உறை இரண்டும் மேல்போர்வை
கோது இல் முந்தானைப் பெயர் [யாம்
தோகை ஆம். கோசகப் பெயர் நீவி. கோசகம்
சொல்லுமே காசப்பெயர்.
சொலில் உத்தரீகம் உடன் உத்தாரசங்கம்,
1ஏறீடென்பர் சொற்புலவரே! (180)

பட்டாடையின் பெயர்

**சூ:—** பாளிதம்,கோசிகம்,நேத்திரம்,பட்டாடை,

**பி:—** பாளிதம், கோசிகம்,பட்டுவருக்கம், காம்பு, நேத்திரம்.

**சூ:—** பாளிதம், கோசிகம், பட்டுவர்க்கம்.

**க:—** பட்டாடை,பாளிதம்,கோசிகம், நேத்திரம்.

பட்டாடை விகர்ப்பத்தின் பெயர்

**சே:—** காம்பு.

**பி:—** காம்பு, நேத்திரம். (பட்டுவருக்கம்)

**சூ:—** காம்பு.

நல்லாடையின் பெயர்

**சே:—** ஏடகம், புங்கம், பங்கம், இடையல், வேதகம், சில்லிகை, சித்திலிகை, கத்தியம், நாகம், தூரியம், கருள், பாரி, நல்லாடை.

**பி:—** நாகம், பாரி, நல்லாடை.

---

1 = ?

சூ:— நாகம், பாரி, நல்லாடை
க:— தூரரியம், பாரி, நல்லாடை.

### நற்பணித்தூசின் பெயர்

சே:— தேவாங்கம்.
பி:— தேவாங்கு, பாளி, பணித்தூசு.
சூ:— தேவாங்கம்.

### சித்திரப்புடவையின் பெயர்

பி:— புத்தகம், சித்திரப்படாம்.
சூ:— புத்தகம், சித்திரப்படாம்.

### மேற்போர்வையின் பெயர்

சே:— மீக்கோள், மேற்போர்வை.
பி:— மீக்கோள், போர்வை.
சூ:— மீக்கோள், போர்வை.
க:— மேற்போர்வை, மீக்கோள்.

### முந்தானையின் பெயர்

சே:— தோகை, முன்றானை.
பி:— முன்றானை, தோகை,
சூ:— தோகை, முன்றானை.

### கொசகத்தின் பெயர்

சே:— நீவி, கொய்சகம்.
பி:— நீவி, கொய்சகம்.
சூ:— நீவி, கொய்சகம்.

(இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை)

**உத்தரீகத்தின் பெயர்**

சே:— உத்தரீயம், ஏகாசம்.

பி:— உத்தராசங்கம், ஏகாசம், உத்தரீயம்.

சூ:— ஏகாசம், உத்தராசங்கம், உத்தரீயம்.

க:— ஏகாசம், உத்தரியம்.

## கிழி, தலையணை, மெத்தை, முலைக்கச்சு, அதன் விருதலைப்பு, அத்தவாளம், சுமடாரு, கூடாரம், சட்டை இவற்றின் பெயர்.

[1]உருவரிய வெழுதுபட மேகிழி யெனும்பெய
ருவதான மேதலையணைக்
குள்ளபெயர் தளிமமணை தவிசுளை யேமெத்தை
யோங்கும்வட் டுடைவம்புவார்
வருபிணி கைவிசிகைப்பட்டி கைமுலைக்
[2]கச்சுவன் கச்சினஞ்சார்
வாரமொரு மூன்றுமே விடுதலைப் பாமத்த
வாளம்வட கம்முலாசந்
தருபெயர் சுமடுசுமை யடைசுடுவு மூன்றுமே
தாங்கும்சும் மாட்டின்பெயர்
தயங்கிய படங்குசீ ரைக்குடி லிரண்டுமே
தக்ககூ (டா) ரமாகும்
பொருவில்கஞ் சுளியங்கி மெய்ப்பைகுப் பாயம்வார்
பொருவில்காஞ் சுளிகஞ்சுகம்
புனைவார ணம்மாச் சட்டையா மெத்தையும்
புகலிலத னாமாமே! (7)

---

1 உருவறிய எனல்பொருந்தும். 2 கச்சுவார் எனல் வேண்டும்.

*உரு [1]அறிய எழுது படமே கிழி எனும் பெயர்
உவதானமே தலையணைக்கு
உள்ளபெயர் தளிமம், அணை, தவிசு, குளையே,
[மெத்தை
ஓங்கும் வட்டுடை, வம்பு, வார்,
வரு பிணிகை விசிகை, பட்டிகை, முலைக்கச்சு
வார், கச்சினம், சார்வாரம்,
ஒரு மூன்றுமே விடுதலைப்பாம். அத்தவாளம்
வடகம், உலாசம்,
தருபெயர். சுமடு, சுமையடை, சுடுவு மூன்றுமே
தாங்கு சும்மாட்டின் பெயர்
தயங்கிய படங்கு, சீரைக்குடில் இரண்டுமே
தக்க கூடாரம் ஆகும்.
பொருவுஇல் கஞ்சுளி,அங்கிமெய்ப்பை குப்பாயம்,வார்,
பொருவில் காஞ்சுளி, கஞ்சுகம்,
புனை வாரணம், மா, சட்டை ஆம்: மெத்தையும்
புகலில் அதன் நாமம் ஆமே! (181)

**கிழியின் பெயர்**

(இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை)

**தலையணையின் பெயர்.**

**சே:—** உபதானம், தலையணை.

**பி:—** உபதானம், தலையணை.

**சூ:—** உபதானம், தலையணை.

**மெத்தையின் பெயர்**

**சே:—** அணை, தவிசு, தளிமம் மெத்தை.

---

1 அரிய என்றுளது.

பி:— தவிசு, அணை, தளிமம், மெத்தை.

சூ:— தவிசு, அணை, தளிமம், மெத்தை.

க:— தளிமம், தவிசு, அணை, மெத்தை.

### முலைக்கச்சின் பெயர்

சே:— வம்பு, பிணிகை, வார், வடம், சச்சு.

பி:— வம்பு, வார், விசிகை, பட்டிகை, முலைச்ச்சு.

சூ:— வம்பு,வார்,வீசிகை, பட்டிகை, வட்டுடை, ர்சு.

க:— பிணிகை,வம்பு,பட்டிகை,வாங்,கச்சு,வரிமுலை

### முலைக்கச்சின் விடுதலைப்பின் பெயர்

சே:— சார்வாரம், கச்சின், கடைக்கயிறு.

பி:— கஞ்சகம், சார்வாரம், கச்சின்தலைப்பு.

சூ:— கஞ்சம், விடுதலைப்பு

### அத்தவாளத்தின் பெயர்

சே:— வடகம், அத்தவாளம்.

பி:— வடகம், உல்லாசம், அத்தவாளம்.

சூ:— உல்லாசம், வடகம், அத்தவாளம்.

க:— அத்தவாளம், வடகம்.

### சும்மாட்டின் பெயர்

சே:— சுமடு, சுமையடை, சும்மாடு.

பி:— சுடுவு, சுமடு, சுமையடை, சும்மாடு.

ஶ்ரீ:— சுடுவு, சுமடு, சுமையடை, சும்மாடு.

க:— சுமடு, சுமையடை, சும்மாடு.

கூடாரத்தின் பெயர்

(இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை)

சட்டையின் பெயர்

சே:— மெய்ப்பை, கஞ்சுளி, கஞ்சுகம், வாரணம், குப்பாயம், அங்கி, சட்டை.

பி — கஞ்சுகம், குப்பாயம், மெய்ப்பை, காஞ்சுகி, அங்கி, வாரணம், சட்டை.

ஶ்ரீ:— கஞ்சுளி, அங்கி, காஞ்சுகம், குப்பாயம், கஞ்சுகம், மெய்ப்பை, வாரணம், சட்டை.

க:— கஞ்சுளி, கஞ்சுகம், வாரணம், சட்டை, அங்கி, குப்பாயம், மெய்ப்பை.

## வயிரச்சங்கிலி, பூணூல், தோளணி, (வாகுவலயம்), மோதிரம், அரைஞாண், அரைப்பட்டிகை, கழல், சதங்கை, பாதகிண்கிணி, காலணிப்பொது இவற்றின் பெயர்.

புனையும்வயி ரச்சங்கி லிக்குரிய நாமம்
புகன்றிடிற் சங்கிலியதாம்
பூணநூ [1]லுபபீத மாம்வாகு வலையம்
புகழ்ந்தகே யூரமுடனே

1 லுபவீத எனல் வேண்டும்.

இனிமைசேர ங்கதந் தோளணிப் பெயரிலச்
சினையாழி நேமிவித்தம்
ஏற்றவிர லணியைந்து மோதிரம் பகரிலிர
தனமென்ப தரைஞாண்பெயர்
மனவொடத் தெனுமரைப் பட்டிகைப் பெயர்பொழியும்
[1]வன்குடையில் வீரத்தினால்
மன்னுமா டவரணிந் திடுவதே கழலாம்
வயங்குகா லணிமணிவடம்
வினவிடிற் சிறுமணி யிரண்டுஞ்ச தங்கையாம்
மிகுபாத கிண்கிணிப்பேர்.
வீறுபரி புரமெனும் பாதசா லங்காலில் (8)
மிக்கபொது வணிகளாமே!

*புனையும் வயிரச்சங்கிலிக்கு உரிய நாமம்
புகன்றிடில் சங்கிலியதாம்
பூணநூல் உபவீதம் ஆம். வாகுவலையம்
புகழ்ந்த கேயூரம் உடனே
இனிமைசேர் அங்கதம் தோளணிப்பெயர். இலச்சினை
ஆழி, நேமி, வித்தம்,
ஏற்ற விரலணி, ஐந்தும் மோதிரம், பகரில்
இரதனம் என்பது அரைஞாண் பெயர்.
மனவு ஒடு அத்து எனும் அரைப்பட்டிகைப் பெயர்.
பொழியும் வன்[3]கொடையில் வீரத்தினால்
மன்னும் ஆடவர் அணிந்திடுவதே கழல் ஆம்.
வயங்கு காலணி மணிவடம்.
வினவிடில் சிறுமணி, இரண்டும் சதங்கை ஆம்.
மிகு பாதகிண்கிணிப்பேர்,
வீறு பரிபுரம் எனும். பாதசாலம் காலில்
மிக்க பொது அணிகளாமே! (182)

---

1வன் கொடையில் எனல் வேண்டும். 2 மனா எனலும் பொருந்தும். [3]குடையில் என்றுளது.

### வயிரச்சங்கிலியின் பெயர்

சே:— சங்கிலி, வயிரச்சங்கிலி.

சூ:— சங்கிலி, வயிரச்சங்கிலி.

### பூணநூலின் பெயர்.

சே:— உபவீதம், பூணுநூல்.

பி:— உபவீதம், பூணு நூல்.

சூ:— உபவீதம், பூணு நூல்.

### வாகுவலயத்தின் தோளணியின் பெயர்

சே:— அங்கதம், கேயூரம், தோளணி.

பி:— அங்கதம், கேயூரம், தோளணி.

சூ:— அங்கதம், கேயூரம், வாகுவலயம்.

க:— தோளணி, அங்கதம், கேயூரம்.

### மோதிரத்தின் பெயர்

சே:— விரலணி, ஆழி, வீகம், இழச்சினை, மோதிரம்,

பி:— வீகம், ஆழி, இலச்சினை, மோதிரம்.

சூ:— விரலணி, ஆழி, வீகம், இலச்சினை, மோதிரம்.

க:— ஆழி, மோதிரம்.

### அரைஞாணின் பெயர்

சே:— இரதனம், அரைநாண்.

பி:— இரதனம், அரைஞாண்.

சூ:— நாண், இரதனம்.

க:— அரைநூல், இரதனம்.

### அரைப்பட்டிகையின் பெயர்

சே:— மனா, அத்து, அரைப்பட்டிகை.

பி:— மனா, அத்து, அரைப்பட்டிகை.

சூ:— அத்து, மனா, அரைப்பட்டிகை.

க:— அரைப்பட்டிகை, மனவு.

### கழலின் பெயர்

சே:—கெழுதகையம்பல் கிழவோன் சேந்தனில், விழைவுறு தியாகத்து வீரத்து வீக்கிய கழலே ஆடவர் கால்மிசை அணிவடம்.

பி:— ஆடவர் வீரத்தாலணிவது, கழல்.

சூ:— ஆடவர் கொடையினாலும், வீரத்தினாலும் அணிவது கழல்.

### சதங்கையின் பெயர்

சே:— கிண்கிணி, சதங்கை.

பி:— சிறுமணி, கிண்கிணி, சதங்கை,

சூ:— சிறுமணி, சதங்கை.

க:— சதங்கை, கிண்கிணி.

### பாத கிண்கிணியின் பெயர்

சே:— பரிபுரம், நூபுரம், பரியகம், பாத கிண்கிணி

பி:— பரிபுரம், நூபுரம், பாதகிண்கிணி.

சூ:— பாதகிண்கிணி, பரிபுரம்.

க:— பரியகம், கிண்கிணி.

### காலணிப் பெயர்

சே:— பாதசாலம்.

பி:— பாதசாலம்

சூ:— பாதசாலம்.

க:— பாதசாலம், கால்மணிவடம்.

## திரு(தெய்வவுத்தி), தலைப்பாளை, தலைக்கோலம், நுதலணி, கொப்பு, தோடு பொன்னோலை, செவிமலர், கொடி, மணிவடம், வளை இவற்றின் பெயர்.

திருவினது பெயர்தெய்வ வுத்தியாந் தொய்யகஞ்
செப்பியத லைப்பாளையாந்
திகழ்பிஞ்ஞ கம்பிற தலைக்கோல நாமமா(ஞ்)
சிறியநுத லணியின்யெயர்
மருவுபுல் லகமுட னிலம்பகஞ் சூட்டுவந்
திகைநான்கு மாகுமிப்பால்
வாளிகொப் பின்பெயர் தாடங்க [1]மேதோடு
மாழைகொந் தளமிரண்டும்
பெருகுபொன் னோலையின் பெயர்செவி மலர்ப்பெயர்
பிறித்தகன் [2]னாவதங்கம்
பெருஞ்சூட்டு வள்ளிகை யிரண்டுங் கொடிப்பெயர்
பிறங்குமுலை மணிவடப்பேர்
சரமார மேகோவை காளகாழ் கண்டிகை
தாமங்க லாபமாலை
சவியுமாஞ் சரிகுருகு கன்றுகு டகவண்டு
சங்குதொடி வளையாகுமே! (9)

---

1 மேதொடு என்றுளது. 2 னாவதஞ்சம் எனல் பொருந்தும்.

*திருவினது பெயர் உத்தியாம். தொய்யகம்
செப்பிய தலைப்பாளையாம்.
திகழ் பிஞ்ஞகம் பிற தலைக்கோலம் நாமம் ஆம்.
சிறிய நுதலணியின் பெயர்
மருவு புல்லகம், உடன இலம்பகம், சூட்டு, வந்திகை,
நான்கும் ஆகும். இப்பால்
வாளி கொப்பின் பெயர். தாடங்கமே தோடு
மாழை, கொந்தளம் இரண்டும்
பெருகு பொன்னோலையின் பெயர். செவிமலர்ப்
பிறித்த [1]கன்னாவதங்கம். [பெயர்,
பெரும்சூட்டு,வள்ளிகை இரண்டும் கொடிப்பெயர்.
பிறங்கு முலைவடப்பேர்.
சரம், ஆரம், ஏ கோவை, காசு, காழ், கண்டிகை,
தாமம், கலாபம், மாலை,
சவியும் ஆம் சரி, குருகு. கன்று, சூடகம், வண்டு,
சங்கு, தொடி, வளை ஆகுமே! 183

**(தெய்வஉத்தி) திருவின் பெயர்**

**சே:—** திரு, தெய்வஉத்தி

**பி:—** தெய்வஉத்தி, திரு.

**சூ:—** தெய்வஉத்தி, திரு.

**தலைப்பாளையின் பெயர்**

**சே:—** தலைப்பாளை, தொய்யகம்.

**பி:—** தொய்யகம், தலைப்பாளை.

**சூ:—** தலைப்பாளை, தொய்யகம்.

---

1 கன்னாவதஞ்சம் என்பது

## தலைக்கோலத்தின் பெயர்

சே:— பிஞ்ஞகம், தலைக்கோலம்.

பி:— தலைக்கோலம், பங்குசம், பிஞ்ஞகம்.

சூ:— பிஞ்ஞகம். தலைக்கோலம்.

## நுதலணியின் பெயர்.

சே:— புல்லகம், இலம்பகம், நுதன்மிசையணி பூண். (சுட்டி, நுதற்சுட்டிகை).

பி:— இலம்பகம், புல்லகம், சூட்டு, நுதலணி.

சூ:— இலம்பகம். புல்லகம், சூட்டு. நுதலணி.

க:— இலம்பகம், புல்லகம், நுதற்பூண்.

## கொப்பின் பெயர்

(இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்பட வில்லை)

## தோட்டின் பெயர்

சே:— தோடு, தாடங்கம்.

பி:— தாடங்கம், தோடு.

சூ:— தோடு, தாடங்கம்.

## பொன்னோலையின் பெயர்

(இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்பட வில்லை)

## செவிமலரின் பெயர்

சே:— கன்னாவதஞ்சம், செவிமலர்ப்பூ.

பி:— செவிமலர்ப்பூ, கன்னாவதஞ்சம்.

சூ:— கன்னாவதஞ்சம், செவிமலர்ப்பூ.

க:— கன்னப்பூ, கன்னபூரம்.

### கொடியின் பெயர்

(இத்தலைப்பு நான்கு நூல்களிலும் காணப்படவில்லை)

### (முலை) மணிவடத்தின் பெயர்.

சே— ஆரம், பதக்கம். கண்டிகை, மாலை, கோவை, காசு, காழ், தாமம், முலையணிவடம்.

பி:— ஆரம், கண்டிகை, தாமம், கோவை, மாலை, இழை, மாதர் அணிவடம்

சூ:— சரம், காழ், ஆரம், தாமம், மணிவடம்.

க:— கண்டிகை, மாலை, காசு, காழ், வடம், கோவை

### வளையின் பெயர்

சே:— சங்கு, தொடி, சூடகம், சரி, கன்று, குருகு, வண்டு, கைவளை.

பி:— சரி, தொடி, சூடகம், சங்கு, குருகு, வண்டு, கன்று, கைவளை.

சூ:— சரி, தொடி, குருகு, வண்டு, சங்கு, சூடகம், கன்று, கைவளை.

க:— குருகு, கன்று, சூடகம், சங்கு, தொடி, சரி, கைவளை.

**பிள்ளைக்கைவளை, கங்கணம், மேகலை' பதினான்கு மணிக்கோவை, எண்மணிக் கோவை, பதினாறு மணிக்கோவை, பதினெண்மணிக்கோவை முப்பத்திரண்டு மணிக்கோவை, சிலம்பு. பாதகடகம் (பாடகம்), கைச்சரி, கால்சரி, கிண்கிணி மாலை, ஆபரணத்தொங்கல் இவற்றின் பெயர்.**

காட்டுபீ டிகைப்பெயர் பிள்ளைக்கை வளைகடக
மொடுகடைய மொளிர்கண்டி (கை)
கங்கணத் தின்பெயர் மேகலைப் பெயர்காஞ்சி
காள்கலா பம்பருமமோ
ரீட்டுவரி சிகையிவையீ ரேழுகோ வைகளாகு
மெண்கோவை காஞ்சியாகு
மீரெட்டி னுங்கலா பம்பரும மூவாறெண்
ணான்குவிரி சிகையதாகும்
பூட்டுதழை [1]ஞெகிளிபரி புரமரவ நூபுரம்
புனைசிலம் பரியுமாகும்.
பொருபாத கடகமே பாடகங் கால்கைமிசை
பூண்டசரி யேபரியகஞ்
சூட்டுதா ருங்குரல மென்பகிங் கிணிமாலை
சொற்சதங் கைக்குமாந்
தொங்கல்மத லிகையுத்தி யென்றுமுப் பெயருமே
துடர்புடைய தூக்கமாமே! (10)

*காட்டு பீடிகைப்பெயர் பிள்ளைக்கைவளை, கடகம்,
ஒடு கடையம், ஒளிர் கண்டிகை,
கங்கணத்தின் பெயர். மேகலைப் பெயர் காஞ்சி.
காள். கலாபம், பருமம், ஓர்

---

1 ஞெகிழிபரி எனல் வேண்டும்,

ஈட்டு வரிசிகை, இவை ஈரேழு கோவைகளாகும்.
எண்கோவை காஞ்சி ஆகும்.
ஈரெட்டினும் கலாபம். பருமம் மூவாறு.
எண்ணான்கு விரிசிகை அதுஆம்.
பூட்டு, தழை, [1]ஞெகிழி, பரிபுரம், அரவம், நூபுரம்,
புனை சிலம்பு, அரியும் ஆகும்.
பொரு பாதகடமே பாடகம். கால்கைமிசை
பூண்ட. சரியே பரியகம்.
சூட்டு, தார், உம், குரலம் என்ப கிண்கிணிமாலை:
சொல் சதங்கைக்கும் ஆம்.
தொங்கல், மதலிகை, உத்தி என்று முப்பெயருமே
தொடர்பு உடைய தூக்கம் ஆமே. (184)

**பிள்ளைக்கை வளையின் பெயர்**

**சே:—** பிடிகம்

**பி:—** பிடிகம்

**சூ:—** பிடிகம்

**கங்கணத்தின் பெயர்**

**சே:—** கடகம், தொடி, கங்கணம்.

**பி:—** வளை, தொடி, கடகம், கங்கணம்.

**சூ:—** கடகம், தொடி, கங்கணம்.

**க:—** கங்கணம், கடகம், தொடி,

**மேகலையின் பெயர்**

**சே:—** மேகலை, காஞ்சி, கலாபம், பருமம், விரிசிகை.

**பி:—** காஞ்சி, மேகலை, கலாபம், பருமம் விரிசிகை.

---

1 ஞெகிளி என்றுளது.

சூ:— மேகலை, காஞ்சி, கலாபம், பருமம் விரிசிகை.

க:— பருமம், கலை, மேகலை.

**பதினான்கு (ஏழு) மணிக்கோவையின் பெயர்**

சே:— மேகலை

பி—! மேகலை

சூ:— மேகலை

**எண்மணிக்கோவையின் பெயர்**

சே:— காஞ்சி

பி:— காஞ்சி

சூ:— காஞ்சி

**பதினாறுமணிக் கோவையின் பெயர்**

சே:— கலாபம்.

பி:— கலாபம்.

சூ:— கலாபம்.

**பதினென்மணிக்கோவையின் பெயர்.**

சே:— பருமம்.

பி:— பருமம்.

சூ:— பருமம்.

**முப்பத்திரண்டுமணிக்கோவையின் பெயர்.**

சே:— விரிசிகை.

பி:— விரிசிகை,

சூ:— விரிசிகை.

### சிலம்பின் பெயர்

சே:— பரிபுரம், அரவம், பைம்பொன்ஞெகிழி, அரிபெய்சிலம்பு, சிலம்பு.

பி:— அரி, தளை, ஞெகிழி, நூபுரம், அரவம், சிலம்பு.

சூ:— அரவம், சிலம்பு.

க:— நூபுரம், அரவம், பரிபுரம், ஞெகிழம், சிலம்பு, அரி.

### பாடகத்தின் பெயர்

சே:— பாதகடகம், பாடகம்.

பி:— பாதகடகம், பாடகம்.

சூ:— பாதகடகம், பாடகம்.

க:— பாடகம், பாதகடகம்.

### கைச்சரி, கால்சரியின் பெயர்

பி:— பரியகம்.

சூ:— பரியகம்.

### கிண்கிணிமாலையின் பெயர்

பி:— குரல், தார்.

### ஆபரணத்தொங்கலின் பெயர்

சே:— தொங்கல், உத்தி, ஆபரணத்தூக்கம்.

பி:— உத்தி, மதலிகை, தூக்கம்

சூ:— உத்தி

க:— தொங்கல், மதலிகை, தூக்கம்.

## சரிமணிக்கோவை, கடைப்புணர்வு, கிம்புரி, (கல்லழுத்து) குழிவட்டம், ஆபரணப்பொது, அணியிடுங்கலன், பண்டாரம் இவற்றின் பெயர்

காணருஞ் சரிமணிக் கோவையின் பெயரே
கலாபமொடு தோகையாகுங்
கையிலுடன் பூட்டுமடை மூன்றுமே பூணின்
கடைபுணர்வி னபிதானமாம்
பே(ண)ருந் தாவிகோ ளகைதாங்கி கிம்புரிப்
பெயர்வயிர மும்புரக்கும்.
பெ(ப)ருங்கல்ல முத்துகுழி வட்டமே கேவணப்
பெயர்வள்ளி பணியார [1]நான்
பூணணி புலன்கல னணிகலம் பூடணம்
போற்றுகல னேபன்னொன்றும்
பொன்னினு மணியினுஞ் செய்யும(ா) பரணப்
பொதுப்பேர்க டிப்பமுடனே
சேணுலவு கோ(டீ)கங் காண்டந் துமானஞ்
சிறந்தபீ டிகைகண்டிகை
செப்பணி யிடுங்கலப் பெயர்கள்பண் டாரமாஞ்
செறிந்தகோ சந்தண்டமே! (11)

*காண அரும் சரிமணிக் கோவையின் பெயரே
கலாபம், ஓடு தோகை ஆகும்.
கையில் உடன் பூட்டு, மடை, மூன்றுமே பூணின்
கடைப்புணர்வின் அபிதானமாம்.
பேண அரும் தாவி, கோளகை, தாங்கி, கிம்புரிப்
பெயர்; வயிரமும் புரக்கும்.
பெருங்கல் அழுத்தும் குழிவட்டம் ஏ கேவணம்
பெயர், வள்ளி, பணி, ஆரம், நாண்,

---

1 நாண் எனல் வேண்டும்.

பூண், அணி, புலன், கலன், அணிகலம், பூடணம்,
போற்று கலன், ஏ பன்னொன்றும்
பொன்னினும் மணியினும் செய்யும் ஆபரணப்
பொதுப்பேர், கடிப்பம் உடனே
சேண் உலவு கோடிகம், காண்டம், துமானம்,
சிறந்த பீடிகை, கண்டிகை,
செப்பு அணிஇடும்கலப்பெயர். பண்டாரம் ஆம்
செறிந்த கோசம், தண்டமே! (185)

**சரிமணிக்கோவையின் பெயர்**

**சே:**— கலாபம், தோரை, சரிமணி

**பி**:— கலாபம், தோரை, சரிமணிக்கோவை,

**சூ**:— சரிமணி, கலாபம், தோரை,

**கடைப்புணர்வின் பெயர்**

**சே**:— கடை, கயில், மடை, பூண்கடைப்புணர்வு.

**பி**:— கடை, கயில், பூண்கடைப்புணர்வு.

**சூ**:— கடை, கயில், கடைப்புணர்வு.

**க**:— கடை, கயில், பூண். கடைப்புணர்வு.

**கிம்புரியின் பெயர்**

**சே**:— கோளகை, தாங்கி, வயிரம், கிம்புரி, பூண்.

**பி**:— கிம்புரி, தாங்கி, கோளகை, பூண்.

**சூ**:— கோளகை, தாங்கி, வைரம், கிம்புரி, பூண்.

**(கல்லழுத்துங்) குழிவட்டத்தின் பெயர்**

**சே:**— கேவணம்.

**சூ**:— கேவணம்.

## ஆபரணப் பொதுப்பெயர்

சே:— பொலம், கலன், நாண், இழை, பூண், அணி, மதாணி.

பி:— பூண், அணி, அணிகலம், பூடணம், வள்ளி, இழை, கலம், ஆபரணம்.

சூ:— அணிகலன், வள்ளி, பூண், அணி, கலம், மஞ்சு, பணி, இழை, பூடணம்.

க:— மதாணி, இழை, ஆபரணம், பூண்.

## அணியிடும் கலத்தின் பெயர்

சே:— பீடிகை, துமானம், காண்டம், கண்டிகை, கோடிகம், கடிப்பம், பூண்கொள்கலம்.

பி:— கண்டிகை, பீடிகை, காண்டம், கடிப்பம், கோடிகம், அணிகலச்செப்பு.

சூ:— பீடிகை, துமானம், காண்டம், கண்டிகை, கடிப்பம், கோடிகம். பூண்கொள்கலம்.

## பண்டாரத்தின்பெயர்

சே:— கோசம், தண்டம், பண்டாரம்.

பி:— கோசம், தண்டம், பண்டாரம்.

சூ:— கோசம், தண்டம், பண்டாரம்.

ஏழாவது செயற்கைப்பெயர்த் தொகுதி முற்றும்

# எட்டாவது
# பண்பு பற்றிய பெயர்த்தொகுதி

## வட்டம், திரட்சி, வளைவு, இவற்றின் பெயர்

மல்லைதட் டுச்சக ரஞ்சில்லி நேமிவலை
யந்திகிரி பாண்டில்கடகம்
மண்டிலம் பருதிகோ ளகையாழி கொம்மைவளை
யம்விருத் தம்பாலிகை.
சொல்லுவட் டப்பெயர் பதினேழு கணைகட்டி
சோகம்பி ழம்புமுத்தை
தொகுதிபந் தஞ்சூ(ழி)(மா)ழைதா ளங்கொம்மை
துறுமல்குவ வுண்(டை)பிண்டம்
புல்லும்வட் டுச்சேர்வு முடலைபுஞ் சங்குமு(மல்)
பூகமே குவிதன்முண்டம்
போற்றியதி ரட்சியோ மூன்றுபெயர் ரிருபத்து
புகலரிய வளியின்பெயர்
நல்லதட் டுக்கோடல் வக்கிரங் கோணல்கூன்
நண்ணியவ ளாவல்வாங்கல்,
நாட்டுவணர் கோட்டங்கு [1]லாவலங்குடி
(லங்கோண்வி
நற்ப(ன்)னி ரெண்டுமாமே! (1)

*மல்லை, தட்டு, சக்கரம், சில்லி, நேமி, வளையம்,
திகிரி, பாண்டில், கடகம்,
மண்டிலம், பருதி, கோளகை, ஆழி, கொம்மை,
விருத்தம், பாலிகை, [வளையம்,
சொல்லும் வட்டப்பெயர் பதினேழு, கணை, கட்டி,
சோகம், பிழம்பு, முத்தை,

---

1 ஓசை நீண்டுளது; லாவல்குடி எனல் வேண்டும்.

தொகுதி, பந்தம், சூழி, மாழை, தாளம், கொம்மை,
துறுமல், குவவு, உண்டை, பிண்டம்,
புல்லும் வட்டு, சேர்வு, முடலை. புஞ்சம், குழுமல்,
பூகமே குவிதல். முண்டம்,
போற்றிய திரட்சி ஓர் இருபத்து மூன்று பெயர்.
புகல அரிய வளையின்பெயர்
நல்ல தட்டு, கோடல், வக்கிரம், கோணல், கூன்,
நண்ணிய வளாவல், வாங்கல்,
நாட்டு வணர், கோட்டம். [1]குலாவல், குடிலம்,
(கோணவி,
நல் ப(ன்)னிரெண்டும் ஆமே! (186)

## வட்டத்தின்பெயர்

**சே**:— வலயம், நேமி, திகிரி, மண்டிலம், பரிதி, ஆழி, பாண்டில், விருத்தம், கோளகை, கடகம், பாலிகை, கொம்மை, தட்டு, வலையம், சக்கரம், சில்லி, வட்டவடிவு.

**பி**:— வலையம், நேமி, கடகம், மண்டிலம், பரிதி, ஆழி, பாண்டில், விருத்தம், படலிகை, கோளகை, பாலிகை, கொம்மை, திகிரி, மல்லை, வல்லை, சக்கரம், தட்டு, வட்டணை, வட்டம்

**கு**:— கோளகை, கொம்மை, வலயம், தட்டு, பரிதி, பாண்டில், கடகம், நேமி, சில்லி, மண்டலம், ஆழி, திகிரி, பாலிகை, விருத்தம், வல்லை, சக்கரம், வட்டம்.

**க**:— வட்டம், திகிரி, பருதி, வலையம், வளைவு, கொம்மை, தட்டு, விருத்தம், கடகம், சில்லீ, கோளகை, சக்கரம், பாலிகை, மண்டிலம், நேமி, ஆழி, பாண்டில், வாளம்.

## திரட்சியின்பெயர்

**சே**:— பந்தம், சேடு, கொம்மை, குலவு, புஞ்சம்,

---

1 குலாவலம் என்றுளது.

தொகுதி, சோகம், துறுமல், உண்டை, மாழை, குவிதல், கணை, குழியம், பிண்டம், திரள்வடிவு.

**பி:**— கொம்மை, உண்டை, குழியம், குப்பை, முத்தை, பூகம், சோகம், புஞ்சம், பந்தம், மாழை, வட்டு, பிண்டம், வழி, சேடு, சேர்வு, திரள்.

**சூ:**— உண்டை, குவவு, கொம்மை, பந்தம், புஞ்சம், சேடு, முண்டம், கணை, வட்டு, முத்தை, துறுமல், சோகம், சேர்வு, மாழை, குவிதல், தொழுதி, பூகம், பிண்டம், பிழம்பு, திரட்சி.

**க:**— பந்தம், தொகுதி, குவவு, கொம்மை, புஞ்சம், துறுமல், உண்டை, சோகம், மாழை, பிண்டம், கட்டி, திரளை, சேடு.

**வளைதலின் பெயர்**

**சே:**— குடிலம், தட்டு, வாங்கல், குவாவல், கோட்டம், வணர், வளாவல், வளைதல்.

**பி:**— குடிலம், தடவு, கூன், கோண், கோட்டம், வசிவு, கோணல், வாங்கல், குலாவல், வளாவல், வளைதல்.

**சூ:**— குடிலம், குலாவல், கோட்டம், கூன், கோண், வளாவல், தட்டு, வாங்கல், வணர், வளைவு.

**க:**— தடவு, வணர், வாங்கு, கோட்டம், குலாவல், குரங்கல், தட்டு, குடிலம், வளைவு

## நுண்மை, நிறைதல் இவற்றின் பெயர்

**நுட்பமிறை நுனிகயவு சன்னங்கு [1]ணுங்கயிர்**
**நுணுங்காய்தல் கூர்கை(நொய்வு)**
**[2]நொய்சிவு வஞ்சங்கில்லங்கணுறு சிற்பஞ்சாயல்**
**நுங்குநுழை நூண்ணுவ(ண்ண)**

---

1 ஞுங்கயிர் எனல் பொருந்தும். 2 நொசிவு எனல் வேண்டும்.

முட்குறுமை துடியணு நிழற்றலிரு பத்தாறு
முளரியும் நுண்மைப்பெயர்.
மொழிமதங் கன்னிபா ரந்தெவுளல் பெருகல்
முற்றியக மங்கண்டமந்தம்
புட்கரங் கெழுமல்பூ ரணமலிதல் மல்கல்குணைதல்
பொங்குத லார்தல்விம்மல்
புல்லிய தெவிட்டலுட னேததும் புதநிரம்
புதல்பிறங் குதல்கிளைத்தல்
நட்புளதி ளைத்தலுயர் தும்பலே தொங்கலொடு
நடவியது வன்றல்மலிரல்
நாடிலிரு பத்தேழும் நிறைதலின் பெயரென்று
நாட்டினர் தமிட்புலவரே! (2

*நுட்பம், இறை, நுனி, கயவு, சன்னம், [1]குணுங்கு, அயிர்,
நுணுங்கு, ஆய்தல், கூர்மை, (நொய்வு)
நொசிவு, வஞ்சம், கிலம், கஞறு, சிற்பம், சாயல்
நுங்கு, நுழை, நுணை, நுவணை,
முள், குறுமை, துடி, அணு, நிழற்றல், இருபத்தாறும்
முளரியும் நுண்மைப்பெயர்.
மொழி மதம், கன்னி பாரம், தெவுளல், பெருகல்,
முற்றிய, கமம், கண்டம், மந்தம்,
புட்கரம், கெழுமல், பூரணம், மலிதல், மல்கல்,
குணைதல்,
பொங்குதல், ஆர்தல், விம்மல்,
புல்லிய தெவிட்டல், உடனே ததும்பல், நிரம்பு
பிறங்குதல், கிளைத்தல், (தல்,
நட்புள திளைத்தல், உயர் தும்பல், ஏ தொங்கல், ஒடு,
நடவிய துவன்றல், மலிரல்,
நாடில் இருபத்தேழும், நிறைதலின் பெயர் என்று
நாட்டினர் தமிழ்ப்புலவரே! (187)

---

1 குனுங்கு என்றுளது. 2 நொய்சிவு என்றுளது.

### நுண்மையின் பெயர்

**சே:—** நுவணை, நொய்வு, நுழை, அயிர், நுணங்கு, சாயல், முளரி, நுணுகு, நுணுக்கம், ஆய்தல், நிழற்றல், நொசிவு, நுனி, கூர்மை, நுண்மை.

**பி:—** ஐ, நுணுக்கம், அணு, முளரி, நுவணை, நுட்பம், நுணங்கு, நூழை, நுணுகு, நுழை, நுண்மை.

**சூ:—** அணு, நுழை, முளரி, நுட்பம், ஆய்தல், முள், அயிர், நுணங்கு. நுணிகு, நுவணை, நூழை, நொசிவு, நுண்மை

**க:—** நுவணை, நுணுகு, நுணங்கு, ஓய்தல், நைவு, ஓசிவு, நுழை. அயிர், சாயல், நிழத்தல், நுண், கூர்மை.

### நிறைதலின் பெயர்

**சே:—** மலிதல், பெருகல், மல்கல், ஆர்தல், தெகிழ்தல், துவன்றல், கெழுமல், தெவுளல், நிறைதல்.

**பி:—** மலிதல், துவன்றல், மல்கல், ஆர்தல், தெகுளல், ததும்பல், தேக்கல், கிளைத்தல், நிரம்பல், பூரணம், கமம், நிறைவு.

**சூ:—** பிறங்குதல், திளைத்தல், ஆர்தல், பெருகுதல், கழுமல், மல்கல், துவன்றல், பூரணம், கமம், நிறைந்திடல்.

**க:—** கழுமல், துவன்றல், தெவுளல், மலிதல், மல்கல், ஆர்தல், பூரணம், மிண்டல், கமம், நிறைவு.

## குறைதல், அளத்தல், பாதி, எல்லாம் இவற்றின் பெயர்.

**அருகலூ னங்குன்ற லெஞ்ச(லீ னஞ்சி)ங்க**
**லவிதல்கய மஃகல்சிறுக**

**லகவலொல் குதல்சுருங் குதல் (நி)ரப் புத்தேய்த**
**லரியதவ லொடுதவ்வலென**
**வரியபதி னேழுமே குறைதலின் பெயரளவை**
**யொடுகடன் கச்சன்மூன்று**
**மோங்கிய வளத்தலின் பெயர்பங்கு பாதகத்து**
**டன்பால ருத்தமத்தம்.**
**தருகூறு பகல்பாதி யின்பெய ரகண்டஞ்**
**சத்தமகி லஞ்சாருவஞ்**
**சதலநிகி லங்களோ டியாவும்மி யாவையுந்**
**தக்கமுடி யுவுமடையவும்**
**1வருமுருது முற்றுமுழுது மடங்கலு மன்னில**
**மன்னியவ னைத்துமென்ன**
**வந்தமூ வைந்துமெல் லாமெனும் பெயராய்**
**மதித்தனர் தமிழ்ப்புலவரே! (3)**

*அருகல், ஊனம், குன்றல், எஞ்சல், ஈனம், சிங்கல்,
அவிதல், கயம், அஃகல், சிறுகல்,
அகவல், ஒல்குதல், சுருங்குதல், நிரப்பு, தேய்தல்,
அரிய தவல் ஒடு தவ்வல் என
அரிய பதினேழுமே குறைதலின் பெயர். அளவை,
ஒடு கடன், கச்சம் மூன்றும்
ஓங்கிய அளத்தலின் பெயர். பங்கு, பாகம்,
அத்துடன் பால், அருத்தம், அத்தம்,
தரு கூறு, பகல், பாதியின் பெயர். அகண்டம்,
சத்தம், அகிலம். சாருவம்,
சதலம், நிகிலங்கள், ஒடு யாவும், இயாவையும்,
தக்க முடியவும், அடையவும்,
வரு முருதும்,முற்றும், முழுதும், அடங்கலும், அந்நிலம்
மன்னிய அனைத்தும் என்ன
வந்த மூவைந்தும் எல்லாம் என்றும் பெயராய்
மதித்தனர் தமிழ்ப்புலவரே! (183)

---

1வருமுஞுது என்றுளது; இவ்வரி மூலத்தில் சரியில்லை.

## குறைதலின் பெயர்

**சே**:— குறை, நிரப்பு, ஈனம், குறைபாடு.

**பி**—: சுருங்கல், குறை, அருகல், குன்றல், எஞ்சல், குறைதல்.

**சூ**:— நிரப்பு, குன்றல், அருகல், அஃகல், சிறுகல், ஈனம், ஊனம், சிங்கல், எஞ்சல் தேய்வு, குறைதல்.

**க**:— அஃகல், அருகல், குறைதல், விகலம், குன்றல், ஒல்கல், சுருங்கல், நிரப்பு, ஈனம், சிங்கல்.

## அளத்தலின் பெயர்

**சே**:— கச்சம், கடன், அளவை.

**பி**:— கச்சம், கடன், அளவை.

**சூ**:— அளவை, கடன், கச்சம், அளத்தல்.

**க**:— கச்சம், அளவு, கடன்.

## பாதியின் பெயர்

**சே**:— பால், பயல், அருத்தம், கூறு, பாகம், பாதி.

**பி**:— பாயல், பயல், அருத்தம், பங்கு, கூறு, பாகம், பாதி.

**சூ**:— பால், பயல். அருத்தம், பாகம், கூறு, பாதி.

## எல்லாம் (முழுவதின்) பெயர்

**சே**:— முழுவதும், அகிலம், அகண்டம், சமத்தம், அடங்கல், யாவும், முடிய, அனைத்து, எல்லாம், முற்றும், அடைய

பி:— அடைய, அடங்கல், அனைத்தும், யாவை, முழுவதும், முற்றும், சமத்தம், முட்ட, எவை, எல்லாம், அகிலம், அகண்டம்.

சூ — முழுவது, அடைய, எல்லாம், சமத்தம், அடங்கல், அகிலம், யாவும், முடிய, அனைத்து, அகண்டம், முற்றும்.

## வெள்ளை, சிவப்பு, பச்சை இவற்றின் பெயர்

சுப்பிரம் வால்பால் குருத்துநரை பாண்டுச்
சுவேதம்விளர் வெண்மைகுருகு
சுசிவெளில் வாருணங் காரிசீன ஞ்சுதைச்
சுக்கிலந் தவளம்விசிதஞ்
செப்பருச் சுனம்வெள்ளி வெள்ளையெமு மூன்றுபெயர்
சேதங்கு ருதியத்து
சேயாப் பூவுல் பாடலங் [1]கிஞ்சுகஞ்
சிந்தூரஞ் சேதுசேப்புத்
துப்புரத் தங்குலிக மஞ்சிட்டு லோகிதந்
துவரிரா கம்மரக்கு
சோணமரு ணஞ்செக்கர் செம்மையொடு சேர்துநற்
சுவணமிரு [2]பத்தைந்துமே
[3]தப்பிலா வருசிவப் பின்பெயர் பசுமையரி
சாமளம் பாசுபைமை
சாமமரி தம்பலா சம்பைத்த ரித்தெனச்
சாற்றுபத் தும்பச்சையே! (4)

*சுப்பிரம், வால், பால், குருத்து, நரை, பாண்டு,
சுவேதம், விளர், வெண்மை, குருகு
சுசி, வெளில், வாருணம், காரி, சீனம், சுதை,
சுக்கிலம், தவளம், விசிதம்,

1 கிருசுகம் என்றுளது. 2 பத்தந்துமே என்றுளது.
3 தம்பிலா என்றுளது.

செப்பு, அருச்சுனம், வெள்ளி, வெள்ளை, எழுமூன்று
[பெயர்,
சேதம், குருதி, அத்து.
சேய், [1]ஆ, பூவல், பாடலம், கிஞ்சுகம்.
சிந்தூரம், சேந்து, சேப்பு,
துப்பு, அர்த்தம், குலிகம், மஞ்சிட்டு, உலோகிதம்,
துவரி, இராகம், அரக்கு
சோணம், அருணம், செக்கர், செம்மை, ஒடு
[சேந்துநல்
சுவணம் இருபத்தைந்துமே
தப்பு இலா வரு சிவப்பின் பெயர். பசுமை, அரி,
சாமளம், பாசு, பைமை,
சாமம், அரிதம், பலாசம், பைத்து, அரித்து எனச்
சாற்று பத்தும் பச்சையே! (189)

**வெள்ளையின் பெயர்**

**சே**:— வால், பால், சுவேதம், தவளம், பாண்டு, நரை, விளர், சுக்கிலம், குருகு, வெண்மை

**பி**:— சுவேதம், தவளம், சுக்கிலம், குருத்து, விளர், வால், வெள்ளை, நரை, சிதம், குருகு, பால், சுப்பிரம், வெண்மை.

**சூ**:— குருகு, பால், தவளம், வெள்ளை, குருத்து, வால், சுவேதம், பாண்டு, நரை, விளர், சிதம், சுக்கிலம், வெண்மை.

**க**:— சிதம், தவளம், பால், அருச்சுனம், பாண்டு, சசி, வால், சுவேதம், வெண்மை.

**சிவப்பின் பெயர்**

**சே**:— அரக்கு, செம்மை, துப்பு, துவர், சோணம், அரத்தம், சேத்து, பூவல், பாடலம், சிந்துரம், அத்து, படீரம், அருணம், சேந்து, செக்கர், குலிகம், செப்பு, சிவப்பு.

---

1 = ?

பி:— அத்து, அருணம், அரத்தம், சேப்பு, சோணம், குருதி, துவர், சிந்தூரம், பூவல், படீரம், சேத்து, அரக்கு, செக்கர், செம்மை, சேந்து, பாடலம், கிஞ்சுகம், குலிகம், துப்பு, செவப்பு, சிவப்பு.

சூ:— குருதி, கிஞ்சுகம், இராகம், சேது, பூவல், அருணம், சேய், சோணம், செக்கர், அரத்தம், சேப்பு, சிவப்பு.

க:— அரத்தம், துவர், துப்பு, செக்கர், அருணம், சிவப்பு, அத்து, பாடலம், செம்மை, அராகம், சிந்துரம், அரக்கு, சேது, சேப்பு, இங்குலிகம், சோணம்.

## பச்சையின் பெயர்

சே:— பாசு, பைம்மை, சாமம், பைத்து, பசுமை, சாமளம், பச்சை.

பி:— பாசு, பை, அரி, பசுமை, பலாசு, சாமம், அரிதம், பச்சை.

சூ:— பாசு, பை, அரிதம், சாமம், பசுமை, சாமளம், பச்சை.

க:— பை, பாசு, சாமம், அரி, அரித்து, பச்சை, பைத்து, அரிதம், பலாசம், பசுமை, சாமளம்.

## கருமை, பொன்னிறம், புகர், மாசு, நிறம் இவற்றின் பெயர்.

கருமையசி தங்காரி காளிமைக் காரளங்
காளம்நீ லங்களங்கம்
காளிமம் கருள்மாக் களங்காரோ ட(ஞ்சனங்)
கறைமாய மாலிருள்மணி

**பெறுமைபெறு நல்லங்க ருப்பு(மூ வே)ழு(பெயர்)**
**பீதம்பு லம்புற்கலம்**
**பீதகம ரித்திரம் பிங்கலம் பொன்னிறம்**
**பேசியப சப்புமாகும்**
**அரியகபி லங்குரால் புகர்புன்மை (ப)ன்மைநிற**
**(மாங்)கறை களங்கமலினம்**
**அழுக்குமல நீள்கசடு கபிகமேழ் மாசாகும்**
**அரிவருப் புகரிரா(க)ங்**
**குருவருண மே(னி)யுரு வண்ணம் ப(யப்பு)க்**
**குணஞ்சாயல் 1சந்தமாமை**
**கெழுமைகேழ் செழுமல் பிறங்கல்பத் தொன்பதுங்**
**குலவுநிற னாமமாமே! (5)**

*கருமை, அசிதம், காரி, காளிமை, காரளம்,
காளம், நீலம், களங்கம்,
காளிமம், கருள். மா, களம், கார், ஓடு, அஞ்சனம்,
கறை, மாயம், மால், இருள், மணி,

பெருமை பெறும், நல்லம் கருப்பு, மூவேழு பெயர்.
பீதம், புலம், புற்கலம்,
பீதகம், அரித்திரம், பிங்கலம், பொன்னிறம்;
பேசிய பசப்பும் ஆகும்.

அரிய கபிலம், குரால், புகார், புன்மை, பன்மை, [நிறமாம்.
கறை களங்கம், மலினம்,
அழுக்கு, மலம், நீள், கசடு, கபிலம், ஏழ் மாசு ஆகும்.
அரி, [2]வரு புகர், இராகம்,

குரு, வருணம், மேனி, உரு, வண்ணம், பயப்பு,
குணம், சாயல், சந்தம், மாமை,
கெழுமை, கேழ், செழுமல், பிறங்கல், [3]பத்தொன் [பதும்
குலவு நிறம் நாமம் ஆமே! (190)

1 சந்தமாமே என்றுளது. 2 வரி எனல் பொருந்தும்.
3 பதினெட்டே உள

**கருமையின் பெயர்**

**சே**:— காளிமம், களங்கம், கார், களம், நீலம், காளம், அஞ்சனம், கருள், கறை, மாசு, காளகம், கருமை.

**பி**:— காளம், காழகம், காளிமம், காரி, மால், மா, இருள், நீலம், அசிதம், கார், அஞ்சனம், நல்லம், கருள், கருநிறம்.

**சூ**:— இருள், மணி, நீலம், நல்லம், காழகம், காளம், கருள், களம், காரி, கார், மால், கறை, மாயம், கறுப்பு.

**க**:— களங்கம், காளிமம், காளம், நீலம், அஞ்சனம், கருள், கார், கருமை, அசிதம், மை, காழகம், மால்.

**பொன்னிறத்தின் பெயர்**

**சே**:— பீதம், பிங்கலம், புற்கு, பொன்னிறம்.

**பி**:— பீதகம், பசப்பு, பிங்கலம், அரிதம், காஞ்சனி, பொன்மை.

**சூ**:— பிங்கலம், பசப்பு, பீதகம், பீதம், பொன்மை.

**க**:— பிங்கலம், பீதகம், பொற்கு, பொன்மை.

**புகர்நிறத்தின் பெயர்**

**சே**:— கபிலம், குரானிறம், புகர், புற்கு.

**பி**:— கபிலம், குரால், புகார், புற்கு.

**சூ**:— குரால், புற்கு, கபிலம், புகர்.

**க**:— கபிலம், குரால், புகர், புன்மை,

**மாசின் பெயர்**

**சே**:— களங்கம், மலினம், கசடு, கறை, மாசு.

**பி**:— கசடு, மலினம், கறை, அழுக்கு, மலம், களங்கம், மாசு.

சூ:— கறை, களங்கம், மலினம், கசடு, மாசு.

க:— கசடு, கறை, மலினம், மாசு.

### நிறத்தின் பெயர்

சே:— புகார், மேனி, மாமை, கேழ், வண்ணம், குரு, கொழுமை, கெழு, சந்தம், உரு, நிறம்.

பி:— குரு, கெழுமை, கொழுமை, அரிசாயல், வருணம், பயப்பு, கறை, கரு, நிறம்.

சூ:— வரி, புகர், சாயல், சந்தம், மாமை, கேழ், பசப்பு, வண்ணம், குரு, உரு, வருணம், மேனி, நிறம்.

க:— வண்ணம், புகர், மேனி, மாமை, கெழுஉ, குரு, உரு, கேழ், நிறம், சந்தம்

## அழகு, பேரழகு, வடிவு, வண்ணம் இவற்றின் பெயர்

ஏர்மயஞ் சுந்தரஞ் சவிகாள ணங்குபொன்
னெழி லந்த ந(வ்விநோக்கு)
யிராமங்க வின்குழகம் வாமமணி யணிகோல
மியாணர்கா ரிகை(விடங்கம்)
சீர்குலம் பத்திரங் காமர்கட் டளைபாணி
சித்திரம் பாங்குதொட்டில்
தேன்செழுமை வரிபூ வனப்புவண் ணங்கந்தி
தேசிகம் வடிவுசொக்கு
சார்வுவன மற்புதம் பொற்புமதன் [1]மாழைதொழ
சந்தநல நல்குசெவ்வி
ளிமம்வ குப்பெண்மை மஞ்சுநோக் குச்சேடு
தகைமாதர் மாண்புமருகல்

---

1 மாழைகேழ் எனல் வேண்டும்.

**ஆரியை பைதையலம் மேழுக்க ராபாங்கா**
**[2]மாரமெனு வெழுபதும்**
**[3]அழகாலம் விசித்திரம் பேரழகு சின்னம்வடி**
**வா(ஞ்)சந்த வண்ணமாமே![4] (6)**

*[5]ஏர், மயம், சுந்தரம், சவி, காள், அணங்கு, பொன்,
எழில், அந்தம், நவ்வி, நோக்கு,
இராமம், கவின், குழகம், வாமம், மணி, அணி,
[கோலம்,
யாணர், காரிகை, விடங்கம்,

சீர், குலம், பத்திரம், காமர், கட்டளை, பாணி,
சித்திரம், பாங்கு, தொட்டில்,
தேன், செழுமை, வரி, பூ, வனப்பு, வண்ணம், கந்தி,
தேசிகம், வடிவு, சொக்கு,

சார்வு, வனம், அற்புதம், பொற்பு, மதன், மாழை,
சந்தம், நலம், நல்கு, செவ்வி, [கேழ்,
தளிமம், வகு, பெண்மை, மஞ்சு, நோக்கு, சேடு,
தகை, மாதர், மாண்பு, மருகல்,

ஆரியை, பேதை, அலம். அம்மை, ஐ, ஒப்பு, மா,
சாரு, அம், என எழுபதும்
அழகு ஆம். விசித்திரம், பேரழகு, சின்னம், வடிவு ஆம்.
சந்தம் வண்ணம் ஆமே! (191)

**அழகின் பெயர்**

**சே:—** நவ்வி, அந்தம், பை, பூ, பொலம், அற்புதம், செவ்வி, ஒண்மை, மாண்பு, ஐ, சித்திரம், அழகு, ஏர், வனப்பு, எழில், யாணர், மாழை, கேழ், தையல், காரிகை, தோட்டி, கவின், விடங்கம், வாமம், ஒப்பு, வகுப்பு, மஞ்சு, பொற்பு, காமர், அணி, கட்டழகு.)

---

1 அம்மையை ஒப்புமா எனல் தகும்.

2 சாருவம் எனல்பொருந்தும். 3 அழகாம் எனல் வேண்டும். 4 & 5 இப்பாடல் சரியுருப் பெற்றிலது.

**பி.**— ஏர், வனப்பு, எழில், இராமம், காரிகை, மா, அம்மை, கவின், செழுமை, பந்தம், தேசிகம், நோக்கு, அணி, அணங்கு, யாணர், பாணி, மாதர், மாழை, சாயல், வகுப்பு, வண்ணம், வளம், பூ, பொற்பு, சேடு, பொன், சித்திரம், பத்திரம், மாமை. தளிமம், மயம், மஞ்சு, மதன், பாங்கு, அம், சொக்கு, சுந்தரம், தோட்டி, ஐ, ஒப்பு, அந்தம், ஒண்மை, விடங்கம், அமலம், குழரு, கோலம், வாமம், காந்தி, அலங்காரம். அழகு, கொம்மை. மனோகரம், சாரு.

**சூ**:— எழில், வண்ணம், யாணர், மாமை, இராமம், ஏர், நவ்வி, நோக்கு, செழுமை, சேடு, செவ்வி, சித்திரம், நலம், மாதர், குழகு, பொற்பு, நன்கு, கோலம், மணி, வனப்பு, விடங்கம், மாழை, பத்திரம், தோட்டி, பாங்கு சுந்தரம், அணங்கு, மஞ்சு, சொக்கு, தேசிகம், அம், பொன், சந்தம், காரிகை, கவின், பூ, தளிமம், வாமம், காமர், அந்தம், மயம், ஒண்மை, அழகு.

**க**:— நவ்வி, வடிவு, மனோகரம், பை, பூ, ஐ, ஒண், செவ்வி. மாண்பு, அழகு, சீர், சொக்கு, அயில், வாமம், காந்தி. அணி, விடங்கம், எழில், பொற்பி, யாணர், கவின், தகை, தொட்டிமை, ஏர், மணி, மஞ்சு, பொலம், செவ்வி, அம், காரிகை. தையல், ஒப்பு, வனப்பு, வகுப்பு, அந்தம், சுந்தரம், காமர். மாமை.

### பேரழகின் பெயர்

**சே.**— விசித்திரம், பேரழகு.

**பி**:— (கட்டழகு, சித்திரம், மனோகரம், சுந்தரம்.)

**சூ**:— விசித்திரம், பேரழகு.

### வடிவின் பெயர்

**சே**:— செண்ணம், வடிவு.

பி:— செண்ணம், படிவம், வடிவம்.

தி:— செண்ணம், வடிவு.

### வண்ணத்தின் பெயர்

சே:— சந்தம், வண்ணம்,

பி:— வண்ணம், சந்தம்.

தி:— சந்தம், வண்ணம்.

க:— வண்ணம், (புகர்மேனி மாமைகெழுஉக் குருவுருவுங்கேழ் நிறஞ்)சந்தம்.

### கட்டழகு, இளமை, முதுமை இவற்றின் பெயர்

பொற்பலங் காரங்கை யணிகாமர் கோலம்
பொருந்துசிங் காரமேழும்
புகழ்கட் டழகாகு மஞ்சுகோ மளமுருகு
போதகங் குருளைபிள்ளை
நற்பருவம் விளரிவிளா மண்ணேயவ் வனம்விளவு
நவ்விருகு கிளைசேயுயர்
நாகுதரு ணம்புருவை கயம்விளைச்சு (க்கொம்மை)ம
நன்(ம)ழவு குழவுசேடு
சொற்பீரு விளைவீண் செவ்வியா றைந்துந்
துளங்கிளமை முதுமைமூறல்
சுட்டியவிருத் தஞ்சல மூலம்(விளை வெ)ாடு
குன்னிடுமு ரஞ்சுமூப்பாம் [சாம்பல்
[1]ஒப்பரிய பீருப்ப சப்புநிற மே(பசலை)
(யுயர்கொ)ன்றை புரையினுடனே
யோங்கிய வெழுங்குவெளி றாமெண் கணமே
யுரை(த்தன'ர் தமிழ்ப்புலவரே! (7)

---

1 இவ்வரி சிதைந்துளதால் சரியில்லை.

*பொற்பு, அலங்காரம், கை, அணி, காமர், கோலம்,
பொருந்து சிங்காரம் ஏழும்
புகழ் கட்டழகு ஆகும், மஞ்சு, சோமளம், முருகு
போதகம், குருளை, பிள்ளை,

நற்பருவம்,விளரி,விளா,மண்ணை,யெளவனம், விளவு,
நவ்வி, குருகு, இளை, சேய், உயர்,
நாகு, தருணம், புருவை, கயம், விளைச்சு.
நன்மழவு, குழவு, சேடு, [கொம்மை,

சொல் பீரு, விளை, வீண், செவ்வி,[1] ஆறைந்தும்
துளங்கு இளமை, முதுமை, மூறல்,
சுட்டியவிருத்தம், சலம்,மூலம், விளைவு, ஒடு சாம்
குன்றிடும் முரஞ்சு மூப்பு ஆம். [பல்

[2]ஒப்பு அரிய பீரு, பசப்பு. நிறமே, பசலை.
உயர் கொன்றை புரையினுடனே
ஓங்கிய ஏழுங்கு வெளிறு ஆம் எண் கணமே
உரைத்தனர் தமிழ்ப்புலவரே! (192)

## கட்டழகின் பெயர்

**சே**:— ஏர்,வனப்பு, எழில், யாணர், மாமை, கேழ், தையல், காரிகை, தோட்டி, கவின், விடங்கம், வாமம், வகுப்பு, ஒப்பு, மஞ்சு, பொற்பு, காமர், அணி, கட்டழகு.

**பி**:— சித்திரம், மனோகரம், சுந்தரம், கட்டழகு.

**சூ**:— காமர், அலங்காரம், கட்டழகு.

**க**:— அழகு, சீர், சொக்கு, அயில், வாமம், காந்தி, அணி, விடங்கம், எழில், பொற்பி, யாணர், கவின், தகை, தொட்டிமை, ஏர், மணி, மஞ்சு, பொலம், செவ்வி, அம், காரிகை, தையல், ஒப்பு, வனப்பு, வகுப்பு, அந்தம், சுந்தரம், காமர், மாமை.

---

1 இருபத்தொன்பதே உள (30—?).
2 இவ்வரி முழுதும் சிதைந்துள்ளதால் தெளிவாக இல்லை.

## இளமையின் பெயர்

**சே:—** மழவு, நவ்வி, சேய், போதகம், மஞ்சு, குழவு, குருளை, கயம், இளை, புருவை, முருகு, தருணம், பீழ், பருவம், சேடு, கொம்மை, வெண்மை, நாகு, இளைமை.

**பி:—** மழவு, முருகு, தருணம், மஞ்சு, குழவு, விளர், கொம்மை, புருவை, கோமளம், போதகம், இளைமை.

**சூ:—** குருளை, மழவு, வெண்மை, குழவு, கோமளம், கொம்மை, புருவை, யௌவனம், நாகு, போதகம், தருணம், நவ்வி, குருளை, இளை, இளமை,

**க:—** சேய், போதகம், மஞ்சு, மீளி, குருளை, பீள், சேடு, கயம், நவ்வி பருவம், தருணம், மழவு, கொம்மை, குருகு, புரு, கோமளம்' முருகு, இளமை, குழவு.

## முதுமையின் பெயர்

**பி:—** மூப்பு, முரஞ்சுதல், முற்றுதல், விளைவு, சாம்பல், முதுமை.

**சூ:—** முற்றல், விருத்தம், மூப்பு.

## பெருமை, சிறுமை இவற்றின் பெயர்.

பாடுபரி பணையாளி மோடுதட மூரிவான்
பகருமால் வீறுவடவை
பண்கருமை செம்மையிரை மீளிமா னங்குருப்
பருவமா முடலைவிபுலம்
பீடுகயம் வயாநனி மிதன்செம்ம லண்ணல்வால்
பிரமமணி வங்(கை)தமேன்மை

பிறங்கல்கடி பொழிலீடு நளிரருமை யிருமைகண்
பெட்புமிளிர் மண்கொன்[1]மினு

தாடுபின் கதழ்வுதரு மன்றுமங் கயவு
தடவுவிரல் விதையனெந்தை
தகையேந்தல் வீங்கல்வள் ளெழில்பரும முடல்குவவு
சாற்றுகலு ளமுதம் (வியன்)

தேடரிய ஞெள்ளலொடு பெருமையெழு பதுபெயர்
சி(றி)துசுணு வறி(துதன்னம்)
சின்னமிறை யெட்டிற் சுதனமற் பங்கன்று
சிறுமையிட் டி(மையாகுமே)![2] (8)

*[3]பாடு, பரி, பணை, யாளி மோடு, தடம், மூரி,
பகரும் மால், வீறு, வடவை, [வான்,
பண், கருமை, செம்மை, இரை, மீளி, மானம்,
பருவம், மா, முடலை, விபுலம், [குரு

பீடு, கயம், வயம், நனி, மிதன், செம்மல், அண்ணல்.
பிரமம், அணி, வந்தை, மேன்மை [வால்.
பிறங்கல், கடி, பொழில், ஈடு, நளிர், அருமை,
[இருமை, கண்,
பெட்பு, மிளிர், மண், கொன், மினு,

தாடு பின், கதழ்வு, தரு, மன்று, மம் கயவு,
தடவு, விரல், விதை, அனெந்தை,
தகை, ஏந்தல், வீங்கல், வள், எழில் பருமம்,
[முடல், குவவு,
சாற்று, கலுழ், அமுதம், வியன்.

தேட அரிய ஞெள்ளல் ஒடு பெருமை எழுபது பெயர்,
சிறிது, சுணு, வறிது, தன்னம்,
சின்னம், இறை, ஒட்டில், சுதனம், அற்பம், கன்று,
சிறுமை, இட்டிமை ஆகுமே! (193)

---

1 மிகே எனவும் இடமுளது.

2 இவ்வரி முழுதும் சிதைந்துளதால் தெளிவாக இல்லை

3 இப்பாடல் முழுதும் சிதைந்துளதால் சிலசொற்கள். செம்மை பட இல்லை.

சே:— தடம், தடவு, விபுலம், வியலிகை, வியன், விறல், முடலை, அகலுள், மோடு, செம்மை, பீடு, கண், பாழி, பின், முன்பு, மால், மா,வந்தை, கலந்தை, பரி, பணை, அழுவம், பிறங்கல், படு, நனி, இயக்கம், வியம், தகை, செம்மல், அணி, நன்று, அருமை, இருமை கருமை. கதழ்வு, கயவு, மூரி, பெருமை, பாடு, அண்ணல்.

பி:— இருமை, பொழில், ஏந்தல், ஈடு, கருமை, தடவு, கயவு, அணி, பகடு, அண்ணல், செம்மல், பரி, இறை, பேழ், கொன், விபுலம், வியல். நெய்தை, மா. தகை, முடலை, மூரி, வீறு, நளி, மீளி, நன்று, பாடு. நனி, பணை, விறல், சேடு, பீடு, கதழ்வு, பெருமை.

சூ:— பாடு, மாண், பாழி, மீளி, பணை, பொழில், பகடு,மூரி,மோடு, மால்,தடவு,வீறு, முடலை, கொன், கருமை, அண்ணல், ஈடு, மா, நளி, மானம், இருமை, கயவு, ஏந்தல், பீசு, வான், குவவு, செம்மை, பெருமை.

க:— தடவு, தடம், செம்மை, செம்மல், பெருமை, விபுலம், வியல், நனம், பீடு, பிறங்கு, நனி, இருமை, கதழ்வு, கயம், மூரி, பாழி, இடம், பின், முன்பு, கருமை, தகை, பாடு, அபரிமிதம், மால், கலந்தை, நன்று.

## சிறுமையின் பெயர்

சே:— இறை, அணு, வஞ்சம், சிறிது, சின்னம், வறிது, ஆசு, சிறுமை, பின்னம், கன்று, கணம், நுத, இட்டிமை, அற்பம், தன்னம், சிறுமை.

பி — அற்பம், கன்று, தன்னம், ஆசு, பேடு, வறிது, இறை, சிறுமை.

ஞ:— அற்பம், கணம், இறை, வறிது, சின்னம், கன்று, ஆசு, தன்னம், ஒட்டு, கிலம், தோகம், இட்டிடை.

க:— குறுமை, வஞ்சம், பரிமிதம், இறை, அற்பம், இலேசு, வறிது, ஆரு, கிலம், தோகம், தனு, தன்று சின்னம், துடி, அணு.

## மிகுதி, நீளம் இவற்றின் பெயர்.

அதிகம்நனி யமலையறு சனிகட்டு வெள்ளைகூ
ஏலையூ(க்கம்) கொள்ளைவெள்ளம்
ஆற்றல்களி கடியிறப் புச்சிறப் புப்பெரு
கல்லா(ரை) நகம்பிறங்கல்
புதுமைசண் டங்கடுமை துப்புத்த வங்(க)மு
பலபூரிப் பிறும்புமறவு
பொம்மலெற் றந்துவாம் தாவு(மீக் கோள்மி) கப்
புப்பெருக் கம்விற(ம்)பு
மதமலிதல் கனைபொங்கல் மருதலொக் கம்பொக்க
மறல்கஞறல் கதழ்வுமிஞ்சல்
மல்கலே யமறல் லுகப்புறப் புச்சால
மருவிய் யுறுகலுட்னே
சிதைவிலா மிகுதியா றொன்பதாங் கொடிநெடுமை
தீர்தல்பரி வார்தல் நெய்தல்
சேண்போத லுறைநீடொ ழுக்கம்நெடி லாய்தந்
தெரியல்வடி நீளமாமே! (9)

*அதிகம், நனி, அமலை, அறுசனி, கட்டு, வெள்ளை,
கூர், அலை, ஊக்கம், கொள்ளை, வெள்ளம்,
ஆற்றல், களி, கடி, இறப்பு, சிறப்பு, பெருகல்,
ஆரை, நகம், பிறங்கல்,
புதுமை, சண்டம், கடுமை, துப்பு, தவம், கழு,
பல, பூரி, பிறும்பு, மறவு,

பொம்மல், எற்றந்து, ஆம். தாவு, மிக்கோள், மிகப்பு,
பெருக்கம், விறம்பு
மதம், மலிதல், கணை, பொங்கல், மருதல், ஒக்கம்,
[பொக்கம்
மறல், கஞறல், கதழ்வு, மிஞ்சல்,
மல்கல், ஏ அமறல், உகப்பு, உருப்பு, சால,
மருவிய உறுகல், உடனே
சிதைவுஇலா மிகுதி ஆறொன்பது ஆம். கொடி,
[நெடுமை,
தீர்தல் பரி வளர்தல், நெய்தல்,
சேண், போதல், உறை, நீடு, ஒழுக்கம், நெடில்,
[ஆய்தம்,
தெரியல், வடி, நீளம், ஆமே! (194)

## மிகுதியின் பெயர்

**சே** — அமலை, உறு, தவ, நனி, உருப்பு, ஆற்றல், கழிவு, விதப்பு, இறப்பு, கதழ்வு, கடுமை, பெருமை, சிறப்பு, ஆன்றல், மதர்வு, பிறங்கல், அதிகம், புதுமை, கயவு, பரம், பொற்பு, பொக்கம், பொம்மல், மிகுதி.

**பி:**— அமலை, நனி, ஆற்றல், இறப்பு, பெருகல், கழிவு, சிறப்பு, பிறங்கல், உருப்பம் தவ, மதர், ஊக்கம், அதிகம், விதப்பு, செறிதல், பொங்கல், மிகுதி.

**சூ:**— மதம், நனி, பெருகல், ஊக்கல், விதப்பு, சால, அதிகம், சிறப்பு, இறப்பு, அலை, தவ, அமலை, ஆன்றல், கதவு, பிறங்கல், கூர், கழுமல், பூரிப்பு, ஊங்கு, புதுமை, உருத்தல், பொங்கல், மிகுதி.

**க:** — அமலை, பொம்மல், விதப்பு, பான்றல், கயவு, நளி, புதுமை, பிறங்கல், அதகம், சிறப்பு, ஆற்றல், ஏற்றம், மதம், பொக்கம், மீக்கோள், மிகுதி, கதழ்வு, கழவு உறு, தவ, கழிவு, கடுமை, உருப்பு, இறப்பு, நனி, பிறப்பு, மிகுதி.

### நீளத்தின் பெயர்

**சே**— வார்தல், போகல், சேண், சரி, உறை, நீக்கம், தீர்தல், நேர்பாடு, ஒழுகல், நெடுமை, வடிவல், நெடில், நீளம்.

**பி:**— (சேண், நீளம், சேய்மை, தூரம்)

**சூ:**— வடிதல், ஒழுகல், போகல், வரி, உறை, வார்தல், தீர்தல், நெடில், ஆயதம், நேர்பு, நெடுமை, சேண், கொடி, நீளம்.

**க:**— வார், சேன், வரி, உறை, போகல், நேர் கொண்டொழுகல், நீடல், வடிதல், நெடுமை, நெடில், தீர்தல், நீளம்.

### உயர்ச்சி, தூரம், பக்கம், இவற்றின் பெயர்

**புரையுவப் புச்சிகர மேடுமிசை சேணுந்தி**
**புங்கமுத் துங்கமுச்சம்**
**புரிமோடும் வலமினும் பொம்மலு மன்னிதம்**
**நிவப்புக்கு டவுதா (க்) குவ(ரி)**
**பரியொழுக் கந்துங்கம் நுனிகப்பு டன்கிளர்வி**
**பகருக்கம் நிமிர்தல்வார்தல்**
**பயில்போத லேஞெள்ள லேந்(த)ல்லெ ழுச்சி**
**பரவிய பிறங்கலென்ன [யொடு**
**தெரிதரு முயற்சியொடு முப்பத்து நான்குபெயர்**
**சேய்த்து (நீ ளி) டைசேணுடன்**
**சேயென வகுத்தவொரு நான்குபெயர் தூரமாஞ்**
**சிறைபுடை மருங்குஞாங்கர்**
**அருகணித் துக்கிட்டல் பாடுபால் பாரிசம்**
**அயல்மாடு பாங்கர் புறமுன்**
**[1]அடுக்கலுஞ் சாமீப [2]மென்றுய ரென்பதபி**
**மானமும் பக்கமாமே! (10)**

---

1 அடுக்கலுழி எனல்வேண்டும் 2 மென்னுமீ எனல் வேண்டும்.

*புரை, உவப்பு, சிகரம், மேடு, மிசை சேண், உந்தி,
புங்கம், உத்துங்கம், உச்சம்,
புரி, மோடு, உம் வலம், இனும், பொம்மல், உம் [அன்னிதம்,
நிவப்பு, குடவு, தாக்கு வரி,

பரி, ஒழுக்கம், துங்கம், நுனி, கப்பு, உடன் கிளர்வி,
பகர், ஊக்கம், நிமிர்தல், வார்தல்,
பயில் போதலே ஞெள்ளல், ஏந்தல், எழுச்சி, ஓடு.
பரவிய பிறங்கல் என்ன

தெரிதரும் உயர்ச்சி ஒரு முப்பது நான்கு பெயர்.
சேய்த்து, நீளிடை, சேண், உடன்
சேய், என வருத்த ஒரு நான்கு பெயர் தூரம் ஆம்,
சிறை, புடை, மருங்கு, ஞாங்கர்,

அருகு, அணித்து, கிட்டல், பாடு, பால், பாரிசம்,
அயல், மாடு, பாங்கர், புறம், முன்,
[1]அடுக்கல், உழி, சாமீபம் [2]என்னும் ஈரொன்பது
அபிமானமும் பக்கம் ஆமே! (195)

**உயர்ச்சியின் பெயர்**

**சே**:— உகப்பு, துங்கம், உன்னதம், மோடு, நிவப்பு, சேண், பிறங்கல், ஏந்தல், ஓங்கல், நிமிர்தல், புரை, பரி, உயர்ச்சி.

**பி**:— உவப்பு, புரை, சேண், உன்னதம், துங்கம், நிவப்பு, மேடு, நீள், வரி, பிறங்கல், ஏந்தல், ஒழுகல், போகல், ஓச்சல், ஓங்கல், வார்தல், உறை, உயர்வு.

**சூ**:— மோடு, ஊக்கம், ஓங்கல், வார்தல், சேண், ஒழுக்கம், பொங்கல், நிமிர்தல், புங்கம், பரி, புரை, உச்சம், துங்கம், நிவப்பு, மிசை, மேடு. பிறங்கல், ஏந்தல், உன்னதம், சிகரம், உத்துங்கம், உயர்ச்சி.

---

1 அடுக்கலும் என்றுளது. 2என்று உயர் ஒன்பது என்றுளது.

க:— சேண், பிறங்கல், புரை, உன்னதம், துங்கம், உகப்பு, ஏந்தல், மோடு, நிவப்பு, ஓங்கல், நிமிரல், உயர்ச்சி, எழுச்சி.

### தூரத்தின் பெயர்

சே:— சேண், நீளிடை, சேய்த்து, தூரம்.

பி:— சேண், நீளம், சேய்மை, தூரம்.

சூ:— சேண், சேய்மை, நீளிடை, தூரம்.

க:— நீளிடை, சேண், சேய்த்து, தூரம்.

### பக்கத்தின்பெயர்

சே:— மாடு, சிறை, உழி, மருங்கு, ஞாங்கர், முன், பால், புடை பாங்கர், பக்கம்.

சூ:— பாங்கர், பாரிசம், மருங்கு, பால், புடை, புறம், ஞாங்கர், சிறை, மாடு, பக்கம்.

## கோபம், முன்கோபர், பெருஞ்சினர், தணியாக் கோபம் இவற்றின் பெயர்.

சினம்வெகுளி (காரங்க லாங்கன்றல், விழிவு
செற்றம்வெ றுத்தல்கைதல்
செயிர்கதங் கதழ்வு 1சயிலாச லமு(ரு)த்தம்
சிலைத்தலி ளைத்தல்சீற்றம்
முனவுகல வுதல்மாலி வெடிமைய ரிப்புமற
முனிவுமுன் னுணறலென்ன
மொழிகோப 2மிருபதுடனாறுபெயர் (கொ)ந்தலே
முதிர்பொங்கல் கொம்பல்வெம்பல்

1 — ? 2 மிருதும—என்றுளது.

**கனிதல்முன் கோபமோ ரைந்துபெயர் முரணுதல்**
**காய்தலு டற்றல்சீறல்**
**கடிகிவெய் துறலுளரல் முனவல்ப கைத்தலொடு**
**கருதீவி ரம்விடைத்தல்**
**இனையவொரு பத்தும் பெருஞ்சினப் பெயர்வயிர**
**வேரஞ்ச லங்காவனான்**
**கெந்நாளும் நெஞ்சினிற் றணியாத முனிவென்**
**றியம்(பி)னர் தமிழ்ப்புலவரே!** (11)

*சினம், வெகுளி, காரம், கலாம், கன்றல், விழிவு,
செற்றம், வெறுத்தல், கைதல்,
செயிர், கதம், கதழ்வு, [1]சயிலாசலம், உருத்தல்,
சிலைத்தல், இளைத்தல், சீற்றம்,
முனவு, கலவு, மாலி, வெடிமை, அரிப்பு, மறம்,
முனிவு, முன்னுணறல், என்ன
மொழி கோபம் இருபதுடன் ஆறுபெயர் கொந்தலே
முதிர், பொங்கல், கொம்பல்,
கனிதல், முன்கோபம் ஓர் ஐந்து பெயர். முரணுதல்,
காய்தல், உடற்றல், சீறல்,
கடிகி வெய்துறல் உளரல், முனவல், பகைத்தல், ஒடு,
கரு தீவிரம், விடைத்தல்,
இனைய ஒரு பத்தும், பெருஞ்சினப் பெயர். வயிரம்,
வேரம், சலம், காவம், நான்கு
எந்நாளும் நெஞ்சினில் தணியாத முனிவு என்று
இயம்பினர் தமிழ்ப் புலவரே!

**கோபத்தின் பெயர்**

**சே—** சினம், மறம், முனிவு, செயிர், கறுவு, சீற்றம், வெகுளி, கதம், வைரம், வேரம், செற்றம்,

**பி:—** முனிவு, செயிர், சீற்றம், வியர்ப்பு, சினம்,

1 = ?

சூ:— வெறுத்தல், சினம், குரோதம், வெகுளி, அரிப்பு, சீற்றம், கலாம், கதம், செயிர், கோபம்.

க:— முனிவு, மறம், செயிர், சீற்றம், சினம், வயிரம், வெகுளி, கறுவு. கதம், செற்றம், வேகம்.

**முன்கோபத்தின் பெயர்**

சே:— கோம்பல், வெம்பல், கொந்தல், முன்கோபம், கனிதல்.

பி:— கோம்பல், கொந்தல், கனிதல், வெம்பல், வெதும்பல், தணியாக்கோபம்.

சூ:— வெம்பல், கொந்தல், கனிதல், கோம்பல் முன்கோபம்.

**பெருஞ்சினத்தின் பெயர்**

சே:— உருத்தல், சீறல், உலறல், முனைதல், உடற்றல்,காய்தல்,விடைத்தல்,தீவிரம்,பெருங்கோபம்.

பி:— உடற்றல், சீறல், உருத்தல், காய்தல், முனைதல், விடைத்தல், பைத்தல், பெருஞ்சினம்.

சூ:— விடைத்தல், முனைதல், சீறல், உருத்தல், உலறல், காய்தல், உடற்றல், தீவிரம், பெருங்கோபம்.

**தணியாக் கோபத்தின் பெயர்**

சே:— செற்றம், சலம் பவம், தொந்தம், வேரம், வைரம்.

பி:— சலம், வயிரம், செற்றம், தணியாமுனிவு,

சூ:— செற்றம், சலம், பவம், தொந்தம், வேரம் வைரம்.

## குற்றம், வருத்தம், இவற்றின் பெயர்

காசுநவை தவறுபுரை கரிலூறு வண்டுபுகர்
கசறுகறை பழுதுபோக்குக்
கவடுபங் கந்தீது கோதுசெ யிர்வலங்
கழிப்புப் பழிப்புக்குறை

மாசுமை யாசுபிழை தோமிழிவு தப்புவசை
வசிவடுத் தாவுபுன்மை
மறுத்தீங்கு துகளின்ன லவ்வமே தந்தொழுவு
வழுவுமிழி வரிலிழுக்கோ

ரேசுமர் னங்கடவை [1]மிறைகொழிப் புக்களவு
பொல்லாங்கு [2]மாமையைம்பா
னிரண்டுமே குற்றமாங் கவர்வாகு மணங்கே
வுடன்வயா கசி(வுநோே)வ

பேசிபிறை யுயவனுக் [3]கஞ்சமழம் பிறங்கிய
நொசிவழுங் க(ல்) லாய்வு
பெருகிய வுயங்கயர் வென்னுமொரு பதினைந்து
பெயரும் வருத்தமாமே! (12)

*காசு, நவை, தவறு, புரை, கரில், ஊறு, வண்டு, புகர்,
கசறு, கறை, பழுது, போக்கு,
கவடு, பங்கம், தீது, கோது, செயிர், வலம்,
கழிப்பு, பழிப்பு, குறை,

மாசு, மை, ஆசு, பிழை, தோம், இழிவு, தப்பு, வசை,
வசிவு, வடு, தாவு, புன்மை,
மறு, தீங்கு, துகள், இன்னல், அவ்வம், ஏதம், தொழுவு,
வழுவு-உம், இழிவு, அரில், இழுக்கு, ஓர்

ஏசு, மாணம், கடவை, மிறை, கொழிப்பு, களவு.
பொல்லாங்கு, உம் ஆம், மை' ஐம்பான்.

---

1 யிறைகொழிப் என்றுளது. 2 மாளுமையைம்பா என்றுளது. 3 கஞ்சமெழம் என்றுளது.

இரண்டுமே குற்றம் ஆம். கவர்வு, [1]ஆகுலம், [அணங்கு ஏ
உடன் வயா, கசிவு, நோ, ஏ
பேசில் இறை, உயவு, அநுக்கம், சமழம், பிறங்கிய
நொசிவு, அழுங்கல், ஆய்வு,
பெருகிய உயங்கு, அயர்வு, என்னும் ஒரு [பதினைந்து
பெயரும் வருத்தம் ஆமே! (197)

**குற்றத்தின் பெயர்**

**சே**:— காசு, நவை, தவறு, கசடு, வசை, வடு, மாசு, மா, மனம், அரில், செயிர், புகர், பழுது, ஏதம், ஆசு, பொக்கு, போக்கு, புரை, பழி, கோது, தோம், இழிவு, மிறை, அறிப்பு, ஏசு, அழிப்பு, குறை, கழிப்பு, கொழிப்பு, குற்றம்.

**பி**:— காசு, தவறு, கறை, களங்கம், மாசு, வசை, மறு, வடு, ஆசு, புகர், அரில், களை, ஏசு, பழி, போக்கு, ஏதம், நறை, வண்டு, கடவை, நவை, மிறை, பிழை, விடல், கரில், தோம், தப்பு, துகள், புரை, கோது, செயிர், மை, இழுக்கு, சோர்வு, புன்மை, இகழ்ச்சி, வழுக்கு, கீழ், மறவி, பொல்லாங்கு, பொச்சாப்பு, குற்றம்.

**சூ**:— ஆசு, தோம், பிழை, போக்கு, அரில், கரில், பழி, அரிப்பு, காசு, மை, தவறு, மானம், கறை, குறை, மிறை, இழிப்பு, மாசு, துகள், தப்பு, மறு, நவை, வசை, கொழிப்பு, ஏசு, புரை, கோது, ஏதம், குற்றம்.

**க**:— காசு, தவறு, நவை, பழி, கசடு, வசை, எவ்வம், வழுஉ, செயிர், மானம், தொழுவு, வடு, அரில், ஏதம், புரை, கோது, போக்கு, மாசு, பழுது, தோம், இழுக்கு, ஆசு, அவலம், தீங்கு, குற்றம்.

---

1 ஆகும் என்றுளது.

### வருத்தத்தின் பெயர்

**சே:—** உயவு, அனுக்கம், கவறல், உயங்கல் அயர்வு, ஆகுலம், அணங்கு, கசிவு, வயாவு, வருத்தம்,

**பி:—** உயவு, அனுக்கம், கவற்சி, உயங்கல், அயர்வு, கசிவு, ஆகுலம், அணங்கு, வயா, அழுங்கல், வருத்தம்.

**சூ:—** உயவு, அனுக்கம், கவற்சி, உயங்குதல், கசிவு, அணங்கு, அயர்வு, நொசிவு. நோ, ஆய்வு. மிறை, சமழ்த்தல், வயாவு, ஆகுலம், வருத்தம்.

**க:—** அணங்கு, கவறல், உயா. வயா, அயா, அனுக்கம், முசிப்பு, ஆகுலம். உயங்கல், வருத்தம்.

### அகலம், நெருங்கல், மிடைதல், உள்ளது சிறத்தல் இவற்றின் பெயர்.

அங்கண்வி யன்கால் சேணான்றல் வயமாய்வு
நளியகலு ளிவர்தல்பகர்தல்
அயர்தலே பாழியிவை பன்மூன்று மக(ல)ங்கண்
ணடையும்விய லிடமுமப்பேர்
துங்கமுள து(று) மல்துன் றற்பம்மல் விரளந்
துன்னல்கடி துறுகல்நிபுடந்
துவன்றல்சடி லந்துறுத் துற்றலிட ருதல்நீங்கல்
சூழ்தல்வி றப்புமொய்த்தல்
பொங்கிய திறங்கல்நளிர் பவர்தல்மிண் டல்செற்றல்
பொதுளல்[2]ப யிறல்கவைத்தல்
புகலாழி யருகல்செறி தற்கஞற லறுகலொடு
போந்தவெழு நான் கிரண்டும்
தங்கிய நெருங்கலின் பெயர்துதைத் தல்லொடு

---

1. அங்கமுள என்றுளது 2. பயிலற் என்றுளது.

**தைத்தலே 'மிடைத்தற்பெயர்**
**தக்கசூர்ப் புங்கழிவு முளளது சிறக்குமுத்**
**தமிழின்முனி யுரைத்தபெயரே! (13)**

*அங்கண், வியன், கால். சேண், ஆன்றல், வயம், ஆய்வு,
நளி, அகலுள், இவர்தல், படர்தல்,
அயர்தலே, யாழி இவை பன்மூன்றும் அகலம்;
கண்ணடையும் வியலிடமும் அப்பேர்.
துங்கம்உள துருமல், துன்றல், பம்மல், விரளம்,
துன்னல், கடி, துறுகல், நிபுடம்,
துவன்றல், சடிலம், துறு, துற்றல், அடருதல், நீங்கல்,
சூழ்தல், விறற்பு, மொய்த்தல்.
பொங்கிய திறங்கல், நளிர், பவர்தல், மிண்டல், செற்றல்,
பொதுளல், பயிறல், கவைத்தல்,
புகல் ஆழி, அருகல், செறிதல், சஞுறல், அறுகல் ஒடு,
போந்த எழுநான்கு இரண்டும்
தங்கிய நெருங்கலின் பெயர். தைத்தல் ஒடு
தைைத்தலே, [2]மிடைதல்பெயர்.
தக்க கூர்ப்பும் கழிவும் உள்ளது சிறக்கும்
முத்தமிழ் முனி உரைத்தபெயரே! (198)

**அகலத்தின் பெயர்**

**சே:—** அகறல், பாழி, ஆய்வு, பரப்பு, அகலுள், கண்ணறை, படர்தல், வியலிடம், ஆன்றல், பயன், நனவு, விரிவு, மேல், நளி, அகலம்.

**பி:—** நனவு, கண்ணறை, வியல், அகலம்.

**சூ:—** அகறல், கண்ணறை, பாழி, ஆய்வு, படர்தல், ஆன்றல், அகலுள், வியலிடம், அகலம்.

---

1 மிடைதறபெயர் எனல் வேண்டும்.
2 மிடைத்தல் என்றுளது.

க:— பாழி, விபுலம், விசாலம், வியலிடம், ஆன்றல், அகண், நளி, மா, அகலுள், படம், படர், கண்ணறை, அகலம்.

### நெருங்கலின் பெயர்

சே:— நிமிர்தல், மிடைதல், நெருங்குதல்.

பி:— எக்கல், குவித்தல், நளி, நிபிடம், நெருக்கம்.

சூ:— துறுமல், சடிலம், துன்னல், கஞறல், வீங்கல், செறி, நளி, பொதுளல், செற்று, திணுங்கல், நெருங்கல்.

க:— உறப்பு, துற்று, விறப்பு, வெறுப்பு, பொதுளல், நளி, பவர்த்தல், செற்றல், சடிலம, கடி, செறி, வீங்குதல், விரளம், நிபுடம், துதைதல், ததைதல், துன்றல், மிண்டல், செறிதல், நெருங்குதல்.

### மிடைதலின் பெயர்

சே:— துதைதல், ததைதல், மிடைதல்.

சூ:— துதைதல், ததைதல், மிடைதல்.

க:— பம்பல், மிடைதல், துன்னல்.

### உள்ளது சிறத்தலின் பெயர்

சே:— கூர்ப்பு, கழிவு.

பி:— கூர்ப்பு, களிப்பு.

சூ:— கழிவு, கூர்ப்பு.

க:— கூர்ப்பு, கழிவு.

## ஒளி, ஒளிசெயல், ஒளிமழுங்குதல் இவற்றின் பெயர்

**[1]வில்விரியல் வாள்சோதி வெயில்வாமம் நிலவுநகை மிளிர்காந்தி ..............................**

1 இப்பாடல் சிதைந்துளது.

**மின்பிரகா சந்தேசு (மிளர் நீ ளலரியுடன்**
**விளங்குமொளி பதினெ.. .... ........ .. ......**
**யெல்வொளிறு கடிகான லவிர்தலா லுதல்பாட**
**லிலகல்சுடர் நிமிர்தல்பி ... ... .. ...**
**இலங்குத லொடித்தல்காள் கேள்கெழு விளங்குத**
**லிமைத்தல்கிளர் செடிநகுதல்.**
**சொல்லிய வயங்கல்கதி ரெரிகுலவல் கொடுவாளி**
**துளங்குத லிலங்கல்பிறபை**
**துலங்குத லெரித்தலுட னேதயங் குதலெனச்**
**செற்றமுப் பத்துமூன்றும்**
**நல்லொளி செயற்பெயர் மழுங்கல்மா சுதல்மடங்கல்**
**நவிலமுங் குதலபுல்லெனல்**
**நாடிலோ ரைந்துமுன் னெளிமறைதல் மழுங்கலும்**
**நடிக்கிலத னாமமாமே! (14)**

*வில், விரியல், வாள், சோதி, வெயில், வாமம், நிலவு, [நகை,
மிளிர் காந்தி........ ............
மின், பிரகாசம், தேசு, மிளிர், நீள் அலரி, உடன்
விளங்கும் ஒளி பதினெ....... ... .......

எல் ஒளிறு கடி கானல், அவிர்தல், ஆறுதல், பாடல்,
இலகல், சுடர், நிமிர்தல், பி.... ...
இலங்குதல், ஒடித்தல், காள், கோழ் கெழு, [விளங்குதல்,
இமைத்தல், கிளர்செடி நகுதல்,

சொல்லிய வயங்கல், கதிர் எரி குலவல் கொடுவாளி
துளங்குதல், இலங்கல், பிறபை,
துலங்குதல், எரித்தல்; உடனே தயங்குதல் என
சொற்ற முப்பத்துமூன்றும்

நல் ஒளிசெயல்பெயர், மழுங்கல், மாசுதல், மடங்கல்,
நவில் அழுங்குதல், புல்லெனல்,
நாடில் ஓர் ஐந்தும் முன் ஒளி மறைதல்; மங்கலும்
நடிக்கில் அதன் நாமம் ஆமே! (199)

## ஒளியின் பெயர்

**சே:—** வில், வாள், வெயில், நிலவு, கதிர், கிரணம் எல், சேடி, சுடர், கனல், கேழ், நகை, தாமம், விரியல், விளக்கம், நிழல், துளக்கம், வாமம், நீமம், ஒளி.

**பி:—** வெயில், நிலவு, வில், வாள், நிழல், எல், நீமம், நகை, கானல், கிரணம், கதிர், செடி, சோதி, மின், துணி, அரி, கேழ், கரம், தேசு, கிளர், ஆதவம், ஒளி.

**சூ:—** விரியல், மின், நிலவு, வில், வாள், வெயில், நிழல், வாமம், நீமம், அரி, நகை, கிரணம், காந்தி, சோதி, ஒளி.

**க:—** நகை, கிரணம், எல், கானல், செடி, சுடர், கெழு, கெழூஉ, விளக்கம், சோதி, வில், வாள், இலங்கல், அவிர், துலக்கம், பகல்வு, விரியல், தெளிர், தாமம், வாமம், ஒளி.

## ஒளிசெயலின் பெயர்

**சே:—** அலங்கல், சுடர்தல், அவிர்தல், இமைத்தல், வயங்கல், தயங்கல், ஒளிர்தல், நகுதல், இலங்கல்.

**பி:—** விளங்குதல், நகுதல், மின்னல், மிளிர்தல், துளங்குதல், நிகழ்தல், சுடர்தல், பிறழ்தல், இலங்கல், வயங்கல், இலகுதல், இமைத்தல், அலங்கல், தயங்கல், அவிர்தல், நிலவல், ஒளிர்தல்.

**சூ:—** அலங்குதல், நகல், விளங்கல், அவிர்தல், வயங்கல், இலங்குதல், மிளிர்தல், மின்னல், இலகுதல், இமைத்தல், துலங்குதல், ஒளிர்தல், சுடருதல், பிறழ்தல், தயங்கல்.

**க**:— **அவிர்தல்**. அலங்கல், இமைத்தல், குலாவல், நகல், சுடர்தல்,ஒளிர்தல்,வயங்கல்,தயங்கல், துலங்கல், ஒளிவிடுதல், இலங்கல், விளங்கல்.

**ஒளி மழுங்கலின் பெயர்**

**சே**:— (நுணங்கு, முடங்கல், மடங்கல்.)

**பி**:— மட்கல், புல்லெனல், மழுங்குதல்.

**தூ**:— வட்கல், புல்லெனல்.

எட்டாவது பண்பு பற்றிய தொகுதி முற்றும்.

---